
உ

# நல்லைக்குமரன் மலர்




## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு

## 2010

இதழ் 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# நல்லைக்குமரன் மலர் - 18

## 2010

பதிப்பாசிரியர் :
**நல்லையா விஜயசுந்தரம்**

## சைவசமய விவகாரக் குழு
## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
# சைவசமய விவகாரக் குழு

## உறுப்பினர்கள் - 2010

| | | |
|---|---|---|
| போஷகர் | : | **திருமதி யோ. பற்குணராசா**<br>மாண்புமிகு மாநகர முதல்வர்,<br>யாழ்ப்பாணம். |
| தலைவர் | : | **திரு. மு. செ. சரவணபவ**<br>மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம். |
| கௌரவ செயலாளர் | : | **திரு. இ. இரத்தினசிங்கம்**<br>செயலாளர், யாழ். மாநகர சபை. |
| கௌரவ பொருளாளர் | : | **திரு. து. சோமசுந்தரம்**<br>சனசமூக நிலைய மேற்பார்வையாளர், யா.மா.சபை |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | : | **திரு. நா. இரகுமார்**<br>பொது சுகாதாரப் பரிசோதகர், யா.மா.சபை<br>**திருமதி சி. பாலமுரளி**<br>நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (தகவல் தொழில்நுட்பம்)<br>யா.மா.சபை<br>**திருமதி ஞா. மோகனசுந்தரம்**<br>வேலை மேற்பார்வையாளர், யா.மா.சபை<br>**திரு. பு. ஆறுமுகதாசன்**<br>பொது சுகாதாரப் பரிசோதகர், யா.மா.சபை<br>**திரு. ப. சிவஞானவேல்**<br>முகாமைத்துவ உதவியாளர், யா.மா.சபை<br>**திரு. சோ. கணேசநாதன்**<br>வேலை மேற்பார்வையாளர், யா.மா.சபை<br>**திரு. கு. விஜயகுமார்**<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சாரம்),<br>யா.மா.சபை<br>**திரு. ச. லோகசிவம்**<br>சனசமூக நிலைய மேற்பார்வையாளர், யா.மா.சபை<br>**செல்வி பொ. புஸ்பலதா**<br>கருவியறைப் பாதுகாவலர், யா.மா.சபை<br>**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி**<br>பதிவகக் காப்பாளர், யா.மா.சபை |
| விளம்பர அனுசரணையாளர் | : | **திரு. த. கனகசபை**<br>இளைப்பாறிய பிரதம காசாளர்,<br>யா.மா.சபை. |
| கௌரவ பதிப்பாசிரியர் | : | **திரு. ந. விஜயசுந்தரம்**<br>அதிபர்,<br>யா/ இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, திருநெல்வேலி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

நல்லூரில் வீற்றிருந்து எமையாளும் நல்லைக் கந்தனுக்கு இது பதினெட்டாவது மலர் கந்தப் பெருமானின் அருட்பார்வையால் மலரின் முகிழ்ப்பிற்கு எந்தக் குறையும் இல்லை. 2009ம் ஆண்டு பதினேழாவது நல்லைக் குமரன் மலரை வெளியிட்டவேளை, வன்னிப் பேரவலம் தமிழ் கூறும் நல்லுலகின் நெஞ்சைப் பிழிந்தது. இப்போதும் எங்கள் நெடுந்துயர் முற்றுப்பெறாத முடிவுகளாக உள்ளன.

**பஞ்சம் பசி வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்**
**அஞ்சுவமோ நாங்களடி – கிளியே**
**ஆறுமுகன் தஞ்சமடி**

எனத் தவத்திரு யோகர்சுவாமிகள் கூறிய அருள்வாக்கு எங்களை வாழ வைக்கும் என்ற நம்பிக்கையோடு பணி தொடர்கின்றது.

அதேநேரம் சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்ட இலங்கையில் சைவ சமயத்தவர்களாகிய எங்கள் சமய அனுட்டானங்கள், சமயச் சடங்குகள், சமூக நம்பிக்கைகள், சமூக சேவைகள் எந்நிலையில் உள்ளன என்பதை ஒருகணம் சீர்தூக்கி ஆராய்வது அவசியமானதாகும்.

இலங்கைத்தீவில் இருக்கக் கூடிய பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம், ஆகிய மதங்களின் எழுச்சியும் அவற்றின் கட்டுப்பாடுகளும் ஒழுங்கு முறைமைகளும் அம்மதங்களின் கொள்கைகளை - கோட்பாடுகளை கட்டிக் காத்து வருவதுடன் அம்மதம் சார்ந்த மக்களை ஆற்றுப்படுத்தும் பணியையும் சிறப்பாகச் செய்து வருகின்றன. குறிப்பாக பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்கள் தங்கள் இளம் சமூகத்தை வழிப்படுத்தும் திறன் வியப்பிற் குரியது. ஆனால் இந்து சமயத்தின் நிலைமை கட்டிழந்து போவதைக் காணும்போது வேதனையே மிஞ்சுகின்றது.

ஆலயங்களின் புனரமைப்பு, இராஜகோபுரங்களின் எழுச்சி, சிறு தெய்வங்களுக்கும் பெருங்கோவில் அமைக்கும் நிகழ்ச்சி என்பன வேகங் கொண்டுள்ள போதிலும் வழிபடுவதற்கும் ஆகம நியமங்களுக்கு ஏற்ப பூசை வழிபாடாற்றும் முறைக்கும் பெரும் பஞ்சம் நிலவுவதைக் காண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவில் சமகாலத்து இந்து ஆலயங்கள் ஒரு பகுதியினரின் பொருளாதார நிலையங்களாக இருக்கின்றனவே தவிர, அவற்றால் ஆன்மீக சிந்தனையை பரப்ப முடியவில்லை என்ற உண்மையை மனக்கசப்போடு ஏற்றுக்கொள்வது மாற்று நடவடிக்கைக்கான வழியாக அமையும்.

அதிலும் குறிப்பாக இந்து சமயம் இளம் சமூகத்தை வழிப்படுத்த முற்றாகத் தவறிவிட்டது. இதன் காரணமாக இறைவழிபாடு, ஒழுக்கம், சமயப்பற்று என்பன அறவே இல்லாது போகும் துரதிர்ஷ்டநிலை உருவாகும்.

எங்கள் சமயம் வாழ்வியலோடு தொடர்புபட்டது. சமயக் கருத்துக்கள், தத்துவங்கள், கிரியைகள் என்பவற்றின் ஊடாக இந்துக்களின் வாழ்வியல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு இந்துவின் வாழ்க்கையிலும் சமயத்தின் வழிப்படுத்தல்கள் இருப்பதைக் காணமுடியும். இவ்வழிப்படுத்தல் நேரடியாகவோ அன்றி மறைமுகமானதாகவோ அமையலாம்.

எனவே சமயத்தில் ஏற்படுகின்ற தாக்கம் இந்துக்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துமென்பது மறுக்க முடியாத உண்மை. இங்கு தான் எங்கள் எதிர்காலம் பற்றிய ஏக்கம் தொனிக்கின்றது. அதாவது எங்கள் இளம் சமூகத்திடம் இந்துசமயத்தின் உயரிய தத்துவங்களை எம் மூத்தவர்கள் - பெரியவர்கள் - மதகுருமார்கள் ஒழுங்கான முறையில் கையளிக்கத் தவறி யுள்ளனர்.

இதனால் இளம் சமூகம் ஆலய வழிபாடு, இறைநம்பிக்கை, சமய கலாசார பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றின் மீது ஆர்வமற்றவர்களாக - அக்கறையற்றவர்களாக மாறி வருகின்றனர்.

ஒருகாலத்தில் இந்து சமய அனுட்டானமும் சமயப் பற்றுமில்லாத வெறுமை நிலைகூட எங்கள் சமயம் சார்ந்தவர்களிடம் ஏற்படக்கூடிய அவலநிலை உண்டு. எனவே எங்கள் இந்து சமயத்தின் உயரிய தத்துவக் கருத்துக்கள், சமய சமூகப் பணிகள் ஆரோக்கியமான முறையில் மூத்தவர் களால் இளம் சமூகத்திடம் கையளிக்கப்பட வேண்டும்.

இளம் சமூகம் பற்றிய சிந்தனை எதுவுமின்றி எங்கள் பாட்டில் சடங்குகளை செய்து முடிப்பதானது வெறுஞ்சடங்காகவும் சம்பிரதாயமாகவும் அமையுமே அன்றி அதன் உள்ளார்ந்த தத்துவத்தை உணர்ந்து வருங்கால சந்ததியினரும் பின்பற்றும் பக்குவத்தை ஏற்படுத்தமாட்டா.

எனவே எங்கள் சமய சிந்தனைகளும், சைவ ஆலயங்களும், சமூகப் பணியுடன் இணைக்கப்பட்டு புதிய பாதையில் இளைய சமூகத்தையும் இணைத்துச் செல்லும் முன்னெடுப்புக்கள் பற்றி எங்கள் சமயப் பெரியவர்கள் ஆராந்து ஆவன செய்ய வேண்டும் என்ற கருத்தை நல்லைக் குமரனின் பதினெட்டாவது மலரின் கருப்பொருளாகத் தந்து கந்தப் பெருமானின் பாதக் கமலங்களில் இம்மலரை சமர்ப்பிக்கின்றோம்.

**சைவசமய விவகாரக் குழு,**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.**

**பதிப்பாசிரியர்,**
**நல்லைக்குமரன் மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

சமர்ப்பணம்
ஆசிச்செய்திகள்
வாழ்த்துச் செய்திகள்

திருநல்லைத் தெய்வ வடிவேல் 01-03
ச. தங்கமாமயிலோன்

நல்லூரடி நீழல் 04
த. ஜெயசீலன்

அறுமுகனும் அறுபடை வீடுகளும் 05-06
கவிஞர் வ. யோகானந்தசிவம்

எங்கு நாம் போகின்றோம்? 07-08
விகடகவி மு. திருநாவுக்கரசு

நல்லைக் கந்தன் நற்றமிழ்ப் பாமாலை 09-10
சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

இதயத்தில் ஈரமென்றும் இல்லையோ... 11
கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்

அருவியாகட்டும் உன் அருட்கடாச்சம்! 12
கணகிருஷ்ணராஜன்

நல்லைக் குமரன் திருப்புகழ் 13-16
வ. சின்னப்பா

நல்லைக் குமரன் காவடிச் சிந்து 17-18
கு. துரைராஜன்

உயர்கொள்ளும் நல்லையூர் திருவேல் 19-20
அல்வாயூர் சி. சிவநேசன்

நல்லைக்குமரன் கீர்த்தனை 21-22
செ. பஞ்சநாதன்

நல்லூர் முருகன் மலரில் ஒரு நொண்டிச்சிந்து 23-25
வை. க. சிற்றம்பலம்

சென்று சேவிக்க......... 26
பா. அருண்

குகையில் வளருங் கனலே! 29-38
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

கலியுகவரதன் குருவழிவிலே திருவருள் பாலித்து வருகிறான் 39-42
பேராசிரியர் வி. சிவசாமி

அகரவுயிர் போல்.......... 43-45
மட்டுவில் ஆ. நடராசா

உதித்தனன் உலகம் உய்ய! 46-48
கே.எஸ். ஆனந்தன்

அருணகிரிநாதர் திருப்புகழில் வேண்டுகை 49-52
பேராசிரியர் அ.சண்முகதாஸ்

கந்தபுராணம் (ஒரு தோற்றுவாய்) 53-60
வ. கோவிந்தபிள்ளை

யாழ்ப்பாணத்து முருகப் பிரபந்த இலக்கியங்கள் 61-70
கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

திருவாசகத்தில் இலக்கிய வடிவங்கள் 71-74
கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்


**தாயுமானவர் காட்டும் சமயநெறி** 75-83
சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

**தமிழர் வாழ்வில் விருந்தோம்பல்** 84-90
திருமதி விக்னேஸ்வரி பவநேசன்

**திருக்குறளில் அறிவியல் சிந்தனை** 91-94
செல்வி அம்பாலிகா தம்பாபிள்ளை

**பக்தி இலக்கியங்களில் தூது** 95-98
திருமதி எஸ். ஜெகநாதன்

**இந்து சமயம் ஒரு கலைக்களஞ்சியம்** 99-102
பா. பிரசாந்தனன்

**தமிழ் மறையும் திருமுறையும்** 103-110
சைவச்செம்மல் செ. மதுசூதனன்

**ஆலய வழிபாடு - கேள்வியும் விளக்கங்களும்** 111-116
ஜி. பற்குணராஜா

**ஊழிக் கனலும் அனுகாது** 117-121
செல்வி செல்வஅம்பிகை நடராஜா

**ஊன் படைத்த உத்தமர்** 122-130
பொ. சிவப்பிரகாசம்

**குருவடிவாம் தென்முகக்கடவுள் தெட்சணாமூர்த்தி** 131-133
சைவப் புலவர் வை. சி. சிவசுப்பிரமணியம்

**வண்ணார்பண்ணை - பெயர் விளக்கம்** 134-149
பரராஜசிங்கம் கணேசலிங்கம்

**பிடியரிசியினால் உயர்ந்த அறப்பணிகள்** 150-156
மூ. சிவலிங்கம்

**உளப் பாதிப்பிலிருந்து விடுதலை பெற ஆலய தரிசனம் உதவுகிறது** 157-160
வைத்திய கலாநிதி க. ஸ்ரீதரன்
வைத்திய கலாநிதி ஸ்ரீ. அன்புச்செல்வி

**ஈழத்து இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு நாகர் இனம் வழங்கிய பங்களிப்புக்கள்** 161-178
பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா

**சைவ ஆலயங்களில் மௌன விரதத்தை அநுட்டிப்போம்!** 179-182
கா. சிவபாலன்

**கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம்இறையின்பம் பெறுவோம்!** 183-186
கா. யோகநாதன்

**கிரகதோஷ பரிகாரம்** 187-190
பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

**நல்லூர் செல்லப்ப சுவாமிகள்** 191-197
ம. சிவயோகசுந்தரம்

**தமிழ் வாழ, தமிழ் இனம் வாழ....** 198-200
கணபதி மகேசன்

**நல்லூரைப் புனித நகராக்குவோம்** 201-205
ஜெ. தயாபரன்

**இந்து சமயம் கண்ட விஞ்ஞானம்** 206-209
சைவப்புலவர் செ. பரமநாதன்

**முதியோர் பார்வையில் வாழ்க்கை பற்றிய நோக்கு** 210-214
க. சிவலிங்கம்

**தேகாந்த நிலையில் சிவத்தமிழ் அன்னைக்கு யாழ் விருது** 215-216
இ.இரத்தினசிங்கம்

**நன்றியுரை**

**விளம்பரம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்
# 2010

## ஆசி, வாழ்த்துச் செய்திகள்


- நல்லை ஆதீன முதல்வர்

  *ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்*
- பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமிகள்

  *சுவாமி சித்ரூபானந்தா*
- மாவை ஆதீன கர்த்தா

  *மஹாராஜாஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்*
- மெய்கண்டர் ஆதீன சுவாமிகள்

  *சிவஸ்ரீ சிவக்கொழுந்து சிவதேசிக பரமாச்சாரிய சுவாமிகள்*
- யாழ் மாநகரசபை முதல்வர்

  *திருமதி யோ. பற்குணராசா*
- யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

  *பேராசிரியர் நா.சண்முகலிங்கன்*
- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

  *செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்*
- யாழ் மாநகர ஆணையாளர்

  *திரு மு.செ. சரவணபவ*
- யாழ் மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர்

  *திரு க.கணேஷ்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** 2222270

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

# நல்லை ஆதீன முதல்வரின்
# அருளாசிச்செய்தி

**சைவச் சான்றோர்களுக்கு ஆசிகள்**

உலக நாயகனாம் நல்லையம்பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமானின் சிறப்பை அனைத்துலக மக்களும் அனுபவிக்கும் பொருட்டு யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு சிறப்புச் செய்வது அனைவருக்கும் மகிழ்ச்சி.

முருகன் என்றால் அழகு. அழகிலும் அழகு நல்லைக்கந்தன். இவனுக்கு அழகு சேர்க்கும் வகையில் 18வது மலராக நல்லைக்குமரன் மலர் மலர்வது அனைவருடைய மனதையும் மகிழ்விக்கிறது. யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் மக்களின் தேவைகளை உணர்ந்து செயற்பட்டு வரும் மன்றம். சைவசமய மக்களை விழிப்படைய செய்யும் வகையில் விவகாரக் குழு அமைத்து செயற்படுவது வாழ்த்துதலுக்கு உரியதாகும்.

இப்பணியை செயற்படுத்தும் தலைவர், செயலாளர், உறுப்பினர்களை வாழ்த்தி பாராட்டுகின்றோம். நல்லைக் குமரன் மலர் பல ஆக்கங்களை சுமந்து வருவது சமய வாழ்வு வாழும் மக்களுக்கு மட்டுமன்றி எல்லோருக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இப்புனித பணி தொடர இறைவன் திருவருளை சிந்திக்கின்றோம். இம்மலரை அழகாக அமைத்து உரிய காலத்தில் வெளிக்கொணர்ந்து அனைவருக்கும் தெரியப்படுத்தும் நூலாசிரியரையும் ஏனையோரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**நல்லை ஆதீனம்,**
**நல்லூர்.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய ஸ்வாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Sri Ramakrishna Sarada Sevashrama.*

## Point - Pedro,
## Sri Lanka.

## பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம
## சுவாமிகளின் ஆசிச்செய்தி

நல்லைக்குமரன் மலர் 18ஆவது வெளியீடு மலருவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி. சரவணப் பொய்கையில் ஆறு குழந்தையாக அவதாரம் செய்த முருகன், பார்வதியின் அரவணைப்பால் ஆறுமுகமும் பன்னிரண்டு கரங் களும் கொண்டு கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு உலகம் உய்ய அவதாரம் செய்தார்.

முருகனை தொன்று தொட்டு வணங்கிய பல சித்தர்கள் முனிவர்கள் பேறு பெற்றனர். எமக்கு ஏற்பட்ட இன்னல்களை முருகன் களைந்து இவ்வருடம் நம் அனைவரையும் புதுப்பொலிவுடன் திகழ வைத்துள்ளான்.

மேலும் முருகப் பெருமான் எம் அனைவரையும் காப்பாற்றி அருள் புரிவாராக. இது முற்றிலும் உண்மை. நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு வெளியிடும் நல்லைக் குமரன் மலர் சிறப்புற எம் ஆசிகள்.

**சாரதா சேவாச்சிரமம்,**
**பருத்தித்துறை.**

**அன்னையின் அடியவன்**
**சித்ரூபானந்தா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்
# MAVIDDAPURAM KANTHASWAMY TEMPLE


மஹாராஜஸ்ரீ
சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
ஆதீன கர்த்தா – பிரதமகுரு,
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

T.P : 021 222 5799

Maharajasri:
S.D. Shanmuganatha Kurukkal
*Governing Authority & Chief High priest*
*Mavai Aadheenam.*
*Maviddapuram, Sri Lanka*
*TELLIPPALAI* ......


## மாவை ஆதீன கர்த்தாவின்

## ஆசிச்செய்தி

நல்லைக்குமரன் மலர் வாடாமலராக பதினெட்டு வருஷங்களாக நறுமணம் வீசி வளர்ந்து வருவதும் ஓர் அற்புதமேதான். இதற்குக் காரணங் கள் பல இருப்பினும் இம்மலரின் தனித்துவம், அது கொண்டிருக்கும் அறி வுத்திறன் செய்திகள், வாசகர்களை உயர்ந்தோராக்கிவிடும். ஏவுதல் சேவை, என்பனதான் உயிர்நாடியாக அமைந்து சமூக நலன்கட்கு ஆற்றுப் படுத்தி நல்லதோர் பணியை வளர்த்து விடுவதுதான் முதன்மை பெறுகிறது.

இம்மலர் ஓர் வித்யாசமான சூழலில் பவனிவந்து கொண்டிருப்பதும், அறிவு, நிறை, ஓர்ப்பு எனும் ஆடவர்கட்குரிய நற்பண்புகளை வளர்த்துவிடும் சாமர்த்திய கட்டுரைகளும், கற்றுணர்ந்தொழுகி அதன்வழி வாழும் ஞான பண்டிதர்கட்கும், சொல்வளம் வழுவாது இல்லறமேற்று நல்லறம்புரியும் நற்கன்னியர்கட்கும், அவரவர் தத்தம் குலப்புகழுடன் தவப்பணிகளூடாக ஆற்றும் நற்பணியே தம் கடமையென வாழ்ந்துகாட்டினிற்கும் அறவோருக் கும் இம்மலரின் சகல வெளிப்பாடுகளும் உற்ற துணையாக நின்று அவரவர் தத்தம் பணிகட்கு ஆக்கமும் ஊக்கமும் பெறக்கூடியதாக இம்மலரின் கட்டுரைகள், செய்திகள் வைரமாக அமைந்து உதவிநிற்கின்றன. புறத் தூய்மை, அகத்தூய்மை ஆகியனவற்றைக்கூட எளிதில் ஈர்க்கக்கூடியதாக வும், இறைவனிடத்தே இடையறாப் பேரின்பத்தைப் பெறும் வகையில், ஆதவன் போன்று ஒளிவீசி அஞ்ஞான இருள் அகலும் வகையில் செய்திக ளும் பலன்மிகு கட்டுரைகளும் தொடர்ந்து பிரகாசமாக விளங்கி நிற்கின்றன.

அன்போடும் அமைதியோடும், சிதறாத சிந்தனைகளோடும், பதறாத சிரத்தையோடும், சிவதர்மம் சார்ந்த வழியில் சிரத்தையோடு பேரின்பவாழ் விற்காக ஏங்கிநிற்கும் சமூகத்தினருக்கு நல்லைக்குமரன் மலரொன்று தான் பக்கத்துணை நின்று உதவிவருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்துவிடும் பராபரமே" என்ற தாயுமானவரது மந்திராலோசனையேற்று இம்மலரோடு சார்ந்து நிற்கும் பணியாளர்களது செயற்திறன் அதிசயமாகவே தான் புதைந்து நிற்கிறது. அதனாற்தான் நல்லைக்குமரன் மலர் வாடாமலராக ஞாலத்தின் மார்பில் மருக்கொழுந்து மலைபோல் விளங்கி நிற்கிறது.

இன்றைய கொடுமைமிக்க கலியுகநிகழ்வுகளில், நல்லைக்குமரன் மலர் இனிதே தம்பணிகளைச் செம்மையாக வளர்த்தெடுக்கும் முயற்சிகளில் சைவமக்கள் துணைநிற்பதும் ஓர் அதிர்ஷடமே தான்.

ஏராளமான இதழ்களோடு மனித நலன்களிற்கே உதவாத செய்திகள், கட்டுரைகள், இழவு விளம்பரங்கள், இன்னும் கேடுகெட்ட விளம்பரங்களோடு ஊர்சுற்றி நிற்கும் புதினப்பத்திரிகைகளதும், சஞ்சிகைகளினதும் பஞ்சமா பாதகங்களை வளர்த்து விட உரமிட்டு ஆற்றுப்படுத்தி நிற்கும் இக்கால கட்டங்களில் நல்லைக்குமரன் மலர் எப்படித்தான் இந்த ஆரவார அமளிகட்குள் துணிந்துனின்று தனது கருமங்களை முன்னெடுக்கிறதென அறிஞர்கள் கூட அதிசயிக்கின்றனர்.

ஒரு புறம் கயவர்களான நயவஞ்சகர்களின் பொய்ப்பித்தலாட்டங்களும், இன்னொருபுறம் உலோகாயுத சுகவாழ்விற்கு உரமிட்டு மனிதர்களை துன்பநிலைக்குத் தள்ளிவிட்டு தத்தமது இலாபங்களைச் சேகரிக்கும் பிற மதச் செயற்பாடுகளும், மறுபுறம் இவ்வழி நல்வழியெனவும், சகவாழ்வு சன்மார்க்க வாழ்வு எனும் சூழலுக்குள் சூனியமாக ஒன்றிணைய வேண்டுமெனப் போதிக்கும் ஆஷாடபூதிகளும், அருமையான சிவபூமியென திருமூலரால் பிரகடனம் செய்யப்பட்ட இத்திருநாட்டில், நாடே ஏங்கிநிற்கும் இவ்வேளையில், சைவமக்கள் செய்த தவப்பயனால் நல்லைக் குமரன் மலர் ஓர் பாசுபதாஸ்திரமாக விளங்கிநிற்பதும் ஓர் அதிர்ஷடமே. இதனால் நாடும் தீயோரிடமிருந்து காப்பாற்றப்படுகிறது.

நல்லைக் கந்தசுவாமியாரது திருவருட்துணையால் நல்லைக்குமரன் மலர் நீடூழி நிலைத்திருந்து இனிதே தன் நற்தொண்டுகளை நிறைவாகத் தொடர்ந்து ஆற்ற வேண்டுமென யானும் மாவைக் கந்தசுவாமியாரிடமும், இம்மலரோடு இணைந்துள்ள சகலருக்கும் எம்பெருமானது திருவருள் சொரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சுபமஸ்து.

**மாவை ஆதீனம்,**
**மாவிட்டபுரம்.**

**மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்**
**மாவையாதீன கர்த்தா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

@EJL 1284.4
@EJL

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரை
**மெய்கண்டார் அதீனம்**
3-ஆவது குரு மகாசன்னிதானம்
சித்தாந்த சிவ வித்தகர்
சிவஸ்ரீ சிவக் கொழுந்து சிவதேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்
குரு மகா சன்னிதானம்

கச்சியப்ப கலாச்சார சிவஞான பீடம்
223, தேக்கம் தோட்டம்,
வவுனியா - இலங்கை.
தொ.பே. 024 - 2223155
உப பீடாதிபதிகள்.
சிவஸ்ரீ நடராச சிவதேசிகர்
சிவஸ்ரீ இராசமணி சிவதேசிகர்
**MEIKANDAAR AATHEENAM**
**VAVUNIYA - SRI LANKA.**

# மெய்கண்டார் ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்துஎன
தம்முதல் குருவும்ஆய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலும்ஏ.

சிவஞான போத 8ஆம் சூத்திரம். சிவன் குருவாய் வந்து உணர்த்தும் முறை.

84,00,000 யோனிகள் வாய்ப்பட்டுப் பிறந்து இறந்துழலும் உயிர்கள் மானிடராய் சைவசமயத்தில் பிறப்பெடுப்பதென்பது பிறவிக்கடலை கையால் நீந்தியதற்கு சமானம். இக்கால கட்டம் மலமாயை பொருந்தி உளதால் மறக்கருணைக் காட்சி மக்களைப் பக்குவப்படுத்தவே அமைந்துளது. அதுவும் ஈசன் செயல்.

2010 விகிருதி தக்ஷிணாயன முதுவேனிற் பருவகாலத்தில் 18ஆம் (கஅ) அகவை இதழாக நல்லைக்குமரன் மலர், மலர்வது தாங்கள் செய்த பூர்வ சிவபுண்ணியத்தின் விளைவு என்பதை வியந்து பேருவகை அடைகின்றோம்.

தேவர்கள் விண்ணுலகில் 11 இலட்சம் யோனிபேதங்களுள் பிறப்பெடுத்தாலும் பதமுத்தியடைவரேயன்றி, பிறவாப்பேரின்பம் அடையாமல் மீண்டும் மீண்டும் பிறப்பர். இருவினை ஒப்பு அடைந்தவர்கள் மாத்திரம் சத்திநிபாதம் எய்தி சிவனது அருளால் சிவனே குருவாகத் தோன்றி தன் குஞ்சரபாதநிழல் கிடைப்பதற்கு காந்தமாகிய செவ்வேல் திருவருட் செறிவுடன் எழில் ஞானப்பெருவிழாவாக. எண்பாடு, பண்பாடு எண்மானம் நிறை சைவ கலாசார திருவருட் செறிவுடன் இயம, நியம, ஆகம, அருள் ஆசார சீல சிவயோக, சிவஞான திருவருளுடன் மலர, தாங்களும் திருவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீக்ஷைபெற மெய்கண்டதேவரருள் ஞானமாநடராசரின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இயம, நியம, ஒழுக்கத்துடன், பிராணாயமம், ஆசனம், தியானம், ஜெபம், பிராஹிருதக்காட்சி, வாயிற்காட்சி, மானதக்காட்சி, யோகக்காட்சி, தன்வேதனைக்காட்சி தோன்றும் நிலையேற்படுத்த குரு ஒவ்வொருவர் சிரசிலும் குஞ்சிதபாதம் பதியச்செய்வார். பயில்க. தவ ஜெபத்துடன் பயின்று குஞ்சிதபாத (இடப்பாத) நிழலாம் பிறவாப் பேரின்ப நிலையை சைவசமய விவகாரக்குழு உறுப்பினராகிய தாங்களும், இம்மலரை உவந்து சிவத் தியானத்துடன் கண்ணோட்டம் செலுத்தி பசுபாச சிந்தையின்றி எந்நேரமும் அதோமுகம் படைத்த சிவனின் வேறுபடாத ஆறுமுகப்பரம்பொருளை சதாதியானியுங்கள்.

பேரின்பப்பேறாகிய நித்தியானந்தம் அனுபவித்து விறவா ஆக்கை பெற்று பிறவிப்பிணியை நீக்க அருமருந்தாக இம்மலர் ஒவ்வாருவருக்கும் உதவுதற்கு திருவருள் குருவருள் பாலிக்குமாறு மெய்கண்டார் காட்சிப்படுத்திய ஞானமாநடராசப் பெருமானைப் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.**

**மெய்கண்டார் ஆதீனம்,**
**வவுனியா.**

**சித்தாந்த சிவவித்தகர்**
**சிவஸ்ரீ சிவக்கொழுந்து சிவதேசிக**
**பரமாசாரிய சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MAYOR
MUNICIPAL COUNCIL, JAFFNA

முதல்வர்
மாநகரசபை யாழ்ப்பாணம்

නගරාධිපති
යාපනය මහ නගර සභාව

Tele Phone:
Office : 021 222 1186
Fax : 021 222 1189
Residence : 021 222 6917
Mobile : 0718015696
E.Mail : yogapats@gmail

எனது இல. My No. : Mayor/108 /2010
உமது இல Your No. :
திகதி Date : 2010.05.03

# யாழ்ப்பாண மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி

1993ஆம் ஆண்டு முதல் நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின ரால் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கத் திருவருள் முன்னின்றதைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

நல்லைக்குமரன் நல்லைப் பதிக்கு மாத்திரம் உரியவன் அல்லன். தமிழ் கூறும் நல்லுலகத்தினர் அனைவருக்கும் சொந்தமானவன். அவனது மகோற்சவ காலத்தில் அகில இலங்கையிலிருந்து மட்டுமல்ல, கடல் கடந்த மேற்குலக நாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் வருகை தருவது இதற்கு எடுத்துக்காட்டு.

"குமரேசரிரு தாளும் சதங்கையும், தண்டையும், ஷண்முகமும் தோளும் கடம்பும் எம்முன் தோன்றிவிட்டால் நாள் என் செயும்? வினைதான் என் செயும்? எமை நாடி வந்த கோள் என் செயும்? கொடுங்கூற்று என் செயும்? என்ற பரவச நிலையில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் உளம் உருக, இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால், துன்னிய பிணை மலர்க்கையினர் ஒருபால், தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால், சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால் என ஆலயத்தின் நாலாபுறங்களிலும் சிதறிக்கிடக்கும் பரவச நிலை கண்டு அருள் பாலிக்கும் கலியுகவரதன் எனப் புகழ்ந்தேத்தப் படும் நல்லைக் குமரனின் பெருமையை நானிலம் அறியுமுகமாக வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலரும் அந்த முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டு வரும் சபையின் சைவசமய விவகாரக் குழுவின் பணியும் தொடர வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அம்மலர் வெளியீட்டில் ஈடுபட்டுழைத்த, உழைத்து வரும் அனைவருக்கும் என் நன்றி.

"கந்தவேள், வேல்முருகன், காங்கேயன் காதலித்து வந்த நல்லை" எனப் போற்றிப் புகழப்படும் நல்லைக் குமரனின் அருட்பார்வை அனைவருக்கும் கிடைக்க அவனைத் தொழுது வேண்டுகிறேன்.

நல்லைக் குமரன் மலர் வெளியிடும் இந்த நல்ல முயற்சி நாளும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.


மாநகராட்சி மன்றம். — திருமதி யோ. பற்குணராசா
யாழ்ப்பாணம். — மாநகர முதல்வர்


## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# University of Jaffna - Sri Lanka


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

நல்லூர் முருகன் திருவிழாக்காலம், எங்கள் ஆத்ம வல்லமையை வளர்த்திடும் அருள் வெளியாய் விரிகின்றது.

இந்தப் பொழுதுகளின் மேன்மையைக் காக்கும் யாழ்ப்பாண மாநகர சபை சைவசமய விவகாரக்குழுவின் நல்லைக் குமரன் - 2010 மலர் வரவிலே மனது நிறைகின்றது.

எங்கள் பண்பாட்டின் தெய்வம் முருகன். இன்று எங்கள் பண்பாடு எதிர் கொள்ளும் பண்பாட்டு நெருக்கடிகளிலிருந்து மீளவும், மேம்பாடு காணப தற்குமான அறிவை, உணர்திறனை, செயல்வீரத்தை இந்த இதழின் ஆக்கங்கள் எங்கள் வசமாக்கும்.

ஞானவேல் முருகன் பாதம் பணிந்து யாவர்க்கும் வாழ்வென்ற வரத்தினை இறைஞ்சுவோம்.

**அறிவாகிய கோயிலிலே**
**அருளாகிய தாய்மடிமேல்**
**பொறிவேலுடனே வளர்வாய், அடியார்**
**புதுவாழ்வுறவே புவி மீதருள்வாய்.**


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

**பேராசிரியர் கலாநிதி நா. சண்முகலிங்கன்**
**துணைவேந்தர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை, இலங்கை

**Sri Durgadevi Devasthanam**

Tellippalai, Sri Lanka

T.P.No - 0602-213151 திகதி.................................

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரின் வாழ்த்துச் செய்தி

**நல்லைக் கந்தன் திருவருள் நிறைவதாக!**

"பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள் அற்றார்
அற்றார் மற்று ஆதல் அரிது".

செல்வம் அற்றவர்கள் கூட ஒரு காலத்தில் பொருளைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்வர். ஆனால் அருளை இழந்தவர்களோ வாழ்க்கையில் பயனற்றவர்களாகி விடுவர். அருளைப் பெறுவதற்கு மக்களை ஆற்றுப் படுத்துதல் தலையாய கடனாகும். நல்லைக்கந்தப் பெருமானின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆண்டு தோறும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு ஆற்றும் அருட்பணி வாழ்த்துக்குரியது.

கடந்த பதினெட்டு வருடங்களாக நல்லைக் குமரன் மலர் அறிவுசார் ஆவணமாக வெளியிடப்பட்டு வருகிறது. மக்களை நெறிப்படுத்துவதற்கு இத்தகைய மலர்கள் அவசியமாகும். சைவசமய விவகாரக்குழு ஆரம்பித்த நாள் முதல் தன்பணி தொடர்வது சிறப்புக்குரிய விடயமாகும். காலத்துக்குக் காலம் மாநகர நிர்வாகங்கள் மாற்றம் பெற்ற போதும் சைவசமய விவகாரக் குழுவின் மாசற்ற பணி நேர்த்தியாக நடைபெறுவது கண்டு ஆனந்தமடைகி றேன்.

நல்லைக்குமரன் மலரின் ஆசிரியரின் ஆளுமை, குழு உறுப்பினர் களின் ஒப்பற்ற உழைப்பு மலர் தவறாது தோற்றம் பெற ஏதுவாகவுள்ளது. இவ்வாண்டு வெளியிடப்படும் மலர் சிறக்க வாழ்த்துவதுடன் சைவசமய விவகாரக்குழுவின் பணிகள் மேலும் விரிவடையப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

"யாவர்க்குமாம் இன்னுரை தானே"

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

**செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்**
**தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
# JAFFNA MUNICIPAL COUNCIL

## யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின்
## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவானது சமயம் சார்ந்த பல்வேறு பணிகளை வெகுசிறப்பாக மேற்கொண்டு வருவதை ஒரு கணம் நினைத்துப் பார்க்கையில் அதன் அங்கத்தவர்களின் ஆர்வம், தன்னலம் நோக்காத பணியும் துலாம்பரமாகத் தெரிகிறது.

கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் யாழ் மாவட்டப் பாடசாலை மாணவரிடையே தரம் 04 முதல் தரம் 13 வரையான 10 தரங்களுக்குமான சமய அறிவுப் பரீட்சையை வருடாந்தம் நடாத்தி ஒவ்வொரு பிரிவிலும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கி வருவது என்பது சாதாரண விடயமல்ல. இப்பணி காலத்தால் மிக நீண்டதாகும். இதில் ஈடுபடும் குழுவினது அங்கத்தவர்கள் என்றும் பாராட்டுக்குரியவர்கள்.

இப்பணிக்கு மேலாக, நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தில் நல்லைக்குமரன் மலரினை வெளியிட்டு வருகின்ற வரிசையிலே இவ்வருடம் 18வது மலர் மலரவிருப்பது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

இவற்றுடன் நின்றுவிடாது சமய மற்றும் சமூகப் பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றுபவர்களுக்கு யாழ். விருது வழங்கிக் கௌரவிக்கும் பாரம்பரியமும் தொடர்வது ஆரோக்கியமானதொரு செயலாகும்.

இக்குழுவினது சமய, சமூகப் பணிகள் மேலோங்கி உயர்வு பெற வேண்டுமென எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் தாள் பணிந்து வாழ்த்து கின்றேன்.

**யாழ் மாநகராட்சி மன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

**மு.செ. சரவணபவ**
**ஆணையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அரசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி

அழகன் முருகன் அருளாட்சி செய்யும் நல்லையம்பதி கந்தசுவாமி கோவிலின் சிறப்பு செப்பற்கரிதாம். உலகெங்கணும் பரந்துபட்டு வாழும் சைவப் பெருமக்களின் உள்ளக்கோயில்களில் எழுந்தருளியுள்ள நல்லூரான் மகிமை, பிற மதத்தவரையும், அவன்பால் ஈர்த்துள்ளமை நாம் கண்கூடாய்க் காணும் உண்மையாம்.

அமைதிச் சூழலில் அழகுற எழுந்தருளி "அலங்காரக் கந்தன்" எனும் அழகு பெயர் கொண்ட நல்லூரான் ஆலயத்தின் தூய்மை, நியமம் தவறாத பூசைகள், ஒழுங்கு விதிகளைப் பேணும் முறைமை எவரையும் வியக்க வைத்துள்ளன. வருடாந்தம் யாழ் குடாநாட்டையே விழாக்கோலம் பூணச் செய்யும் நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவம் காண, இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களுடன், கடல் கடந்து வாழும் சைவப் பெரு மக்களும் நல்லை நகரை நாடிவர, பக்தர்கள் வெள்ளத்தில் யாழ் மண் நிறைந்திருக்கும் உன்னதமான வேளையில்,

நல்லூரான் பெருமைகளைத் தன்னகத்தே அள்ளிக் கொண்டுவரும், வருடாந்த வரவான "நல்லைக்குமரன்" மலர் வெளியீட்டில் அரும்பணி யாற்றும் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரின் நற்பணி தொடர, எம்பெருமான் தாள் வணங்கி, வாழ்த்துகின்றேன்.

**யாழ்ப்பாணம்.**

**க.கணேஷ்**
**முன்னாள் அரசாங்க அதிபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்

## 2010

## பாமாலைகள்


- திருநல்லைத் தெய்வ வடிவேல் — *ச. தங்கமாமயிலோன்*
- நல்லூரடி நீழல் — *த. ஜெயசீலன்*
- அறுமுகனும் அறுபடை வீடுகளும் — *கவிஞர் வ. யோகானந்தசிவம்*
- எங்கு நாம் போகின்றோம்? — *விகடகவி மு. திருநாவுக்கரசு*
- நல்லைக் கந்தன் நற்றமிழ்ப் பாமாலை — *சிவநெறிக்கலாநிதி, இராசையா ஸ்ரீதரன்*
- இதயத்தில் ஈரமென்றும் இல்லையோ... — *கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்*
- அருவியாகட்டும் உன் அருட்கடாச்சம்! — *கணகிருஷ்ணராஜன்*
- நல்லைக் குமரன் திருப்புகழ் — *வ. சின்னப்பா*
- நல்லைக் குமரன் காவடிச் சிந்து — *கு. துரைராஜன்*
- உயர்கொள்ளும் நல்லையூர் திருவேல் — *அல்வாயூர் சி. சிவநேசன்*
- நல்லைக்குமரன் கீர்த்தனை — *செ. பஞ்சநாதன்*
- நல்லூர் முருகன் மலரில் ஒரு நொண்டிச்சிந்து — *வை. க. சிற்றம்பலம்*
- சென்று சேவிக்க........ — *பா. அருண்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநல்லைத் தெய்வ வடிவேல்

ச. தங்கமாமயிலோன்

ஐந்துமொன்று மாறதாகி அணைந்து தோன்றும்
அம்மையப்பர் அருகணைந்து அருளுந் தோன்றும்
வந்து வந்து பக்தர்கணம் வணங்கல் தோன்றும்
வாகாருங் குறவள்ளி மலர்ந்து தோன்றும்
அந்தமிலா வானந்த அலைகள் தோன்றும்
ஆறுதலுந் தேறுதலும் அமைந்து தோன்றும்
செந்தமிழர் குலம்விளங்கத் திகழ்ந்து தோன்றும்
திருநல்லைக் கந்தனெனுந் தெய்வவடி வேற்கே.

செங்கண்ணர வசைத்தானருள் சினப்புத் தோன்றும்
தீவளிவான் நீராகித் திகழ்ந்து தோன்றும்
பொங்குமிளஞ் சூரியனாய்ப் பொலிந்து தோன்றும்
பொற்கமல மலராறிற் பூத்தல் தோன்றும்
அங்கமலத் தயனோடும் ஆடல் தோன்றும்
அசையாமணி நாதவொலி அலைகள் தோன்றும்
திங்கள்வளர் திருக்கருணைத் தேஜஸ் தோன்றும்
திருநல்லைக் கந்தனெனுந் தெய்வவடி வேற்கே.

பழநிமலைப் பண்டார வடிவுந் தோன்றும்
பாரண்டம் மயிலேறிப் பறத்தல் தோன்றும்
மழலைமொழி பேசியுமை மகிழ்தல் தோன்றும்
மாலாழி மயக்கறுக்கும் மகிமை தோன்றும்
கழலிணைகள் காட்டுமருட் கருணை தோன்றும்
காரவுணன் குலமறுத்துக் கடிதல் தோன்றும்
தெளிந்ததமிழ்த் தேனமுதாய்த் திரண்டு தோன்றும்
திருநல்லைக் கந்தனெனுந் தெய்வவடி வேற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பரசந் ததும்புமுயர் இனிமை தோன்றும்
ஈறிலறம் எண்ணான்கும் இலங்கித் தோன்றும்
குன்றுதொறும் நின்றாடுங் குமரன் தோன்றும்
குங்குமசந் தனச்சாற்றில் குளிர்தல் தோன்றும்
பன்னிருகை வேலனான பதமுந் தோன்றும்
பழமதனைக் கொடுத்தௌவை பணிதல் தோன்றும்
தென்பொதிகை மலையிலமர் தெய்வந் தோன்றும்
திருநல்லைக் கந்தனெனுந் தெய்வவடி வேற்கே.

பூமாலை புனைந்தேத்திப் புகழ்தல் தோன்றும்
பூசகர்கள் சுற்றிவந்து பூசை தோன்றும்
காமாதி கள்வர்பயங் களைதல் தோன்றும்
காருண்ய லாவண்யக் கழல்கள் தோன்றும்
தூமாதர் இருபாலுந் துணையாய்த் தோன்றும்
துன்பமிலா இன்பமருள் துறையுந் தோன்றும்
தேமாமலர் மாலையொடுந் திரிதல் தோன்றும்
திருநல்லைக் கந்தனெனுந் தெய்வவடி வேற்கே.

எல்லாமாய் அல்லதுமாய் இருத்தல் தோன்றும்
எத்திசையுங் காக்கவெழும் இளவல் தோன்றும்
சொல்லாமற் சொல்லுமருட் சுகமுந் தோன்றும்
சொற்றுணையாம் வேதியனாய்ச் சுடர்ந்து தோன்றும்
வல்லானை வல்வில்லால் வதைத்தல் தோன்றும்
மணிமயிலின் மீதேறி மலர்தல் தோன்றும்
செல்வாய செல்வமெல்லாஞ் செழித்தல் தோன்றும்
திருநல்லைக் கந்தனெனுந் தெய்வவடி வேற்கே.

ஓராறு முகக்கருணை ஒளிர்ந்து தோன்றும்
ஒருருவும் ஒன்றுமிலா ஒருவன் தோன்றும்
வீராதி வீரரெலாம் விழுதல் தோன்றும்
வீரத்தின் சிகரமான வேலன் தோன்றும்
பேராயிரம் பரவிச்சுரர் பேணல் தோன்றும்
பேரின்பச் சுவையான பேறுந் தோன்றும்
தீராத வினையெல்லாந் தீர்த்தல் தோன்றும்
திருநல்லைக் கந்தனெனுந் தெய்வவடி வேற்கே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகோடி சூரியர்கள் ஒருங்கு தோன்றும்
ஒப்பரிய திருமுடிகள் ஒளிர்ந்து தோன்றும்
இருமாதர் புடைசூழும் இனியன் தோன்றும்
இருவினையின் மதிமயங்கா தெடுத்தல் தோன்றும்
பெருமறையா கமங்களவை பெருகித் தோன்றும்
பேசாவநு பூதியது பிறத்தல் தோன்றும்
திருநீறு பூசியெழுந் தீர்த்தந் தோன்றும்
திருநல்லைக் கந்தனெனுந் தெய்வவடி வேற்கே.

வானமுயர் கோபுரங்கள் வளர்ந்து தோன்றும்
வலம்வந்து தொழுவார்க்கருள் மருந்து தோன்றும்
ஞானமய வேலேந்தும் நயப்புத் தோன்றும்
நானிலத்துப் பூணணிகள் நலன்கள் தோன்றும்
பானத்துறு மொழியாளுமை பாலன் தோன்றும்
பணிவன்பொடு பணிவார்க்கருள் பதமுந் தோன்றும்
தேனமுதத் திருநாமஞ் செபித்தல் தோன்றும்
திருநல்லைக் கந்தனெனுந் தெய்வவடி வேற்கே.

பூங்கயிலைக் கிழார்நெற்றிப் பொறிகள் தோன்றும்
பொறியாறு மொன்றாகப் புணர்தல் தோன்றும்
ஓங்குகதிர்ப் பானுகடல் உதித்தல் தோன்றும்
உதித்தலருட் குமரன்மயில் உவமை தோன்றும்
ஆங்கமல மலர்வதன மாறுந் தோன்றும்
ஆறுமுகத் தீசனடி அணைந்து தோன்றும்
தேங்குசிவப் பேறருளுந் தெய்வந் தோன்றும்
திருநல்லைக் கந்தனெனுந் தெய்வவடி வேற்கே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரடி நிழல்

த. ஜெயசீலன்

உந்தனின் வாசலில் உருகி இருக்கையிலே
உந்தன் அழகை
உறுஞ்சிப் பருகையிலே
உந்தன் முகத்தில் ஒழுகும் அருட்கருணை
தன்னில் முழுகியென்
தகைமை உயர்த்தையிலே
ஆனந்தம் கோடி ஆனந்தம் தோன்றிவிடும்!
யார்தான் அறிவார்கள்?
அன்றிருந்து இன்றுவரை
எந்தன் சுருதியானாய்.........
நானோர் கருவியானேன்.
எந்தன் உயிரானாய்....
நானோர் உருக்கொண்டேன்
எந்தன் திசையானாய்.....
நானோ பறந்து போனேன்.
எந்தன் பலமானாய்...........
நானோ உயர்ந்து நின்றேன்.
அன்றிருந்து இன்றுவரை அனைத்தும்நீ
எனஇருந்து
இன்றுந்தன் வாசலிலே
உருகி விழுந்தழுதேன்.
உந்தன் இடத்தில் உட்கார்ந்து

வழமைபோல்
என்னை ஸ்பரிசித்தாய்!
என்தோள் வருடிவிட்டாய்!!
நெஞ்சமெனும் ஆழியில் நிறைந்தடித்த
சலனஅலை
தன்னைத் தணித்தாய்.
நிம்மதிசேர் சாந்திதந்தாய்!
“அதையிதனைச் செய்” என்று
“அனைத்தும்” அறிந்தபின்னும்
“மானுடனாய்” உனைக்கேட்டேன்;
மௌனியாயே புன்னகைத்தாய்!
“நீ சரியாய் எல்லாம் நின்றுசெய்வாய்”
அவரவர்க்கு
நீ சரியாய்த் தீர்ப்பை நிறுவிடுவாய்.
பிழைகளினை
நீ சரியாய்த் தண்டிப்பாய்..........
எனமனது சொல்ல,
யாதொன்றும் உன்னிடத்தில் யாசியாது
வெறும் மனதை
மீட்டெடுத்து மீள்கின்றேன்.
மனமும் உடலும் இலேசானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுமுகனும் அறுபடை வீடுகளும்

கவிஞர் வ. யோகானந்தசிவம்

பண்டைத் தமிழினம் கண்ட
பழம்பெரும் தெய்வம் முருகன்
வண்டமிழ் அழகும் இனிமையும்
வடிவா னவனாம் முருகன்
அண்டம் அனைத்திலும் முருகன்
அழகுத் தோற்றமே காணும்
கண்கண் டதெய்வம் முருகன்
கலியுக வரதன் முருகன்.

அறுபடை வீடுகள் முருகன்
அமர்ந்திடும் இடங்கள் ஆகும்
அறுவகை ஒளியே முருகன்
அரும்பெரும் முகங்கள் ஆகும்
அறுவகை எழுத்துச் "சரவணபவ"
அருள்தரும் மந்திரம் ஆகும்
அறுபெரும் நாளாம் "கந்தசஷ்டி"
ஆனதோர் விரதம் ஆகும்.

குன்று தோறும் ஆடும்
குமரனின் படைவீ டாறு
என்றுமே கண்டார் அவைதான்
எழில்பரங் குன்றத் தோடு
வென்ற திருச்செந் தூரென்று
விளம்பினர் பழனிப் பதியும்
அன்று சொன்ன வேரகம்
அழகிய பழமுதிர்ச் சோலை

பரங்குன் றமலையின் தோற்றம்
பரமனின் லிங்க வடிவாம்
அரனின் மைந்தனாம் முருகன்
அழகி தேவ குஞ்சரி
திருமணம் செய்த இடமே
திருப்பரங் குன்றம் ஆகும்
திருநாள் பங்குனி உத்தரம்
சிறப்புடன் கொண்டா டுவோமே

திருச்சீர் அலைவாய் என்று
சிறப்புடன் அழைக்கும் செந்தூர்
அரக்கர் தனையே அழித்து
அமரர் துயரைத் துடைத்தான்
பிரதமை முதலாய் சஷ்டி
பெருநாள் ஆறும் திருநாள்
விரதமாம் கந்த சஷ்டி
வெற்றித் திருநாள் ஆகும்.

முருகன் விரும்பி உறையும்
முக்கிய இடமே பழனி
திருவா வினன்குடி என்று
சிறப்புறு பெயரும் உண்டு
அருமை மாங்கனிக் காக
அகிலம் சுற்றிய குமரன்
விரும்பிய மாங்கனி அண்ணன்
விநாயகர் கையில் கண்டான்.

கடுஞ்சினம் கொண்ட கந்தன்
கண்டதோர் ஆண்டிக் கோலம்
எடுத்துக் கொண்டு இருந்த
இடமே பழனி ஆகும்
விடுத்த சுகபோ கங்கள்
வேண்டும் பக்தர் களுக்குக்
கொடுத்து ஆண்டிக் கோலம்
கொண்ட தண்டா யுதபாணி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுவாமி நாதன் என்னும்
சுந்தரப் பெயரைக் கொண்டோன்
சுவாமி மலையில் இருக்கும்
சுந்தரப் பதிதிரு வேரகம்
சுவாமிக் குநாதனா கவிருந்து
செய்தவு பதேசம் “பிரணவம்”
சிவமகன் பிரமனைக் குட்டிச்
சிறையினில் அடைத்தான் இங்கு.

குன்று தோறும் குமரன்
குடியிருப் பாகக் கொண்டான்
குன்று தோறும் ஆடும்
குமரன் குறிஞ்சித் தலைவன்
குன்றுகள் ஆன சுருளிமலை
குன்றக் குடியிலஞ் சிவயலூர்
சென்னி மலைவைத் தீஸ்வரன்
செப்பிடும் திருத்தணி விராலியாம்.

பழமுதிர் சோலையில் குமரன்
பாட்டி ஔவை யார்க்கு
பழங்கள் உலுத்திக் கொடுத்தான்
பாட்டி ஊதிச் சாப்பிட்டாள்
பழங்கள் சுட்டதா என்று
பாலகன் முருகன் கேட்க
அழகன் முருகன் அறிவை
அறிந்துமே பாட்டி அதிர்ந்தாள்.

அறுமுகன் உறையும் வீடுகள்
அறுபடை எனவே வழங்கும்
பெறுவதற் கரிய பேறு
பெற்றிட வணங்கி வாழ்வோம்
உறுதுணை கந்தன் கழல்தான்
உறுதியாய் நம்பு வீரே
இறுதியாய் உங்கள் வாழ்வு
இவனடி சேரக் காண்பீர்.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித்திருநகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்துக்கொரு வித்துக்குருபரனெனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமு வர்க்கத்தமரரூ மடிபேணப்
பத்துத்தலை தத்தக்கணைதொடு
மொற்றைக்கிரி மற்றைப்பொழுதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி லிரவாக
பத்தற்கிர தத்தைக்கடவிய
பச்சைப்புயன் மெச்சித்தருபொருள்
பட்சத்துடக் ரட்சித்தருளுவ தொருநாளே
தித்தித்திசை யொக்கப்பரிபுர
பச்சைப்புயன் மெச்சித்தருபொருள்
பட்சத்துடன் ரட்சித்தருளுவ தொருநாளே
தித்தித்திசை யொக்கப்பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்கா டிக்கழுகொடு கழுகாடத்
திக்குப்பரி வட்டகலைகொடு
சித்தரப்பவு ரிக்குத்திகுதிகு
திக்குத்திகு திக்குத்திரிகட மெனவோதும்
கொத்துப்பறை கொட்டக்களமிசை
குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழு நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வொற்றிப்பொரவல பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு நாம் போகின்றோம்?

விகடகவி மு. திருநாவுக்கரசு

சிவபூமி என்று செப்பிடுமிந்த
சிறிலங்கா நாட்டினிலே
சைவசமயம் வளர்ந்த தென்று
சான்று பகர்ந்திடும் சான்றோரே!

சைவ சமயம் வளரும் பாங்கினை
சாற்றுவேன் சற்று கேள்மினே!
ஊர்கள் தோறும் கோயில்கள் கட்ட
உயருது கோபுரம் வானை எட்டி
புத்தம் புதிய தேர் பற்பல செய்து
புதுமை சேற்கிறார் ஆலயத்திலே
மெத்தப்பெரிய மண்டபம் கட்டி
மேன்மை சேற்கிறார் கலியாணத்திற்கு
வண்ணக் "கலரினில் மாபிள்" பதித்து
வனப்பதும் சேற்கிறார் திரு வீதியெல்லாம்
இத்தனை சோடனை செய்துவிட்டால் இங்கு
இந்து தர்மமும் தளைத்திடுமோ?
மெத்த மிடுக்காய் இதுபற்றிப் பேசி
மேன்மை கொள்கிறார் சிவ பக்தரெலாம்

கோயில்கள் கட்டி குடமுழுக்காட்டி விட்டு
கோட்டுக்கு வருகிறார் தொண்டர்சபை
உண்டியல் உடைத்து பணமதை சேர்த்து
உவந்தே அளிக்கிறார் வக்கீலுக்கு
மேசையை அடித்து நொருக்கியே
மேலும் முழங்குவார் அப்புக்காத்து

அப்பன் விநாயகன் ஆருக்கு உரித்தென்று
அப்பீலுக்கு போகுது அவ்வழக்கு
கோட்டில் வழக்கு கிடப்பதனாலே
பூட்டிக்கிடக்குது திருக்கதவு
வெளவாலும் பாம்பும் வண்ணப் புளுக்களும்
வாழ்வை அங்கேயே அமைத்துவிடும்
ஆலயம் பூட்டிக் கிடப்பதனாலே
அழிந்தது ஊரென்றார் அடியவர்கள்

புத்தரை யேசுவை நபியினைப்போற்றும்
புண்ணியர் கோட்டுக்கு வந்தனரோ?
காசுகள் தண்டி கோவில்கள் கட்டும்
கயமையை இவர்கள் செய்வதில்லை
ஆருக்கு ஆண்டவன் சொந்த மென்றிவர்
அடி பட்ட வரலாறு நாம் கண்டதில்லை
ஆலடி வேம்படி அரசடி எங்கும்
ஆலயம் இவர்கள் அமைப்பதில்லை
தீராத பழிதன்னை தேடுகிறார் இந்த
திருத்தொண்டு புரியும் சிவ தொண்டரெல்லாம்

ஆலயம் வேண்டும் உண்மையடி பெண்ணே
அதில் ஐமிச்சம் யாருக்கும் வேண்டாமடி
சாலவும் சிறந்த கோவில்கள் அமைத்தால்
சரிவர சைவமிங்கு வளர்ந்திடுமோ?
பத்து பதினைந்து கோவிலில்லா ஊரை
பார்க்க முடியாது இந்த யாழ்ப்பாணத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே சிவம் என்ற திருமூலவாக்கினை
அறியாதிருப்பது மடமையடி
துன்பத்தில் துவழும் ஏழை எளியவர்
இதயத்தில் இருப்பவன் இறைவனடி
அன்போடு ஏழைக்கு அளித்திடும் அன்னம்
அரும் பெரும் "பூ"வடி ஆண்டவர்க்கு
மண்மிசை அகதி மயங்கி விழுகையில்
மாபெரும் யாகங்கள் ஆருக்கடி?


வண்ணக் கோபுரக் கோவிலில் மட்டும்
வதிபவன் ஈசன் அல்லவடி
எண்ணிற்கரிய ஏழைகள் கொட்டில்கள்
இறைவன் வதியும் கோவிலடி
கண்களை இழந்த காரிகை ஒருத்தி
கதறும் ஒலிகேட்குது காதினிலே
கண்ணன் கோவில் மணியதும் கேட்குது
கால்தடுமாறுது எங்கு போவதென்று!

## திருப்புகழ்

தனதனன தானதந்த தனதனன தானதந்த
தனதனன தானதந்த தனதான

சரணகமலா லயத்தை அரைநமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம்வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்கம் உறுவேனோ
கருணையுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமது நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழனிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் கந்தன் நற்றமிழ்ப் பாமாலை

**சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்,**
**நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.**

**காப்பு**

இல்லையெனாது வரமீன்றருளும் ஈசன் திருமகனாம்
நல்லைக் கந்தன் மேல் நற்றமிழ் மாலை நாம் பாட - தில்லையிலே
திருநடனம் புரிகின்ற சிற்றம்பலத்தான் செல்வனவன்
பெருவயிற்றோன் திருவருளே காப்பு.

**நற்றமிழ்ப்பாமாலை**

தொல்லை வினை தீர்க்கும் தூயவன் மாயவன் மருகன்
நல்லையிலே எழுந்தருளி நல்லருள் பொழியும் முருகன்
கல்லையொத்த மனமும் கசிந்துருகக்காட்சி தருவான்
இல்லையினித் துன்பம் இவன் இனிதாயிங் கிருக்கையிலே!

கந்தன் என்று சொன்னவுடன் கரைந்திடுமே கல்மனமும்
எந்தன் வினை தீர்த்திடவே இங்கெழுந்தருளி இருக்கின்றான்
பந்த வினையறுத்திடும் பாலசுப்பிரமணியனவன் குமரன்
சொந்தமுடன் வீற்றிருக்கையிலே துயரேதும் எமக்கில்லையே!

முத்துக்குமரனவன் முருகன் முன்னைவினை போக்கிடுவான்
சித்தமிரங்கிடுவான் சிங்காரவேலனவன் சிவசக்தி மைந்தனவன்
சுத்த மனத்தினிலே வந்து சுந்தரமாய்க் குடியிருப்பான் குகன்
பத்திவலையினிலே அவன் வந்து பக்குவமாய் அகப்படுவானே.

சிங்கார வேலனவன் முருகன் சிவசக்தி பாலனவன் கந்தன்
பங்காரு காமாட்சி பயந்த பாலசுப்பிரமணியன் குமரன்
எங்காலுங் குறையிருந்தால் எழில் மயில்மேலேறி வருவான்
தங்காது எவ்வினையும் எங்கள் தங்கமயில் கந்தனிருக்கையிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிலே வாழுகின்ற பாமரமக்களெல்லாம் சேர்ந்து நல்லை
ஊரிலே வந்து உன்னை உள்ளமெலாம் உருகிப்பாடி நின்று
தேரிலே காட்சி காணத் தேடியே ஓடி வந்தால் முருகா நீ
நேரிலே காட்சி தந்து எம்மை நெக்குருகி நிற்க வைப்பாயே!

உருகாத மனமும் உருகும் உன் திருநாமஞ் சொன்னால்
பெருகாத கண்ணீரும் வந்து பெருக்கொடுத் தோடுமன்றோ
இருமாதர் புடைசூழ நல்லையில் எழிற் காட்சி தருபவனே
ஒரு காதலுன் மேல் வைத்தோம் ஓடி வந்தே அருள் தந்திடுவாய்.

ஓங்கார விநாயகரின் உத்தமத் தம்பியே முருகா குமரா
ஆங்கார விருள் நீக்கி உன்னருட் காட்சியே நல்லூரிலே
நாங்காணத் தினமும் நீ விதம் விதமாய் வலம் வருவாயே முருகா
பாங்கான நல்ல பக்தர் குழாம் பரவிநிற்கும் ஒரு காட்சியன்றோ!

வள்ளி தேவ சேனாபதியே வருக வந்து நல்லருளே தருக
புள்ளி மயிலேறி வந்தே எங்கள் நல்லூரின் வீதியெங்கும்
துள்ளி விளையாடியே துக்க துயரமெல்லாம் நீக்கியருளை
அள்ளி வீசி அடியார்கள் அகமதிலே குடியிருப்பாய் குமரா!

விக்கினங்கள் நீக்கியே எம் வினைகளெல்லாம் போக்கியே
பக்குவமாய் நல்லூர்ப் பதியினிலே நீ வீற்றிருந்தருள் புரிய
நெக்குருகி நாமெல்லாம் நின்னாமம் உச்சரித்தோம் முருகா
இக்கணமே நீ வந்து எமக்கு நிம்மதியும் நித்திரையும் தருவாய் ஐயா!

நல்லூரின் நாயகனே எங்கள் ஞான வடிவேலவனே குகனே
எல்லோரும் ஒரு மனதாய் உனை ஏற்றித்துதித்து நிற்கின்றோம்
பல்லோரும் பணிந்தேத்தும் பாலசுப்பிரமணியனே பழனி மலையானே
இல்லாமற் செய்யவேண்டும்இனி எங்கள் நாட்டில் இன்னல்களையே!

நல்லைப்பதியுறையும் வள்ளி மணாளனே ஞானத் திருவுருவே
தில்லைப் பதியான் நெற்றியிலுதித்த நிர்மலனே சண்முகனே
தொல்லை வினை போக்கியருளும் நல்லைக்கந்தனே சரவணனே
முல்லைச்சிரிப்போடு வரும் முருகனே நின்தாள் சரணம்! சரணம்!!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இதயத்தில் ஈரமென்றும் இல்லையோ...

கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்
யாவத்தை, அல்வாய்.

**பல்லவி**

சொல்லெடுத்து நானெழுதும் சுந்தரனே! - என்
பல்லவியே என்றுமுந்தன் புகழ்தானே!

- சொல்லெடுத்து......

**அனுபல்லவி**

கையினிலே அழகுவேல் காட்சிதரும்! - உன்னை
மெய்வருத்தி பாடினாலே கோடிபெறும்!

- சொல்லெடுத்து...........

**சரணங்கள்**

ஆற்றுப்படையில் நக்கீரனின் பொருளானாய்! - தமிழ்
ஆய்ந்திடவே ஔவைக்கு கனியீந்தாய்
போற்றிவரும் எங்களையேன் மறந்தனையோ! - இன்றும்
பேரவலங்கள் தொடர்ந்திடவும் வைத்தனையோ!

- சொல்லெடுத்து.......

உறவெல்லாம் ஆங்காங்கே வாடுதையா! - எம்
உள்ளமெலாம் முடிவின்றி கலங்குதையா!
அறமுறையும் நல்லையிலே நீயுமில்லையோ! - எம்மை
ஆதரிக்க வேறுவழி இனியுமில்லையோ

- சொல்லெடுத்து.....

தமிழழகன் என்றுமுனை சொல்வோமே! - செந்
தமிழிங்கு அழிந்திடலும் முறையாமோ!
இனிவரும் பொழுதுகளும் விடியாதோ! - உன்
இதயத்தில் ஈரமென்றும் இல்லையோ!

- சொல்லெடுத்து..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருவியாகட்டும் உன் அருட்கடாச்சம்!

**கண கிருஷ்ணராஜன்**
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

அலங்காரக் கந்தனாக நல்லூரிலிருந்து
அனுதினமும் நமக்கெல்லாம் வேண்டியதை
அள்ளி வழங்கிடும் குமரனே! எமக்கெல்லாம்
அருவியாகட்டும் உன் அருட்கடாச்சம்!

நல்லூரில் குடிகொண்டு எமக்கெல்லாம் - நல்லருள்
நல்கிடும் கடம்பனே! எம் கார்த்திகேயனே!
நம்மவரின் மனங்களிலெல்லாம் குடிகொண்டு
நல்வழிப்படுத்திடு நல்லூரின் மூலவனே!

வதைபட்ட தேவரைக் காக்கவென
வந்துதித்து சூரனுடன் போரிட்டு
வதைத்தொழித்திட்ட எம் சரவணனே! - நாம்
வதைபடுவதையும் போக்கிடு ஆறுமுகனே!

உந்தனுக்கு வள்ளியை மணம்புரிய
உன் அண்ணனைத் துணைக்கழைத்தாய் - நாம்
உன்னை நிதமும் உதவிட அழைக்கின்றோம்
உந்தன் பன்னிரு கரம் கொண்டு உதவிடு வேலவனே!

வண்ண மயிலேறி வலம் வரும் குமரனே!
வகை தெரியாத் தத்தளிக்கும் எம்மவரின்
துன்ப துயரங்களை யெல்லாம்
துடைத்தெறிந்திடு மால் மருகனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குமரன் திருப்புகழ்

**வ. சின்னப்பா (அதிபர் ஓய்வு)**
**தனங்கிளப்பு**

காப்பு

விநாயகர்

(உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி என்ற திருப்புகழ் மெட்டு)

| **நேர் நிரை நேர்** | **நேர் நிரை நேர்** | **நிரை நேர் நேர்** |
|---|---|---|
| முந்தைவினை | ஓடவருள் | முதல்வோனே |
| முக்கணனின் | மூத்ததிருப் | புதல்வோனே |
| தந்தைவலம் | வந்துகனி | பெறுவோனே |
| தம்பிமணம் | கூட்டவனத் | துறுவோனே |
| சிந்தைதனில் | நண்ணஉடன் | வருவாயே |
| செந்தமிழை | அள்ளியள்ளித் | தருவாயே |
| விந்தைநடம் | கொண்டதிருக் | கழலோனே |
| வேழமுகத் | தைந்துகரப் | பெருமாளே. |

திருப்புகழ்

1. (துள்ளுமதவேள்கைக் கணையாலே என்ற மெட்டு)

| **நேர்நேர்** | **நிரைநேர்நேர்** | **நிரைநேர்நேர்** |
|---|---|---|
| அன்று | துயர்நீங்கச் | சமராடி |
| அண்டர் | தமைமீட்ட | அதிதீரா |
| கொன்றை | மதிசூடிக் | குபதேசா |
| குன்றை | அறுத்தாண்ட | குமரேசா |
| பொன்று | கடைநாளில் | துணையாகி |
| பொன்னு | லகவாழ்வைத் | தருவாயே |
| நன்று | நமையாளும் | நமதீசா |
| நல்லை | நகர்ஞானப் | பெருமாளே. |

2. (இதுவுமது அசைவேறு)

| நேர்நேர் | நிரைநிரைநேர் | நிரை நேர்நேர் |
|---|---|---|
| ஆலம் | அயின்றசிவன் | அருள்நேசா |
| அண்டர் | சிறைதவிர்த்த | அதிதீரா |
| கோலம் | பொருந்துதிருக் | குமரேசா |
| குன்றை | உவந்தமர்ந்த | குருநாதா |
| ஓலம் | எனவுரைக்க | உடனேயே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓடி | உதவியருள் | உமைபாலா |
| ஞாலம் | வலம்நொடியில் | வருவோனே |
| நல்லை | நகருகந்த | பெருமாளே. |

3. (அபசார நிந்தைபட் டுழலாதே என்றமெட்டு)

| **நிரைநேர்நேர்** | **நேர்நிரை** | **நிரைநேர்நேர்** |
|---|---|---|
| மிகவாடி | நொந்தனம் | வடிவேலா |
| வினைமாள | வந்தருள் | விரைவாக |
| இகமீதில் | உந்தனுக் | கிணையாக |
| இனியாரை | நண்ணுவம் | எமதீசா |
| சுகமோங்கச் | சந்ததம் | அடியார்கள் |
| துணையாக | நிற்பையே | சிவபாலா |
| புகழோங்கு | நல்லையில் | உறைவோனே |
| பொறியாகி | வந்தவேற் | பெருமாளே. |

4. (காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே என்ற மெட்டு)

| **நேர்நிரைநேர்** | **நிரைநேர்நேர்** | **நேர்நிரைநேர்** | **நிரைநேர்நேர்** |
|---|---|---|---|
| ஆறுமுகப் | பெருமானே | ஆனைமுகற் | கிளையோனே |
| ஏறுமயில் | உடையானே | ஈசரது | குருநாதா |
| ஈறுவரும் | பொழுதோடி | எம்மருங்கில் | வருவாயே |
| நாறுமலர்ப் | பொழிலாரும் | நல்லைநகர்ப் | பெருமாளே. |

5. (இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகி என்ற மெட்டு)

| **நிரைநேர்நேர்** | **நிரைநேர்நேர்** | **நிரைநேர்நேர்** | **நிரைநேர்நேர்** |
|---|---|---|---|
| உமையாளின் | குமரேசா | ஒருவேல்கை | உடையானே |
| சுமையாவும் | இலையான | சுகவாழ்வைத் | தருவாயே |
| இமையோரின் | துயரோட | எழில்லார்வேல் | விடுவோனே |
| நமையாளும் | குகநாதா | நலை வாழும் | பெருமாளே. |

6. (எதிரி லாதபத்தி தனைமேவி என்ற மெட்டு)

| **நிரைநேர்** | **நேர் நிரை நேர்** | **நிரை நேர் நேர்** |
|---|---|---|
| விடிய | வேவிரைந்து | புனலாடி |
| மிகுதி | யாயுளன்று | மலர்தேடி |
| அடியி | லேசொரிந்துன் | புகழ்பாடும் |
| அன்பர் | உள்ளமதில் | அமர்வோனே |
| கொடிய | நோய் நொடிகள் | அணுகாதே |
| குமர, | நின்னருளைத் | தருவாயே |
| நெடிய | கோபுரங்கள் | அழகாக |
| நிறைந்த | நல்லைநகர்ப் | பெருமாளே. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. (ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே என்ற மெட்டு)

| நேர்நிரைநேர் | நேர் நிரை நேர் | நேர் நிரைநேர் | நேர்நேர் |
|---|---|---|---|
| செந்தமிழர் | துன்பகலச் | செய்யுமுகம் | ஒன்றே |
| தேசத்தில் | அமைதிநிலை | சேர்க்குமுகம் | ஒன்றே |
| சந்ததமுன் | அன்புளரைத் | தாங்குமுகம் | ஒன்றே |
| சஞ்சலப்போர் | நீக்கிவிடும் | சாந்தமுகம் | ஒன்றே |
| முந்தைவினை | நீங்கவருள் | மூர்த்தமுகம் | ஒன்றே |
| மோட்சநிலை | எய்தவருள் | மூலமுகம் | ஒன்றே |
| இந்தமுகம் | ஆனபொருள் | ஈய்ந்தருளல் | வேண்டும் |
| ஈடிலெழில் | நல்லைநகர் | எய்துபெரு | மாளே. |

(மூர்த்தம் - முகூர்த்தம்)

8. (இசைந்த ஏறும் கரியுரிபோர்வையும் எழில்நீறும் என்ற மெட்டு)

| நிரைநேர் | நேர்நேர் | நிரைநிரை | நேர்நிரை | நிரை நேர் நேர் |
|---|---|---|---|---|
| வளர்ந்து | துன்னிய | சடையினில் | பாம்பொடு | மதிசூடி |
| மருங்கில் | அம்பாள் | துணையொடு | வெள்விடை | வலமாகி |
| உளர்ந்த | தேவர் | முறையிட | இன்னருள் | உடனேயே |
| உகந்த | ஈசன் | அருளிய | வல்லமை | உடையோனே |
| கிளர்ந்த | சூரன் | துயர்தர | நித்தலும் | மனம்வாடி |
| கிடந்த | உம்பர் | இடருடன் | போக்கிய | குமரேசா |
| தளர்ந்த | போதெம் | இடர்கெட | வந்தருள் | தனிவேலா |
| ததும்பு | கூவம் | எழில்பொழில் | கொள்நலைப் | பெருமாளே |

(உளர்தல் - கலங்குதல், கூவம் - கிணறு)

9. (பாதிமதிநதி போதுமணிசடை நாதர்அருளிய குமரேசா என்றமெட்டு)

| நேர்நேர் | நிரைநிரை | நேர்நேர் | நிரைநிரை | |
|---|---|---|---|---|
| | | நேர்நேர் | நிரைநிரை | நிரைநேர்நேர் |
| சீத | நறுநதி | பாதி | மதியிவை | |
| | | சேர | அணிசிவன் | தருபாலா |
| தேசு | மிகவுயர் | ஆறு | முகமுடை | |
| | | தீர | னெனவளர் | குமரேசா |
| மாத | ரிருவரோ | டாடி | அதிவிரை | |
| | | வாக | மயில் மிசை | வருவோனே |
| வாடி | யடியவர் | நாடி வர | அவர் | |
| | | மாய | வினைகளைந் | தருள்வோனே |
| பாத | மிசை மலர் | தூவி | அனுதினம் | |
| | | பாடி | வழிபட | அருள்தாராய் |
| பாரி | லமைதியும் | போரில் | நிலைமையும் | |
| | | பாச | முடனருள் | படைவீரா |
| காத | தொலைமணி | நாத | மெழ, அழ | |
| | | கான | நலைநகர் | உறைவோனே |
| காண | அழகிய | கோயி | லொடுபெருங் | |
| | | காவு | முறுபதிப் | பெருமாளே. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்தற்கிறை சத்திச் சரவண
முத்துக் கொரு வித்துக் குருபரன் - எனவோது என்ற மெட்டு

**நேர்நேர் நிரை நேர்நேர் நிரைநிரை**
**நேர்நேர் நிரை நேர்நேர் நிரைநிரை**
**நேர்நேர்நிரை நேர்நேர் நிரைநிரை நிரைநேர்நேர்**

அத்தற்குறு நெற்றித் திருவிழி
யுற்றுப்பொறி மிக்குட் டனமுடன்
அப்பிற்பொலி அச்சற் சரவணத் தடமேகி

அற்றைப்பொழு துற்றுத் திகழ் கம
லத்திற் சுடர் பெற்றுப் பொறியவை
அற்றொப்பறு பச்சைக் குழவிகள் எனவாகி

மெத்தப்பொலி வுற்றுக் குலவிடச்
சித்தத்தினில் மிக்கப் பரிவுடன்
வெற்பிற்கர சற்குத் திருமக ளவளான,

மிக்கச்சுடர் கைக்குட் கனல், புனல்
அச்சக்கரம் மற்றுப் பணி, யணி
வெற்புப்பதி சொக்கற் குறுதுணை உமையாவாள்

நித்தச்சுகம் மிக்குப் புவி, பரம்
மெத்தப் பொலி வுற்றுத் திகழ்வகை
நெற்றிக்கணன் பக்கத் தினிலொரு விடையேறி

நெக்குற்றவன் உற்றுப் பெருமொளி
பெற்றுத்திகழ் அப்பொற் குழவிகள்
கட்டிக்கொள ஒப்பற் றறுமுகன் எனவாகி

பத்தற்குளம் தித்திப் புறஅவர்
இச்சிப்பதை மெத்தக் கதியினில்
பட்சத்துடன் கொட்டித் தருமொளிர் படை வீரா

பக்கத்தினில் உற்றுப் புவிமிசை
பற்றற்றுயர் நித்தப் பரசுகம்
பற்றப்பணி, மெத்தப் பொலிநிலைப் பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குமரன் காவடிச் சிந்து

## (காவடி ஆற்றுகை நிகழ்வு)

கு. துரைராஜன் (ஆசிரியர்)
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

பாடல் (களத்தை வட்டமாகச் சுற்றிவரல்)

முத்திடிச்சுக் கோலம் போட்டு முள்ளுக் குத்திக்காவடிக்கு
சுத்திவர நேத்தி வைச்சேன் நல்லூர்
உளிபட்ட கல்லின் காயம்பட்டேன் சித்திரத் தேர் தொட்டிழுக்க
வெற்றி தந்தான் வேல் முருகன் நல்லூர்
சிவசக்தி பாலன் கந்தசஷ்டி வீரன்!

**ஜதி**

தந்தனத் தந்தந்தனத் தந்தானே!
தகிட தக்கிடச் செந்தூரா!
திகட சக்கரன் விகட சக்கரன்
அகட சக்கரன் ஆதீபன்
தகிட தக்கிடத் தந்தானே!
ஷண்முக சுந்தரன் சங்கீதன்
திகட சக்கரன் விகட சக்கரன்
அகட சக்கரன் ஆனானே!

**(வேறு மெட்டு)**

நல்லூர்த் தேரையா அருள் பூக்கும் முருகையா!
வந்தோம் நாமய்யா வழிகாட்டு வேலய்யா!
மூச்சிலாடும் உயிர்நாடி முடிந்துவிடும் போதிலே
தேட்டம் வந்து காக்குமாடா வேலய்யா
விழி மூடிவிடும் திரையரங்கு வாழ்வையா
கிளி பறந்து விடும் கூடு இது தானய்யா
நல்லூர்த் தேரைய்யா...................
ஆனை சேனை பூமாலை ஆளணிகள் ராஜபோகம்
ஆடி விழும் பம்பரந்தான் வேலய்யா ஆ! ஆ!
வாழ்வு ஓடிவிடும் கானலடா வீணய்யா ஆ! ஆ!
ஆடி வீழும்போது வந்து தோன்று வேலய்யா
நல்லூர்த் தேரய்யா...........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறுமெட்டு**

மாயா பலம் வந்து மண்டியிடும் வாசல்
மாசக்தி மாவோடு குன்று துறை வேலே!
மன்னாதி மன்னர் முடிசூடும் திருமண்ணே!
விண்ணே! நீவேலெடுத்து வீசு பகைமீது

**ஜதி**

தந்தனத் தந்தனத் தந்தானே..................

**குத்து மெட்டு**

கவலை கவலை கவலையா? கவலை என்ற கவலையா?
கவலைக்கொரு மருந்திருக்கு நல்லூர்க் கந்தன்
கவலையில்லா மனிதர் யார்? கவலை இல்லா ஊர்எது?
கவலை இந்த மருந்து கண்டு கவலைப் பட்டுச் சாகுது.

**ஜதி**

தந்தனத் தந்தனத் தந்தானே...................................

## வீரன் கதிர்வேலன்

ஆறுப டைக்கும் நிகரென வழகு
தருமுயர் கதிரமலை
வேறுள படைகள் யாவையும் வெல்லும்
வேலவன் உறையும் மலை
கூறுப டவேல் எறிந்தவன் குன்றமர்
சுந்தர வடிவேலன்
நறுமலர் கடம்ப மாலைத ரித்தவன்
நமையாள் உமைபாலன்
ஊறுகள் நீக்கி எம்மைய நுதினம்
காக்கும் கைவடிவேல்
பேறுகள் நல்கும் பெருமை தருமுயர்
மௌன பூசையிலே
வீறுகொள் விபூதி மலையிடத் தொளிரும்
வீரன் கதிர்வேலன்

**புலவர் சு.குகதேவன்**
**கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயர் கொள்ளும் நல்லையூர் திருவேல்

அல்வாயூர் சி. சிவநேசன்

சூழும் திசைநான்கும் சைவத்
திருக்கோவில் காணுஞ் சிறப்போங்க
நாளும் நல்மணி நாதமொலித்திட
நற்காலை விடியலை நமக்கருளி
வேலாளும் நல்லைப்பதி மேவும்
வெற்றித் திருமகனாய் அலங்காரக்
கோலமுறும் கந்தனை தொழுபவர்க்கு
எஞ்ஞான்றும் கவலையிலாக் களிப்பே!

நதிமதி சடையிடை தாங்கும்
நர்த்தன சோபனச் சிவன் மகனே
விதிசதி இடும் வேளை தனில்
வேலூடு வேரறுக்கும் வடிவேலே
பதிகதி என்றுன் பதிகிடந்து
பாவப் பொதியிறக்க வேண்டினேன்
கதியது அருளியெனைக் காத்திடுவாய்
கந்தகோட்டத்துக் கார்த்திகைக் கதிரே!

சரவணக் குளத்தின் மலராறில்
தவழ்ந்த சண்முகப் பொலிவே
கரத்தினால் உமையணைக்க ஆறுடலும்
ஒன்றாகி ஆறுமுகமான அழகே
வரத்தினால் எமையணைத்து எங்கள்
மனத்தினுள் கோயிலுற்ற சிவக்கொழுந்தே
துரத்திடும் பகையினத்தை பந்தாடி
தமிழினத்தின் செழிப்பினைத்தா
நல்லையெழிலே!

வனவள்ளி மனமள்ளி உன்வலதில்
இடமிட்டு ஏற்றருளிய எழில் வேலே
சினங்கொண்டு தேவுலகைச் சீரழித்த
சூரனைச் சங்கரித்த சக்திவேலே
வினைவெல்ல வேல்கொண் டெழுந்தே
வேர்படக் கூர்குத்தும் கந்தவேளே
உனைவெல்ல யாதுமில்லை அழகிலென்ற
உயர் கொள்ளும் நல்லையூர்த் திருவேலே!

மண்ணில் பிறந்த மகிமையறியாது யான்
மாயை இருளில் புகுந்து நாளும்
பண்ணிய பாவப் பெரும்பழி சூழப்
பலகாலும் பட்ட துயர்ப் பெருக்கால்
புண்ணுற்ற மனத்தினனாய் செய்வதறியாது
பண்ணிய தெல்லாம் பொறுத் தருள்வாயென
மன்னினேன் நல்லைக் குமராவுன் சேவடியை
மன்னித்தருள் செய்தெனை ஏற்காயோ

என்னுள்ளக் கமலத்தில் அரியாசனந்
தந்தேன் சக்தியுமை பாலகனே
எண்ணுவ தெல்லாம் உனையன்றி
எனக்குள் உயிப்பது வேறில்லைக் காண்
கண்கள் ஈராறும் மலர்ந்திடக்
கந்தாவுன் கருணையினால் கவர்ந்தென்னை
உன்னுள் ஆட்கொண் டருளவேண்டிக்
கழலுற்றேன் நல்லையூரா
ஏற்றருளாயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையாண்ட காலத்தில் பலதுமிழந்து
பரதேசிக் கூட்டமென ஊருக்குஊர்
நடையாய் நடந்தோம் நாதியற்று
நாட்டுக்கே வேண்டாப் பிறப்பினராகி
அடையாத் துன்பமெலாம் அடைந்து
இனியிங்கு அடைந்திட ஒன்றுமிலாதே
விடையேது வடிவேலே உன்தமிழ்
வம்சம் வாழ்வாங்கு வாழ்வதற்கே!

அரசாளுகைச் சிறப்போங்கிய நல்லையூரில்
அருளாட்சி வளமோங்கப் பதியமர்ந்து
திருவேலைச் செங்கோலெனக் கொள்ளும்
சக்தியின் மைந்தனே சரவணபவனே
ஒரு கணம் பன்னிருவிழி மலர்ந்து
இடர்படும் தமிழினத்தைப் பாராயோ
திருவுளங் கனிந்தே அவர்க்கோர்
தகுவாழ்வுச் சிறப்பளித்து
விளக்கேற்றாயோ

வேறென்ன வேண்டும் எனக்கிந்த
வையகத்தில் உன்னருளன்றி வேறில்லை
யாருண்டு துணையெனஉன்னையல்லாது
யாரையும் நானிங்கு நம்புகிலேன்
சேருண்டேன் உன்சேவடியை தஞ்சமென்றே
சரணந் தந்தென்னைச் சாராயோ
சீர்மேவச் சைவநெறி தளைத்தோங்கும்
திருநல்லைப் பதியமர்ந்த பெருமானே.

மண்ணிலே மனிதமெனப் பிறப்பளித்து
மகிமையீந்த முருகனே போற்றி
எண்ணுதலால் வெற்றிச் சிறப்பளிக்கும்
ஞானச் சுடரே போற்றி
கண்நுதியால் காத்தெனக்கே காலமும்
கதியருளும் கந்தனே போற்றி
மன்னியுன் பாதமே தஞ்சமெனச்
சரணுற்றேன் நல்லைமணியே போற்றி.

# பஞ்சாட்சர மந்திரம்

பஞ்சாட்சர மந்திரமே மூலமந்திரமாகும். இதனை குருவிடமே பெறவேண்டும். பஞ்சாட்சர மந்திரம் என்பதை நோக்கும் போது "நினைப்பவனைக் காப்பது" என்ற பொருளைத் தரும். மந்திரம் என்றும் பெயர் "நினைப்பவனைக் காக்கும் இயல்புடைய வாக்கியமாகிய சிவத்துக்குஞ் சிவசக்திக்குமே செல்லும்" இயல்புடையது.

பஞ்சாட்சர மந்திரத்தை மதுபானமும், மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசாரமுடையவராய், சிவதீட்சை பெற்றவராய் உள்ளவர்கள் மாத்திரமே ஓதுவதற்கு தகுதியுடையவர்கள். இதனை நூற்றெட்டுருவாயினும், ஐம்பது உருவாயினும், இருபத்தைந்துருவாயினும், பத்துருவாயினும் நியமமாக செபித்தல் வேண்டும். பஞ்சாட்சரத்தை உருத்திராக்க மாலையைக் கொண்டாயினும் வலக்கை விரலிறையைக் கொண்டாயினும் உரு எண்ணல் வேண்டும். இதில் உருத்திராட்ச மாலையை கொண்டு செய்வதே உத்தமமாகும்.

**சைவப்புலவர் எஸ்.ரி.குமரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் கீர்த்தனை

செ. பஞ்சநாதன் B.A
யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலை

இராகம்: சிந்து பைரவி தாளம்: ஆதி

**பல்லவி**

நல்லைக்குமரன் அடி பணிந்தால்
நாளும் வினைகள் நீங்கிடுமே
வள்ளல் குகனின் பெயர் மொழிந்தால்
வாழ்வில் நலங்கள் ஓங்கிடுமே (நல்லை..........)

**அநுபல்லவி**

எல்லை இல்லாத அவன் புகழை
என்றும் போற்றி இசைத்திடுவோம்
தொல்லை இல்லாத நிலை பெறவே
தொடர்ந்தும் நாங்கள் தொழுதிடுவோம் (நல்லை.............)

**சரணம்**

காலையில் பூக்கள் பறித்திடுவாய் - அவன்
கழுத்தினில் சரங்கள் நிறைத்திடுவாய்
வேலனின் பாக்கள் படித்திடுவாய் - எந்த
வேளையும் அவனை நினைத்திடுவாய் (நல்லை...........)

மாங்கனிக் கன்று மனம் விழைந்தாய் - இந்த
மாநிலம் தனையே நீ அளந்தாய்
ஏங்கிடும் அடியார்க் கருள் புரிவாய் - எந்த
ஏழையும் வாழ்ந்திட வழி கொடுப்பாய் (நல்லை.............)

ஓம்காரப் பொருளை நீ உரைத்தாய் - இங்கு
நாம்காண வழிகள் பல கொடுப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்காத பொருளாய் நீ இருந்தே - என்றும்
நிலையான பேரின்பம் நீ தருவாய் (நல்லை..........)

சூரனின் உடலை நீ கிழித்தாய் - அந்த
தேவரின் துயரை நீ துடைத்தாய்
வேண்டிடும் வரங்கள் நீ கொடுப்பாய் - என்றும்
வேதனை இல்லா வாழ்வளிப்பாய் (நல்லை.........)

அறுமுகன் என்றே பெயர் எடுத்தாய் - அந்த
அறுபடை வீட்டில் குடி இருப்பாய்
சிறுதுயர் ஒன்றே ஆனாலும் - என்றும்
உறுதுணை ஆகவே நீ இருப்பாய் (நல்லை........)

வள்ளி தெய்வானையை நீ மணந்தாய் - இந்த
வையகம் தனிலே நீ அமர்ந்தாய்
புள்ளி மயில் மீது வலம் வருவாய் - இந்தப்
புவனங்கள் யாவையும் ஆண்டிடுவாய்.
(நல்லை........)

## எழில்நல்லை உறை முருகா!

குன்றுகள் தோறும் ஆடும்
குமரனே! கந்த வேளே!
இன்னருள் புரிந்து அருண
கிரிநாதரைப் பாடவைத்தாய்!
வென்றிடும் வேலைக் கொண்டாய்! .
வதமது செய்தாய் சூரரை!
என்றுமெம் துணைவன் நீயே!
எழில்நல்லை உறையும் முருகா!

**நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் முருகன் மலரில் ஒரு நொண்டிச்சிந்து

முதுபெரும் புலவர், கலாபூஷணம்
வை. க. சிற்றம்பலம் (கொக்குவில்)

யாழ்ப்பாண மாநகர சபையில் - அவர்கள்
என்றென்றும் நல்லூர் முருகனை ஏத்தி
வாய்ப்பாகக் கொண்டாடு முகத்தால் - என்றும்
மாறிலாப் பலவகை தொண்டுகள் செய்வார்.

காப்பாக நகரத்தைப் பேணி - கடை
வீதிகள் கோயில்கள் காவலரண்கள்
தோப்புக்கள் சோலைகள், எல்லாம் - நல்ல
சுவாமிநாதனை ஏத்திச் சுத்தமே செய்வார்.

**நல்லைக்குமரன் மலர்**

ஆண்டுக்கொருமுறை பூக்கும் - நல்லூர்
அருளாளன் கோயிலில் புதுமையாய்ப் பூக்கும்
வேண்டுவார் எத்தனை பேரோ - அவர்கள்
விரும்பிட ஆயிரம் மலர்களாய்ப் பூக்கும்

**மலரில்**

அழகு மலரிதழ் ஒவ்வொன்றும் - புனிதமாய்
ஐயனைப் பாடும் கவிதைகளோடு
நிலவிட அவன் பற்றி விரிக்கும் - மற்றும்
நிறைந்த நல்லூர் பற்றி மேலும் எழுதும்

**மலரும் பாடல்கள்**

தேன்தமிழ் திருப்புக ழோடு - இனிய
சீரான அலங்காரம் அனுபூதியோடு
மாண்புடை கலிவெண்பா, கவசம் ஒன்றாய்
மலர்ந்திட அம்மலர் மகிழ்வாய் விரியும்

**அன்றும் இன்றும்**

அந்த நாள் ஆட்சி புரிந்த - தமிழ்
ஆரியச் சக்கர வர்த்திகள் ஏந்த
எந்தை முருகனே காத்தான் - இன்று
இரகுநாத மாப்பாணர் எலாம் செயக் காப்பான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாவலர்**

நல்லூர் முருகனை ஏத்தி - நல்லை
நாவலர் தமிழோடு சைவம் வளர்த்தார்
வல்லவர் இராசரத்னம் ஏத்தி - இந்த
நாட்டிலே பலபள்ளிக் கூடம் அமைத்தார் .

**செல்லப்பாச் சுவாமியார்**
**யோகர் சுவாமியார்**

செல்லப்பாச் சுவாமிகளோடு - கூட
சிவயோக சுவாமிகள் சேவித்த முருகன்
நல்லோர்கள் யாரையும் என்றும் - பார்த்து
நலிய விடமாட்டான் நாடே அறியும்.

**கைவிடான்**

பசியோடு பட்டினி யகல - கொடிய
பஞ்சம் வராமலே நல்லூரா - என்றால்
அடியெடுத் தோடி வருவான் - இதை
அறிந்தவர் முருகனைக் கைவிடு வாரோ?

பூக்கொண்டு மாலை புனைந்து - அவரைப்
போற்றிட நல்லூர் கோயிலைச் சுற்றீர்
நாக்கொண்டு மாலைகள் பாடி - ஐயன்
நல்ல திருவடி நாளும் கொண்டாடீர்.

**விசேட விரத நாட்கள்**

வெள்ளி நாள் கார்த்திகை நாளில் - மற்றும்
விரும்பிடும் சட்டி நாள் தனிலும் - முருகனை
அல்லும் பகலுமே தொழுவீர் - அவன்
அன்னாரை நோக்கியே கண்ணாலே பார்ப்பான்.

நல்லூர் மகோற்சவ காலம் - முருகனை
நாள்தோறும் ஏத்தியே நல்வீதி சுற்றி
எல்லோரும் பிரதிட்டை செய்தால் - முருகன்
என்னதான் வேண்டினும் இயைந்துகண் பார்ப்பான்.

வீட்டிலே குமரிருந்தாலும் - பிள்ளைகள்
விருத்தியாயில்லாமல் விலகி நின்றாலும்
வாட்டமே யொன்றின்றி முருகன் - அவனை
நல்லடி நோற்றிடின் நலம் நல்கும் - உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருபத்தைந்து நாளும்**

கொடியேறி யிருபத்தை நாளும் - ஐயனை
கும்பிட்டு நன்றேத்தித் தேர் தீர்த்தம் வரையும்
அடியொற்றி பகலிரா வெல்லாம் - அவனின்
ஆடல் பாடல் திருவிழா சுற்றித் தொழுவீர்.

**பவனி வருவான்**

நாலூரும் கொண்டாடும் முருகன் - உலகில்
நல்லடியார் தொழும் செல்வக் குமரன்
பாலோடு பழம் சேர்ந்தாற் போல - இருநல்
பத்தினி மாருடன் பவனி வருவான்.

**புலவர் பிரபந்தம் பாடினார்**

முருகனென்றால் நல்லூர் முருகன் - என்று
முத்தமிழ்ப் புலவோர்கள் பத்தியா யவனை
பெருமான் அவனையே பாடி - பல
பிரபந்தம் பாடினர் பிறங்கிட உலகே

அற்புதம் பலபல செய்தார் - நல்லூர்
ஆறுமுகத்துடன் பன்னிரு கையன்
பொற்புற மூலக் கோயிலிலே - அவனது
பிறங்கிடும் வேல்கண்டு பேசிடும் - பாரீர்,

கள்ளமில்லா உள்ளத் தோடு - அவனை
காதலித்தே கோயில் கட்டிவைத் தேத்தீர்
வெள்ளைக் கோழிக்கொடி வீசி - உலகில்
விளங்கிடும் பச்சை மயிலேறி வருவான்.

மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் - நன்றே
முறையா யமைந்திடும் நல்லூர் முருகனையே
ஏத்திப் பயன்பெற்று உய்வீர் - இந்த
உலகில் மனிதப் பிறவிப் பயன் பெறுவீர்

**வாழ்த்து**

ஆண்டாண்டு மறவாமல் - நல்லூர் - நகரார்
அரிய முருகனின் மலர் வெளியிட்டே வருவார்
நீண்டநாள் வாழ்ந்திட எண்ணும் - நகரில்
நிலை பெற்ற அன்பர்கள் நீடு வாழியரோ!

குறிப்பு : தீராத விளையாட்டுப் பிள்ளை என்ற மெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்று சேவிக்க..........

பா. அருண்
ஆசிரியர் யா/சென்ஜோன்ஸ் கல்லூரி

சௌ்பகப் பெருமானின் செங்கோன்மை
செய்ந்நன்றியின் சான்றாக
செழித்தெழுந்த நல்லூரானின்
செவ்வேளை செப்புவதற்காக
செந்தமிழின் அமிழ்து - காயத்தில்
செந்நீராக சுரக்கின்றது.

செல்லப்பரும் யோகரும் சும்மா இரு என
செயல்வீரர் ஆன வீரசங்கிலியன் வரலாறு........
செப்பேட்டில் செதுக்காத வார்ப்புக்கள்
செந்நாவினால் மொழியாத வடிவழகு
செந்தில், மயிலோனின் மாட்சிமை
செகத்தில் உணர்ந்த அருளாட்சி

செல்லாத ஊருக்கும் கூடவருவான் கோலமா மஞ்ஞையோன்
செல்கணம் உரசிடும் சிரசுடை அயிற்கையோன்
செவ்வாயும், வெள்ளியும் வேலவன் களை
செவ்வான வெள்ளித் தட்டாக ஒளிவீசும்
செவ்வந்திப் பொழிலாக மயிலோனின் வேலழகு
செல்வங் கொழிக்கின்ற இரத அழகு

செந்தூரோ, சந்நிதியோ, ஆறுபடைவீடோ
செவ்விளநீர் சிந்துகின்ற யாழின் மையத்தில்
செயற்கரியோரை இயக்குகின்ற யாதுமானவனாக
செங்காற்று இறங்குகின்ற ஆடிசேர் ஆவணியில்
செவ்வனே செம்மொழிச் செம்மல் ஞானபண்டிதனுக்கு
செந்தாமரைகள் தூவி மா மஹோற்சவம்

செம்மணல் துகள் சொல்லும்
செற்றனன் என்ற மும்மல காரியம்
செம்மைக்கும் வெம்மைக்கும் செம்பொருளோனிடம்
செல்லுதியென தீப் பொறிகளில்.....
செவி சேர் சுவாமிமலை உபதேசங்கள்
சென்று சேவிக்க பிறப்பு ஒன்று போதுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்

## 2010

## கட்டுரைகள்

- குகையில் வளருங் கனலே!
- கலியுகவரதன் குருவடிவிலே திருவருள் பாலித்து வருகிறான்
- அகரவுயிர் போல்.........
- உதித்தனன் உலகம் உய்ய!
- அருணகிரிநாதர் திருப்புகழில் வேண்டுகை
- கந்தபுராணம் (ஒரு தோற்றுவாய்)
- யாழ்ப்பாணத்து முருகப் பிரபந்த இலக்கியங்கள்
- திருவாசகத்தில் இலக்கிய வடிவங்கள்
- தாயுமானவர் காட்டும் சமயநெறி
- தமிழர் வாழ்வில் விருந்தோம்பல்
- திருக்குறளில் அறிவியல் சிந்தனை
- பக்தி இலக்கியங்களில் தூது
- இந்து சமயம் ஒரு கலைக்களஞ்சியம்
- தமிழ் மறையும் திருமுறையும்
- ஆலய வழிபாடு – கேள்வியும் விளக்கங்களும்
- ஊழிக் கனலும் அணுகாது
- ஊன் படைத்த உத்தமர்
- குருவடிவாம் தென்முகக்கடவுள் தெட்சணாமூர்த்தி
- வண்ணார்பண்ணை – பெயர் விளக்கம்
- பிடியரிசியினால் உயர்ந்த அறப்பணிகள்
- உளப் பாதிப்பிலிருந்து விடுதலை பெற ஆலய தரிசனம் உதவுகிறது
- ஈழத்து இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு நாகர் இனம் வழங்கிய பங்களிப்புக்கள்
- சைவ ஆலயங்களில் மௌன விரதத்தை அநுட்டிப்போம்!
- கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் இறையின்பம் பெறுவோம்!
- கிரகதோஷ பரிகாரம்
- நல்லூர் செல்லப்ப சுவாமிகள்
- தமிழ் வாழ, தமிழ் இனம் வாழ...
- நல்லூரைப் புனித நகராக்குவோம்
- இந்து சமயம் கண்ட விஞ்ஞானம்
- முதியோர் பார்வையில் வாழ்க்கை பற்றிய நோக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குகையில் வளருங் கனலே

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் எனப் புகழ்பெற்ற பாரதியின் கவிதைகள் சொல்லும் செய்திகளை இன்றைய காலத்தின் நிலையிலே நோக்குவது இக்கட்டுரையின் உட்கிடையாகும். பாரதியின் பாடல்களில் தெய்வீகப்பாடல்களின் தொகுப்பிலே அமைந்துள்ள முருகனைப் பற்றிய பாடல்களில் அவனுடைய உள்ளத்திலே ஊறியிருந்த முருகபக்தியை இனங்காண முடிகிறது. ஏழுபாடல்கள் தொகுப்பிலே சிறப்பாக இணைக்கப்பட்டுள்ளன. அவற்றினுடைய தலைப்புக்கள் வருமாறு அமைந்துள்ளன: முருகா! முருகா!, வேலவன் பாட்டு, கிளிவிடுதூது, முருகன்பாட்டு, எமக்கு வேலை, வள்ளிப்பாட்டு - 1, வள்ளிப்பாட்டு - 2 என மகுடமிடப்பட்ட பாடல்களின் உள்ளடக்கம் பாரதியின் பக்தி நிலையில் ஒரு தனித்துவமான பண்புநலனாக விளங்குகின்றது.

சக்தியைப் புகழ்ந்து பாடும் பாரதி, சக்தியின் மைந்தர்களான விநாயகரையும் கணபதியையும், முருகனையும், வேலனையும் வெவ்வேறு கோலங்களிலே காட்டும் புனைதிறன் சிறப்பானது. "கற்பக விநாயகக் கடவுளே" என விநாயகரைப் போற்றுகிறான். "காலைப் பிடித்தேன் கணபதி" என வணங்கி நிற்கிறான். வல்வேல் முருகன் தன்னைக் காண வேண்டிக் கிளியைத் தூதாகவும் அனுப்புகிறான். வில்லினையொத்த புருவம் வளைத்தனை வேலவா என்று புகழுகிறான். பாரதியின் உள்ளம் வழிபாட்டில் ஈடுபடும் போது வாழும் காலச் சூழலையும் வாழும் இடத்தையும் நினைக்கிறது. மக்கள் வாழ்வியலில் ஏற்படும் மாற்றம் மரபான வழிபாட்டுச் சிந்தனைகளை மறக்கச் செய்யும் நிலையை உருவாக்குவதைப் பாரதி கண்டான். வேற்று மொழியும் வேற்றுச் சமயச் சிந்தனையும் மக்களிடையே புகுந்து அவர்களைத் திசைமாறச் செய்வதைப் பாரதி நன்கு உணர்ந்து கொண்டான். அடிமட்டத்து மக்களின் அல்லல் தீர்க்கும் அணியாகப் பிறமதப் பரம்பல் ஏற்பட்டு வருவதைக் கவனத்திற் கொண்டான். இந்நிலையில் மரபான இந்துசமய வழிபாட்டு நெறி முறைகளை மீண்டும் மக்கள் மனதிலே புகுத்தக் கவிதையைக் கருவியாகக் கொண்டான். எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்து கொள்ளும் சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு என்பவற்றைக் கொண்ட புதிய கவிதைகளை இயற்றிப் புதிய வழியில் மயங்கிச் செல்லும் தமிழ் மக்களைத் தன்னால் இயன்றவரை நன்னெறிப்படுத்தப் பாரதி முயற்சி எடுத்தான். இச்செயற்பாட்டின் விளைவாகவே பாரதியின் முருகன் பற்றிய பாடல்கள் ஆக்கம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாடல்களை ஆய்வு நிலையில் நோக்கும் போது இதனை நன்குணர முடிகிறது. பாரதி காலத்து நிலையை இன்றும் நாம் காணமுடிகிறது. வாழ்க்கையில் ஏற்பட்ட பெருந்துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும் மனவலுவை இந்து சமயத்தால் அளிக்க முடியாது என்ற சிந்தனை மரபொன்று குறிப்பாக இலங்கைச் சைவநெறி நின்ற மக்களிடையே தோன்றி வளர்ச்சி பெற்று வருகிறது. தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் வாழும் சைவம் தழுவிய மக்கள் தற்போது மனமாற்றம் செய்யப்பட்டு மத மாற்றத்தையும் தழுவியுள்ளார்கள். இந்நிலை இயல்பானது என்று கொள்வதற்கில்லை. கல்வியறிவு பெற்று இந்து சமய வாழ்வியல் நெறிநின்றோரும் மனமயக்கத்திற்குள்ளாகிப் பிறமதம் பற்றிச் செல்லும் போது பாமர மக்கள் பாவம். என்ன செய்வார்கள். இந்து சமய வரலாற்றில் இச் செயற்பாடு முன்னரும் நடைபெற்றுள்ளது. வாழ்க்கையில் ஏற்பட்ட பெருந்துன்பங்களைத் தாங்க முடியாமல் இந்து சமய வாழ்வியலை விட்டுச் சமணசமய வாழ்வியலை மேற்கொண்ட திருநாவுக்கரசரே நல்ல சான்றாக உள்ளார்.

மரபான சைவ வாழ்வியல், இடையூறு நேரும் போது தடம் புரள்வதைத் தடுப்பது தனது கடமையெனப் பாரதி எண்ணினான். பிறப்பினால் பிறமதவாழ்வியலை மேற்கொண்டவர்களைப் பற்றிப் பாரதி கருத்திற் கொள்ளவில்லை. மனதில் கொண்ட மரபான நம்பிக்கையைத் துடைத்து எறிய வந்த தளர்ந்த மனங்களையே கருத்திற் கொண்டான். தனக்கு முன்னே இத்தகைய பணி செய்தோரின் அடியொற்றிப் பக்தி நெறியில் மக்களை ஆற்றுப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டான். பாரதியாரின் முருகா! முருகா! என்ற பாடல் இதனை நன்கு விளக்கியுள்ளது. பின்வரும் பாடற்பகுதி சான்றாக உள்ளது.

**"வருவாய் மயில் மீ தினிலே**
**வடிவே லுடனே வருவாய்**
**தருவாய் நலமும் தகவும் புகழும்**
**தவமும் திறமும் தனமும் கனமும்"**
**அடியார் பலரிங் குளரே**
**அவரை விடுவித் தருள்வாய்**
**முடியா மறையின் முடிவே அசுரர்**
**முடிவே கருதும் வேலவனே".**

தமிழர்களிடையே பண்டைக் காலந்தொட்டே "முருக வழிபாடு" நிலை பெற்றிருந்தது. சங்கப்பாடல்களிலே வேலன் வழிபாடு நடைபெற்றதிற்குச் சான்றுகள் பல உண்டு. மலைமேலுறையும் தெய்வமாக முருகன் மக்கள் மனதிலே இடம் பெற்றிருந்தான். மயிலேறி வரும் அவன் தோற்றமும் அவன் வேல் கைக்கொண்ட கோலமும் மக்களிடம் பக்திப் பரவசமூட்டும் காட்சியாக இருந்தன. தமக்கு வரும் அல்லல்களையெல்லாம் மயிலேறி விரைந்து வந்து முருகன் தீர்ப்பான் என்ற நம்பிக்கையான வாழ்வியலை மேற்கொண்டிருந்தனர். எல்லாப் பகைகளையும் முருகன் கைவேல் போக்கி விடும் என்று நம்பினர். பாரதி இத்தகைய நீண்ட கால வாழ்வியல் நம்பிக்கையையே மீண்டும் மனந்தடுமாறி நிற்கும் தமிழ் மக்களுக்கு ஊட்ட முனைகிறான். மக்கள் மனம் விரும்புபவற்றையெல்லாம் வரிசைப்படுத்திக் காட்டுகிறான். அந்த வரிசை மனித மனங்களைப் பாரதி ஊடுருவிப் பார்ப்பதை நன்கு புலப்படுத்தி நிற்கிறது. மனிதனுக்கு முதலில் மிகவும் இன்றியமையாத தேவையாக இருப்பது உடல் நலமாகும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெரு நம்பிகை எம்மவரிடையே காலங்காலமாக நிலை பெற்று வந்த தொரு சிந்தனையாகும். அதனையே பாரதி முதலில் வைத்துள்ளான். மனிதன் நோய் வாய்ப்படும்போது தெய்வத்தை நினைக் கிறான். முருகன் பிணி தீர்க்கும் தெய்வ மாகச் சங்ககாலம் தொட்டே வழிபடப்பட் டுள்ளான். "வேலன் வெறியாட்டு" என்ற வழிபாட்டு நடைமுறை பற்றிப் பல பாடற் பதிவுகள் இதற்குச் சான்றாகவுள்ளன.

முருகனிடம் பாரதி நலம் வேண் டிய பின் தகவும் புகழும் கேட்கிறான். அவரவருடைய தகுதிப்பாட்டுடன் வாழ்வு நடத்த வேண்டும். இன்றைய காலகட்டத் தில் மனித வாழ்வியலில் தகுதிப்பாடு பேணப்படுவதில்லை மூத்தோர்கூடத் தம் நிலை மறந்து முதுமையை ஒப்பனை யால் மூடி இளமையின் கோலம் காட்டி நிற்க விரும்புகின்றனர். இந்நிலை கண்டு இளையோர் உளம் இறுகி நிற்கின்றனர். இதனால் முதுமையும் இளமையும் முரண்பட நேர்கிறது. பாரதியின் காலத்தில் பிற பண்பாட்டின் பரம்பலால் இளமையும் முதுமையும் முரண்பட நேர்ந்தது. பிற மொழிக் கல்வியும் வேலைவாய்ப்பும் தகு திப்பாட்டை நிர்ணயிக்கும் காரணிகளாயின. இதனால் புகழ் பெறும் நிலையிலும் சிக் கல்கள் தோன்றின.

அடுத்து பாரதி தவமும் திறமும் தனமும் கனமும் முருகனிடம் கேட்கி றான். தவத்தால் திறமுண்டாகும். தனத் தால் கனமுண்டாகும். எனவே உனது அடியார்களை நீ விடுவித்தருள வேண்டு மென வேண்டுகிறான். அந்நியரது ஆட்சி யால் மக்கள் மனம்மயங்கிப் பேருக்கும் புகழுக்கும், தகைமைக்கும், செல்வத்திற் கும் ஆசைப்பட்டு வழிபாட்டு நடைமுறை களையே மாற்றத் துணிந்ததை பாரதி கண்டான். அத்தகைய சமய மாற்றத்தை விரும்பிய அடியவர்களை முருகனே விடு தலையாக்க வேண்டும் என்பதே பாரதி யின் விருப்பமாக இருந்ததை இப்பாடல் நன்கு விளக்கிநிற்கிறது.

## வேலன் பாட்டு

வேலன் பாட்டு பொதுமக்களுக்கு முருகன் பற்றிய செய்திகளை மிக எளி மையாக எடுத்துக் கூறுவதாக உள்ளது. குறிப்பாகக் "கந்தபுராணம்" என்ற புராண காவியம் கூறும் முருகனது ஆற்றல்களை யும் பெருஞ் சிறப்புகளையும் பாரதி எளி மையான சொற்களாலும் இனிமையான இசையாலும் எல்லோரையும் எடுத்துப் படிக்கத் தூண்டுகிறான். செய்யுள் மரபிலே கூறப்பட்ட செய்திகளைப் பாமரர் நெஞ்சி லும் பதியவைக்கப் பாரதி தனது புதுக் கவிதைமரபைப் பயன்படுத்தியுள்ளான். புன்னாகவராளி ராகத்திலே அமைந்த பாடல் மூலம் முருகன் மீது எல்லோரும் பக்தி கொள்ளச் செய்துள்ளான். மகுடி யின் ஓசை கேட்டு ஓடிவரும் நாகம் போல முருகன் சிறப்புக் கூறும் வேலன் பாட்டு எல்லோரையும் வேலன் பால் மயங்கச் செய்யும்.

வேலன் புருவத்தைக் கோபத் தோடு பார்த்த போது வெற்பு நொருங்கிப் போனதையும் தென்மலைக்காட்டிலே குற வள்ளியைக் கண்டு வேலன் சொக்கி நின்றதையும் பாதகன் சிங்கனை அழித்த தையும் பாரதி எளிய மொழி நடையிலே பாடலாகத் தந்துள்ளான். வள்ளியைப் பற்றிக் கூறும் போது பின்வருமாறு விளக் கமாக எடுத்துரைக்கின்றான்.

1. சொல்லினைத் தேனில் குழைத் துரைப்பாள் சிறுவள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பல்லினைக் காட்டி வெண் முத்தைப் பழித்திடும் வள்ளி
3. கிள்ளை மொழிச் சிறு வள்ளி.

இத்தொடர்களில் சொல், பல், மொழி என்னும் மூன்று அம்சங்கள் வள்ளியுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. கந்தபுராணம் காட்டும் முருகன் இரு மணம் செய்தவன். தெய்வானையம்மை திருமணப்படலம், வள்ளியம்மை திரு மணப்படலம் என திருமணப்படலங்கள் இரண்டு கந்தபுராணத்திலே உள்ளன. பொது மக்கள் நிலையில் இவ்விருதார மணத்தை விளக்குவது சற்றுக் கடினமானது. ஆனால் பாரதி வேலன் பாட்டிலே ஊகித்து உணரும் பொருளொன்றைப் பொதிந்து வைத்துள்ளான். "வேலன்" என்ற பெயர் முருகனுக்கு அன்னை பராசக்தியின் ஆற்றல் மிகுந்த வேலைத் தாங்கி நிற்பதால் வழங்கப்படுகிறது. அந்த அற்புதமான வேலைக்கொண்டே பானுகோபன் தலை அறுத்தவன். சூரன்பன் உடலை இருகூறாகப் பிளந்தவன். அந்த அரக்கப் போரின் வெற்றிப்பரிசாகவே இந்திரன் மகள் தெய்வயானையை மணந்து கொண்டான். ஆனால் வள்ளி திருமணம் வேறுபட்டது. காட்டிலே வள்ளியைக் கண்டு மனம் விரும்பி அவளோடு சொல்லாடல் புரிந்து தமையன் கணபதியின் உதவியோடு மணம் செய்கிறான். வள்ளியோடு வேலன் உரையாடும் பகுதியில் வள்ளியின் கிள்ளை மொழி வேலனைக் கவர்ந்தது. அவளுடைய மொழிச் சிறப்புக்குத் துணையாக சொல்லையும் பல்லையும் இணைத்துக் காட்டும் பாரதியின் கவித்துவம் தனித்துவமானது. பல்லின் உறுதிப்பாடு சொற்கள் தெளிவாக வெளிப்பட உதவும். சொற்களின் ஒழுங்கான தொடர்பு மொழியாக விளக்கம் பெறும். சொற்களின் இனிமைக்குப் பல் தேவை. வெண்மையான பற்கள் உறுதியான பற்களாகும். எனவே வள்ளியின் மொழி வேலனைக் கவர்ந்தது என்பதே பாரதி ஊகித்தறிய வைக்கின்ற பாடற் பொருளாகும்.

பாரதியின் பக்திப் பரவசத்தைப் பயிற்றும் நிலையைப் பின்வரும் பாடலடிகள் நன்கு விளக்கி நிற்கின்றன.

**"ஆறு சுடர்முகங் கண்டு விழிக்கின்ப**
**மாகுதே – கையில்**
**அஞ்ச லெனுங்குறி கண்டு**
**மகிழ்ச்சியுண் டாகுதே**
**நீறுபடக் கொடும் பாவம் பிணிபசி**
**யாவையும் – இங்கு**
**நீக்கி அடியரை நித்தமும்**
**காத்திடும் வேலவா!**
**கூறு படப்பல கோடி யவுணரின்**
**கூட்டத்தைக் – கண்டு**
**கொக்கரித் தண்டங் குலுங்க**
**நகைத்திடுஞ் சேவலாய்**
**மாறு படப்பல வேறு வடிவொடு**
**தோன்றுவாய் – எங்கள்**
**வைரவி பெற்ற பெருங்கன**
**லேவடி வேலவா!"**

ஆறுமுகம் கொண்ட வேலன் திருக்கோலத்தை இப்பாடலிலே பாரதி பாடும் போது அந்த முகங்களின் அழகுச் சுடர் பற்றிக் குறிப்பிடுகிறான். விழிக்கு இன்பந்தரும் அந்த முகங்களை எல்லோரும் பார்க்கத் தூண்டுகிறான். வேலனுடைய கைகளில் அபயகரம் பார்க்கப் பார்க்க மகிழ்ச்சியைத் தருகிறது. பாவம், பிணி, பசி என்பவற்றை நீக்கி அடியவரைக் காக்கும் வேலவன் வழிபாட்டை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என பாரதி கவிதையால் பரப்புரை செய்கிறான். உலக வாழ்க்கையில் பிணியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியும் தான் மக்களை அல்லற்படுத்தும். முருக வழிபாட்டில் அன்னதானமும் ஒரு முக்கிய செயற்பாடாக உள்ளது. இலங்கையில் யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியில் அமைந்த முருகன் ஆலயமான சந்நிதியானது, பிணியும் பசியும் போக்கும் அற்புதத் தலமாக உள்ளது. பசித்தவருக்கு உணவிடும் அறப்பணி இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சந்நிதி முருகனை "அன்னதானக் கந்தன்" என்றே சிறப்புப் பெயரால் அழைக்கும் மரபும் நிலவுகிறது. அத்தலத்திலே "வேல்" மூலஸ்தானத்தில் வைத்து வழிபடப்படுகிறது. இப்பாடலிலும் வாழ்வியலில் பிணியோடும் பசியோடும் போராடும் ஏழை மக்களின் நிலை கண்டு பாரதி பக்தி வயப்பட்டு நின்றமை புலப்படுகிறது. புராண இதிகாசங்களையெல்லாம் நன்கு கற்றிருந்த பாரதி அதைப் பற்றிய அறிவைப் பாமர மக்களுக்கும் புகட்ட எண்ணியதையும் இப்பாடல் வரிகள் நன்கு விளக்கி நிற்கின்றன. பிராமண குலத்திலே சமயம் பற்றிய அறிவோடும் நடைமுறை நம்பிக்கைகளோடும் வாழ்ந்த பாரதியின் உள்ளத்திலே பாமரமக்களும் பக்தியால் நல்வாழ்வு பெற வேண்டும் என்ற மனித நேயம் மிக்கிருந்ததையும் வேலன் பாட்டு நன்குணர்த்துகிறது.

## கிளிவிடு தூது

கிளிவிடு தூது என்னும் பாடல் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என மூவகை அமைப்பைக் கொண்ட இசைப் பாடலாகும். வேல்முருகனிடம் கிளியைத் தூதுவிடுவதாக அமைந்த பாடலாகும். பெண்ணொருத்தி முருகன் மீது கொண்ட தெய்வீகக் காதலுணர்வைப் பாடுவதாக உள்ளது. இம்மரபு தேவாரம்பாடிய நாயன்மார்களால் அறிமுகம் செய்யப்பட்ட பாடல் மரபாகும். "சிறை யாரும் மடக்கிளியே" என்ற சம்பந்தர் பாடல் அமைப்பைப் பின்பற்றிப் பாரதியின் பாடல் அமைந்துள்ளது. சங்ககாலப் பாடல்களின் காதல்மரபையும் தேவாரப்பாடல்களின் பக்திமரபையும் இணைத்த பாப்புனைவாக உள்ளது. ஆடல்மரபில் ஆண்டவனை வழிபடும் மரபைப் பாரதி மீட்டுருவாக்கம் செய்துள்ளான். வலிமையான வேலையுடைய வேல் முருகனைத் தன்னோடு வந்து கலந்து மகிழ்ந்து குலாவும்படி பெண்ணொருத்தி பாடுவது வள்ளிமீது காதல் செய்து மகிழ்ந்து குலாவிய குமரன் தன்னிடமும் வருவான் என்ற நம்பிக்கையைப் புலப்படுத்துவதாக உள்ளது. தன்னுடைய பக்திக் காதலைப் பற்றிக் கிளியிடம் நீ சொல்ல வல்லாயோ? எனக் கேள்விகேட்பதாகப் பாரதி பாடலை அமைத்துள்ளான். பாடலில் முருகன் வருமாறு அறிமுகம் செய்யப்பட்டுள்ளான்.

**தில்லை யம்பலத்தே – நடனம்**
**செய்யும் அமரர் பிரான் – அவன்**
**செல்வத் திருமகனை – இங்குவந்து**
**சேர்ந்து கலந்து மகிழ்ந்திடுவாயென்று**
**(சொல்ல ...)**

முருகனின் உறவு நிலை விளக்கத்தின் மூலம் பாரதி ஒரு சமயப் பொதுமையை நிலை நாட்டுகிறான். தில்லையில் வாழும் சிவனின் புதல்வன் முருகன், சைவவழிபாட்டு மரபினன், அதே போலத் திருமாலின் மருகனாக இருப்பதால் வைணவ வழிபாட்டு மரபின் இணைப்புடையவன். சமயவேறுபாடு கண்டு மனங் குழம்பும் மக்களை இந்த உறவின் சங்கமத்தை எடுத்துக் கூறி அமைதிப்படுத்துகிறான் புதுமைக் கவிஞன் பாரதி. அதனால் முருகனைச் "செல்வத்திருமகன்" என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கப்பாடல்களில் பாலைப்பாடலில் பேசப்பட்ட அகப்பொருள் ஒழுக்கமான "உடன்போக்கு" என்பதைப் பற்றி பாரதி அறிந்திருக்கிறான். பாரதிக்கு சங்க இலக்கியங்களைப் பயிலும் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றே கருதப்படுகிறது. ஆனால் பிற்காலப் பக்தி இலக்கியங்களில் சங்கப் பாடல்களின் பொருள் மரபு பயன் படுத்தப்பட்டுள்ளது. பாரதி அதனைப் பின் பற்றியே கிளிவிடுதூது பாடலில் உடன் போக்குப் பற்றிய குறிப்பை இணைத்துள்ளான்.

**பாலை வனத்திடையே – தனைக்கைப்**
**பற்றி நடக்கையிலே – தன்கை**
**வேலின் மிசையானை – வைத்துச் சொன்ன**
**விந்தை மொழிகளைச் சிந்தை**
**செய்வாயென்று**
**(சொல்ல..)**

வள்ளியை மணம் புரிவதற்காகத் தென்மலைக் காட்டிற்கு முருகன் வந்தது போலத் தன்னையும் பாலைநிலத்தினிடையே உடன் அழைத்துச் சென்று அங்கு உறுதி மொழி செய்ததாகப் பெண்ணொருத்தி பக்தியின் வயப்பட்டுக் கிளியிடம் பேசுகிறாள். திருமால் மீது அன்பு கொண்ட ஆண்டாள் தொடக்கிவைத்த இப் பொன் மொழிப் பேச்சு மரபைப் பாரதியும் பயன் படுத்தியுள்ளதை இப்பாடல் நன்கு உணர்த்தி நிற்கிறது. பாரதி பாடலில் குறிப்பிட்டுள்ள "விந்தைமொழிகள்" என்ற தொடர் இங்கு கவனத்திற்குரியது. பல்வேறு மொழிகள் பேசப்படும் பாரத நாட்டிலே ஒரு மொழியை இன்னொரு மொழியைப் பேசுபவர் கேட்கும் போது வியப்பாகவே இருக்கும். கிளியை அம்மொழிகளைப் பற்றிக் கவனம் செலுத்த வேண்டுவது பாரதியின் தாய் மொழிப் பற்றையும் மறைமுகமாகச் சுட்டி நிற்கிறது.

## முருகன் பாட்டு

இப்பாடலிலும் முருகனுடைய பல் வகையான ஆற்றல்கள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. முருகன் கோலச் சிறப்பு முதலில் கூறப்பட்டுள்ளது. முருகன் திரு நோக்கு "வீரத்திருவிழிப்பார்வை" என காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. முருகன் வேலையும் மயிலையும் நினைத்தாலே எதிர்வரும் துன்பங்களெல்லாம் அகன்று விடும். எந்த நேரத்திலும் எங்கும் இவையிரண்டும் எம்மைக் காக்கும் எனப் பாரதி கூறுகிறான். மலைத்தெய்வமான முருகன் மலைவாழ் பறவைகளான சேவலுடனும் மயிலுடனும் இணைத்துப் பேசப்படுவது பொதுமக்கள் அறிய வேண்டியது. கந்த புராணம் சேவலையும் மயிலையும் பற்றிக் கூறும் விளக்கம் பாமரமக்களிடம் போய்ச் சேராது. குழந்தை முருகன் மலை வாரத்திலே விளையாடுபவன். அவன் ஊர்தியாக மயிலை நினைப்பது பாமர மக்களுக்குச் சிக்கல் தராது.

தொடர்ந்த பாடல்களில் முருகன் வரலாறு பற்றிய கதைகளை எளிமையான மொழிநடையிலே இசைப்பண்புடன் கூட்டிப் பாரதி விளக்கியுள்ளான். வேட்டுவ மகள் குறவள்ளியை அடைய வேடங்கள் பல பூண்டதையும் தேவர் மகளை மணந்திட அசுரனை மாய்த்ததையும் எளிய மொழிநடையிலே எடுத்துக் கூறியுள்ளான். இவற்றையெல்லாம் விட முருகனின் அருள் செய்யும் திறத்தைப் பாரதி வருமாறு பாடியுள்ளான்.

**"தமிழ்ப் பாவலர்க் கின்னருள் செய்குவான்**
**– இந்தப்**
**பாரில் அறமழை பெய்குவான் – நெஞ்சின்**
**ஆவ லறிந்தருள் கூட்டுவான் – நித்தம்**
**ஆண்மையும் வீரமும் ஊட்டுவான்".**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியோடு முருகன் தொடர் புற்றிருப்பதைப் பாரதியும் இணைத்துள்ளான். "தமிழ்ப்பாவலர்க்கு இன்னருள் செய்பவன்" என்ற விளக்கம் இதை உறுதிசெய்கிறது. உலகத்திலே அறமழை பெய்ய அருள் செய்வான். நாம் உள்ளத்தால் எண்ணும் ஆவல்களை எல்லாம் நிறைவேற்றுவான். அத்துடன் ஆண்மையும் வீரமும் தருவான் எனப் பாரதி முருகன் அருள்பற்றி எல்லோரும் அறிய இப்பாடலில் எடுத்துக் கூறுவது முருகபக்தி எல்லோருடைய உள்ளத்திலும் ஏற்படுத்துவதாக உள்ளது. பாரதியின் இப்பாடலில் பொதுமக்கள் வழிபாட்டு நடைமுறை எப்படியமைய வேண்டும் என்ற வழிகாட்டலும் நடைபெற்றுள்ளது.

**"தீவளர்த் தேபழ வேதியர் – நின்றன்**
**சேவகத் தின்புகழ் காட்டினார் – ஒளி**
**மீவள ருஞ் செம்பொன் நாட்டினார் – ஐய**
**நீ வள ருங்குரு வெற்பிலே – வந்து**
**நின்று நின் சேவகம் பாடுவாம் – வரம்**
**ஈவள் பராசக்தி யன்னை தான் – உங்கள்**
**இன்னருளே யென்று நாடுவோம் நின்றன்"**
**(வீரத்...)**

மலைநாட்டிலே வாழ்கின்ற மக்களிடையே தொன்றுதொட்டு நிலவிய முருக வழிபாட்டைப் பாரதி எல்லோருக்கும் பொதுவான வழிபாடாகக் காட்டுகின்றான். முன்பு போல மீண்டும் முருகனை எல்லோரும் வழிபட வேண்டும். பண்டைக் காலத்திலே ஆரிய வழிபாட்டு நடைமுறைகள் தமிழரிடையே வந்து கலந்த போது தீ வளர்த்து வழிபாடு செய்யும் முறைமையும் வந்து சேர்ந்தது. "வேதியர்" என்ற சாதியினரே வழிபாட்டு நடைமுறைகளைச் செய்யும் சமூக அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர். பாரதியும் பார்ப்பன குலத்திலே பிறந்தவன். வேத வழிபாட்டு நடைமுறைகள் பார்ப்பனரல்லாதோர் செய்ய முடியாதென்பதை நன்குணர்ந்தவன். எனவே வழிபாட்டு நிலையில் ஒரு பொதுமையைப் பேணவிரும்புகிறான். பார்ப்பனர் வழிபாடு செய்து உலகிலே அறத்தை நிலைநாட்ட முயன்றனர். ஆனால் ஏனைய பொதுமக்களின் கூட்டு வழிபாட்டாலும் எல்லாவற்றையும் பெறமுடியும் எனப் பாரதி கூறுகிறான். முருகன் உறையும் மலைக்கு வந்து அவனைப் பாடிப் பரவும் பண்டைய வழிபாட்டு மரபைப் பரப்ப எண்ணுகிறான். முருகனுக்கு நாம் சேவை செய்தால் அன்னை பராசக்தியிடம் அதிகவரம் பெறலாமென இப்பாடலிலே நம்பிக்கையூட்டுகிறான். பரிபாடலிலும் திருமுருகாற்றுப்படையிலும் பதிவுசெய்யப்பட்ட வழிபாட்டு நடைமுறைகளைப் பாரதி பரவலாக்கம் செய்ய முறப்பட்டதன் விளைவே முருகன் பாட்டு எனலாம்.

## எமக்கு வேலை

புரட்சிக் கவிஞன் எனப் புகழப்பட்ட பாரதி நவீன சிந்தனை வயப்பட்டவன். ஆனால் அவன் உள்ளத்தில் பழமையும் உறைந்திருந்தது. அது சில பாடல்களிலே பதிவாகியுள்ளது. முருகனுடைய வேலை வணங்குவதே எமக்கு வேலையென பாரதி குறிப்பாகப் பாடியிருப்பது இதற்குச் சான்றாகும். செய்யும் தொழிலே தெய்வமெனப் புதிய சிந்தனைப் போக்கிலே வாழ்ந்த பாரதியின் உள்ளத்தில் பழைய வழிபாட்டு மரபிலிருந்து வழுவாத பண்பாடும் நிலைபெற்றிருந்தது. அதைப் பின்வரும் பாடல் காட்டுகிறது.

**"தோகைமேல் உலவுங் கந்தன்**
**சுடர்க்கரத் திருக்கும் வெற்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாகையே சுமக்கும் வேலை**

**வணங்குவது எமக்கு வேலை".**

இச்சிறுபாடலில் பாரதியின் பழமை போற்றும் பண்பு நன்கு வெளிப்பட்டுள்ளது. வேல் முருகன் கையில் இருப்பது. அதனை வீரவேல், வெற்றி வேல், ஞான வேல் எனவும் அழைப்பர். பாரதி சக்தியைப் பாடுகின்ற போதும் வேலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான்.

**"வெற்றி வடிவேலன் – அவனுடை**

**வீரத்தினைப் புகழ்வோம்**

**சுற்றி நில்லாதே போ! – பகையே**

**துள்ளி வருகுது வேல்"**

என வேலின் பெருமையைப் பாடியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வேலை திருக்கோயில்களில் மூலஸ்தானத்திலே வைத்து வழிபடும் மரபு இலங்கையில் உண்டு. நல்லூர், சந்நிதி போன்ற திருக்கோயில்களில் மூலஸ்தானத்தில் வேல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வேல் வடிவில் முருகனைக் காணும் மனப்பக்குவம் பக்தர்களிடம் பரவியுள்ளது. முருகன் திருக்கை வேல் மனிதருடைய எல்லாத் துன்பங்களையும் உடனடியாகத் தீர்க்கவல்லது.

## வள்ளிப்பாட்டு

பாரதி பாடிய வள்ளிப்பாட்டு இரு பாட்டு உண்டு. முப்பெரும் பாடல்களில் ஒன்றான கண்ணன் பாட்டிலே பாரதி கண்ணனைக் காதலியாகப் பாவனை செய்து "கண்ணம்மா என் காதலி" என்ற பாட்டைப் பாடியுள்ளான். அதுபோல முருகனைப் பாடும்போது வள்ளியைப் பற்றியும் பாடியுள்ளான். கண்ணன்மேற் காதல் கொண்ட ஆண்டாள், தான் கண்ணன்மீது கொண்டிருந்த பக்திக் காதலைக் கத்தி முனையில் நடப்பது போலப் பாடியுள்ளாள். அதனையே பாரதியும் பின்பற்றி வேலன் விருப்பத்துக்குரிய வள்ளியைப் பாடியுள்ளான். எந்த நேரமும் நின்மையல் ஏறுதடி குறவள்ளி, சிறுகள்ளி என்ற பாடலில் பல்லவியே பாடல் அமைப்பை நன்கு விளக்கி நிற்கிறது. சிற்றின்ப உணர்விலே பாடல் அமைந்திருப்பது பாரதியின் பக்தி நிலையைத் தனித்துவமாகக் காட்டுகிறது. ஆனால் பாடலில் அமைந்துள்ள சில தொடர்கள் பக்தியின் உச்ச நிலையை விளக்கி நிற்கின்றன.

**"தெள்ளிய ஞானப் பெருஞ்செல்வமே நினைச்**

**சேர விரும்பினன் கண்டாய்!"**

என்ற அடிகள் பாடலில் மேலோட்டமாக அமைந்த சிற்றின்பப்பொருள் நிலையைப் பக்தியின் பரவசநிலையாக மாற்றி விடுகின்றன. ஆண்டாள் பாடிய கர்ப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ என்னும் பாடலில் மேலோட்டமாக காமச் சுவை தென்படுவது போல பாரதியின் வள்ளிப் பாட்டிலும் அச்சுவை தென்படுகிறது. ஆண்டாள் பாடலின் இறுதியில் "சொல் வாழி வெண்சங்கே" என்ற தொடர் அவளுடைய பக்தியின் பரவச நிலையைப் புலப்படுத்துவது போல பாரதியின் பாட்டிலும் "தெள்ளிய ஞானப்பெருஞ் செல்வமே" என்ற தொடர் பாரதியின் பக்திநிலையைப் புலப்படுத்துகிறது.

பாரதியின் வள்ளிப்பாட்டு ஏன் இவ்வாறு சிற்றின்ப நிலையை விளக்குவதாக அமைந்தது என்ற கேள்வியும் உண்டு. பாரதி உலகியல் வாழ்வில் முழுமையாக ஈடுபட்டவன். வடமொழிப் புராணங்களைக் கற்றவன். பக்திப் பாடல்களிலே பரவசமடைந்தவன். மனித நிலையான உடற் சுகங்களை விரும்பியவன். ஆனால் உலக வாழ்வியலில் மானிடக் காதல் வாழ்வில் பாரதிக்கு அவன் விரும்பிய வாழ்வு கிடைக்கவில்லை. பாரதி பாடிய சுயசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையில் தன்பிள்ளைக் காதல் நினைவு களைப் பகிர்ந்து கொண்ட பாரதி பின்னர் பாடிய குயிற்பாட்டில் தன் பிள்ளைப் பிரா யக் காதலியைக் கற்பனையிலே காட்சிப் படுத்த முயல்கிறான். அதே போலவே வள்ளிப்பாட்டிலும் பாரதியின் நிறைவே றாத உலகியல் வாழ்வின் ஏக்கங்கள் வெளிப்பட்டுள்ளன. பின்வரும் பாடல் அதற்குச் சான்றாக உள்ளது.

**"வட்டங்க ளிட்டுங் குளமக லாத**
**மணிப் பெருந் தெப்பத்தைப் போலே – நினை**
**விட்டு விட்டுப்பல லீலைகள் செய்துநின்**
**மேனி தனைவிட லின்றி – அடி**
**எட்டுத் திசையும் ஒளிர்ந்திடுங் காலை**
**இரவியைப் போன்ற முகத்தாய் – முத்தம்**
**இட்டுப் பலமுத்த மிட்டுப் பலமுத்தம்**
**இட்டுனைச் சேர்ந்திட வந்தேன்"**
(எந்தநேரமும்)

பாடலில் பேசப்படும் ஆண்மொழி பாரதியின் புலமைக்கு அணியாகத் திகழ் கிறது. உடல்ரீதியான இன்பங்களைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவது ஆண் களின் குணஇயல்பென்பர். ஆனால் ஆண்டாளின் பாடல் ஒரு மரபு மீறலாகக் கருதப்பட்டது. பாரதியின்பாடல், மரபு நிலையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனி னும் பாரதி பாடிய பக்திப்பாடல் என்ற நிலையில் மேற்காட்டிய பாடலை ஏற்றுக் கொள்ளப் பலரும் தயங்குவர். பாரதியின் சுயசரிதையைப் படித்தவர் அவனுடைய ஆழ் மன உணர்வைப் புரிந்து கொள்வர் என்பதில் ஐயமில்லை. ஞானப்பெருஞ் செல்வத்தைப் பெண்ணாக உருவகித்து அவளை அனுபவிப்பதுபோல பாரதி பாடி யுள்ளதை எல்லோராலும் விளங்கிக் கொள்ள முடியாது. முருகன் தேவியரில் தெய்வயானை பற்றி இத்தகைய கற் பனைப் பாடல் எதுவும் தோன்றவில்லை. ஆனால் வள்ளி பற்றிய பாடல் எழுவ தற்கு முருகன் வள்ளியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு திருமணம் செய்தமை யும் ஒரு வாய்ப்பாக உள்ளது. குறமக ளான வள்ளி மீது மோகம் கொண்ட முருகனாகத் தன்னை பாரதி பாவனை செய்து பாடியுள்ளான். பாவனாபக்தி யென்ற உத்தி வைணவ ஆழ்வார்களா லும் சைவ நாயன்மார்களாலும் முன்னர் பாடல்களிலே நன்கு பயன்படுத்தப்பட்டுள் ளது. பாரதியின் மொழிநடை எல்லோருக் கும் விளங்கத்தக்க எளிமையான மொழி நடையாக இருப்பதாலேயே சிற்றின்ப உணர்வுடைய பாடலாகத் தென்படுகிறது.

பாரதி வாழ்ந்த காலம், சமயம் பற்றிய மரபான சிந்தனைகளை மீண்டும் நினைவூட்ட வேண்டியிருந்தது. மக்களது மனக்குகையின் இருளைப் போக்க பக் திக் கனலை எழுப்ப வேண்டியிருந்தது. அதனால் வழிபாடு பற்றிய புதியதொரு அனுபவத்தைச் சொல்ல வேண்டியிருந் தது. பாரதியின் வாழ்வியலில் ஏற்பட்ட துன்பங்களையும் நிறைவேறாத ஆசை களையும் பக்தியனுபவத்திலே நிறை வேற்றியதைப் பாடலிலே வெளிப்படுத்தி யுள்ளான். அதனால் முருகன் பற்றிய அவன் பாடல்கள் பல்வேறு நிலையில் துன்புறும் மனங்களின் தளர்வை நீக்கும் புத்தூக்கிகளாக உள்ளன. பழமையும் புதுமையும் இணைந்து மனித வாழ்விய லில் ஒரு சமநிலையை ஏற்படுத்தலாம் என்ற பாரதியின் புரட்சியான எண்ணங் களைப் பாடல்களிலே நன்கு வெளிப் படுத்தியுள்ளான்.

துன்பங்களை வென்றிட ஒரு ஞானவிழி தேவையெனப் பாரதி கூறுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றான். நல்லதையும் கெட்டதையும் ஒரு பார்வையால் பகுத்தறியும் பக்குவம் ஞானவிழிக்கே உண்டு. பொதுவாகப் பேசப்படும் அறிவுக் கண்களை விட ஞானவிழியின் செயற்பாடு கூர்மையானது. கண்கள் மட்டும் எல்லாவற்றையும் செய்ய முடியாது. அறிவைச் சரியான முறையிலே செயற்படுத்தும் ஞானவிழியின் கூர்மை யான பார்வை கனல்போலப் பாயும் தன்மையானது. அதுவே பாரதி காட்டும் வடிவேல். அதனையே

**"மாறுபடப் பல வேறு வடிவொடு**
**தோன்றுவாய் - எங்கள்**
**வைரவி பெற்ற பெருங்கனலே!"**

எனப் பாரதி எமக்குக் காட்டுகிறான். அந்தக் கனலைக் காண்பவர் உலக வாழ்வில் எல்லா நன்மைகளையும் பெற்று நலமே வாழ்வர்.

## மனச்சாந்தி தந்தருள எங்கள் முருகன் வந்தான்

முருகன் வந்தான் நல்லை முருகன் வந்தான்
நல்லை நகர்ப் பதிதனிலே எங்கள் முருகன் வந்தான்
தங்கரதத் தேரேறி எங்கள் முருகன் வந்தான்
தவிக்கும் உள்ளந் துயர்துடைக்க எங்கள் முருகன் வந்தான்
(முருகன்)

பால் காவடிகள் காண எங்கள் முருகன் வந்தான்
பறவைக் காவடி பார்க்க எங்கள் முருகன் வந்தான்
பஜனைத் துதி கேட்க எங்கள் முருகன் வந்தான்
பக்தி வெள்ளம் காண எங்கள் முருகன் வந்தான்
(முருகன்)

தேவியர் இருவரோடும் எங்கள் முருகன் வந்தான்
தேம்பி அழும் நெஞ்சம் காண எங்கள் முருகன் வந்தான்
நேரம் தவறாப் பூஜையோடு எங்கள் முருகன் வந்தான்
நேர்த்தி செய்வோரைக் காண எங்கள் முருகன் வந்தான்
(முருகன்)

வானம் பூமழை தூவ எங்கள் முருகன் வந்தான்
வடம்பிடிப்போரைக் காண எங்கள் முருகன் வந்தான்
கற்பூர ஜோதி காண எங்கள் முருகன் வந்தான்
காப்பேன் என்று சொல்லி எங்கள் முருகன் வந்தான்
(முருகன்)

வரலாற்றில் இடம்பிடித்த எங்கள் முருகன் வந்தான்
வள்ளல் ஆறுமுக சுவாமி எங்கள் முருகன் வந்தான்
ஓம் சரவணபவ என்று சொல்ல எங்கள் முருகன் வந்தான்
மனச் சாந்தி தந்தருள எங்கள் முருகன் வந்தான்
(முருகன்)

**திருமதி சந்திரவதனி தவராசா**
**குடும்பநல உத்தியோகத்தர், யாழ் மாநகரசபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுகவரதன் குருவடிவிலே திருவருள் பாலித்து வருகிறான்

பேராசிரியர் வி. சிவசாமி

குருவடிவாய் வந்து எம் இன்னல்கள் தீர்ப்பாய்
குருவரனே!

உலக வரலாற்றிலே மனிதன் படிப்படியாக நாகரிக மேம்பாடு அடைந்து வந்துள்ளான். அவன் தொடக்கத்திலே வேட்டையாடியும், பின்னர் மந்தை மேய்த்தும், அதைத் தொடர்ந்து விவசாயமும் செய்து காலப்போக்கில் இன்றைய நிலையை அடைந்துள்ளான். மனித வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் அவனுக்குப் புறவாழ்வு மட்டுமன்றி அகவாழ்வு மிருந்து வந்துள்ளது. உலகியல் வாழ்வு தொடர்பானவை புறவாழ்விலும், சமய, ஆன்மீக வாழ்வு அகவாழ்விலும் பொதுவாக இடம் பெற்று வந்துள்ளன. சமய, ஆன்மீக வாழ்வே அவனுக்கு வாழும் உலகத்துடன் மட்டுமன்றிக் குறிப்பாக உலகிற்கு மூலகாரணமாகவுள்ள பரம்பொருளாகிய இறைவனைப் பற்றி அறியவும் உதவி வந்துள்ளது. உலக வாழ்விற்குச் சமய, ஆன்மீக வாழ்வும் இன்றியமையாததாகப் பொதுவாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு தமக்கு அப்பாற்பட்ட - ஆனால் தம்மையும் பிறரையும் தாம் வாழும் உலகத்தையும் உள்ளடக்கிய பிரபஞ்சமனைத்தையும் தோற்றுவித்து நடத்தும் பரம்பொருள் பற்றி ஞானிகள் சிந்தித்து வந்துள்ளனர். அவ்வந்நாட்டுத் தட்பவெப்ப நிலைகள், சமூகச் சூழ்நிலைகள், அநுபவங்கள் முதலியனவற்றிற்கு ஏற்றவாறு அவர்கள் காலம் தோறும் தத்தம் கருத்துக்களைக் கூறியுள்ளனர். இறைவனை அருவமாகவும், அருவுருவமாகவும், உருவமாகவும் ஞானிகள் உணர்ந்தனர். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் திருமூலரின் திருவாக்கிறகேற்ப அவர்கள் தத்தம் அனுபவங்களைப் பிற்காலச் சந்ததியினரும் அறிந்து உய்யும் வண்ணம் பக்திப் பாடல்கள், நூல்கள் மூலம் அவர்களுக்கு விட்டுச் சென்றுள்ளனர். இவை பின்வந்தவர்களுக்கு முதுசொத்தாக விளங்குகின்றன.

மேற்குறிப்பிட்டவாறு மூன்று வகையான நிலைகளிலும் இந்துக்கள் இறைவனை உணர்ந்துள்ளனர். அதற்கேற்றவாறு செயற்பட்டுள்ளனர். ஆன்மீக நிலையிலே மிக மேம்பட்டவர்களே இறைவனை அருவமாக உணரக் கூடியவராவர். பெரும்பாலான மக்கள் இறைவனை ஏதோ ஒரு வடிவத்திலோ அல்லது வடிவங்களிலோ தான் எளிதிலே உணர்ந்து வழிபடுவர். இறைவனுக்கு ஏதோ ஒரு குறியீட்டிலோ அல்லது வடிவத்திலோ வழிபாடு ஏற்பட அவற்றிற்கேற்றவாறு அவருக்கும் பல குறியீடுகளும், திருவுருவங்களும் தோன்றின. இறைவனைப் பற்றிய பல்வேறு அம்சங்கள், குணாதிசயங்கள் முதலியவற்றிற்கேற்றவாறு பல திருவடிவங்கள் அழகியல் அம்சங்களுடன் அமைக்கப்படலாயின. இவை பற்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகமங்களும், சிற்ப நூல்களும் விபரித் துள்ளன. இறைவன் ஒருவனேயாயினும் அவனுக்குப் பல பெயர்களும், வடிவங் களும் இந்து மரபிலே முற்பட்ட காலம் தொட்டே வழங்கப்பட்டு வந்துள்ளன. இந்து சமய முதனூல்களிலே காலத்தால் முந்திய இருக்கு வேதம் "ஏகம் ஸத் விப்ராஹ பஹுதாவதந்தி" (உண்மைப் பொருள் ஒன்றே; ஞானிகள் அதனைப் பலவாறு கூறுகின்றனர்) எனவும், மணி வாசகப் பெருமான் "ஒரு நாமம் ஓருருவ மொன்று மில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" எனவும், சிவஞான சித்தியாரிலே "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவார்" எனவும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிட்ட கருத்தினை வலியுறுத்துவதை அவதா னிக்கலாம்.

இந்தவகையில் இறைவனை அன் னையாக, அப்பனாக, நாயகன், நாயகி யாக, தாசனாக, தோழனாக, குருவாக எனப் பலவாறு ஞானிகள் உணர்ந்து வழி பட்டு உய்ந்தனர். இவ்வாறு பல்வேறு பாவனைகளில் இறைவனைக் காணும் முறையில் அவனைக் குருவாக, குறிப் பாக - ஞான குருவாகப் பாவனை செய்தல் மிக முக்கியமான ஒன்றாகும். "குரு" எனில் இருளை - அறியாமையை நீக்கு பவர்; கனமானவர்; மதிப்பிற்குரியவர் எனப் பல பொருள்படும். இங்கு அறியாமை என்பது உலகியல் அறிவு, கல்வி ஆகியன இல்லாமை மட்டுமன்றி, ஆன்மீக அறிவு இல்லாமையையும் குறிக்கும். எனவே, அறியாமையாகிய இருளை நீக்கி அறி வாகிய ஒளியைத் தருபவரும், அஞ் ஞானத்தை நீக்கி மெய்ஞானத்தைத் தரு பவருமாகக் குரு விளங்குகின்றார். இத்த கைய நிலையிலவர் கனம் மிக்கவர்; பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்குமுரிய வர்; இந்து சமய மரபிலே தாய் தந்தை க்கு அடுத்தபடியாகக் குருவே முக்கியத் துவம் வாய்ந்தவர். ஆன்மாவைப் பிடித்து ள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை நீக்கி அல்லது வலுக் கெடச் செய்து, அதனை முத்தியின்பாற் படுத்தற்குக் குரு அவசியமாவர். இறை வனே குருவடிவம் தாங்கி வந்து ஆன் மாக்களை ஈடேற்றுவர். வேறு சில வேளைகளில் குருமார் மூலம் இதனைச் செய்விப்பர். இக்கட்டுரையில் இறைவ னின் குருவடிவம் குறிப்பாக சிவபிரான், முருகப்பெருமான் ஆகியோரின் குருமூர் த்தி வடிவம் பற்றிச் சிறிது கூறப்படும்.

சிவபிரான் பல்வேறு திருவுருவங் கள் தாங்கி ஆன்மாக்களுக்கு திருவருள் பாலித்துள்ளார். அவற்றுள் ஒன்றில் அவர் தென்திசை நோக்கியவராகத் தக்ஷிணா மூர்த்தி எனும் பெயருடையவராகக் கல்லால மரநிழலிலே சனகர், சனந்தனர் முதலிய நான்கு முனிவர்களுக்கு மௌன நிலை யிலே சின்முத்திரை மூலம் மெய்ஞ் ஞானத்தை விளக்கியவர். இங்கு இறை வன் இளமை வாய்ந்தவராகவும் நான்கு முனிவர்களும் முதுமையடைந்தவராகவும் காணப்பட்டனர். இங்கு வாய் மூலமான விளக்கம் இடம்பெறவில்லை. ஞான விளக் கம் சின்முத்திரை மூலம் விளக்கப்பட அம்முனிவர்களின் ஐயம் முற்றாக நீங்கி யது. இது ஒரு பெரிய அதிசயமே! இக் கருத்துக்களடங்கிய வடமொழிச் செய்யுள் "சித்ரம் வடதரோர் மூலே விருத் தாஹ சிக்ஷ்யாஹ குருரயுவா குரோஸ்து மௌ னம் வ்யாக்யானம் சிக்ஷ் யாஸ்து சின்ன சம்சயாஹ" எனத் தெளிவாக அறிவுறுத் துகின்றது. இங்கு இறைவனாகிய குரு என்றும் இளமையானவர், அவருக்கு முதுமையில்லை. அவர் என்றும் இளமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்து விளங்குகின்றார். சிவபிரான் திருப்பெருந்துறையிலே குருவடிவம் தாங்கி மணிவாசகப் பெருமானை ஆட் கொண்டார். இதனாலே தமக்கு ஏற்பட்ட அதி அற்புதமான அவ் அனுபவத்தினை மணிவாசகர் திருவாசகத்திலே உள்ள முருகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டுகளாக,

**"கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க**
**நிலந் தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி**
**நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்**
**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"**

**"நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே**
**ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை**
**பெருமானே"**

**"அருபரத் தொருவன் அவனியில் வந்து**
**குருபரனாகி யருளிய பெருமையை"**

**"வான் பழித்[து] இம்மன் புகுந்து மனிதரை**
**ஆட்கொண்ட வள்ளல்**
**ஊன் பழித்[து] உள்ளம் புகுந்தென்**
**உணர்வதுவாய ஒருத்தன்"**

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சைவசித்தாந்த மரபிலே சிவபிரானே குருவடிவாக வந்து ஆன்மாக்களை ஆட் கொண்டு தம் திருவடியிற் சேர்ப்பர் என் பது தெட்டத் தெளிவாகச் சைவசித்தாந்த முதனூலான சிவஞான போதத்திலே

**"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
**தம்முதல் குருவுமாய் த்தவத்தினில் உணர்த்த**
**விட்டு**
**அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"**

எனக் கூறப்பட்டிருப்பது நன்கு குறிப்பிடற் பாலது.

சிவபெருமானைப் போலவே அவ ரின் இளைய திருக்குமாரனாகிய முருகப் பெருமானும் பெரிய ஞானாசிரியன் ஆவர். சிவபிரானே சூரன் முதலிய அசுரர்களை அழிப்பதற்காக முருகனாகத் தோன்றி னார் எனக் கந்தபுராணம் கூறும். பிரண வத்தின் உண்மையை அறியாது செருக் குற்றிருந்த பிரமாவை அவர் தண்டித்தார். பின்னர் அதனைத் தந்தையாகிய சிவ பிரானுக்கே குரு - சிஷ்ய பாவனையில் உபதேசித்தார் எனவும் கூறப்படுகிறது. இங்கும் தனயன் மிக இளையவனாகவும் தந்தை முதியவராகவும் பாவனை செய் யப்படுகின்றனர். தந்தைக்கு ஞானோப தேசம் செய்தமையால் முருகப்பெருமான் சுவாமிநாதன், சிவகுரு என அழைக்கப் படுகின்றார். மெய்ஞ்ஞானம் வயதின் அடிப்படையில் அன்றித் திருவருளின் மகிமையால் ஏற்படுவதாகும். பிறிதொரு வகையில் நோக்கினால் அறிவினை எவ ரிடமிருந்தும் இளையோரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம் என்பதும் தெளிவு. மேலும் தந்தையிலும் பார்க்கத் தனயன் அறிவிற் சிறந்து விளங்குவது தலை முறையாக அறிவு வளர்ச்சியடைதலை யும் சுட்டுவதாகலாம்.

முருகப் பெருமானே குரு வடிவாகப் பல அன்பர்களை ஆட்கொண்டு ஈடேற றியவர். அவர்களில் அருணகிரிநாதர் நன்கு குறிப்பிடத்தக்கவர். அவருடைய அருட்பாடல்களிலே முருகப்பெருமான் தம்மைக் குருவாக வந்து ஆட்கொண்ட விதத்தையும், அப்போது தமக்கு ஏற்பட்ட வர்ணிக்க முடியாத அநுபவம் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முருகப் பெருமானின் சிறப்பியல்பு களைக் குறிப்பிட்டு அவர் குருவடிவம் தம்மை ஆட்கொள்ளுமாறு

**"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்**
**மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்**
**கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"** எனக் கந்தரநுபூதியில் அவரை வேண்டு கின்றார்.

மேலும் அவரைச் சிறந்த குரு (குரு புங்கவ) எனவும் சிறப்பாகக் கூறியுள்ளார்.

முருகப் பெருமான் தம்மை ஆட் கொள்ளக் குரு வடிவம் தாங்கி எவ்வாறு தோன்றினார் என்பதையும், தமக்கு ஏற் பட்ட அநுபவத்தையும் அவர் "திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம்பூடுவப் பொரு வடிவேனும் கடம்புந் தடம் புயமாறிரண் டும் மருவடிவான வதனங்களாலும் மலர்க் கண்களும் குருவடிவாய் வந்தேன் உள்ளங் குளிரக் குதி கொண்டவே" எனக் கந்தர லங்காரத்திலே (102) சிறப்பாக வருணித் துள்ளார். இங்கு குருமூர்த்தியாக இறை வன் தம்முன் தோன்றி ஆட்கொண்டமை யாலே தமது உள்ளம் குளிர்ந்தமை பற்றி அவர் குறிப்பிட்டிருப்பது கவனித்தற் பாலது. உஷ்ணவலயத்திலுள்ளவர்க்கு குளிர்ச்சி மிக இன்பமாயிருக்கும். திரு விசைப்பா ஆசிரியர் ஒருவர் இறைவனைத் தன் அகக் கண்ணாலே கண்ட போது "உள்ளம் குளிரக் கண் குளிர்ந்தனவே" எனக் கூறியிருப்பது ஈண்டு ஒப்பிடற்பா லது.

குமரகுருபரர் கந்தர் கலி வெண்பா விலே (23-25) முருகப் பெருமானின் கரு ணைத் திறனையும் குரு வடிவாக வந்து தமது பழைய வினைகளைப் போக்கிய வற்றினையும் "கருணைத் திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக் குருபரன் என் றோர் திருப்பேர் கொண்டு திருநோக்கால் ஊழ்வினையைப் போக்கி" எனக் குறிப் பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலே நல்லூர் ஆல யச் சூழலிலே சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்த மக்களுக்கு இறைவழியை உணர்த்தியவராகிய சிவயோகசுவாமிகள் இறைவனே தம்முடைய குருநாதனாக (செல்லப்பா சுவாமியாக) தமக்கு ஞானோபதேசம் செய்தமையினை

**என்னையெனக் கறிவித்தா னெங்கள்**
**குருநாதன்**
**இணையடியென் தலைவைத்தா னெங்கள்**
**குருநாதன்**
**அன்னை பிதாக் குருவானா னெங்கள்**
**குருநாதன்**
**அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்**
**குருநாதன்**
**முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்**
**குருநாதன்**
**மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்**
**குருநாதன்**
**நன்மைதீமை யறியாதா னெங்கள் குருநாதன்**
**நான் தானாய் விளங்குகின்றா னெங்கள்**
**குருநாதன்**

எனப் பாடியுள்ளார்.

இவ்வாறு பல அருளாளர்கள் இறைவன் குருவடிவாக வந்து தம்மை ஆட்கொண்டு உய்வித்தமை பற்றிக் கூறி யுள்ளனர். ஒவ்வொருவரினதும் உள்ள மாகிய குகையிலே இறைவன் முருகன் குகனாக, குருவாக விளங்குகின்றார். முருகன் வடிவிலே இறைவன் உள்ள மாகிய குகையிலே ஒளியாக விளங்கு கின்றார். அவரை மெய்யன்போடு வணங் கினால் ஒளியாக விரும்பிய வடிவிலே தோன்றி அனைவரையும் ஈடேற்றுவார். பல்வேறு இன்னல்களும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்கலியுகத் தின் துன்பங்களைத் துடைக்கும் கலியுக வரதனாக அப்பெருமான் விளங்குகின் றார். எனவே அவரை உள்ளன்போடு வணங்கி அனைவரும் இன்பமாக வாழ்ந்து பிறவிப் பயனை அடைவார்களாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரவுயிர் போல்.........

மட்டுவில் ஆ. நடராசா

சொல்லும் பொருளுமாகிய தத் துவங்களெல்லாம் மாயையிலிருந்து தோன்றுவன. மாயை சுத்தமாயை, அசுத்த மாயை என இரண்டு வகைப்படும். சுத்த மாயையிலிருந்து நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் ஐந்து கலைகளும் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனப்படும் நான்கு வாக்குகளும் நாதம், விந்து, சதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை எனப்படும் சிவ தத்து வம் ஐந்தும் சுத்தகாலம் முதல் சுத்த நில மீறாகிய முப்பத்தொரு தத்துவங் களுந் தோன்றும்.

வாக்கு என்பது பேச்சொலி. இது மூலாதாரத்திலிருந்து விருத்திப்பட்டு வாய்வரையும் வரும்.

சூக்குமை வாக்கு மூலாதாரத்தில் ஒலி வடிவாய்த் தோன்றுதல், ஒடுங்குதல் என்னும் மாற்றங்களின்றி நித்தமாயிருக் கும். இவ்வாக்கே அறிவு நிகழ்வதற்குக் காரணமாவது.

பைசந்தி எழுத்துகள் பிரிந்து தோன்றாது ஒலி வடிவாய் உந்தியிலிருக் கும். மத்திமை எழுத்தொலிகளின் பாகு பாட்டோடு கூடிய ஒலியாய் இதயத்திலி ருக்கும்.

வைகரி வாக்கு தூலவைகரி, சூக்கும வைகரி என இருவகைப்படும். சூக்கும வைகரி சொல் வடிவமான ஒலி யாய், தன் செவிக்குக் கேட்கப்படுவதாய்க் கண்டத்திலிருக்கும். தூல வைகரி சொல் வடிவமான ஒலியாய், தனக்கும் பிறர்க் கும் கேட்கப்படுவதாய் வாயிலிருக்கும்.

அகரமென்பது எழுத்தொலிகள் எல்லாவற்றுக்கும் மூலமாய் உள்ளத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் நாதமாத்தி ரையாகிய இயல்பாற் பிறப்பது. இந்த அகரஒலி எழுத்தொலிகளைத் தோற்று விப்பதாய் எல்லா எழுத்தொலிகளுடனுங் கலந்து அவற்றோடு ஒன்றாயிருக்கும் பொருட்டன்மையால் அவற்றின் வேறா யிருக்கும். மற்றை எழுத்தொலிகள் அகர மின்றி இயங்கா. அகரவொலி மற்றை எழுத்தொலிகளைச் செலுத்துவதால் அவற் றோடு உடனாயுமிருக்கும். அது உயிர் எழுத்துக்களை உயிர்ப்பித்து அவற்றின் மூலம் மெய் எழுத்துக்களை இயக்குகி றது. உயிர்கள் மெய்களை இயக்குவ தால் உயிர் மெய்கள் தோன்றுகின்றன.

உயிர்மெய் எழுத்துக்களில் வல் லினம், இடையினம், மெல்லினம் எனப் படும் மூன்று பிரிவுகள் உண்டு. இவை ஒவ்வொன்றிலும் குறிலெழுத்துகளும், நெடி லெழுத்துக்களும் உண்டு. உயிர் மெய்க ளில் ஙகரவர்க்கத்தில், "ங"வைத் தவிர்ந்த மற்றைய எழுத்துகள் இயங்காதவை, சொல்லாக்கத்துக்குப் பயன்படாதவை. தமிழ் எழுத்துகளில் இறுதியில் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் "னௌ" இயங்காதது. இவற்றைப் போன்ற இயங்காத எழுத்துகள் இன்னுஞ் சில உண்டு. எனவே, உயிர் மெய்களை,

**வல்லின நெடில்**

**வல்லினக் குறில்**

**இடையின நெடில்**

**இடையினக் குறில்**

**மெல்லின நெடில்**

**மெல்லினக் குறில்**

**இயங்கா எழுத்து**

என ஏழு வகையாகப் பிரிக்கலாம்

அகரமுதலால் இயங்கும் உயிர், மெய், உயிர்மெய்களினால் ஆக்கப்படுவதே சொற்பிரபஞ்சம். சொற்பிரபஞ்சத்தால் அவன், அவள், அது என்ற சுட்டியறியப்படுவது பொருட் பிரபஞ்சம். சொற்பிரபஞ்சமும் பொருட் பிரபஞ்சமும் சேர்ந்தது இந்தப் பிரபஞ்சத் தொகுதி.

சொற் பிரபஞ்சந் தோன்றுவதற்கு அகரம்முதல். பொருட்பிரபஞ்சம் தோன்றுவதற்கு இரண்டு முதல்கள் உண்டு. அவற்றில் ஒன்று விதை முதல். அது முதற்காரணமாய மாயை. மற்றையது வினைமுதல், நிமித்த காரணனாகிய ஆதிபகவன்.

மாயை வித்தும் உலகம் முளையும் போலுமாதலால், வித்துக்கு ஆதாரமாகிய நிலங் குளிர்ந்த வழி வித்திலிருந்து முளை தோன்றுவது போல, மாயை தனக்காதாரமாகிய இறைவனது சக்தியின் கண் உள்ளதாய் நிற்றலால், சத்தி சங்கற்பித்தவழி மாயையிலிருந்து உலகந் தோன்றும். உலகத்தைத் தோற்றுவிக்கும் அந்தச் சிவசக்தியே ஆதிபகவன்.

அகரமுதலால் ஏழுவகையான உயிர் மெய் எழுத்துகள் தோன்றுவது போல, ஆதிபகவனால் தாவரங்கள், ஊர்வன, நீர் வாழ்வன, பறவை, மிருகம், மானுடர், தேவர் எனப்படும் ஏழுவகையான உயிர்வர்க்கந் தோன்றுகிறது.

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"**

என்பது வள்ளுவர் கூறிய கடவுள் வாழ்த்து.

எழுத்துகள் எல்லாம் அகரமாகிய முதலையுடையன. அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து என்பது இக்கடவுள் வாழ்த்தின் பொருள். "உலகு என்றது ஈண்டு உயிர்கள் மேல் நின்றது" என்று விளக்கந்தருகிறார் பரிமேளழகர்.

அகரஉவமை ஆதிபகவனால் உலகந் தோன்றுவதற்கும் அந்த ஆதிபகவன் பிரபஞ்சத்தோடு ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்பதற்கும் மாத்திரமே பொருந்தும். அது இறை இயல்பைக் குறிப்பதற்குரிய முற்றுவமை ஆகாது.

அதனால் திருவருட் பயனைச் செய்த உமாபதிசிவாச்சாரியர், அந்நூலின் முதலில் இடம்பெறும் பதிமுது நிலை என்னும் அதிகாரத்தில், முதற்குறளில் அகரவுவமைக்கு மேலதிகமாகச் சில பொருள் பொதிந்த சொற்களைச் சேர்த்திருக்கிறார்.

**"அகர வுயிர்போல் அறிவாகி யெங்கும்**
**நிகரிலிறை நிற்கு நிறைந்து"** என்பது திருவருட்பயனில் வரும் முதற்குறள்.

இந்தக் குறளுக்கு நிகரிலிறை அகரவுயிர்போல் நிற்கும், அறிவாகி நிற்கும், எங்கும் நிறைந்து நிற்கும், எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளலாம்.

இறைமையுடையவன் இறைவன். இந்தப் பிரபஞ்சம் முழுவதுக்கும் இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளே. அவன் ஒப்புடையனல்லன், ஒரு வமனில்லி, நிகரில் இறையாகிய அவன் ஒவ்வொரு உயிருக்கும் வேறெவரினதும் துணையின்றி அவ்வவ்வுயிர் செய்த நல் வினை தீவினைகளுக்கேற்ற இன்ப துன் பங்களைக் கூடாமலுங் குறையாமலுங் கொடுக்கின்றான். இருவினை ஒப்பு வந்த உயிர்களுக்கு முத்தி கொடுக்கிறான். அதனால் அவன் தன்வயத்தனாந் தன் மையுடையவன் என்பது பெறப்படும்.

தன்வயத்தனாந் தன்மை இருந்தா லும் அருட்குணமுடையவனாய் இருந்தா லன்றி அவன் ஆன்மாக்களுக்கு அருள் புரிய மாட்டான். எல்லா ஆன்மாக்களுக் கும் அருள்புரிபவனாதலால் இறைவன் பேரருள் உடையவன் என்பது பெறப்படும்.

அருளுடையவனானாலும் உயிர் கள் எல்லாவற்றுக்கும் பேரின்பத்தைக் கொடுப்பதற்கு, கொடுக்கக் கொடுக்கக் குறையாத வரம்பிலின்ப முடையவனா தல் வேண்டும். உயிர்கள் எல்லாவற்றுக் கும் பேரின்பத்தைக் கொடுப்பவனாத லால் இறைவன் வரம்பிலின்பம் உடைய வன் என்பதை அறியலாம்.

அருட்செயல்களாகிய ஐந்தொழில் களையும் ஆன்மாக்களின் பொருட்டு எக் காலமும் செய்பவனாதலால் இறைவன் முடிவிலாற்றல் உடையவன் என்பதை உணரலாம்.

அறிவாகி நிற்கும் என்றதனால் கடவுள் இயற்கை உணர்வினர் என்பதை உணர முடிகிறது.

இயற்கை அறிவின் முன் அறியா மையைச் செய்யும் ஆணவம் முதலிய பாசங்கள் முனைத்து நிற்கமாட்டா.

"**சுத்த மெய்ஞ் ஞான மேனிச் சோதிபா லசத்தஞ் ஞானம் ஒத்துறா......**" என்கின் றது சித்தியார். எனவே கடவுள் இயல்பா கவே பாசங்களினீங்கியவராவர்.

மலபந்தமற்றவராதலால் அவரு டைய திருமேனி எமது தேகத்தைப் போல மாயா காரியங்களால் ஆக்கப் பட்டதாயிருக்க முடியாது. அவர் தூய உடம்பினர்.

அறிவாகி எங்கும் நிறைந்துநிற்கு மாதலால் கடவுள் எல்லா இடங்களிலு முள்ள எல்லாவற்றையும் அறியும் முற் றுணர்வினர் ஆவர்.

இவ்வாறால் இக்குறள், அகவுயிர் சொற்பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து அப் பிரபஞ்சத்தோடு ஒன்றாய், வேறாய், உட னாய் நின்று அதை இயக்குவது போல இறை பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து அதை ஒன்றாய், வேறாய், உடனாய் நின்று இயக்குகிறதென்பதையும்,

இறைவன்,

**தன்வயத்தனாதல்**
**பேரருளுடைமை**
**வரம்பிலின்ப முடைமை**
**முடிவிலாற்ற லுடைமை**
**இயற்கை உணர்வுடைமை**
**இயல்பாகவே பாசங்களினீங்குதல்**
**தூய உடம்பினனாதல்**
**முற்றுமுணர்தல்**

எனப்படும் எண்குணங்களை உடையவ னென்பதையும் உணர்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதித்தனன் உலகம் உய்ய!

கே.எஸ். ஆனந்தன்

புராண வரலாறுகள் எமக்குப் புரிந்தும் புரியாத புதிரான பல தத்துவங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. தமிழை உண்டாக்கியவர், சங்கப்புலவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். அகத்தியருக்கு தமிழ் இலக்கணம் உபதேசித்தவர் முருகன் என்பது தமிழ் வரலாற்று இலக்கியங்கள் மூலமாக அறியக்கிடப்பவையானாலும் வடமொழியிலும், கிரந்தங்களிலும் முருகனை ஸ்கந்தனாகப் பார்க்கின்ற போது பல உண்மைகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

ஒன்றரை லட்சம் சுலோகங்களைக் கொண்ட ஸ்கந்தபுராணமானது குமரோத்பத்தியைச் சொல்லும் ராமாயணம் எனக் கூறப்படுகின்றதாயினும் குமாரசம்பவம் எல்லாம் வடமொழியிலே தான் இருக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள ஆறுபடை வீடுகள் முருகனுடைய சிறப்பியல்புகளுக்கு ஒளிர்விடங்களாக அமைந்துள்ளன. காவடி எடுப்பது, கார்த்திகை விரதங்கள், ஷஷ்டி உபவாசம் இவை யாவும் தமிழ் நாட்டின் தமிழர்களால் விசேடமாக அனுட்டிக்கப்படும் தினங்களாகும். இதனாலன்றோ முருகனை தமிழ்த் தெய்வமென்று கூறினாலும் வட தேசத்தில் முருக வழிபாடு தொன்றுதொட்டு இருந்திருக்கின்றது என்பதையும் நாம் தெரிந்து கொள்வதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை. ஆதிகாலம் தொட்டு குறிஞ்சிக் கடவுளாக, குன்று தோறாடும் குமரனாக, தொன்மையிலும் தொன்மையான தொல்காப்பியம் முதற்கொண்டு, திருமுருகாற்றுப்படையிலும் குமரனான முருகன் பற்றிய வரலாற்று தத்துவங்களை அறிந்திருந்தாலும் வடமொழியில் முருகனான ஸ்கந்தனைப் பற்றி ஆதார பூர்வமாகக் கிடைக்கும் வரலாற்றுச் சம்பவங்கள் எம்மை வியக்கவைக்கின்றன.

தமிழ்நாட்டில் சமணம், பௌத்தம் ஆகிய மதங்கள் வளர்ச்சியுற்றுப் பெருகிய வேளை மன்னரும் மதம்மாறி சைவர்களை இம்சைக்குள்ளாக்கிய போது சைவமக்கள் இறைவனையன்றி வேறுயாரிடம் முறையிடுவர்? அதர்மம் தலைவிரித்தாடிய வேளை, சமய குரவர்களைத் தண்டிக்கும் மன்னனும், சமண, பௌத்த துறவிகளுக்குச் சார்பாக செயற்படலானான். இதே சமயத்தில் வேதநெறி தளைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க முருகனே அவதார புருசனாக சீர்காழிப் பதியில் வந்துதித்தார் என்பதற்குச் சில ஆதாரங்கள் முன்வைக்கப்படுகின்றன.

முருகப் பெருமானோ, சிவபெருமானோ அவதாரம் செய்தார்கள் என்று கூறினால் அதனை இழுக்கு என்று நினைப்பவர் சைவர்கள் மத்தியில் இருக்கின்றார்கள். கர்ப்பவாசம் செய்தால் பாவம் என்று கூறுவதுண்டு. எந்தப்பாபமும் அணுகமுடியாத பரம்பொருளான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன், வேண்டுவார் வேண்டுபவற்றை ஈயும் கருணைக்கடல். துஷ்டர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்றும் பொருட்டு அவ தாரம் செய்வதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லையே. கிருஷ்ணர் பத்து அவதார புருஷனாகத் தோன்றினார் என்பது பெருமைக்குரியதேயன்றி இழிவு அல்ல. முருகனடியாரான அருணகிரிநாதர் திருப்புகழில் உறைபுகலியூரில் அன்று வருவோனே என்கிறார். புகலியூர் என்பது சீர்காழியை, அங்கே அவதரித்த ஞான சம்பந்தரையே அவர் குறிப்பிடுகின்றார்.

தமிழ் வேதமான தேவாரம் பாடிய திருஞானசம்பந்தரின் தோற்றம் பற்றி சேக்கிழார் "வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத்துறை விளங்க" என்கிறார். அதுமட்டுமன்றி நான்மறை ஞானசம்பந் தர் என்று தம்மை திருஞானசம்பந்தரே கூறிக் கொள்கின்றார். இந்த மறைகளினை, மறை கூறும் யாகாதிகர்மாக்களை வாழ்த்திட வளர்ப்பது முருகனுக்கே ஏற்பட்ட ஒரு விசேடமான காரியம் என்று திருமுரு காற்றுப்படையும் சொல்கின்றது. ஷண்மு கப் பெருமானின் ஆறுமுகங்களில் ஒவ் வொரு முகத்துக்கும் ஒவ்வொரு விஷேட மிருப்பதாகக் கூறிய நக்கீரர் மந்திர விதி முறை தப்பாமல், வைதிக சம்பிரதாயப் படி பிராமணர்கள் செய்கிற யாகங்களைக் கண்டு இன்புற்று அவற்றை வளர்க்கவே ஒரு முகம் இருப்பதாகக் கூறுகின்றார்.

வேத வேள்வியை நிந்தனை செய் துழல்பவர் என்றும், மறைவழக்கமிலார் என்றும் சம்பந்தரே கூறிய சமணர்களை வாதில் வென்று மறுபடியும் வைதீக தர்மத்தை நிலைநாட்டியவர் சம்பந்தர்.

சமயகுரவர்களைப் பற்றித் தெரிந் திராத சைவர்கள் இருக்க முடியாது. ஆனாலும் சம்பந்தருக்குக் கிடைக்கப் பெற்ற பாக்கியம் மற்றவர்கள் எவருக்கும் கிடைத்திருக்காத ஒரு பெரும்பாக்கியம். பூலோகத்தில் மனிதர்களாகப் பிறந்த எவ ருக்கும் கிடைக்கப்பெறாத பெரும்பாக்கி யத்தைப் பெற்றவர் திருஞானசம்பந்தர். அவரை தெய்வக் குழந்தை என்றும் கூறுவதுண்டு. தந்தையுடன் சீர்காழிப்பதி யிலுள்ள சிவாலயத்திற்குச் சென்றவர் தந்தை நீரில் மூழ்கிக் குளித்தபோது சில கணங்கள் தந்தையைக் காணாது போன தும் அம்மா, அப்பா என அழுது தவித்த போது இடபரூபமாக அவர் முன் சிவனும் அம்பிகையும் தோன்றியதும், அழும்பிள் ளைக்கு அம்பிகையிடமிருந்து திருமுலைப் பால் கிடைக்கப் பெற்றதும் அவரே சாட் சாத் முருக அவதாரம் என்பதை நிரூபிக் கப் போதுமானதாகும்.

சிவனுடைய நெற்றிக் கண்ணி லிருந்து அக்கினியில் பொறிகளாகத் தோன்றி சரவணப் பொய்கையில் கார்த் திகைக் கன்னியர்களால் வளர்க்கப் பெற்ற போது கிடைக்கப்பெறாத அமுத பானம் இங்கே சம்பந்த அவதாரத்தில் முருக னுக்குக் கிடைக்கப்பெற்றதும் நோக்கப் படுவதாகும்.

தெய்வங்களுள் முருகனே அக் கினி உருவமானவர். வேதவேள்விக்கு முக்கியமானது அக்கினி. ஆகாயரூபமான ஈஸ்வரனின் விழிகளில் தீப்பொறியாகத் தோன்றி வாயுவால் கங்கையில் விடப்பட, கங்கை சரவணம் என்ற நீர்நிலையில் சேர்க்க, அங்கே ஷண்முகராகி பூமியின் உச்சியாகிய மலைக் குன்றுகளில் கோயில் கொண்டு பஞ்சபூத சம்பந்தமும் பெற்றுத் திகழ்ந்தாலும் அவர் அக்கினிச் சுடரா கவே பிறந்தவராகையால் அக்கினிப் பூ என்றும் அவருக்கு ஒரு பெயர் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸே நானீ : அக்னி பூ : கு ஹ,

என்று கூறுகின்றது அமரகோசம். அரூப மாக இருக்கின்ற முருகன் வெளியே அக்கினி ரூபமாக இருப்பதால் அக்கினி யாராதனத்தை மையமாகக் கொண்ட வராதலால் விசேசிக்கப்படுபவனாகத் திகழ்கின்றான்.

வேதரட்சணத்துக்காகவே தமிழ் நாட்டில் சீர்காழியில் சம்பந்தராக ஒரு முறையும், வடதேசத்தில் ஒரு முறையும் முருகன் அவதரித்ததாகக் கூறப்படுகின்றது.

திருஞானசம்பந்தரான தெய்வக் குழந்தையின் சக்தி புரிந்து கொள்ளாத சமணர்கள், அறிவு ரீதியிலும், திருநீற்று மகிமையால் வெப்புநோய் தீர்த்த மருத் துவ ரீதியிலும் திருஞானசம்பந்தரை வெல்ல முடியாது போனதால் மறுக்க முடியாத அற்புதத்தால் சமணமதத்தினை நிலைநிறுத்த அனல் வாதம், புனல் வாதம் என்ற பரீட்சை நடாத்தி அவரவர் கொள்கையை ஓலைச்சுவடியில் எழுதி தீயில் போட்டால் எந்தச் சுவடி எரியாமல் இருக்கிறதோ அதில் உள்ள தத்துவமே சத்தியம் என்பது அனல்வாதம். அதிலும் திருஞானசம்பந்தரே வென்றார். எழுதப் பெற்ற ஏட்டுச் சுவடியை ஆற்று ஓட்டத் தில் போட்டதும் அது ஆற்று நீரோட் டத்தை எதிர்த்து எதிர்த்திசையில் செல்ல சமணர்களின் சுவடி நீரில் மூழ்கியது. ஏட்டுச் சுவடி சென்ற திசையில் குலச்சிறை யார் என்ற பாண்டியமந்திரி ஆற்றின் கரையோரமாகப் பின் சென்றார். சம்பந் தர் ஓர் பதிகம் பாடி அச்சுவடியை நட் டாற்றில் நிறகச் செய்தார். அச்சுவடியை எடுத்து வந்து பார்த்தார்.

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகமும் துயர் தீர்கவே**

என்று அச்சுவடியில் எழுதப்பெற்றிருந்தது. எதற்காக அந்தணரையும், ஆனினத்தை யும் குறிப்பிட்டு வாழ்த்தியிருந்தார் என்று ஓர் கேள்விக்கு இடமுண்டாயினும் அதற் குள் மறைந்துள்ள தத்துவார்த்தத்தை யும் நோக்க வேண்டியவர்கள் நாங்களே.

மழை பெய்தால் தான் நாட்டில் சுபீட்சம் நிலவும். இதற்காக வானவரை வேண்டுதல் செய்து அவர்களைத் திருப்தி செய்ய வேண்டும். யாகம் அதாவது வேள்வி செய்துதான் அவர்களைத் திருப்தி யடையச் செய்ய முடியும். வேள்வியில் ஆகுதி கொடுக்க உதவும் பாலையும், நெய்யையும் தருவது பசுக்குலம். அது மட்டுமா? அக்கினி வளர்க்க சாணமும் அது தான் தருகின்றது. இதேவேளை உலோக உபகாரம் செய்ய வேண்டும் என்ற பரம நியமங்களுடன் வாழ்ந்து வேதமந்திரங்களை உபசரித்து ஆகுதி செலுத்தக் கூடிய அந்தணர்களையே அப்படி வாழ்க அந்தணர் என்று வாழ்த்தி னார். வையகம் துயர்தீர கர்மாக்களைச் செய்பவர்களே தூய்மையான அந்தணர் கள் என்பதை விசித்துக் கூறியுள்ளார். ஏனையோர்க்கு இவ் வாழ்த்துக் கிடையாது.

உலகில் ஒரு சாராருக்கு, ஏன் இந்துமக்களுக்கு மட்டுமன்றி எல்லோ ரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற இலட்சியத்துக்காக யாகங்கள் செய்யப் பட வேண்டும் என்றே வாழ்த்தினார். அவர்களுடைய தர்மத்தை நிலைநாட்டித் தருவதுடன் அதாவது உலகமுய்ய வேண்டும் என்பதே அவரது அவதாரத் தின் நோக்கம் என்றே கருதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் திருப்புகழில் வேண்டுகை

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**
**தகைசார் வாழ்நாட் பேராசிரியர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## 1. முன்னுரை

தாம் செய்த பிழைகளை, பழி பாவங்களை மறக்காது - மறைக்காது தம்முடைய பாசுரங்களிலே கூறி இறைவனைத் துதித்த அடியார்களுள் அருணகிரிநாதர் முன்னிலையிலுள்ளார். அவர் பாடியவை முருகவேள் பன்னிரு திருமுறை எனத் தொகுக்கப்பட்டுள்ளன. முதல் ஏழு திருமுறைகளுள் அருணகிரியார் பாடிய திருப்புகழ் அடங்குகின்றன. முதல் ஆறு திருமுறைகளும் ஆறுபடை வீடுகளில் வீற்றிருக்கும் முருகப் பெருமானைப் பாடும் திருப்புகழ்ப் பாசுரங்களைக் கொண்டுள்ளன. அருணகிரியார் தன்னுடைய திருப்புகழிலே பல வேண்டுகைகளை முன்வைக்கிறார். இறையடியார்கள் யாவருமே இறைவனைப் பணியுமிடத்து வேண்டுகைகளை முன்வைப்பது வழக்கம். "வாசி தீரவே காசு நல்குவீர்" என்று சம்பந்தப் பெருமான் இறைவனிடம் செல்லக்கூடிய காசு தரும்படி வேண்டுகின்றார். "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று அப்பர் பெருமான் வேண்டுகை செய்கிறார். நாயன்மார்களுள் சுந்தரமூர்த்தி சுவாமிகளே பல வேண்டுகைகளை முன்வைக்கிறார். "சுந்தரனே கந்தமுதல் ஆடையாபரணம் பண்டாரத்தே யெனக்குப் பணித்தருள வேண்டும்" என்றும், "கோழிலியெம் பெருமான் குன்றையூர்ச் சில நெல்லுப் பெற்றேன் ஆளிலை யெம் பெருமான் அவை அட்டித்தரப் பணியே" என்றும் பாடுவதை எடுத்துக் காட்டுகளாகக் காணலாம். அருணகிரியாருடைய திருப்புகழிலோ பெருந்தொகையான வேண்டுகைகள் இடம்பெறுகின்றன. அவ் வேண்டுகைகளை வகைப்படுத்திக் காட்டுவதாகவே இக்கட்டுரை அமைகின்றது. அருணகிரியாரின் வேண்டுகைகளிலே காணப்படும் சில சிறப்புப் பண்புகள் பற்றியும் விளக்கம் தரப்படுகின்றது.

## 2. வரவேணும் வேண்டுகை

திருப்புகழில் பல பாசுரங்கள் "வர வேணும்" என்னும் வேண்டுகையைக் கொண்டுள்ளன. பெரும்பாலும், யமன் வரும்போது முருகன் உடனடியாக வந்து தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அருணகிரியார் வேண்டுகிறார். அவசரமாக வரவேணுமென்ற காரணத்தால் முருகனை மயிலிலேறி வரவேண்டுமெனக் கேட்கிறார். சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு :

i. காலன் தூதர் பாசக் கயிறுகொண்டு என் காலைக் கட்டித் தம்முடன் கொண்டு போகமுன்,

**"சூலம்வாள் தண்டு செஞ்சேவல்கோ தண்டமுஞ்**
**சூடுதோ ளுந்தடந் திருமார்பும்**
**தூயதாள் தண்டையுங் காண ஆர்வஞ்செயுந்**
**தோகைமேல் கொண்டு முன் வரவேணும்"**
(35)

ii. யம தூதர்களுடைய வரவால் அச்சம் ஏற்பட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயிர் மயங்குபொழுது கடிதே
மயிலின்மிசை வரவேணும்" (74)

iii. "சமன் வரும் அன்றைக் கடியிணை
தரவேணும்" (95)

iv. "இருநிலமீதி லெளியனும் வாழ
எனது முனோடி வரவேணும்" (433).

"வரவேணும்" என்பதற்குப் பதிலாக "வருவாயே" என்பதனையும் அருணகிரி யார் பயன்படுத்துகிறார். இங்கு யமபய மன்றி, விலைமாதரால் ஏற்படும் துயர், பயம் ஆகியன குறிப்பிடப்படுகின்றன.

i. "கணத்தில் என் பயமற மயில் முது
கினில் வருவாயே" (5)

ii. "நமுப்பு நஞ்சன சிறுமிகள் துயரற
வருவாயே" (6)

iii. "பண்புபெற அஞ்சலஞ்சலென வரு
வாயே" (59)

iv. "கந்தச் சபைதனில் எனதுள முருக
வும் வருவாயே" (210)

v. "ஞானநடமே புரிந்து வருவாயே" (435).

## 3. அருள்வாய் வேண்டுகை

இவ்வேண்டுகை முக்கியமான தொன்றாக அமைவதை அருணகிரியாரு டைய 398ஆம் திருப்புகழிலிருந்து அறிய முடிகின்றது.

ஐங்கரனை யொத்தமன மைம்புலம் கற்றிவள
ரந்திபகலற்ற நினை வருள்வாயே
அம்புவிதனக்குள் வளர் செந்தமிழ்வ முத்தியுனை
அன்பொடுது திக்கமன வருள்வாயே
தங்கியத வத்துணர்வு தந்தடினா முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி யருள்வாயே
தண்டிகைக னப்பவிசு எண்டிசைம் திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனே யருள்வாயே
மங்கையர்சு கத்தைவெகு இங்கித மெனுற்றமன
முன்றனைநி னைத்தமைய அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரட்சைபுரி
வந்தணைய புத்தியினை யருள்வாயே
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி
லப்பரருள்
கொண்டு உடலுற்றபொரு ளருள்வாயே
குஞ்சரமுகற்கிளைய கந்தனெ வெற்றி பெறு
கொங்கணகி திக்குள்வளர் பெருமாளே.

மேற்படி திருப்புகழில் 7 தடவை "அருள்வாயே" என்று குறிப்பிடுகிறார். முருகனுடைய தாமரைத் தாள்களை வேண்டியும், அவனுடைய அன்புப் பார்வை வேண்டியும் அருணகிரியார் பாடுகின்றார்.

"தண்டைப் பதமெனக்கென் றருள்வாயே" (12)
"என்றன் தலைமிற் சந்தப் பதம்வைத்
தருள்வாயே" (20)

"அருள்வாய்" வேண்டுகையுடன் தொண்டினை இணைத்து அருணகிரியார் பல இடங்களிலே பாடுகிறார்.

"தண்டையங் கழற்குத் தொண்டு கொண
டருள்வாயே" (11)
"தொண்டினா லொன்றுரைக் கருள்வாயே"
(37)
"என்றென்றுந் தொண்டு செயும்படி
யருள்வாயே" (72)

"அருள்வாய்" என்பதற்குப் பதிலாக "அருள்தாராய்", "அருள் புரிவாய்" என்பன வும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

"வாழ நிதம் புனையும் பதந் தந்துன
தருள்தாராய் (9)
"அவச வனிதையர் முடுகொடும் அணைபவர்
பெருமை யுடையவர்உறவினைவிட அருள்
புரிவாயே" (60)
"கொத்தா ரரும்பு நின் தாள் மறந்து
குன்றாம லுன்ற னருள்தாராய்" (369).

## 4. தருவாய், தரவேணும் வேண்டுகை

முருகனுடைய பதத்தினையும், தொண்டு செய்வதனையும், தன் சிற்றின்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினை விட்டு நீங்கவும் வேண்டி அவனருள் பெற விழைந்த அருணகிரியார் "அருள்தாராய்" / அருள்வாய் / "அருள்புரிவாய்" என்று குறிப்பிட்டார். ஆனால் தனக்கு நூலறிவு/ ஞான அறிவு, உறவு, அன்பு, மொழி என்பனவற்றை முருகப் பெருமான் தரவேண்டும் என வேண்டுகின்ற பொழுது "தருவாய்" / "தரவேணும்" என்று கூறுகிறார்.

**"உன் இணையடிகள் பாடிவாழ என்**
**நெஞ்சிற் சொல் தருவாயே"** (48)

**"நாமமொழி கோக்கைக்கு நூலறிவு தருவாயே"** (682)

**"உள்ளதுமிலாது மல்லதவிரோத உல்லச**
**விநோதந் தருவாயே"** (667)

**"பூவடிகள் சேர அன்பு தருவாயே"** (707)

**"ஏதமகற்றிச் செம்பத சிந்தனை தருவாயே"** (843)

**"உட்டெளிதற் கொன்றைத் தரவேணும்"** (21)

**"செறிவு மறிவு முறவு மனைய திகழு மடிகள்**
**தரவேணும்"** (129)

**"எனது தனிமை கழிய அறிவு தரவேணும்"** (130)

**"தலையறிவி லேனைநெறி நிற்கநீ தீக்ஷை**
**தரவேணும்"** (827)

**"தெளியு ஞான மோதிக் கரைத்து சிவபுராண**
**நூலிற் பயின்று செறியு மாறு தாளைப்**
**பரிந்து தரவேணும்"** (966)

"தாராய்", "தா" என்றும் சில இடங்களில் வேண்டுகை செய்யப்படுகின்றது.

**"நின்பொற் கழல் தாராய்"** (42)

**"இனியார் தம் சபை தாராய்"** (258)

**"செயல்கொளஞ் செஞ்சீர் செம்பொன்**
**கழல்தாராய்"** (641)

**"கழல்சேரணி நூபுர தாளிணை நிழல்தாராய்"** (813)

**"சிவஞான போதகம் வந்து தாராய்"** (865)

## 5. பிற வேண்டுகைகள்

அருணகிரியாரின் பிற வேண்டுகைகளைப் பின்வரும் அட்டவணையில் தருகிறோம். (அடுத்த பக்கம் பார்க்க)

## 6. நிறைவுரை

தமிழ்நாட்டு இறையடியார்களுள் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருணகிரிநாதரும் தங்கள் தனிப்பட்ட தேவைகளுக்காக இறைவனிடம் வேண்டுகைகளைச் சமர்ப்பிக்கின்றனர். சுந்தரர் உலகியல் வாழ்விலே ஈடுபட்டவர். அவருக்கும் இறைவனுக்குமிடையே இருந்த உறவு மிக நெருக்கமானது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய நூறு பதிகங்களில் ஐம்பதுக்கு மேற்பட்டவற்றில் இறைவனிடம் தன்னை ஓர் அடியவனாக ஒருமையிலே விண்ணப்பிப்பதைக் காணலாம்.

**"எங்கேனும் இருந்துன் அடியேன்**
**உனைநினைந்தால்**
**அங்கேவந் தென்னோடும் உடனாகி நின்றருளி**
**இங்கே என் வினையை அறுத்திட்**
**டெனையாளும்**
**கங்கா நாயகனேகழிப்பாலை மேயானே"**
(23:2)

இப்பாசுரத்தில் பிற அடியார்களினின்று வேறுபட்ட ஒருவராக சுந்தரர் தன்னை வெளிப்படுத்துவதைக் காணமுடிகின்றது. இறைவன் தான் நினைத்த மாத்திரத்தே தன்னோடு வந்துநிற்பதாகச் சுந்தரனைத் தவிர வேறு எந்த அடியாரும் கூறியதாகத் தெரியவில்லை.

**"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய்**
**என்னுடைய**
**தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்**
**குடனாகி**
**மாழை ஒண்கண் பரவையைத்தந்**
**தாண்டானை மதியில்லா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏழையேன் பிரிந்திருந்தேன் என் ஆரூர்**
**இறைவனையே**" (51:10)

என்று தன்னை இறைவனுடைய அடியானாக மட்டுமன்றித் தோழனாகவும் குறிப்பிடுகிறார். இவ்வகையில் ஏனைய சைவ, வைணவ அடியவர்களுடன் ஒப்பிடுமிடத்து சுந்தரர் ஒரு தனித்துவமான அடியாராக அமைகின்றார்.

சுந்தரரைப்போல அருணகிரியாரும் தனிப்பட்ட தேவைகளுக்கு வேண்டுகை செய்கின்றார். ஆனால் இருவரிடையேயும் ஒரு வேறுபாடுண்டு. சுந்தரர் சில பாசுரங்களிலேயே தன் தேவைக்கான வேண்டுகையை முன்வைக்கிறார். ஆனால் அருணகிரியாரோ திருப்புகழில் தொண்ணூறு வீதத்துக்கு மேற்பட்ட இடங்களில் தன்னுடைய தனிப்பட்ட தேவைக்கான வேண்டுகைகளையே முருகப்பெருமானிடம் முன்வைக்கிறார். இது அவருடைய தனிப்பட்ட வாழ்வு காரணமாக அமைந்துள்ளது என்று கூறுவது பொருத்தமென எண்ணுகிறேன். விலை மாதருடன் அவருக்கிருந்த உறவு, அதனாலேற்பட்ட துன்பங்கள் பற்றி எண்ணுகின்ற பொழுதெல்லாம் தன்னைக் காப்பதற்கு முருகன் ஓடோடி வரவேண்டுமென வேண்டுவார். இவ்வாறு வேண்டும் பொழுது சில வேளைகளில் முருகன் தன் வேண்டுகையை முற்று முழுதாக ஏற்றுக்கொள்வானோ என்றும் எண்ணியுள்ளார். இதனாலேதான்,

"**மடமாதர்கள் மயலின் சேற்றி**
**லுழல்வேனோ**" (90)

"**வந்துநின்ற மகளிர்பின் சுழன்று**
**திரிவேனோ**" (91)

என்று பாடுகிறார். முன்னர் குறிப்பிட்ட ஏனைய வேண்டுகைகளிலே காணப்படும் நம்பிக்கை இவற்றிலே காணப்படவில்லை. தான் புரிந்த குற்றத்தின் தன்மையினை எண்ணியே இத்தகைய நம்பிக்கையீனம் ஏற்படுகிறது.

| | | |
|---|---|---|
| நினைவாயே | "நித்ததினநாளில் வைத்ததொரு காதல் நிற்கும் வகை யோத<br>"பதகனையு மாள | நினைவாயே" (385)<br>நினைவாயே" (673) |
| பாராய் | "யானும் உனையோதும<br>"உனக்கடிமையுற் றுன் தலத்தினி லிருக்கும்படி | பாராய்" (202)<br>பாராய்" (262) |
| புரிவாயே | "மாயவினை தீர அன்பு<br>"நாண மகற்றிய கருணை | புரிவாயே" (436)<br>புரிவாயே" (450) |
| ஆள்வாய் | "ஆதிக்கஞ் சேர்தரவே யருளாலுட<br>"பொருள்தங்கத் தொடுக்கஞ் சொற்றமிழ்தந்திப் | னினிதாள்வாய்" (27)<br>படியாள்வாய்" (33) |
| தவிராய் | "இளைக்கவிட்டுத் துரத்துவார் தங்கள் சேர்வை | தவிராய்" (73) |
| புகல்வாயே | "அடிமைக் கொருசொல் | புகல்வாயே" (128) |
| மொழியாயோ | "உள்ளத்தின் மாய்வதொன்றை | மொழியாயோ" (315) |
| ஈவாய் | "கமலப் பத | மீவாய்" (759) |
| களைவாயே | "அடியே னிடர் | களைவாயே" (732) |
| இசைவாயே | "அழகுபெற மரகத மயில்மிசை வர | இசைவாயே" (132) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணம் (ஒரு தோற்றுவாய்)

வ. கோவிந்தபிள்ளை


**ஆய்வுச் சுருக்கம்**

கந்தபுராணம், பல்லவர் காலத்துத் தோன்றிய பக்தி இலக்கியப் பனுவல்களுட் தலையானது என்பது "இலக்கியமின்றேல் இலக்கண மின்றே" என்ற அகத்தியச் செய்யுளுக்கமைய வீரசோழியம், கம்பராமாயணம் போன்ற இலக்கண, இலக்கிய நூல்களும் சைவசித்தாந்த சாத்திர நூல்களும் தோன்றுவதற்கு முன்னோடியாக விளங்கியது முருகப்பெருமானது அருளாணைப்படி பாடப்பட்ட கந்தபுராணமேயாகும் என்பது இத் தோற்றுவாயின்கட் சான்றாதாரங்களுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.


அனைத்து இலக்கியங்களைக் காட்டிலும் மேலானதாகக் கருதப்படும் பக்தி இலக்கியம் கோலோச்சிய காலமே பல்லவர் காலமாகும். சுருங்கக்கூறின் இறைவன் தாம் விரும்பிய பக்குவான்மாக்களைத் தடுத்தாட்கொண்டு அவர்களூடாகத் தம் திருவிளையாடல்களையும், திருவருட்பாங்கினையும் ஏனையவர்களும் அறிந்து கடைத்தேறும் பொருட்டு நடைமுறையில் காணபித்த காலமே பல்லவர் காலம் எனின் மிகையாகாது.

தமிழ் வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும் அக்கால மன்னர்கள் ஒத்துழைக்காதுவிடினும் இறைவன் எக்காலத்திலும் இல்லாதவாறு மூன்று வயதுப் பாலகன் முதல் பல்வேறு மட்டத்திலுள்ளவர்கள் பலரைத் தம்பாலீர்த்துத் தமது கருணைப் பிரவாகத்தில் மூழ்கச்செய்து அதனை உலகிலுள்ள ஏனையவர்களும் அறிந்து அவர்களைப் பின்பற்றச் செய்த காலம் பல்லவர்காலம். இவர்களுட் சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் குறிப்பிடக் கூடியவர்களாவர். இவர்களைத் தொடர்ந்து மாணிக்கவாசகரும் அவரைத் தொடர்ந்து கச்சியப்பரும் தலையானவர்களாவர் எனலாம். இவர்கள் ஐவரும் இறைவனின் அருளாணைப்படி ஒழுகியவர்களெனின் மிகையாகாது. சம்பந்தர் தமது பதிகங்களின் இறுதியில் அப்பதிகத்தினைப் படித்து வழிபடுபவர்கள் நோய்களினின்றும் நீங்குவர். வானநாடினிதாள்வார், ஞானசம்பந்தன் சொன்ன பாமரு பாடல்கள் பத்தும் வல்லார் பார் முழுதாள்பவரே என்றும், இறைவன் அடியார்க்கு அருள் செய்யும் அந்தணர், கலந்தார்க்கு அருள் செய்திடும் கற்பகம், ஊரன் ஒளிதிகழ் மாலை உள்ளத்தால் உகந்தேத்த வல்லார்கள் நரைப்பு மூப்பொடு நடலையுமின்றி, நாதன்சேவடி நண்ணுவர்தாமே என்று சுந்தரரும் இன்னோரன்ன உறுதியுரைகளை மக்களுக்கு வழங்கியதோடு அமையாது "மண்ணுலகிற் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார் பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்" என்று இறுதியில் தாம் கண்ட அனுபவ உண்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இந்திரன் மால் பிரமன் எழிலார்மிகு
தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை
அருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்
மலையுத்தமனே”

(திருநொடித்தான் மலைத் திருப்பதிகம்)

என்று இவ்வாறு தம்மை வரவேற்று உறவுமுறை கொண்டாடிய இறைவனது பெருங்கருணைத் திறத்தினைப் பாடியதைப் படித்து எம்போன்றார்க்கும் இன்னோ ரன்ன பேறு எப்பிறப்பிலாவது கிட்டுமோ என்று எண்ணாதிருக்க முடியாது.

இதேபோன்று கந்தபுராண ஆசிரி யரும், “அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற் கந்த வேள் புராணந்தன்னைக் காதலித்தோது வோர், இந்திரராகிப்பார்மேல், இன்பமுற் றினிதுமேவிச் சிந்தையில் நினைந்தவை அனைத்தையும் பெறுவர்” என்றும் அவ் வாறு பெற்றவர்கள் பலரது விபரங்களை யும் நூலுள் ஒவ்வோரிடங்கள் தோறும்

“ஆன காலையி லாறுமா முகமுடை யமலன்
கோன வன்றனக் கருளுவான் மஞ்ஞைமேல்
கொண்டு
தானை வீரனு மெண்மரு மிலக்கருஞ் சார
வானு ளோர்களும் கணங்களும் சூழ்வுற
வந்தான்”

என்று இன்னோரன்ன உதாரணங்கள் பல காட்டியுள்ளதையும் படித்து வியப்படை யாதிருக்க முடியாது.

“பல்லவர் காலத்துப் பெரியார் கள் தம்முடைய காலத்துக்கு முன் வழக் கில் இருந்த செய்யுள்மரபு முதலிய வற்றைத் தம்முடைய உணர்ச்சிபேதங் களை வெளிப்படுத்துவதற்குத் தழுவிக் கொண்டது போலவே தம்முடைய பக்தி நிலையைப் புலப்படுத்துவதற்கு வட மொழிப் புராண இதிகாசங்களில் உள்ள கதைகளையும் கருத்துகளையும் துணை யாகக் கொண்டுள்ளனர்” என்றும்,

“அகவல், வெண்பா, வஞ்சி, கலி என்னும் நால்வகைப் பாவிற்கும் இனமா யுள்ள தாழிசை, துறை, விருத்தம் என் னும் மூவகைப் பாவினங்கள் பல்லவர் காலத்தில் பெருவழக்காயிருந்தன” என் றும் பேராசிரியர் செல்வநாயகம் தமது இலக்கிய வரலாற்று நூலிற் கூறுவர். கச்சியப்பர் தாம் கூறும் காப்பியத்தின் பாவினம் பற்றிக் கூறும் பொழுது,

“பகுதி கொண்டிடு பாக்க ளினத்தினுள்
மிகுதி கொண்ட விருத்தத் தொகைகளால்”

கந்தபுராணக் கதையினைப் பாடுகின் றேன் என்று கூறியுள்ள பொழுதிலும் இந் நூலில் “வேறு பாவினங்களும் சிறுபான் மையுளவாயின” என உரையாசிரியர் சுப்பிரமணியசாஸ்திரிகள் தமது உரை யிற் கூறியிருப்பது ஏற்புடையதானதும் பல்லவர் காலப் பெரு வழக்கினைக் காட் டுகின்றதுமாகும்.

இக்காலத்தவர்கள் மனம், வாக் குக்கு எட்டாத பரம்பொருளை அகக் கண்ணாலும், புறக்கண்ணாலும் கண்டு விம்மிதமுற்றுப் பாக்கள் பாடியவர்கள். பரம்பொருள் எவ்வாறு தமது வியாப்பிய வியாபக இறைமை இயல்புகளால் ஆன் மாக்களின் பொருட்டுக் கால பேதங்க ளுக்குட்பட்டும் இவற்றிற்கு அப்பாற்பட் டும் விளங்குந் தன்மைபோல தமது அடி யார்கள் மூலம் தம்மைப் பற்றிப் பாடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட தேவார, திருவாசக, புராணங்களும் காலங்களுக்கு உட்பட்டும் காலங்களைக் கடந்தும் நிலைபேறுடையனவாக விளங்கும் இயல்புடையனவெனின் மிகையாகா.

மேலும், தோத்திர நூல்களாகிய தேவார திருவாசகப்பாக்களுட் பலபடப் பரவலாகச் சைவசித்தாந்த உண்மைகள் விரவியமைந்துள்ளன. இதனால் இவற்றைத் தமிழ் வேதமெனவும் கூறுவர். இக் கருத்துகள் பற்றியே தோத்திர நூலாகவும், சாத்திர நூலாகவும் கருதப்படும் கந்த புராணம் சைவசித்தாந்த உண்மைகளை வரன்முறையாக அமைத்து மனத்தெளிவு உண்டுபண்ணக்கூடிய விதத்தில் பாடப்பட்டுள்ளது எனலாம்.

தேவார திருவாசகங்கள் எவ்வாறு இறைவனது கீர்த்தியை இயம்புகின்றனவோ அதேபோன்று புராணங்களும் கூறுவதுண்டு.

**"ஏற்றம தாகிய மறைக்கும் யாமுனஞ்**
**சாற்றிய வாகமந் தனக்கு மாங்கது**
**வீற்றுற வருவது மன்று மேன்மையா**
**லாற்றவு நமதிய லறையு நீரதே"** என்றும்,
**"என்பெய ரதற்கெனி னினிது தேர்ந்துளார்**
**துன்பம தகற்றிடுந் தொல்பு ராணமாம்"**

(கந்தபுராணம் அவையடக்கம்)

என்றும் கூறுவதிலிருந்து வேதங்கள், ஆகமங்கள், தேவார, திருவாசகங்கள், புராணங்கள் என்பன ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ளன என்பதை நன்கு தெளிவுறக் காட்டுகின்றது எனலாம்.

இப்புராணங்களுட் கந்தபுராணம், சனற்குமார சங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விஷ்ணுசங்கிதை, சங்கர சங்கிதை. சூரசங்கிதை என ஆறு சங்கிதைகளை உடையது எனவும், அவற்றுள் சனற்குமார சங்கிதை ஐம்பத்தையாயிரம் கிரந்தங்களையும், சூதசங்கிதை ஆறாயிரம் கிரந்தங்களையும், பிரமசங்கிதை மூவாயிரம் கிரந்தங்களையும் விஷ்ணு சங்கிதை ஐயாயிரங் கிரந்தங்களையும், சங்கர சங்கிதை முப்பதினாயிரம் கிரந்தங்களையும், சூரசங்கிதை ஆறாயிரங் கிரந்தங்களையும் உடையன என்பர்.

இவ் ஆறு சங்கிதைகளைக் கொண்ட காந்தத்தின் ஐந்தாம் சங்கிதையாகிய சங்கர சங்கிதையின் பன்னிரு கண்டங்களுள் ஏழு கண்டங்களைக் கொண்டதும் முதலாம் கண்டமாகிய சிவரகசிய கண்டத்தின் சம்பவ காண்டம் முதலாய முதல் ஆறு காண்டங்களுமே கச்சியப்பரால் தமிழில் ஆறு காண்டங்களைக் கொண்ட கந்தபுராணமாக மிளிரலாயிற்று. இவ்வாறு தாம் பாடியமைக்குரிய காரணத்தினைக் கச்சியப்பர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"செந்த மிழ்க்கு வரம்பெனச் செப்பிய**
**முந்து காஞ்சியில், முற்றுணர் மேலவர்**
**கந்தன், எந்தை கதையினை நூன்முறை**
**தந்தி டென்னத் தமியன் இயம்புகேன்"**

(கந்தபுராணம் அவையடக்கம்)

எனப்பாடுவார்.

மேற்போந்த பாடலில் "செந் தமிழ்க்கு .. . மேலவர்" என்ற முதல் இரு வரிகளுக்கும் "செந்தமிழ்ப் பாஷைக்கு எல்லை என்று பெரியோர்கள் சொல்லிய முதன்மை பொருந்திய காஞ்சிபுரத்தில் வாழுகின்ற எல்லாமறிந்த பெரியோர்கள்" என உரையாசிரியர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரைத்திருப்பதும், 'முற்றுணர் மேலவர்' என்ற சொற்றொடருக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழ்ப் புலவர்கள்' எனக் கூறியிருப்பதும் பொருந்துவதாகவில்லை. திருவாதவூரர் புராணத்தில் வரும் திருப்பெருந்துறைச் சருக்கத்தில் 'முழுதுணர்' என்ற சொற்றொடருக்குப் பழமறையென்று அடை கொடுத்து "பழமறை முழுதுணர் அந்தணர்" எனப் பாடியுள்ளார் கடவுண்மா முனிவர். இதில் "முழுதுணர்" என்ற சொற்றொடர் பழைய நான்கு வேதங்களையும், ஓதியுணர்ந்த மகா பண்டிதர்களாகிய தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரவர் என்று உரையாசிரியர் ம.க.வே. கூறியிருப்பது மனங்கொள்ளற்பாலது. எனவே இச் செய்யுளுக்குப் பின்வருமாறு பொருள் கோடலே பொருந்தும்.

"செந்தமிழ்க்கு வரம்பெனச் செப்பிய, முந்து காஞ்சியில் - செந்தமிழ் மொழிக்கு எல்லை என்று சொல்லப்பட்ட முதன்மை பொருந்திய நகரமான காஞ்சி புரத்தில் எழுந்தருளியுள்ள, முற்றுணர் மேலவர் கந்தன் - அனைத்தையும் உணர்ந்த, உணருகின்ற, உணரும் இயல்புடைய மேலவரான கந்தசுவாமியார் (கச்சியப்ப சிவாசாரியாரது கனவின்கட் தோன்றி) எந்தை கதையினை- எமது தந்தையாராகிய சிவபெருமானது திவ்விய சிறப்புடைய சரித்திரங்களுட் சிறப்புடையதான காந்தபுராணத்தினை, நூன்முறை தந்திடென்ன - அந்நூலிற் கூறப்பட்ட வண்ணம் பாடுவாயாக என்று பணிக்க, தமியன் இயம்புகேன் - தமியனாகியயான் காந்தபுராணத்தின் ஒரு பகுதியான சிவரகசிய காண்டத்தினை காண்ட அமைப்பிற்கமைய சம்பவகாண்டம் அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம் முதலாய ஆறு காண்டங்களையும் உற்பத்தி காண்டம் எனத் தொடங்கி அந்த ஆறு காண்டங்களையும் பாடலாயினேன் என்று உரைப்பதே பொருந்தும். இவ்வாறு பொருள் கோடல் உரையாசிரியர் கூறுவது போன்று கொண்டுகூட்டு ஆகாது. கொண்டுகூட்டு என்பதற்கு "சுரை ஆழ அம்மி மிதப்ப" என்ற செய்யுளுக்கு பொருள்கொள்ளும் முறையே கொண்டு கூட்டு ஆகும்.

இஃது இவ்வாறிருக்க, பேராசிரியர் சுப்பிரமணியன் அவர்கள், கதைப் போக்கிற்கமைய தக்ஷகாண்டம், அசுரகாண்டம் என்ற முறைப்படி இதனைப் பாடி இருக்க வேண்டும் என்று தமது 'கந்தபுராணம் ஒரு பண்பாட்டுக் களஞ்சியம்' என்னும் நூலிற் கூறியிருப்பதும் பொருந்தக்கூடிய கூற்றாகத் தெரியவில்லை. அவ்வாறு பாடியிருப்பின் முதல் நூலின் அமைப்பினையும் முருகப் பெருமானின் பணிப்பினையும் மீறிய செயலாகக் கருத இடமுண்டு.

மேலும், கந்தபுராணம் பற்றிய கால ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் இந் நூல் தமிழிலே தோன்றிய சைவசித்தாந்தம் பற்றிய நூல்களுக்கும் கம்பராமாயணத் திற்கும் பிற்பட்ட காலமெனவும், வீர சோழியம் என்னும் இலக்கணநூல் எழுந்த காலமே கந்தபுராணம் பாடப்பட்டிருக்க வேண்டும் என்றும் ஊகத்தின் அடிப்படையில் வாதிடுபவர்களும் ஆய்வு செய்பவர்களும் உண்டு. இவ்விடயத்தில் ஒரே மாதிரியாக நிகழ்ந்த இருவேறு நிகழ்வுகள் பற்றி முதற்கண் சிந்திப்பது சிறிது நன்மை பயக்கும் எனலாம்.

சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள அந்தணராகச் சென்ற இறைவன் ஓலை ஒன்றினைக்காட்டிச் சுந்தரரதும், சபையோரதும் ஐயத்தினைத் தீர்த்தமை பற்றி அவரது பின்வரும் தேவாரத் திருப்பதிகங்களான,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அற்புதப் பழ ஆவணங் காட்டி**
**அடியனா வெனை ஆளது கொண்ட**
**கற்பகத்தை நள்ளாறனை அமுதை"**
(திருநள்ளாற்றுத் திருப்பதிகம்)

என்றும்

**"அன்று வந்தெனை அகலிடத் தவர்முன்**
**ஆள தாகவென் றாவணங் காட்டி**
**நின்று வெண்ணெய்நல் லூர்மிசை யொளித்த**
**நித்திலத் திரள் தொத்தினை"**
(திருக்கோலக்கா திருப்பதிகம்)

என்றும், இன்னோரன்னவும் பிறவுமான பதிகங்கள் பலவற்றின் மூலம் அறியலாம்.

மேலும்,
**"ஆசில் அந்தணர் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல்"** என்ற விடயத்தில் நடைமுறையில் இல்லாத ஓலை ஒன்றினைக் காட்டியே இறைவன் சுந்தரருக்கும் சபையினருக்கும் ஐயத்தினை நீக்கித் தமது கூற்றினை நிரூபித்தமை போன்று, புராண அரங்கேற்றத்தினை நிகழவிடாது தடுத்த தமிழ்ப் புலவரது ஐயத்தினை நடைமுறையில் இல்லாத ஏடு ஒன்றினைக் காட்டியே அவரது ஐயத்தினை நீக்கிப் புராண அரங்கேற்றத்தினை நிறைவு செய்தமையும் சுந்தரருக்குப் "பித்தா" என்று பாடுவாயாக என்று அடியெடுத்துக் கொடுத்து அவர் அகத்தேயும், புறத்தேயும் நின்று தொழிற்பட்டமை போன்று, கச்சியப்பருக்கும் "திகடசக்கர" எனப் பாட அடியெடுத்துக் கொடுத்ததோடமையாது அவரது அகத்தேயும், புறத்தேயும் நின்று அருள் பாலித் தமையையும் நினைந்து வியவாதிருக்க முடியாது.

எனவே இறைவன் தொடக்கி வைத்ததை அவரே நிறைவு செய்ய வேண்டியவராகின்றார். இதன் பொருட்டுச் சபையினர் எழுப்பிய ஐயவினாவை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் இறைவனையே சாரலாயிற்று.

எனவே அவரே முன்புபோல் அந்தணர் வேடத்தில் வீரசோழியம் என்ற பெயரையுடைய ஓர் ஏட்டினைத் தாம் சோழநாட்டினர் என்று கூறிக் கொணர்ந்து காட்டிக் கச்சியப்பரது சந்தேகத்தினை மட்டுமன்றிச் சபையோரது ஐயப்பாட்டினையும் நீக்கலாயினார். இவ்வாறு காட்டியமையினால், வீரசோழியம் என்ற இலக்கண நூல் அக்காலத்தில் நடைமுறையில் இருந்தது என்றோ அல்லது இந்த வீரசோழியம் எழுதப்பட்ட காலத்தில் அல்லது அதற்குப் பின்னர்தான் கந்தபுராணம் பாடப்பட்டிருக்கவேண்டும் என்ற ஊகத்தில் வாதிடுவதோ பொருந்துவதாகத் தெரியவில்லை. எனவே கந்தபுராணத்தினை வீரசோழியம் எழுந்த காலத்தினோடு அல்லது சைவசித்தாந்த நூல்கள் எழுந்த காலத்தினோடு இணைத்து ஆராய்ச்சி செய்வது சுந்தரரைப் பெரியபுராணத்தினை ஆதாரங் காட்டி இவர் 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராக இருக்கக்கூடும் என வாதிடுவதை ஒக்கும்.

தொல்காப்பியத்திற்கு முதல் நூலாகப் பேசப்பெறும் அகத்தியம் இலக்கியம் கண்டதற் கிலக்கண மியம்பினர் என்றே தெரிவிக்கின்றது.

**"இலக்கிய மின்றேல் இலக்கண மின்றே**
**எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே**
**எள்ளி னின்று எண்ணெய் எடுபடுமாபோல்**
**இலக்கியத் தினின்று எடுபடும் இலக்கணம்"**

என்ற அகத்தியச் சூத்திரமும் இதற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க சான்றாகும். இச் சூத்திரம் இலக் கண நூல்களுக்கு மட்டுமன்றி சைவ சித் தாந்த சாஸ்திர நூல்களுக்கும் பொருந்து வதாகும்.

இவ்வாறான ஆதாரங்களை விடுத்து, கந்தபுராண அரங்கேற்றத்தன்று இறைவன் காட்டிய நடைமுறையிலில் லாத ஏட்டுச்சுவடியைப் பிற்காலத்தில் எழுந்த வீரசோழியத்துடன் இணைத்துக் கச்சியப்பர் அக்காலத்தைச் சார்ந்தவர் என்றோ அல்லது கம்பருக்குப் பிற்பட்ட வர் என்றோ ஊகத்தின் அடிப்படையில் வாதிடுதல் பொருந்தாததாகும்.

கம்பர் பாடிய இராமாயணப் பாடல்கள் வடமொழியிலுள்ள காந்த புராணத்திலும் தமிழ்க் கந்தபுராணத்தி லும் அவருக்கிருந்த ஈடுபாட்டினை

**"பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்**
**தெய்வ மாட்சிக் கவிதை தெரிக்கவே"**

(கம்பராமாயணம்)

என்ற பாடல் தெரிவிக்கின்றது.

அதாவது, "தோமறு புராண ஆல யமாய், விண்டுவின் வடிவாய் வந்து அவ தரித்த" வியாசமகாமுனிவரும், கச்சியப்ப சிவாசாரியாரும் பாடிய தெய்வத்தன்மை பொருந்தியதும் மாட்சிமை மிக்கதுமான கவிதைச் சிறப்பினை உலகினருக்குத் தெரிவிக்கவே இராமாயணத்தினைப் பாடு கின்றேன் என்று மேற்படி பாடல் மூலம் தெளிவுபடுத்துகின்றார் கம்பர். மேலும்,

**"ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு**
**பூசை முற்றவும் நக்குபு புக்கென ஆசை பற்றி"**

என்று வியாசரதும், கச்சியப்பரதும் "காந் தமாகிய பெருங்கடலுள்" இறைவன் பற் றிய கவிதைச் சிறப்புகளில் கொண்ட ஆசையால் பீடிக்கப்பட்டு மூழ்கித் திளைத்த கம்பர், சாதாரண மானுடனாகப் பிறந்த இராமனைத் தெய்வமாகப் போற்றுமள விற்கு இராமாயணப் பாடல்களை வடித் துள்ளார் என்றால் எத்தகைய பெருஞ் செல்வாக்கினைக் கம்பரிடம் கந்தபுரா ணம் ஆகிய திருப்பாற்கடல் ஏற்படுத்தி யுள்ளது என்பது பின்வரும் செய்யுட்கள் மூலம் தெளிவாகும். உதாரணமாக,

**"மண்ண ளந்திடும் மாயனும் வனசமே லவனும்**
**எண்ண ரும்பகல் தேடியுங் காண்கிலா திருந்த**
**பண்ண வன்னுதல் விழியிடைப் பரஞ்சுடர் உருவாய்**
**உண்ணி றைந்தபே ரருளினான் மதலையாய் உதித்தான்"**

(கந்தபுராணம்)

**"மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய**
**காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்திச்**
**சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை**
**ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி வந்தான்"** (க.இ)

மேலும் கம்பர் பாடிய இராமா யணத்திற் பல சம்பவங்களும் பல பாடல் களும் கந்தபுராணத்துடன் ஒரே மாதிரி யாய் இருப்பதனால் வகைக்கு ஒன்றி ரண்டினை நோக்குதல் சால்புடைத்து.

**"பழியும் பார்த்திலை படி இகழ்ந்திடும்**
**மொழியும் பார்த்திலை முறையும் பார்த்திலை**
**வழியும் பார்த்திலை வருவ பார்த்திலை**
**இழியும் தீயசொல் இயம்பற் பாலையோ"**

(கந்தபுராணம்)

என்று இந்திராணி அசமுகிக்குக் கூறி யமை போன்று சீதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பழியது பாவம் என்று பார்க்கிலை பகரத் தக்க
மொழியிவை யல்ல என்ப துணர்கிலை
முறைமை நோக்காய்
கிழிகிலை நெஞ்சம் வஞ்சக் கிளையொடும்
இன்று காறும்
அழிகிலை யென்றபோது என் கற்பென்னாம்
அறந்தான் என்னாம்'' (க.இ)

என்று சீதை சூர்ப்பனகைக்குக் கூறுவதிலிருந்தும்,

மேலும்,

''வெஞ்சமம்செய வல்லவர் கிடைத்திடின்
மிகவும்
நெஞ்சகம் தளிர்ப் பெய்துவன் நேரலர்
சமருக்கு
அஞ்சினே னென்று கருதலை அரசநீ இன்னும்
உஞ்சு வைகுதியோ எனும் ஆசையால்
உரைத்தேன்''
(கந்தபுராணம், பானுகோபன்)

''ஆதலால் அஞ்சினேன் என்றருளலை
ஆசைதான்அச்
சீதைபால் விடுதியாயின் அனையவர் சீற்றம்
தீர்வர்
போதலும் புரிவர் செய்த தீமையும் பொறுப்பர்
உன்மேற்
காதலால் உரைத்தேன் என்றான் உலகெலாம்
கலக்கி வென்றான்''
(கம்பராமாயணம், இந்திரசித்தன்)

என்ற இன்னோரன்ன பல பாடல்களையும் பல சம்பவங்களையும் ஒப்பு நோக்கலாம்.

''தவறுஞ்சுர ருலகொன்றுளன் சதவேள்வியன்
எம்முன்
புவனம்பல வண்டம்பல புரக்குந்திரு வுளனா
லிவனங்கவன் பணியேபுரிந் திளைத்தேகரந்
துழல்வா
னவனிங்கிவன் றனையேவல்கொண்
டகிலந்தனி யாள்வான்''

''அழிவில்லவ னவனிங்கிவ னழியும்பரி
சுடையான்
பழியில்லவ னவனிங்கிவன் பழிவேலையிற்
றிளைப்பான்
கழியும்பட ருழந்தானிவன் கழிற்புற்றுள னவனே
தொழுவன்பல ரையுமிங்கிவன் றொழுமோவவன்
சிலரை''

என்ற கந்தபுராணப் பாடல்களைப் பின்பற்றியே பிற்காலத்திற் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் எழலாயினவெனலாம். சிற்றிலக்கியப் பிரபந்த வகைகளிற் பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்தமும் ஒன்று. இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டு வகைப்படும். அது பத்துப் பருவங்களையுடையது. அம்புலிப்பருவம்' அவற்றுள் ஒன்றாகும். அம்புலிப் பருவத்தில் அம்புலியைப் பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியுடன் விளையாடவருமாறு அழைப்பது மரபு. அவ்வாறு அழைக்குந் தோறும் அம்புலியின் தாழ்வுகளையும் தலைவன் தலைவியரது உயர்வுகளையும் கூறி அவர்களுடன் வந்து விளையாடினால் உனது குறைகள் அனைத்தும் நீங்கும் என்ற பொருள்படப் பாடுவர்.

கம்பர் வாழ்ந்த காலத்தவரான ஒட்டக்கூத்தர் இரண்டாம் குலோத்துங்க சோழன் மீது பிள்ளைத் தமிழ் ஒன்று பாடியுள்ளார் என்பர். இதுவே பிள்ளைத் தமிழ் பிரபந்தங்களுட் காலத்தால் முந்தியது. இத்தகைய பல சிறப்புகளையுடைய பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத் தோற்றத்திற்கும் கந்தபுராணமே தோற்றுவாயாக அமைந்தது எனின் மிகையாகாது.

மேலும் பாத்திர உருவாக்கத்திலும் கச்சியப்பரின் சூரபதுமன், சிங்கன், தாரகன், அஜமுகி என்ற பாத்திர அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையைப் பின்பற்றியே கம்பரும் இராவணன் கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பனகை ஆகியோரையும் அவர்களது குண இயல்புகளையும் ஒரே சீராக அமைத்திருப்பதும் ஒப்புநோக்கற்குரியனவே.

## புராண நோக்கம்

உலக போகத்தையே மெய்யென்றழுந்தி நுகர்ந்து நிற்கும் மந்ததர, மந்த மதியினரையும் உய்விக்க வேண்டிப் பாடப்பட்டதே புராணத்தின் பிரதான நோக்கமாகும். இதனை,

**"மந்தமார் புத்தி யுடையராய் வல்ல**
**மாயையால் மூடிடப்பட்ட**
**பந்தரா யினருக் கனுகுணமாகப்**
**பகர்ந்த தேயன்றி மற்றின்னும்**
**சந்தமார்ந் துயர்ந்த பாரமார்த்திகமாச்**
**சாற்றின தில்லையா லுணர்வீர்!**

என்பதனாலும் புராண இயல்பு நன்கு தெளிவுறக் காட்டப்பட்டுள்ளது.

இன்னோரன்ன சான்றாதாரங்களில் இருந்து கந்தபுராணம் முற்கூறப்பட்ட நூல்களுக்கும், அவற்றின் காலத்திற்கும் முற்பட்ட தலையாய சிறப்பினை உடையதென்று கூறுவதே சாலவும் பொருந்துவதாகும்.

# சொல்லித் தருவான் சென்னெறி யுனக்கு!

**பல்லவி**

வல்ல நல்லூர் குமரன் இருக்க
அல்ல லுண்டோ உனக்கு மனமே!

**அனுபல்லவி**

நல்ல சொல் மாலை புனைந் தேற்றி
வள்ளிகாந் தனைநித் தம்பணி மனமே!

**சரணம்**

சந்தகவி இசைத்த அருணகிரி நாதனுக்கு
பந்தமற சும்மா இருக்க சொன்னவன்
கந்தபுரா ணமாக்கிய கச்சியப் பருக்காக
செந்தமிழ் இலக்கணம் சென்றுரை செய்தவன்
கந்தனிருக்க நீகலங்குவ தேனோ மனமே!

தெள்ளுதமிழ் தெளிந்தவன் திகழும் நல்லூர்
தொல்பதி உறையும் செந்தமிழ் பிரியன்
வல்வினை மாய்க்கு மவன்வான வர்தமை
பொல்லாச் சிறைமீட் டெடுத்த வீரனவன்
செல்வபுரம் நல்லூரான் செவ்வேள் முருகன்
சொல்லித் தருவான் சென்னெறி யுனக்கு.

**பா.பாலச்சந்திரன்**
**(மயிலணி, சுன்னாகம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்து முருகப் பிரபந்த இலக்கியங்கள்

(முதுகலைமாணிப் பட்டத்திற்கான இலக்கிய ஆய்விலிருந்து ...)

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
முன்னாள் தலைவர், மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

1.1 பேரிலக்கியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கடவுளர் பற்றிய குறிப்புகள் அடிநிலையாக நின்று அவ்வவற்றின் பெருமையை உணர்த்தி நிற்பன போல, நல்லூர், மாவிட்டபுரக் கோவிலின் பிரபந்தங்களிலேயும் பக்திப் பாடல்களும் தெய்வம் பற்றிய குறிப்புகளும் ஆதாரமாக நின்று இலக்கிய வரலாற்றுத் தொடர்ச்சியினை வெளிப்படுத்தி நிற்கின்றன. முன்னோர் மொழிபொருளினைப் பொன்னே போற்றுதலும் சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தினை இனியெதிர் காலத்தின் நலன் கருதி எடுத்தாளுவதும் இலக்கியகாரரிடத்து நிலவும் பண்பாகவுள்ளது. முன்னுள்ள இலக்கியப் பொருள் மரபு சார்ந்து நல்லூர், மாவைப் பிரபந்தங்கள் ஆக்கப்பட்டுள்ளதுடன் முன்னுள்ள இலக்கிய வடிவத்தினைக் கையாண்டிருப்பதுங் கருதத்தக்கது. இதிகாச, புராணக் கருத்துகளும், திருமுறைச் செய்திகளும், தனிப்பாடல்களும் நல்லூர், மாவைப் பிரபந்தங்களிற் சிறப்பாகக் கையாளப்பட்டிருப்பதும் நோக்கற்பாலது.

இவ்வாய்வுக் கட்டுரை முருகப் பெருமானைப் பாடுபொருளாகக் கொண்டமையும், பக்திப் பிரபந்தங்கள் பற்றிய ஆய்வாக அமைகின்ற காரணத்தால் பழந்தமிழ் இலக்கியங்களிலே முருகன் பெற்றுள்ள இடத்தினைக் கண்டு கொள்ளவும் முக்கியமாகின்றது. தமிழிலக்கியப் பரப்பிலே பக்தியிலக்கியம் என்ற சொல் சைவ, வைணவ பக்தி இலக்கியங்களையே சிறப்பாகக் குறித்து நிற்பதைக் காணலாம். இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நல்லூர், மாவைப் பிரபந்தங்கள் பக்தியிலக்கியங்களாகையாற் காலத்தால் முற்பட்ட சைவ, வைணவ பக்தியிலக்கியங்களிலே இடம்பெற்றுள்ள பக்தி சார்ந்த கருத்துக்களை நோக்குவது இங்கு அவசியமாகின்றது.

சமயச் சிந்தனைகளில் அறவுணர்வும், தத்துவ ஆராய்ச்சியும் முக்கிய இடம் பெற்றிருப்பினும் வழிபாட்டு முறைகளே பக்தியிலக்கியம் உருப்பெற்று வளர்ந்தமைக்குக் காரணமெனல் வேண்டும். வழிபாட்டு நிலையில் வளர்ச்சியடைந்து வந்த வைதிக நெறி சைவம், வைணவம் என்னும் இருதுறைகளாக வளர்ந்து சிறந்தது. பக்தியிலக்கியமும் இவ்வடிப்படையிற் சைவ, வைணவ இலக்கியங்களாகவே தோன்றின.

## 1.2 சங்க இலக்கியங்களிற் சிவன், திருமால் இயல்புகள்

சங்க இலக்கியத்திற் சிவபிரான் உமையொருகூறன், முக்கணன், நீலகண்டமுடையவன், திங்கட்கண்ணியான் எனவும் அவனது இயல்புகளாக மாலை கொன்றை, படைகணிச்சி, மழுவாள், கொடி ஏற்றுக் கொடி, ஊர்தி ஏற்றூர்தி, நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாதிரை, கல்லால மரத்தின் கீழ் அற முரைத்தல் என்பனவும் வீரச் செயல் முப் புரம் எரித்தமை ஆகிய குறிப்புகள் சுட்டப் படுகின்றன.

சங்க இலக்கியத்திலே திருவில் இயல்புகள் பின்வருமாறு இடம்பெறுகின் றன; திருமால், கரியன், நீலநிறத்தான், கையில் சக்கரம் மார்பில் திருமகள், மனு, திருத்துழாய்மாலை, உடம்பில் பீதாம் பர உடை, கருடக் கொடியுடையவன், பாற்கடலில் அரவணையில் அறிதுயில் கொள்கிறான். நாள் ஓணநாள், திருமால் ஞாலம் அளந்தவன், ஊழிக்காலத்தில் ஆலிலையிற் கிடந்தவன். கதிரவனை மீட்டுக் கொண்டு வந்தான், ஆய்ச்சியர், துகில் கவர்ந்தவன் என வருமிடங்கள் காணத்தக்கன.

சங்க இலக்கியங்களால் விளக் கப்படும் சிவன், திருமால் இயல்புகள் வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் வழியாக அறியப்படுவனவே. இவ்வியல்பு களோடு கூடிய நிலையிலும் இவற்றினும் வளர்ச்சியடைந்த நிலையிலும் சங்க இலக்கியத்தையடுத்துத் தோன்றிய சிலப் பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் போன்ற இலக்கியங்களிலும் காண்கி றோம். திருக்குறளிலே எண் குணத்தான் சிவனாக விளக்கப்படலாம். தாமரைக் கண்ணான் (உலகு) அடியளந்தான் (தாயது) விஷ்ணுவாக விளக்கப்படலாம். வேறு சிறப்பான பகுதிகள் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் நன்கு விளக்கப்பட் டுள்ளன.

## 1.3 தமிழிற் பக்தி இலக்கியமும் வேத இலக்கியமும்

தமிழில் பக்தியிலக்கியங்களிலும் அவற்றிற்கு முற்படத் தோன்றியனவாகக் கருதப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் அவற்றிற்கும் முற்படத் தோன்றிய சங்க இலக்கியங் களிலும் கூறப்படும் சிவன், திருமால், இயல்புகள் பெரிதும் ஒத்திருக்கின்றன. ஆயினும், சங்க இலக்கியங்களை விடவும் காப்பியங்களிற் பல செய்திகள் உள் ளன. அவற்றிலும் மிகப்பலவாகப் பக்திப் பாடல்களில் உள்ளன. அவ்வாறு பலவாறு வளர்ந்து வந்தாலும் இலக்கியங்களா லுணர்த்தப்படும் சிவன், திருமால் இயல்பு கள் ஒருகால்வழியே வந்தனவென்றே கொள்ளத்தக்கவை.

இத்தெய்வங்களின் இயல்புகளை அறியும் போது இவை இந்தியா முழுவ தும் பரவியிருந்த சிந்தனைகளேயென்பது விளங்கும். இவற்றின் தொடக்க நிலையி னைப் புராணங்களிலும், இதிகாசங்களி லும் வேதங்களிலும் கண்டு கூறுமளவுக் குப் பிறநூல்களிற் கண்டு கூற முடியாது. வேதகாலத்திற்கு முற்பட்டதாகவுள்ள சிந்துவெளி நாகரிகத்தின் சின்னங்களும் சிவன் இயல்புகளைப் பற்றிய சில உண் மைகளை விளக்குவனவே. சுருங்கக் கூறின் இந்தியநாட்டின் சமய வளர்ச்சி யின் எதிரொலியாகவே சிவன், திருமால் இயல்புகள் தமிழிலக்கியத்தில் உள்ளன என்பதில் ஐயமில்லை.

சைவ, வைணவ இலக்கியங்கள் வேதங்களைப் புகழ்ந்து பாடுவனவாயுள் ளன. திருமுறைகளில் வேதங்களைப் பற்றிய குறிப்புகள் பலவாகவுள்ளன. "வேத நூல் பயில்கிறது வாயிலே", "வேதம் ஓதிய நாவுடையான்", "மறையில் அந்த ணன்", "மறை பயின்றவாசகன்..", "வேத விழுப்பொருளை", வேதமெல்லாம் முறை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யால் விரித்தோத நின்ற ஒருவனார்" என வருகின்றன.

ஆழ்வார் பாடல்களிலே "மறை பயந்த பண்பன்", "வேத நூல் வாயர்", "வேதப்பிரானார்" என வேதங்களை அருளியவரென்பது திருமாலைக் கூறுவதோடு வேதத்தால் அறியத்தக்கவன் என்ற கருத்தில் வேதவிளக்கு "மறையால் விரிந்த விளக்கு" என்றும் வேதத்திற்கு சொல்லப் படுந் தன்மையை உடையவன் என்ற கருத்தில் "வேதநீரன்" என்றும் "வேதநீதியாகி நின்ற நிமலன்" எனவும் குறிக்கப் பட்டுள்ளான்.

சங்க இலக்கியங்கள் பலவும் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கந்த புராணம், திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், வேல்விருத்தம், சேவல்விருத்தம், மயில்விருத்தம் ஆகியனவும் முருக வழிபாட்டுச் செய்திகளைக் கொண்டமைவன. பரிபாடலும், திருமுருகாற்றுப்படையும் விசேடமாக முருகன் பிரணவத்தை முதன்மைப்படுத்தியுரைப்பன. திருமுறைகளிலேயும் முருகன் புகழ் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன. இந்நூல்களிலேயிடம் பெறும் முருகன் பெயர்கள் இயல்புகள் குறித்து இனி நோக்கலாம்.

## 1.4 முருக வழிபாட்டு மரபு

தமிழ் மக்களது நம்பிக்கைக் குரிய தெய்வமாக முருகக் கடவுள் விளங்குகிறார். முருக வணக்கத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்து அறிவதற்கு நம்பகமான இலக்கிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சிவபெருமானையும் முருகனையும் இணைத்து நோக்கும் வழக்கமும் உண்டு. இன்னும் சிவனையும் சூரியனையும் இணைத்து நோக்கியாராயும் மரபும் உள்ளது. சிவசூரியவழிபாடு என்பது சிவபெருமானைச் சூரியனாகக் கொண்டு வழிபடுவதைக் குறிக்கும். ஆயினும் சூரியன் சிவனை வழிபடுவோனாகக் கொள்ளப்படுகிறான். இவ்வெடுத்துக் காட்டுகளாற் சிவபெருமான் சூரியனிலும் மேம் பட்டவர் என்ற ஆய்விலே சூரிய வணக்கமே காலப்போக்கில் முருக வணக்கமாக உருப்பெற்றதெனலாம்.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்"**

என்று குறிப்பிடும் தொல்காப்பியம் சேயோன் என்று முருகனைக் குறிப்பிடுவதோடு "முருகவேளின் காத்தலைக் கொண்ட உயர்ந்த மலையாகிய இடமும்" என்றும் நிலம் என்பதற்கான வரைவிலக்கணச் சூத்திரத்திலே குறிப்பிடும்.

## 1.5 முருகனுக்குரிய பெயர்கள்

சங்க நூல்களில் முருகன் என்னும் பெயர் அகநானூறு, புறநானூறு ஆகிய இரு இலக்கியங்களிலேயே வந்துள்ளது. குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி, பொருநராற்றுப்படை ஆகிய இலக்கியங்களில் "முருக" என்ற சொல்லே முருகனை உணர்த்திப் பல இடங்களில் எடுத்தாளப் படுகிறது. திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகிய இலக்கியங்களிலும் முருகு என்னும் பெயர் முருகனுக்குரித்தாக வழங்கப்பட்டுள்ளது. சங்க நூல்களான குறுந்தொகையிலும், பதிற்றுப்பத்திலும் அவுணர்களை முருகன் அழித்தான் என்று கூறப்படுகிறது. அகநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு. மலைபடுகடாம், பொருநராற்றுப்படை ஆகிய சங்க நூல்களிலே "சேய்" என்னும் பெயர் சோய் என அளவெடுத்தும் அளவெடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலும் முருகனைக் குறித்து வழங்கப் பட்டுள்ளது. "சேயோன்" என்ற பெயரும் இவ்விடத்தில் நோக்கத்தக்கது. இப் பெயரிலிருந்து முருகனுக்குப் பலவகை யான பெருமைகள் கொள்ளப்பட்டன. "சேய்" என்ற தமிழ்ச் சொல்லுக்கு வட மொழியிலே "குமாரன்" என்னும் பொருள் உண்டு. ஆகவே முருகனையும் குமாரக் கடவுளாகக் கொண்டனர். குமரன் என்னும் பெயரே குமாரன் என்று நீண்டிருக்கலாம். மாறாக இளமையுடையவனாகவும், அழகு மிக்கவனாகவும் விளங்குபவன் என்ற பொருளிலும் வருகின்றமையையும் நோக்கலாம்.

செய்யோன் என்னும் பெயர் சங்க நூல்களில் ஒன்றான புறநானூற்றில் மட் டும் ஓரிடத்தில் தடுத்தாளப்பட்டுள்ளது. முருகன் அளவிடற்கரிய நீண்ட புகழை யுடையவனாதலின் நெடுவேல் என்றும் மக்களால் பாராட்டப்பட்டுள்ளான். அக நானூறு, குறுந்தொகை, நற்றிணை, மது ரைக்காஞ்சி, பெரும்பாணாற்றுப்படை ஆகிய சங்கநூல்களில் நெடுவேல் என்றே முரு கன் அழைக்கப்படுகிறான். திருமுருகாற் றுப்படையிற் "பரிசிலர் தாங்கும் உரு கெழு நெடுவே எள்" என்று முருகனை நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். பரிபாடல், சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களும் முருகனை நெடுவேல் என்று போற்றுகின் றன. விறல்வேல் என ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், பரிபாடலும் குறிப்பிடும். திருமுருகாற்றுப்படை, பரிபாடல், சிலப் பதிகாரம், அப்பர் திருமுறை ஆகியவற் றிற் "கடம்பன்" என முருகன் குறிக்கப் பட்டுள்ளான்.

## 1.6 முருகனுக்குரிய மறுபெயர்கள்

முருகு அல்லது முருகன், சேய், வேள், நெடியோன், கடம்பன், ஆறுமு கன், வேலன், கோழிக்கொடியோன், வெறி கொண்டான், சேந்தன், குமரன், அறுவர் பயந்த ஆறமர் செல்வன், ஆல்கெழு கடவுள் புதல்வன், மலைமகள் மகன், மாற்றோர் கூற்று, பழையோள் குழவி, தானைத் தலைவன், மாலைமார்பன், நூலறிபுலவன், செருவில் ஒருவன், அந் தணர் வெறுக்கை, அறிந்தோர் சொன் மலை, மங்கையர்கணவன், மைந்தர் ஏறு, வேல்கொழு தடக்கைச்சால் பெருஞ் செல்வன், குறிஞ்சிக்கிழவன், நடையுநர் க்கு ஆர்த்தும் இசைப் பேராளன், பெரி யோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள், குரிசில், மால்மருகன், வெய்யோன், வள்ளி கொழுநன், மயில் ஊர்திமைந் தன், இளையவன், மாதடிந்தான், கந்தன், சரவணத்தான், சுப்பிரமணியன் என்னும் பெயர்களுக்கான காரணங்களை "முருக வணக்கம்" என்ற தமது முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்விலே செ.நவரத்தி னம் என்பார் விளக்கியுள்ளார்.

## 1.7 குறிஞ்சித் தெய்வம் முருகன்

முருகன் குறிஞ்சி நிலக்கடவுள் என்பது சங்க நூல்களாற் புலப்படுகிறது. நில இயற்கைக்கேற்ப அமைந்த முருகன், கொற்றவை போன்ற திராவிடத் தெய்வங் களே மிகவும் சிறப்புடன் வணங்கப்பட்டு வந்தனவென்பதைச் சங்கநூல்களிலிருந்து அறியலாம். முருக வழிபாட்டுக்கும் கூத்து களிற்குமுள்ள தொடர்பும் இவ்விடத்தில் இணைத்து நோக்கத்தக்கது. தமிழரு டைய வழிபாட்டிலே வெறியாட்டு முதலிய ஆட்டங்கள் முக்கிய இடம்பெற்றன. முருக வழிபாடு கூறப்படும் இடங்களில் இத்த கைய கூத்துகள் வருணிக்கப்படுகின்றன. பெண்களின் காதல் நோயைக் குறித்து நிகழ்ந்து வந்த வெறியாடல்களில் முரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக் கடவுள் பூசகர் மூலமாக ஆவேசித்து நிற்பர். இதுவும் சங்க நூல்களிற் காணப் படுவதே.

சங்க காலத்தில் பெருவழக்கா யிருந்த இவ்வெறியாட்டலைச் சங்கமரு விய காலத்தில் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் ஒரு சூத்திரத்திற் குறிப்பிடுகிறார்.

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டயர்ந்த காந்தளும்"**

(தொல்பொருள் 60. 1-2)

மதுரைக்காஞ்சி, ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, அகநா னூறு, குறிஞ்சிப்பாட்டு என்பனவற்றிலே யும் வெறியாட்டுப் பேசப்படுகிறது. ஈழத் துப் பூதந்தேவனார் பாடலொன்றிலும் முருக வழிபாட்டோடு தொடர்புடைய வெறியாட்டுச் சுட்டப்படுகிறது என்பதனை இன்றைய தமிழியல், விமர்சனவியல் சாசனவியலாய்வாளர்களும் எடுத்துக் கூறுவர். ஈழத்துப் பூதந்தேவனாரது குறுந் தொகையின் 360ஆவது பாடல் குறித்த செய்திகளைப் பற்றிய கருத்துக்களைக் குறிப்பிடுவார் பேராசிரியர் ஆ.வேலுப் பிள்ளை. அச்செய்யுள் குறிஞ்சி பற்றிய மைவது.

## 1.8 கருவி நிலையும் கருத்து நிலையும்

"புறத்திணையிலே போர்க்கருவிக் குத் தெய்வசக்தி கொடுக்கப்பட்டமையுந் தெரியவருகிறது. பழந்தமிழர் ஒரு கரு மத்தைத் தொடங்கி ஆற்றும் போது அதற்குரிய கருவி அருமையும் பெருமை யும் உடையதாக இருந்தது. அதனாலேயே கருவியையும் தெய்வ சக்தியாகப் போற றும் பொருளாகக் கொண்டனர். எடுத்த கருவியால் எண்ணிய கருத்தை முனைந்து அதிலும் ஏற்றம் பெற்றனர். அவ்வேற்றம் பெற்ற கருத்தும் தெய்வ சக்தியாகக் கருதப்பட்டது. இதனாலேயே தொல்காப் பியர் கருமத்துக்குரிய "கருவிபோற்றல்" என்ற பொருளால் துடிநிலையை முன் கூறியும் கருவி ஏற்றம் பெற்ற முறையாற் கருத்தும் ஏற்றம் பெற்றது என்றெண்ணி அக்கருத்தையும் போற்றுமுகமாகக் கொற்றவை நிலையைப் பின் கூறியும் நின்றார்.

**"கணையும் வேலும் துணையுற மொய்தலின்**
**சென்ற உயிரின் நின்ற யாக்கை"**

(புறத்திணை நூற் 16)

புறத்திணையிலே தும்பைத் திணையில் நிகழும் போரினைக் குறிப்பி டும் தொல்காப்பியர் அதன் இலக்கணத் தையும் சிறப்பினையும் கூறுகிறார்.

"அம்பும் வேலும் தனித்தனி விடு தல் செய்யாது இணையுறத் தைக்கும் நிலையில் விடுவர். அவ்வாறு கணையும், வேலும் இணைந்து தைத்தலால் முறுகிய தறுகண் முனைப்பால் உயிரிழந்த உடல் விழாது நிற்றலும், அக் கருவிகளால் துணிக்கப்பட்ட தலை முதலிய உறுப்புக் கள் நிலந்தோயாமல் துடித்தியங்கலு மாகிய இருவகையான அரிய நிலையைச் சிறப்பாக உடையது என்றும் பொருள் காணபர். முதலிற் கருவியும் பின்னர் கருத்தும் தமிழ் மக்களது புறத்திணை வாழ்வில் முதன்மை பெற்றனவென்பது" கூறப்பட்டது. இந்தமரபே பின்னர் நடுகல் வழிபாடாகவும் வளர்ச்சியடைந்ததெனக் கொள்வதும் ஆராய்ந்து நிறுவப்படவேண் டியது. இன்று கடவுளர்களது மூர்த்தி உருவங்களும் அக்கடவுளர்களது ஆயு தங்களும் வழிபடப்பட்டு வருகின்றன. வைரவர் திரிசூலம் (பைரவர்), சக்கரம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(விஷ்ணு) என்பன இத்தொடர்பில் இன்றும் நிலவும் கருவி வழிபாடுகளாகும்.

சமயாசாரியார்களும் கந்தன், குமரன், சேந்தன், முருகன், கடம்பன், வேலன் என்ற பெயர்களால் தமது பாடல்களிலே குமரனைக் குறிப்பிட்டுள்ளனர். பரிபாடலிலே முருகனை முன்னிலைப் படுத்தி, அவனுடைய திருவுருவச் சிறப்பினைக் கூறி, "யாம் எமது சுற்றத்தோடு வாழ்த்தி வணங்குகிறோம். எம் வாழ்த்தினைக் கேட்டு அருள்புரிதல் வேண்டும்" என்று வேண்டிக் கொள்வதாக அமையுங் குறிப்பு நோக்கத்தக்கது.

**"குறப்பிணாக் கொடியைக் கடியோய்!**
**வாழ்த்துச்**
**சிறப்புறாக் கேட்டி செவி**
**உடையும் ஒலியலும் செய்யை மற்றாங்கே**
**படையும் பவழக்கொடிநிறம் கொள்ளும்**
**உருவும் உருவத்தீ ஒத்தி முகனும்**
**விரிகதிர் முற்றா விரிசுடர் ஒத்தி**
**எவ்வத் தொவ்வா மாமுதல் தடிந்து**
**தெய்வுக் குன்றத்துத் திருந்துவேல் அழுத்தி**
**அவ்வரை உடைத்தோய் நீ இவ்வரை மருங்கில்**
**கடம்பமர் அணிநிலை பகர்ந்தேம்**
**உடங்கமர் ஆலமொடு ஏத்தினம் தொழுதே".**

குறப்பெண்ணாகிய பூங்கொடியை ஒத்த வள்ளியை மணந்த பெருமானே! எங்கள் வாழ்த்தும் உனக்குச் செவி உணவாகி அமையும் ஆதலாற் கேட்பாயாக. பெருமானே உனது உடை சிவப்பு; மாலையுஞ் சிவப்பு; உனது வேலும் பகைவரைக் கொல்வதால் இரத்தம் தோய்ந்து சிவப்பாகும்; உன் திருமேனியும் செந்தழல் போன்று சிவப்பு; உனது முகமோ விடியற் காலத்திலே விரியுஞ் செங்கதிர் இளஞாயிறு போலும் சிவப்பு; சூரனை வேருடன் வெட்டிக் கிரவுஞ்ச கிரியிற் பிறந்தவன் நீ. இத்திருப்பரங் குன்றத்திலே கடப்ப மரத்தின் கண் எழுந்தருளியிருப்பவனே உன்னை வாழ்த்துகிறோம். கை கூப்பிக் கும்பிட்டு நிற்கிறோம் என்பது பாடற் பொருள்.

குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துச் செய்யுளில் "அஞ்சுடர் நெடு வேல் சேவலங் கொடியோன் காப்ப" என்று பேசப்படுகின்றது. செய்யுள் வருமாறு:

**"தாமரைபுரையுங் காமர் சேவடிப்**
**பவழத்தன்ன மேனித் திகழ் ஒளிக்**
**குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்**
**நெஞ்சு பக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்**
**சேவலில் கொடியோன் காப்ப**
**எமவைகல் எய்தின்றால் உலகே".**

தாமரை மலர் போன்ற அழகிய சிவந்த திருவடியையும் பவளம் போன்ற மேனியையும் கிரௌஞ்ச மலையின் நடு இடம் பிளக்க வீசிய ஒளியுடைய நெடு வேலையும் சேவற் கொடியையுமுடைய முருகக் கடவுள் காத்தலால் உலகின் உள்ள உயிர்கள் இன்பமாயிருக்கின்றன. இடையூறில்லை என்பது பொருள்.

## 1.9 நக்கீரரும் படைவீடுகளும்

மதுரைமாநகர் "கோயில் மாநகர்" எனக் குறிப்பிட்டுப் போற்றும் அளவிற்குப் பல திருக்கோயில்களைக் கொண்டு விளங்குவது. திருப்பரங்குன்றம் கோவில் மாநகரின் குன்றக் கோவிலாகும். திருப்பரங்குன்றத்திலுள்ள குன்றம் ஏறக்குறைய முந்நூறு அடி உயரமுள்ளது. இக்குன்றத்தில் இரண்டு குடைவரைக் கோவில்களில் ஒன்று இன்று சிறந்து விளங்கும் முருகப் பெருமானின் திருக்கோவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகாற்றுப்படை ஆறுபடை வீடுகளைப்பற்றிய செய்திகளையும், முருகவழிபாட்டு மரபுகளையும், முருக பரத்துவத்தினையுங் குறிப்பிடுகின்றது. ஆறுமுகப் பெருமானின் ஆறுபடை வீடு களை ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நமக்கு அறிமுகப்படுத்திய சான் றோர் நக்கீரனார்.

திருப்பரங்குன்றம் பாண்டிய மன் னர்களோடு தொடர்புற்று விளங்குவது. இங்கு பள்ளி கொண்டிருக்கும் குமரக் கடவுள் கடம்பினையும், காந்தளையும் அணிந்து விளங்குகிறார். கடம்பு போகத் தையும், காந்தள் வீரத்தையும் குறிப்பன. திருப்பரங்குன்றத்துத் திருக்கோவிற் கரு வறையில் முருகன் மணக்கோலத்திலே தெய்வயானை அம்மையுடன் காட்சிய ளிக்கின்றான். திருப்பரங்குன்றக் கோவி லில் இலட்சுமி தீர்த்தமும் பிரம்மகூடம் எனப்படும் சந்நியாசக் கிணறும் நோய்க ளைப் போக்கவல்ல அருட்தீர்த்தங்களாக விளங்குகின்றன.

திருப்பரங்குன்றம், தண்பரங்குன்று, தென்பரங்குன்று என விவரிக்கப்படுகிறது. அகநானூறு, பரிபாடல், கலித்தொகை, மது ரைக்காஞ்சி ஆகிய நூல்களிலே திருப் பரங்குன்றம் இடம்பெறுகிறது.

திருக்கோவையாரிற் கூறப்படும் இருபத்தொரு தலங்களுள் திருப்பரங் குன்றமும் ஒன்றாகும். பெரியபுராணத் துள் சேக்கிழார் சுவாமிகள் இத்தலத்தி னைச் சங்கரனார் தங்கு திருப்பரங்குன் றம் என்றும், பரமர் திருப்பரங்குன்றம் என்றும் பாடியுள்ளார். கந்தபுராணம் திருப்பரங்குன்றுசேர் படலம், தெய்வ யானையம்மை திருமணப்படலம் ஆகிய இருபடலங்களும் அதிகமாகச் செய்தி களைத் தருகின்றன.

## 1.10 முருகன் பற்றிய நாட்டுப் பாடல்

முருகப் பெருமானின் திருப்பெயர் களிளொன்று "சுப்பு" என்பது. "சுப்பு" என்னுந் திருப்பெயர் "சுப்பிரமணியன்" என்பதன் குறுக்கமாகும். இதனை விளக் குவதாக அமையும் ஒரு நாட்டுப்பாடல் தமிழகத்திலுண்டு.

**"ஊசி படர்ந்தமலை – சுப்பையாவுக்கு**
**உருத்திராட்சம் காய்க்கும் மலை**
**பாசி படந்தமலை – சுப்பையாவுக்கு**
**பவளத்தேர் ஓடும் மலை**
**சாஞ்சா மலையா – சுப்பையாவுக்குத்**
**தேனும் தெனைமாவோ**
**தேனும் தெனைமாவோ – சுப்பையாவுக்குத்**
**தெகட்டாத செங்கரும்போ**
**கண்ணுள்ள தேங்காயே கண்ணே**
**கணுவுள்ள செங்கரும்பே**
**பாக்குப் பதிங்கலமும் கண்ணே**
**பச்சரிசி முக்கலமும்**
**எள்ளு இருகலமும் – சுப்பையாவுக்கு**
**எளனி தேங்காய் முந்நூறும்"**

என்பது நாட்டுப் பாடல்.

சிலப்பதிகாரத்திற் "சூர்மா தடிந்த சுடரிலைய வெவ்வேல்" என்று வீரத் தன்மை கொடுத்த அடைபுணர்த்திப் பாடப்பட்டுள்ளமை கண்டுகொள்ளத்தக்கது. "வேல்" என்பது "வெல்" என்று வினையடி முதல் நீண்டு "வேல்" என்பதாயிற்று. பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை வேல் பற்றிய செய்திகளை விளக்கியுரைத்துள் ளதுடன், சிலப்பதிகாரத்துச் சான்றுகளுட னும் நிறுவியுள்ளார்.

**"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்**
**குன்றும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏரகமும் நீங்கா இறைவன்**" என்பது சிலப்பதிகாரக் குரவைப்பாட்டு. இவ்வழகிய பாட்டிலே திருச்சீரலைவாயாகிய திருச்செந்தூரை முதன்மையாக அமைத்திருப்பது கருதத்தக்கதாகும். நக்கீரதேவர் சீர் அலைவாய் என்று புகழ்ந்தவாறே இளங்கோவடிகளும் "சீர்கெழு செந்தில்" என்று திருந்செந்தூரைச் சிறப்பித்துள்ளார் என்று உரைத்துள்ளமையும் நோக்கத்தக்கது. சிலப்பதிகாரத்துச் செய்தியினை இணைத்து நோக்குவதும் இவ்விடத்திற் பொருந்தும்.

**"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண் குன்றும்**
**ஏரகமும் நீங்கா இறைவன் கைவேல் அன்றே**
**பாரிரும் பௌவத்தின் உன்புக்குப் பண்டொரு நாள்**
**சூர்மா தடிந்த சுடர் இலைய வெள்வேலே"**

**"அணிமுகங்கள் ஒராறும் ஈராறு கையும்**
**இணையன்றித் தானுடையான் ஏந்தியவேல் அன்றே**
**பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்**
**மணிவிசும்பிற் கோன் ஏத்தமாறட்ட வெள்வேலே"**

**"சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்**
**திருமுலைப்பால் உண்டான் திருக்கைவேல் அன்றே**
**வருதிகரிகோல் அவுணர் மார்பம் பிளந்து**
**குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே"**

என்று மூன்று பாடல்களும் "வேலின் புகழ்" என்னுந் தலையங்கத்திற்கு சிலப்பதிகாரத்திலே வருகின்றன.

சித்தவைத்திய கலாநிதி க.இராமசுவாமி வேலின் விளைவு என்னும் கட்டுரையிற் குறிப்பிடும் கருத்துக்கள் சிந்தனைக்குரியவை. சைவசித்தாந்தக் கருத்துக்களோடு வைத்திய மரபுகளையும் இணைத்து நோக்கி வேலன் தனித்துவத்தை நிறுவுகிறார்.

"ஒரே கெட்டியாக மேலெழுந்த இரு அலகுகளாக
விரிவு கொண்டு பின்பு படிப்படியாக ஒடுங்கி
ஒரே முனையாக முடிவுபெறுவதே வேலின்
அமைப்பாகும் ஒரே முறையாக ஒடுங்கா விடின்
அது வேலாகாது" என்று கூறுகிறார்.

## 1.11 நெஞ்சை இடமாகக் கொண்ட வேல்

முருகனின் ஐந்து சோடிக் கரங்களும் பஞ்சகிருத்தியங்களுக்கு அமைந்த ஐந்து தெய்வங்களுக்குரிய ஆயுதங்களைத் தாங்கிக் கொள்ள, ஆறாவது சோடிக்கரம் அபயவரத்தில் கொடுத்துக் கொண்டிருக்கும் போது வேலினைத் தாங்குவதற்கு முருகனிடம் வேறு கரங்களுமே இல்லை. முருகன் எந்தக் கரத்தினாலாவது வேலினைத் தாங்கியவருமல்ல. தமது நெஞ்சுடன் சாய்த்துக் கொண்டவரேயாவார். கைகளினாலே தீண்டப் பெறாதபடியால் வேலானது யுத்தத்திற்குரிய ஆயுதமாகாது. எனவே வேலானது ஞானமார்க்க தத்துவத்தை விளக்க அமைந்ததொன்றாகும்.

நெஞ்சு நினைவிற்குரிய ஸ்தானமாகும். நினைவினால் ஆக்கப் பெறுவதே அனுக்கிரகமாகும். வேலானது முருகனின் நெஞ்சோடு சாத்தப்பட்டமையால் முருகப் பெருமான் சூரபத்மனை வேலின் மார்க்கவழியில் அனுக்கிரகித்து ஆட்கொள்ளலானான். வேலானது நெஞ்சோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுஞ் சாய்த்துக் கொள்ளப்பட்டமையால் வேலுக்கும் நெஞ்சிற்கும் இடையேயுள்ள இணைப்புக்களையும் ஆராய்வதும் அவசியமே. நெஞ்சு சுவாசத்திற்குரிய ஸ்தானமாகும். சுவாசத்திற்கு அமைந்த உள்ளுறுப்பு நுரையீரலாகும். எனவேதான் நுரையீரலைச் சுவாசப்பையென்பர். இவை வலம், இடம் என இரண்டு பாகங்களாகும். இவையிரண்டும் ஒருமித்தே சுவாசிப்பன. இவை ஒருமித்துச் சுவாசித்த போதிலும் இவற்றின் சுவாசம் மூக்கின் வழியாக இயங்கும் போது வலம், இடமாக மாறிமாறியே இயங்குவன. இது இயல்பு.

## 1.12 வேல் முனையும் சுழுமுனையும்

ஆட்கொள்ளும் மார்க்கத்தைப் புலப்படுத்த அமைந்தது வேல். வேலுக்கு முக்கிய பாகம் அதன் முனை. ஆட்கொள்ளலுக்கு அமைந்த சுவாசம் சுழுமுனை. இடகலை பிங்கலையின் சந்திப்பே சுழுமுனை. இச்சந்திப்பினைச் சமகலை என்று கொள்ளாமல் சுழுமுனை என்று கொள்ளப்படுவதும் "முனை" என்றபதத்தைக் கொண்டு வற்புறுத்தி வேலின் முனையை ஒப்பிடுவதற்கேயாகும். ஆட்கொள்ளலுக்கு அமைந்த வேலானது இரு பாகங்களாக விரிவு கொண்டு பின் ஒரு முனையாக ஒடுங்குவது போலவே ஆட்கொள்ளலுக்கு ஆதாரமான சுவாசங்களையும் இரு விரிவுகளைக் கொண்டு இயங்கி ஒரு முனையில் ஒடுங்குவதுமாம். சுவாசத்திற்கு அமைந்த மூக்கினது அமைப்பும் நோக்கத்தக்கது.

## 1.13 முருகனின் மூர்த்தி பேதங்கள்

"கந்தன்" என்னும் பெயர் முருகனுக்குரிய சிறப்பான பெயர்களுள் ஒன்று. பகைவர்களின் பராக்கிரமத்தை வற்றச் செய்பவன் கந்தன். கந்தன் என்றால் ஒன்று சேர்க்கப்பட்டவன் என்று பொருள். கந்து என்றால் பற்றுக்கோடு. உயிர்களுக்குப் பற்றுக் கோடாக இருப்பவன் கந்தன். இக்கருத்தையே சுப்பிரமணிய பராக்கிரமம் நூலாசிரியரும் குறிப்பிடுகிறார். அது வருமாறு:

"**ஆறு திருவுருவங்களையும் இரு திருக்கரங்களாலும் வாரியெடுத்துத் தழுவினர். ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களுமுடைய ஒருவராயினர். முருகக் கடவுள் அதனாலே கந்தன் என்னும் திருநாமத்தைப் பெற்றனர். [கந்தன் - கலத்தல்] உமாதேவியாராலே ஒன்று சேர்க்கப்பட்டவர் என்க**" என்று குறிப்பிடுகிறார்.

சுப்பிரமணியனுக்குரிய மூர்த்தி பேதங்களைக் குறிப்பிடும் சுப்பிரமணிய பராக்கிரமம் முருகனுக்குரிய அர்ச்சனை மந்திரங்களிலொன்றாகப் "பிரபந்த தாரதம்மிய நிர்ணய மூர்த்தையே நமஹ" என்று குறிப்பிடுகிறது. "பிரபந்த தாரதம்மிய நிர்ணய மூர்த்தி" என்னும் வடிவமே இம்மந்திரத்தினால் வழிபடப்படுகிறது. இப்பெயருக்கான விளக்கம் வருமாறு :

"**குமரக் கடவுள் வசியர் செய்த தவப்பேறு காரணமாகவும் செந்தமிழ்ப் பரமாசாரியனாகலால் தீந்தமிழ் நூலில் களவியலின் மெய்யுரை தெரிக்கு நிமித்தமாகவும் ஐயாட்டைக் குழவியாய்த் தோன்றிச் சங்கப் பலகையில் எழுந்தருளியிருத்தலாற் பிரபந்த தாரதம்மிய நிர்ணய மூர்த்தியாயினர்**".

முருகப் பெருமானின் பிரபாவங்களைக் கூறும் இலக்கியங்களையும் சூரபத்மனோடு நிகழ்த்திய போர் பற்றியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போருக்குப் படையெடுத்துச் செல்லும் வழியில் ஆறுபடைவீடுகளிலும் தங்கியமை குறித்தும் விளக்கமுண்டு. இச்செய்திகள் குறித்துப் பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை மேல்வருமாறு குறிப்பிடுகிறார்:

"தமிழிலே முருகனது பிறப்பு, திருவிளையாடல், அருளாட்சி முதலியவற்றை உணர்த்தும் பண்டை நூல்கள் பரிபாடலும், திருமுருகாற்றுப்படையுமாம். முருகனது கதையைக் கூறுவது கந்தபுராணமாகும். முருகனது பெருமையை இனிய சந்தச் சித்திரங்களோடு நமக்கு அருளிச் செய்துள்ளது திருப்புகழாகும். மேலும் 'முருகக் கடவுள் தாருகனை வதஞ் செய்து "தாரகாரி" என்ற பெயரையும் பெற்றார்.

சூரபத்மனோடு நிகழ்த்திய போரில் முருகக் கடவுள் படையெடுத்துச் சென்று வழியில் ஆறுதலங்களில் தங்கினர் என்று கொண்டனர். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், (திருச்சீரலைவாய்), திருவாவினன்குடி (பழநி), திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பனவே அவை. அண்ணாமலைரெட்டியாரது காவடிச் சிந்தில் முருகனுடைய வரலாறு மிகவும் இரஸபாவத்துடன் காணப்படுகிறது" ஆயினும் பரிபாடலிலே எவ்விடத்தும் சூரபத்மனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. பொதுவான செய்திகளே இடம்பெற்றுள்ளன.

# நல்லைக் குமரா சரணம்!

நல்லைக் குமரா சரணம் சரணம்
நான்காம் தமிழே சரணம் சரணம்
செல்வ நதியே சரணம் சரணம்
சேவல் கொடியே சரணம் சரணம்

வெற்றிக் களிப்பே சரணம் சரணம்
வெற்றிலை அழகே சரணம் சரணம்
புள்ளி மயிலே சரணம் சரணம்
புதிய குயிலே சரணம் சரணம்

பிரணவ ஒளியே சரணம் சரணம்
பெண்மை விழியே சரணம் சரணம்
இறைவன் பொறியே சரணம் சரணம்
இறைவியின் தாமரையே சரணம் சரணம்

வள்ளியின் காதலே சரணம் சரணம்
தெய்வானை காவலே சரணம் சரணம்
சங்கத் தலைமையே சரணம் சரணம்
சமத்துவ இளமையே சரணம் சரணம்

தேன் மொழியே சரணம் சரணம்
தேசத்தின் மாவலியே சரணம் சரணம்
வான் நிறமே சரணம் சரணம்
வசந்த வாசமே சரணம் சரணம்

தங்கப் பெட்டகமே சரணம் சரணம்
தமிழர் புத்தகமே சரணம் சரணம்
கனனி அமிழ்தே சரணம் சரணம்
கவிதை யோகமே சரணம் சரணம்.

**நல்லை அமிழ்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தில் இலக்கிய வடிவங்கள்

கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

மாணிக்கவாசகர் மதுரைக்குப் பக்கத்தில் உள்ள திருவாதவூரில் பிறந்தவர். அதனால் அவருக்குத் திருவாதவூரர் என்ற பெயர் ஏற்பட்டது. மாணிக்கவாசகர் பதினான்கு வயதிலேயே சமயம், தத்துவம், இலக்கியம் என்பவற்றில் புலமை பெற்றவராக இருந்தார். அரிமர்த்தன பாண்டியர் அவரை மதுரைக்கு அழைத்து தன்னுடைய அமைச்சராக்கிக் கொண்டார். சிவபெருமானே குருவாய் வந்து அவருக்குச் சிவஞான உபதேசம் செய்தார். ஞான தீட்சை பெற்ற திருவாதவூரர் திருவாசகங்கள் பாடலானார். திருக்கோவையும், திருவாசகமும் வாதவூரர் சொல்ல நடராஜப் பெருமான் எழுதியது என்று கூறப்படுகின்றது.

பக்தி இலக்கியங்களுள் திருவாசகம் உயர்ந்த இலக்கியமாகக் கொள்ளப்படுகின்றது. உபநிடதம், தேவாரம் என்பவற்றின் சாரமாக திருவாசகம் அமைகின்றது. திருவாதவூரர் பக்தி நெறியினைச் சொல்வதற்கு பல இலக்கிய வடிவங்களைக் கையாண்டிருக்கிறார். திருவாசகத்தில் பதிகம், சதகம், பள்ளியெழுச்சி, தசாங்கம், அம்மானை, பாவைப்பாட்டு, குயில்பத்து, கோத்தும்பி, சுண்ணப்பாட்டு, சாழல், தெள்ளேணம், பூவல்லி, உந்தி, தோணோக்கம் என இலக்கிய வடிவங்கள் காணப்படுகின்றன.

பதிகம் என்ற சொல்லுக்கு இரண்டு மூன்று பொருள் கூறப்படுகின்றது. இலக்கணம் காலம் மாறும் பொழுது மாற்றமும் வளர்ச்சியும் அடையும். ஒரு நூலின் முன்னுரையினையும் சுருக்கத்தையும் பதிகம் எனக் கூறுவதும் உண்டு. சிலப்பதிகாரம், மணிமேகலை, பதிற்றுப்பத்தின் பதிகங்கள் என்பன இவ்வகையின. ஒரு பொருள் குறித்து பத்துப்பாடல் பாடியுள்ளார் மாணிக்கவாசகர். அச்சப்பத்து, அடைக்கலப்பத்து, அதிசயப்பத்து, அருட்பத்து, அற்புதப் பத்து, அன்னைப்பத்து, இசைப் பத்து, உயிருண்ணிப் பத்து, கண்டபத்து, குயில்பத்து, குலாப்பத்து, குழைத்த பத்து, செத்திலாப்பத்து, சென்னிப்பத்து, பிடித்த பத்து, பிரார்த்தனைப்பத்து, புணர்ச்சிப் பத்து, யாத்திரைப்பத்து என பத்து என்ற பெயருடன் பத்தொன்பது பதிகங்கள் திருவாசகத்தில் இடம்பெறுகின்றன. மாணிக்கவாசகர் ஒவ்வொரு பதிகத்திலும் பத்துப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். சங்க இலக்கிய மரபினை அடியொற்றி பத்துப் பாடல் அமைக்கும் முறையினைப் பின்பற்றுகிறார். பதிகம் என்ற பெயரிலும் பாடல்கள் உள்ளன. தேவாரத்தில் இடம் பெறுவது போலவும் திருவாசகத்திலும் பதிகப் பெயருடன் பாடல்கள் காணப்படுகின்றன. அச்சோப்பதிகம், எண்ணப்பதிகம், கழுக்குன்றப்பதிகம், கோயில் திருப்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம், பாண்டிப்பதிகம் என திருவாசகத்தில் பதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகின்றது. இவை தேவார மரபினையும், காரைக்காலம்மையாரது மரபினையும் ஒட்டி அமைகின்றன. பின்னர் பன்னிரு பாட்டியலில் பதிகத்தின் இலக்கணம் மாற்றமுறுகின்றது. பதிகம் என்பது பத்து தொடக்கம் இருபது வரை பாடல்கள் அமையலாம் என கூறுகிறது. பின்னர் வந்த குமரகுருபரர், தாயுமானவர், சிவப்பிரகாசர் முதலியோர் இப்பதிகமுறையினைப் பின்பற்றுவதைக் காணலாம்.

திருவாசகத்தில் பள்ளியெழுச்சி என்ற இலக்கிய வடிவம் அமைகின்றது. (பள்ளி - படுக்கை, எழுச்சி - எழுப்புதல்) தொண்டர்கள் விடியல் பொழுதில் நீராடி இறைவனை எழுந்தருளும் வண்ணம் பாடும் இலக்கிய வகை பள்ளியெழுச்சி எனப்படும்.

திருப்பெருந்துறையில் அமைந்துள்ள சிவபெருமான் மீது மாணிக்கவாசகர் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார். இத்தலத்தில் தான் இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொண்டார். வைணவ மதத்திலும், தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார். பாரதியாரும் பாரதமாதா பள்ளியெழுச்சி பாடியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

திருவாசகத்தில் சதகம் என்ற ஒரு இலக்கிய வடிவம் காணப்படுகிறது. ஒரு பொருள் குறித்து நூறு பாடல்கள் பாடும் முறை சதகம் எனப்படும். காதல், வீரம், பக்தி என்பவற்றைப் பாட சதகம் பயன்படுகின்றது. இறைவனைப் பாடுபொருளாகக் கொண்டு நூறு பாடல் அமையப்பெற்று திருச்சதகம் என்ற பெயரில் திருவாசகத்தில் இடம்பெறுகின்றது. வடமொழியிலும் சதகம் காணப்படுகின்றது. மாணிக்கவாசகரின் சதகமுறைக்கும் வடமொழி சதகமுறைக்கும் வேறுபாடு காணப்படுகின்றது. மாணிக்கவாசகரின் சதகம் அந்தாதி முறையில் அமைந்தது. இந்த மரபினைப் பின்பற்றி பின்வந்த பரஞ்சோதி முனிவர் பதிற்றுப் பத்தந்தாதி, அதி வீரராமபாண்டியரின் திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி என வளர்ச்சியடைந்தன. குமரேச சதகம், கயிலாசநாதர் சதகம் எனப் பின்னர் வளர்ச்சியடைந்தது.

திருவாசகத்தில் பாவைப்பாட்டு என்ற இலக்கிய வடிவம் அமைகின்றது. மார்கழித் திங்களில் கன்னிப்பெண்கள் வைகறைப் பொழுதில் எழுந்து தமது தோழியரை வீடுவீடாகச் சென்று துயில் எழுப்பி பொய்கையில் நீராடி நோன்பிருந்து இறைவன் புகழ்பாடுதலை பொருளாகக் கொண்டது பாவைப்பாட்டு என்பதாகும். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இடம் பெறும் திருவெம்பாவை, பாவைப் பாட்டு இலக்கிய வடிவம் கொண்டது. ஆண்டாளின் திருப்பாவையும் இதனுடன் ஒற்றுமையுடையது. பரிபாடலில் இடம்பெறும் தைந்நீராடல் மரபினை அடியொற்றியதாகும். நல்ல மழை பெய்ய வேண்டும் என்பதற்காகவும், நல்ல மணவாளன் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், பாவை நோன்பு நோர்க்கப்பட்டது.

திருவாசகத்தில் தசாங்கம் என்ற ஒரு இலக்கிய வடிவம் அமைகின்றது. (தசம் - பத்து, அங்கம் - உறுப்பு). அரசாளும் தலைமகனுக்குரிய மலை, ஆறு, நாடு, ஊர், முரசு, பரி, களிறு, தார், பெயர், கொடி என பத்து உறுப்புக்களைச் சிறப்பித்துப் பாடுதல் தசாங்கம் எனப்படும். திருப்பெருந்துறையில் தன்னைக் கண்டு கொண்ட தலைவன் இடத்து காதல் கொண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் ஒருத்தி தான் வளர்க்கும் கிளியை நோக்கி இறைவனுக்குரிய பெயர், நாடு, ஊர் முதலிய பத்து உறுப்புக்களையும் வினாவ, கிளி விடை கூறுவதாக அமையும் வடிவம் தசாங்கம் எனப்படுகிறது. திருத்த சாங்கத்தில் கிளி முக்கியத்துவம் பெறுத லில் கிள்ளைப்பத்து என்றும் கூறுவர்.

திருவாசகத்தில் அம்மானை இடம் பெறுகின்றது. அம்மானை என்பது பெண் களின் விளையாட்டுக்களில் ஒன்றாகும். அம்மானை என்ற விளையாட்டிற்கு இலக் கியவடிவம் கொடுத்தவர் இளங்கோவடி கள். சிலப்பதிகாரத்தில் ஐந்தடியாக அம் மானைப்பாடல் அமைந்தது. திருவாசகத் தில் அம்மானைப் பாடல் ஆறடி கொண்டு அமைந்துள்ளது. இறைவனின் இயல்பு களை பெண்கள் இன்னிசையுடன் ஆடிப் பாடுவதாக திருவாசகத்தில் இடம்பெறும் அம்மானைப் பகுதி காட்டுகின்றது.

கலம்பக நூல்களில் அம்மானை என்ற உறுப்பு வருகிறது. பெண்பாற் பிள் ளைத் தமிழில் அம்மானைப் பருவம் வரு கின்றது.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் சுண்ணப்பாட்டு என்ற இலக்கிய வடிவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சுண்ணம் என்பது மஞ்சனத்தூள். தலைமகன் மஞ்சனம் ஆடுதற்குரிய நறுந்துகளை உரலில் இடி க்கும் பெண்கள் தலைவனின் செயல்களை யும் ஆற்றலையும் பாடுவர். இத்தகைய பாட் டுக்களை வள்ளைப்பாட்டு என்பர். மாணி க்கவாசகர் சுண்ணத்திற்கு முக்கியத்து வம் கொடுத்து திருப்பொற்சுண்ணம் எனப் பெயரிடுகின்றார்.

திருவாசகத்தில் திருக்கோத்தும்பி என்ற இலக்கிய வடிவம் அமைகின்றது. இது தும்பிப்பாட்டு எனவும் பெயர் பெறு கிறது. தலைமக்கள் ஒருவரை ஒருவர் பிரிந்திருக்கும் பொழுது தமது ஆற்றா மையை இயற்கைப் பொருள்களை நோக்கிக் கூறுதல். இதனைத் தொல்காப்பியம் "பாற் கிளவி" எனக் குறிப்பிடும். மாணிக்கவாச கர் தமது உள்ளத்தையே தும்பியாக உரு வகம் செய்தார். அலையாது இறைவனின் திருவடியை குறிக்கோளாகக் கொண்டு பாடும்படி பணித்தார். மனம் பறந்து செல் லும் என்பதனால் மாணிக்கவாசகர் தும்பி என்றழைத்தார். மனதை ஒரு நிலைப்படுத் தும் நெறியினை மாணிக்கவாசகரது திருக்கோத்தும்பியில் காணலாம்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் குயில் பத்தும் ஒரு இலக்கிய வகையாக இடம்பெறுகின்றது. குயிலை நோக்கி திருப் பெருந்துறையில் இருக்கும் என் உயிர் தலைவனை இங்கு வருமாறு கூவுக என திருவாதவூரர் வேண்டும் திறன் குறிப் பிடத்தக்கது. ஆண்டாளும் தனது நாயக னாகிய நாராயணனை வரும் வண்ணம் குயிலை கூவும்படி வேண்டுவது ஒப்பு நோக்கத்தக்கது.

திருவாசகத்தில் திருத்தெள்ளே ணம் என்ற இலக்கிய வடிவம் கூறப்பட் டுள்ளது. திருவாசகத்தில் இடம்பெறும் தெள்ளேணம் மகளிர் விளையாட்டைக் குறிக்கும். இறைவனின் புகழினைப் பாடிப் பரவுவதாக அமைகின்றது. முறத்தினைக் கையில் தாங்கி கூலங்களைத் தெள்ளிக் கொழித்து விளையாடும் நிலையில் இறை வன் புகழ் பாடுதல்.

திருவாசகத்தில் தோணோக்கம் என்ற இலக்கிய வடிவம் அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன் பெற்ற வெற்றியை, பாராட்டி அவன் முன்னிலையில் கைவீசிப் பெண் கள் ஆடும் ஆட்டம் என்பர்.

திருவாசகத்தில் திருப்பொன்னூ சல் என்ற இலக்கிய வடிவம் கூறப்பட்டுள் ளது. மகளிர் விளையாட்டுக்களில் ஊசலும் ஒன்றாகும். சங்க இலக்கியங்களில் ஊசல் பற்றிய குறிப்புகள் வருகின்றன. சிலப்பதி காரத்தில் வாழ்த்துக் காதையில் மூன்று ஊசல்வரிப் பாடல்கள் இடம்பெறுகின்றன. அரசனைப் புகழ்ந்த ஊசல்வரி என்ற இலக் கிய வடிவத்தை மாணிக்கவாசகர் இறை வனைப் பாடுதற்குக் கருவியாகக் கொண் டார்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பக்தியைப் புலப்படுத்த பல இலக்கிய வடிவங்களைக் கையாண்டுள்ளார். மாணிக்க வாசகர் இலக்கியத்தில் நிறைந்த புலமை பெற்றவர். நல்ல கவிதை என்பது சொல் அழகு, பொருள் அழகு இரண்டையும் உடையது என்பர். சொல்லழகு, பொரு ளழகு இரண்டையும் உடையது திருவாச கம். இலக்கிய நயத்தினூடாக சமயக் கருத்துக்களையும், தத்துவக் கருத்துக் களையும் குறிப்பிடுகின்றார். பழைய இலக் கிய மரபினையும் பேணுகின்றார். அதே வேளை புதிய இலக்கிய வடிவங்களை யும் கையாளுகின்றார்.

# ஆறுபடை அழகனருள் மகிமையைப்பாடு

வெற்றித ரும்வேல் சக்திவ டிவேல்
வேல்வேல் வேலெனவே
வேற்படை வீரன் திருவடி நாடிப்
பணிந்திடும் அடியவர்க்கே
ஏற்றம ளித்திடும் எம்பிரான் கைவேல்
என்றும் துணையென்றே
குற்றம றுத்தருள் கூர்வடி வேலவன்
திருவடி மலரினையே
சுற்றிவ ரும்மடி யாரிடர் தீர்க்கும்
சுந்தர மயில்வீரன்
செற்றம ழித்துயர் தேவரைக் காத்தவன்
நங்களையு மைபாலன்
பற்றினைப் பற்றிடு மனமே பால
குமாரன் மயிலழகன்
வெற்றிந லம்தந் தெங்களை யாளும்
வேலனைப் பணிமனமே

**புலவர் சு.குகதேவன்**
**கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமானவர் காட்டும் சமயநெறி

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

## மந்திரம் என்பதன் பொருள்

தெய்வத் தமிழாகிய திருமுறைகளை அருளியவர்கள் இறையருளைப் பூரணமாகப் பெற்ற அனுபூதிமான்கள். இவர்களுடைய பாடல்கள் மந்திர சொரூபமானவை. மந்திரம் என்பதன் பொருள் நினைப்பவனைக் காப்பதாகும். அருள் நூல்களை வழங்கிய ஞானிகளை நிறைமொழி மாந்தர்கள் என்றே தொல்காப்பியரும், வள்ளுவரும் குறிப்பிடுகின்றார்கள்.

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப**
- தொல்காப்பியம் செய்யுள் -178

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்**
- திருக்குறள் 28

"தேவாரம் வேதசாரம்" என்பதைச் சித்தாந்த கலாநிதி மகான் காசிவாசி செந்திநாதையர், தான் எழுதிய நூலின் ஊடாக நிறுவியுள்ளார். தமிழிலே இறைவனைத் தோத்திரம் பாடி வணங்குதல் இறைவனுக்கு நாம் செய்கின்ற அர்ச்சனை என்பதை,

**"அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால்**
**மண்மேல் நம்மைச்**
**சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும்**
**வாயார்"**

எனப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது.

திருமுறை ஆசிரியர்களுக்குப் பின்பு தெய்வத் தமிழ் பாடி தமிழ் பக்தி இயக்கத்தை வளர்த்த அருளாளர்களில் கச்சியப்பர், அருணகிரிநாதர், அபிராமிப்பட்டர், குமரகுருபரர், தாயுமானவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பக்தனாகவும், சித்தனாகவும், ஞானியாகவும் திகழ்ந்த தாயுமான சுவாமிகள் அருளிய பாடல்கள் இறையருள் உள்நின்று உணர்த்த மலர்ந்த ஞான வாசகங்களாகவே காணப்படுகின்றன. நடமாடும் கோயிலாகத் திகழ்ந்த தாயுமான அடிகள் அகத்திலே தான் பெற்ற ஞான ஊற்றினை அற்புதமான கவிதைகளாகத் தந்துள்ளார்.

## தாயுமானவர் திருஅவதாரம்

தெய்வத் தமிழாகிய திருமுறைகள் வடமொழி வேதத்திற்குச் சிறிதும் தாழ்ந்தது அல்ல என்பதைக் கட்புலனாக உலகிற்கு உணர்த்திய தெய்வ மணம் கமழும் திருமறைக்காட்டில் கேடிலியப்ப பிள்ளை - கஜவல்லி அம்மையார் செய்த தவத்தின் பயனாக தாயுமான சுவாமிகள் ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன்பு திருஅவதாரம் செய்தார்.

அறிவுப் பசியும் ஆன்மீகத் தாகமும் ஒருங்கே அமையப் பெற்ற தாயுமானவர் வடமொழி, தமிழ்மொழி ஆகிய இருமொழிகளிலும் உள்ள இலக்கியம், இலக்கணம், தருக்கம் முதலிய நூல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைத் துறைபோகக் கற்று வித்தகரானார்.

## குருவருள் பெற்றமை

"குருவருள் இன்றித் திருவருள் இல்லை" என்றே சைவ சித்தாந்தம் கூறு கிறது. திருமூலர் மரபில் வந்த திருச் சிராப்பள்ளி மௌனகுரு மடத்தைச் சேர்ந்த மௌனகுரு சுவாமிகள் இவரைத் தமது சிஷ்யனாக ஏற்று விசேட தீட்சை செய்வித்து சிவபூசை எழுந்தருளுவித்துக் கொடுத்தருளினார். மௌனகுரு சுவாமி கள் இவருக்கு யோகஞான முறைகளை யும் உபதேசித்தருளினார். யோகஞான பயிற்சிகளின் ஊடாக இவருடைய அக மும் புறமும் தெய்வீக மயமானது. தமது குருநாதரின் பெருமையை மௌனகுரு வணக்கம் என்னும் திருப்பதிகத்தில் வியந்து போற்றியுள்ளார். இதன் ஒவ்வொரு பாட லும் "மந்த்ர குருவே", "யோக தந்திர குருவே", "மூவன் மரபில் வந்த மௌன குருவே" என்ற தொடரால் முடிகின்றது.

## சித்தர்களின் தொடர்பு

சித்த புருஷர்கள் அட்டமா சித்தி களும் கைவரப்பெற்றவர்களாகத் திகழ்ந் தார்கள். "கடவுளைக் காண முயல்பவர் கள் பக்தர்கள் என்றும் கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்" என்றும் சித் தர்களுக்கு வரைவிலக்கணம் கூறப்பட் டுள்ளது.

**"எழும்பாடல் வாசனையைக் கொன்றோன் ஞான**
**ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தன்"**

எனச் சட்டை முனிச்சித்தர் ஞானிகளுக் கும், சித்தர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்கி உள்ளார். வாசனை என்பது கர்மவினை ஆகும். பிரபஞ்ச வாழ்க்கையின் இரகசியத்தை சித்தர்கள் அறிந்திருந்தார்கள்.

தாயுமானவர் விராலி மலையில் இருந்த சித்தர்களுடன் உறவாடிய காலத்தில் சித்தர் கணம் என்ற பதிகத்தைப் பாடினார். உடல் சித்தியும் உயிர் முத்தியும் ஒருங்கே எய்த வேண்டுமென்ற கருத்து சித்தர் களுடன் உறவாடிய சூழ்நிலையில் தாயு மானவரிடம் ஏற்பட்டது. சித்த புருஷர்கள் அனைவருக்கும் மூல புருஷராகத் தவ யோக திருமூலநாயனார் திகழ்ந்தார் என் பதை "மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் கணமே" எனத் தாயுமான சுவாமி கள் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

சித்தி பெற்றவர் சித்தர். முத்தி பெறும் வரை உயிர் தங்கியிருப்பதற்கு உடல் அவசியமாகிறது. பல பிறவிகள் எடுப்பதற்குப் பதிலாக ஒரு பிறவியிலேயே காயசித்தி பெற்று முக்திக்குரியவராதல் சிறந்ததாகும் என்பது தாயுமான அடிக ளின் கருத்தாகும்.

**தேகம் யாதேனும் ஒரு சித்திபெற சீவன் முத்தி**
**ஆகும் நெறி நல்ல நெறி ஐயா பராபரமே**

பராபரக் கண்ணி 357

## கல்வியின் பயன்

சிறந்த கல்விமானாகிய தாயு மானவர் கற்பனவும் இனியமையும் என்ற மணிவாசகர் கூற்றுக்கு அமைய கற்று என்ன பலன்? என்ற எல்லைக்கு வந்து விட்டார். உலக வாழ்வின் உச்சியில் திக ழும் உண்மை நாட்டம், மெய்யுணர்வின் நாட்டம் அவரை ஈர்த்தன. இவர், தான் கற்ற கல்வி ஆன்ம ஈடேற்றம் பெறு வதற்குத் தனக்கு வழிகாட்ட வேண்டும் என்று விரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்றும் என் பலன்? கற்றிடும் நூல் முறை**
**சொற்ற சொற்கள் சுகாரம்பமோ நெறி**
**நிற்றல் வேண்டும் நிருவிகற்பச் சுகம்**
**பெற்ற பேர் பெற்ற பேசாப் பெருமையே.**

சொற்களை வைத்துக் கொண்டு விளையாடும் விளையாட்டிலே வல்லவர்களாக விளங்குகின்றவரிடம் ஏற்படும் அறிவு வாசகஞானம் எனப்படும். இத்தகைய அறிவால் சுகம் வருமோ? என இறைவனிடம் முறையிடுகின்றார்.

“**வாசக ஞானத்தால் வருமோ சுகம் பாழ்த்த**
**பூசலென்று போமோ புகலாய் பராபரமே**”.

இந்த வாசக ஞானத்தால் வேண்டாத பூசல்கள் தான் விளைகின்றன என்று குறிப்பிடுகின்றார். கிளிப்பிள்ளை கேட்டதையே சொல்லும். அது போலவே என்னுடைய வாயும் படித்ததைச் சொல்லிக் கொண்டே வருகிறது. இதனால் ஏற்படும் பயன் யாது? என்று கேட்கிறார்.

“**கேட்டதையே சொல்லும் கிளிபோல**
**நின்னருளில்**
**நாட்டம் இன்றி வாய் பேசேல் நன்றோ**
**பராபரமே**”

ஆன்மஞானம் பெற்றவர்கள் அடக்கத்துடன் தான் பேசுவார்கள். மணிவாசகரின் தெய்வ வாசகமாகிய திருவாசகத்தில் இதனைப் பல இடங்களில் காணலாம். “வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே” என்றும், “துணையில் பிண நெஞ்சே” என்றும் தனது நெஞ்சுக்கு அறிவுறுத்தும் பாடல் வரிகள் பலவற்றைத் திருவாசகத்தில் காணலாம். இதே போலத் தாயுமான சுவாமிகளும் கூறுகின்றார். இன்னிசை மலர்கள் என்று போற்றப்படுகின்ற மூவர் தேவாரத்தை உணர்ந்து படித்து அதிலே தன் உள்ளத்தைப் பறி கொடுத்த தாயுமானவர், தான் பாடிய பாடல்களை இறைவன் விரும்பி ஏற்பாரா? என வினாவுகின்றார்.

**தேவரெலாம் தொழச் சிவந்த செந்தாள்**
**முக்கண்**
**செங்கரும்பேர் மொழிக்கு மொழி தித்திப்பு ஆக**
**மூவர் சொலும் தமிழ் கேட்கும் திருச்செவிக்கே**
**மூடனே புலம்பிய சொல் முற்றுமோ தான்?**

சாத்திரங்களால் சமுதாயத்திற்கு எவ்வித பயனுமில்லை. சாத்திரங்கள் மக்களிடையே வேற்றுமைகளை அதிகமாக்குகின்றதே ஒழிய ஒற்றுமையை வளர்க்கவில்லை. ஆகவே சித்தர்கள் சாத்திரங்களைக் கண்டிக்கின்றனர்.

**தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி**
**வேதசாத்திரப்**
**பொத்தலை மூடுங்கடி – ஞானக்கும்மி**

தத்துவ முரண்பாடுகளுக்குள் சிக்காமல் வாழ்ந்தவர்கள் சித்த புருஷர்கள் என்பதை

“**வேதாந்த சித்தாந்த சமரச நன்நிலை பெற்ற**
**வித்தகச் சித்தர் கணமே**”

எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

## தாயுமானவர் காட்டும் இறைவன்

இறைவன் சர்வவியாபகராக எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான் பஞ்சபூதங்களிலும் இறைவன் கலந்திருக்கிறான். என்பதை “வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி” எனத் திருவாசகம் குறிப்பிடுகின்றது. இதே போலத் தாயுமான சுவாமிகளும் எங்கும் நிறைந்திருப்பவன் இறைவன் என்பதைப் பின் வரும் பாடற் பகுதிகளில் குறிப்பிடுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. "**பார்க்கும் இடம் எங்கும் ஒரு**
**நீக்கமற நிறைகின்ற**
**பரிபூரணானந்தமே**"
2. "**பார்த்த இடம் எல்லாம் பரவெளியாய்த்**
**தோன்ற ஒரு**
**வார்த்தை சொல்ல வந்த மனுவே**
**பராபரமே**".

இறைவன் புலன்களால் உணரப் படாதவர்; காலத்தை வென்றவர்; ஆகையால் காலாதீதன் என அழைக்கப்படுகின்றார். அருளாளர்கள் அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளாகிய இறைவனைத் தமது பிண்டமாகிய உடலிலே கண்டார்கள். "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்" எனத் திருமந்திரம் இதனை விளக்குகிறது. அண்டம், பிண்டம் எல்லாம் வியாபகமாய் நிற்கும் இறைவனின் சிறப்பினைத் தாயுமான சுவாமிகளும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

**அண்டமுமாய் பிண்டமுமாய்**
**அளவிலாத**
**ஆருயிருக்கு ஓர் உயிராய்**
**அமர்ந்தாய் ஆனால்**
**கண்டவர் ஆர்? கேட்டவர் ஆர்?**

இறைவனது திருவருளே உயிர்களையும் உலகத்தையும் அவனோடு இணைத்து நிற்கிறது. அவனது அருள் வெளிக்குள் அண்ட சராசரமெல்லாம் அடங்குகின்றன. இறைவனின் திருவருள் சொல்லிற்கு அப்பாற்பட்டது. அது சொல்லால் உணர்த்தப் பெறாத வெளி என்பதை மேலான வெளி என்கிறார் தாயுமானவர். இறைவனை அவனது திருவருள் வாயிலாகவேதான் உயிர்கள் காண முடியும். பூதங்கள் முதலான தத்துவங்களால் அவனை அறிய முடியாது. இறைவனிடம் இருந்து தோன்றும் திருவருளை வடிவம் என்றும் உயிருக்கு கண் என்றும் கூறும் மரபு உண்டு.

1. **காட்டும் திருவருளே கண்ணாகக் கண்டு பர**
**வீட்டின்ப மெய்ப்பொருளை மேவுநாள்**
**எந்நாளோ**
(எந்நாட் கண்ணி பொருளியல்பு -6)
2. **மண்ணோடு விண்காட்டி மறைந்து**
**மறையாவருளைக்**
**கண்ணோடு கண்ணாக என்று காண்பேன்**
**பராபரமே**
(பராபரக்கண்ணி -82)

சைவர்கள் கோயில் என்று போற்றும் தலமாகிய சிதம்பரம் பஞ்சபூதத் தலங்களில் ஆகாயத்தைக் குறிக்கிறது. தில்லையிலே ஆனந்தக் கூத்தாடும் நடராஜப் பெருமானை ஞான மயமாகவே அருளாளர்கள் காண்பார்கள். சித் - அறிவு, அம்பரம் - ஆகாசம். எனவே சிதம்பரம் என்பது அறிவின் நிறைவாய் எப்பொருளும் தன்னுள் அடங்கப்பெறும் அருள் வெளி என்று பொருள்படும். இறைவனை எல்லாவற்றையும் ஆட்டுவிக்கின்ற முதல்வனாகக் கருதுவோர்க்கு கூத்தப்பிரானின் வடிவமே பிடிக்கும். போகத்தையும் வீடு பேற்றையும் இறைவன் அருளுவதால் இறைவனைப் பெருங்கருணையாளனாகக் கருதுவோர்க்குச் சிற்றம்பலமே சிறந்த தலமாகும்.

**பொய் வந்து உழலும் சமயநெறி**
**புகுத வேண்டா முத்தி தரும்**
**தெய்வ சபையைக் காண்பதற்குச்**
**சேர வாரும் செகத்தீரே**

எனக் காடும் கரையும் என்ற தனது பாடலில் தாயுமானவர் விளக்குகிறார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தாயுமானவர் காட்டும் ஆன்மா

உயிர்கள் பாசத்தால் பிணிக்கப் படுமாதலின் அவை பல்வேறு குறை களையுடையவை. அருளாளர்கள் குறை யற்றவர்கள். ஆனால் எல்லாக் குறை களும் தம்மிடம் இருப்பதாகக் கூறுவர். தன்னைத் தாழ்த்திக் கூறிக் கொள்ளுதல் அவர்களின் இயல்பு.

**"பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்**
**பிழைத்தனைகள் அத்தனையும்**
**பொறுத்தாயன்றே"**

என அப்பர் பெருமான் திருத்தாண்டகப் பாடலிலும்,

**"பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச்**
**சுருக்கும்**
**புழுத்தலைப் புலையனேன் தனக்கு"**

என மணிவாசகப்பெருமான் தனது திரு வாசகப் பாடலிலும் குறிப்பிடுவதைக் காண லாம். தாயுமான சுவாமிகள் எல்லாக் குறைகளும் தம்மிடம் இருப்பதாகக் கூறு வதை அவருடைய பாடல்கள் பலவற்றில் காணலாம். தன்னுடைய வழிபாட்டில் உறுதிப்பாடு போதாது என்பதைப் பல பாடல்களின் ஊடாக விளக்கியுள்ளார்.

**1. பொய்யினேன் புலையினேன்**
**கொலையிலே நின்அருள்**
**புலப்பட அறிந்து நிலையாப்**
**புன்மையேன், கல்லாத தன்மையேன்**
**நன்மைபோல்**
**பொருள் அலாப் பொருளை நாடும்**
**வெய்யனேன், வெகுளியேன், வெறியனேன்**
**சிறியனேன் வினையினேன் ........**

(ஆனந்தமான பரம் 8)

**2. கல்லேனும் ஐய ஒரு காலத்தில் உருகும்**
**என் கல்நெஞ்சம் உருகவில்லையே**

(சுகவாரி 3)

உயிர் அறிவுடைய பொருளாக இருப்பினும் எதைப் பற்றி நிற்குமோ அதன் தன்மையைச் சார்ந்து நிற்கும் இயல்புடையது. "பளிங்கனைய சித்து" என்று ஆன்மாவைத் தாயுமானவர் குறிப் பிடுகின்றார்.

## வினை (மும்மலங்கள்)

சித்தாந்தத்தில் கன்மம் (வினை) பாசத்தில் அடங்கும். பாசங்கள் மூன்று. ஆணவம், கன்மம், மாயை என்பன அவை யாகும். அவை மும்மலங்கள். மலம் அழுக்கு ஆன்மாவைப் பற்றியிருப்பது. ஆணவம் நுண்பொருள் எளிதில் உணரமுடியாதது. மாயை பருப்பொருள். கன்மம் இரண்டிற் கும் இடைப்பட்ட பொருள்.

## ஆணவம்

ஆணவம் அற்ற நிலையில் நிற்கும் உயிர் தனக்கு உயிராகிய முதல்வனைப் பற்றி நிற்கும். தாயின் கருவறையிலே இருக்கும் சிசுவானது தன் ஆற்றலை எல் லாம் ஒடுக்கி வைத்துக் கொண்டுள்ளது. சிசு கண் கொண்டு பார்ப்பதில்லை. காது கொண்டு கேட்பதில்லை. மூளையைப் பயன்படுத்தி எண்ணுவதுமில்லை. அறிவு அதனிடத்து ஒடுங்கிக் கிடக்கின்றது. இதே நிலையில் தான் ஆணவச் சேர்க்கையில் உயிர்களும் உள்ளன. இதனைக் "காரி ட்ட ஆணவக் கருவறை" எனத் தாயுமான வர் குறிப்பிடுகின்றார்.

## கன்மம்

ஒருவரது வாழ்க்கையில் இரண்டு பகுதிகள் உள்ளன. 1. அகவாழ்க்கை 2. புறவாழ்க்கை. அறிவு, அடக்கம், ஒழுக் கம், சால்பு முதலியவை அகவாழ்க்கைப் பகுதிகள். செல்வம் சேர்த்தல், நுகர்தல் முதலியவை புறவாழ்க்கைப் பகுதிகள். புறவாழ்க்கைப் பகுதியினை ஊழின் (மூல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மம்) துணை இருந்தால் அல்லாமல் நினைத்தவாறு பெற முடியாது. அக வாழ்க்கைப் பகுதியில் ஊழ் அவரவர்க்கு உரிமை கொடுத்துள்ளது. அகவாழ்க்கையில் வேண்டிய வேண்டியாங்கு எய்தலாம்.

சீவான்மாவுக்கு அமைந்துள்ள பல பண்புகளில் அவன் கர்மசொரூபம் என்பதும் ஒன்றாகும். வினைவயத்தனாய் இருக்கும் வரை அவன் வினை செய்து கொண்டே இருப்பான். வினைக்குத் தன்னைக் கர்த்தாவாக எண்ணுவதும் அவனுடைய இயல்பாக உள்ளது. ஒருவன் தன்னைக் கர்த்தாவாக எண்ணும் வரை வினைப்பயனை ஓயாது வளர்த்துக் கொண்டே போகிறான். இறைவனுடைய அருளை அறிந்து கொள்கின்ற வரையில் அவரவர் “வினை” என்னும் சுமையை அல்லும் பகலும் சுமந்து கொண்டே உள்ளனர். இறைவனுடைய அருளால் எல்லாம் நிகழ்கின்றன என்று அறிகிறவர்கள் தங்கள் வினையை இறைவன் வினை என உணர்ந்து இறைவனிடம் ஒப்படைத்து விடுகின்றனர். பின்பு வினை அவர்களிடம் வளர்வதில்லை. அதன் பயனும் அவர்களிடம் அடைவதில்லை.

வினைப் பயன்களைக் கூட்டி என்னை ஏன் வதைக்கின்றாய்? என்று இறைவனைத் தாயுமான அடிகள் உரிமையுடன் கேட்கின்றார்.

**அறியா நான் செய்வினையை ஐயா நீ கூட்டும்**
**குறியேது எனக்குளவு கூறாய் பராபரமே.**

இருவினையாகிய (மூலவினை) நோய் என்னைக் கெடுக்க வந்தது. என்னிடம் பேரருளுடைய நீ அவ்வினையை நீக்கி அருள்புரியக் கூடாதோ என இறைவனை வேண்டுகின்றார்.

**என்னைக் கெடுக்க இசைந்த இருவினை நோய்**
**தன்னைக் கெடுக்கத் தகாதோ? பராபரமே**

(பராபரம் - 164)

திண்ணிய வினையைக் கொன்று அடியேனை உய்ய வைத்தால் உனக்குப் புண்ணியம் அல்லவா கிடைக்கும் என இறைவனிடம் முறையிடுகின்றார்.

**திண்ணிய வினையைக் கொன்று**
**சிறியனை உய்யக் கொண்டால்**
**புண்ணியம் நினைக்கயன்றோ**
**பூரணானந்த வாழ்வே**

(கற்புறு சிந்தை -5)

## மாயை

மாயையில் இருந்து முப்பத்தாறு தத்துவங்களும் தோற்றம் பெறுகின்றன. உலகில் பலவாகக் காணப்படும் பொருள்களாய்ப் பரிணமிக்கக் கூடிய பல்வகைச் சக்திகளின் தொகுதி மாயை எனப்படுகிறது. மாயையில் இருந்து சுத்தமாயை (சிவதத்துவம் 5), அசுத்த மாயை வித்தியா தத்துவம் 7), பிரகிருதி மாயை (ஆன்ம தத்துவம் 24) தோற்றம் பெறுகின்றது என்று சைவசித்தாந்தம் கூறுகிறது.

பிரகிருதிக்கு மேற்பட்ட தத்துவங்களை வித்தியா தத்துவம் ஏழாகவும், சுத்த தத்துவம் ஐந்தாகவும் பகுத்து தாயுமானவர் கூறுவதைப் பின்வரும் பாடல்களில் காணலாம்.

1. **வித்தியா தத்துவங்கள் ஏழும் வெருண் டோடச்**
   **சுத்த பரயோகத்தைத் துய்க்கு நாள் எந்நாளோ?**

(எந்நாட் தத்துவ முறைமை 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **சுத்த வித்தையே முதலாத் தோன்று**
**மோரைந்து வகைத் தத்துவத்தை**
**நீக்கியருள் சாருநாள் எந்நாளோ**
(எந்நாட் தத்துவ முறைமை 12)

## இறை உயிர் தொடர்பு

பதி ஒன்று என்பதும், உயிர்கள் அளவிறந்தன என்பதும் சைவசித்தாந்தக் கோட்பாடாகும். இதனால் இறையை ஏகன் என்றும், உயிரை அநேகன் என்றும் வழங்குவர்.

"ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க" என்பது மணிவாசகம். உயிர்கள் பல என்பதையும் எல்லா உயிர்களிலும் கலந்திருக்கும் இறைவன் ஒருவன் என்பதையும் பின்வரும் தாயுமானவரின் பாடல் விளக்குகிறது.

**"எண்ணில் பல கோடி உயிர் எத்தனையோ**
**அத்தனைக்கும்**
**கண்ணிற் கலந்த கண்ணே பராபரமே".**
(பராபரம் 277)

## மனம்

அந்தக் கரணங்களில் ஒன்றாகிய மனத்தை தாயுமானவர் ஒரு குரங்காக உருவகிக்கின்றார். இது சாதாரண குரங்கன்று; பேய்க் குரங்கு. இக் குரங்கை கொள்ளித் தேள் கொட்டிவிட்டால் பேய்க் குரங்கின் ஆட்டம் மிக மோசமாக இருக்கும். இந்த மனம் பேய்க் குரங்கை விடப் பொல்லாதது என்பதைத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

**"கொள்ளித் தேள் கொட்டிக் குதிக்கின்ற**
**பேய்க் குரங்காய்க்**
**கள்ள மனம் துள்ளுவது என் கண்டாய்**
**பராபரமே".**

இந்த உலகத்திலே மதம் பிடித்த யானையை அடக்கி விடலாம். கரடி புலி இவற்றையும் கட்டலாம். சிங்கத்தின் முதுகில் ஏறிச் சவாரி செய்கின்ற அளவிற்கு அதை அடக்கி ஆளலாம். கொடிய பாம்புகளையும் பிடித்து ஆட்டலாம். நீரின் மேல் நடக்கலாம். நெருப்பின் மேல் இருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் முடியாது. இவற்றை எல்லாம் செய்ய வல்லவர்களாலும் முடியாது. சிந்தையை அடக்குவது சிரமமான காரியம் என்பதை "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" எனப் பாடுகின்றார். அண்ட சராசரங்களையெல்லாம் சரியான முறையில் இயக்குகின்ற இறைவா! எனக்கு உள்ளே இருந்து என்னை ஆட்டிப் படைக்கும் மனம் குவியும்படியான ஓராற்றலைத் தரமுடியாதா? எனத் தாயுமானவர் இறைவனை இரந்து வேண்டுகின்றார்.

**"பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம்**
**பண்ணுவது உனக்கு அருமையோ"**
என்பது அவரின் வேண்டுதல் ஆகும்.

## வழிபாட்டு நெறிகள்

வழிபாட்டுக்கு உருவம் தேவைப்படுவதால் தாயுமான அடிகள் தடத்த நிலை இறைவனையே அதிகமாகக் குறிப்பிடுகின்றார். இறைவனை உருவத் திருமேனியில் வழிபடுவதும், சிறந்த திருப்பதிகளுக்குச் செல்வதும் புனித தீர்த்தங்களில் நீராடுவதும் சிறந்த தவம் என்பதையும் அவ்வாறு வழிபடுகிறவர்களுக்கு ஞான குரு வந்து கிடைப்பார் எனவும் கூறுகின்றார்.

**"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால்**
**தொடங்கினர்க்கு ஓர்**
**வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்**
**பராபரமே"**
(பராபரம் 156)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சைவநாற்பாத நெறிகளும் ஒன்றின் முதிர்வில் மற்றையது ஏற்படும் என்கிறார். சரியை முதலிய மூன்றும் ஞானத்தை அடைவிக்கும் படிகளாகும். முத்தியாகிய பெரும் பயனுக்கு ஞானம் ஒன்றே வாயிலாகும் என்பது தாயுமானவரின் வாக்காகும்.

**"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்பு மலர் காய் கனி போல அன்றோ பராபரமே"**
(பராபரம் 157)

சரியைத் தொண்டுகளில் பாமாலையும் பூமாலையும் சாத்துதல் சிறந்தது. பூவும் நீரும் கொண்டு இறைவனை அர்ச்சிப்பதோடு பாமாலையால் வாழ்த்தி வணங்குவதும் தனது பணி என்பதைச்

**"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"**

என அப்பர் பெருமான் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாகிய ஆண்டாள் அம்மையார் கந்தம் பொழியும் பூமாலையும் சந்தம் பொழியும் பாமாலையும் தொடுத்துப் பரந்தாமனை பக்தியோடு வணங்கி வந்தாள். தாயுமான அடிகள் இறைவனை நோக்கி "உமக்குப் பூமாலை வேண்டுமா? அல்லது இனிய சொற்களால் ஆக்கப்பெற்ற பாமாலை வேண்டுமா? என்று வினாவுகிறார்.

**"நாவமுத்தும் செயல்மலரோ நாள் உதிக்கும் பொன்மலரோ**
**தேவை உனக்கு இன்னதென்று செப்பாய் பராபரமே"**
(பராபரக்கண்ணி -247)

அன்பினால் தான் ஆண்டவனைக் காணலாம் என்ற கருத்து தாயுமானவர் பாடல்களில் பல இடங்களில் மிளிர்வதைக் காணலாம். அன்பாகிய சிவத்தைக் காண்பதற்கு அன்பைத் தவிர வேறு வழி ஏது இருக்க முடியாது என்கிறார். ஆனந்தக் களிப்பு என்ற பதிகத்தில் அன்பினால் இறைவனை ஆட்படுத்தலாம் என்ற கருத்தை முன்வைக்கிறார்.

**அன்பருக்கு அன்பான மெய்யன் - ஐயன்**
**ஆனந்த மோனன் அருள் குருநாதன்**
**தன்பாதம் சென்னியில் வைத்தான் - என்னைத்**
**தான் அறிந்தேன் மனம் தான் இருந்தேனே**
(ஆனந்தக் களிப்பு -10)

பக்தி மார்க்கமே இறைவனை அடைவதற்குரிய ராஜபாதை. கலியுகத்தில் இறையருளைப் பெறுவதற்கு பக்தி மார்க்கமே சிறந்தது என நாரத மகரிஷியும் தனது பக்திச் சூத்திரத்தில் குறிப்பிடுகின்றார். என்னுடைய நெஞ்சம் தான் கோயில் என்று நான் உனக்கு வைக்கின்றேன். என்னுடைய எண்ணங்களை நறுமணங்களாக ஒப்படைக்கின்றேன். என்னுடைய அன்பையே மஞ்சள் நீராக அபிடேக நீராகச் செலுத்துகின்றேன். நான் சொல்லுவதெல்லாம் செபம். நான் சிந்திப்பது எல்லாம் தியானம். இறைவா! நான் என்னையே உன்னிடம் ஒப்படைக்கிறேன் என்கிறார்.

1. **நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே**
   **மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய் பராபரமே**
   (பராபரக்கண்ணி -151)
2. **செப்புவதெல்லாம் செபம் நான் சிந்திப்பதெல்லாம் நின்**
   **ஒப்பு இல் தியானமென ஓர்ந்தேன் பராபரமே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமானவர் போற்றிய அருளாளர்கள்

தவயோகி திருமூலநாயனார் அருளிய தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தை தாயுமான அடிகள் துறைபோகக் கற்றிருந்தார். உலகம் முழுவதும் சாந்தியும் சமாதானமும் நிலவ வேண்டும் என்பதே சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த அருளாளர்களின் பிரார்த்தனையாக உள்ளது.

**ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே**

**சூழ்க வையகமும் துயர் தீர்கவே**

என்பது ஞானக்குழந்தை சம்பந்தரின் வாக்காகும்.

**"யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"**

என்பது திருமூலரின் கூற்று. உலகில் வாழும் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற பரந்த சிந்தனையைத் தாயுமானவரும் கொண்டிருந்தார் என்பதைப் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

**"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**

**அல்லால் வேறொன்றறியேன் பராபரமே"**

(பராபரக்கண்ணி 221)

தாயுமான சுவாமிகள் தனக்கு முன் வாழ்ந்த அருளாளர்களின் சிறப்பினைத் தனது பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார்.

**"சக்கரவர்த்தி தவராச யோகி எனும்**

**மிக்க திருமூலர் அருள் மேவு நாள் எந்நாளோ"**

எனத் திருமூலரைப் போற்றித் துதிக்கின்றார்.

சந்தத் தமிழில் முருகனைப் பாடிய அருணகிரிநாதரை

**"ஐயா, அருணகிரி அப்பா உன்னைப் போல்**

**மெய் ஆக ஓர் சொல் விளம்பினர் யார்"**

எனப் போற்றுகின்றார்.

சித்தமலமற்று சிவனடிக்கே ஆளாகி வீடு பேற்றை நோக்கியிருந்த பட்டினத்தடிகளை

**"பார் அனைத்தும் பொய்யெனவே**

**பட்டினத்துப் பிள்ளையைப் போல்**

**ஆரும் துறக்கை அரிது அரிது"**

எனக் குறிப்பிடுகின்றார்.

தமிழ்நாடு கண்ட சான்றோர்களில் தாயுமானவர் ஒருவர். அவருடைய பாடல்கள் மிக உயர்ந்த பாடல்கள். இவருடைய பாடல்களில் ஆழ்ந்த பக்தி உணர்ச்சியையும், தெளிவான ஞானமார்க்கத்தையும் நாம் காணலாம். தாயுமானவரின் பாடல்கள் தமிழ் மொழிக்கும், தமிழகத்திற்கும் இவர் வழங்கிய பெரும் செல்வங்கள் ஆகும்.

## திருமகனே நீ வாழி!

அல்லல் அகற்றி
வல்வினைகள் போக்கி
முல்லை வன முறுவலிலே
இல்லை யெனாதீயும்
நல்லவர்கள் வாழ்த்திசைப்ப
மூதறிஞர் பாவிசைப்ப
நல்லைக்குமரன் மலர்
நனிசிறந்து வாழியவே

தொல்லைகள் போக்க
தோளனாய் வந்துதித்த
தில்லை நடராசன்
திருமகனே நீ வாழி

**மட்டுவில் ச.வாசுகி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வில் விருந்தோம்பல்

திருமதி விக்னேஸ்வரி பவநேசன்
முதுநிலை விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

விருந்தோம்பல் தமிழரின் தலைசிறந்த நாகரிகப் பண்பாகும். வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று இருக்கச் செய்து உணவளித்து அன்புபாராட்டுவது விருந்தோம்பல் ஆகும். "விருந்து" என்பதற்குப் பலபொருள் வழங்கப்படுகின்றது. "விருந்து" என்பது "புதுமை" எனவும் மிகச்சிறந்த, மிகவிலை உயர்ந்த சிறப்பு உணவு எனவும் பொருள் சுட்டப்படுகின்றது. விருந்தினர் என்போர் எமக்கு மிகநெருங்கிய உறவினர்கள் அல்லது மிகவும் வேண்டிய நண்பர்கள் என்றும் வழங்குவர். ஆனால் மிகவும் எளிய உணவாயினும் அன்போடு புதியவர் எவர் வரினும் அவர்களுக்கு வேண்டியன செய்து உணவிட்டுப் பேணுவது விருந்து எனப் பழந்தமிழகம் கொண்டிருந்தது.

விருந்தினரைப் பேணிக் காத்தல் "விருந்தோம்பல்" எனப் பெயர் பெறும். பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம் ஆகும். இல்லத்தினின்று அன்புடைய கணவரும் மனைவியும் செய்ய வேண்டுமாதலின் இல்லறத்தாரே விருந்தோம்புதற்கு சிறப்புடையோர் ஆவர். இவ்வகையிலே விருந்தோம்பாத வாழ்வு பயனற்ற வாழ்வாகும்.

"இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும் தமிழர் உண்டலும் இலர்" என்பது புறப்பாட்டு. எனவே விருந்தினர்க்கு உணவளிக்காது தான் மட்டும் உண்பது சாதலின் இன்னாதது ஆகும். நாள்தோறும் விரும்புவானாயின் அவன் வாழ்வு செழிக்கும். பொருள் செலவழியினும் ஊற்று நீர் போல மென்மேலும் பெருகும்.

வேதம் ஓதுதல், ஓமம் வளர்த்தல், விருந்தோம்பல், தர்ப்பணம் செய்தல், பலியிடுதல் ஆகிய ஐம்பெரும் வேள்வியினும் விருந்தோம்பல் ஆகிய வேள்வியின் பயன் மேன்மையுடையதாகும். இது இன்ன அளவினை உடையதன்று. விருந்துக்கு நன்மை ஞானஒழுக்கங்களால் உயர்வு. விருந்தினரைப் பார்த்திருப்பார் வானத்தவர்க்கு நல்விருந்தாவர். முகம்திரிந்து நோக்குவார் அனிச்சம் பூவினும் மிக வாடுவர். விருந்தோம்பாதவர்கள் மடவார்கள் விருந்தோம்பி வாழ்வானின் நிலம் வித்தின்றியும் விளையும், விருந்தோம்புவாரது பொருள் வளரும். அவர்களது வாழ்க்கை பாழ்படுதல் இல்லை என்கிறார் வள்ளுவர்.

"விருந்தே புதுமை" என்று தொல்காப்பியர் கூறுவர். எனவே புதியவர்களை வரவேற்று உணவிட்டு மகிழ்வதே விருந்து என்று கொள்ளப்பட்டமை புலனாகும். மேலும் விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்று என்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"**

(தொல் 3:150)

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இதில் விருந்து ஓம்புதலையும் சுற்றம் ஓம்புதலையும் தலையாய அறமாகக் கொண்டு தலைவி திகழ்ந்தாள் என அறிகின்றோம்.

தமிழர் பண்பாட்டைப் பற்றிக் கூற வந்த அறிஞர் பலரும் படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டு வந்த பழங்குடி என்றும், கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி என்றும் போற்றிப் புகழ்ந்தனர். தொகை நூல்களும் காப்பியங்களும் தமிழர் பண் பாட்டுக் களஞ்சியங்களாக விளங்கு கின்றன.

விருந்தோம்பல் தமிழர்களின் தனிப்பண்பாக இருந்தது. செல்வந்தர் மட்டுமன்றி எளிய மக்களும் கூட அவரை நாடி வருவோர்க்கு உண்டி, உடை முதலி யவை அளித்து மகிழ்ந்தனர். இவ்வகை யிலே தமிழர்களது விருந்தோம்பல் சிறப் பினை இலக்கியங்கள் கூறும் கருத்துக் களை அடிப்படையாகக் கொண்டு கூறு தலே இக்கட்டுரையின் பிரதான இலக்காகும்.

நடுஇரவில் விருந்தினர் வந்தால் கூட மகிழ்ச்சியுடன் வரவேற்று உண வளித்து மகிழும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு என்பதை நற்றிணை

**"அல்லில்லாயினும் விருந்து வருன் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்**
**குறுமகள்"** (142)

என்று கூறுகிறது. தன் வீட்டுக்குத் தொடர் ந்து விருந்தினர் வரவேண்டும் என்று ஓர் தலைவி நடுகல் வழிபாட்டின்போது வேண்டிக்கொண்டாள் என்ற செய்தியைப் புறநானூறு (306) கூறுகின்றது. மேலும், தொடர்ந்து வீட்டிற்கு விருந்தினர் வருவ தால் ஊடல் கொள்ள நேரம் இல்லை என்று நற்றிணைத் (280) தலைவி கூறுவாள். வரகும் தினையும் இரவலர்க்குக் கொடு த்து வேறு தானியம் இல்லாததால் பசி யொடு வந்தவர்களுக்கு விதைத் தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து உணவு செய்து விருந்து புரந்தாள் ஓர் தலைவி என்ற செய்தியை புறநானூறு (333) கூறு கின்றது.

பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படைநூல்கள். வழிச் செல்லும் கலைஞர்களையும், பாணர்களையும், புல வர்களையும் எவ்வெவ்வாறெல்லாம் தமி ழக மக்கள் வழியெல்லாம் விருந்து தந்து புரந்தனர் என்பதையும் எவ்வெவ்வாறு அரசர்கள் தங்கள் அரண்மனையில் பரி சில் அளித்ததோடு அவர்களைத் தம் விருந்தினராக ஏற்றுப் பேணினர் என்பதை யும் விரிவாகக் கூறுகின்றன. அரவுரி போன்ற மெல்லிய ஆடையை உடுக்கக் கொடுத்து சோறும் இனிய கள்ளும் மாமி சமும் அளித்துக் கரிகால்வளவன் கலை ஞர்களை விருந்து புரந்தான் எனப் பொரு நராற்றுப்படை கூறும். இன்னும் இது போன்ற செய்திகளை சிறுபாணாற்றுப் படையும் கூறுகின்றது. விருந்தோம்பும் பண் பாட்டில் தமிழ் மூவேந்தர்களும் கடை யெழுவள்ளல்களும் சிறந்தவர்களாக விளங்கியவர்கள். புறநானூற்றில் காணப் படும் கடையெழு வள்ளல்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவர்கள். அவர்களது கொடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடச்சிறப்பினை சிறுபாணாற்றுப்படை, சிறப்பு சிறுபாணாற்றுப் படை ஒன்றிலே பேசப்படுகின்றது. இவ்வள்ளல்களை நாடி வந்தவர்க்கெல்லாம் இலன் என்று கூறாமல் உள்ளங் குளிர விருந்தோம்பியமை கூறப்பட்டுள்ளது. "ஆய்" என்னும் வள்ளல் சிவபெருமானுக்கு நாகமொன்று தனக்கு நல்கிய நீலநிறப் பட்டாடையை இறைவன் பால் கொண்ட அன்பின் மிகுதியால் மனமகிழ்ந்து கொடுத்தான். "அதியமான்" என்ற வள்ளல் அரிதில் பெறமுடியாத நெல்லிக்கனியைத் தான் உண்டு நீண்டகாலம் வாழ விரும்பாமல் அதனை ஒளவையாருக்கு வழங்கி அவரை வாழ வைத்தமை அவனது விருந்தோம்பல் பண்பினையே எடுத்துக் காட்டுகின்றது.

நள்ளி என்னும் வள்ளல் தன்னிடத்துள்ள பொருள்களை மறைக்காமல் நண்பர்கள் மகிழ அவர்கள் இல்லறம் இனிமையாக நடைபெறக் கொடுத்து மகிழ்ந்தனன் என்று கூறப்படுகின்றது. அடுத்து "வல்வில்ஓரி" என்னும் வள்ளல் தன்பெயரை எப்பொருளிலும் வரையாமல் புகழ்த்துறவியாக வாழ்ந்தான் என்று கூறப்பட்டுள்ளது. எனவே இத்தகைய வள்ளல்களின் விருந்தோம்பல் பண்பு திருவள்ளுவர் கூறிய விருந்தோம்பல் குறட்பாக்களுக்கு இலக்கியமாக விளங்குகின்றன. இவர்களில் விருந்தோம்பல் பண்பில் இவர் சிறந்தவர் என்று எண்ண முடியாத அளவில் பாடிய புலவர்கள் புகழ்ந்துள்ளனர். மலைபடுகடாம் என்ற கூத்தராற்றுப் படையில் விருந்தோம்பல் பண்பாடு கூறப்படுகிறது. இப்பாட்டைப் பாடிய பெருங்கவுசிகனார் தொண்டை மண்டல பல்குன்றக் கோட்டத்து அரசனாகிய நன்னனைப் பற்றியும் அவனது விருந்தோம்பல் பண்பாட்டைப்பற்றியும் விளக்கம் தருகிறார். மலைச்சாரலில் குடிசைகள் பல உள்ளன. அங்குள்ள வேடர்கள் விருந்தினர்களுக்கு மிகுதியாக உணவு வழங்குவர். இன்சொற்களைப் பேசுவார்கள். மலைச்சாரலை அடுத்து முல்லை நிலத்து நங்கையர்கள் பசும் பாலைக் கறந்து பருகத் தருவார்கள். அவர்கள் பாலும் பாற்சோறும் தமக்கென்று ஆக்கி வைத்தவற்றை விருந்தினர்களுக்குக் கொடுத்து எஞ்சியவற்றை உண்பார்கள்.

ஆள்வினை இல்லார்க்கு அறம்பல செய்தலும் சுற்றம் தழுவுதலும் முற்றுப் பெறுதல் இல்லை எனக் கூறும் அகப்பாட்டு விருந்தோம்புதற்குப் பொருட்பயனே சிறப்புடையது எனக்கூறும். இதனை அகநானூறு,

**"அறந்தலைப் பிரியாது ஒழுகலும் சிறந்த**
**கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும்**
**வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கில்லை"**
(அகம்: 173)

எனக் குறிப்பிடுகிறது.

மேலும் விருந்தோம்புவார்க்குப் பொருள் இன்றியமையாதது என்பதை அகநானூறு,

**"தந்நயத்துறைவோர்த் தாங்கித் தந்நலந்**
**தன்னமர் கேளிரோடே முறக் கெழீ,**
**நகுதலாற்றார் நல்கூர்ந்தார்"**

எனக் கூறுகின்றது. இதன் மூலம் பொருள் இல்லார்க்குத் தம் மனைவி மக்களையும் சுற்றத்தார் விருந்தினர்களையும் தாங்கி மகிழ்ந்திருத்தல் இயலாது என்பது பெறப்படுகின்றது.

அகநானூற்றில் காணப்படும் நாற்பது முல்லைத் திணைப்பாடல்களிலும் விருந்தோம்பும் பண்பாட்டைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை நிலமக்கள் தாம் உண்ணும் உணவையே விருந்தினர்க்கு முகனமர்ந்து இனிது நோக்கி வழங்கி உபசரிப்பர். பாலுடை அடிசிலும் தினையும், சோளமும் எள்ளும், கொள்ளும், அவரையும், துவரையும் உழுந்தும் விளைவித்துச் சமைத்துப் பக்குவமாக ஆயர்குல மக்கள் விருந்தினர்க்கு வழங்குவர் என்று அகத்துறைப் பாடல்களால் அறியலாம்.

"விருந்தும் பெறுகு நன் போலும் திருந்திழை" (அகம் 360) என்னும் அகப் பாடல் தலைவியின் விருந்தோம்பும் பண்பாட்டை வலியுறுத்துகின்றது. தாம் வளம் பெற வாழ்தலும், தம் சுற்றத்தினரைப் பேணுதலும், ஏற்றவருக்கு உண்டியும் உடையும் கொடுத்து விருந்தோம்புதலும் ஆகிய இம்மூன்றையும் உயிரினும் சிறந்த அறமாகக் கொண்டு ஒழுகினர் என்பது மேல்வரும் செய்யுளால் அறிய முடிகின்றது.

**"கேள் கேகூன்றவும் கிளைஞர் ஆரவும்**
**கேள் அல் கேளிர் கெழீ இயினர் ஒழுகவும்**
**ஆள்வினைக் கெதிரிய ஊக்கமொடு புகல்**
**சிறந்து"**

எனவும்,

**"செறுவோர் செம்மல் வாட்டவும் சேர்ந்தோர்க்**
**குறுமிடத் துவக்கும் உதவி ஆண்மையும்"**

எனவும் வருவனவற்றில் அவை தெளிவாக விளங்கும்.

சாகாமற் காக்கும் அமிழ்தம் எனினும் தனியே உண்ணாது விருந்தினர்க்கும் கொடுத்துத் தாமும் உண்பர் நல்லோர் - அத்தகையோரால் தான் உலகம் வாழ்கிறது என்பதை

**"உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம்**
**இயைவ தாயினும் இனிதெனத் தமிழர்**
**உண்டலுமிலரே"**

(புறம் 182)

எனப் புறநானூறு கூறுகின்றது. விருந்தோம்பல் பண்பாடு தமிழர்களின் தலைப் பண்பாக இருந்தது. செல்வந்தர்கள் மட்டுமன்றி எழை மக்கள் கூட அவர்களை நாடி வருவார்களேயானால் உணவு, உடை முதலியவற்றை வழங்கித் தாமும் மகிழ்ந்து வந்தவரையும் மகிழ்வித்து இருக்கின்றனர்.

திருவள்ளுவர் திருக்குறளில் இல்லறவியலில் "விருந்தோம்பல்" என்று ஓர் அதிகாரத்தையே அமைத்துள்ளார். இல்லறம் புரிவதே விருந்தோம்பல் செய்யும் பொருட்டேயாகும் என்றும் நாள் தோறும் விருந்து புரப்பவன் வாழ்க்கையில் துன்பம் வராது என்றும் அவன் இல்லத்தில் பொருள் குறைவு ஏற்படாத தோடு செல்வம் நிறையும் என்றும் திருவள்ளுவர் கூறியுள்ளார். விருந்தாக வந்தவர் வெளியே சென்றிருக்க தான் மட்டும் உண்ணுதல் சாவா மருந்தாகிய அமிழ்தமே என்றாலும் விரும்பத்தக்கதன்று என்பதை வள்ளுவர்

**"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று"**

(குறள்: 82)

என்ற குறட்பாவினால் விளக்கியுள்ளார்.

விருந்து புரப்பதால் ஒருவர் ஏழையாகிக் கெடுவது இல்லை என்ற அறவுணர்வு தமிழகத்தில் இருந்தது என்பதை வள்ளுவம் உணர்த்துகின்றது. முக மலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும். சிறிது முகவேறுபாடு காட்டினாலும் விருந்தினர் மனம் புண்படும் என்பதை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து"**

(குறள் :90)

என்று வள்ளுவர் கூறியுள்ளார். மேலும் செல்லும் விருந்தினரையும் போற்றி வரும் விருந்தையும் எதிர்பார்த்திருப்பவன், வானத்துத் தேவர்க்கு நல்ல விருந்தினன் ஆவான் என்பதை வள்ளுவர்,

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு"**

என்று கூறியுள்ளார்.

ஆயர்குலப் பெண்ணாகிய மாதவியால் கோவலனும் கண்ணகியும் பேணப் பட்டதைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. தலைவனைப் பிரிந்து வாழுகின்ற குடும்பத் தலைவி விருந்து புரக்க முடியவில்லை என்பதை,

**"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"**

(சிலம்பு 16:71-73)

என்று கண்ணகி வருத்தத்துடன் கூறுவதால் அறிந்து கொள்ளலாம். "தொல்லோர் சிறப்பின்" என்று இளங்கோவடிகள் குறித்துள்ளதால் "விருந்து பேணல்" பழந்தமிழர் மரபு என்பது புலப்படும்.

**"விருந்து புறத்தரூ உம் பெருந்தண் வாழ்க்கை"**

(சிலம்பு 2:86)

எனவும்

**"விருந்தோடு புக்க பெருந்தோட் கணவரோ டுடனுறைவு மரீஇ ஒழுக்கமொடு புணர்ந்த வடமீன் கற்பின் மனையுறை மகளிர்"**

(சிலம்பு 5:227-229)

எனவும் இல்லறத்தோடும் மகளிரோடும் விருந்தோம்பல் இணைத்தே கருதப்பட்டது.

கோவலன் தன்னைவிட்டுப் பிரிந்ததால் விருந்து புரக்கமுடியவில்லையே என்று கண்ணகி வருந்தினாள். இதே போல் அசோகவனத்தில் சிறைவைக்கப் பட்டிருந்த சீதை தன்னைப் பிரிந்திருக்கும் இராமன் "விருந்து கண்ட போது என்ன செய்வானோ?" என்று வருந்தினாள். எனவே பிரிந்து வாழ்வது ஆணாயினும் பெண்ணாயினும் விருந்து பேணுவது இயலாது என்பதும் விருந்து புரக்கும் அன்புடைமை பெரிதும் பெண்களுக்குள்ள பொறுப் புணர்ச்சியாக இருந்தது என்பதும் புலனாகும்.

**"பெருந்தடங்கண் பிறை நுதலார்க்கு ஏலாம் பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே?"**

(கம்பராமாயணம் 1:2:36)

என்று பெண்கள் கல்வியும் செல்வமும் பெற்றதால் விருந்தும் ஈகையும் புரிந்ததாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

சேக்கிழாரின் பெரிய புராணத்தில் சிவனடியார்களை எவ்வாறு நாயன்மார்கள் வரவேற்றுப் பேணினர் என்பது விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. மத அடிப்படையில் இவ்வரவேற்பு அமையினும் இது தமிழர் தம் விருந்தோம்பும் மரபை நன்கு எமக்கு உணர்த்துகிறது. பெரியபுராணத்தில் சிவனடியார்கள் அத்தனைபேரும் செல்வக்காலத்திலும் வறுமைக்காலத்திலும் விருந்தினர்கள் இல்லாமல் உணவு உண்பது இல்லை என்ற வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இளையான்குடிமாற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயனார் தம் வீட்டுக்கு, மழை பெய்யும் இரவு நேரத்தில் வருகை தந்த சிவனடியார் ஒருவர்க்கு வீட்டில் உணவுக்குத் தானியம் ஏதும் இல்லாததால் அன்று பகல் பொழுதில் விதைத்த நெல்லை அரித்து வந்து பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் கூறப்படுகிறது. விதைத்தினையைக் குற்றி உணவிட்ட சங்ககால விருந்தோம்பும் மரபு தமிழகத்தில் இடைக்காலத்திலும் தொடர்ந்ததை இது காட்டுகிறது.

பெண்ணாகடம் மூதூர் என்ற ஊரிலே வணிகர்குலத் தோன்றலாகிய கலிக்கம்பர் என்பார் வரும் விருந்தினர்க்குச் சோறும், அவர்கள் விரும்பும் கறி வகைகளும் வழங்குவார். அவர்கள் உண்ண வரும்போது அவர்களுடைய பாதங்களை நீரால் கழுவி உள்ளே அழைத்துச் செல்வார். அவருடைய மனைவியார் இன்னடிசில் சோறும் கறியமுதும் சமைத்து வைத்துச் செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறார். மனைவியார் விருந்தினர் கால்களில் தண்ணீர் ஊற்ற கணவன் கால் கழுவுதல் கண் கொள்ளாக்காட்சியாகும். வந்த விருந்தினர் மாறான கருத்துடையவராய் இருக்கிறார் என்று எண்ணித் தண்ணீர் வார்க்காத அந்தக் கையை வெட்டி விட்டு மனைவியை விடுத்து விருந்தினர்க்குத் தூய சிந்தையுடன் அமுது செய்வித்த விருந்தோம்பும் பண்பாடு செயற்கரிய செய்த பெரிய பண்பாடாகும். இவ்வாறே அடியார் பலரும் விருந்தினர்கள் என்ன வேண்டும் என்று விழைகின்றார்களோ அந்த உணவினை, உடையினை வழங்கினர் என்று சேக்கிழார் தெளிவாக விளக்கிச் செல்கிறார்.

அப்பூதியடிகள் வரலாற்றில் நாவுக்கரசருக்கு விருந்து உபசரிக்கும் போது மாறாத அன்புடன் அவரை உள்ளெழுந் தருளும்படி செய்து அவருடைய கால்களை மலர்நீரால் கழுவித் தங்களுடைய உடம்பிலே தெளித்துக் கொண்டார்கள் என்று சேக்கிழார் கூறுகிறார். மேலும் அறுசுவைகளாலான அமுதாக்கி வாழையிலையிலே இட்டு உணவு பரிமாறினர் என்று குறிப்பிடுகிறார். வாழையிலையைத் தரையில் போடுமுன் பூமியை கோமயநீர் கொண்டு தெளித்து கூட்டிக் கோலமிட்டு, விளக்கேற்றி வாழைக் குருத்தினை விரித்து நீர் விட்டுத் துடைத்து அறுத்த அடிப்பாகம் வலப்புறமாக இருக்குமாறு வைத்தார்கள் என்று சேக்கிழார் வாழை இலையை வைக்கும் முறையை விளக்குகிறார்.

**"புகழ்ந்த கோமயத்து நீரால் பூமியைப்பொலிய நீவித்**
**திகழ்ந்த வான்சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம் ஏற்றி**
**நிகழ்ந்த அக்கதலி நீண்டகுருத்தினை விரித்து நீரால்**
**மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம் பெறமரபின் வைத்தார்".**

இவ்வாறு நுனி இடப்பக்கம் வைத்து இலை போடுவது தமிழர்களின் மரபாக இருந்து வருகிறது. இலையின் மேற்பகுதியில் தொடு கறிகளை வைத்து அடிப்பகுதியில் சோறு இட்டுப் பிசைந்து உண்பதற்கு ஏற்றவாறு இலை அமைப்பு அமைந்திருக்கின்றது. இதனைச் சேக்கிழார் ஈர்வாய் வலம் பெற மரபில் வைத்தார் என்று குறிப்பிடுகின்றார்.

போர்க்களத்தே முகமலர்ச்சியுடன் இறந்து கிடக்கும் வீரர் உடலைப் பருந்தும் கழுகும் கொத்தித் தின்பதைக் கூறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கலிங்கத்துப்பரணி ஆசிரியர் செயங் கொண்டார் விருந்தினர்க்கு உணவிடுவாரின் முக மலர்ச்சியை ஒப்பிட்டுள்ளார்.

**"விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண**
**மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்**
**பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்**
**பதுமமுகம் மலர்வாரைப் பார்மின் பார்மின்"**

(கலிங்கத்துப்பரணி 477)

காலப்போக்கில் நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டதால் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவளிப்பது குறையத் தொடங்கியது. எனவேதான் புதியதாக வருவோர் இரவில் வெளியில் தங்குவதற்கு வீட்டுக்கு முன்புறம் திண்ணையும் திண்ணையில் தலைக்குத்திண்டும் அமைத்தனர். விருந்து புரப்பது குறைந்த காரணத்தால்தான் சத்திரங்கள் பெருகின. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் வழிச்செல்வோர் தங்கு மனைகளாக நிறைய சத்திரங்கள் கட்டப்பட்டன. இருப்பினும் மக்களது விருந்து பேணும் மனப்பான்மை மிகவும் குறைந்து போய்விட்டதாகக் கூற முடியாது. எனினும் புதியவராகக் கண்ணில்பட்ட அனைவரையும் விருந்தினராக ஏற்பது குறைந்தது. நம்பிக்கைக்கு உரியவராகத் தோன்றுபவர்களையும் உண்மையிலேயே வழிப்போக்கர்களாகத் தெரிபவர்களையும் துறவிகளையும் அதிகாரிகளையும் ஓரளவுதெரிந்தவர்களையும் விருந்தினர்களாக ஏற்றனர். இம்முறை படிப்படியாக உற்றார், உறவினர், நண்பர் மட்டுமே விருந்தினர் என்று கொள்வதாகவும் பிறரை புதியவரை அதிகம் ஏற்காததாகவும் மாறியது.

விருந்தோம்பலின் இன்றைய நிலை பற்றி நாம் நோக்கினால், வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதும் புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதும் இன்று இல்லை. மிகநெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் மட்டுமே விருந்தோம்பல் செய்யப்படுகிறார்கள். ஆயினும் இது சற்று விரிந்து புதிதாக அறிமுகம் ஆனவர்களையும் நல்ல நட்புக்கு உரியவர்களாகத் தோன்றுபவர்களையும் உள்ளடக்கிக் கொள்கிறது. சிற்றூர்ப்புறங்களில் திருவிழாக்காலங்களில் ஊருக்குப் புதியவராகத் தோன்றுபவர்களை அழைத்து அன்போடு விருந்தோம்பும் பண்பு இன்றும் நிலவுகின்றது. வீட்டில் இடம் பெறும் விழாக்களில் குறிப்பாக, புதுமனைப் புகுவிழா, திருமணவிழா ஆகியவற்றின் போது விருந்தளிப்பது ஆடம்பரமாக மாறி வருகின்றது. மேலும் கல்விக்கூடம், அலுவலகம் மற்றும் தொழில் நிறுவனங்களில் தமக்குள்ளேயே ஆடம்பர உணவை "விருந்து" என்ற பெயரில் உண்டு மகிழ்வதும் அதிகரித்து வருகின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. இறையரசன். பா., முனைவர், தமிழர் நாகரிக வரலாறு, 1993
2. இராசமாணிக்கனார். மா., தமிழர் நாகரிகமும் பண்பாடும்
3. இராமநாதன் செட்டியார், லெ.ப.கரு., சங்ககாலத் தமிழர் வாழ்வு
4. காந்தி. கே, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்
5. உலகத் தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம் பகுதி 1, வள்ளலார் அன்பு நிலையம், மலேசியா, 1997
6. திருக்குறள் புதிய உரை, புலியூர்க்கேசிகன், 1976
7. ஞானசம்பந்தன் அ.ச., பெரியபுராணம் ஓர் ஆய்வு, சென்னை, 1999
8. தர்மலிங்கம். மு., இந்துமதமும் அதன் வழிமுறைகளும், 1998
9. அறவாணன். ப.க., தமிழர் சமுதாய வரலாறு, 1995
10. சுப்பிரமணியன்.நா., கௌசல்யா.சு., இந்திய சிந்தனை மரபு, 1996
11. கோபாலகிருஷ்ண ஐயர்., ப., இந்துப் பண்பாட்டு மரபுகள், 1992
12. குமாரசாமி சோமசுந்தரம், மனித விழுமியங்கள், ராஜி வெளியீடு, கொழும்பு, 1995
13. நான்காவது அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டு கருத்தரங்கு மலர், மதுரை 2008.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளில் அறிவியல் சிந்தனை

**செல்வி அம்பாலிகா தம்பாபிள்ளை**
**உதவி விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

உலகப்பொதுமறை எனப் போற்றப்படுவது திருவள்ளுவர் தந்த திருக்குறள் ஆகும். அதில் இல்லாதது எதுவுமே இல்லை. திருக்குறள் தோன்றிய காலம் முதல் இன்றுவரையும் அதை எடுத்துப் பேசாத இலக்கியமோ, வாழ்வியலோ இல்லை என்னும் அளவிற்கு வான்புகழ் கொண்ட நூலாக வள்ளுவம் திகழ்கின்றது. இதனையே பாரதியாரும்,

**"வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

என அழகாகக் கூறுகின்றார்.

"கடைச்சங்கத்தின் கடைக்காலத்திற் சங்கப்புலவர் இறுமாப்பை அடக்கின அவதாரபுருடர் வள்ளுவர்" எனப் பெரியோர்கள் குறிப்பிடுவர். ஆதிக்கும், பகவானுக்கும் மகனாகப்பிறந்து, யானை மேல் முரசறைந்து அரசன் ஆணை தெரிவிக்கும் வள்ளுவர் குலத்தில் வளர்க்கப் பெற்று சிறப்படைந்தவராதலால் வள்ளுவர் எனப்பெயர் பெற்றார். திரு என்பது நாயனாரது உயர்வைக் குறிப்பது.

அறிவியல் என்பது அறிவு என்ற அடிச்சொல்லுடன் இயல் என்ற பதம் இணைந்து உருவாக்கம் பெற்றது. முதலில் அறிவு என்றால் என்ன என்பதை மதுரைத் தமிழ்ப்பேரகராதி "அறிதல், உணர்வு, கல்வி, புத்தி, போதனை, ஞானம், பதி எனப் பலபொருள் கூறுவதை நோக்கலாம். ஒருவன் உணர்வு இல்லாமல் இருக்கின்ற வேளை அவருக்கு "அறிவு இல்லை" எனப்பேசுவதைக் காணலாம். அதேபோல் ஒருவருக்கு கல்வி இல்லாவிட்டால் அவரிடம் "அறிவு இல்லை" எனக் கூறக்கேட்டிருக்கின்றோம். அறிவு என்ற சொல் பல பொருளில் வழங்கப்படுவதைக் காண முடிகின்றது. இயல் என்பதற்கு மதுரைத் தமிழ்ப்பேரகராதி ஆகமம், இயற்கை, இசை, இயற்றமிழ், இலக்கணம், ஒழுங்கு, சாயல், நடை, பகுதி, தன்மை, ஒழுக்கம் எனப் பொருள் கூறுவதைக் காணலாம். எனவே இயல் என்பது பல பொருளில் வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

அறிவு, இயல் என்னும் சொற்கள் சேர்ந்து அறிவியல் என்னும் கலைச்சொல் உருவாகியது. இங்கு அறிவியல் என்பது இயற்கையில் உள்ள பொருட்களைப்பற்றிய உண்மைகளைக் கண்டறிதல் பற்றிய அறிவாகவே தொடக்கத்தில் கருதப்பட்டது. பெருஞ்சொல்லகராதி அறிவியல் என்பதற்கு பகுத்தறிவினாலும் சோதனையினாலும், இயற்கையில் அடங்கியுள்ள உண்மைகளைக் காணும் கல்வி விஞ்ஞானம்" என விளக்கம் தருகின்றது. ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் பயிலப்படும் Science என்பதற்கான தமிழ்ச்சொல்லாக அறியவியல் என்பது வழங்கப்பட்டது. இங்கு அறிவியல் என்பது விஞ்ஞானத்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தைக்குறிப்பதாக அமைந்துள்ளது. விஞ்ஞானம் என்றால் என்ன என்பதை நோக்கின், "வி" என்ற அடிச்சொல்லுடன் "ஞானம்" என்ற சொல் சேர்ந்து உருவாக்கப்பட்டதே விஞ்ஞானம் ஆகும்.

திருவள்ளுவரது திருக்குறள் வாழ்வியலை, அறவியலை, பொருளியலை, இல்லறவியலை மட்டுமன்றி அறிவியல் சார் அம்சங்கள் அனைத்தினையுமே 133 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களூடாக விளக்கிச் சொல்லியுள்ளார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளில் இன்றைய சமுதாயத்திற்குத் தேவையான அறிவியல் சிந்தனைகளை வள்ளுவர் கையாண்டுள்ளார். இதனையே ஒளவையாரும்,

**"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தரித்த குறள்"**
என்று கூறுகிறார்.

திருவள்ளுவர் தம் குறட்பாக்களில் பல்வேறு அறிவியல் கருத்துக்களை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார். வேளாண்மையியல், மருத்துவவியல், கணிதவியல், உளவியல், சுற்றுச் சூழலியல், வானியல் போன்ற பல துறைகளுக்குமுரிய அறிவியல் சிந்தனைகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ள விதத்தை இக்கட்டுரை ஆராய்கின்றது.

வேளாண்மையியல் பற்றி நோக்கின் இன்று நாடெங்கும் சிறப்புற்று வளர்ந்து வரும் ஒரு அறிவியல் கலை இக்கலையாகும். மண்ணியல், உழவியல், நீரியல், தாவரவியல், பயிர்நோயியல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. எத்தொழிலுக்கும் உழவுத்தொழிலே அடிப்படையானது. அதனாலேயே உழவுத் தொழிலுக்கு தனி ஒரு அதிகாரம் வகுத்துள்ளார் வள்ளுவர்.

**"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது**
**ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து"** (1032)
**"உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார்**
**மற்று எல்லாம் தொழுது உண்டு பின்**
**செல்பவர்"** (1033)
**"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம், அதனால்**
**உழந்தும் உழவேதலை"** (1031)
எனச் சிறப்பிக்கின்றார்.

சோம்பி இருப்பாரைக்கண்டு "நிலமென்னும் நல்லாள் நகும்" (1040), "நிலம் புலம்புலந்து இல்லாளின் ஊடிவிடும் (1039) என்று நாள்தோறும் நிலத்திற்குச் செல்லாமல் இருப்பவன் நிலையை நிலமகள் சிரிப்பதாகவும், ஊடுவதாகவும் காட்டுகின்றார்.

அடுத்து மருத்துவவியல் பற்றி நோக்கின் பண்டைத் தமிழகத்தில் மருத்துவத்துறை நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் இருந்தது. இதற்குச் சான்றாக சித்தர்களையும், அவர்கள் கண்டறிந்த சித்த மருத்துவத்தையும் கூறலாம். திருக்குறளில் "மருந்து" என்று தனி அதிகாரம் மருத்துவத்தைப்பற்றி விளக்குவதாக அமைகின்றது. வள்ளுவர் மருத்துவ முறையை நான்கு வகையாகப் பிரித்துள்ளார்.

**"உற்றவன் தீர்ப்பான் மருந்து**
**உழைச்செல்வான் என்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து"** (950)

நோயுற்றவன், நோய்தீர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவன், மருந்து, மருந்தை அருகிருந்து கொடுப்பவன் என்று மருத்துவ முறையை பாகுபடுத்துகின்றார்.

ஒரு மருத்துவன் எப்படி இருக்க வேண்டும் என்பதை திருவள்ளுவர் குறிப்பிடுமிடத்து

**"உற்றான் அளவும் பிணி அளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்"** (949)

மருத்துவ நூலைக்கற்றவன், நோயுற்றவனுடைய வயது முதலியவற்றையும், நோயின் அளவையும், காலத்தையும் ஆராய்ந்து செய்யவேண்டும் என்று மருத்துவர்களுக்குக் கூறுவதாக இக்குறள் அமைகின்றது.

நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதை தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்குப் பொருந்தும்படியாகச் செய்ய வேண்டும் என்பதனை

**"நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்"** (948)
என்றும் கூறுகின்றார்.

மொழியியல் அனைத்துக்கும் எழுத்து அடிப்படையாதல் போல் அறிவியல் அனைத்திற்கும் கணிதம் அடிப்படையாக அமைகின்றது.

**"எண் என்ப ஏனை எழுத்து என்ப**
**இவ்விரண்டும்**
**கண் என்ப வாழும் உயிர்க்கு"** (392)

இங்கு எண் என்று சொல்லப்படுவது கணிதத்தையும், எழுத்து என்று சொல்லப்படுவது இலக்கியத்தையும் குறிப்பிடுகின்றது. "கணிதம் அறிவியல் அனைத்துக்கும் தாய்" எனக்கூறப்படுகிறது. கணிதம் இல்லையேல் அணு உலகம் இல்லை. பூச்சியம் என்ற எண் இந்தியர்க்கே உரியது. அக்கணக்கை வள்ளுவர் கூறும் போது பின்வருமாறு கூறுகிறார்.

**"கண்ணொடு கண்ணினை நோக்கு**
**ஒக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல"**
(1100)

ஒருவனின் உள்ளக்கருத்தினை அறிய அவனுடைய கண்களையே அளவுகோலாகக் கொள்கின்றார் திருவள்ளுவர்.

**"நுண்ணியம் என்பார் அளக்கும் கோல்**
**காணுங்கால்**
**கண் அல்லது இல்லைபிற"** (710)

நிறுத்தலளவை பற்றிக் குறிப்பிடும் இடத்து தராசின் முள்முனை ஒரு சிறிதும் சாய்வின்றி நேராக அமையும் என்ற கணித இயல்பை

**"சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல்..."** (118)

தனியே பூச்சியம் என்பதற்குப் பொருளில்லை. பிற எண்களுக்குப் பொருளுண்டு. பொருளில்லாத பூச்சியம் உடன் பொருளுள்ள ஓர் எண் சேரும் போது பூச்சியம் மதிப்பைப் பெறும் என்பதை பின்வருமாறு காட்டுகிறார்.

**"பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருள் அல்லது இல்லை பொருள்"** (751)

உளவியல் பற்றியும் மிக அழகாகக் கூறுகிறார் வள்ளுவர். அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் மனநலம் பற்றிக் குறிப்பிடும் இடத்து

“**மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம், இனநலம் எல்லாப்புகழும் தரும்**”(457)

இதனை பாவ்லோவ் பிலட்டனேவ் போன்ற உருசிய உளவியலாளர்களின் கருத்தினைப் பிரதிபலிக்கும் குறட்பாக் களும் உள. அவர்கள் சொற்களின் உள வியல் வலிமை பற்றியும் அவைகள் எங் ஙனம் உளச்சிகிச்சைகளில் விளங்குகின் றன என்பதனை Word as a Physiological and Therapeutic Factor' எனும் நூலில் விளக்குகின்றனர். இக்கருத்தினை பொய்யா மொழிப்புலவர்.

“**தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்டவடு**” (129)

“**அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து இன்சொலன் ஆகப்பெறின்**” (92)
என்கின்றார். இன்றைய உளவியலாளர் களுக்குத் திருக்குறள் சிறந்த வழிகாட்டி யாக அமைகிறது.

அடுத்து சுற்றுச்சூழலியல் பற்றி வள்ளுவர் கூறும் போது ஆறு, கிணறு, குளங்களுக்குக் கரைபோட்டு நீரை பாது காக்க வேண்டும். அவ்வாறு கரைபோடா விடின் அந்நீர் பயன்படாமல் போகும் என்பதை “ஊருணி நீர் நிறைந் தற்றே,” (215) எனவும் “குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று” (523) எனவும் கூறியுள்ளார்.

அடுத்து வானியல் பற்றி நோக்கி னால் சந்திரன், விண்மீன்கள், சந்திரகிர கணம், வளர்பிறை, தேய்பிறை ஆகிய செய்திகளை வள்ளுவர் மிக நுட்பமாகக் கூறியுள்ளார். சந்திர கிரகணம் உண்டா வதைக் கூறும் போதும், திங்களானது தன்னைத்தானே சுழன்றபடி பூமியையும் ஒரே காலகதியில் சுழன்று வருகின்றது. இதன் சுழற்சிக்காலமும், பூமிசுற்றும் காலமும் 27 நாட்கள் என்று ஆராய்ந்து வைத்திருக்கிறோம். இதனாலேயே சந்தி ரனின் ஒரு முகத்தை மட்டுமே நாம் பூமியில் இருந்தவாறு கவனிக்கமுடியும். ஆயினும் அதன் சுற்றுக்காலத்தில் சூரிய ஒளிபட்டு பிரதிபலிக்கும் நிலாப்பகுதியே வளர்பிறையாகவும், தேய்பிறையாகவும் நமக்குத்தோன்றும். ஒவ்வொன்றும் சுமார் 15 நாட்கள் நீடிக்கும். இவ்வுண்மையை வள்ளுவர் அறிவுடையார் நட்பினை வளர் பிறைக்கும், பேதையர் நட்பினை தேய் பிறைக்கும் ஆக உவமித்துள்ளார்.

“**நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்நீர பேதையார் நட்பு**” (782)

இதைவிட “திங்களை பாம்பு கொண்டற்று” (1146), மதியும் மடந்தை முகனும் அறியா பதியின் கலங்கிய மீன்” (1116) எனவும் சந்திரன், விண்மீன் பற்றிய செய்திகளை விளக்கியுள்ளார்.

இவ்வகையில் பொய்யாமொழிப் புலவனின் திருக்குறள் அறிவிற்கு விருந் தாக அமைந்து, அனைத்து அறிவியல் கருத்துக்களையும் தன்னகத்தே கொண்ட ஓர் அறிவியல் களஞ்சியமாகத் திகழ்கின் றது. இதனையே “உலகத்திலுள்ள இலக் கிய நூல்களுள்ளே திருக்குறளைப் போல் சிறந்துயர்ந்த அறிவினைப்புகட்டும் நூல் வேறில்லை” என்று ஜேர்மனிய பேரறிஞ ரான அல்பேட் சுவைச்சர் கூறுவது கவ னிக்கத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி இலக்கியங்களில் தூது

**திருமதி எஸ். ஜெகநாதன்**
**சமஸ்கிருதத்துறைத் தலைவர்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

வடமொழியிலே காளிதாச மஹா கவியின் மேகசந்தேசம் மிகச் சிறந்த தென்று போற்றப்படுகின்ற தூது காவியம். அது தவிர கோகில சந்தேசம், ஹம்ஸ சந்தேசம், மயூரசந்தேசம் என்று பல தூது காவியங்கள் சிறந்த சிறு காவியங்களாகப் போற்றப்படுகின்றன. அது போலவே தமிழிலும் ஏராளமான தூது காவியங்கள் உண்டு. தமிழ்விடுதூது, விறலிவிடு தூது, அன்பு விடுதூது போன்றவைகளை இலக்கியச் செல்வங்களாகப் போற்றுகின்றனர். ஆனாலும் ஆழ்வார்களும், நாயன்மார்களும் இயற்றிய தூதுகள் தனிநூல்களாய் இராமல் பல்வேறு பகுதிகளோடு இணைந்து சிந்தைக்கும் செவிக்கும் இனிக்கும் வண்ணம் அமைந்து எல்லோருடைய இதயங்களையும் கவர்ந்து விடுகின்றன.

இவர்கள் வண்டு, நாரை, குருகு, குயில், அன்னம், அன்றில், பல்லி முதலிய எல்லாவற்றையும் உயர்திணை, அஃறிணை என்ற பேதமின்றித் தாம் காண்கின்றவைகளை எல்லாம் தூது விடுகின்றனர். தூதுவிடும் மனநிலை, ஏங்கித் தவிக்கும் மனநிலை. இறைவனது திருவருள் இன்னமும் கிட்டவில்லையே என்ற ஏக்கத்தால் மனம் தடுமாறுகின்றது. தெய்வப்பித்து பிடித்து விடுகிறது.

**"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்"**

என்று ஒரு தாய் தன் மகளின் மனோ நிலையைக் கூறுவதாகப் பாடுகிறார் திருவாரூர் திருத்தாண்டகத்தில். இப்படி தெய்வப் பித்துப் பிடித்த மனநிலையில் தான் இருந்தனர் தூதுவிடும் அன்பர்கள். ஞான சம்பந்தப் பெருமான் பச்சிளங் குழவியாய் ஞானப்பாலுண்டு, மழலை முற்றா மென்சொல்லால் முதன்முதலாகப் பாடிய பாடலிலே "உள்ளங்கவர் கள்வன்" என்றே பாடியுள்ளார். இவரது தூது உணர்ச்சி மிகுந்ததொரு கவிதைத் தொகுதி என்றே சொல்லலாம். இவர் தோணிபுரத்து உறையும் சிவனுக்கு அரி, அரசு, கபோதம், நாரை, அன்றில், அன்னம், குருகு, கோழி, குயில், பூவை, கிளி இவைகளை ஒன்றன் பின்னர் ஒன்றாகத் தூது விடுகிறார். "சிறையாரும் மடக் கிளியே" என்ற பாடல் பிரசித்தமானது. "பைங்கோட்டு மலர்ப் புன்னை பறவை காள்" என்று அன்பு ததும்ப அழைக்கிறார். பின்பு,

**"சிட்டன் சீர் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய**
**வட்டவார் சடையார்க்கு என் வருத்தம் சென்று உரையாயோ!"**

என்று சொன்னவர் மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"குறை கொண்டார் இடர் தீர்த்தல் கடனன்றோ"**

தம் அடியார்களது இடர் தீர்ப்பது அவனது கடமையல்லவா? கடமையைச் செய்யவும் வற்புறுத்திக் கேட்கவும் தூதுவிடவும் வேண்டுமா? என்று குற்றம் சாட்டிப் பேசுகிறார். மேலும் "நீலகண்டன் என்ற தனது ஒப்புயரற்ற தனது தியாகத்தாலேயே பெயர் பெற்ற அந்த இளம்பிறையாளனுக்கு நீ என் துயரைச் சொல்ல வேண்டும்."

"கறைக் கண்டன் பிறைச் சென்னி கணபதீச்சரம் மேய" என் அன்பனுக்கு எடுத்துரைக்க மாட்டாயோ? என்று கெஞ்சியும், கொஞ்சியும் பேசுகிறார். அன்னங்களையும், அன்றில்களையும் வாழ்த்தி வணங்குகிறார். அந்தத் தூதுகளை பிறவிப் பிணிக்கோர் மருந்தென அறிஞர் கருதுகின்றனர்.

மாணிக்கவாசகப் பெருமான் குயிலைத் தூது விடுகிறார். அழகுக்கு அழகு செய்வது போல் அமைந்து இருக்கிறது அந்தப் பூஞ்சோலை. பூமகளின் புன்னகை போல் மலர்ந்து நம் கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவருகின்றது. முல்லை, கொன்றை, குன்னை முதலிய நெடுமரங்கள், இவைகள் பூத்துக் குலுங்கி இயற்கை அரசியை வழிபடுகின்றன. மாமரத்தின் கிளையில் அமர்ந்து இசை அமுதைப் பொழிகிறது ஒரு குயில். யார் அந்தக் குயில் என்று திகைத்துப் போகிறோம். திருவாசகம் எனும் தேனைப் பொழிந்த மணிவாசகர் தான் அந்தக் குயிலைத் தூது விடுகிறார்.

**"கீதம் இனிய குயிலே அந்தமிலான் வரக்கூவாய்."**
**பெருந்துறை மேய தென்பாண்டி நாடனைக் கூவாய்**
**தாவி வரும் பரிப்பாகன் தாழ்சடையோன்வரக் கூவாய்"**

என்று இறைவன் நரியைப் பரியாக்கிய அற்புதத்தையும், புண் சுமந்த பொன் மேனியையும், குருந்த மரத்தில் வந்து பெருமானால் ஆட்கொண்ட தன்மையையும் நினைத்து நினைத்து உருகி குயிலை நோக்கி

"................................

**முந்தும், நடுவும், முடியும் ஆகிய மூவர் அறியா சிந்துரச் சேவடியானைச் சேவகனை வரக் கூவாய்"**

என்கிறார். இதேபோல் தில்லையம்பலத்தில் இறைவன் திருவடிக்கே சென்று தன் மனநிலையைச் சொல்ல வேண்டுமென்று தும்பிகளுக்கெல்லாம் அரசனாக விளங்கும் கோத்தும்பியைத் தூது விடும் பாடல்களின் இனிமைக்கு உவமை தேடுதல் அரிது.

நாலாயிரத்துள் ஆண்டாளது நாச்சியார் திருமொழியில் தூது விடும் பாடல்கள் மிகமிக அருமையானவை. தானே ஆயர் சிறுமியாகப் பாவை நோன்பு செய்கிறாள். பின்பு அனங்கவேனை வணங்கிப் பாடுகிறாள். கூடல் இழைக்கின்றாள். இறைவன் வருவான் இன்னருள் தருவான் என்று நினைத்து இதயம் மலர்கிறது. ஆனால் மாலையும் வந்தது; மாயன் வரவில்லை. தளர் நடை நடந்து சோலைக்குச் செல்கின்றாள். ஆனால் அங்கே அவள் கண்ட காட்சி அவளை மேலும் வருத்துகிறது. கார்கோடற் பூக்களும் மேல் தோன்றிப் பூக்களும் அவளுக்கு இறைவன் தன் மீது செலுத்தும் அம்புகளாய்த் தோன்றுகின்றன. மேலும் சோலைக்குள்ளே செல்லுகிறாள். ஆங்கே மரக்கிளையில் வீற்றிருக்கும் குயில் பாடுகின்றது. அதனை நோக்கிக் கூவுகின்றாள்.

"ஓ குயிலே! எலும்புகள் உருகுகின்றன. வேல் விழியாள் என்று பாராட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப்பட்ட நிலையிலிருந்து மாறி இமை மூடாமல் உறக்கத்தை இழந்து பல நாட்கள் கழிந்து விட்டன. துன்பக் கடலில் மூழ்கித் தவிக்கிறேன். வைகுந்தன் எனும் உயிர்களுக்கு உற்ற துணையானவன், பிறவிப் பெருங்கடலுக்கு தோணியானவன், அவனது தோணியைப் பெறாமல் தவிக்கிறேன். கார்வண்ணன், பொன்னிறமேனியன், கருட உருவம் பொறித்த கொடியை உடையவன். அந்தப் புண்ணியவானை இங்கே எழுந்தருளச் செய்ய வேண்டும். அதற்காகக் கூவுவாய்" என்று குயிலை வேண்டுகிறாள்.

**என்புருகி இனவேல் நெடுங்கண்கள்**
**இமை பொருந்தா பல நாளும்**
**துன்பக் கடலுக்கு வைகுந்தன் என்பதோர்**
**தோணிபெறாது உழல்கின்றேன்**
**அன்புடையாரைப் பிரிவுறு நோயது**
**நீயும் அறிதி குயிலே!**
**பொன் புரை மேனிக் கருளக் கொடியுடைப்**
**புண்ணியனை வரக்கூவாய்**

தனியே இருக்கும் குயிலுக்குத் தன் காதலின் அருமை தெரியாமல் போய்விடும் என்ற உணர்வு மேலெழுந்தவளாய்,

"**உன் காதலியோடு உயிர் வாழ் குயிலே– என்**
**கரு மாணிக்கம் வரக்கூவாய்**".

எனக்கு இரங்கி ஒருகால் கூப்பிடமாட்டாயோ? உனக்கு மிகவும் புண்ணியம் உண்டு என்று குயிலிடம் பேசும் போது அவளுக்கு வேறு இரண்டு பறவைகள் நினைவுக்கு வருகின்றன. ஒன்று அன்னம், மற்றொன்று கிளி. தன்னுடைய பிறந்த ஊர் திருவல்லிபுத்தூரையும் அங்கே எழுந்தருளியிருக்கும் மாலவனையும் பற்றி பேச விரும்புகிறாள். அன்னப் பறவைகள் மெல்ல மெல்ல நடக்கும். அவை அதிகளவில் பயமின்றி விளையாடித் திரிகின்றன. கோதை தன் நாயகனைக் காணாமல் துடிக்கின்றாள். ஆதலால் உறக்கம் இன்றித் தவிக்கின்றாள். அவள் ஒரு கிளி வளர்க்கின்றாள். அதற்கு கரும்புச் சுவை மிகுந்த உணவும், பாலும், சோறும் தருகின்றாள். அந்த அழகான கிளியை குயிலிடம் விட்டு விளையாடி மகிழச்செய்யலாம். அப்போதாவது குயில் மனம் இரங்கி அவளுடைய வேண்டுகோளை நிறைவேற்றாதா? என்பது அவளுடைய ஆசை.

"**இன்னடி சிலோடு பாலமுது ஊட்டி**
**எடுத்து என் கோலக்கிளியை**
**உன்னோடு தோழமை கொள்ளுவன் குயிலே**
**உலகளந்தான் வரக் கூவாய்**".

பின்னர் குயிலை விடுத்து சோலைக்குள் செல்லுகிறாள்.

ஒருசிறு கனவு. நீரை முகந்து வந்த நீலமேகம் குன்றின் உச்சியிலே அசையாது இருப்பது போல் தோன்றுகின்றது. மறுகணம் மலையும் மேகமும் மறைந்து அழகழகாய்ப் பூத்த நீல மலர்கள் கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவர்கின்றன.

பொங்கி எழும் அழகு கடலாய்த் தெரிகிறது. கடல் மறைந்து மயில்கள் கூட்டம்கூட்டமாய் நாடமாடுவது போல் நினைக்கச் செய்கின்றன. அதனுடைய ஒளிவட்டத்தின் நடுவே இறைவனுடைய திருமுக மண்டலம் காட்சி தருகின்றது. இந்த அற்புதக் காட்சியிலே மெய்மறந்து போகிறாள். ஒரேயொரு கணம் இதுவெறும் கனவு தான்; தன் எதிரே இருப்பது மேகக்கூட்டங்கள் என்பதை உணர்கிறாள். இவைகளையே தூது விடுவோம் என்று உணர்கிறாள் சூடிக்கொடுத்த நாச்சியார். அதற்கு முன் மேகங்களின் பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையைச் சொல்லி வாழ்த்த நினைக்கிறாள்.

"நீங்கள் திருமலையை வாசஸ் தலமாகக் கொண்ட பேறு பெற்றவர்கள்; மத யானையின் சுற்றத்தைக் கொண்டவர்கள்!" என்றெல்லாம் பெருமையடைந்தவர்கள் எனப் பாராட்டுகிறாள். ஆண்டவன் நன்மையைச் சொல்லும் போது பாம்பைப் படுக்கையாகக் கொண்டவன். என்முன் எழுந்தருளுவதாகச் சொன்ன சொல் என்னவாயிற்று? என்று கேட்கிறாள்.

என்றென்றும் "விண்ணீல மேலாப்பு விரித்தாற் போல் மேகங்கள்" என அவற்றை அழைக்கிறாள். அதோடு மனம் திருப்தியடையவில்லை.

**"மாமுத்த நிதி சொரியும் மாமுகில்காள்!**
**சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த**
**தண்முகில்காள்!**

என்றெல்லாம் அழைத்து தன்மனநிலையை வேங்கடவாணர்க்கு உரைக்க வேண்டும் என்று வேண்டுகிறாள். இப்படி கெஞ்சியும் கேட்ட அவள் "பழுத்த எருக்கிலைபோல் என் ஆவி உடல் உதிர்க்க காத்து நிற்கிறது; இறைவன் திருவருள் கிட்டாவிட்டால் என் உயிர் நிற்காது" ஒரு பெண் கொடியை வதை செய்தான் என்ற அவச் சொல்லுக்கும் பழிக்கும் ஆளாக நேரிடும். அப்படி நேராமல் தன்னைக் காத்துக் கொள்ளும் பொருட்டுத்தானும் வர வேண்டாமோ என்று கேள்" என்று சொல்ல நினைக்கிறாள். அப்போது கயேந்திரனைக் காக்க ஓடிவந்த காட்சியும் பேருளும் அவளது நினைவுக்கு வருகின்றன. அந்த மேகங்கள் யானையின் கூட்டம் போல் தெரிகிறது. ஆகவே,

**"மதயானை போலெழுந்த மாமுகில்காள்**
**வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர் காண்"**

என்று கூவியழைத்து என்னைப் பற்றி இந்தச் சில வார்த்தைகளையும் எனக் குற்ற நோயையும்

**"நலம் கொண்ட நாரணர்க்கு நடலை நோய்**
**செப்புமினே"**

என்று கெஞ்சிக் கெஞ்சித் தூது அனுப்புகிறாள். இதென்ன மேகக் கூட்டமா அல்லது கடலோ எழுந்து வானத்தை நாடி வந்து விட்டதா என்று திகைத்து நிற்கிறாள். அழகிய பூம்பொழிலின் நினைவே மறந்து விடுகின்றது. வானத்தின் வண்ணக்கோலத்தின், சற்று முன் வண்ணக் கோலமிட்டு கலைத்துக்கொண்டிருந்த வானம் இப்போது கார்முகில்கள் சூழ்ந்து மின்னி வலம்புரி போல் நின்று அதிர்ந்து முழங்குகின்றது என்று நினைத்தவளாய் ஏறிட்டு பார்த்தாள். அந்த கருமுகில்கள் இறைவனையே காட்டுவது போல் உணர்ந்தாள். ஆச்சரிய மிகுதியால் அவளது அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. உடனே

**"மேகங்களோ! உரையீர் திருமால் திருமேனி ஒக்கும் யோகங்கள் எவ்வாறு பெற்றீர்?"**
என்று கேட்கிறார்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஞானத்தசையிலே தன் பேச்சும் பிரேம தசையிலே பெண் பேச்சுமாக பாடியிருக்கின்றனர் என்பர். இந்த நிலையில் "வண்டும் மேகமும் தூது செல்லுமா? நமது உள்ளக்கிடக்கையை தெரிவிக்குமா! என்று நினைக்க அவர்களுக்கு நேரமேது" இறைவன் ஒருவனே தலைவன் மற்றெல்லாம் பெண்களே என்ற நிலை பிரேமதசையில் வந்து விடுகின்றது. இவர்கள் இறைவனையே காதலனாகப் பாவித்து பாடியுள்ள பாடல்களில் விண்ணும் மண்ணும் ஒருங்கே காட்சி தருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயம் ஒரு கலைக்களஞ்சியம்

**பா. பிரசாந்தனன்**
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்,
நெடுந்தீவுப் பிரதேச சபை.

உலகிலுள்ள மக்களால் பின்பற்றப் பட்டுவரும் சமயமார்க்கங்கள் யாவும் இறைநம்பிக்கை, ஒழுக்கவியல், மனித நேயம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன. இவ்வாறான சமயங்களில் இந்துசமயமானது ஆதியும் அந்தமும் இல்லாததும் பல்லாயிரக்கணக் கான வருடங்களாகப் பின்பற்றப்படுவதும் பல மகான்கள், அவதாரபுருஷர்கள், ஞானி கள், ரிஷிகள் மற்றும் சித்தர்களால் வள ர்த்தெடுக்கப்பட்டதுமான உன்னத சமய மார்க்கமாகும். பண்டு தொட்டு இன்று வரை வழக்கிலிருக்கும் இந்துசமயம் தத்தம் முழுமுதற் தெய்வங்களை அடிப் படையாகக் கொண்டு ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டாலும் எல்லாப் பிரிவுகளும் வழிபாட்டு முறை, தத்துவ விளக்கங்கள், வீடு பேற்றுக்கான வழிகள் என்பவற்றில் ஒன்றித்து நிற்பதனைக் காணலாம். இதே போன்று தொன்மைமிக்க இந்து சமயத் திலே பல வியத்தகு விடயங்கள் பொதிந் துள்ளன.

கலைகள் எனப்படுபவை புலனுணர் ச்சிகளின் ஊடகமாகவும், பல்வேறு உணர் வுகளுள்ள மனிதர்களால் சிருஷ்டிக்கப் பட்டுக் கருத்துக்களை வெளிப்படுத்து பவையாகவும். அழகுணர்ச்சியின் பாற்பட் டவையாகவும் விளங்குகின்றன. இத்த கைய அம்சங்களைக் கொண்டமைந்த கலைகளை அறுபத்து நான்கு வகையாக வகைப்படுத்தி வைத்துள்ளது இந்து சமயம். கலைகளின் தோற்றுவாய்க்கான காரணங்கள், கலைகளின் விளைநிலம் எனப்பலவற்றை ஆய்வுரீதியாகக் கருத்தி லெடுத்தாலும் இந்து சமயமானது பல கலைகளின் தோற்றப்பாட்டிற்கும் வளர்ச் சிக்கும் வழிகாட்டியாக, உந்துசக்தியாக அமைந்திருப்பதனை நோக்கலாம்.

அந்தவகையில் முதலில் கட்டடக் கலையை கவனத்திலெடுத்தால், இந்து சமயத்தில் கோயில்களே பிரதான இடம் வகிக்கின்றன. இந்துக் கோயில்களின் கட்டட அமைப்பு சிறப்பானதாகும். கலசங் களையுடைய விமானங்கள், வானுயர்ந்த கோபுரங்கள், ஒடுங்கி நீண்டு செல்லும் வடஇந்திய கோயில் கோபுரங்கள் என்பன கோயிலின் அமைவிடத்தை வெகுதூரத் தில் இருப்பவர்களுக்கும் அடையாளம் காட்டக்கூடியவாறு அமைக்கப்பட்டிருக் கின்றன.

மேலும் பரம்பொருளான இறைவ னைக் கொண்டிருக்கும் கருவறையோடு அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்தம்ப மண்டபம், நிருத்த் மண்டபம் என்கின்ற விசாலமான இடவசதிகளைக் கொண்ட - தூண்களால் அலங்கரிக்கப்பட்ட மண்டப அமைப்பு முறையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மண்டபங்கள் பக்தர்கள் தொகையை அடக்கும் நோக்கில் அமைக்கப்பட்டிருக் கின்றன. மேலும் இந்தியத் தலங்களில் குகைவரைக் கோயில், குடைவரைக் கோயில் போன்றன உட்பட பாறைகளில் செதுக்கப்பட்ட விதம்விதமான கோயில் களை மாமல்லபுரம் போன்ற இடங்களில் காணலாம். இதன்படி நோக்கின் இந்து சமயம் கோயில்களை மையப்படுத்தி காலத் துக்குக் காலம் கட்டடக் கலையின் புதிய பாணியை உருவாக்கித் தந்துள்ளது.

அடுத்து உருவகப்படுத்தும் தன்மை கொண்ட சிற்பக் கலையையும் இந்து சமயம் வளர்த்துள்ளது. அந்தவகையிலே கோயில் கோபுரங்களில் காணப்படுகின்ற பல வித்தியாசமான தோற்றங்களைக் கொண்ட கடவுள் மற்றும் விலங்குகளின் சிற்பங்கள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன. இவை தவிர பெரிய தேர்கள் மற்றும் மஞ் சம் போன்றவற்றில் உள்ள சிற்பங்கள், மூலஸ்தானம் உள்ளிட்ட பரிவாரத் தெய் வங்களாகவுள்ள சுவாமிகளின் கருங்கற் சிற்பங்கள் தத்துவார்த்தமாக அமைக்கப் பட்டிருப்பதனைக் காணலாம். இவை மட்டு மன்றி கோவில் சுவர்களில் உள்ள நாயன்மார்கள், ஆழ்வார்களின் சிற்பங் கள் பார்ப்பவர்களை கவரத்தக்கவையா கும். மேலும் சுவாமியைச் சுமந்து வீதி வலம் வரும் மரத்திலான வாகனங்களும் அவற்றின் வடிவமைப்பும் இங்கு குறிப்பி டத்தக்கவை. எனவே வடிவமைக்கும் கலையாம் சிற்பக்கலையையும், சிற்பா சிரியர்களையும் உருவாக்கிய பெருமை இந்து சமயத்தைச் சார்ந்ததாகும்.

அடுத்ததாக கட்புல ஊடகக்கலை களில் பிரசித்தமான ஓவியக் கலையிலும் இந்து சமயத்தின் செல்வாக்கு எவ்வாறா னது என நோக்கலாம். அதன்படி கோவில் சுவர்கள் மற்றும் மண்டபங்களில் பக்தியை நோக்காகக் கொண்டு கடவுளர்கள் மற் றும் அவர்தம் திருவிளையாடல்கள் என்பவற்றைக் காட்டும் ஓவியங்கள் மிகப் பழமைவாய்ந்த கோவில்களில் இருந்து தற்கால கோவில்கள் வரை வரையப்பட் டுக் காணப்படுகின்றன. தவிரவும் திரைச் சீலைகள், கொடியேற்றச் சீலைகள் என்ப வற்றில் வரையப்பட்ட ஓவியங்கள் தற்கால Fabric Painting இன் முன்னோடி எனலாம். ஆகவே ஓவியக்கலையின் வியாபகத்தை இந்து சமயம் சார் ஆதாரங்கள் புலப் படுத்தி நிற்பதனால், இக்கலையின் வளர்ச்சிக்கும் இந்து சமயம் தூண்டுதலாக அமைந்துள்ளது எனலாம்.

மேலும் இறைவனை இசையின் வடிவமாகக் குறிப்பிடும் இந்து சமயம் இசைக் கலையிலும் தன் முத்திரையைப் பதித்துள்ளது. அந்தவகையிலே தெய் வங்களை இசைக்கருவிகளுடன் தொடர்பு படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது சரஸ்வதி - வீணை, கிருஸ்ணர் - புல்லாங்குழல், சிவன் - உடுக்கை எனச் சில உதாரணங்களைக் காட்ட லாம். மேலும் இறைவனைப் போற்றிப் பாடும் தேவாரம் உட்பட திருமுறைகள் பண்ணுடனும், இராக தாளத்துடனும் இசை கலந்து பாடப்படுகின்றன. இவை மட்டு மல்லாது கோயில்களில் வாசிக்கப்படும் தவில், நாதஸ்வரம் மற்றும் சங்கு, சேமக் கலம், கோயில் மணி என்பவற்றோடு கிராமியக் கோயில்களில் பூசையின் போது இசைக்கப்படும் பறை, உடுக்கை என்பனவும் இசைக்கலையின் அங்கங்க ளாகும். இதன்படி நோக்குகையில் இந்து சமயம் இசைக் கலையுடன் பின்னிப் பிணைந்துள்ளதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையும் இசைக்கேற்ற அசைவும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாதவை. அந்த வகையில் இந்து சமயத்திலே நாட்டியக் கலையும் அதனுடன் தொடர்புடைய நாடகக் கலையும் காணப்படுகின்றன. அதாவது பக்தியை மக்களிடம் கொண்டு செல்லவென பலம்மிக்க, கவர்ச்சிகரமான ஊடகமாக இவ்விரு கலைகளும் இந்து சமயத்தால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி கடவுள் தொடர்பான விடயங்கள் நாட்டியம் மூலமாக அபிநயத்துடன் சொல்லப்பட்டிருந்தன. மேலும் நாடகக் கலையின் விளைநிலமான கூத்துக்கள் கூட (காத்தவராயன் கூத்து) இந்து சமயத்தவரால் ஆடப்பட்டுள்ளன. அன்றியும் மற்றைய சமய மார்க்கங்களைப் போலல்லாது இந்து சமயக் கடவுளர்கள் நடனமாடும் தெய்வங்களாக (சிவன் - ருத்திர தாண்டவம்) சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். எனவே நாடகக் கலையும் நாட்டியக் கலையும் இந்து சமயத்தில் தொன்று தொட்டு விளங்கியிருப்பதனைக் கண்டு கொள்ளலாம்.

இனி அச்சு ஊடகத்தால் வெளிக் கொணரப்பட்ட இலக்கியக் கலையை நோக்குகின்ற போது அங்கும் இந்து சமயத்தின் தாக்கம் வெகுவாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் சமயத்தை வளர்த்த நாயன்மார்கள் மற்றும் ஞானிகளால் உருவாக்கப்பட்ட பக்தி ரசம்மிக்க இலக்கியங்கள் பல இந்துசமயத்தில் விரவிக்கிடக்கின்றன. திருமுறைகள், பிரபந்தங்கள் போன்ற இறைதுதியைப் பாடிய இலக்கியங்கள் பன்னெடுங் காலம் முதல் இயற்றப்பட்டு தற்போதும் பாடப்பட்டும் பேசப்பட்டும் வருகின்றன. இவைபோல சமய தத்துவங்களை வெளிக்கொணரும் சித்தாந்த, வேதாந்த தத்துவங்களும், புராண இதிகாசங்களும் இந்து சமய இலக்கியச் சான்றுகளாக மிளிர்கின்றன. பாமரர் முதல் படித்தவர் வரை புரிந்து கொள்ளும் தன்மை வாய்ந்த உன்னதமான அரிய இலக்கியப் படைப்புகள் பல, இந்து சமயத்தில் காணப்படுவது இலக்கியத் துறைக்கு அதன் பங்களிப்பைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

மேற்குறிப்பிட்ட கலைகள் தவிரவும் வார்ப்புக் கலை இந்து சமயத்திலே பிரசித்தமானது. அதாவது இறை விக்கிரகங்கள் குறிப்பாக எழுந்தருளி விக்கிரகங்கள் வெள்ளி, வெண்கலம் போன்றவற்றில் அழகுற வார்க்கப்பட்டு உருவாக்கப்படுகின்றன. தவிரவும் கோயில்களில் கண்டாமணி தொட்டு சிறிய கைமணி வரை பூசைக்கு ஒலிக்கப்படும் மணிகள், தீபாராதனைக்குப் பயன்படும் தீபங்கள் என்பன மட்டுமன்றி இறை விக்கிரகங்களை அலங்கரிக்கும் திருவாசி, கொடியேற்றத் திருவிழாவின் கொடிக்கம்பத்தை மூடி அமைக்கப்படும் நீண்ட கவசங்கள் யாவும் வார்ப்புக் கலையின் பாற்பட்டவையேயாகும்.

இவை மட்டுமன்றி அலங்கரித்தல் அல்லது ஒப்பனை செய்யும் கலையும் இந்து சமயத்தில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதாகும். அந்தவகையிலே கோயில் மற்றும் விசேட உற்சவங்களில் தெய்வ உருவங்கள், பட்டாடைகள், ஆபரணங்கள், விதம்விதமான மாலைகள் மற்றும் சிகையலங்காரங்கள் என்பன கொண்டு அலங்கரிக்கப்படல் அலங்காரக் கலை சார்ந்தவை. மேலும் ஆலயங்கள் மற்றும் வீடுகள் விசேட, கொண்டாட்ட தினங்களில் தோரணம், மாவிலை, கோலங்கள் மற்றும் எண்ணெய் விளக்குகள் கொண்டு அலங்கரிக்கப்படுதல் அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானிக்கத்தக்கது. கோயில்களில் விசேட திருவிழாக்களில் மஞ்சம், சப்பரம், தண்டிகை, காவடி போன்றன விதம்விதமான பொருட்களால் அலங்கரிக்கப்பட்டு கட்புலத்தை ஈர்க்கும் தன்மையை வெளிப்படுத்துகின்றன. இவற்றின் பின்னணியாக இந்துக்களும் தனிநபர் அலங்கரித்தல் என்ற விடயத்தில் பின்நிற்பது கிடையாது. அதாவது வெள்ளை மற்றும் காவி வஸ்திரம், உருத்திராட்சைமாலை, உச்சிக்குடும்பி, திருநீற்றுக்குறி, சந்தனப்பொட்டு போன்ற அலங்காரங்கள் இந்துக்களைப் பளிச்சென அடையாளப்படுத்துகின்றன.

அடுத்து இந்து சமயம் சமையல் கலையிலும் தன் தனி முத்திரையைப் பதித்துள்ளது. அதன்படி ஒவ்வொரு கடவுளுக்கும் பிரத்தியேகமான உணவு வகைகளைப் படைத்து வழிபாடு செய்யும் வழக்கம் பண்டைக்காலம் தொட்டு நிலவி வருகின்றது. முருகனுக்கு மாவிளக்கு, பிள்ளையாருக்கு மோதகம், வைரவருக்கு வடை மாலை மற்றும் சரஸ்வதிக்கு அவல், கடலை, பஞ்சாமிருதம், ஆடிப் பிறப்பிற்கு கூழ் எனப் பற்பல சுவை மிக்க உணவு வகைகள் தயாரிக்கும் சமையல் கலையும் இந்து சமயத்தில் காணப்படுகின்றது.

இவ்வாறாக கட்டடக் கலை தொடக்கம் சமையல் கலை வரை மட்டுமன்றி வேறும் பல கலைகளின் தோற்றம், வளர்ச்சிக்கு இந்து சமயம் பிரதான பங்களிப்புச் செய்துள்ளமை என்றுமே மறுக்க முடியாத உண்மையாகும். உலகிலுள்ள சமய மார்க்கங்களில் மங்காப் புகழ் கொண்டு மொழி, தேசம், பால், இன வேறுபாடுகளைக் கடந்து பற்பல வழிபாட்டு முறைகளைக் கொண்ட இந்து சமயமானது பல இன்னல்களுக்கு மத்தியில் பல சமய அபிமானிகளால் வளர்க்கப்பட்டு இன்றும் என்றும் ஆன்மஈடேற்றமே பிரதான நோக்காகக் கொண்டு விளங்கி வருகின்றது. எனவே இந்து சமயிகளான நாமும் சமய அநுஷ்டானங்களைக் கைக்கொண்டும், கலைகளின் ஊடாகவும் இந்து சமயத்தின் புகழை மேன்மேலும் உயர்த்திடப் பாடுபடல் வேண்டும்.

## நல்லூரான் நாமமொன்றே!

சொல்லினுள் பொருளுண்டு செயலுண்டு
சுடர்மிகு அருளுண்டு - சித்தர்கள்
சொல்லிய வார்த்தைகள் மந்திரம் அவை
தந்தன எமக்கு வேதங்கள் நான்கினை
சொல்லிட நான் மறையறிந்திடா
நல்லடியார் யாவர்க்கும் நவில
நல்லூரான் நாமமொன்றே போதும்
நல்லன வெல்லாம் நடக்கும் நன்றே!

**இராமஜெயபாலன்**
**(கொக்குவில்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மறையும் திருமுறையும்

சைவச்செம்மல் செ. மதுசூதனன்
(கோண்டாவில்)

சைவ சமயத்தின் தோற்றம் கற்பனைக் கெட்டாதது. வரலாற்றுக் காலத்திற்குட்பட்ட சைவம், ஆரியத்தின் வருகைக்கும், அதற்கு முற்பட்டதுமான இரு நெறிகளின் இணைப்பாகும் என்பது வரலாற்றாசிரியர்கள் கூற்று. "உலகின் மிகப் பழமையான உயிரோட்டமுள்ள சமயம் சைவமேயாகும்" என்று ஜோன் மார்ஷல் என்பவர் கூறுவார். "சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை அவனோடொப்பார் இங்கு யாவரும் இல்லை" என் பார் திருமூலர். தனித்த, தமிழர் மெய்யியலாகச் சைவம் விளங்குகின்றது. திருமூலரின் எல்லை, இலங்கையுட்பட்ட தமிழக எல்லைக்குள் (சிவபூமி) தனித்த ஒன்றாக விளங்குவது காணலாம். சமண, பௌத்த சமய எச்சங்கள் திருமூலரால் சைவமாகக் குழைத்துத் தரப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, பன்றி நாடு, கற்காநாடு, சீதநாடு, பூழி நாடு, மலைநாடு, அருவாநாடு, அருவா வட தலைநாடு என்ற பன்னிரு நிலங்களாகக் குறிப்பிட்டிருப்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் சொல்லப்படும். மாயோன் மேய காடுறை உலகமும், சேயோன் மேய மை வரை உலகமும், வேந்தன் மேய தீம் புனல் உலகமும், வருணன் மேய பெருமணல் உலகமும், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையாற் சொல்லவும்படுமே" என்பது தொல்காப்பியம். "காமப் பகுதி கடவுளும் வரையார்" என்பது தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் வருவது. தொல்காப்பியருக்குப் பின், திருமூலர்தான் கடவுள், என்ற சொல்லுடன், சிவன் என்ற சொல்லையும் கையாண்டுள்ளார். "ஒழிந்தேன் பிறவி, உறவு என்னும் பாசம் கழிந்தேன், கடவுளும் நானும் ஒன்றானேன், அழிந்தாங்கு இனி வரும் மார்க்கமும் வேண்டேன், செழுஞ் சார்பு உடைய சிவனைக் கண்டேன்" என்பது திருமூலர் வாக்கு. "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று சங்கநூல்களில் கூறப்படும் எம் பெருமான் பேரருளாளர். பிறவியில் சேரார், பிணியிலர், கேடிலர், அவரையும் அறிவிலார் அவதாரமெடுப்பதாகத் தவறாகக் கூறுவர். தமிழனுக்குப் பெருமை தருவது சைவம் தான். ஆனால் நூற்றில் தொண்ணூறு பேருக்குச் சைவ சித்தாந்தம் பற்றித் தெரியாது. அறிவு, அனுபவத்தோடு பொருந்தியதான கொள்கையுடையது சைவசித்தாந்தம். தொல்காப்பியம், திருக்குறள் போன்றவற்றின் உட்கருத்துக்கள் சைவ சித்தாந்தந்தான். சைவசித்தாந்த சிவ வழிபாட்டில் சாதி பேதமில்லை. அதிகாலை எழுதல், தியானம் செய்தல், சைவசித்தாந்தங்களைக் கடைப்பிடித்துத் தொண்டு செய்தல் போன்றவை சிறந்த வாழ்வளிக்கும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுமுறையில் முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திநிலை பெற வழிவகுப்பனவாகும்.

### சைவதத்துவம் :

அகக் கருவிகளான முப்பத்தாறு தத்துவங்களை, ஆன்ம தத்துவங்கள், இருபத்து நான்கு, வித்தியா தத்துவங்கள் ஏழு, சிவ தத்துவங்கள் ஐந்து என மூன் றாக வகுத்தனர். புறக் கருவிகளாக உள் ளவை அறுபது ஆகும். ஐம்பூத காரியங் கள் இருபத்தைந்து, நாடிகள் பத்து, தொழிற் கருவிகளின் செயல்கள் ஐந்து, குணங்கள் மூன்று, பற்றுக்கள் மூன்று, வாக்குக்கள் நான்கு (பரா, பச்சயந்தி, மத்தியமா, வைகரி) என்பனவாகும். அகக்கருவிகள் முப்பத்தாறும், புறக் கரு விகள் அறுபதும் சேர்ந்து தொண்ணூற் றாறு தத்துவங்கள் உண்டெனச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. ஆகின்ற தொண் ணூறோடாறும் பொதுவென்பர். ஆகின்ற வாறாருஞ்சைவர் தத்துவம், "ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிண வர்க்காகின்ற நாலாறையைந்து மாயாவாதிக்கே" என்பார் திருமூலர். சைவம் நான்காக வகுக்கப்பட்டுள்ளது. சுத்த சைவம் - சடங்குகளில் நில்லாது, தலைவனையும், தன்னையும், தளையையும் (பதி, பசு, பாசம்) அறிந்து தளையின் நீங்கித் தலை வன் திருவடிச் சார்பு பெறுதல் எனவும், அசுத்த சைவம் - திருவேடந்தரித்து, சரியை, கிரியை, (சடங்குகள்) ஆகிய இருநெறி வழியில் நிற்பவர் நிலையைக் கூறுவது என்றும், மார்க்க சைவம் - வேதாந்த சித்தாந்த நுண்பொருளை உணர்ந்து ஆன்மபேதம் கெட்டுச் சிவ போதத்தில் நிலைத்திருத்தல் எனவும் கடுஞ்சுத்த சைவம் - ஞான நிலையில் ஆடம்பரமின்றி, தான் அவனாய் நிற்கும் (கிரியைகள் அற்ற) நிலை எனவும் கூறப் பட்டுள்ளமையினால் அறியலாம்.

### பிறமதச் செல்வாக்கு

தமிழினம் பல்லாற்றானும் சிறப்புப் பெற்று, விளங்கிய சங்க காலத்திற்குப் பிறகு, தமிழரல்லாத பிற இனத்தவர்கள் தமிழ் நாட்டில் யாண்டும் பரவினர். இத னால் தமிழகத்தின் தொன்மை நெறியா கத் திகழ்ந்த சைவமும், அத்துடன் ஓர ளவு செல்வாக்குப் பெற்றிருந்த வைணவ மும் செல்வாக்கிழந்தன. களப் பிரளர்கள் காலத்திற்குப் பின், பல்லவ மன்னர் காலத்தில் சமணமும், பௌத்தமும் மிக்க செல்வாக்குற்றிருந்தன. அம்மதங்களை வீழ்த்தி, மீண்டும் சைவ, வைணவ மதங் களைப் பரப்ப நாயன்மார்களும், ஆழ் வார்களும் தோன்றி, பக்தி மார்க்கத்தை உருவாக்கி அதில் வெற்றி கண்டனர். தமிழ் நாட்டில் சமணம் பரவிய பொழுது, தமிழ் மக்களிடம் தாய்மொழிப் பற்றுக் குறையத் தொடங்கியது. இவ்வேளையிற் றான், பக்தி இயக்கமானது, சீர் குலைந்த தமிழ்ப் பண்பாட்டையும், மொழிப் பற்றை யும், வளர்த்ததெனலாம். பல்லவர் ஆட்சி யின் ஆரம்பத்தில் வைணவம் தழைத்தது. ஆயினும் இரண்டாம் நரசிம்மன் காலம் முதல் சைவம் முக்கியத்துவம் பெற்றது. கடைச்சங்கம் முடிவுற்ற நிலையில் தமி ழைப் பேணுவார் அருகிவந்தனர். சம ணம், பௌத்தம் ஆகியவற்றுடன், ஆரிய ரின் மதவழிபாட்டு முறைகளும் தமிழ் நாட்டில் பரவலாயின. இதனால் வட இந்திய மொழிகளாகிய பாளி, சமஸ் கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. சங்க மருவிய காலத்திற் றோன்றிய மணிமே கலை என்ற தமிழ்க் காப்பியத்தில் இவற் றின் புழக்கம் அதிகரித்துக் காணப்படுவத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால், இதனைத் தெரிந்து கொள்ளலாம், மறையோர் தேசத்து, வேதவழிபாட்டு முறைகளினால் கவரப்பட்ட சைவ, வைணவ மதத்தினர், அவ்வழிபாட்டு முறைகளைத் தமது வழிபாட்டு முறைகளுடன் இணைத்துக் கொண்டனராயினும் தமிழ் மொழியைச் சிதைப்பதற்கு இடந்தந்தாரல்லர். வேண்டிய விடத்துச் சில வடமொழிச் சொற்களை, தற்பவம், தற்சமம் என்ற நிலையில் சேர்த்து வழங்கினர். "வடசொற் கிழவி வட எழுத்து ஓரிரு எழுத்தோடு புணர்ந்த சொல்லாகுமே" என்று தொல்காப்பியர் சொன்னார். ஆதி சைவம், வைதீக சைவமாகியது, ஆதி சிவன் வேதியரின் உருத்திரன் ஆனார்.

## தமிழ் மொழிச்சிறப்பு

சேர, சோழ, பாண்டியர்களால் தமிழ் மொழி வளர்க்கப்பட்ட வரலாற்றைச் சங்க இலக்கியங்களால் அறியலாம். வடமொழியாகிய ஆரியத்தோடு ஒத்த பெருமையுடையதாய், அவ்வாரிய மொழியினும் வேறுபட்ட மொழியமைப்பும், இலக்கண அமைப்பும் கொண்டு, விளங்கிய உயர்தனிச் செம்மொழி தமிழேயாகும். முப்பெரும் கடல் கோள்கள் அடுத்தடுத்து நிகழ்ந்தன என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றார்கள். இங்ஙனம் தமிழ் நாட்டில் நிகழ்ந்த கடல் கோள்களால் அரும்பெருந் தமிழ் நூல்கள் பல அழிந்தொழிந்ததோடு, மாற்று மதத்தின் பரவலாலும் பல நூல்கள் அழிக்கப்பட்டன அல்லது கைவிடப்பட்டன எனலாம்.

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாந் தொடர்புடைய தென் மொழியை உலகமெலாந் தொழுதேத்தும் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனில், கடல் வரைப்பின் இதன் பெருமை யாவரே கணித்தறிவார்" என்றும், "இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்" என்றும் சிவஞானமுனிவர் கூறுவதையும் நோக்குவோமாக! "கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமொடு அமர்ந்து, பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப் பசுந்தமிழ்" என மணிவாசகரும் பகர்வார். தமிழ் சிவபெருமானால் வளர்க்கப் பெற்றமையையும், சங்கப்புலவர்களால் ஆராய்ந்து செப்பம் செய்யப் பெற்றமையையும் "பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து இருப்பிலே இருந்து, வையை ஏட்டிலே தவழ்ந்த பேதை" என்ற கூற்றின் மூலம் உணரலாம்

பல்லவர் காலத்தில், வடமொழி ஆதிக்கம், அதிகரித்தது. அக்காலப் பகுதியில் ஜைன (சமண), பௌத்த மதப் பிரசாரங்களில் மயங்கியிருந்த மக்களைத் திருத்த, திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தோன்றி தெய்வீகத் தமிழை வளர்த்தார்கள். அந்தக் காலத்தில் சைவ, வைணவ மதத்தினரிடையில் வேற்றுமைகள் அதிகம் காணப்படவில்லை. ஆழ்வார்களும், நாயன்மார்களும், தமிழையும், தத்தம் மதங்களையும் வளர்த்தார்கள். இராசசிம்மன் காலத்தில் இவை ஆரம்பமாயின. சிவனது அருளைப்பற்றியும், திருமாலின் குணப் பெருமைகளையும் இசையுடன் தீந்தமிழில் இயற்றி, மறைந்த நம்பிக்கைகளை மக்களுக்கு ஊட்டினார்கள். ஆறாம் நூற்றாண்டளவில், தமிழ்மொழியும், தமிழ்க்கலைகளும், தமிழ் இலங்கியங்களும், தமிழ்ச் சமயமும் வலிமையிழந்திருந்தவேளை புறச் சமய ஊடுருவல்களைத் தடுக்க, சைவமும், வைணவமும் மெல்லப் புத்துயிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறத்தொடங்கிற்று என்று கூறலாம்.

## சைவமும் வைணவமும்

பல்லவ மன்னன் இராசசிம்மன் மாமல்ல புரத்தில் கட்டிய தலசயனம் என்ற கோயில் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். பள்ளி கொண்ட திருமாலும், சிவனும் ஒன்றாக வீற்றிருக்கும் கடற்கரைத் திருக்கோயில் இது. "பிணங்களிடு காடதனுள் நடமாடும் பிஞ்ஞகனோடு, இணங்கு திரிச்சக்கரத்தெம் பெருமானார்க் கிடம், போர்க்கலன்கள் இயங்கும் மல்லைக் கடல் மல்லைத் தலசயனம் வணங்கு மனத்தாரை வணங்கென்றன் மடநெஞ்சே" என்ற திருமங்கை மன்னரின் பாசுரம் சைவ, வைணவ ஒற்றுமையைக் குறிப்பிடுவது காணலாம்.

திருவாலி மன்னரான (குறுநில மன்னர்) திருமங்கையாழ்வார், நந்திவர்மன் ஆட்சிக்காலத்தில், காஞ்சிக்குச் சென்று திருமாலை வழிபடவந்த போது பெரும் வரவேற்பு நிகழ்ந்தது. நந்திக் கொடிகளும் (காளை) சிங்கக் கொடிகளும் வரவேற்றன. ஆலிநாடரே, மங்கை வேந்தரே, நாலுகவிப் பெருமானே, கொற்றவேற் பரகாவலரே, நாலுவேதப் பெருமாளே வருக, வருகவென்று வரவேற்கப்பட்டார். திருமங்கையாழ்வாருடன், காஞ்சியில் அஷ்டபுஜக் கோயிலுக்குச் சென்ற போது, நந்திவர்மனும் அவருடன் சென்று வழிபட்டு, சிறந்த வைணவ பக்தராகிவிட்டார். "மன்னவன் தொண்டையர்கோன், வணங்கும், நீள் முடிமாலை வயிரமேகன், தன் வலி, தன் புகழ் சூழ்ந்த கச்சியட்டபுயக் கரத்தாதி தன்னைக், கன்னி நன்மாமதின் மங்கை வேந்தன்கா மரு சீர்க்கலிகன்றி குன்றா இன்னிசையாற் சொன்ன செஞ் சொல் மாலையேத்த வல்லார்க்கிடம் வைகுந்தமே" என்று திரு மங்கையாழ்வார் பாடியுள்ளார்.

நந்திவர்மன் கொடுக்கும் இறையிலிகளில், வழங்கும் தானங்களில்மேல் ஓலை எழுதுவோர், இதுகாறும் வடமொழியில் எல்லாக்காரியங்களையும் செய்து வந்தனர். செப்புப்பட்டயங்கள், கல்வெட்டுக்கள் எல்லாம் வடமொழியிற்றான். தமிழ் மக்கள் எல்லோருக்கும் புரியும் மொழியில் சாசனங்களைச் செதுக்க வேண்டுமென்பது மன்னர் எண்ணம். அதை நிறைவேற்றச் செப்புப் பட்டயங்களில் அரசர் இடும் ஆணைகளைப் பொறிக்கும் பொற்கொல்லர்களையும், பட்டய எழுத்தாளரையும் கல்தச்சரையும், கல்வெட்டுகளிலும், பட்டயங்களிலும், வடமொழியிலும், தமிழிலும் அரசரின் மெய்ப்புகழைப் பாடும் காரணிகரையும், உள்படுகருமத் தலைவரையும், ஆளும் கணத்தாரையும் தமிழில் சாசனங்களைச் செதுக்குமாறு, அரசனின் தளபதி உதயச் சந்திரன் கட்டளையிட்டுப் பணித்திருந்தான். தேவாரப் பள்ளிகளும், தமிழ்க் கல்லூரிகளும் சரிவர நடக்க மானியம் வழங்கவும் உத்தரவிடப்பட்டது.

பஞ்சம், படையெடுப்பு அபாயம் இருந்த போதிலும், பல்லவ மன்னர் இராசசிம்மன், காஞ்சி கைலாசநாதர் கோவிலையும், மல்லையில் தலசயனம் கோயிலையும் நிர்மாணித்தார். பல்லவ சிற்பிகளின் திறமை தென்னாட்டில் பிரகாசிக்க வேண்டும், சைவ வைணவ ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கில், காஞ்சியில் கைலாசநாதர் கோயில் போன்று, வைகுண்டப் பெருமான்கோயில், தில்லை நடராஜருடன், கோவிந்தராசர் விளங்க ஒரு கோயில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குடந்தையில் கோயில் என்றிவ் வாறான ஏற்பாடுகளை நந்திவர்மன் விரும்பிச் செயற்படுத்தினான். சாளுக்கிய மன்னர் (புலிகேசி) படையெடுப்பில், கைலாசநாதர் கோயில் செல்வங்களை யெல்லாம் அபகரித்துச் சென்றார்கள். அவ்வேளையிற்றான் சிறுத்தொண்டர் வாதாபி சென்று, வீரக்கொடி நாட்டி, வேழமுக விநாயகரை முதன் முதலாகத் தமிழகத்துக்குக் கொண்டு வந்து அறி முகப்படுத்தினார். ஆரியரின் நான்மறை கூறும் நல்லனவற்றை ஏற்றுக் கொண்ட சைவமும், வைணவமும் தமிழ் மொழியின் உயர்வுக்கு வழிகாட்டலாயின. நாயன் மாரும், ஆழ்வார்களும் தமிழில் பாடியே பக்தியை வளர்த்தார்கள். "நாளும் இன் னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந் தர்" என்று சுந்தரமூர்த்திநாயனார் சம்பந் தரைப் புகழ்ந்து தேவாரத்தில் பாடி யுள்ளார்.

## சைவமும் தமிழும்

"வேதம் பசு, அதன்பால் மெய்யா கமம், நால்வர் ஓதுந்தமிழ் அதனின் உள்ளுறுநெய், போதமிகு நெய்யினுறு சுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண் டான் செய்த தமிழ் நூலின் திறம்" என் பதை உணர்ந்து கொள்ள வேண்டும். "சைவமும், தமிழும் வரலாற்றுக்கு முற் பட்ட பழமையும், மேன்மையும் உடை யவை. பன்னிரு திருமுறைகளும், சைவ சித்தாந்த சாத்திரங்களும் அதற்கு ஆதா ரமும், அடிப்படையும் ஆகும். மூவர் அரு ளிய தேவாரத் திருப்பதிகங்களை, பண் முறை, தலமுறை, வரலாற்று முறை என மூவகையாக அடைவு செய்து, அதனை அடங்கல் முறை என்று சொல்லி வைத் துள்ளார்கள். சொற்கோவும், தோணிபுரத் தோன்றலும் எம் சுந்தரனும், சிறகோல வாதவூர்த் தேசிகனும், முற்கோலி வந் திலரேல், நீறெங்கே? மாமறை நூல் தானெங்கே? எந்தை பிரான் ஐந்தெழுத்து எங்கே? என்பது போல், ஈழத்தில் சைவம் வாழவும், தமிழ் வளரவும் அருந்தொண் டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை நாம் போற்றுகின்றோம்.

இன்றைய சைவம், வடமொழி வேதத்தை ஏற்றுள்ள போதிலும், உள் ளத்தைத் தொடும் மொழியிலேயே வழி பாடு செய்தல் வேண்டும். அதுவே பூரண பலனைக் கொடுக்கக் கூடியது. பொருள் தெரியாமல் ஒரு மொழியைக் கேட்டுப் பயனில்லை. அது கேட்டும் கேளாதிருப் பதற்குச் சமமாகும். வேதமந்திரங்கள் ஒலிப்பினாலேயே சிறப்புப் பெறும். உச் சரிப்பு பிழையுறின் பயனும்மாறாகும். இது பலரும் அறிந்த உண்மை. ஒலி சிறந்த வேதியர் வேதம் ஒழுங்கான உச்சரிப்போடு ஓதப்படாவிட்டால், உல குக்கும் கேடுண்டாகும். ஆகவே தகுதி யானவர்கள் மட்டும் அதனைக் கையாள வேண்டும். ஆகவே வேதமந்திரங்களை அவதானமாக ஓதுதல் வேண்டும். நம் மவர்களில் சிலர் தமிழில் பாடப்பட்ட "வான்முகில் வழாது பெய்க, மலிவளம் சுரக்க மன்னன் கோன்முறை அரசு செய்க, குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்களோங்க, நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற மங்கல வாழ்த் தைப் பாடும் பொழுது, லகர, ளகர பேதந் தெரியாது பிழையான உச்சரிப் பில், "மேன்மைகொல் சைவநீதி" என்று மேன்மையைக் கொல்கின்ற சைவநீதியே விளங்க வேண்டுமென்று வேண்டிக் கொள் வதையே கேட்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேசமயம் வேதமந்திரங்களை ஒலி பரப்புவது சரியா? என ஓர் அன்பர் கேள்வி எழுப்பியுமுள்ளார். நமது கோயில் களில் ஓதப்படும் வேதமந்திரங்கள் நம் சமயக் கோட்பாடுகளின்படி ஆசாரத்து டன் வாழும் அந்தணப் பெரியார்கள் இறைவனை இறைஞ்சி அருள்பெற்று, அடியார்களுக்கு அருளப் பயன்படும் ஊடக மாகும். ஆனால் தெய்வத்துக்கு ஓத வேண்டிய வேத மந்திரங்களை ஒலி வாங்கிக்கு ஓதி, ஒலிபெருக்கி, ஊன் உண்ணுவதற்காக உயிர்களைக் கொன்று கொண்டிருப்பவர்களையும், ஊனையும், மதுவையும் ருசித்து உண்டு கொண்டிருப் பவர்களையும், பஞ்சமா பாதகர்களை யும், ஆசாரமில்லாதவர்களையும், ஆசௌசம் உடையவர்களையும் சென்றடையச் செய்வது அபச்சாரம் ஆகாதா? தெய்வீக மந்திரங்களின், தெய்வீகத்தை இழக்க வைக்கும் செயலல்லவா? இப்படி அபச் சாரம் செய்வது நன்மையின் எதிர் மாறான தீமையை ஈர்க்காதா என்றும் மேலும் தற்காலக் கடுகதி வாழ்க்கை முறைக்கேற்ப ஆலயங்களிலும், மூச்சு வாங்கக் கடுகதியில் மந்திரங்களை ஓதி, ஒலி பெருக்க, அது ஏதோ அரசியல்வாதி தன் எதிரணியைத் திட்டித் தீர்ப்பது போன்ற ஒலியை அல்லவா எழுப்புகின்றது! இது வியாபாரம் நம்முடைய புராதன மதத்தின் தேவ மந்திரங்களும் ஐஸ்கிறீம் வான் வியாபாரமாகியது கலிகாலத்தின் கோலமா?" என்று அந்த அன்பர் தனது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார்.

வேதங்கள் ஆறங்கமாகிய மந்தி ரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசம், நிருக்தம், சோதிடம் என்பவற்றில் கூறும் விதிமுறைகளுக்கிணங்க ஓதப்படவேண் டும். சைவம் தனித்துவமானதாயிருந்த போதிலும், வேதத்தின் அடிப்படையில் ஆரிய மதங்களின் இணைப்பாகச் சேர்க் கப்பட்டு, இன்று இந்து மதத்தினுள் அடக் கப்பட்டதாய் கொள்ளப்படுகின்றது. எனவே, வேத அங்கங்கள் அல்லது ஆறு சாத்தி ரங்களின் இன்றிமையாமை - அவசியம் உணரப்பட்டுள்ளது.

அ. சிக்ஷாசாத்திரம் - பாணினியால் எழு தப்பட்டது. வேத மந்திரங்களின் சப் தங்களின் வர்ணம், மாத்திரை, உச் சாடனம் போன்றவற்றையும், சப்த வர்ணங்களின் உற்பத்தியையும், காரணத்தையும் இது கூறுகின்றது.

ஆ. கல்பசாத்திரம் - கர்மங்களை அடிப் படையாகக் கொண்டது. ஒவ்வொரு தேவதையின் அடிப்படையில் மந்தி ரங்கள், அதற்கான கர்மங்கள், எப்ப டிச் செய்வதென்பது கூறப்படுவதோடு, மனிதனுக்கு பிறப்பிலிருந்து இறப்பு வரை தேவையான கலாசாரத்தை யும், கிரியைகளையும் கூறுகின்றது.

இ. நிருக்த சாத்திரம் - வேத மந்திரங் களின் அர்த்தத்தை முடிவு செய்யும் சாத்திரம் இதுவாகும்.

ஈ. சந்தஸ் - எல்லா வேத மந்திரங் களும் பாடல் வடிவில் உள்ளதால் சந்தஸ் எனப்படுகின்றது. உச்சா டனத்தின் ஸ்வர, லயங்களோடு சேர்த்து, மந்திரங்களை உச்சா டனம் செய்வதுதான் சந்தஸாகும். காயத்திரி மந்திரம் என்றழைக்கப் படும் சாவித்திரி மந்திர உபாசனை மிகச் சக்தி வாய்ந்தது என்று வேதம் கூறுகின்றது.

உ. வியாகரணம் - இதன் ஆசாரியரும் பாணினியே. வேத சப்தங்களில், சப்த சுத்தி, சப்தப் பிரயோகம் பற்றிக் கூறும் சாத்திரம் வியாகரணம். மொழித் தொடர்பாடலுக்கு இன்றிய


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மையாதது. பாணினி மகரிஷியால் எழுதப்பட்ட வியாகரண சித்தாந்தங்கள், நினைவில் வைக்கக்கூடிய ஒரு சில சொற்களில் அமைக்கப்பட்ட பெரிய அர்த்தத்தைக் கொடுக்கும் வாக்கியங்களாகும். இது எல்லோருக்கும் புரிந்து கொள்ள முடியாதபடியால், பதஞ்சலி மஹரிஷி விரிவாக்கம் செய்து, அதை மஹாபாஷ்யம் என்றார்.

ஊ. ஜோதிஷம் - வேத வாக்குகளின் சப்தத்தின் சக்தி என்னவென்றும், அது கூறும் விடயத்தின் அர்த்தத்தில் சேர்ந்திருக்கும் பஞ்ச பூத தத்துவம் என்னவென்றும் சொல்வது ஜோதிஷம் எனப்படும். வைதீக யக்ஞர்கள் - யாகங்கள், மனிதனின் ஏனைய எல்லா வாழ்க்கை விடயங்களுக்கும் ஜோதிஷம் கட்டாய தேவையாகியது. ஜோதிடத்தில் வானவியல் சாத்திரம் உள்ளது.

வேதங்களின் உப அங்கங்களாக மீமாம்சை, நியாய சாத்திரம், இதிகாச புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள் உள்ளன. வேதங்களின் முழுப்பலனும் கிடைக்கச் சரியான முறையில் வேதங்களைப் படிக்க வேண்டும். வேதங்களைப் பாடலாகப் பாடக்கூடாது. மிக வேகமாக உச்சாடனம் செய்யக் கூடாது. தலையையோ உடலின் பாகங்களையோ ஆட்டி அசைத்துக் கூறக்கூடாது. வேதம் ஸ்ருதிகளாகையால் காதால் கேட்டுப் படிக்க வேண்டும். வேதங்களை என்ன காரணத்திற்காகச் சொல்கிறோம் என்று தெரியாமல் படிக்கக் கூடாது. மந்திரங்களை அரைகுறையாக உச்சாடனம் செய்யக்கூடாது.

## உய்ய வழி

ஏன் இந்தச் சங்கடங்கள்? நமக்குப் புரியும் தமிழ் மொழியில் நல்லறிவையும், நற்பலன்களையும் நல்கக் கூடிய இனிய வாய்மொழிகளோடு கூடிய தேவாரம், திருவாசகம் ஆகிய திருமுறைகளையும், திருமறையாக விளங்கும் தமிழ் மறையாந் திருக்குறளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, வாழ்க்கையிற் கடைப்பிடிப்போமாயின் தெய்வத்திருவருள் நம்மை உய்ய வைக்கும். கடவுள், உயிர், தளை (பதி, பசு, பாசம்) என்னும், கருப்பொருள் கொண்ட சைவசித்தாந்தமே மேலான சமயநெறி. உயிர் என்பது, மனம், ஐம்புலன்கள், உடல், ஆன்மா உள்ளிட்டவையின் இணைப்பாகும்.

தெய்வம் ஒன்று தான். இன்றைய இந்து மதத்தினர் தேவர்கள், தேவதைகள் என்ற பதங்களுக்கு கடவுள் என்று பொருள் செய்து கொண்டு, கடவுள் ஒருவர் என்பதை மறந்து, குழம்பிப் போயிருக்கிறார்கள். ஆங்கில மொழியில் God (கோட்) என்பது ஈஸ்வரன், தேவாதி தேவன், கடவுள், சிவன் என வழங்கும். ஆனபடியால் மானிட ஜென்மத்தை விட, உயர்ந்த உயிர் வர்க்கங்களாகிய தேவர்களுக்கு God என்கின்ற ஆங்கில மொழிச் சொல்லை வைத்துச் சொல்வது தவறு. அதனால் ஏற்பட்ட குழப்பமே பல தெய்வக் கொள்கையாகும். கடவுள் ஒன்றே என்பது உறதியாகக் கொள்ளப்பட்டதேயாகும். "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற மணிவாசகரின் வாக்கும் இதனைப் புலப்படுத்துவதைக் காண்கின்றோம். எந்தச் சமயத்திலும் சரி, ஏதேனும் ஒரு லிங்கத்தை - குறியை - அடையாளத்தை வைத்துத் தான் கடவுளை வழிபட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். சிவலிங்கத்தைத் தான் ஆதியில் சைவர்கள் வழிபட்டார்கள். இதன் பரிணாம வளர்ச்சியில் மூர்த்தி வழிபாடு எங்கும் பரவிற்று. நாங்கள் வழிபடுவது கல்லையும், செம்பையுமல்ல, அவற்றிலுள்ள கடவுளையே. விக்கிரகம் அழகாக இருந்தாலும் சரி, கரடு முரடானதாக இருந்தாலும் சரி, அஃது ஒரு லிங்கமே - குறியே தவிரக் கடவுளல்ல. பிரபஞ்சத்திலுள்ள சக்தியெல்லாம் கடவுளே. உயிர்களுக்கெல்லாம் உயிரும் அவரே. அவருக்கு முதலுமில்லை, முடிவுமில்லை. ஆயினும் எங்குமுள்ள அவரைக் கண்டு பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. இருப்பினும் பராசக்தியான பரம்பொருளின் - கடவுளின் விதிகளுக்கு அடங்கிக் கட்டுப்பட்டு முயன்றால்தான், நம்மோடும், நமக்குள்ளும் இருக்கும் கடவுளைக் கண்டு கொள்ளலாம். நிற்பனவும், திரிவனவுமாகிய எவ்வுயிரையும், துன்புறுத்தாமலும், வதைக்காமலும், வதைக்கக் காரணமாயில்லாமலும் எவன் உள்ளானோ அவனே உண்மையான சைவன். வேதவழிபாடு தகுதியற்றவர்களைச் சென்றடைந்து விட்டபடியால், சைவமும், தமிழும் நிலைத்திருக்க திருக்குறளையும், தேவார திருவாசகங்களையும் பயின்று உய்திபெறுவோமாக! சைவமும் தமிழும் வாழ்க!

## தேருலா தெருவுலா திருவிழா – அந்த திருமுருக பக்தர்க்கு பெருவிழா

சிங்கங்கள் யாழிகள் சிற்பங்கள் சிறந்தோங்கும்
சித்திரப் பொன்மணித் தேரினிலே
மங்கல குங்குமம் பொங்கும் மனைவியர்
சகிதமாய் பக்தர்க்கு நேரினிலே
தங்கமயில் மீதிலே அமர்ந்து அழகாலய
புனிதப் பெருவெளி வீதியிலே - ஆவணித்
திங்களில் திருஉலா வருமந்த பெருவிழா
தனையங்கு என்கண்கள் காண்கையிலே
பொங்கும் கடலென பக்தரின் அரோகரா
பேரொலி விண்ணையும் தாண்டையிலே
எங்கும் நிறைந்தஎம் பெருமானுடன் மனம்
சங்கமிக்கும் அவன் அண்டையிலே
அங்கம் சிலிர்த்தெமை அறியாம லேவாய்
அரோகரா எனுமப் போதினிலே - நிதம்
தங்குமே நல்லைக் குமரனின் அருளும்
ஆசியும் அடியவர் மீதினிலே.

**டே.த.எட்வின்**
பாதுகாப்பு உத்தியோகத்தர்
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு
## கேள்வியும் விளக்கங்களும்

ஜி. பற்குணராஜா B.A, M.A
முதல்வரின் செயலாளர், யாழ். மாநகரசபை.

**1. இறைவனை ஆலயத்துக்கு சென்று தான் வழிபட வேண்டுமா?**

பசுவின் உடல் முழுக்க பால் பரவியிருந்தாலும் மடியின் மூலமாகத் தான் பாலைப் பெறமுடியும். காதைப் பிடித்திழுத்தால் பால் வராது. பூமியினடியில் எங்கும் வியாபித்திருக்கும் தண்ணீரை நாம் உபயோகப்படுத்த வேண்டுமாயின் ஓரிடத்தில் கிணறு வெட்டித்தானே தண்ணீரை எடுக்கின்றோம். அன்றி, வெயிலிலே வெப்பம் நிறைந்திருக்கிறது. ஆனால், நேராக சூரியனுடைய வெயிலிலே ஒரு துண்டை வைத்தால், அது பற்றி ஏரியாது, வெதும்பும். ஆனால் சூரியகாந்தக் கண்ணாடியின் ஊடாக வருகின்ற வெயிலிலே துண்டையோ, பஞ்சையோ வைத்தால் திக்கென்று தீப்பிடித்துச் சாம்பலாகிப் போகும். நேர் வெயிலுக்குத் துண்டைக் கொளுத்துகின்ற ஆற்றல் இல்லை. சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வருகின்ற வெயில் அந்த துண்டை எரித்து விடுகின்றது. என்ன காரணம்? எங்கும் பரந்து விரிந்திரிக்கின்ற ஆதித்தன் ஒளியை அந்தச் சூரியகாந்தக் கண்ணாடி சேர்த்து, ஈர்த்து அனுப்புகிறது. அதுபோல், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளை, நால்வர்களும், ஆழ்வார்களும், அருணகிரிநாதர், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் போன்ற அருளாளர்களும், வேதவித்துக்களுமாக இருக்கின்ற பெரியோர்களும் மந்திர யந்திரத்தினாலே சேர்த்து ஈர்த்து திரட்டி வைத்திருத்திருக்கின்றார்கள். மற்ற இடங்களில் இறைவனை வழிபடுவது வெயிலிலே வேட்டியை வைப்பது போல. ஆலயங்களிலே இறைவனது சன்னிதானத்திலே வழிபடுவது சூரியகாந்தக் கண்ணாடியின் கீழே வேட்டியை வைப்பது போல இது உடனே தீப்பிடித்துக் கொள்கிறதல்லவா? அதுபோல அங்கு நம் வினைகள் வெந்து போகும். ஆகவே வினைகள் வெந்து மறுபிறப்பு உண்டாகாதிருப்பதற்கு ஆலய வழிபாடு இன்றியமையாதது. அன்றி பாமரர் மட்டுமல்லர், இறைவனது அருளைப் பெற்ற ஞானிகளும் ஆலயம் சென்று வழிபட வேண்டும்.

**கோவிலுக்கு எப்படி செல்லவேண்டும்?**

ஆலயம் என்பது ஆண்டவன் திருவடியில் ஆன்மா லயிப்பதற்கு உரிய இடம் என்று பொருள். மற்றும் "ஆ" என்பது ஆணவ மலத்தையும் "லயம்" என்பது அடங்கியிருத்தலையும் உணர்த்தும் ஆகவே ஆலயம் என்பது ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம் என்றும் பொருள் கொள்ளலாம். அந்த ஆலய வழிபாட்டிற்கென்றே சில விதிமுறைகள் உண்டு. அதாவது அகம்புறம் இரண்டும் தூய்மையாக இருக்க வேண்டும். புறத் தூய்மை நீரால் அமையும், அகத்தூய்மை வாய்மையால் அமையும், தூய மனம், வாக்கு, காயத்துடன் ஆலயத்துக்குள் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தூய்மையில்லாமல் செய்யும் வழிபாடு பத்தியம் இல்லாமல் மருந்து சாப்பிடுவது போலாகும். ஆலயத்திற்குச் செல்லும் போது உடம்பும் உள்ளமும் சுத்தமாக இருத்தல் வேண்டும். உடம்புச் சுத்தத்தை நாம் குளித்தோ, முழுகியோ, பேணிக்கொண்டு, தோய்த்து உலர்ந்த சுத்தமான எளிய ஆடை அணிந்து செல்ல வேண்டும். ஆலயத்திற்கு செல்லும் போதும் அங்கே சென்ற பின்னரும் வீண்வார்த்தைகள் பேசாமல் இறை நினைவோடு செல்வதே சிறந்த முறையாகும்.

**ஆலயத்தில் அதிகார நந்தி ஏன் இருக்கின்றது?**

பொன் நகைகளை வைத்துப் பூட்டியுள்ள பெட்டியை எவ்வளவு தான் பிரியமாக திறக்க முயன்றாலும் சாவியில்லாமல் திறக்க முடியாது. அதுபோல ஆலய வழிபாட்டிற்கு போகும் போது அதிகார நந்தியை நிச்சயமாக வணங்க வேண்டும். அதிகார நந்தி நம்முடைய இந்து மதத்திற்கு முதல் குரு. நந்தி என்னும் சொல்லுக்கு மகிழ்ச்சி என்பது பொருள். "என் நந்தி யானனை எடுத்துரைத்தானே" என்று திருமந்திரம் சொல்கிறது. ஆகவே "நந்தியெம் பெருமானை வழிபட்டு விட்டு அவரது ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு ஆலயத்துக்குள்ளே செல்ல வேண்டும்.

**நந்திக்கருகிலுள்ள கொடி மரத்தின் தத்துவம் என்ன?**

கொடி மரம் தான் நம் உடலிலேயுள்ள முதுகுத்தண்டு முதுகுத்தண்டிலே 32 கட்டுகள் இருப்பது போல கொடி மரத்திலேயும் 32 கட்டுகள் இருக்கும் அதில், ஆதி சைவராக இருக்கின்ற குருக்கள் வேதமந்திரங்களைச் சொல்லித் தர்ப்பைக் கயிற்றுடன் வெள்ளைத் துணியை வளைத்து வளைத்து ஏற்றுவார் அது தான் "சுழுமுனை நாடி" (மூலாதாரத்திலிருந்து உச்சித்துவாரம் வரைக்கும் நிற்கும் நாடி) கொடிமரம் - சிவபெருமான், கொடிக் கயிறு - திருவருட்சக்தி, கொடித் துணி - ஆன்மா, தர்ப்பைக்கயிறு - பாசம், அதாவது உயிர்களையும் அறத்தையும் மேனிலைக்கு உயர்த்துவதையே கொடியேற்றம் உணர்த்துகின்றது.

**கொடி மரத்தருகில் எப்படி வணங்க வேண்டும்?**

தாய்மார்கள் ஐந்து அங்கங்கள் பூமியில் பட பஞ்சாங்க நமஸ்காரமும் ஆண்கள் எட்டு அங்கங்கள் தரையில்பட அஷ்டாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும்.

**பலிபீடத்தின் விளக்கம் என்ன?**

பலிப்பீடத்திற்குப் பத்திரலிங்கம் என்று பெயர். அதற்கு அடுத்த படியாக நந்தி படுத்திருப்பார். நந்தி என்பது ஆன்மா. ஆன்மாவிலுள்ள ஆணவமலம் அந்த பத்திரலிங்கத்தின் பின்னே ஒதுங்கியிருக்கிறது. அந்த பத்திரலிங்கத்திற்கு அருகே போனவுடன், நாமெல்லாம் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் பலியிட வேண்டும்.

**"துள்ளுமறி யாமனது பலி கொடுத்**
**தேன்கன்ம**
**துஷ்டதே வதைக ளில்லை"**

என்று தாயுமானவர் பாடுகின்றார். ஆகவே பத்திரலிங்கத்திலே நான் என்ற அகங்காரத்தைப் பலி கொடுக்க வேண்டும்.

**பலிபீடத்தை எப்படி வணங்க வேண்டும்?**

பலிபீடத்திற்கு இப்பக்கம் வந்து வடக்கு, மேற்கு நோக்கிய சந்நிதியாயின் இடப்பக்கத்திலும், கிழக்கு, தெற்கு நோக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய சந்நிதியாயின் வலப்பக்கத்திலும் நின்று அபிஷேக, நிவேதன சமயமில் லாத போது, மூன்று தடவையாயினும், ஐந்து தடவையாயினும், ஏழுதடவையா யினும், பன்னிரெண்டு தடவையாயினும் வணங்க வேண்டும். நமஸ்காரம் ஒரு தரம் இரு தரம் செய்வது பிழையாகும்.

**கோயிலில் ஏன் பிள்ளையாரை முதலில் வணங்க வேண்டும்?**

எல்லாவற்றிற்கும் மூலமாக இருப் பது ஓங்காரம். விநாயகர் ஓங்கார வடிவ மானவர். ஓங்காரத்திலிருந்து அகில உல கும் தோன்றி அதிலேயே ஒடுங்குகின்றது. ஆகவே உள்ளே நுழைகின்ற போது, பிரணவாகாரமான பிள்ளையாரை வண ங்கி விட்டுப்போவது சம்பிரதாயம். அதா வது முதன்முதலில் பிரணவத்தை வணங்க வேண்டும்.

**கோவிலில் கருவறை (கர்ப்பக்கிரகம்) ஏன் சிறிதாக உள்ளது?**

தகராகாசம் என்றால் சிறியது என்று பொருள். நம்முடைய இருதய கமலத்தைத் தெரிவிப்பது அந்தக் கர்ப்பக் கிரகம். இருதய கமலமானது தொங்கிக் கொண்டிருக்கும். கமலமாகிய தாமரை யில் ஒரு வெளியிருக்கிறது. அது ஞான ஆகாசம். சிதாகாசம் சித் + அம்பலம் = சிற்றம்பலம் (சிதம்பரம்) இதைத்தான் நக் கீரதேவர்,

"ஓவற இமைக்கும் சேண் விளக்கு அவி ரொளி" என்றார் சேண் : ஆகாசம் ஓது தல் : வெளியே செல்லுதல்

"ஓவு நாள் உணர்வொளிநாள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். நம்முடைய புலன்கள் வெளியே போவதினால் உள்ளே இருக்கும் ஒளி நமக்கு தெரிவதில்லை. நம்முடைய உள்ளத்தில் சிறிதாக இருக் கும் ஒளி ஞானஒளி. அது ஞானவெளி:- இது ஞான ஒளி

**தேங்காய் உடைப்பதன் தத்துவம் என்ன?**

தேங்காய் உடைப்பதே ஆன்மா வைப் பற்றியுள்ள மும்மலங்களைப் போக்குவதற்குத்தான். தேங்காயின் மேலே இருக்கின்ற மட்டை மாயாமலம், உரித் தெடுக்கின்ற நார் கன்மமலம், உள்ளே இருக்கிற ஓடு ஆணவமலம் உள்ளே இருக்கும் வெள்ளைப் பருப்பு பேரின்ப த்தை உணர்த்தும். எனவே ஆன்மாமும் மலத்தை நீக்கி பேரின்பம் பெற வேண் டும் என்பதை உணர்த்தத்தான் சுவாமிக் குத் தேங்காய் உடைத்து வழிபடுகின் றோம்.

**பஞ்சபுராணம் பாடுவதன் தத்துவம் என்ன?**

நம்பியாண்டார் நம்பியடிகள் திரு முறைகளை வகுத்தார். சைவத்திலே, ஈசானம், தத்புருடம், அகோரம், வாம தேவம், சத்தியோஜாதம் இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்திரம் என்று பதினொரு மந்திரங்கள் உள்ளன. அந்த பதினொரு மந்திரங்களுக்கும் பதி னொரு திருமுறைகளை வகுத்தார். அவர் மறைந்து நூற்றாண்டுக்கு அப்பால் தெய்வ சேக்கிழார் பாடிய பெரியபுராணம் சிவமந் திரமாக, பஞ்சாட்சர மந்திரமாக, பன்னி ரெண்டாம் திருமுறையாக ஆயிற்று அதை முழுக்கப் பாராயணம் செய்ய முடியாத போது, பஞ்சபுராணமாகத் தொகுத்து வகுத்து நம்முடைய முன்னோர்கள் வைத் திருக்கிறார்கள். ஆகவே தேவாரம், திரு வாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்ற இந்தப் பஞ்ச புராணங்களைப் பாராயணம் செய்தால் எல்லாவற்றையும் பாராயணம் செய்த புண்ணியம் உண்டாகும். அதாவது இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து பாடல்களைப் பாடினால் பஞ்சாட்சரம் சொன்னமாதிரி.

**நவக்கிரக வழிபாட்டால் பெறும் பயன்கள் என்ன?**

இன்னின்ன கிரகத்தை வழிபட்டால் இன்னின்ன பலன் என்பதைக் கீழ் வருமாறு காண்போமாக.

| | | |
|---|---|---|
| சூரியன் | - | ஆரோக்கியம், பேரறிவு, ஆன்மவிருத்தி |
| சந்திரன் | - | புகழ், மனோவிருத்தி |
| செவ்வாய் | - | செல்வம், தைரிய விருத்தி, இரத்த விருத்தி |
| புதன் | - | கல்வி, அறிவு |
| குரு | - | மதிப்பு, செல்வம் |
| சுக்கிரன் | - | அழகு நாவன்மை, இன்பம் |
| சனி | - | சந்தோஷம், செயலாற்றல் |
| ராகு | - | பகைவர் பயம் போக்குதல், காரிய சித்தி |
| கேது | - | குல அபிவிருத்தி, ஞானம், முத்தி வாய்ப்பு |

**திருவிழாக்களின் தத்துவம் என்ன?**

திருவிழாவில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலிய ஐந்தொழில்கள் அறிவுறுத்தப்படுகின்றன. பக்குவமில்லாத ஆன்மாவுக்குப் பக்குவத்தை உண்டாக்கும் பொருட்டுத் திருவிழாவின் போது பகவான் வெளியே வருகின்றார். வள்ளுவர் ஓர் அதிகாரத்திற்கு பத்துக் குறள்கள் சொன்னார். பகவான் பத்துமுறை அவதரித்தார். (தசாவதாரம்). ஆகவே பத்து நாட்களாக வெளியே வந்து அருள்புரிகின்றான் என்பது பொருள். திருவிழா செய்விப்பது மிகமிக முக்கியம்.

“கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆய்தல்” என்று ஞானசம்பந்தர் கூறினார்”

“திர்திஷ் கந்த மூர்த்தி” என்றார் ஆதி சங்கரர்.

“கங்குல் பகல் எண்கண் மற்றொன்றும் காணற்க” என்றார் மாணிக்கவாசகர்.

**கற்பக விருட்ச வாகனத்தின் பெயர் என்ன?**

இந்தவாகனம் காத்தல் தொழிலை உணர்த்தும். மரத்தின் கிளைகள், இலைகள், எண்ணில்லாத ஜீவராசிகளையும் மரமும், மரத்தின் வேரில் அமைந்த பீடமும் பார்வதி பரமேஸ்வரரை உணர்த்தும். பழங்களில் உள்ளிருக்கும் விதைகள் எம் பெருமான் உயிருக்குயிராய்க் கலந்து நிற்கும் தத்துவத்தை விளக்கும். அடியார்களின் வேண்டுதல்களை அருள்வான் என்ற குறிப்பில் கற்பக மரத்தின் அடியில் அமர்ந்து காட்சியளிக்கிறார்.

**பூத வாகனத்தின் தத்துவம் என்ன?**

இது விருத்திக்கிரம சங்கார கோலம் என்பதைக்குறிக்கும். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம் என்னும் ஐம் பூதங்களின் வடிவான உடலை இறைவன் இயங்குகின்றான் என்பது பொருள்.

**கைலாசவாகனம் உணர்த்தும் தத்துவம் என்ன?**

சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் கைலாசம். மனம், வாக்கு, செயல்களைக் கடந்த தன்மையை அது உணர்த்தும், அந்தக் கைலாசபர்வதத்தை ஆணவ வடிவமான இராவணன் தூக்க முயன்றான். பெருமான் தனது திருவடியின் மெல் விரலால் அழுத்த, அதன் கீழ் அகப்பட்டு துடித்தான். பின்னர் இராவணன் சாம கானம் மாடி வாளும் வரமும் பெற்றான். இறைவனின் கருணையை உணர்த்துவது இது. கொடியவர்களானாலும் பிழையுணந்து வழிபட்டால் பெருமான் அருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறலாம் என்ற தத்துவத்தை விளக்குவது இது.

**ரிஷப வாகனத்தின் தத்துவம் என்ன?**

ஊழிக்காலத்தில் உலகம் அழியினும் தரும தேவதை தான் அழியாதிருக்கும் பொருட்டு நந்தி வடிவத்தில் அமைந்தது. சமம், விசாரம், சந்தோஷம், சாது சங்கமம் என்னும் நான்கு குணங்களை நான்கு கால்களாகக் கொண்டது. ரிஷபம் வெண்மை நிறங்கொண்ட பரிசுத்த தேவதை, அதைப் போல, ஆன்மாக்கள் பரிசுத்தம் பெற்றால் இறைவன் அருளைப் பெறலாம் என்ற தத்துவத்தை இது விளக்குகிறது. அருள்பாலிக்கும் இறைவன் அம்பிகையுடன் ஆன் ஏறிவருவான் (ஆன் - எருது).

**யானை வாகனம் என்றால் என்ன?**

சிருஷ்டி லயக் கிரமத்தில் விருட்சம் போல் விரிந்த பாகுபாடுகள் எல்லாம் ஒரே பிண்டமாக, பெரிய உடம்பையுடைய யானையைப் போல் ஒடுங்குவதைக் குறிக்கும். இறைவன் யானைமீது அமர்ந்து வருவது ஆணவத்தையும் ஐம்புலன்களையும் அருள் என்னும் அங்குசத்தால் அடக்குவதைக் குறிக்கும்.

**நாக வாகனம் எதனைக் குறிக்கிறது?**

விஷம், ரத்தினம், படம், இவற்றை மறைத்துக் கொண்டு, வேண்டும் போது வெளிப்படுத்தும் நாகம் போல், திரோபவம் அல்லது மறைத்தல் தொழிலை இது குறிக்கும்.

**தேர்த்திருவிழாவின் தத்துவம் என்ன?**

தேரோட்டம் திரிபுர தகனத்தைக் குறிக்கும். திரிபுர தகனம் என்பது இறைவனருளால் மும்மலங்களையும் போக்க வேண்டும் என்பதைக் குறிக்கும்.

**தெப்பத் திருவிழாவின் விளக்கம் என்ன?**

இறைவன் பிறவிக் கடலில் சூழ்ந்திருக்கும் உயிர்களை அருளாகிய தெப்பத்திலேற்றி முத்திக்கரை சேர்ப்பதே இதன் தத்துவமாகும்.

**ஆணுக்கு சந்நியாசம் உண்டு.**
**பெண்ணுக்கு ஏன் சந்நியாசம் இல்லை?**

ஆண்கள் இறைவனை நோக்கிச் செல்வது தான் சந்தியாசம்

சம் :- நன்றாக

நியாசம் :- விடுவது, நன்றாக விட்டு விடுதல்.

**"அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்**
**வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒருங்கு."** (குறள் -343)

என்றார் திருவள்ளுவர். அப்படி எல்லாவற்றையும் விட்டு விட்டும் பரத்தை நினைத்து செல்வது சந்நியாசம். ஆனால், பெண்மணிகள் கணவனையே தெய்வமாக எண்ணி மற்ற எல்லாவற்றையும் விட்டு விடுவதனாலே, எல்லாப் பெண்ணும் சந்நியாசிகள் தாம். ஆண்டவனை நோக்கி ஆண்கள் போகின்றார்கள், கணவனை நோக்கி மனைவி வருகின்றாள். அதனால் தான், பெண்கள் ஒவ்வொருவரும் சந்நியாச நிலை கொள்கின்றனர். "பரனை நினைத்து விட்டதே பேரின்ப வீடு" ஆகவே பெண்களுக்கு கணவனைத்தவிர வேறு தெய்வம் இல்லாமையாலே அவர்களுக்குச் சந்நியாசம் இல்லை.

**விபூதி அணிவதன் அவசியம் என்ன?**
**எங்கெங்கு அணிய வேண்டும்?**

அசுத்தங்களைச் சாணம் அகற்றுவது போல் நம் உடலிலுள்ள அசுத்தங்களை அகற்ற சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் வீபூதி மிகவும் அவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விபூதி முடிவில் யாவரும் பிடிசாம்பல் ஆவர் என்னும் உண்மையை நமக்கு உணர்த்துகின்றது. விபூதியை நம் உடம்பில் சிரசு, நெற்றி, மார்பு, தொப்பிழ், முழந்தாள், இரண்டு புயங்கள் இரண்டு முழங்கைகள் இரண்டு மணிக்கட்டுக்கள், இரண்டு விலாப்புறம், முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடங்களில் அணிய வேண்டும். இதில் முழங்கையும், மணிக் கட்டையும் நீக்கிப் பன்னிரண்டு இடங் களில் அணிவதும் உண்டு.

**உருத்திராட்சம் அணிவதன் நோக்கம் என்ன?**

சிவபிரானின் திருக்கண்களிலிரு ந்து. பொழிந்த நீரில் தோன்றியதே உருத்திராட்சம் எனப்படும். நல்ல உருத் திராட்சத்தை உரைத்துப் பார்த்தல் பசும் பொன்னாகத் தெரியும். உருத்திராட் சத்தை உரைத்து மருந்தோடு கலந்து இடித்தால் பல நன்மைகள் தோன்றும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றார் கள். உருத்திராட்சம் அணிபவரை எத்த கைய துன்பங்களும் வந்தடையா.

**சந்தணம் குங்குமம் பூசுவதால் உண்டாகும் பலன் என்ன?**

சந்தணம் உடலின் வெப்பத்தைத் தணித்துத் தண்மையைத் தந்து உற்சா கத்தை உண்டு பண்ணுகிறது.

புருவமத்தியில் பல நரம்புகள் கூடுவதால் அவைகளுக்கு வெப்பம் ஏற் படாதிருக்க குளிர்ச்சியுடைய குங்குமம் அணிதல் அவசியம். சிவபெருமானின் நெற்றிக்கண்ணை நினைப்பூட்டுவதற்கும் அதை அணிந்து கொள்கின்றனர்.

**வைணவர்கள் நாமம் அணிவதன் தத்துவம் என்ன?**

நாமம் ஒருவகைத் திருமண்ணால் இடப்படுவது. எல்லாம், முடிவில் மண் ணாய் விடும் என்பதை இது உணர்த்து கின்றது.

"வாழ்வாவது மாயம்" இது மண் ணாவது திண்ணம்" என்பர். அல்லாமலும் இறைவனின் திருவடியின்றி உயிர்களுக் குக் கதியில்லை எனவும், திருமாலின் திருவடிச்சாயலாய் இதனை வைணவர்கள் இடுகின்றனர்.

## அன்பு செலுத்தும் மதம்

நாம் ஒருவரையொருவர் வெறுத்து ஒதுக்குவதைப்
போதிக்கும் மதங்கள் இன்று உலகத்தில்
ஏராளமாக இருக்கின்றன. ஒருவருக்கொருவர்
அன்பு செலுத்தி நேசிக்க வேண்டும்
என்பதைப் போன்ற மதங்கள்
போதிய அளவு இல்லை.

**டாக்டர் ராதாகிருஷ்ணன்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊழிக் கனலும் அணுகாது

செல்வி செல்வஅம்பிகை நடராஜா
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

முருகு என்ற சொல் இளமை, அழகு, மணம், தெய்வத்தன்மை என்று பல பொருள்படும் ஒரு சொல்லாகும். முருகன் அழியா அழகும் அன்பும் உடையவனாக என்றும் இளமையானவனாக அறியாமை இருளை நீக்கி அறிவை வளர்ப்பவனாக அமைகின்றான். இயற்கை நிலையையொட்டி நிலத்தைப் பாகுபாடு செய்த பண்டைத் தமிழர்கள் மலை சார்ந்த பகுதியைக் குறிஞ்சி எனப் பெயரிட்டனர். அந்நிலத்திற்குரிய கடவுளாக முருகனைக் கண்டனர்.

"கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம்
உய்ய"

என்று கந்தபுராணம் உலகம் உய்ய வந்த தெய்வமாக முருகனைச் சிறப்பிக்கின்றது. முருகனுடைய ஆறுமுகமும் பன்னிருகைகளும் அவை ஏந்தியுள்ள ஆயுதங்களும் ஊர்தியாகிய மயிலும் தத்துவங்களை விளக்கும் குறியீடுகளாக அமைந்துள்ளன.

## ஆறுமுகமான பொருள்

"எண்சாண் உடம்பிற்கு சென்னி பிரதானம்" என்பது ஆன்றோர் வாக்கு. தலை பெறுகின்ற சிறப்பை வேறு எந்த உறுப்பும் பெறமுடியாது. நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்ற ஐம்பூதங்களின் வடிவமாக அண்டகோளம் அமைந்துள்ளது. இவற்றை அறிவதற்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளும் மனித உடலில் அமைந்துள்ளன. இவற்றை ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்ற ஐம்பூதங்களால் உணரலாம். இவற்றுக்கு மேலாக எண்ணவும் உணரவும் வல்லது மனம். இது பகுத்தறிவை உடையது. இந்த ஆறும் ஆறுமுகங்களுக்கு ஒப்பானவை. அறிவு மயமான முருகன் ஞானத்தின் திருவுரு ஆகின்றான். அவன் உலகமெங்கணும் நீக்கமற நிறைந்துள்ளான் என்ற கருத்துடன் இணைகின்றான். ஆறாவது முகம் பகுத்தறிவு எனக் கொள்ளப் பெறுவதனால் அவன் உலகினை இயக்கும் மாபெரும் சக்தியாகக் கருத இடமளிக்கின்றான். திருமுருகாற்றுப்படையைப் பாடிய நக்கீரர் திருச்செந்தூரைப் பற்றிய பகுதியில் முருகனுடைய ஆறு முகங்களும் அடியவர்களுக்கு அருள் புரியும் முறையைக் காட்டியுள்ளார். காவல், அருள், அறம், மெய்யறிவு, தீயரை அழித்தல், மனைவாழ்க்கை ஆகியவை முருகனின் ஆறுதிருமுகங்களின் விளைவுகளாக அமைந்துள்ளன. வாழ்க்கை நிகழ்ச்சிகள் முழுதும் இவற்றுள் அடங்கும். இக்கருத்து நிலையை ஒட்டியே அருணகிரியாரும் "ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே" என்ற திருப்புகழ் பாடலில் தமது அருள் அநுபவத்தை வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு முருகனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகங்களும் ஆறுவகையான பண்பு களை உணர்த்துவனவாக உள்ளன.

## பன்னிரு கையும் பால்பட இயற்றி

முருகனுடைய பன்னிரண்டு கை களுக்கும் தத்துவ விளக்கம் கூறலாம். அப்பெருமான் ஒவ்வொரு கையிலும் ஒவ் வொரு ஆயுதத்தைத் தாங்கி உள்ளான். மற்ற எந்தக் கடவுளருக்கும் இல்லாத வகையில் அதிகமான எண்ணிக்கையில் ஆயுதங்களை உடையன். முருகனுடைய பன்னிரு கைகளுக்கும் ஆயுதங்கள் மாறு பட்டுக் கூறப்படுகிறது. அவை மூர்த்தி பேதங்களுக்கு ஏற்றதோர் அமைப்பாகக் காணப்படுகின்றது. இப்படைகளைப் பற்றி திருமுருகாற்றுப்படை, திருச்செந்தூர்க் கலிவெண்பா, திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தபுராணம், தணிகைப் புராணம், குமார தந்திரம் போன்ற நூல்களில் அறியலாம். முருகன் கொண்ட பல்வேறு போர்க் கோலங்களில் அவனது கைகளில் கொண்ட படைக்கலங்களே ஆயுதங்களாக அமைந் துள்ளன. வேல், அங்குசம், பாசம், சக்கரம், வில், அம்பு, கத்தி, கோழிக் கொடி, வாள், கோடரி, சூலம், கதை, வஜ்ரம், உளி, தோமரம், மழு போன்றன படைக் கலங்களாக அமைந்துள்ளன.

**"பன்னிரு கமல பாணியு மவற்றின்**
**சூலமும் வேலுந் துரோணமுஞ் சரமும்**
**பாலமும் குலிசமும் பரிசையும் வாளும்**
**மாழியும் மழுவும் அபயமும் வரதமும்"**

எனச் செந்தூர் அகவல், முருகனின் ஆயு தங்கள் பற்றி விவரிக்கின்றது. தணிகைப் புராணமும்

**"சீரணி சிருக்கு மணிவடஞ் சங்கு**
**திகிரி சூலப்படை யிலைவேல்**
**போரணி பாச மங்குசம் கழைவில்**
**பூங்கணை வேறு வேறணியா**
**ஆரணன் மாயன் அரனிப முகத்தன்**
**அனங்கனென் றிவர்தொழிற் கெல்லாம்**
**காரண மாத றெளித்தருள் கொழிக்குங்**
**கன்னியை யுன்னியேத் தெடுப்பாம்"**

எனப் பாடுகின்றது. இந்த ஆயுதவர்ண னையால் முருகனும் ஏனைய தெய்வத் தொழிலை ஆற்றும் திறனுடைய சமத்துவக் கடவுள் என்பது தெளிவாகின்றது.

அவனுடைய கைகளில் தவழும் அனைத்தும் ஆயுதங்கள் அல்ல. ஜப மாலை, கமண்டலம், மணி, கரும்புவில், மலரம்பு, தாமரை, பூரண கும்பம் முதலான வற்றை பல்வேறு வடிவங்களில் காரண காரியம் கருதி கைகளில் ஏந்தியுள்ளார். அன்பும் அருளும் உருவாகி விளங்கும் இறைவன் தன்கைகளில் ஆயுதங்களைத் தாங்கி இருப்பது இயல்புக்கு முரணா னது. உயிர்களிடத்தில் கருணையுள்ள இறைவன் அவர்களை எவ்விதமான ஆபத்தி லிருந்தும் காப்பாற்றும் பேராற்றலும் பெரு வல்லமையும் பெற்றுள்ளான் என்பதை அவனது கைகளில் ஏந்தியுள்ள ஆயுதங் கள் வெளிப்படுத்துகின்றன. தஞ்சம் என்று சரணடையும் அடியாரைக் காத்தருளவும் செய்த பிழையை உணர்ந்து வருந்துப வரின் அறியாமையை நீக்கி நல்லருள் புரியவும் தயார் நிலையில் காத்திருக்கும் ஆயுதங்கள் அவனுடைய தாயுள்ளத் தைக் காட்டுகின்றன.

## வேலுண்டு வினையில்லை

வேல், முருகப்பெருமானின் சிறப் பான ஆயுதம். வெல் என்ற வேர்ச்சொல் முதனிலை நீண்டு வேல் என்று ஆகியது. வேல் என்றால் வெற்றி என்ற பொருள். எல்லாவற்றையும் வெல்வது வேல். நமது வாழ்க்கையில் இருவகைப் பகைவர் களை நாம் காணலாம். வெளிப்படையா கத் தெரியும் புறப்பகையினர் ஒருவகை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களை ஒருவாறு வெற்றி கொள்ளலாம். நமக்குள் மறைந்து நிற்கும் அகப் பகைவர்கள் மற்றொரு வகையினர். ஐம்புலப் பகைவர்களாகிய இவர்களை வெற்றி கொள்ள உதவுவது முருகன் கையிலுள்ள வேல். அந்த வேலுக்கு ஞானம் என்று பெயர். அறிவின் முழுவுருவம் வேல். அறிவு ஆழமாகவும் அகலமாகவும் கூர்மையாகவும் திகழும். வேலின் அமைப்பும் இவ்வாறே விளங்குவதைக் காணலாம். அறிவு ஒன்றே எல்லாவற்றையும் வெல்லும். "ஞான பூரண சக்தி தரித்தருள் பெருமாளே" என்பார் அருணகிரிநாதர். முருகனுக்கு ஆறுமுகங்கள் இருப்பது போல வேலுக்கும் ஆறுமுகங்கள் உண்டு. ஏனைய ஆயுதங்களின் பெயர்களை மக்களிற்கு இடுகின்ற வழக்கம் இல்லை. வேற்படையின் சிறப்பு நோக்கி கதிரவேல், வெற்றிவேல், செவ்வேல், முத்துவேல், வேலாயுதம், வேலன், சக்திவேல், தங்கவேல், ஞானவேல் போன்ற திருநாமங்களை உலகில் இட்டு வழங்குவதைக் காணலாம். போற்றி சொல்ல வந்த கச்சியப்ப சிவாச்சாரியார் வேலுக்கு மட்டும் "திருக்கைவேல் போற்றி போற்றி" என இரண்டு முறை போற்றி சொல்லும் அருமை நோக்கத்தக்கது. வேலை வணங்குபவர்களுக்கு எல்லா நன்மைகளும் தாமே வந்தடையும். அவர்கள் பால் இயமனுடைய பாசக்கயிறு அணுகாது, பகைவரது பயம் உண்டாகாது.

**"துதிக்கும் மடியவர்க் கொருவர் கெடுக்கவிடர்**
**நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையும்"**

(வேல்வகுப்பு)

இது குறித்தே தமிழர் வேலை வணங்குவதைத் தமது வேலையாகக் கொண்டனர் போலும்.

**"தோகைமே லுலவுங் கந்தன் சுடர்க்கரத்தி**
**லிருக்கும் வெற்றி**
**வாகையே சுமக்கும் வேலை வணங்குவ**
**தெமக்கு வேலை"**

என்று செவ்வந்திப் புராணத்தில் சைவ எல்லப்பர் பாடியுள்ளமை இதற்குச் சான்றாகின்றது.

## குக்குடக் கொடி தரித்த பெருமாளே

முருகனுக்குக் கொடியாக விளங்குவது கோழி. கோழிக்கு சேவல், குக்குடம் என்ற பெயர்களும் உண்டு. முருகனுடைய கோயில் வாசலிலும் கோபுரத்திலும் உள் அமைப்புக்களிலும் கோழிக் கொடி பறக்கின்றது. கொடியானது கோயிலின் சிறப்பையும், உறையும் தெய்வத்தின் வெற்றிச் சிறப்பினையும் பறைசாற்றும். முருகன் திருக்கைகளில் கோழிக் கொடியைத் தாங்கியுள்ளான். சூரபன்மனது பாதி அம்சம் சேவற்கொடியாக இருக்கின்றது.

கோழியானது ஒளியை விரும்புவது. எனவே அது அறியாமை இருளைப் போக்கி மெய்யறிவாகிய ஒளியைப் பரப்பும் முருகனின் கொடியாக விளங்குவது பொருத்தமானதாகும். வைகறையில் கோழி கூவுதல் ஓங்கார மந்திரத்தை ஒளி வடிவில் உலகுக்கு உணர்த்துவது ஆகும். எனவே கோழியை நாததத்துவம் என்பர். நாதம் இல்லையேல் நானிலம் இல்லை. சேவல் நம் உயிர்க்குக் காவல். சிவஞான வடிவாகவே சேவல் விளங்குகின்றது. முருகன் கோழிக் கொடி ஏந்தி நம்மையெல்லாம் சிவஞானப் பேரொளியில் திளைக்கச் செய்கின்றான். திருச்செங்கோட்டில் முருகப் பெருமான் இடது கரத்தில் சேவற் கொடியைப் பிடித்துள்ள அரிய அழகுக்கோலம் அருணகிரியார் மனதில்



Digitized by Noolaham Foundation.

என்றும் நீங்காமல் நிறைந்திருக்க அக் காட்சி வேண்டியே "சென்ற இடங்கள் கந்தா எனும் போது செஞ்சேவல் கொண்டு வரவேணும்" என்று செங்கோட்டு வேலனை வேண்டுவார். சேவலின் ஆற்றலைப் போற்று மிடத்து, முருகனின் வெற்றிக் கொடியில் உறைந்த சேவல் அவனது ஆணைக்கு அடங்கி நின்று தன் சிறகை அடிக்க அதன் வேகத்தால் கடல் பிளந்தது. அண டச்சுவர் உடைந்தது. விண்மீன்கள் உதிர்ந் தன. இடையில் நின்ற மேருமலையும் குன்றுகளும் இடிந்தன. திருப்புகழில் "குற்றமற்றவர் உளத்தில் உறைவோனே குக்குடக் கொடி தரித்த பெருமாளே" எனப் பாடுகின்றார்.

மனித வாழ்க்கையில் துன்பமும் இன்பமும் முறையே இருள் ஒளி என்னும் நிலைகளுக்கு ஒப்பானவை. இருளிலி ருந்து விலகி ஒளி பரவும் நிலைக்கு அழைத்துச் செல்வது சேவலின் குரலே. சேவலே துயில் எழுப்புகின்றது. அதன் நாதமே விழிக்கச் செய்வது. அந்த நாத தத்துவமே கோழிக் கொடியாகவும் அமை கின்றது. இறைவன் நாதத்துவன். நாதங் கொண்டு இறைவனை அறிய வேண்டும். சேவற்கொடி ஏனைய படைக்கலத்திலும் உயர்ந்திருப்பதன் காரணம் யாவும் நாதத் தில் ஒடுங்க அதுவும் இறைவனிடத்தில் ஒடுங்குமென்பதே!

**நீலச் சிகண்டியில் ஏறும் பெருமான்**

ஆறுமுகப் பெருமானைத் தாங்கும் பேறுபெற்றது மயில். தேவரும் மூவரும் காணாத கந்தவேளின் திருவடியை எப் பொழுதும் கண்டு மகிழும் மாதவம் புரிந் தது மயில். மழையின்றி பூவுலகம் வாழாது. பயிர்கள் செழிக்கவும் உயிர்கள் மகிழ வும் காரணமாக இருப்பது மழை. கைமாறு கருதாத கடப்பாடுடையது மழை. இதனால் தான் கொடையாளர்களை "மாரியன்ன வண்கை" என உவமை கூறிச் சிறப்பிக் கின்றோம். மழை பொழியும் பொருட்டு வானம் இருண்டு வந்தவுடன் கார்மேகத்தை வரவேற்று, ஆயிரங்கண்களுடைய தோகையை விரித்துக் களிநடம் புரிந்து மகிழ்வது மயில். மழையினால் உலகம் இன்புறக் கண்டு, உலக இன்பத்தை தனது இன்பமாக எண்ணி அது மகிழ்கின்றது. மயில் தோகையை விரித்து ஆடும்போது அது "ஓம்" என்ற பிரணவ சொரூபமாக விளங்குவதைக் காணலாம். ஓங்கார சொரூபியான முருகன் ஓங்கார உருவம் மயிலின் மீது எழுந்தருளியிருக்கின்றான்.

**"ஆன தனிமந்திர ரூப நிலைகொண்ட**
**தாடு மயிலென்ப தறியேன்"**

என்பது திருப்புகழ். மந்திரங்களுள் தலை யாயது பிரணவ மந்திரம். அதன் உருவ மாக அமைவது தோகை விரித்தாடும் மயில். மயிலினுடைய பார்வை படுகின்ற இடம் நன்மை அடையும். "தூங்க அநுகூலப் பார்வை தீர செம்பொன் மயில்" என்பார் அருணகிரிநாதர்.

முருகனைக் காணவேண்டுமா னால் நாம் அவனிடம் செல்ல வேண்டும். அல்லது அவன் நம்மை நாடி வரவேண் டும். முருகப் பெருமானின் கந்தகிரியைச் சென்றடைவது நம்மால் இயலாத காரி யம். அதனால்தான் "வேல் வேல் முருகா வாவா முருகா" என்றும், "வருவாய் மயில் மீதினிலே வடிவேலுடனே" என்றும் நாம் அழைக்கின்றோம். எமது மனம், தன்னை நாடி வருவதை அறிந்து அவனே நம்மை நாடி வருவான். அடியவர்கள் அழைக்கும் போது எந்நேரமும் போய்ச் சேரும் வகை யில் மயில்மேல் அமர்ந்து இருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றான். இது அவனது பெருங்கருணைத் திறத்தைக் காட்டுகின்றது. கந்தரலங்கா ரத்தில் அருணகிரிநாதர் முருகன் மயில் வாகனத்தில் வருவது பற்றி அருமையா கப் பாடியுள்ளார்.

**"நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்**
**கோலக் குறத்தி யுடன்வரு வான்"**

மயிலை நினைத்து வாழ்த்தி வழி படுவார்க்கு விஷ பயம் வராது. ஆலகால விஷத்தை உண்ட சிவனுக்கு "நீலகண் டம்" என்ற பெயர் உண்டு. நீலகண்டம் என்பார்க்கு விஷபயம் உண்டாகாது. திருஞானசம்பந்த சுவாமிகளும், திருச் செங்குன்றூரில் விஷசுரம் நீங்க "திருநீல கண்டத் திருப்பதிகம்" பாடியருளினார். மயிலுக்கும் நீலகண்டம் உண்டு. "நீலக் கிரீவ ரத்தினக் கலாப மயிலே" என்பார் அருணகிரிநாதர். மயிலும் கொடிய விஷப் பாம்புகளை அடக்கும் வலிமையுடையது. அதன் கால்களுக்கிடையில் பாம்பு ஒன் றினை அடக்கி வைத்திருக்கும் காட்சியை ஓவியங்களில் காணலாம். மயிலை நினை த்து உருகுபவர்களுக்கு எல்லா வினை களும் இடர்களும் தீரும்.

**"கோழிக் கொடியை நின்வேலை மயிலைக் குறித்தவரை**
**ஊழிக் கனலும் அணுகாது"**

என்கிறார் சிதம்பரசுவாமிகள். நாமும் நல் லூரானை நாடி மனம் உருகி வழிபட்டு இடர்கள் நீங்கி இன்புற்று வாழ்வோமாக!

# நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் 2010
## விகிர்தி வருஷம் ஆவணி மாதம்
## மகோற்சவ விசேட தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 15.08.10 | ஞாயிறு | கொடியேற்றம் | பகல் 10.00 மணி | (01ம் திருவிழா) |
| 24.08.10 | செவ்வாய் | மஞ்சம் | மாலை 05.00 மணி | (10ம் திருவிழா) |
| 31.08.10 | செவ்வாய் | கார்த்திகை | மாலை 05.00 மணி | (17ம் திருவிழா) |
| 03.09.10 | வெள்ளி | சந்தானகோபாலர் | காலை 07.00 மணி | (20ம் திருவிழா) |
| 03.09.10 | வெள்ளி | கைலாசவாகனம் | மாலை 05.00 மணி | (20ம் திருவிழா) |
| 04.09.10 | சனி | கஜவல்லி மஹாவல்லி | காலை 07.00 மணி | (21ம் திருவிழா) |
| 04.09.10 | சனி | வேல்விமானம் | மாலை 05.00 மணி | (21ம் திருவிழா) |
| 05.09.10 | ஞாயிறு | தொண்டாயுதபாணி | காலை 07.00 மணி | (22ம் திருவிழா) |
| 05.09.10 | ஞாயிறு | ஒருமுகத்திருவிழா | மாலை 05.00 மணி | (22ம் திருவிழா) |
| 06.09.10 | திங்கள் | சப்பரம் | மாலை 05.00 மணி | (23ம் திருவிழா) |
| 07.09.10 | செவ்வாய் | தேர் | காலை 07.00 மணி | (24ம் திருவிழா) |
| 08.09.10 | புதன் | தீர்த்தம் | காலை 07.00 மணி | (25ம் திருவிழா) |
| 09.09.10 | வியாழன் | பூங்காவனம் | மாலை 05.00 மணி | (26ம் திருவிழா) |
| 10.09.10 | வெள்ளி | வைரவர் உற்சவம் | மாலை 05.00 மணி | (27ம் திருவிழா) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊன் படைத்த உத்தமர்

பொ. சிவப்பிரகாசம்
கொழும்புத்துறை.

தலம் – திருக்காளத்தி பண் – கொல்லி

**சந்தும் ஆர் அகிலொடு சாதி தேக்க(ம்) மரம்**
**உந்தும் மா முகலியின் கரையினில்**
**உமையொடும்**
**மந்தும் ஆர் பொழில் வளர் மல்கு வண் காளத்தி**
**எந்தையார் இணைஅடி, என் மனத்து உள்ளவே.**

சம்பந்தப் பெருமான்

## திருக்காளத்தி வரலாறு

தமிழ் நாட்டின் வடபால், ஆந்திர மாநிலத்தில், பொத்தப்பி என்னும் மலை நாட்டில் உடுப்பூர் என்னும் முதுபதி உண்டு. இதை கண்ணப்பர் திருநாடு, திருக்காளத்தி, சீகாளத்தி, காளகஸ்தி, தென்கைலாயம் என்னும் பல திருப் பெயர்களால் அழைப்பர். சென்னையி லிருந்து பேருந்து வழியாகவும், புகை வண்டி மூலமாகவும் திருக்காளத்தி என் னும் புனிதமான சிவஸ்தலத்திற்குச் செல்ல முடியும். பொத்தப்பி நாடு இரேணு குண்டா - கூடூர் றெயில் பாதையில் காள கத்தி நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உளது. திருக்காளத்தி பஞ்சபூதத் தலங்களில் ஒன்று. இது வாயுத் தலமாகும். கருவறையிலுள்ள திருவிளக் குச் சுடர் காற்றினால் அசைந்த வண்ணமே இருக்கும்.

சிலந்தியும், பாம்பும், யானையும் திருக்காளத்தி நாதனை வழிபட்டன என் பது புராண வரலாறு. சீகாளத்தி என்றால் சீ - சிலந்தி, காளம் - அரவம், அத்தி - யானை. சிலந்தி, பாம்பு, யானை ஆகிய மூன்றையும் மூலமூர்த்தி தன் சிவலிங்கத் திருமேனியில் ஒடுங்கிக் காட்சி தருகின் றார். இந்த சிவலிங்கத் திருமேனி சுயம் புத் திருமேனியாகும். சுவாமி மேற்கே பார்த்த வண்ணம் உள்ளார். தலவிருட்சம் கல்லால மரம்; அகண்ட வில்வமரம். திருக்காளத்தி திருக்கோயிலை ஐந்து கோபுரங்கள் அலங்கரிக்கின்றன. தேவா ரம் பாடிய மூவரும் இம்மலை மீது ஏறி வந்து திருப்பதிகம் பாடியுள்ளனர். இங்கே உள்ள "சோதி மரங்களால் இங்கு இருள் இல்லை" என்றார் சேக்கிழார் பெருமான். பச்சைக் கற்பூரம் கலந்த நீரால் திரு மஞ்சனம் செய்யப்பெற்று பக்தர்கட்கு தீர்த்தம் வழங்கப்படுகிறது. தலபுராணம் மூலம் தல வரலாற்றைக் கண்டறிய முடி கிறது. சுவாமி பெயர் காளத்தி அப்பர், கணநாதர், குடுமித் தேவர் ஆகும். தேவி பெயர் - ஞானப்பூங்கோதை. அப்பர் பெருமான் இவ்வம்மையாரை "ஞானப் பூங்கோதையாள் பாகத்தன்" என்று பாடிப் பரவியுள்ளார்.

## வேடர் குலம்

பொத்தப்பி நாடு, உடுப்பூர் குறிஞ்சி நிலமாகையால் இது மலைகள், நீர் நிலைகள், பூஞ்சோலைகள், அடர்ந்த காடுகள் நிறைந்த பிரதேசம் ஆகும். யானைக் கொம்புகளாலான தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலியை உடைய உடுப்பூர், தொன்மை வாய்ந்த சிற்றூராக விளங்கிற்று. இப்பதியில் வாழ்பவர்கள் மலைவாழ் வேடர்கள் ஆவர். விளாமரக் கிளைகளில் வேட்டைக்கான வார்களை உடைய வலைகள் தொங்கும். மனைகளின் முன்னுள்ள கற்பாறை முற்றங்களில் மலை நெல் உலரும்.

வரண்ட தலைமுடி உடைய வேடுவச் சிறுவர்களை பரக்கக் காணலாம். வேடர்களின் வன்சொற்களாகிய 'கொல், எறி, குத்து' என்ற சொற்களும், உடுக்கையின் ஒலியும், ஊது கொம்பின் ஓசையும், சிறு முகங்கொண்ட ஆகுளிப் பறையின் முழக்கமும், மலை அருவிகளின் 'சலசல' என்ற சத்தமும் மிகுந்து இருக்கும். இந்த வேடர்கள் தமது பயிர்களை மேயவரும் மாற்றானின் ஆநிரை கவர்வர். இந்த வேடர்கள் வழிப்பறி செய்து வாழ்க்கையை ஓட்டுவர். நாகன் என்பான் இந்த வேடர்களின் தலைவராக விளங்கினான். நாகனுக்கு தத்தை என்பாள் குறிஞ்சி நில மனைவியாக அமைந்தாள். வேடர் குலம் வீரம் மிக்கவர்கள் ஆகையால் பழந்தமிழ் மரபுக்கமைய புலிப்பல்லைத் தாலியாகவும், முல்லை மலர் சூடிய கொண்டை உடையவளாகவும் தத்தை தோற்றம் அளித்தாள். இந்த வேடர்கள் மலைத்தேனும், ஊன் கலந்த சோறும், தேனுந் தினைமாவும், கிழங்குகளையும் பிரதான உணவாகக் கொண்டனர்.

## வாதவூர்ப் புராணத்தில் இறைவன்

"பிட்டுநன் றென்று கூறிப்
பிறைமுடி யசைப்பார் வேட
னிட்டமென் றசையிற் சால
வீசனுக் காமி தென்பார்"

முன்னொரு காலத்தில் வேடனாகிய திண்ணனார் தமக்கு இட்ட மென்மையான இறைச்சியிலும் பார்க்க, இந்த இனிய பிட்டு நல்லது என்று பிறை முடியை அசைத்தார் அந்த மண் சுமந்த கடவுள்.

## திண்ணனார் உதயம்

வேடர் தலைவன் நாகனுக்கும், தத்தைக்கும் இனிப் புதல்வர்கள் பெறுகின்ற பேறு அரிது என்று பலரும் பகர, இவர்கள் கவலை மிகக் கொண்டு, நறுமணங் கமழும் கடம்ப மலர் மாலை அணியும் முருகவேள் சந்நிதியில், நாளிலும், பொழுதிலும் கந்தப் பெருமானை வணங்கி வரலாயினர். சேவற் கோழிகளையும், தோகை மயில்களையும் கந்தப் பெருமானுக்கு காணிக்கையாகக் கொடுத்து, திருக்கோவிலில் வளரவிட்டனர். கடம்ப மலர்மாலைகளாலும் மணி மாலைகளாலும், கந்தவேளை அலங்காரஞ் செய்து, தோத்திரங்கள் பாடி, துதி செய்து, குரவைக் கூத்தாடியும், தேவராட்டியைக் கொண்டு ஆவேசித்து, அருள் ஏறி ஆடச் செய்தும், செவ்வேள் திருவருளால், கானவர் குலம் விளங்க திருமகவு தோன்றியது. மாதவம் செய்து தோன்றிய ஞானக்குழந்தைக்குத் தந்தையாகிய நாகன் கையில் ஏந்துதற்குக் கனமாக இருந்ததால் திண்ணன் எனப் பெயர் சூட்டினான். கண்ணப்பநாயனார் காலம் கி.பி 400 - 600 வரை என்பர்.

## வில் ஏந்தல்

சில பல ஆண்டுகள் செல்ல திண்ணனார் விற் பயிற்சி பெறும் பருவம் அடைந்தார். வேடர்கட்கெலாம் தலைவனான நாகன் தன் மகன் வில் ஏந்தி நலம் பெருகும் கல்வியைப் பெறுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பறைசாற்றி அறிவிக்க, அது கேட்டு, அயலில் உள்ள மலைவேடர்களெல்லாம், தம்முடன் மலைபடு நவரெத்தின மணி களை, பொன்னை, முத்தை, புலித் தோலை, யானைக் கொம்பை, மயிற்பீலி களை, தேனை, மது வகைகளை, ஊனை, பழவகைகளை, கிழங்கு முதலியவற்றை தம்முடன் கொண்டு வந்து குவித்தனர். திண்ணனார் பயிற்சிபெற ஏந்திய வில்லா னது, பின்னர் திண்ணனார் கானகத்தில் குடுமித் தேவருக்கு ஊன் அமுதம் ஆக்க, விலங்கினை வேட்டை ஆடப் பயன்பட் டது. வில் விழா நிறைவெய்தியதும், மலை நெல் அரிசி, புல்லரிசி, மூங்கி லரிசி வகையான சோறு, ஊன், கிழங்கு, தேன், தினைமா கலந்த உணவு வகை களை உண்ண வேடர் குலம் ஒன்று கூடியது. விருந்து நிறைவெய்தியதும் குறிஞ்சிப்பறை முழங்க, ஊதுகொம்பு ஊத, உடுக்கை ஒலிக்க, மூங்கில் குழ லிசையும் ஒன்றுசேர விழாவைச் சிறப்பித்த அனைத்து வாத்தியங்களுடன் ஊர் வலம் வந்தனர்.

வேடுவச் சிங்கம் அனைய திண் ணனார் வலிமைமிக்க விற்றொழிலில், வீரம் மிக்கவராய் முழு நிலையில் கற்றறிந்தார். திண்ணனார் அகவை பதி னாறு அடைந்ததும், மலை சூழ்ந்த அடர்ந்த காட்டில் நாகன் தன் மகனுக்கு கன்னி வேட்டை ஆட மலைப் பிரதேசத் திற்குரிய ஆட்சியை மகிழ்வுடன் ஈந்தான். வில் ஏந்திய வேடர் பலர் போற்றி நிற்க, அன்பு மிக்க தந்தையின் பாதத்தில் திண் ணனார் வீழ்ந்து வணங்கினார். எண்ணற்ற வேட்டை நாய்கள் காட்டிற் பாய்ந்து செல்ல, திண்ணனாரைச் சூழச்சென்ற வேடர் சேனையானது, அலைமோதும் கடற்பரப்பின் கண் விரைந்து புகும் காளிந்தி நதியை ஒத்து இருந்தது. கான கத்தில் நாணனும், காடனும் திண்ண னாரை விட்டுப் பிரியாது தொடர்ந்து சென்றனர்.

## பொன்முகலி ஆறு

பொன்முகலி ஆறு உத்தர வாகினி யாக வடக்கு நோக்கிப் பாய்கிறது. பொன்முகலியை சுவர்ணமுகி என்று தெலுங்கில் வழங்குவர். பொன்முகலி ஆறே இப்பெருந்தலத்தின் தீர்த்தம். அடர் ந்த காட்டின் முன்னே உள்ள தேக்க மரச் சோலையைக் கடந்து சென்றால், நீண்ட குன்றின் சாரலில் குளிர்ந்த நீரோடும் பொன்முகலி ஆறு உளது. பொன்முகலி யைக் கடந்தே திருக்காளத்தி மலையின் அடிவாரத்தை அடைய வேண்டும். நீரரு வியின் சாரல் உடைய நீண்ட மலைகள் சூழ்ந்தது இந்த மலைநாடு. நறும்புகை ஊட்ட அகிலும், சந்தனமும் சிவபூசை செய்யத் திரட்டித் தருகிறது பொன்முகலி ஆறு.

## குடுமித்தேவர்

திருக்காளத்தி மலையின் உச்சியில் வீற்றிருக்கும் சிவலிங்கப் பெருமானை வேடர்கள் குடுமித்தேவர் என அழைத் துக் கும்பிட்டனர் (குடுமி உச்சி). திண்ண னாரைக் கூட்டிச் சென்ற நாணன் திண்ண னாருக்கு முன்னே சென்று திருக்காளத்தி மலையைப் பற்றி “நீ காணச் செல்லும் போது நல்ல காட்சியே தோன்றும், நீண்டு உயர்ந்து விளங்கும் இத் திருக் காளத்தி மலையின் மீது நமது இடர்க ளையெல்லாம் தீர்க்கும் அருமருந்தாகிய குடுமித்தேவர் இருக்கிறார். அவரை நீ கும்பிடலாம்” என்று கூறிக் கூட்டிச் சென் றான். அப்போது திண்ணனார் “இந்த மலை யைக் கடந்து இவ்விடத்திற்கு வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, என்மேல் உள்ள சுமையாவும் விலகிச் செல்வது போன்று தெரிகிறது. மனத்தில் பேரவா பொங்கி எழுகிறது. என் நெஞ்சில், வேறு ஒரு ஒப்பற்ற பொருளை நான் விருப்பொடு பற்ற விரை கிறது" என்றார்.

திண்ணனார் திருமேனியில் காணப் பெறும், சுமைகள் அனைத்தும் நீங்குத லானது, பிறவிக்கான வினைகள் நீங்குவ தாகும். திண்ணனார் பேரானந்தம் கொண்ட வராய் திருக்காளத்தி மலையை தனது இரு கண்களாலும் இனிது கண்டு, பொன் முகலியில் புனித நீராடி திருமலை அடி வாரத்தை அடைந்தார்.

மலை அடிவாரத்தை அடைந்ததும் திண்ணனார் தனது இரு செவிகளாலும் ஆலய தேவதுந்துபியின் ஒலியைக் கேட் டார். அங்கே அவர் செவியுற்ற தோற் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சகக் கருவிகளின் அதிர்வு தரும் ஓசை ஐந்தாகும். சக்தியே ஆணையாயுடைய சிவபரம்பொருளைச் சாரும் சிவயோகிகள் போன்று திண்ண னார் ஈசன் வீற்றிருக்கும், நீண்ட நெடிய மலையை முப்பத்தாறு தத்துவங்கள் என்னும் முப்பத்தாறு படி வழியால் ஏறிச் சென்றார்.

**மாகமார் திருக்கா ளத்தி**
**மலை எழு கொழுந்தாய் உள்ள**
**ஏகநா யகரைக் கண்டார்**
**எழுந்த பேர் உவகை அன்பின்**
**வேகமா னது மேற் செல்ல**
**மிக்க தோர் விரைவி னோடு**
**மோகமாய் ஓடிச் சென்றார்**
**தழுவினார் மோந்து நின்றார்.**

பெரியபுராணம்

சென்ற பிறவியில் அருச்சுனனாகப் பிறந்து தவஞ்செய்து பெற்ற வரத்தால் திருக்காளத்தி அப்பரைக் கண்ட உட னேயே திண்ணனார் அவரைப் பற்றிக் கொண்டார். அங்கே சென்றதும் குடுமித் தேவரைக் கண்ட நாயனார், அவர் மேல் பெருமோகங் கொண்டு, ஓடிச் சென்று, தழுவி, இரு கண்களிலும் கண்ணீர் ஆறாய்ப் பெருக "அடியேற்கு இவர் தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ" என்ற கலைச் சொற்களால் அருளினர் (அச்சோ - அந்தோ). குடுமித் தேவரைக் காட்ட வந்த நாணன், திருக்காளத்தியில் தரித்து இருந்தாலும், திண்ணனாரின் சிந்தனை வேறு எங்கே யும் செல்லாது சிவபரம்பொருளையே நெஞ்சில் இருத்திய பாங்கினையே நாம் அறிந்துகொள்ள முடிகிறது. இதனால் முன்னர் அப்பெருமானின் திருப்பெயரைக் கேட்டுத் தெவிட்டாத ஆனந்தம் கொண்ட வராகி அப்பெருமானையே எல்லாமாகக் கொண்டு தன்னை மறந்த நிலையில் திண்ணனார் இருந்தமையை, திருவா ரூர்த் திருப்பதிகம் எமது ஞாபகத்திற்கு தருகிறது.

**முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்**
**தன்னை மறந்தாள்தன் நாமம் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.**

திருநாவுக்கரசர்.

## சிவபூசை

குளிர்ந்த பொன்முகலி ஆற்றின் நீரால் குடுமித்தேவரை நீராட்டி பச்சிலை யும், பூவும் சூட்டி, உணவு படைத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத மந்திரங்கள் சாற்றி, இந்தத் தகாத செயலைச் செய்தவர் யாரோ என்று திண்ணனார் வினவிய போது, கூட வந்திருந்த நாணன் கூறுகின்றான் "நான் முன்பு உம்முடைய பிதாவுடன் வேட்டை யாட இங்கே வந்தபோது, ஒரு வேதியன், இவர் முடியிலே நீர் வார்த்து, பூச்சூடி, உணவு ஊட்டி, சில வார்த்தை பேசிய தைக் கண்டேன். அவரே இப்படி செய் திருக்கலாம்" என்றான். நாயனாரும் அவ் வந்தணர் போல, அவ்வண்ணமே செயல் படத் தலைப்பட்டார். ஆதலால் சிவபூசைக்கு உரிய திருமஞ்சன நீரும், அன்றலர்ந்த மலரும், உணவும் கொண்டு வருவதற்கு குடுமித்தேவரை தனியே விட்டு நீங்க மனமிலராய், தேவதேவன் தனியாய் இருக்கிறாரே என்று எண்ணினார். இறை வனுக்கு அமுது கொண்டு வரப் புறப்படு வார், பின் அன்பெனும் பாசத்தால் பிணை க்கப்பட்டு, குடுமித் தேவரைப் பிரிய மனமிலராய், இளம் கன்றை ஈன்ற தலை யீற்றுப் பசுவைப் போல, குடுமித் தேவரைத் தழுவி நிற்பார். தேவரீற்கு துணை யார்? பசியோடு இருக்கிறீரே என்று பிதற்றுவார். பின் ஒருவாறு தெளிந்து துணிந்து பிரிந்து தன் நீண்ட வில்லை எடுத்துக் கொண்ட வராகி, திருக்காளத்தி ஈஸ்வரரை தன் இரு கைகளாலும் தொழுது ஊனமுது தேடிப் புறப்பட்டார்.

செல்வம் கொழிக்கும் பொன்முகலி யாற்றின் கரையில் ஏறிய நாயனார், புது மலர்ப் பூஞ்சோலையினுள் புகுந்தார். ஆங்கே நாயனார் வரவிற்காகக் காத்தி ருந்த காடன், நாம் திரும்பிச் செல்வதற்கு காலம் தாழ்த்தி வந்த காரணம்தான் என்ன? என்றதும், நாணன் காடனை நோக்கி "இவன் மலையிலுள்ள குடுமித் தேவரைக் கண்டு மரப்பொந்தினைப் பற்றி மேவும் வலிமையான உடும்பு போன்று ஆங்கு நீங்காதவராயினான். எங்கள் குலத்தலைமையை விட்டு சுவாமி வச மாகி விட்டான்" என்றான்.

திண்ணனார் வேட்டையாடிப் பெற்ற தசையை நன்றாகத் தீயிலிட்டு வேகச் செய்து, அதன் இனிய சுவையை அறியும் வகையில் வாயிலிட்டுத் தேர்ந்து, தெரிந்து, மிகவும் இனியவற்றையெல்லாம் தேக்கிலை கொண்டு தைக்கப்பெற்ற கல்லையில் இட்டு, தனக்குப் பெரும்பசி இருந்தாலும் பேச்சிலாது, வேகமாக சிவபூசைக்கான பொருட்களுடன், இறைவன் வீற்றிருக்கும் திருமலையை அடைந்தார். சிவபெருமான் பசியால் களைத்திருப்பார் என விரைந்து நெருங்கிச் சென்று மலையில் முளைத் தெழும் முழுமுதற் பொருளாகிய குடுமித் தேவரின் திருமுடியின்மீது இருந்த நிர் மாலியத்தை, தன் செருப்பு அணிந்த காலால் அகற்றி, தன் திருவாயில் கொள் கலனாகக் கொண்டு வந்த திருமஞ்சன நீரை உமிழ்ந்து (அபிடேகஞ் செய்து) தமது தலைமுடிமீது சுமந்து வந்த அன்ற லர்ந்த மலர்களை, குடுமித் தேவரின் திருமுடி மீது சாத்தி, கல்லையிலுள்ள ஊனமுதை சுவாமியின் எதிரே வைத்து அமுது செய்தருளும் என அன்பாக பரி வோடு உண்பித்து, நீள் இருள் நீங்கும் வரை உறங்காது காவல் காத்து நின்றார்.

பொழுது புலர்ந்ததும், பறவை களின் ஓசை கேட்ட நாயனார், தம்மு டைய பெருமானுக்கு உரிய நேரத்தில் ஊனமுதைக் கொண்டு வரும் வகையில், குடுமித் தேவரை வணங்கிச் சென்ற பின் னர், மலை மருந்தாகிய திருக்காளத்தி நாதரை நித்தமும் பூசை செய்யும் அறிவு, அருள், அடக்கம், தவம், சிவபக்தி யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்ட வடிவாம் சிவகோசரியார் கொய்த மலரும், பொன்முகலி நீருங் கொண்டு வரலாயினார். திருக்காளத்திநாதரின் திருமுன் தவமுனிவர் சிவகோசரியார் வந்தபோது வெந்த இறைச்சியும், எலும் பும் சிதறி இருக்கக் கண்டு அவைமீது அவர் பாதம் பட்ட நிலையில் அகல மிதித்து விலகி ஓடி வருந்தினார். பின் அலகிட்டு ஆசார முறைப்படி பொன்முக லிப் புனல் மூழ்கி, பிராயச்சித்தம் செய்து, சிவபெருமானை வணங்கி, விடைபெற்று மனந்தணிந்த நிலையில் தனது தவச் சாலையை அடைந்தார்.

**வந்து திரு மலையின்கண்**
**வானவர் நா யகர் மருங்கு**
**சிந்தைநிய மத்தோடும்**
**செல்கின்றார் திருமுன்பு**
**வெந்த இறைச் சியும் எலும்பும்**
**கண்டகல மிதித்தோடி**
**"இந்த அநு சிதம் கெட்டேன்**
**யார் செய்தார்" என்றழிவார்**

பெரியபுராணம்.

திண்ணனார் நல்ல பதமாக வேக வைத்த ஊனமுதை, சுவையுடைய வற்றை தேக்கிலையால் செய்த கல்லை யில் வைத்து, அதற்குத் தேன்வதையைப் பிழிந்து கலந்து, வெகு விரைவாக அன்ற லர்ந்த மலர்களை தலைமுடியில் சொரு கியும், தூய்மையான திருவாயில் திரு மஞ்சன நீருங்கொண்டு, மலையேறி வந்து, குடுமித் தேவரை நண்ணிய வெங்குல வேடராகிய திண்ணனார், செருப்பணிந்த காலால் நிர்மாலியத்தை நீக்கி, திருமஞ் சனஞ் செய்து, அன்றலர்ந்த மலர்களை திருமுடிமேல் சூட்டி "எம்பெருமானே இந்த உணவு முன்பு படைத்ததை விட நன்றாக உளது. அடியேனும் இதன் சுவை கண் டேன். தேனும் இதனுடன் கலந்துளதால் தித்திக்கும்'' என்று அன்போடு கூறி, திரு வமுது செய்வித்து, சிவபூசையை நிறைவு செய்து, இரவுக்காவலில், கண் துயிலாது நின்றருளினார். திண்ணனாரை விட்டு நீங்கிய நாணனுங் காடனும் தம் தலை வனாகிய நாகனிடம் நடந்தவற்றை எல் லாம் கூற, நாகன் பெருங்கவலை கொண்டு ஊன் உறக்கமின்றி தனயனைக் காண மலையேறி வந்து தன் மகன் சிவநெறி யில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு, வேறு வழியின்றி, தன் மகனைவிட்டு நீங்கினான். திண்ணனார் தாம் அறிந்த நெறியில் சிவ பூசை செய்து மகிழ்ந்தார். தபோதனரான சிவகோசரியார், சிவாகம விதிப்படி பூசித்து "எம்பெருமானே இச்செயலைச் செய்தவர் யார் என்று தெரியவில்லை, தேவதேவனே இதை நீக்கி அருள வேண்டும்'' என்று முறையிட்டார்.

அன்றிரவு சிவகோசரியார் கனவில், சடைமுடி உடைய சிவபெருமான் தோன்றி "வன்மை உடைய வேடுவன் என்று அவனை நினையாதே! அவன் செயல் மிக நல்லது, அவனுடைய செயல் நமக்கு மிகவும் இனியது. நீ அன்புடன் இட்ட மலரை, அவன் செருப்பணிந்த காலால் நீக்கியது, என் அருமைச் செவ்வேளின் மலரடியினுஞ் சிறப்பானது; அன்பு நிறை ந்த கொள்கலமான அவன் வாய் உமிழ் நீர் கங்கை, காவிரி போன்ற தூய நதி களின் நீரை விடத் தூயது ஆகும். அவன் தனது முடியில் செருகி எடுத்து வந்த மலர்கள் தேவர்களிடும் மலர்களை விடத் தூயவை. அவன் செயல்களை நாளைக்கு உமக்குக் காட்டுவோம் ஒளிந்திருந்து காண்பாயாக! இதனை நீ அறிந்துகொள்" என்று அருளினார் பரம்பொருள். திண்ண னாரின் சிந்தனையானது சிவபிரானை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அல்லாது வேறு எதனையும் நினையாத தன்மை, மற்றும் மனம், மொழி, மெய் என யாவும் இறைவனுக்கே இருத்தி வழிபடும் சிறந்த நெறியை மாணிக்கவாசக சுவாமி கள் தனது திருவாசகத்தில் மனம் உருக, தன்னை தாழ்த்தி அருளிய பாங்கினை வேறு எங்கினும் காணமுடியாதவை.

**சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்**
**கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்**
**மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர**
**வந்துஎனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை**
**மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்**
**தந்தனைசெந் தாமரைக் காடனைய மேனித்**
**தனிச் சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே**

திருச்சதகம்.

## கண் இடந்து அப்பல்

பொழுது புலர்ந்தது, பூங்குயில்கள் கூவின. அந்தணர் தம் வழிபாட்டை முடித்து, இறைவன் ஆணைப்படி ஒரு மரத்தின் பின்னால் மறைந்திருந்தார். திண்ணனார் வழமைபோல ஊனை பக்குவமாகப் பதப் படுத்தி, வதை பிழிந்த தேனை ஊனுடன் கலந்து, தலைமுடியில் மலர் செருகி, திருவாயில் பொன்முகலி நீரும் முகர்ந்து, மலையை நோக்கி விரைந்தார். தீய சகுனங்கள் தென்பட்டன. தேவாதி தேவ னுக்கு என்ன நேர்ந்திருக்குமோ? என்று திண்ணனார் மனங்கலங்கி, தொலை தூரத்தில் வரும் போதே காளத்தி அப்ப ரைக் கூர்ந்து பார்த்தார். வேடனன்பை வேதியருக்குக் காட்ட விரும்பிய விரி சடையார் தனது வலது திருவிழியிலே செந்நீர் சொரிந்தார். உதிரம் வழிந்த தைக் கண்டதும், திண்ணனார் அறிவு மயங்கி வீழ்ந்தார். வாயாகிய கொள்கல னில் எடுத்து வந்த திருமஞ்சன நீர் சிந்தி யது, ஊனமுதம் சிதறியது, முடிகுலை ந்து மலர்கள் சிந்தின. நிலமிசை வீழ்ந்த நாயனார், பரம்பொருளின் விழியால் சிந்தின செந்நீரைத் துடைத்தார். இரத்தப் பெருக்கு நிற்கவில்லை. இவ்வாறு செய்த வர் யாராய் இருக்கலாம்? என்று அம்பும், வில்லுங் கொண்டு நாற்றிசையிலும் சுற்றிப் பார்த்தார். வேடர்களும் இல்லை, விலங்குகளும் இல்லை. திருக்காளத்தி நாதனின் திருப்பாத மலரைக் கட்டித் தழுவி, உயிரினும் இனிய எங்கள் தேவாதி தேவனுக்கு நடந்தது என்ன? கோவென்று கதறினார்.

பொன்னனைய மூலிகைகள் நிறைந்த மலையடி வாரம் சென்று பச்சிலைகள் பறித்து வந்து பிழிந்து விட்டும் குருதி வழிந்தது நிற்கவில்லை. இனி என்ன செய்யலாம்? ஊனுக்கு ஊனிட வேண்டும் என்ற பழமொழிக்கேற்ப எந்தை ஈசனார் கண்ணுக்கு என் கண்ணை அம்பால் இடந்து அப்பினால் இரத்தப் பெருக்கு நிற்கும் என்று தனது வலது கண்ணை அம்பால் பெயர்த்து, திருக்காளத்தி அப்ப ரின் வலது கண்ணில் அப்பினார். இரத்தப் பெருக்கு நின்றது.

**நின்ற செங்குருதி கண்டார்**
**நிலத்தில் நின்று ஏறப் பாய்ந்தார்**
**குன்றென வளர்ந்த தோள்கள்**
**கொட்டினார் கூத்தும் ஆடி**
**"நன்று நான் செய்த இந்த**
**மதி" யென நகையும் தோன்ற**
**ஒன்றிய களிப்பினாலே**
**உன்மத்தர் போல மிக்கார்**

பெரியபுராணம்

கூத்து - ஆனந்தக் கூத்து
உன்மத்தர் - சிவானந்த நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயனார் தம் வலக்கண்ணைப் பெயர்த்துத் திருக்காளத்திநாதரின் வலக் கண்ணில் அப்பி உதிரம் நிற்கச் செய் ததை ஈசன் தன் அன்பரின் அன்பை வெளிக்காட்டும் வகையில், இடது கண் ணிலும் சிவந்த இரத்தம் அளவிலாது பெருகுமாறு செய்தார். வேடர்குலம் செய்த பெருந்தவத்தால் வந்து உதித்த தேவர் களிலும் மேன்மையுடைய திண்ணனார் ''அந்தோ எங்கள் காளத்தியப்பருக்கு ஒரு கண்ணில் புண் உண்டாகி, அது நலம் அடைந்துவர தற்போது மற்றக் கண்ணும் புண்ணீர் பெருகி வழிகிறதே! ''நான் அஞ்சமாட்டேன், அஞ்சப் போவதும் இல்லை, என்னிடம் உள்ள மற்றக் கண்ணையும் இடந்து அப்புவேன்'' என்றார் நாயனார்.

காளத்தி ஈஸ்வரரின் இடது கண் ணில் தனது இடது கண்ணையும் இடந்து அப்ப, இரண்டு கண்ணும் இல்லாத நிலையில், இறைவனுடைய கண்ணுள்ள இடத்தை உணரும் குறிப்பை எண்ணுப வராய், நாயனார் பரம்பொருளின் திருக் கண்ணில் தம்முடைய இடக்காலை ஊன்றி, உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க, ஒப்பற்றதோர் அம்புகொண்டு, தம்மு டைய கண்ணை இடந்து எடுக்க முற் படும்போது தேவதேவனாகிய ஈசன் இரங்கி னார்.

**''திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி**
**உண்ணிறை விருப்பி னோடும்**
**ஒருதனிப் பகழி கொண்டு**
**திண்ணனார் கண்ணில் ஊன்றத்**
**தரித்திலர் தேவதேவர்**

பெரியபுராணம்

பகழி - அம்பு

**''தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்**
**அன்னவன் தன்கை அம்பொடும் அகப்பட**
**பிடித்து அருளினான்''** நக்கீரர்.

சிவந்த கண்ணுடைய வெள்ளை இடபத்தை வாகனமாக உடையவரும், திண்ணனாரை ஆட்கொண்ட திருக்காளத்தி நாதரும், அற்புதமான சிவபரம்பொருள், திண்ணனார் தன்னுடைய மற்றக் கண் ணையும் பெயர்த்து எடுக்க முன்னதாக, தமது சிவலிங்கத் திருமேனியினின்றும், திருக்கையை வெளியே நீட்டி, அம்பு தொட்ட திருக்கையை தடுத்துப் பற்றிய தையும் ''கண்ணப்ப நில், கண்ணப்ப நில், கண்ணப்ப நில்'' என்று கூறியதையும் மறை ந்து நின்றிருந்த ஞானமாமுனிவரான சிவ கோசரியார் நேரில் கண்டார். வேதங்கள் ஒலித்தன; தேவர்கள் கற்பக மலர் மாரி பொழிந்தனர்; குடுமித்தேவரின் புண்ணீர் நின்றது; கண்ணப்பநாயனாரின் வலக் கண்ணும் பார்வை பெற்றது; திருக்காள த்தி அப்பர் கண்ணப்பரை விழித்து ''என் வலத்தில் மாறிலாய் எக்காலமும் நிற்க'' என்றருளினார். ஆறுநாள் இரவு அகன்ற காலை கண்ணப்பர் பெரும்பேறு பெற்றார்!

## ஆலய வளாகம்

திருக்காளத்தி அப்பரின் கருவறை வாயிலில் கண்ணப்ப நாயனாரின் திரு மேனி இன்றும் உண்டு. திருக்காளத்தி மலைமேல் மடம் ஒன்று உண்டு. இம் மடத்தில் மகேஸ்வர பூசை செய்ய நன் செய் புன் செய் நிலங்கள் மாதவராயன் என்பவரால் வழங்கப்பட்டது. கோவிற் சுவர் களில் தமிழ்க் கல்வெட்டுக்கள் பல உண்டு. திருக்காளத்தி மலை மேல் உள்ள சிவ லிங்கத்தையே கண்ணப்ப நாயனார் வழி பட்டார். மலையடிவாரத்தில், பொன்முகலி ஆற்றங்கரையில் உள்ள கோவிலையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது வணங்குகிறார்கள். திருக்காளத்தியில் சிவராத்திரி, பெருவிழாவாக இடம்பெறுகிறது. இத்தலத்தினை நக்கீரர், முசுகுந்தன் முதலியோர் வழிபட்டுள்ளனர். தெலுங்கு, தமிழ்மொழித் தலபுராணங்கள் உண்டு.

## திருக்காளத்தி நாதர் உலா

திருக்காளத்தி நாதர் உலா பாடியவர் சேறைக் கவிராஜ பண்டிதர். இவ்வுலாவில் காளத்தியப்பர் ஞானப்பூங் கோதையாளுடன் கூடி இன்புற்ற நிலையை மிக அழகாக சுவைபடப் பாடியுள்ளார்.

**"அகிலாண்டம் ஈன்றாளை அவ்விருளில் கூடி**
**அகிலாண்ட பூண்முலைப் போர்ஆடி மிக உறங்கிச்**
**செங்கதிரோன் கைமலரச் செந்தாமரை மலர்**
**மங்கையுடன் செங்கண் மலர்ந்தருளி"**

சேறைக்கவிராஜ பண்டிதர்.

இதுகாறும் திருக்காளத்தி வரலாறு, வேடர் குலம், திண்ணனார் உதயம், வில் ஏந்தல், பொன்முகலி ஆறு, குடுமித் தேவர், சிவபூசை, கண் இடந்து அப்பல், ஆலய வளாகம், திருக்காளத்திநாதர் உலா சம்பந்தமாக தொகுத்து விரித்துரைத்தோம்.

**தலம் – திருக்காளத்தி பண்: கொல்லி**

**கோங்கமே, குரவமே, கொன்றை, அம்பாதிரி**
**மூங்கில் வந்து அணைதரு முகலியின்**
**கரையினில்**
**ஆங்கு அமர் காளத்தி அடிகளை அடி தொழ**
**வீங்கு வெந்துயர் கெடும், வீடு எளிது ஆகுமே.**

சம்பந்தப் பெருமான்.

## உசாத்துணை நூல்கள்


1. பெரியபுராணம் - திரு. வ. த. இராமசுப்பிரமணியம் எம்.ஏ
2. திருத்தொண்டர் புராணம் - உரைநடை திருப்பனந்தாள்
3. திருத்தொண்டர் புராணம் - திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் B.A.
4. திருவாதவூரடிகள் புராணம்
5. வாழ்வியற் களஞ்சியம்
6. அப்பர் தேவாரம், சம்பந்தர் தேவாரம்
7. தொண்டை நாட்டு பாடல்பெற்ற சிவஸ்தலங்கள்
   - பேராசிரியர் கண்ணப்ப முதலியார் M.A, B.O.L
8. திருத்தொண்டர் வரலாறு - புலவர் அரசு
9. பெரியபுராண ஆராய்ச்சி
   - டாக்டர் மா. இராசமாணிக்கனார் M.A. L. T. M.O.L PhD
10. பெரியபுராண வசனம் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
11. பெரியபுராண வசனம் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவடிவாம் தென்முகக்கடவுள் தெட்சணாமூர்த்தி

**சைவப் புலவர் வை. சி. சிவசுப்பிரமணியம்** B.A
**(ஓய்வு பெற்ற அஞ்சலதிபர்)**

**குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேச்வர: குரு சாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம :**

சிவம் குரு எனப் பேசப்படும்போது தெட்சணாமூர்த்தியாக நால்வர்க்கு அறம் உரைத்து தீட்சைகளை அளித்த மூல மூர்த்தியாகவும், ஒவ்வோர் உள்ளத்திலும் தம் முதல் குருவாக அமர்ந்து நான் என்னும் தத்துவமாக ஒவ்வோர் உயிரையும் மேன்மைப்படுத்தி இன்பமாக வாழ வைக்கும் மூலகுருவாகச் சமய இலக்கியங்கள் பேசும்.

குரு என்ற சொல் பாசத்தை நீக்குபவர் என்ற பொருள் தருகிறது. எனவே மயக்கம், தெளிவின்மை, உண்மையுணராமை போன்றவற்றிற்குக் காலாகிய பாசத்தை நீக்க குரு அருள் அத்தியாவசியமாகிறது. சிறப்பாக ஆன்மாவைப் பீடித்திருக்கும் ஆணவமலத்தை வலி கெடுத்தருள்வதற்காகச் சிவபெருமானே குருவடிவு தாங்கி வருவர் என்பது சைவ சிந்தாந்தத் துணிபாகும். குருவானவர் தீட்சை மூலம் மலபரிபாகஞ் செய்வர்.

**ஓம் குருதேவாய வித்மஹே, பரப்ரஹ்மனே தீமஹி!**
**தன்னோ குரு ப்ரசோதயாத்!!**

ஓம் நமது குரு தேவரை அறிந்து கொள்வோமாக. அந்தப் பரப்பிரமமாகிய குருவைத் தியானம் செய்வோமாக. அந்தக் குருவே நம்மை நல்வழியில் செலுத்தி அருள்புரிவாராக!

குருவருள் இல்லாமல் திருவருள் இல்லை. கயிலைமலைச் சாரலில் கல்லால மரத்தின் கீழே சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் இறைவன் ஆதிசிவன் மெய்ப்பொருளின் உண்மைத் தத்துவத்தை உபதேசிக்கத் திருவுள்ளம் கொண்டார். கல்லால மரத்தின் கீழே ஒரு காலை மடித்து மற்றொரு காலை கீழே தொங்கவிட்ட நிலையில் அமர்ந்து வலக் கரத்தால் சின் முத்திரை காட்டி உண்மை நிலை உணர்த்தினார்.

**கல்லாலின் புடையமர்ந்து நான் மறை ஆறங்கம்**
**முதற் கற்ற கேள்வி வல்லார்கள் நால்வருக்கும்**
**வாக்கிறந்த பூரணமாய், மறைக்கப்பாலாய்**
**எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி**
**இருந்து காட்டி சொல்லாமல் சொன்னவரை நினையாமல்**
**நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.**

என்பது திருவிளையாடற் புராணம்.

"தெற்கே செல்லும் மரணயாத்திரை மேற்கொள்ளாமல் சரண யாத்திரையாக வடக்குத் திசையில் வாருங்கள்" என்று உணர்த்துவதற்காகவே தென் திசையில் அமர்ந்தார். தட்சிண (தெற்கு) திசையை நோக்கி அமர்ந்ததால் "தட்சணாமூர்த்தி" என்று சிவபெருமானின் இத் திருவுருவம் அழைக்கப்படுகிறது. சின் முத்திரையின் மூலம் இறைவன் வழங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய உபதேசத்தால் சனகாதியர் உள்ளத் தெளிவு பெற்றார்கள்.

**சின் முத்திரை**

சித் என்பது ஞானம். சின் முத்திரை என்பது ஞானத்தின் அடையாளம். ஆன்மா எப்போதும் மூன்று மலங்களோடு சேர்ந்திருக்கிறது. ஒரு கையில் ஐந்து விரல்கள் இருந்தாலும் நான்கு விரல்கள் ஒரு வரிசையிலும், ஐந்தாவதாகிய கட்டை விரல் அவற்றோடு சேராமல் தனித்தும் இருக்கின்றன. கட்டை விரல் தனித்து இருந்தாலும் அது மற்ற நான்கு விரல்களோடு சேராத காலத்து எந்த வேலையும் செய்ய முடியாது.

பல காரியங்களைச் செய்யும் போது மற்ற விரல்களோடு கட்டை விரலும் சேர்ந்து உதவி புரிகிறது. வேலை செய்யாதபோது அவற்றோடு சேராமல் தனித்தே நிற்கிறது.

ஆன்மாக்கள் செய்கிற காரியங்களில் எல்லாம் இறைவன் உறுதுணையாக இருந்தாலும் அவன் இந்த உலகத்திற்கு அப்பாற்பட்டவனாக, மலங்களுடைய சம்பந்தம் இல்லாதவனாகவே இருக்கிறான்.

கட்டை விரலுக்கு அடுத்தபடி சுட்டுவிரல் இருக்கிறது. அதை ஆள் காட்டி விரல் என்றும் சொல்வார்கள். ஆள் என்பது ஆன்மா. ஆளாகிய ஆன்மாவைக் குறிக்கிற விரல் ஆதலில் ஆள் காட்டி விரல் என்று பேர் வந்தது. ஆள் காட்டி விரல் ஆன்மாவைச் சுட்ட, கட்டை விரல் ஆண்டவனைச் சுட்டுகிறது.

ஆன்மா எப்போதும் மலங்களோடு சேர்ந்து நிற்கிறது. சுட்டு விரல் கட்டை விரலோடு சம்பந்தப்படாமல் மற்ற மூன்று விரல்களோடு சம்பந்தப்பட்டே இருக்கிறது. மலத்தோடு சம்பந்தப்பட்டு ஆன்மா தொழில்படும் போது அந்தத் தொழில்களுக்கு இறைவன் உதவியாக இருப்பது போலவே, கட்டை விரலானது மற்ற மூன்று விரல்களோடு சேர்ந்து ஆள் காட்டி விரல் தொழிற்படும் போது, கூட நின்று உதவுகிறது. இறைவன் மலத்திற்கு அப்பாற்பட்டவனாக இருப்பது போல் கட்டைவிரல் தனியே இருக்கிறது.

இறைவன் - பதி, ஆன்மா - பசு, மலங்கள் - பாசம். ஆத்மா பாசத்தோடு சம்பந்தம் உடையதாக இருக்க வேண்டும். அல்லது பதியோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். பாசத்தோடு சம்பந்தமுடையதாக இருக்கும் போது பலவிதச் செயல்களைப் புரிந்து, இன்ப, துன்ப நுகர்ச்சிகளை அடைகிறது. பதியோடு சேர்ந்துவிட்டால் பாசம் கழன்று விடும். பதிக்கு மல சம்பந்தம் இல்லை. பதியோடு ஒன்றாக இணைந்து விட்ட பசுவுக்கும் மல சம்பந்தம் இல்லாமற் போகிறது.

தட்சணாமூர்த்தி என்ன செய்தார்? ஆள் காட்டி விரலையும், கட்டை விரலையும் சேர்த்து, பிற மூன்று விரல்களும் தனித்து நிற்கும்படி சின் முத்திரையைக் காட்டியருளினார். பாசத்திலிருந்து ஆன்மா விடுதலை பெறவேண்டுமானால் பதியோடு சேர்ந்திருக்க வேண்டும் என்கிற பொருளை அந்த ஞானமுத்திரையினால், அவன் உணர்த்தினான். இறைவனுடைய தொடர்பு இல்லாமல் யாருக்கும் இருக்க முடியாது. சுட்டு விரல் மற்ற மூன்று விரலோடு சேர்ந்து தொழில்படும் போது கட்டைவிரல் தானேபோய்ச் சேர்ந்து கொண்டு அதற்கு உறுதுணையாக இருக்கிறது. அப்படிச் சேர்வது போதாது. மூன்றையும் விட்டுப் பெருவிரலோடு இணைய வேண்டும்.

நாம் மூச்சு விடுகிறோம், உண்ணுகிறோம், உறங்குகிறோம், பலவிதமான தொழில் செய்கிறோம். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் இறைவனுடைய தொடர்பு இருக்கிறது. அதனால் இறப்பு, பிறப்பு என்னும் பிணிக்கு உள்ளாகிறது. ஆன்மா, என்றைக்கு இறைவனோடு ஒன்றிவிடுகிறதோ அப்போது முத்தியின்பம் பெறுகிறது. அந்த முத்தியை அடைவதற்குரிய உபதேசத்தைச் சின் முத்திரையினாலே குறிப்பதுதான் தென்முகக் கடவுள்.

## தென்முகம் ஏன்?

அவன் ஏன் தெற்கு முகம் நோக்கி இருந்து காட்ட வேண்டும்? நாம் எந்தக் காரியத்தையும் தெற்கு முகம் நோக்கிச் செய்வதில்லை. ஆனால் பரமேசுவரனாகிய குருநாதன் அடியார்களுக்கு அருள் செய்வதற்காக, அடியார்களுடைய பகைவனை அழிப்பதற்கு ஆயத்தமாகத் தெற்கு முகம் நோக்கி உட்கார்ந்திருக்கிறான். பகைவன் முன்னால் இருக்கும் போது அவனுக்கு முதுகு காட்டுவது வீரனுக்கு அழகல்ல. அவனை நேர் நின்று எதிர்க்க வேண்டும்.

நம்முடைய பகைவன் யார்? இறப்பும் பிறப்புந்தான் நமக்குப் பகை. இறப்புத்தான் பெரும் பகை, கொடும் பகை. மரணம் இல்லாத வாழ்வு நமக்கு வந்துவிட்டால் பிறகு துன்பம் இல்லை. அந்த இறப்பு என்பதைப் பருப்பொருளாக உருவாகக்காட்டி யமன் என்றார்கள். யமன் நமக்கு மரணத்தை விளைவிக்கிறான் என்றார்கள். மரணம் என்ற நினைவை உண்டாக்குகின்றவனாக அவனை வைத்தார்கள்.

மனிதர்களுக்குப் பகைவனாக இருக்கிறவன் தென்னவன் அல்லது காலன். நம்முடைய பகைவனைத் தன்னுடைய பகைவனாக நினைந்து அவனை அடக்குவதற்கு ஆயத்தமாக இருப்பவனைப் போல் தெற்கு நோக்கித் தட்சணாமூர்த்தி அமர்ந்திருக்கிறான். கையில் ஆயுதங்களை வைத்துக்கொண்டு செய்யும் போர் அல்ல இது. அஞ்ஞானத்தை ஞானத்தினாலே ஒழிக்கும் போர். மரணத்திற்குக் காரணமாக உள்ள காலனை, அஞ்ஞான உருவத்தை ஒழிப்பதற்காக ஞானாசிரியனாகிய தட்சிணாமூர்த்தி சின் முத்திரையோடு - ஞான அடையாளத்தோடு தெற்கு நோக்கி வீற்றிருக்கிறான்.

இவரைத் தமிழில் தென்முகக் கடவுள் என்றும் அறம் உரைத்த பட்டர் என்றும் ஆலமர் செல்வர் என்றும் குறிப்பிடுவார்கள். தட்சணாமூர்த்தியை வழிபடுபவர்களுக்குக் கோள்களால் விளையும் கேடுகள் நீங்கும். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி ஞானாசிரியர்களாகவும், நூலாசிரியர்களாகவும் சிறப்புப் பெறுவதற்கு தட்சணாமூர்த்தியின் திருவருள் இன்றியமையாதது. ஞானமும் அதன் வழியாக முத்தியும் அருள வல்லவர் தட்சணாமூர்த்தி. நாமும் அவரை வணங்கி இக பர சுகங்களை அடைவோமாக!

**அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி**
**நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்**
**நின்றார ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்**
**பொன்றாது பாடி நாம் பூவல்லி கொய்யாமோ.**

- திருவாசகம் -

## உசாத்துணை நூல்கள் :


1. கந்தர்அலங்காரச் சொற்பொழிவுகள், கி. வா. ஜெகந்நாதன்
2. ஸ்ரீராம கிருஷ்ணவிஜயம் சஞ்சிகை
3. இந்து தருமம் சஞ்சிகை
4. ஞான பூமி சஞ்சிகை
5. திருவிளையாடற் புராணம்
6. திருவாசகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணார்பண்ணை - பெயர் விளக்கம்

**பரராஜசிங்கம் கணேசலிங்கம்**
**சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## 1. அமைவிடம்

தென்னிந்தியாவின் தென்கிழக்கே அமைந்துள்ள இலங்கைத்தீவின் வட பகுதியில் யாழ்ப்பாணம் விளங்குகின்றது. ஈழத்து இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் காலம் தோறும் பல்வேறு இடங்கள் நிலைக்களங்களாக விளங்கி வந்துள் ளன. யாழ்ப்பாண மாவட்டத்திலே இந்துப் பண்பாட்டம்சங்கள் வளர்ந்த- தற்போதும் வளர்ந்து வருகின்ற இடங்களாக நல்லூர், வண்ணார்பண்ணை, வரணி, சாவகச்சேரி, உசன், கப்பூது, வல்லிபுரம், நாகர்கோயில், நீர்வேலி, மாவிட்டபுரம், கீரிமலை, தீவகம், ஏழாலை, தெல்லிப்பழை, அராலி, ஆனைக் கோட்டை, காங்கேசன்துறை, கந்தரோடை, சுன்னாகம், இணுவில், அளவெட்டி, சுழி புரம், திருநெல்வேலி ஆகியன விளங்கு கின்றன. இத்தகைய இடங்களுள் நல்லூர்ப் பிரதேசம் குறிப்பிடத்தக்கதொன்றாக விள ங்கி வருகின்றது. இதன் மேற்கு எல்லை யிலுள்ள வண்ணார்பண்ணைப் பிரதேசம் இந்துப்பண்பாட்டு வளர்ச்சியின் கேந்திர நிலையமாகவும் ஈழத்து இந்து சமய வரலாற்றில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களுள் ஒன்றாகவும் விளங்கி வந்துள்ளதோடு, தற்பொழுதும் திகழ்ந்து வருகின்றது என்பதில் எதுவித ஐயமுமில்லை. எனவே இது பற்றிய ஒரு விரிவான ஆய்வு அவசியமாகின்றது. கி.பி 18ஆம், 19ஆம் நூற்றாண்டு காலப் பகுதிகளில் அதாவது ஒல்லாந்தர், ஆங் கிலேயர், தேசிய எழுச்சிக்காலம் ஆகிய காலப்பகுதியில் வண்ணார்பண்ணைப் பிர தேசம் ஒரு கேந்திர நிலையமாக விளங் கியமைக்குப் போதிய சான்றுகள் பல் வேறு வகைகளில் கிடைத்துள்ளன.

இலங்கையிலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் புகழ் மிக்கதுமான இடங் களுள் ஒன்றாகவும் யாழ்ப்பாணம், யாழ்ப் பாண மாவட்டம், யாழ்ப்பாணக் குடாநாடு விளங்குகின்றது. இவ் யாழ்ப்பாணம் பண் டைக்காலம் முதலாக பல்வேறு காலகட் டங்களிலும் பல பெயர்களால் சுட்டி அழைக்கப்பட்டு வந்துள்ளது. யாழ்ப் பாணக் குடாநாடானது நான்கு நிர்வாகப் பிரிவுளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய நான்கு பகுதிகளை உள் ளடக்கிய ஒன்றாகும். நான்கு பகுதிகளை உள்ளடக்கிய இப்பிரிவுகளுள் ஒன்றாக விளங்குகின்ற வலிகாமப் பிரிவின் வர லாற்றுச் சிறப்புமிக்கதும் புகழ்மிக்க இடங் களுள் ஒன்றாகவும் வண்ணார்பண்ணை அமைந்து விளங்குகின்றது. தற்போ தைய யாழ்ப்பாணநகரப் பகுதியாக விள ங்குகின்றனவற்றுள் (யாழ். மாநகர சபை யின் எல்லைக்குட்பட்ட பகுதிகளை) பெரும் பான்மையான இடங்களை உள்ளடக்கிய பகுதி வண்ணார்பண்ணை எனச் சுட்டப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணார்பண்ணையும் இதனைச் சூழவுள்ள பகுதிகளான நல்லூர், ஆனைக் கோட்டை, கோட்டை, பண்ணைத்துறை, தீவகம், கொழும்புத்துறை ஆகியனவும் வரலாற்றுத் தொன்மையான இடங்களாக விளங்குகின்றன. பெருங்கற்காலக் கலா சார மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல ஆனைக்கோட்டை மற்றும் தீவகத் தின் சில பகுதிகளில் கிடைத்துள்ளன. இப்பிரதேசத்திலும் இதனை அண்மித்த பகுதியிலும் துறைமுகங்கள், துறைகள் பல இருந்தன. வண்ணையில் பண்ணைத் துறைமுகமும் இதற்குக் கிழக்கில் ரேகுத் துறை, கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகிய துறைகளும், பண்ணைத் துறை முகத்திற்கு மேற்கில் அராலித்துறையும் அமைந்துள்ளன. இத்துறைகளும் துறை முகங்களும் வர்த்தகப் பண்பாட்டுப் பாரம் பரியங்களைப் பரிமாறிக் கொள்ளும் வாயிலாக விளங்கின.

வர்த்தகக் குடியேற்றம், சமாதா னக் குடியேற்றம் என்ற வகையில் காலத் திற்குக் காலம் ஏற்பட்ட குடியேற்றத் தொடர்புகளால் இந்தியப் பெயர்கள் அப் படியே இலங்கையிலும் இடம் பெறலாயின. காலப்போக்கில் சில பெயர்கள் திரி படைதலும் இயல்பாயிற்று. இலங்கை முழுவதிலும் தென்னிந்தியாவுடன் ஒத்த தாக பெருங்கற் பண்பாட்டு நாகரிகம் (South Indian Phenomenon of Megalithic Culture) பரவியிருந்தது என்பது நன்கு நிறுவப்பட்டுள்ளது. அப்பண்பாட்டு நிலை யின் தளங்கள், யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்ட இடங்கள் பற்றிய தொல்லி யற் சான்றுகளுடனான ஆய்வுகளின் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருங்கற் பண்பாட்டுநிலை எவ்வாறு நிலைத்து இருந்தது என்ற வரையறையான கண்டு பிடிப்புக்களும் வெளியிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலே ஆதிகாலம் தொடக் கம் ஒல்லாந்தர் காலம் முடியும் வரை பல்வேறு குடியேற்றங்கள் இடம் பெற்றன.

ஐரோப்பியரின் வடவிலங்கை வருகைக்குப் பின்பே யாழ்ப்பாணநகர் விருத்தியுறத் தொடங்கியது. 16ஆம் நூற் றாண்டின் தொடக்க காலவேளையில் போர்த்துக்கேயர் வடஇலங்கைக்கு வந்த னர். வர்த்தக நோக்கத்தைச் சுட்டிக்காட்டி இங்கு ஒரு கோட்டையையும் அமைத்துக் கொண்டனர். யாழ்ப்பாண நகரின் மையப் பகுதியாக (Core Area) இக்கோட்டைப் பகுதி அமையலாயிற்று. போர்த்துக் கேயரை வெற்றிகண்ட ஒல்லாந்தர் (17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்) கோட் டைப் பகுதியைத் தமது நிர்வாக மைய மாகக் கொண்டனர். அதனால் கோட்டையும் அதனைச் சுற்றிய பகுதிகளும் யாழ்நக ரின் மையப்பகுதியாக விரிந்தன. இக்கால வேளையில் வீதிகள்சில நன்கு அமைக் கப்பட்டன. ஆங்கிலேயரின் நீண்ட ஆட்சி யில் யாழ்ப்பாண நகர் படிப்படியாக விரிவடைந்தது. சுதந்திர இலங்கையில் அவ்விரிவு துரிதப்பட்டதோடு சிறப்பாயும் அமைந்தது. (கலாநிதி க. குணராசா - 1968).

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம் பத்தில் யாழ்ப்பாணநகரின் "கரு"வாகக் கோட்டை அமைந்தபோது, மேலும் நல்லூர், வண்ணார்பண்ணை எனும் இரு பெரும் கிராமங்கள் முதன்மை பெற்றன. இவற்றைவிட மேலும் சிறிய பல கிரா மங்களும் காணப்பட்டன. நல்லூர் என்ற பெருங்கிராமத்திலும் பார்க்க கோட்டை மிகச்சிறியதாக இருந்த போதிலும் செய லளவில் கோட்டையே நகரப்பண்பினைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலித்தது. தமிழரசின் வீழ்ச்சி யாழ்ப் பாண நகரின் விருத்தியாக அமைந்தது. கோட்டையும் அதன் சுற்றுப்புறங்களும் வட இலங்கையின் நிர்வாக, வர்த்தக, இராணுவமையமாக அமைந்தன. அத னால் நல்லூர், வண்ணார்பண்ணை போன்ற கிராமங்கள் படிப்படியாகக் கோட்டையை நோக்கி விரிவடையத் தொடங்கின.

யாழ்ப்பாணநகர் இன்று ஆற்று கின்ற செயலினையும் நகர இயக்கத் தினையும் ஆதாரமாகக் கொண்டு இந் நகரை ஏனைய நகர்களைப் போன்று மூன்று வலயங்களாக வகுத்துக் கொள் ளலாம் என கலாநிதி க. குணராசா (1968) குறிப்பிட்டுள்ளார். அவையாவன: (அ) மையவலயம் (Core Area) (ஆ) நடு வலயம் (Intermediate Zone) (இ) வெளி வலயம் (Outer Zone) என்பன யாழ்ப்பாண நகரின் மையத்தைச் சூழ்ந்த யாழ்நக ரின் நடுவலயத்தில் வண்ணார்பண்ணைப் பிரதேசம் அமைந்துள்ளது.

சோனகதெரு, வண்ணார் பண்ணை, சிவியாதெரு, சுண்டுக்குளி முதலிய பகுதிகள் இந்த நடுவலயத்தி னுள் அடங்குகின்றன. இந்த நடு வல யத்திலேயே நெருக்கமாக மக்கள் குடி யேறியுள்ளனர். பல வகையான வீடுகள் நிறைந்த பகுதியாக இவ்வலயம் காட்சி தருகின்றது. மையவலயத்தில் நிர்வாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்கள் இந்த நடுவலயப் பகுதிகளில் அதிகளவில் வாழ்கின்றனர். மையவல யத்திலும் குடியிருப்புக்களுளவாயினும் நடுவலயத்தில் குடியிருப்புகள் மட்டுமே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (கலாநிதி க. குணராசா - 1968).

வண்ணார்பண்ணைப் பிரதேச மானது ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பழைய கிராமங்களுள் ஒன்றாக விளங்கியது. காலப்போக்கில் வண்ணார்பண்ணைக் கிராமம் நகரமாக வளர்ச்சியடைந்தது. பழைய வண்ணார் பண்ணைப் பிரதேசமானது பரந்த பரப்பி னைக் கொண்டது. இதனுடைய எல்லை களும் விரிந்தவை. பழைய வண்ணார் பண்ணையின் எல்லைப் பகுதியாக கோட்டை, புல்லுக்குளம் வீதி, மணிக்கூட்டு வீதி (தற்போதைய யாழ் திறந்த வெளியரங்கு அருகிலுள்ள வீதி), மணிக்கூட்டுச்சந்தி (மணிக்கூட்டுக் கோபுரம்), வேம்படி வீதி (வேம்படி மகளிர் கல்லூரியின் கிழக்குப் பக்கத்திலுள்ள தெரு - யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கும் - யாழ் மத்திய கல்லூரிக்கும் இடைப்பட்டது), மாட்டீன் வீதி (ஆஸ்பத்திரி வீதிச்சந்தி, ஆஸ்பத் திரி வீதியும் மாட்டீன் வீதியும் சந்திக்கும் இடம்) யாழ். புகையிரத நிலைய வீதி, யாழ். புகையிரத நிலையம் (தற்போ தைய யாழ். புகையிரத நிலையத்தினை ஊடறுத்த பகுதி), ஸ்ரான்லி வீதி, அத்தி யடி வீதி, நாவலர் வீதி (நாவலர் கலாச் சார மண்டபத்திற்கு இடது பக்கமாக), நாவலர் கலாச்சார மண்டப முன் வீதி, (வைமன் வீதி), பருத்தித்துறை வீதி (அர சடிச்சந்தி - பாரதி சிலை), அரசடி வீதி, பழம் வீதி, பரமேஸ்வராச்சந்தி, நாச்சி மார்கோயில் வீதி, (சேர் பொன். இராம நாதன் வீதி - யாழ். பல்கலைக்கழகத் திற்கு முன்பாக), மண்கிண்டி ஒழுங்கை (தற்போதைய சபாபதி ஒழுங்கை), தலை யாழி ஒழுங்கை, காங்கேசன் துறைவீதி, பூநாரி மரத்தடி, கேணியடி வீதி (இடப்பக் கப் பகுதிகள்), ஆடியபாதம் வீதி, பிடாரி யம்மன் கோவிலடி, பிடாரியம்மன் கோவி லின் பின் வீதி, குருசு மதவடி ஒழுங்கை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய காக்கைதீவு வீதி (மானிப்பாய் வீதியை ஊடறுத்த பகுதி), வயல்வெளிகள் (இடப்பக்கம்), காக்கைதீவுச்சந்தை, காரைநகர் வீதி, நாவலர் வீதியின் ஆரம்பம், நாவாந்துறை, நாவாந்துறைவீதி, காரைநகர் வீதி, வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி, வில்லூன்றிச் சுடலை வீதி, காரைநகர்வீதி, கடற்கரைவீதி, பண்ணைத்துறை (காக்கைதீவுச் சந்தையிலிருந்து பண்ணைத்துறை வரையிலான வீதிகளின் வலது பக்கம் கடற்கரைப் பகுதியாக அமைந்துள்ளது) ஆகியவற்றுடன் பழைய வண்ணார்பண்ணைப் பிரதேசத்தின் பரப்பு எல்லைகள் முடிவடைகின்றன.

வண்ணார்பண்ணையானது ஆரம்ப காலத்தில் இரண்டு கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய ஒன்றாகும். அவையாவன: வண்ணார்பண்ணை மேற்கு (22), வண்ணார்பண்ணை கிழக்கு (23) ஆகியனவற்றை உள்ளடக்கியது. பின்னர் வண்ணார்பண்ணைப் பகுதி, வண்ணார்பண்ணை வடமேற்கு, வண்ணார்பண்ணை - வடகிழக்கு, வண்ணார் பண்ணை தென்கிழக்கு, வண்ணார் பண்ணை - தென்மேற்கு என்ற நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வண்ணார்பண்ணையின் கிராமசேவகர் பிரிவுகளான வட - கிழக்கு, வடமேற்கு ஆகியன நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அடங்குகின்றது. இப் பகுதியின் ஏனைய கிராமசேவகர் பிரிவுகளான தென் - கிழக்கு, தென்மேற்கு ஆகியன யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அடங்குகின்றது. வண்ணார்பண்ணைப் பிரதேசம் காலத்துக்குக் காலம் நான்கு பிரிவுகள், ஐந்து பிரிவுகள் என பிரிந்து தற்பொழுது ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எனவே வண்ணார்பண்ணைப் பிரதேசமானது தற்பொழுது நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளுள் உள்ளடக்கிய ஒன்றாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஆரம்ப கால (புராதனகால) குடியேற்ற மையங்களுள் ஒன்றாக ஆனைக்கோட்டை விளங்கியது. இவ்விடத்திற்கு அருகில் வண்ணார்பண்ணை அமைந்துள்ளது. வண்ணார்பண்ணைக்கு அருகில் நல்லூரும் கோட்டையும் அமைந்துள்ளன. வண்ணையினைச் சுற்றிய பிரதான எல்லைப் பகுதிகளாக கோட்டை, பண்ணைத்துறை, நாவாந்துறை, காக்கைதீவு, ஆனைக்கோட்டை, கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர் ஆகியன அமைந்து விளங்குகின்றன.

## 2. வண்ணார்பண்ணையின் சிறப்பு

இப்பிரதேசமானது பல்வேறு வகைகளிலும் நன்கு சிறப்புப் பெற்று விளங்குகின்றது. இத்தகைய சிறப்புக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

1) வண்ணார்பண்ணை கோயில்கள் நிறைந்த நகரமாகக் காணப்படல்
2) நல்லூருக்குப் பின்னரும் தற்காலம் வரையிலும் யாழ்ப்பாணத்தின் நகரப் பகுதியாக விளங்குதல்
3) பல்துறை அறிஞர்கள், பல்துறைச் சமூகத்தினர் ஒன்றுகூடி வாழுகின்ற இடமாக விளங்குதல்.
4) இந்துசமய நிறுவனங்கள், சங்கங்கள், சபைகள், பாடசாலைகள், கல்லூரிகள், கலைக்கூடங்கள் பல நிறைந்த பிரதேசமாக விளங்குதல்.
5) தென்னிந்திய வணிகர்கள், கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர்கள், அறிஞர்கள், செட்டிமார்கள் ஆகியோர்களது ஆதிக்கமும் செல்வாக்கும் நிறைந்த பகுதியாக விளங்குதல்.

6) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரதும் இவரது மாணவ பரம்பரையினர்களதும் சைவத் தமிழ்ப் பணிகளுக்கு நிலைக்களனாக அமைந்த இடம்.

7) வண்ணையைச் சேர்ந்த சைவத்தமிழ் அறிஞர்கள் பலர் தென்னிந்தியா சென்று தம்புகழ் நிறுவி இப்பிரதேசத்திற்கும் ஈழநாட்டுக்கும் பெருமை தேடித்தந்தவர்களை, உருவாக்கிய இடம் எனப் பல நிலைகளில் வகைப்படுத்திக் கூறலாம்.

வண்ணைநகரில் இந்துசமயக் கடவுளர்களான சிவன், முருகன், விஷ்ணு, சக்தி, முருகன், விநாயகர், ஐயனார், முனியப்பர், அண்ணமார், பெரியதம்பிரான், வைரவர், நாகதம்பிரான் போன்ற தெய்வங்களுக்கும் சித்தர்கள், ஞானிகள், அடியார்கள் ஆகியோர்களுக்கும் சிறிய அளவிலும், பெரிய அளவிலும் முறையே திருக்கோயில்களையும் சமாதிக்கோயில்களையும், நினைவாலயங்களையும் அமைத்து வழிபாடியற்றி வருகின்றார்கள். இப்பிரதேசத்தின் தொன்மையானதும் சிறப்புமிக்கதுமான ஆலயங்களாக வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் (செட்டியார் சிவன்கோயில், பட்டினம் சிவன் கோயில்) வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில் (பெருமாள் கோயில்), வண்ணை வடமேற்கு ஸ்ரீ பூரணம்பா, புட்கலாம்பா சமேத ஹரிஹர புத்திரர் (ஐயனார் கோயில்), வண்ணை செந்தில் கதிர்வேலாயுதசுவாமி கோயில், வண்ணை ஸ்ரீவீரமாகாளியம்மன் கோயில், வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில் (நாச்சிமார் கோயில்), வண்ணை - கன்னாதிட்டி அருள்மிகு காளியம்மன் கோயில், வண்ணை நகர் அருள்மிகு சர்வசக்தி ஸ்ரீமங்கள மகாகாளியம்மன் கோயில், வண்ணை - கிழக்கு - கலட்டி - எச்சாட்டி ஸ்ரீமகாமாரி அம்மன்கோயில், கோட்டை முனீஸ்வரர்கோயில், வண்ணை மேற்கு வில்லூன்றி ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோயில், வண்ணை - கடைத்தெரு வேம்படி சித்திவிநாயகர் கோயில். வண் - வட மேற்கு ஸ்ரீமகாபிடாரி அம்மன் கோயில் ஆகியன அமைந்து விளங்குகின்றன. இவ்வாலயங்களை மையப்படுத்தி இந்து பண்பாட்டு மரபு தோன்றி வளர்ந்ததை அறிய முடிகின்றது.

இப்பிரதேசமானது பல்துறை சார்ந்த கலைஞர்கள், அறிஞர்கள் நிறைந்த பகுதியாக விளங்குகின்றது. பலதிறப்பட்ட அறிஞர்களையும் கவிஞர்களையும் உருவாக்கிய இடமாக வண்ணார்பண்ணை விளங்குகின்றது. இவர்களது அரும்பெரும் முயற்சிகளினால் இப்பிரதேசத்திலே இந்துப்பண்பாடு நன்கு தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்ததனை அறிய முடிகின்றது. இப்பிரதேசத்தில் இந்துப் பண்பாட்டுக் கூறுகளாக விளங்குகின்ற சைவம், தமிழ் ஆகியனவற்றை வளர்த்த அல்லது பேணிப் பாதுகாத்த பெரியோர்களாக அல்லது சான்றோர்களாக அல்லது அறிஞர்களாகப் பலர் விளங்குகின்றனர். இவர்களுள் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் இலங்கையில் வண்ணார்பண்ணை தவிர்ந்த ஏனைய இடங்களைப் பிறப்பிடமாகவும் தென்னிந்தியாவைப் பிறப்பிடமாகவும் கொண்டவர்கள் உள்ளடங்குகின்றனர்.

இப்பிரதேசத்திலே பல அறிஞர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள் ஆகியோர்களின் பெரும் முயற்சிகளால் வித்தியாலயங்கள், சபைகள், சங்கங்கள், மன்றங்கள், சபா, கலா நிலையம், மடங்கள், சமாசீயம், சமாஜம், ஸ்தாபனம், குருகுலம் என்பன இந்துக் களை, சமயம், தத்துவம், சோதிடம், தமிழ், சமூகப்பணி போன்ற இன்னோரன்ன தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் ஒவ்வொரு காலகட்டப் பகுதிகளிலும் வாழ்ந்து வந்த இந்துப்பெருமக்களால் தோற்றுவிக்கப்பட்டமை இங்கு கவனிக் கத்தக்கது. இத்தகைய நிறுவனங்களுள் சைவப்பிரகாச சமாசீயம், சைவப்பிரகாச சமாஜம், பரமதகண்டன சுயமத ஸ்தாபனம், சைவ சம்போதனா சங்கம், சைவபரிபாலன சபை, சிவகுருநாத குருபீடம் (வேதாந்த மடம்), சிவதொண்டன்நிலையம், கலா நிலையம், ரஸிக ரஞ்சன சபா, நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை, வைத்தீஸ்வரா வித்தியாலயம், யாழ்.இந்துக் கல்லூரி, வேதாகமப் பள்ளிக்கூடம், சைவ சமயப் பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி, சைவ ஆங்கில வித்தியா சாலை, நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபம், வட இலங்கை சங்கீதசபை, நாகலிங்க சங்கீத நிலையம், சங்கீத சமாஜம் போன்றவற்றை எடுத்துக்காட்டலாம்.

வண்ணையின் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பல்வேறு சமூகத்தினர் பங்களிப்புச் செய்ததோடு இற்றைவரை செய்து வருகின்றமை கண்கூடு. இச்சமூகத்தினருள் தென்னிந்தியாவைச் சேர்ந்த செட்டிமார்களும் ஒரு வகையினர். இவர்களது ஆதிக்கமும் செல்வாக்கும் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தது. தற்போதும் இருந்து வருகின்றது.

வண்ணார்பண்ணைப் பிரதேசத்தில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலப் பகுதியிலிருந்தே செட்டிமார்களது ஆதிக்கமும் குடியேற்றமும் ஏற்படத் தொடங்கியது. தென்னிந்தியச் செட்டிமார்களது சமய, சமூகப்பணிகள் பன்முகப்பட்டவை. நகரத்தார், நாட்டுக்கோட்டையார், தனவணிகர், தனவைசியர், நாட்டரசன் கோட்டைச் செட்டியார், செட்டிப்பிள்ளைகள், நானா தேசிகள், ஏழு கோயில் நகரத்தார். 96 ஊர் நகரத்தார் என்ற பெயர்கள் இவர்களுக்கு உண்டு.

வண்ணார்பண்ணைப் பிரதேசத்திலே இச்செட்டிமார்களது குடியேற்றங்கள் ஆரம்பத்தில் ஏற்பட்டன. இவர்களது பெரும் முயற்சிகளினால் இந்துசமயக் கடவுளர்களான சிவன், காளியம்பாள், முருகன், விநாயகர், பிடாரிஅம்மன் ஆகிய தெய்வங்களுக்கு பெரியளவிலும் சிறிய அளவிலும் பல கோயில்கள் கட்டப்பெற்றன. இவர்கள் இந்துசமய வளர்ச்சிக்கும் இந்துக்கல்வி வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியுள்ளார்கள். இச்செட்டிமார்கள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் வாழ்ந்தார்கள். குறிப்பாக வண்ணார்பண்ணையில் பல செட்டிமார் குடும்பத்தினர் வாழ்ந்தார்கள். தற்பொழுதும் வாழ்ந்து வருகின்றமை கண்கூடு.

### 3. வரலாற்று மூலங்கள்

வண்ணையிலே ஆரம்பகாலம் முதல் இந்துப் பண்பாட்டு மரபுகள் பேணப்பட்டிருந்த போதிலும் இவை பற்றிய முழுமையான தரவுகள் கிடைக்கப்பெறவில்லை. இருந்தாலும் கூட யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தில் எழுச்சியுற்றிருந்த இந்துப் பண்பாட்டு மரபுகள் போர்த்துக்கீசர் காலத்தில் திடீர் வீழ்ச்சி அடைந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தததை அவதானிக்க முடிகின்றது. பின்னர் ஒல்லாந்தர் காலப்பகுதியின் இறுதியிலும், ஆங்கிலேயர் காலப்பகுதியிலும் ஓரளவு சமயச் சுதந்திரம் கிடைத்த நிலையிலும் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இந்துப்பண்பாட்டு மரபுகள் மீண்டும் எழுச்சியடைந்ததை அறியமுடிகின்றது. இப்பகுதியில் கிடைக்கப் பெற்ற தொல் பொருட்களும் இப்பிரதேசம் பற்றி வெளிவந்த முதற்தர நூல்கள் ஒரு சிலவும் இரண்டாந்தரப்பட்ட நூல்களும் இந்துப் பண்பாடு, பெயர் விளக்கம் பற்றிய விபரங்களை ஓரளவு அறிய உதவுகின்றன.

வண்ணார்பண்ணை பற்றிய பெயர் விளக்கத்திற்கான வரலாற்று மூலங்கள் போதியளவு கிடைக்கவில்லை. ஆனால் இப்பெயர் பற்றிய அறிமுகம் (சுட்டி வழங்கும் மரபு) ஆரம்பகாலம் முதல் வழக்கில் இருந்து வந்திருக்கலாம் எனக் கருதுவதற்கு ஈழத்து வரலாற்று நூல்கள், யாழ்ப்பாணச் சரித்திர நூல்கள், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர்கால ஆவணங்கள், வரலாற்றாசிரியர் குறிப்புகள் ஆகியனவற்றில் விரவி நிற்கக் காணலாம். இவற்றை விட இப்பெயர் பற்றிய விளக்கத்தினை சில வாய்மொழி மரபுக் கதைகள் மூலமும் அறிந்து கொள்ள முடிகின்றது.

வண்ணார்பண்ணையினை முதன்மைப்படுத்திப் பல்வேறு கால கட்டங்களிலும் வாழ்ந்த இந்து தமிழ் அறிஞர்களால் பல சமய தமிழ், தத்துவ, இலக்கியங்கள் ஆக்கப்பட்டன. இவற்றுள் மண்டைதீவு சி.அகிலேஸ்வரசர்மாவின் பண்ணைப்பாலக் கும்மி, வட்டுக்கோட்டை அராலியைச் சார்ந்த விசுவநாத சாஸ்திரியார் இயற்றிய வண்ணைக் குறவஞ்சி, வண்ணை நாச்சிமார் கோவிலடியைச் சார்ந்த சதாசிவ பண்டிதர் இயற்றிய வண்ணைநகரந்தாதி, வண்ணை நகரூஞ்சல், வை. முத்துக் குமாரசுவாமி அவர்கள் இயற்றிய "எனது ஊர் வண்ணை நகரம்" என்னும் தலைப்பிலான கட்டுரை ஆகியன இப்பிரதேசத்தினை முதன்மைப்படுத்தி எழுந்த ஆக்கங்களாகும். இவ்வாக்கங்களை விட இப்பிரதேசத்திலுள்ள திருக்கோயில்கள், பாடசாலைகள், கல்லூரிகள் பற்றிய தரவுகளும் மற்றும் சஞ்சிகைகளில் சமயப் பெரியார்கள், பண்பாடு, நாகரிகம் ஆகியன தொடர்பான சிந்தனைகளை அவ்வப் பொழுது ஆராய்ந்து எழுதி வெளியிட்ட கட்டுரையாசிரியர்களும் வரலாற்றாசிரியர்களும் வண்ணார்பண்ணை பற்றிய சில பொதுவான விடயங்களை எழுதி வெளியிட்டுள்ளமை இங்கு கவனிக்கத் தக்கது.

வண்ணார்பண்ணைப் பெயர் பற்றிய விளக்கத்தினை 1923ஆம் ஆண்டு மல்லாகம் ஸ்ரீ இ.நமசிவாயம்பிள்ளை அவர்கள் இயற்றிய "ஊர்ப்பெயர் உட்பொருள் விளக்கம்" ஊர்ப்பெயர்களால் கவிதை நாமாந்தரிதை - (கருதிய பொருளை வேறு நாமங்களில் மறைத்து வைப்பது), கலாநிதி இ.பாலசுந்தரத்தின் "இலங்கை இடப் பெயர் ஆய்வு - 1988", ப. கணேசலிங்கத்தின் "வண்ணார்பண்ணைப் பிரதேசத்தில் இந்துப்பண்பாடு - ஓர் ஆய்வு" (இவ்வாய்வுக் கட்டுரையானது இந்துநாகரிக சிறப்புக் கலைமாணிப் பட்டத்திற்காக யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு (1988, பிரசுரிக்கப்படவில்லை) ஆகிய நூல்களில் ஓரளவு விளங்கப்படுத்தப்பட்டுள்ளன.

ஊர்ப்பெயர் பற்றிய கவிதையினை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இயற்றியவர்களுள் முத்துக்குமாரகவிராயர், சேனாதிராயமுதலியார், ஸ்ரீ.இ. நமசிவாயம்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். வடமாகாண ஊர்ப்பெயர்கள் சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஊர்ப்பெயர்கள், சில நேரடியாகச் சமய தத்துவப் பொருண்மையைப் புலப்படுத்துவன. சைவசித்தாந்தத் தெளிபொருளை வெளிப்படுத்தும் வகையில் ஈழத்தின் வடமாகாண ஊர்ப்பெயர்களைப் பொருட் பொருத்தமுற கட்டளைக்கலித்துறை யாப்பில் ஸ்ரீ.இ.நமசிவாயம்பிள்ளை அவர்கள் அமைத்துள்ளார். இவர் யாத்த இக் கவிதைகளில் பண்ணை, வண்ணார் பண்ணை ஆகிய இடப்பெயர்கள் மறைந்து நிற்கின்றன. பண்ணை என்ற இடப்பெயர் மறைந்து வரும் பாடல் வருமாறு:-

பாடல் நான்கு வரி - மூன்றாவது

**"மட்டுவிலானை மடக்கிப் பரன்றொண்டை**
**யாற்றின்மதக்**
**கட்டுடையார் துணைவேண்டா நந்தாவிலைக்**
**கண்டிடலாம்**
**வட்டுறுவார் பண்ணை தோய்வாரிற்**
**தாழ்ந்திடின் வல்லைபறை**
**கொட்டடிகேட்கு முன்னாவரங் காலர்கைக்**
**கொள்ளுவரே"**

(பண்ணை தோய்வாரில் - மகளிர் கூட்டத் திலாசையின் வழி அமிழ்ந்துழலுகின்றவர்களும் போல)

வண்ணார்பண்ணை என்ற இடப்பெயர் மறைந்து வரும் பாடல் வருமாறு:-

பாடல்:- பதினைந்து வரி:- மூன்றாவது

**"அக்காரை யூர்சக்கிரி வாழ்வுமந்தப்**
**புரத்தொடவை**
**மிக்கார்ந்துதே சண்டிருப்பாய் நவக்கிரி**
**மேயதென**
**மைக்காருறை மனைவண்ணார் நற்பண்ணை**
**வளமுங்கள்ளி**
**யக்காட்டின ளுறவும் வேண்டிலர்**
**மிக்கறிந்தவரே"**

(வண்ணார் நற்பண்ணை வளமும் - அழகிய நெல் வயல் முதலியவேனைய வளங்களையும்)

என இப்பாடல்கள் வரிமூலம் இப்பிரதேசத்தின் பெயர் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

வண்ணார்பண்ணை பெயர் விளக்கம் பற்றிய தெளிவான கருத்துக்கள் வரலாற்று மூலங்களிலே நன்கு எடுத்துக்காட்டப்படாது இருக்கின்றமை இங்கு கவனிக்கத்தக்கது. இப்பகுதி யாழ்ப்பாண மாவட்டத்தின் தொல்பொருள் மையங்களுள் ஒன்று என வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. வண்ணார்பண்ணை பெயர் பற்றிய பல்வேறு விளக்கங்களை எனது அறிவுக்கு எட்டிய வகையில் இங்கு விளக்கப்படுத்தவுள்ளேன்.

இப்பிரதேசத்தினுடைய இந்துப் பண்பாட்டு அம்சங்களை அறிந்து கொள்வதற்கு திருக்கோயில்கள், கிராமியத் தெய்வங்கள், சமாதிக்கோயில்கள், பல்வேறு பண்பாட்டுச் சின்னங்கள், நீர்நிலைகள், குளங்கள், கேணிகள், பொதுக்கிணறுகள், நீர்த்தொட்டிகள், கடல் வளங்கள், பயிர்கள் பல நிறைந்த வயல் நிலங்கள், சுமைதாங்கிகள், ஆவுரோஞ்சுக்கற்கள், தலவிருட்சங்கள், மயானங்கள், சத்திரங்கள், மடங்கள், சமய கலை நிறுவனங்கள், நிர்வாக ஸ்தலங்கள், திண்ணைப் பள்ளிகள், வித்தியாலயங்கள், தொழில் நிறுவனங்கள், சித்தர்கள், பக்தர்கள், பல்வேறு சமூகத்தினர், கோயில்களில் பேணப்பட்ட கட்டிட சிற்ப ஓவிய, இசை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனமரபுகள், இலக்கியங்கள், கிறிஸ்தவப் பெரியார்களது குறிப்பேடுகள், இல்லங்கள், திருக்கோயில்கள் ஆகியனவற்றில் பேணப்பட்ட பல்வேறு சமய நம்பிக்கைகளும் வழிபாட்டு நடைமுறைகள் போன்ற இன்னோரன்ன சான்றாதாரங்கள் உதவுகின்றன.

## 4. பெயருக்கான காரணங்கள்

வண்ணார்பண்ணை என்ற இப்பிரதேசமானது வண், வண்ணை, வண்ணப்பதி, மேலை வண்ணைநகர், வண்ணை நகர், வண்ணார்பண்ணை எனப் பல நிலைகளில் சுருங்கிய வடிவிலும் விரிந்த நிலையிலும் சுட்டப்பட்டு வருகின்றதை அவதானிக்கலாம். வண்ணார்பண்ணை பிரதேசத்தினதும் பெயர் பற்றிய விளக்கத்தினையும், இந்துப்பண்பாட்டு வளர்ச்சி ஆகியன பற்றி அறிந்து கொள்வதற்கும், தென்னிந்திய - வண்ணார்பண்ணை ஆகியவற்றுக்கான புவியியல், வர்த்தக உறவுகள், இடப்பெயர்கள், அரசியல் உறவுகள், குடியேற்றம், சமய உறவுகளின் பின்னணி ஆகியனவற்றின் அடிப்படையில் நோக்க வேண்டியுள்ளது.

வண்ணார்பண்ணை இடப்பெயரானது

1) நிலத்தினியல்பு
2) நீரின் இயல்பு
3) குடியேற்றம்
4) அழகு செய்பவர்கள் வாழ்விடம் (பல்வேறு கலைஞர்கள் வாழ்விடம்)
5) வண்ணாரச்சாதியினர் வாழ்ந்த இடம் (தொழிலடிப்படை) என்கின்ற ஐந்தினையும் அடியாகக் கொண்டு தோற்றம் பெற்றதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

### 4.1 நிலத்தினியல்பு

வண்ணார்பண்ணை என்ற பெயரானது நிலத்தினியல்பின் அடியாகப் பிறந்திருக்கலாம் எனக் கருத இடமிருக்கின்றது. இச்சொல்லானது வண்ணார் + பண்ணை என்றும், வண்ணம் + ஆர் + பண்ணை எனவும் பிரித்து நோக்கலாம். வண்ணம் என்ற சொற்பதமானது அழகு, இசைப்பாட்டு, இராகம், கனம், குணம், சந்தம், சந்தனம், சாந்துப் பொது நிறம், முடுகியல், வடிவு, வாசனை, ஒப்பனை செய்தல், நன்மை, விதம், சித்திரம், எழுதற்குரிய கலவை, சிறப்பு, மாலை என்ற பொருளினைச் சுட்டுவதாக கழகத் தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. இதே போல "பண்ணை - பனை" என்ற சொற்பதமானது ஒருவகைக்கீரை, குளம், சமுசாரம், நீர்நிலை, படகு, மனை, மகளிர் கூட்டம், மரக்கொம்பு, மூங்கில், மகளிர் விளையாட்டு, மரக்கலம், மருதநிலம், வயல், சுவை (சித்திர கூடம்), விலங்கின் படுக்கை, விலங்கின் மேற்கோணம், தோட்டம், முரசு ஆகிய பொருளினைச் சுட்டி நிற்கின்றன. (பனை - பண்ணை, பண்ணை - வயல் "எழினலம் பயக்கும் மன்றலம் பனைசூழ் மருதவேலி" பண்டார மும்மணிக்கோவை- 29-24-255) பண்ணை, பனை ஈற்றுப்பெயராக ஓரிடமே இப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நிலவியல்பு - நிலத்தோற்றம் - நில அமைப்பு என்ற அடிப்படைகளிலும் இடப்பெயர்கள் தோற்றம் பெற்றுள்ளன. வண்ணம் என்பது இங்கு அழகியது எனவும், பண்ணை என்பது வயலும் வயல் சார்ந்த நிலமான மருத நிலத்தினையும் பயிர்வளங்கள் பல நிறைந்த தோட்டத்தினையும் சுட்டுவதாக அமைகின்றன. அதாவது வண்ணார்பண்ணை என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய வயல்கள், தோட்டங்கள் பல நிறைந்த பகுதி எனப் பொருள்படுகின்றன. பலவிதமான பயிர்களை உற்பத்தி செய்யும் இடமாகவும் கொள்ளப்படுகின்றது. மேலும் இப்பிரதேசத்திலே கலட்டி, காடு, குண்டு என்ற பெயர்கள் நிலவியல்பு குறித்த பெயர்களாக அமைகின்றன. எடுத்துக் காட்டாக கலட்டி (கலட்டிச்சந்தி), காட்டுத்துறை (காட்டுத்துறை), நரியங்குண்டு (நரியங்குன்றடி) ஆகிய இடங்களைக் குறிப்பிடலாம்.

## 4.2 நீரினியல்பு

வண்ணார்பண்ணை என்ற சொல்லானது நீரினியல்பினடியாகப் பிறந்ததற்கான ஆதாரங்கள் உண்டு. பண்ணை என்பது குளம், நீர்நிலை, படகு, மரக்கலம், துறைமுகம், துறை எனப் பொருள்படுகின்றது. இப்பிரதேசமானது நீர்வளம் செறிந்த பிரதேசமல்லாது நீர்நிலைகளால் சூழப்பட்டுக் காணப்படுகின்றன. இங்குள்ள இடங்களின் பெயர்களில் பல நீர் நிலைகளைச் சுட்டுவதாக ஓடை, குளம், கேணி, வில், துறை, கரை ஆகிய சொற்களை முதலிலும் ஈற்றுப் பெயர்களாகவும் கொண்டு அமைந்துள்ளன. உதாரணமாக பிரப்பங்குளம், வண்ணாங்குளங்கள், ஆண்டிக்குளம் (ஆண்டிச்சிக் குளம்), புல்லுக்குளம், நீராவிக் குளம் (நீராவியடிக்குளம்), அடியார்க்கு நல்லார் குளம் (கன்னாதிட்டிக்குளம்), குளங்கரை ஒழுங்கை, ஆரியகுளம், நரிக்குன்றுக் குளம் (நரியங்குன்றடி), வில்லூன்றிக் கேணி, அம்மைச்சிக்குளம் (அம்பச்சிகுளம்), தாமரைக்குளம், திருப்பக்குளம், (துரும்பர்குளம்) கேணியடி ஆகிய இடங்களைக் குறிப்பிடலாம். இப்பகுதியிலே மேற்கொள்ளப்பட்ட விவசாயத் தேவைக்காகவும் நீரைச் சேமிப்பதற்காகவும் பல குளங்கள் அவ்வக் காலப்பகுதிகளிலே வெட்டப்பட்டன.

இப்பிரதேசத்திலே பண்ணைத் துறையும் இதற்கருகில் ரேகுதுறை, கொழும்புத்துறை, நாவாந்துறை, அராலித்துறை ஆகிய துறைகளும், துறை முகங்களும் ஒருங்கே சூழப்பெற்ற பகுதியாக விளங்குகின்றது. இவற்றை விட வண்ணார்பண்ணைப் பிரதேசத்தின் இரு பகுதிகள், பண்ணைத்துறைப் பக்கம் வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் முன் பக்கம் ஆகியன இரண்டும் நீரினால் சூழப்பெற்ற கடற்பிரதேசமாக விளங்குகின்றன. “துறை” என்பது இடம் தியாய வழி, பகுதி, உபாயம், கடல்துறை, கடல், ஆறு, வண்ணான் ஒலிக்குமிடம், நீர்த் துறை, சபைகூடும் இடம், பொருட்கூறு, இறங்குதுறை, கடற்துறை, எல்லை, இடம், தங்குமிடம், ஒழுங்கு எனப் பல பொருள்படுகின்றன.

“பண்ணைத்துறை” என்ற இடம் இப்பிரதேசத்திலுள்ளது. இச்சொல்லானது நீர் நிலைகளால் சூழப்பட்டதும் படகுகள், மரக்கலங்கள் நிறைந்த (கூடுகின்ற இடம்) பண்ணைத் துறையினைச் சுட்டி நிற்கின்றது. “துறை” ஈற்றுப் பெயர்களைக் கொண்டதாக வண்ணார்பண்ணைக்கு அருகிலுள்ள ரேகுதுறை, கொழும்புத்துறை, அராலித்துறை, நாவாந்துறை, காட்டுத்துறை ஆகிய இடங்கள் விளங்குகின்றன. பண்ணைத்துறை, ரேகுதுறை, கொழும்புத்துறை, நாவாந்துறை, அராலித்துறை ஆகிய துறைமுகங்களில் பல நாட்டிலிருந்து வியாபார நோக்கம் கருதிப் பல நாட்டவர்கள் பல மரக்கலங்களில் வந்து தங்கிச் சென்றதும், இப்பிரதேசத்திலிருந்தும் வணிகர்கள் பலர் பிற


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேசங்களுக்கு மரக்கலங்களில் சென்று வருவதும் வழக்கமாக இருந்து வந்தமை யினால் மரக்கலங்கள், படகுகள் நிறை ந்த பகுதியாக இப்பகுதி விளங்கியிருக் கின்றது. ஆகவே வண்ணார்பண்ணை என்பது பல நீர் நிலைகள், குளங்கள், படகுகள், மரக்கலங்கள் ஆகியவற்றால் சூழப்பெற்ற அழகிய இடம் எனச் சுட்டப் படுகின்றது.

## 4.3 குடியேற்றங்கள்

இந்தியாவிலுள்ள இடங்களின் பெயர்கள் பல, ஈழத்திலும் குறிப்பாக யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணைப் பகுதி களிலுள்ள இடங்களுக்கும் இட்டு வழங்கப் பட்டு வருகின்றன. இப்பெயர்கள் மூலம் தென்னிந்தியாவுக்கும் ஈழத்திற்குமுள்ள குடியேற்றத்தொடர்பு, அரசியற் தொடர்பு என்பன நன்கு புலப்படுகின்றன. வண் ணார்பண்ணைப் பிரதேசத்தினுள்ளடங்கிய இடங்களின் பெயர்களில் பல தென்னிந் தியப் பெயர்களுடன் தொடர்புபட்டனவா கவும் காணப்படுகின்றன. மேலும் இப் பிரதேசத்தினை அண்மித்த இடங்களின் பெயர்களும் தென்னிந்தியப் பெயர்களிலே சுட்டப்பட்டு வருகின்றன.

வண்ணார்பண்ணையிலே மலை யாளம் என்னும் பெயரோடு கூடிய குடி யேற்றமாக அத்தியடியில் அமைந்துள்ள மலையாளன்வளவு, சோழநாட்டு ஊர்ப் பெயரோடு கூடிய குடியேற்றமாக கோம்பை என்னும் பெயரடியாகப் பிறந்த கோம்பை யன் திடல் என்ற பெயர், பாண்டிநாட்டு ஊர்ப்பெயரோடு கூடிய குடியேற்றமாக நீராவி என்ற சொல்லினடியாகப் பிறந்த நீராவியடி, நீராவி என்ற சோழப்பெயர் களும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இந் தியாவிலுள்ள இடங்களாக திருவெண்ணை நல்லூர், திருவண்ணாமலை, திருநெல் வேலி, நல்லூர், தனுஷ்கோடி (தீர்த்தம்), வண்ணாரப்பேட்டை ஆகிய பெயர்களி லும் ஒரு பகுதியினைப் பெயர்களாகக் கொண்டும் இங்குள்ள இடங்கள் சுட்டப் படுகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள தலைநகர் நல்லூர் (நல்ல ஊர்) என அழைக்கப்பட் டமை குறிப்பிடற்பாலது. இது தமிழகத் திலுள்ள இடமொன்றின் பெயராகும். தமி ழகத்திலே ஆதிச்ச நல்லூர், சக்கரவர் த்தி நல்லூர், வெண்ணெய் நல்லூர், சேய் நல்லூர், வீரா நல்லூர், சிறுத் தொண்டர் நல்லூர், கடைய நல்லூர், சிங்கநல்லூர் முதலிய பல இடங்க ளுண்டு. இத்தகைய இடமொன்றிலிருந்து இங்கு வந்து குடியேறியோர் தமது தாய கப்பெயரை இப்புதிய இடத்திற்குச் சூட்டி யிருப்பர் எனப் பேராசிரியர் வி. சிவசாமி "யாழ்ப்பாண இராச்சியம்" (1992) என்ற நூலின், வரலாற்று மூலங்கள் என்ற கட் டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் குறிப்பிட்ட சிங்கநல்லூர் எனும் பெயர் தமிழகத்தின் பாண்டிநாடு, கொங்கு நாடு முதலியவற்றிலும் உண்டு. நல்லூர் எனும் பெயர் யாழ்ப்பாணத்திற்குத் தெற்கே பூநகரி, திருகோணமலை முதலிய இடங் களிலும் உள்ளன. இதேபோல, திரு வெண்ணை நல்லூர் என்ற பெயர் தமிழ கத்தில் காணப்படுகின்றது. இங்கிருந்து வந்து நல்லூருக்கு அருகிலுள்ள வண் ணார்பண்ணையில் குடியேறியவர்களு டைய இடமும் வெண்ணை - வண்ணை - வண்ணார்பண்ணை எனச் சுட்டப்பட்டு வந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

இப்பிரதேசத்திலே குடியிருப்பு நிலைப் பெயர்களான பண்ணை, மடம், புலம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியன விளங்குகின்றன. இடப்பெயர்களிலே மக்கள் குடியிருப்புக்களையும் அவர்கள் நடமாடும் பகுதிகளையும் சுட்டும் பெயர்கள் தனித்துவம் வாய்ந்தவை. மக்கள் குடிமனை அமைத்து வாழ்ந்து வரும் பகுதிகள் மொழி, பண்பாட்டு விடயங்களை அகத்தே கொண்ட பழமை மிக்க பெயர்களைப் பெற்றுள்ளன. இப்பெயர்கள் அவர் தம் பண்டைச் சிறப்பை, வரலாற்று நிகழ்வுகளை - சமய நடவடிக்கைகளை எடுத்தியம்புவனவாகும். இப்பிரதேசத்திலே வண்ணார்பண்ணை, பண்ணைத்துறை என்பனவும் கந்தர்மடம், ஆறுகால்மடம், பூநாரிமடம், வேதாந்த மடம், கங்காசத்திரம் (கங்காமடம்) (சோழப்பெயர்), அன்னசத்திரம் (அன்னசத்திர மடம்), ஓட்டுமடம், சாந்தையர்மடம் என்பனவும் பெரியபுலம் ஆகிய பெயர்களும் இங்கு குறிப்பிடத்தக்கன. புலம் என்பதற்கு வயல், இடம், திக்கு, மேட்டு நிலம் என்ற பொருள்களுமுள. மேலும் புலம் என்பது முல்லை நிலத்தைக் குறித்தது. தென்னிந்தியாவிலே தமிழர் வாழும் குடியிருப்புப் பகுதிகளிலேயுள்ள இடப்பெயர் ஈறுகளுக்கும் இங்குள்ள இடப்பெயர் ஈறுகளுக்குமிடையே சில ஒற்றுமைகள் காணப்படினும் வேறுபட்ட தன்மைகள் இருப்பதையும் இப்பெயர்கள் சுட்டுகின்றன. இது இரு இடத்து மக்களது மொழி, சூழல், அவதானிப்பு, கலாசாரப் போக்கு ஆகியவற்றின் தனித்துவத்தைச் சுட்டுவதாக அமைகின்றது எனப் பேராசிரியர் இ. பாலசுந்தரம் தனது "இலங்கை இடப்பெயர் ஆய்வு" (1986) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளமை இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

வண்ணார்பண்ணையிலும், அதனை அண்மித்த பகுதிகளிலும் அமைந்து வணிக மையங்களாக விளங்கிய மேற்கூறப்பட்ட துறைமுகங்கள் காலப்போக்கில் புவியியல் ரீதியில் வசதிகள் அற்ற இடங்களாக மாற்றமடைந்ததால், இத்துறைமுகங்கள் பெற்ற இடங்களைப் பின்னர் ஊர்காவற்றுறைத் துறைமுகம், காங்கேசன்துறைத் துறைமுகம், பருத்தித்துறைத் துறைமுகம் ஆகியன பெறலாயின.

யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பெற்ற திருக்கோயில்களின் மூர்த்திகளின் பெயர்களும் இந்தியாவிலுள்ள திருக்கோயில்களின் மூர்த்திகளின் நாமத்தினைச் சுட்டுவதாக அமைந்து விளங்குகின்றன. நல்லூரிலுள்ள பழைய புராதன சிவாலயங்களிலொன்று சட்டநாதர் ஆலயமாகும். தமிழகத்திலே திருஞானசம்பந்தர், முத்துத்தாண்டவர் முதலியோர் பிறந்த சீர்காழியிலும் சட்டநாதர் ஆலயமுண்டு என்பதும் இங்கு ஒப்பிட்டு நோக்கற்பாலது. பண்டை நாளிலே திருப்பெண்ணையாற்று மூலமாக வந்து பண்ணைத்துறையில் இறங்கிய தமிழக மக்கள் இதற்குப் பண்ணைத்துறை என்று பெயரிட்டு வழங்கியதாகவும் அறியப்படுகின்றது.

வண்ணார்பண்ணைப் பிரதேசத்தில் அமைந்து விளங்குகின்ற புராதன இந்து ஆலயங்களான வண்ணார்பண்ணை மேற்கு ஸ்ரீ விசுவலிங்க வைத்தீஸ்வர சுவாமி கோயில் (செட்டியார் சிவன் கோயில், பட்டணத்துச் சிவன் கோயில்) (1790), கதிர்வேலாயுதசுவாமி கோயில் (கதிரேசன் கோயில்) (1879), கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் கோயில் (கன்னாதிட்டிக் காளிகோயில்) (1788), ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில் (பெருமாள் கோயில்) (1347), வண்ணைச் சிவன் கோயிலின் பரிவார ஆலயங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளான வேம்படிப் பிள்ளையார் கோயில் (ஸ்ரீ வேம்படி சித்தி விநாயகர் கோயில், கடைத்தெருப்பிள்ளையார் கோயில்), கற்கட்டு வைரவர் கோயில், ஐயனார் கோயில் (1770), பிடாரியம்மன் கோயில் (வண். வடமேற்கிலமைந்த ஸ்ரீ மகா பிடாரியம்மன் கோயில்) ஆகியனவற்றை ஸ்தாபித்தவர்கள் தென்னிந்திய நாட்டைச் சேர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இக்கோயில்களின் ஸ்தாபகர்களும், பரம்பரையினரும் தென்னிந்தியாவிலிருந்து வியாபார நோக்கத்துடனும் தொழில் வாய்ப்புக்கருதியும் இப்பிரதேசத்திற்கு வந்து குடியேறியவர்கள் ஆவர். மேலே குறிப்பிடப்பட்ட இந்துக்கோயில்களின் திருப்பணி வேலைகள் ஒல்லாந்தர் ஆட்சியின் (1658-1796) கடைக்கூறுகளில் ஆரம்பமாகின.

## 4.4 அழகு செய்பவர்கள் வாழ்விடம்

**(பல்துறைக் கலைஞர்கள் வாழ்விடம்)**

வண்ணார்பண்ணை என்ற சொற்பதமானது பல்துறைக்கலைஞர்கள் (அழகு செய்பவர்கள்) கூடிவாழ்ந்த ஓர் இடமாக விளங்கியதால் இப்பெயர் ஏற்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. ஒரு நகரத்திலே எந்தெந்தத் தொழிலைச் செய்கின்ற மக்கள் இருந்தார்களோ அவர்களுடைய மரபுப் பெயரே அந்தந்த இடங்களுக்கும் வழங்கப் பெற்றன. யாழ்ப்பாணத் தமிழரசர், போர்த்துக்கேய, ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் நிறந்தீட்டுவோர் (வண்ணம் தீட்டுவோர்) நல்ல நிலையில் வாழ்ந்திருக்கிறார்களென்பதை அக்கால வருமானத்துறையை நோக்கின் புலனாகும். தமிழ் மன்னர் காலத்தில் அரச பணியின் பொருட்டுத் தொழிலடிப்படையிலான பல்வேறு சாதியினர் (கலைஞர்கள்) நல்லூர் இராசதானியின் அயற்கிராமங்களில் வாழ்ந்திருக்கின்றார்கள். இவர்களுக்குக் குடிமனைகளும் கோயில்களும் தனித்தனியாக இருந்திருக்கின்றன. இப்பின்னணியில் அரசபணியாளர்களாகிய வண்ணக்காரர் (வண்ணந்தீட்டுவோர், ஓவியர்) வாழ்ந்த இடத்தை இப்பெயர் சுட்டியது எனக் கருத இடமுண்டு.

வண்ணார்பண்ணைப் பிரதேசத்திலே கலைவளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகின்ற சமூகத்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக பஞ்சகம்மாளர் எனக்கூறப்படுகின்ற பொற்கொல்லர், சிற்பாச்சாரியார், கன்னார், கொல்லர், தச்சர் ஆகியோர்களும் மற்றும் செட்டிமார்களும் குறிப்பிடத்தக்கவர்கள். வண்ணார்பண்ணைப் பிரதேசத்தில் பல சிற்பாச்சாரியார்கள் வாழ்ந்து வந்துள்ளார்கள். யாம் அறிந்தவரையில் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்தவர்களைப் பற்றியும் அவர்களுக்குப் பின் அவர்களது சந்ததியில் வாழ்ந்து வருபவர்களைப் பற்றியுமே அறியக்கூடியதாக இருக்கின்றது. பஞ்சகம்மாளர் இந்துக்கோயில்களுக்கு வேண்டிய பல்வேறு கலையம்சம் பொருந்திய உபகரணங்களை, மரம், பொன், உலோகம், கல் ஆகியவற்றினால் பல நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அமைத்துக் கொடுத்துள்ளனர். இன்று இப்பிரதேசத்தில் உள்ள கோயில்களில் காணப்படுகின்ற உபகரணங்கள் மற்றும் ஏனைய வேலைப்பாடுகளும் இவர்களது கைவண்ணத்திலே உருவானவை என்பது குறிப்பிடத்தக்கது.

பண்ணை என்ற சொல்லானது சித்திரகூடம் எனப் பொருள்படும். வண்ணார்பண்ணை என்பது அழகிய சித்திர கூடங்கள் நிறைந்த பகுதியினைச் சுட்டியது. இதற்குச் சான்றாக இப்பிரதேசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையம்சங்கள் பல நிறைந்ததிருக் கோயில்களும் மற்றும் உலோகங்கள், கற்கள், மரங்கள், துணிகள் ஆகிய மூலப் பொருட்களினால் கலைத்துவமிக்க கை வினைப்பொருட்கள் செய்வோர்கள் எடுத் துக்காட்டாக அமைகின்றனர். வண்ணார் பண்ணை ஒரு பெருங்குடியிருப்பாக இருந் திருக்கலாம். இதன் துறைமுகமாகப் பண் ணைத்துறை அமைந்திருந்தது என்று கொள்ளவும் இடம் இருக்கின்றது.

வண்ணார்பண்ணைப் பிரதேசத் திலே சாயவேலை செய்பவர்கள், நூல் நூற்பவர்கள் வாழ்ந்த பகுதி இன்றும் சேணியதெரு என அழைக்கப்படுகின்றது. இப்பகுதி வண்ணை வெங்கடேச வரத ராஜப் பெருமாள் கோயிலை அண்மித்த பகுதிகளாகும். இவர்கள்தான் இக் கோயி லைத் தாபித்தவர்கள் எனக் கூறப்படு கின்றது. இவர்கள் இந்துக்கலை வளர்ச் சிக்குப் பங்களிப்புச் செய்திருக்கின்றார் கள். இச்சமூகத்தினர் கி.பி. 1347இல் செக ராஜசேகரன் என்னும் பட்டத்துடன் முடி சூட்டப் பெற்ற குணபூஷண சிங்கை ஆரியன் தன் காலத்தில் நெசவுத் தொழிலை இந்நாட்டில் விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் ஆந்திர நாட்டினின் றும் காஞ்சிப்பகுதியினின்றும் பண்டாரவ ளைச் செட்டிப்பிள்ளைகள் என்னும் இனத்த வரை அழைத்து வந்து இங்கு குடியேற்றி னான். இவர்கள் நெசவுத் தொழிலில் மிகச் சிறந்த நுட்பமறிந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. சேணியர் சமூகத்தினர் வர்ணச் சித்திரங்களமைந்த திரைச்சீலை கள், மேசை விரிப்புக்கள், படுக்கை விரிப்புக்கள் முதலியவற்றைச் செய்தார் கள். தென்னிலங்கையிலுள்ள பௌத்த ஆலயங்களுக்கு வேண்டிய சித்திரத் திரைச்சீலைகள், வண்ணார்பண்ணைப் பிரதேசத்திலிருந்து சென்றமை நூல்களிற் கூறப்படுகின்றது.

இப்பிரதேசத்திலுள்ள நான்கு பிர தான வரலாற்றுத் தொன்மைமிக்க சிவன், விஷ்ணு, காளி, முருகன் கோயில்களை நிர்மாணித்தவர்கள் தென்னிந்தியச் சிற்பி கள் என்பதற்கான ஆதாரங்கள் உண்டு. வண்ணை கிழக்கில் அமைந்துள்ள தனிப் பெருமைவாய்ந்த ஸ்ரீ வெங்கடேச வரத ராஜப்பெருமாள்கோயில் கி.பி. 1347ஆம் ஆண்டளவில் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் ஆட்சிக்குவந்த குணபூஷண சிங்கையாரியனால் ஆந்திரநாட்டினின்றும் காஞ்சியினின்றுங் கொணர்விக்கப் பெற்ற நுண்ணிய கைத்திறனமைந்த காருக வினை யாளராற் கட்டப்பட்டது எனக் கூறப்படு கின்றது.

வண்ணை வைத்தீஸ்வரன் கோயி லின் கிழக்குச் சந்தியிலே மூன்றாம் பிர காரமாகிய தெருவீதியின் புறத்தே பதி னாறுகால் மண்டபம் ஒன்று தமிழ் நாட் டுப்பாணியிலே கட்டப்பட்டுக் கோயிலுக் கும் நகரத்துக்கும் அழகு தந்து கொண் டிருக்கிறது. இம்மண்டபத்திலேயே பூங்கா வனத் திருவிழாவிலன்று பார்வதியம்மை யார் பரமேசுவரனை நோக்கித் தவஞ் செய்ய எழுந்தருளுவார். இம்மண்டபத்தி லிருந்து கிழக்கே சுமார் 150 யார் தூரத்திலே, இத்திருக்கோயிலை நிர்மாணஞ் செய்ய கலைநாடாகிய காவிரி நாட்டி லிருந்து போந்த கலைவல்லுநராகிய விசுவகன்மாகுலத்தினர் திருக்கோயிலின் திருப்பணிகளைச் செய்யும் காலத்தில் தாம் வழிபடுவதற்கெனத் தங்குல தெய் வமாகிய மகாகாளிக்கு அமைத்த திருக் கோயில் உள்ளது. இவ்விடம் கன்னா திட்டி என வழங்குகின்றது. மேலும் வண்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்பவர்கள் அதாவது சித்திரம், சிற்பம் போன்ற கலைநுணுக்கம் கைவரப் பெற்றவர்கள் இவ்வூரிலே குடியமர்த்தப் பட்டு வாழ்ந்த காரணத்தால் இவ்விடப் பெயர் வந்தது எனக் கூறலாம். வண்ண வேலை என்று சொல்லுமிடத்து, பல தரப் பட்ட தொழிலை மையமாகக் கொண்டு விளங்குவது. அதாவது ஓலையினாலே ஆக்கப்பெற்ற பெட்டிகள், பாய்கள் முதற் கொண்டு சீலைச் சித்திரங்கள் வரையும், சுவர்ச் சித்திரக்கோலமிடல் முதல் சித்தி ரச் செட்டிமார்............ கோலமிடல் வரை யும் இதில் அடங்குகின்றன.

அந்நியர் படையெடுப்புக் கார ணத்தாலும் இப்படிப்பட்ட கலை நுணுக் கங்கள் கைவிடப்பட்டும் கைத்தொய்ந்து அற்றுப் போகும் காலநிலையில் தமிழர சர்கள் பாரதத்திலிருந்து மக்களைக் கொண்டு வந்து குடியமர்த்திய வம்சா வளியினரும் இன்னமும் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக, பிற்பட்ட காலம் வரைக்கும் நாம் காணக்கூடியதாயிருந்த வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வச ந்த மண்டபத்தின் இருமருங்கிலும் இருந்த சாயவேலைகளும் முகிலாப்புத் துணியும் சான்றுபகரும். பிரதான வீதிக்கும் கடற் கரை வீதிக்கும் நடுவே உள்ள வீதியில் அமைக்கப்பட்ட கிட்டங்கிகளின் மேல் பூசப்பட்டிருக்கும் சாயவேலைகளும், கங்கா சத்திரத்தில் (தற்பொழுது தற்காலிக கொட்டில் கடைகளாக மாற்றப்பட்டுள் ளன) உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் அமைக்கப்பெற்ற சாயவேலைப் படங் களும் சான்று பகருகின்றன. வண்ணார் பண்ணை என்பதை "ஆர்" என்ற பலர் பால் விகுதி சேர்த்து காலப்போக்கில் வண்ணார்பண்ணை என அழைத்து வரு கின்றனர்.

"வண்ணார்" என்பதனை ஒரு குலத்துக்கேயுரிய சுட்டுப்பெயர் என்று கொள்ளப்படுவது பொருந்துமாறு இல்லை. வண்ணம் செய்பவர்கள் அதாவது அழகு செய்பவர்கள் அனைவரையும் குறிக்கும் சொல்லாகக் கொள்ளலே சாலப் பொருந்துவ தாகும். "பண்ணை" என்பதனைக் கூடி வாழும் இடம் எனப்பொருள் கொள்ள லாம். எனவே வண்ணார்பண்ணை என் பது பல துறைக் கலைஞர்கள் கூடிவாழ் ந்த ஒரு இடமாகக் கொள்வதில் (அழகு செய்பவர்கள் அனைவரையும் சுட்டுவதில்) தவறில்லை, பொற்கொல்லர்கள், சிற்பி கள், செம்மையான செப்புவேலை செய்ப வர்கள், வண்ணச் சேலைகளை உற் பத்தி செய்து பல வண்ணங்களைத் தீட்டு வோர் எனப் பலதிறத்தார் வாழ்ந்தார்கள் என்பதற்கு இப்பிரதேசத்தில் அமைந்துள்ள இடப்பெயர்களே சான்றாகும். அதாவது கன்னாதெரு, தட்டாதெரு, செம்மாதெரு, சேணியர்தெரு, வெள்ளாந்தெரு, சோனக தெரு, சாண்டா தெரு (சாண்டார்தெரு) ஆகிய இடப்பெயர்களைக் குறிப்பிடலாம்.

சோழ, பாண்டியர் காலத்தில் இப் படிப்பட்ட கலைஞர்கள் "வண்ணத்தார்" என அழைக்கப்பட்டனர். இத்தகைய வண் ணத்தார் குடும்பத்தினர்கள் ஒன்று சேர்ந் திருந்த இடம் பண்ணை என அழைக் கப்பட்டது. அதாவது பல வண்ணத்தார் இருந்த இடம் வண்ணத்தார் + பண்ணை - காலப்போக்கில் வண்ணார்பண்ணை என மருவியிருக்கலாம்.

வண்ணார்பண்ணையில் பல்வேறு சமூகத்தினர் வாழ்ந்த இடங்களாக கன்னா திட்டி (கன்னார்), சிவியார்தெரு (சிவியார்), தட்டாதெரு (தட்டார்), சேணியதெரு (சேணி யர்), சோனகர் (சோனகதெரு) ஆகியன விளங்குகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.5 வண்ணார் வாழ்ந்த இடம்

வண்ணார்பண்ணை என்ற பெயரானது வண்ணாரச் சாதியையும் (சமூகத்தினர்) இச்சாதியினைச் சார்ந்தோர்களையும் இத்தொழிலை மேற்கொண்டவர்கள் வாழ்ந்த ஒரு பகுதியினையும் சுட்டி பின்னர் காலப்போக்கில் இப்பிரதேசம் முழுவதற்கும் இட்டு வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. யாழ்ப்பாணம் என்ற பெயர் முதலில் குறிப்பிட்ட நிலப்பகுதிக்கு வழங்கப்பட்டு காலப்போக்கில் வட பகுதி முழுவதற்கும் வழங்கப்பட்டது போல வண்ணார்பண்ணை என்ற பெயரானது முதலில் குறிப்பிட்ட சமூகத்தினர் வாழ்ந்த பகுதியினைக் குறித்து பின்னர் குறிப்பிட்ட பிரதேசம் முழுவதற்கும் வழங்கி இருக்கவேண்டும் எனக் கருதலாம். இவர்கள் கூட வண்ணத்தார் சமூகத்தில் ஒன்று.

இவ்வூரிலே வண்ணாரச் சமூகத்தினர் நிறைய வாழ்ந்த படியால் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். வண்ணார் என்பது சலவைத் தொழிலாளரைக் குறிக்கின்றது. துணியைச் சலவை செய்யும் இனத்தைச் சேர்ந்தவருக்கு யாழ்ப்பாண மரபின்படி "கட்டாடி" என்ற சொல் தான் ஆரம்ப காலத்தில் வழங்கி வந்த சொல்லாகும். இவர்கள் சிலகாலம் செல்ல வண்ணக்கர் செய்து வந்த சொக்கட்டான் பந்தல், முகிலாப்புக்கட்டில், தோரண வேலை போன்ற வேலைகளைக் (கட்டாடிமார்) கையாண்டதால்தான் அவர்களுக்கும் இந்த வண்ணார் என்ற பெயர் வந்தது. எனவே இங்கு பாரம்பரியமாக வாழ்ந்தவர்கள் சித்திரவேலை செய்பவர்களே தவிர வேறு தொழில்கள் செய்பவர்களல்ல என்பது இங்கு ஒப்புநோக்கத் தக்கது. இத்தொழிலைச் செய்பவர் துணி வகைகளைச் சலவை செய்த நீர் நிலைகள் பொதுவாக "வண்ணாங்குளம்" என்ற பெயர்களில் சுட்டப்பட்டு வருகின்றன. இப்பிரதேசத்தில் பல வண்ணாங்குளங்கள் அமைந்திருப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இப்பிரதேசத்தின் பல இடங்களிலும் அமைந்துள்ள குளங்கள் "வண்ணான்" என்ற சாதிப்பெயருடன் இணைத்து அழைக்கப்படுகின்றமை இங்கு கவனிக்கத்தக்கது. இப்பிரதேசத்தில் வண்ணாரச் சமூகத்தினர் வாழ்ந்த இடங்களாகவும் தற்பொழுது வாழ்ந்து வருகின்ற இடங்களாகவும் கலட்டி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி ஆகியன விளங்குகின்றன.

தொகுத்து நோக்கின் வண்ணார் பண்ணை என்ற பெயரானது பல்துறைக் கலைஞர்கள், சமூகத்தினர் கூடி வாழ்ந்த (கூட்டாக வாழ்ந்த இடம்) இடத்தினைச் சுட்டுவதற்கு வழங்கியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. தனித்து வண்ணாரச் சமூகத்தினர் இங்கு வாழ்ந்த காரணத்தினால் இப்பெயர் வழங்கியிருக்க முடியாது. ஆனால் இப்பகுதியில் அமைந்துள்ள குளங்கள் எல்லாம் வண்ணான்குளம் எனச் சுட்டப்படுகின்றன. மற்றும் நிலத்தினியல்பு, நீரினியல்பு ஆகிய காரணத்தினாலும் "வண்ணார்பண்ணை" என்ற பெயர் இட்டு வழங்கி வந்திருக்கலாம் எனக் கொள்வதிலும் தவறில்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிடியரிசியினால் உயர்ந்த அறப்பணிகள்

மூ. சிவலிங்கம்
இளைப்பாறிய கிராமசேவையாளர்

அன்னையால் அமுதென ஊட்டப் படும் அன்னம் அனைவரையும் ஆன்மீக நேயத்துடன் வாழ வைக்கிறது.

காசிப்பதியினிலே குடிகொண் டுள்ள அரும்பெரும் சக்தியான அன்னை பூரணி தமது வற்றாத பெருங்கருணை யுடன் அன்னம் பாலிப்பதால் ஜீவாத்மாக் கள் பசிப்பிணியின்றி வாழும் பேறு பெற் றுள்ளன. அண்டமெல்லாம் போற்றும் முழு முதற் கடவுளான அகிலலோக நாயகன் பிச்சாண்டியாக பிச்சாபாத்திரம் ஏந்தி அன்னை அன்னபூரணியிடம் பெற்ற அன் னத்தினாற் தாமே பசியாறியதுபோல அனைத்து உயிரினங்களையும் பசியாற வைத்தார். அன்னையின் அன்னக் கொடை யால் யாவரும் நலமுடன் வாழும் பேற் றினை அடைந்தனர்.

ஒரு தாயானவள் தம்மால் வழங் கவிருக்கும் இயல்புக்கேற்ப யாவரையும் ஒப்புநோக்கிப் பகிர்ந்து உண்ணவைக்கி றாள். இதனால் தாய் பிள்ளை என்னும் உறவும் நீடிக்கிறது. ஒரு சிறந்த பெண் ணானவள் தமது குடும்ப உறுப்பினர்களி டையே பகிர்ந்துண்ணும் வேளையில் பிற ரொருவர் பசியுடன் காணப்பட்டால் அடுத்த வருக்கும் ஒரு பிடியாவது வழங்கிப் பெரு மையடைகிறாள். இவ்வாறு அடுத்த வருக் கும் இயன்றளவு வழங்குவதால் தாய்க் குலத்துக்கே பெருமையைத் தேடித் தருகிறாள்.

பறவை இனங்களில் விரும்பத்த காத செயல்புரியும் காக்கை இனம் சிறி தளவேனும் தமக்குக் கிடைக்கும் உண வினைத் தமக்கெனப் பதுக்கிவையாது தம் இனத்தையே கூவி அழைத்து யாவ ரையும் உண்டு மகிழ வைக்கிறது. பகுத் துண்டு வாழும் நெறியினை ஆறறிவு படைத்த மனிதகுலத்துக்கே போதிக்கிறது.

அடுத்தவன் பசியிருக்க நாம் மட்டும் வயிறார உண்ணும் தீயநெறியை மறந்து யாவருக்கும் ஒரு பிடியேனும் தந்து வாழ ஆன்றோர்கள் எம்மை நெறிப் படுத்தியுள்ளனர். முற்றும் துறந்த முனி வரும் பெரும் சித்தருமான திருமூலர் தமது சித்து மகிமையால் மூவாயிரம் ஆண்டுகள் தவமிருந்து 3000 பாடல்கள் கொண்ட தத்துவ முத்துக்களாலான திரு மந்திரம் என்னும் அரிய நூலை எமக் களித்தார். ஒருவருடைய தவநிலையில் தேடிய தத்துவ முதிர்மையால் நாலுவரி கள் கொண்ட ஒரு பாடலை வெளியிட் டார். திருமூலரின் திருமந்திரக் கடலில் கிடைத்த ஒரு பாடல் மானிடரின் பகுத் துண்டு வாழும் நெறியை எமக்கு உணர் த்துகிறது.

மனிதன் தனது நாளாந்தக் கட மையாகக் செய்ய வேண்டியவற்றைச் செய்து நற்பண்புடன் வாழுமாறு அறிவுறு த்துகிறார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு பண்பானவன் இறைவனை நேசித்து ஒரு பச்சிலையேனும் (ஒரு மலர்) சார்த்தி வணங்குமாறு கூறுகிறார். மனிதகுலத்துக்குச் சகல செல்வங்களையும் தரும் பசுவுக்கு ஒரு பிடி வாயுறை (பசும் தீவனம்) தந்து போசிக்கவும், தாம் உண்ணும் போது யாராவது பசியென வந்தால் ஒரு பிடி உணவாவது வழங்குமாறு தெரிவித்தார். வழங்குவதற்கு இயலவில்லையெனில் அன்புடன் அனுசரித்து இன்முகம் காட்டி இன்னுரை பேசி மகிழ் விக்குமாறு எமக்குப் போதித்தார். திருமூலர் ஓதிய திருமந்திரப் பாடலையும் அறிவோம்.

**"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம் பிறர்க் கின்னுரை தானே"**

- திருமந்திரம் 232

யாழ் மண்ணில் அன்று கந்த புராண கலாசாரத்தை அடியொற்றி வாழ்ந்த எமது தமிழ்குடிமக்கள் "அன்பே சிவம்" என்னும் தூய சிந்தனையில் யாவருடனும் ஆன்மிக நெறிபேணிப் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் சீரிய பண்பை நிலைநாட்டினர். இதனால் அறம் வளர்ந்து அறச்சாலைகள் பொலிந்தன. தர்மசீலர்கள் அறச்சாலைகள் சிறக்க நல்லாதரவு தந்தனர். யாவரும் துன்பம் நீங்கி இன்புற்றனர்.

## நாவலர் பெருமானின் பணி

அந்நியராட்சியில் எமது மதம், மொழி, கலை, கலாசார மரபு யாவும் அழிவுற்றன. மக்கள் தவித்த காலத்தில் மக்களின் அவசிய சேவையின் பேரில் உதவுவதற்கே நல்லையில் நாவலர் பெருமான் அவதரித்தார். பணியின் பேறாக நாவலர் பெருமான் இருமுறை பிடியரிசி எடுத்து மகிழ்வித்தார்.

முதலில் தமிழ்ப் பாடசாலைகள் திறந்து, கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக அச்சூழலில் பிடியரிசி எடுக்கும் திட்டத்தை ஆரம்பித்தார். மக்களும் நல்லாதரவு தந்தனர். எடுத்த பிடியரிசி கற்பிக்கும் ஆசிரியர்களின் வாழ்வுக்கு உதவியது. இதனால் மக்களிடையே அறப்பணியும் கல்வி வளர்ச்சியும் மேலோங்கியது.

நாவலர் பெருமான் சமய மற்றும் கல்வி, சமூகப்பணி புரிந்த காலத்தில் (1876) நாட்டில் மழையின்றி எம்மண்ணில் பஞ்சமேற்பட்டது. ஏழை மக்கள் பசியால் வாடியதை நோக்கிய நாவலர் பெருமான் வசதியுள்ளவர்களிடம் சென்று ஏழைகளின் சார்பாக நாளாந்தம் உலையிடும் அரிசியில் ஒரு பிடி அரிசியை வேறாக எடுத்து வைத்துத் தருமாறு கேட்டிருந்தார். யாவரும் தூய சிந்தனையுடன் அறப்பணிக்கு உதவினர். தெருவோரங்களில் ஆங்காங்கே கஞ்சித் தொட்டிகள் அமைத்து நாவலர் பெருமானால் ஏழைகளின் பசியாறக் கஞ்சி விநியோகிக்கப்பட்டது. யாவரும் நிறைவுடன் வாழ்ந்தனர்.

## மகாதேவ சுவாமிகள்

நாவலர் பெருமானின் பணிகளை அடியொற்றிய மகாதேவசுவாமிகள் தமது தீவகப் பிரிவில் நிறுவிய பாடசாலை ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தை நோக்கினார். அச்சூழலில் இல்லங்கள் தோறும் தாமே சென்று பிடியரிசி பெறும் அரும் பணியைத் தொடக்கினார். கிடைக்கும் அரிசியைச் சேரவைத்து ஆசிரியர்களு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

க்கு வேதனத்துக்காக வழங்கினார். பாடசாலையில் கல்வி தொடர்ந்தது. அப்பாடசாலை இன்றும் சிறப்புடன் இயங்குகிறது.

## காஞ்சிப்பெரியார்

தமது பதின்மூன்றாம் வயதில் காஞ்சி சங்கராச்சாரியார் மடத்தின் குரு பீடத்தில் அமர்ந்து 87 வருடங்கள் சிறப்புடன் பணியாற்றிய குருமுதல்வரான ஸ்ரீசந்திரசேகேரேந்திர சுவாமிகள் முக்காலமும் உணர்ந்தவர். நலிந்த மக்களின் துயர் துடைக்க எண்ணினார். நாளாந்தம் தம்மிடம் நேரில் வந்து அருளாசி பெறுவோரிடம் தமது உரையில் அடிக்கடி கூறும் அறப்பணிக்கமைவான ஒரு பகுதியை நோக்குவோம்.

நாட்டில் வறுமையால் வாடும் மக்கள் பசியால் தவித்தனர். இதனால் சமய பக்தியையும் நாடுவதில்லை. அறச்சிந்தனையுள்ள அனைவரும் நாளாந்தம் அரிசியை உலையிடும் போது இறைவனை எண்ணி ஏழைமக்களின் பேரில் ஒரு (கை) பிடி அரிசியை ஒரு கலசத்திலிட்டு சில்லறைப் பணத்தையும் சேர வைக்க வேண்டும். இவ்வாறு நாளாந்தம் சேர்த்து வைப்பதை இதற்கென ஒன்று சேர்க்கும் தொண்டர்களிடம் தரவும். சேகரிக்கப்படும் அரிசியை இறைவன் பேரில் சமைத்துச் சோறாக்கவும், சேரும் சில்லறைப் பணம் காய்கறிவகை, விறகு வாங்கவும் உதவும். சமைத்த சோற்றினை இறைவனுக்கு நிவேதனம் செய்த பின் ஏழைமக்களுக்கு வழங்கலாம். இவ்வாறு செய்யுமிடத்து ஏழைகளின் பசி நீங்குகிறது. பிரசாதம் பெறும் நோக்கில் தவறாது கோயிலுக்கு வரும் ஏழைமக்கள் இறைவனை வழிபடவும் முற்படுவர்.

இதனால் பிடியரிசி சேர்த்து வைக்கும் குடும்பப் பெண்களுக்கு நற்பலன் கிடைக்கிறது. யாவரும் வழிபட தெய்வ வழிபாடு சிறப்பிக்கிறது என மிகுந்த பரிவுடன் யாவரையும் அறப்பணியாற்றுமாறு உபதேசித்தார்.

## மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் திருப்பணி

பிடியரிசி சேர்க்கும் அறப்பணி அறுநூறு வருடங்களுக்கு முன் தென்னிந்தியத் திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் திருத்தலத்தின் ஆலயத் திருப்பணியின் பேரில் தென்பாண்டி நாட்டு மன்னன் திருமலை நாயக்கரால் ஆரம்பித்து வைக்கப்பட்டதையும் நோக்குவோம்.

ஆதியில் இந்திரனால் நிர்மாணிக்கப்பட்ட மதுரை சுந்தரேஸ்வரர் மீனாட்சி அம்மன் (இணைந்த, தனித்தனி) ஆலயங்கள் சிறப்புற்றிருந்தன. பிற்காலத்தில் கோவலன் கொலையுண்டதும் நீதி கேட்ட கண்ணகியின் கற்புக்கனலால் மதுரையின் நாடு நகர் யாவும் அழிந்தன. (இவை புராணகாலச் சம்பவமாகும்.)

இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன் மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் புனர்நிர்மாணஞ் செய்யப்பட்டது. பல மன்னர் காலங்களில் பகுதிபகுதியாக ஏற்பட்ட திருப்பணி நிறைவுகாண நூற்றியிருபது வருடகாலம் நீடித்தது.

ஒரு மன்னன் எதிர்காலத்தின் ஆலயச் சிறப்பை நோக்கி இப்போது அமைந்துள்ள ஆலயத்தின் வரைபடத்தின்படி அடியெடுத்தான். ஒரு மன்னன் நாட்டிலுள்ள சகல குடும்பங்களும் வீட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்கொரு ஆணும் பெண்ணும் திருப் பணிக்குத் தமது உடலுழைப்பை வழங் கக் கட்டளையிட்டான். மேலும் புத்திரச் செல்வமற்றோரின் சொத்துக்கள் யாவும் திருப்பணி நிதியில் சேர்க்கப்பட்டன. விவசாயிகள் தமது விளைச்சலில் ஒரு பகுதியைத் திருப்பணிக்குத் திரட்டினர். ஒரு மன்னன் வேற்று நாடுகளிற் சென்று வெற்றி மூலம் கவர்ந்த நிதியில் பொற்றா மரை வாவியை ஆழமாக்கி புனர்நிர்மா ணஞ் செய்தான். இவ்வாறு பலவகை யாலும் நிதிசேரவும் திருப்பணிகள் சிறப் புற்று தேவலோகக் காட்சியை நினைவு கூரவைத்தது.

இச்சிறப்பு மிகுந்த மீனாட்சியம் பாளின் ஆலயம் தென்மதுரையில் அமைந்த தால் அப்பகுதி மக்கள் கூடுதலான பங் களிப்பைத் தரவேண்டுமென திருமலை நாயக்க மன்னன் விரும்பினான். அதன் பேறாக இல்லங்கள் தோறும் பிடியரிசி எடுத்து அதன் மூலம் சிறந்த திருப்பணி யைச் செய்யத் தீர்மானித்தான். தானா கவே முன்வந்து ஆலயத் திருப்பணிக் கான பிடியரிசி எடுக்கும் செயலை ஆரம்பித்தான். குடிமக்கள் யாவரும் தாராளமாக உதவினர். கிடைத்த அரி சியை விற்றதால் பெருநிதி கிடைத்தது. இந்த நிதி மூலம் பொற்றாமரை வாவி யின் அருகமைந்த விபூதிப் பிள்ளையார் ஆலயத்தின் பின்புறமாகச் சிறந்த ஒரு மண்டபம் அமைக்கப்பட்டது. இந்த மண்ட பம் கிளிக்கூட்டு மண்டபம் என அழைக் கப்படுகிறது.

## கிளிக்கூட்டு மண்டபத்தின் சிறப்பு

இந்த மண்டபத்தினை அமைத்த மூலதனம் ஆன்மீக சிந்தனையுள்ள அன்பு உள்ளங்களின் சமமான பங்களிப் பாகும். நிதிவளத்தில் ஏழை, தனவந்தர் என்ற பேதமின்றி யாவரும் வழங்கியது ஒரு பிடி அரிசியே. அன்பே சிவம் என் னும் தத்துவத்தை நிலைநாட்ட சிவமய மான அன்பு உள்ளங்களின் தூய கைங் கரியம் துலங்குகிறது. ஆண்டவன் சந் நிதியில் அனைவரும் சமம் என்ற திரு வாக்கை உறுதிப்படுத்துவதன் பேரில் (திருமுருக கிருபானந்தவாரியாரின் அரு ளுரைப்படி மனித கழிவுகளைச் சுத்தஞ் செய்யும் இடதுகையும், உணவு உண்ணு தல், கற்கும் பாடத்தினை எழுதுதல், தானம் வழங்குதல், இறைவனுக்கு மலர் சார்த்துதல் போன்ற நற்காரியங்களுக்கு உதவும் வலக்கையும்) இறைவன் சந்நி தியில் வணங்கும்போது இரு கைகளும் சரிநிகர் சமானமாக ஒன்றிணைந்தே செயற்படுகின்றன.

ஒருவன் ஆலயம் சென்று இரு கை கூப்பி வணங்க முற்படும் நோக்கம் சகல அண்டங்களையும் படைத்துக் காக் கும் அருள்பொலிய விளங்கும் தெய் வங்கள் எமது தீவினையை நீக்கி நல் வினையைத் தருமாறு வேண்டும் நிலை யைக் குறிக்கும். நாம் வணங்கும் தெய்வம் அருள்சுரக்கும் மகாசக்தியாக மதுரை யிலே தன்னாட்சி செய்யும் மீனாட்சியாக அமைந்துள்ளார். இச்சக்தி சிலைவடிவில் எம்முன் தோன்றினாலும் சக்தியின் மகி மையால் அவரது திருக்கரத்தில் ஜீவாத் மாக்களான பசுங்கிளிகள் எந்த நேரமும் அமர்ந்திருந்து மழலைமொழி பேசி எம்மையெல்லாம் ஆசீர்வதிக்கின்றன.

மீனாட்சியம்பாளின் (சிலையில்) கையில் வந்தமரும் (உயிருள்ள) கிளி கள் பல வளர்க்கப்படுகின்றன. அவை கள் தங்குவதற்கேற்ற கிளிக்கூடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாகப் பாதுகாக்கப்படுகின்றன. ஒரு தெய்வத்தின் திருக்கரத்தில் அமரும் (தெய்வீக) கிளிகள் பல தங்கும் அரிய அலங்கார மண்டபமாகப் புதுப்பொலிவுடன் காட்சி தருவதால் இப்பிடியரிசி மண்டபம் கிளிக்கூட்டு மண்டபமென அழைக்கப்படுவது பெருஞ்சிறப்பாகும். பண்டைய மக்கள் சிறுதுளியைப் பெருவெள்ளமாக்கிய தூய சிந்தனை அறப்பணியை அலங்கரிக்கும் பிடியரிசி மூலமாகச் செயற்பட்டதை அறிந்தோம்.

எமது யாழ் மண்ணில் சிவப்பணி, கல்விப்பணி, சமூகப்பணியை நாடிய மக்கள் தமது பெருவிருப்பின் பேரில் பிடியரிசிப் பணி மூலம் தத்தமது பகுதியிலமைந்த ஆலயத்திருப்பணி சிறக்க உதவினர். இவ்வாறு பிடியரிசி எடுக்கும் தொண்டினால் வளர்ந்த ஆலயங்களுள் சைவத்துக்கும், தமிழுக்கும் ஆயகலைகளுக்கும் உறைவிடமான இரு ஆலயங்களை இணுவிலில் நோக்குவோம்.

## இணுவில் பரராஜசேகர பிள்ளையார் கோவில்

முன்னொருகாலத்தில் சுண்ணாம்புக் கலவையினால் அமைந்த இத்திருத்தலம் நிதி நெருக்கடியால் பூசைகளும் கிரமமின்றி இருந்தன. விநாயகப் பெருமானின் மீளா அடிமைகளான பக்தர்கள் நால்வர் எடுத்த பெருமுயற்சியால் அச் சூழலில் அமைந்த வீடுகளில் பிடியரிசி சேகரிக்கப்பட்டது. விநாயகரின் சிறப்பை அறிந்த இல்லத்தரசிகள் தாராளமாக உதவியதால் மாதாந்தம் நாற்பது கொத்து அரிசி கிடைத்தது. இவ்வரிசியில் அந்தணரின் பூசைப்பணிக்கென இருபது கொத்தரிசியை வழங்கினர்.

மிகுதி இருபது கொத்தரிசியுடன் ஆலய அபிவிருத்தியை ஆரம்பித்தனர். எம்பெருமான் திருவருளால் மக்களுக்கு நிறைவான வாழ்வும் அறச்சிந்தனையும் கிடைத்தன. தமது வளர்ச்சிக்கேற்ப பல வகையான பணிக்கொடையை வழங்கினர். இவ்வாறு எண்பது வருட காலம் பொதுமக்களின் பெருவிருப்பின் பேரில் திருப்பணியும் திருவருளும் பொலிந்தன.

இன்று நாம் காணும் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலில் சிறப்பான ஆலய மண்டபங்களும் நாற்புறமும் ஐந்து தளத்திலமைந்த நான்கு கோபுரங்களும் இரு திருமண மண்டபங்களும், கல்விச் சிறப்புக்களும் ஒழுங்கமைந்துள்ளன.

பிடியரிசித் தொண்டினால் ஏற்பட்ட அறப்பணிகளை இறையருளே வியக்க வைத்த புதுமையைக் காண்கிறோம்.

## இணுவில் சிவகாமியம்பாள் திருத்தலம்

இணுவில் கிராமத்தின் பலசிறப்புக்களுக்கும் உறைவிடமான பல ஆலயங்களுள் பிரசித்தி பெற்ற சக்தியின் ஒரே ஆலயமாகத் திகழ்வது சிவகாமி அம்பாள் திருத்தலமாகும்.

தொண்ணூறு வருடங்களுக்கு முன் சிறு மண்குடிசையாக இருந்த போதும் மக்களின் தணியாத பக்தி மேலீட்டினால் பூசைகள், வழிபாடுகள், விழாக்கள் யாவும் சிறப்பாகவே அமைந்தன. இவ்வாலயத்தின் தென்பால் அமைந்திருந்த சுருட்டுத் தொழிற்சாலையில் பணியாற்றிய நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்களுள் ஒரு சிலரின் பக்தியும் பரவசமும் மேலிட நவராத்திரிக் கால விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைச் சிறப்பிக்க முன்வந்தனர்.

நவராத்திரி விழாவின் இறுதி நாளன்று இவ்வாலயத்தில் மகிஷாசூரன் போர் நடாத்தத் தீர்மானித்தனர். சிறந்த மகிஷாசூரனையும், ஒரு சிங்கவாகனத் தையும் செய்விக்க எண்ணினர். இதன் காரணமாக நிதி இலக்கை ரூபா முன்னூறாக நிர்ணயித்தனர். தமது நிறுவனப் பணியாளர்கள் அனைவரிடமும் ஒரு நாளுக்கு ஒரு கட்டுச் சுருட்டுக் கூலியை (அரைச்சதம்) அன்பளிப்பாகப் பெறவும் ஆரம்பித்தனர். மேலும் அச்சூழலிலுள்ள இல்லங்கள் தோறும் பிடியரிசி எடுத்தும் பணியை நிறைவு செய்ய முன்வந்தனர். இதன் பேறாக ஒரு வருட காலம் செய்த பெருமுயற்சி காரணமாகத் தமது கனவை 1931 இல் நனவாக்கினர். அவர்களின் பெருமுயற்சியால் இவ்வாலயத்தில் மகிஷாசூரன் போர் வெகுசிறப்பாக நடைபெறுவதைக் காணலாம்.

ஒரு சில அடியார்களின் அயராத முயற்சி சிறிது சிறிதாகச் சேர்ந்த நிதி அன்று பெருநிதியாக ஆலயப்பணிக்கு மெருகூட்டியது.

## பிடியரிசித் தொண்டினால் ஆலயப் பணியாற்றிய சாத்திரம்மா

இணுவில் சிவகாமி அம்மன் ஆலயச் சூழலில் வாழ்ந்த குடும்பப் பெண்ணான திருமதி ந. சிவகாமசுந்தரி என்பவர் அன்னை சிவகாமியின் பேரருளினால் திருவாக்குச் சொல்லும் பேறுபெற்றார். இவரின் சேவையை நன்குணர்ந்த இவ்வூர் மக்களும் வெளியூர் மக்களும் இவரை நாடி வந்து தம் மன நிறைவான நற்பலனையடைந்தனர். இவ்வாறு கேட்க வருவோர் ஆலயத் திருப்பணிக்கென ஒரு பணம் (ஆறு சதம்) வழங்கினர். மேலும் திருவாக்குச் சொல்வதைச் சாத்திரம் சொல்வதாகக் கருதியவர்கள் இவரை அன்புடன் சாத்திரம்மா என்றே அழைத்தனர்.

திருவாக்குச் சொல்லி வந்த சாத்திரம்மாவின் கனவில் தோன்றிய அன்னை சிவகாமி அயல் வீடுகளிற் சென்று பிடியரிசி எடுத்து வந்து தமது திருப்பணியைத் தொடருமாறு தெரிவித்தார். இதன் பேறாகச் சாத்திரம்மாவும் எல்லா வீடுகளுக்கும் சென்று ஆலயத் திருப்பணிக்கென பிடியரிசி பெற்று வந்தார். இல்லத்தரசிகளும் தாராளமாக உதவினர். நிதி பெருகவும் ஆலயத் திருப்பணிக்கான கருங்கற்கள் ஆலயச் சூழலில் சேர்க்கப்பட்டன.

கட்டுமாணப் பணியை ஏற்ற சிற்பாசாரிமார் கருங்கற்களைத் தமது தேவைக்கேற்றவாறு செதுக்கினர். மாதாந்தம் சேரும் திருவாக்குச் சொல்லும் பணமும் பிடியரிசி விற்று வரும் பணமும் கட்டுமாணப்பணிக்கு உதவின. இவ்வாறு நாற்பது வருட அயராத பிடியரிசித் தொண்டின் மூலம் கருவறை முதல் அர்த்த மண்டபம், மகாமண்டபம் யாவும் கருங்கற்களால் அமைக்கப்பட்டன.

தொடர்ந்து வாசற்கோபுரம், ஐந்து தள நிலையில் அழகாக அமைந்தது. அழகிய நெடிய கருங்கற்தூண்கள் புதியதோர் மணிமண்டபத்தை அலங்கரிக்கின்றன. தொண்டரின் சிறப்பான பிடியரிசிப் பணியால் புதியதோர் ஆலயம் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியரிசித் தொண்டில் மனமு வந்த ஈகை தென்படுகிறது. இதனைச் சேகரிப்போரின் தூய அறப்பணி பெருகு கிறது. ஏழைகளின் பசி நீங்குகிறது. இறைவனுக்கு நிவேதனம் கிடைக்கிறது. சமயம் வளர்கிறது. கல்விப்பணி, சமூகப் பணி என்பன உயர்வடைகின்றன. ஆலயத் திருப்பணி மேலோங்குகின்றது. இப் பணிக்கெனத் தம்மை அர்ப்பணிப்போர அறப்பணி செய்யும் நற்பேறடைகின்றனர்.

பிடியரிசி சேர்க்கும் பணி இப் போது அருகிவிட்டது. ஆனால் இத்திட்ட மானது இல்லங்களில் அறப்பணிக்கான தூய சிந்தனையையும் சிக்கனத்தையும் பண்டைய தமிழரின் இயல்பான பண்பை யும் வலுவூட்டுகிறது.

அறப்பணிக்கு அரிய உந்துசக்தி யாக அமைந்த பிடியரிசி சேமிக்கும் நற் பணியை நாடி நலமடைவோமாக.

# திருநீறு அணியும் முறை

1. திருநீற்றை ஒருவருக்குத் தரும்போதும் நாம் பூசிக்கொள்ளும் போதும், சிவ பெருமானுடைய ஐந்தெழுத்தை ஓதுதல் வேண்டும்.
2. அநுட்டானம், சிவபூஜை செய்வோர் திருநீற்றைத் தண்ணீர் விட்டுக் குழைக் காமல் உச்சி, நெற்றி, மார்பு, இரு தோள்களிலும் பூசிக்கொள்ள வேண்டும்.
3. திருநீற்றைக் கீழே சிந்தவிடக் கூடாது.
4. ஆள்காட்டி விரலால் தொட்டுப் பொட்டுப் போல் பூசுதல் கூடாது.
5. நெற்றி நிறையப் பூச வேண்டும்.
6. பையிலுள்ள திருநீற்றைத் தலைகீழாகக் கவிழ்க்கக்கூடாது.
7. திருநீறு தருபவர் நிற்க, நாம் உட்கார்ந்து வாங்குதல் கூடாது.
8. ஈரஉடையுடனும், ஒரு துணியுடுத்தும், ஆடையில்லாமலும் திருநீறு தரிக்கக் கூடாது.
9. வாயைத் திறந்து கொண்டும் தலையை அசைத்துக் கொண்டும், பிறருடன் பேசிக் கொண்டும், பாராமுகம் செய்து கொண்டும், சிரித்துக் கொண்டும், தலையைக் கவிழ்த்துக் கொண்டும், நடந்து கொண்டும், கண்ணாடி பார்த்துக் கொண்டும் திருநீறு தரிக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளப் பாதிப்பிலிருந்து விடுதலை பெற ஆலய தரிசனம் உதவுகிறது

வைத்திய கலாநிதி க. ஸ்ரீதரன்
வைத்திய கலாநிதி ஸ்ரீ. அன்புச்செல்வி

## அறிமுகம்

உடல் பலம், மனோபலம், ஆத்ம பலம் ஆகியவை குன்றி உடல், மனம், அறிவு தளர்ச்சி ஏற்படுவதாலோ அல்லது இயலாமை காரணமாகவோ கோபம் உண்டாகலாம். தற்காலச்சூழ்நிலை மனி தனுக்கு உளநெருக்கீடுகளைக் கொடுக் கிறது என்பது அறியப்பட்ட உண்மை யாகும். இங்கு ஒரு சம்பவம் அல்லது பிரச்சினையின் விளைவாக ஒருவரின் உடல், உள ரீதியிலான பாதிப்புக்களின் விளைவாக-ஒருவரின் உடல், உள ரீதியி லான பாதிப்புக்களை ஏற்படுத்துவதும், அவரின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்து வதுமான நிலையை "நெருக்கீடு" என்று கூறுகிறார்கள்.

இங்கு குறித்த சம்பவம் அல்லது சம்பவங்கள் ஒருவரின் மனத்தில் ஏற் படுத்தும் தாக்கங்கள் அல்லது நெருக் கீடுகள் அவரின் இயல்பான ஆற்றலுக்கு அப்பாற்பட்டு எல்லை மீறும் போது, அதன் விளைவாக நடத்தைப் பிறழ்வுகளும், மற்றும் உளரீதியான நோய்களும் உரு வாக வழிவகுக்கும். நெருக்கீடுகள் பல வகையில் தோன்றலாம். ஒரு குடும்பத் தலைவருக்கு வீட்டுப்பிரச்சினை அல்லது அலுவலகப் பிரச்சினைகள் பலவித நெருக் கீடுகளை உருவாக்கலாம். அவ்வாறு இல் லத் தலைவிக்கு வீட்டிலே பல பிரச்சினை கள் தோன்றலாம். மாணவர்களுக்கு பாட சாலையில் கல்வி பயிலும் போது படிக்க வேண்டும், பாடசாலையில் சிறப்பான பெறுபேறு பெறவேண்டும் என்பனவும் பெற்றோர்களின் திணிப்புகளும் ஒருவித பிரச்சினையை உண்டு பண்ணுகிறது. வயோதிபர்களுக்கு வீட்டிலே தங்களைக் கவனிக்க யாருமில்லை, தங்களால் இயல்பாக செயற்பட முடியவில்லை என் றெல்லாம் பிரச்சினைகள் உருவாகின்றன. இந்தப் பிரச்சினைகள் தனிமனிதனுக்கு மட்டுமுரியது. இதற்கப்பால் சமூகம், நாடு, உலகளாவிய பிரச்சினைகள் கூட உள் ளன. நாம் விரும்பினாலென்ன விரும்பாவிட்டா லென்ன இங்கு நடைபெறும் நெருக்கீடு களுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டும். இதனால் ஏற்படும் உள நெருக்கீட்டுப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி யுள்ளது. இந்த நெருக்கீட்டை எதிர்கொள்வ தற்கு

1. நெருக்கீட்டை ஏற்படுத்தும் சம்பவத் தின் தன்மை
2. அளவு
3. தீவிரம்
4. காலம்
5. எதிர்கொள்பவரின் தாங்குதிறன் ஆகிய காரணங்கள் நெருக்கீட்டை எல்லைப் படுத்துகின்றன.

இங்கு உளப்பாதிப்பு ஏற்பட்ட ஒரு வருக்கு உற்ற நண்பனைப்போல் உதவு பவர்கள் வேறுயாருமில்லை. இங்கு ஒருவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் உளப்பிரச்சினைகளை மனம்விட்டு மற்றொருவருடன் பகிர்ந்து கொண்டாலே பாதித்துன்பம் தீர்ந்துவிடும். அதுமட்டு மன்றி ஆற்றுப்படுத்துவதனால் அவனின் உளப்பிணிகள் தீருகின்றன. இதிலே மிக முக்கியமானது தியானம் அல்லது மந்திர உச்சாடனம் ஆகும். இதற்கு ஒரு சொல்லை அல்லது சொற்றொடரை திரும்பத்திரும் பச் சொல்வது மன அமைதியை உண் டாக்கும். "ஓம் நமசிவாய" அல்லது "ஓம் முருகா" என்பது மக்கள் உபயோகிக்கும் உச்சாடன முறையாகும். இங்கு ஆய்வு க்கு எடுத்துக்கொண்ட விடயம் உளப் பாதிப்புற்ற ஒருவர் ஆலயதரிசனம் செய் யும் போது விடுதலையடைகின்றாரா? என்பதாகும்.

## குறிக்கோள்

ஆலய தரிசனம் செய்வதால் உளத் தாக்கம் விடுதலையடைகிறதா என அறிதல்.

## ஆய்வு முறை

ஆய்வு முறை :- குறுக்கு முகக் கற்றலை யுடனான விபரண ஆய்வாகும்.

ஆய்வுக்குரிய இடம் :- யாழ்ப்பாணம்

ஆய்வுக்கு எடுக்கப்பட்டவர்களின் தொகை 120 பேர்

ஆய்வு செய்யப்பட்ட காலம் : மாசி மாதம் 2010 தொடக்கம் வைகாசி மாதம் 2010 வரை

ஆய்வு முறை:- 120 பேரில் 60 பேர் குழு ஒன்று ஆகப் பிரிக்கப்பட்டது. இவர்கள் ஆலய தரிசனம் செய்பவர்கள். 40 பேர் குழு இரண்டாகப் ஆகப் பிரிக்கப்பட்டது. இவர்கள் பூங்கனிச் சோலைக்குச் செல்ப வர்கள். மிகுதி 20 பேர் குழு மூன்றாகப் ஆகப் பிரிக்கப்பட்டது. இவர்கள் சினிமா பார்க்கச் செல்பவர்கள். ஆய்வுக்குரியவர் களிடையே ஆய்வு செய்வதற்குரிய வாய் மூல சம்மதம் பெறப்பட்டது. இவர்களி டையே மூடிய, திறந்த வினாக்களையு டைய வினாக்கள் அடங்கிய முன் பரி சீலனை செய்த வினாக்கொத்து வழங் கப்பட்டு ஆய்வுக்குரிய தரவுகள் பெறப் பட்டன. ஆரம்ப நிலையில் உளத்தாக்கத் தினால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும் ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். ஏனையோர் ஆய்விலிருந்து விலக்கப்பட் டனர்.

## அவதானிப்புகளும் முடிவுகளும்:-

அட்டவணை - 1 பால் ரீதியாக வேறுபாடுகள்

| ஆண்கள் | பெண்கள் |
|---|---|
| 36 (30%) | 84 (70%) |

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 70% மானவர்கள் பெண்களாவர்.

அட்டவணை- 2 வயது ரீதியாக வேறுபாடுகள்

| வயது | எண்ணிக்கை | % |
|---|---|---|
| >45 | 12 | 10 |
| 46 - 50 | 68 | 57 |
| 51 - 60 | 36 | 30 |
| >65 | 04 | 03 |

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 57% மானவர்கள் 46 - 50 வயதுக்குட்பட்டவர் கள் ஆவர். இந்த வயதிற்குட்பட்டவர் களில் உளப்பாதிப்புக் கூடுதலாக இருப் பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை - 3

பெண்களில் வேலைக்குச் செல்பவர் களின் விகிதத்தை அறிதல்:

| | |
|---|---|
| வேலைக்குச் செல்பவர்கள் | 63 (75%) |
| வீட்டுப்பணி | 21 (25%) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை - 3 இன் பிரகாரம் வேலைக்குச் செல்லும் பெண்களில் 75% மானவர்கள் உளப்பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆண்கள் எல்லோருமே வேலைக்குச் செல்பவர்களாக விருக்கிறார்கள். இவர்களில் எவருமே 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் அல்லர்.

அட்டவணை - 4 கோயில், பூங்கனிச் சோலை, சினிமா ஆகியவற்றுக்குச் செல்பவர்களில் உளப்பாதிப்புக் குறைந்தவர்களின் வீதத்தை அறிதல்

| | மொத்த எண்ணிக்கை | உளப் பாதிப்பு குறைந்த வர்கள் | % |
|---|---|---|---|
| கோயிலுக்குச் சென்றவர்கள் | 60 | 48 | 80 |
| பூங்கனிச் சோலைக்குச் சென்றவர்கள் | 40 | 12 | 30 |
| சினிமாவிற்குச் சென்றவர்கள் | 20 | 03 | 15 |

அட்டவணை 4 இன் பிரகாரம் கோயிலுக்குச் சென்றவர்களில் 80% ஆனவர்கள் உளப்பாதிப்பில் இருந்து விடுதலை பெற்றதாகக் கூறியிருக்கிறார்கள். பூங்கனிச்சோலைக்குச் செல்பவர்களில் 30% மானவர்கள் உளப்பாதிப்பில் இருந்து விடுதலை பெற்றதாகக் கூறியிருக்கிறார்கள். சினிமாவிற்கு செல்பவர்களில் 15% மானவர்கள் உளப்பாதிப்பில் இருந்து விடுதலை பெற்றதாகக் கூறியிருக்கிறார்கள்.

**விவாதித்தல்:-**

பொதுவாக யாழ்ப்பாணத்தில் ஏதோவொரு வகையில் உளப்பாதிப்படைந்தவர்கள் பெரும்பாலானோர் காணப்படுகிறார்கள். இவர்களில் வேலைக்குச் செல்பவர்களில் 75% மானவர்கள் (ஆய்வில் பெறப்பட்ட தரவின் அடிப்படையில்) உளப்பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் வேலைக்குச் செல்பவர்கள் வேலைத் தளத்தில் உள்ள பிரச்சினைகளுக்கும், வீட்டில் உள்ள பிரச்சினைகளுக்கும் முகம் கொடுப்பதால் இப்பாதிப்பு ஏற்படுவதாக அறியக்கிடக்கிறது. இவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் முக்கியமான தேவையாக வுள்ளது. ஆலயதரிசனம் மூலம் 80% மான உளப்பாதிப்பு குறைவடைவதாக மேற்படி ஆய்வு மூலம் அறியப்பட்டுள்ளதால் வேலைக்குச் செல்பவர்கள் தினம் 15 நிமிடம் ஆலயதரிசனத்திற்கு ஒதுக்குவதன் மூலம் இப்பிரச்சினையில் இருந்து தீர்வு பெறலாம். இருந்த போதிலும் இவர்கள் தமக்கென ஓய்வு நேரத்தைப் பெற்று மனதைச் சாந்திப்படுத்த ஏதாவது ஒரு நிகழ்வு என மாறிமாறி சங்கிலித்தொடரில் ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் உளப்பாதிப்பின் ஆரம்ப நிலையை கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

**முடிவுரை:-**

உளப்பாதிப்பு என்பது ஒவ்வொருவரின் மனதின் கட்டுப்பாட்டிலே தங்கியிருக்கிறது. இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் உள்ளன. இவ்வழிமுறைகளை கூட்டாக பயன்படுத்தும் போது அதிலிருந்து விடுபட வழிவகுக்கும். இவ்வாய்வானது குறிப்பிட்ட சிறிய குடித்தொகையைப் பயன்படுத்தி ஆய்வு செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு விவரண ஆய்வாகும். இதன்மூலம் முழுப்பலனையும் பெறமுடியாத போதிலும் கருதுகோளை பரீட்சித்துப் பார்ப்பதற்கு இதுவும் ஒரு முறையாகும். ஆல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களில் சென்று வழிபடும் போது ஆல யச் சூழல், அங்கு ஒலிக்கின்ற மந்திரங் கள், தரிசனம் மூலம் பெறப்படுகின்ற அதிர்வலைகள், மனதை மேம்படுத்தும் சிற்பங்களின் கருத்தோவியங்கள், ஆல யத்தின் புனிதத் தன்மை என்பன மனதை மெய்மறக்கச் செய்வதால், மனம் ஒரு நிலைப்படுகிறது. எனவே ஆலயவழிபாடு உளத்தாக்கத்திலிருந்து விடுபட வழி வகுக்கிறது என்ற கூற்று நியாயப்படுத் தப்படுகிறது.

**உசாவியவை:**

சோமசுந்தரம், தயா, மனவடு, யாழ்ப்பாணம் 1993

தங்கமணி ஐ., சியாமிளா. து, சினம் எனும் மனநோய், வளர் தமிழ் அறிவியல், தஞ்சாவூர் 1994.

## ஆணவத்துக்குக் கிடைத்த அடி!

பாராட்டு விருந்து ஒன்றின் போது ஓர் ஆங்கிலேயர் கூறினார். "இறைவன் ஆங்கிலேயர்களாகிய எங்கள் மீது அதிக அன்பு கொண்டவர். மிகவும் முயற்சி செய்து, அதிக விருப்பத்தோடு எங்களைப் படைத்தார். எனவே தான் நாங்கள் இவ்வளவு வெண்மையாக இருக்கிறோம்"

அங்கு டாக்டர் ராதாகிருஷ்ணனும் இருந்தார். ஆணவப் பேச்சைக் கேட்டு புன்முறுகலுடன் கூடியிருந்தவர்களுக்குக் கூறினார். "நண்பர்களே! ஒருமுறை இறைவன் ரொட்டி தயாரிக்க விருப்பம் கொண்டார். அவர் ரொட்டி தயாரிக்க உட்கார்ந்தவுடன், முதல் ரொட்டி சிறிது வேகவில்லை. அது காரணமாக ஆங்கிலேயர்கள் பிறந்தனர். இரண்டாவது அதிக நேரம் வெந்தது; அதன் மூலம் நீக்ரோக்கள் பிறந்தனர். இவ்வாறு இரண்டு முறை பயிற்சியின் மூலம் அனுபவம் பெற்ற இறைவன் மூன்றாவது ரொட்டியைச் சரியான பக்குவத்தில் தயாரித்தார். அது அரைவேக்காடாகவும் போகவில்லை, கரிந்தும் போகவில்லை. அது காரண மாக இந்தியர்களாகிய நாங்கள் பிறந்தோம்."

ஆங்கிலேயர் மிகவும் வெட்கம் அடைந்தார். தலை குனிந்தார். மற்றவர் களோ திறந்த மனதோடு வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு நாகர் இனம் வழங்கிய பங்களிப்புக்கள்

## இலக்கிய சாசனவியல் மற்றும் தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு வரலாற்றுப்பார்வை

பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா
வரலாறு தொல்லியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

அன்னையால் அமுதென ஊட்டப் படும் அன்னம் அனைவரையும் ஆன்மீக நேயத்துடன் வாழ வைக்கிறது. காசிப்பதி யினிலே குடிகொண்டுள்ள அரும்பெரும் சக்தியான அன்னைபூரணி தமது இலங் கைத்தீவின் வரலாற்று வரைபியலில் (Historiography of Sri Lanka) அடிப்படை யான சில மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள இவ்வேளையில் மேலைத்தே யப் பார்வையிலிருந்து நோக்கப்பட்ட வர லாற்று முறையியலுக்குப் பதிலாக சுதே சிய நோக்கியலமைந்த ஒரு வரலாற்றுப் பார்வை இப்பொழுது பதியப்பட்டுக் கொண் டிருப்பதனைக் காணமுடிகிறது. பெரும்பா லான சிங்கள வரலாற்றாசிரியர்கள் இப் பொழுது நாகர் இனமக்களை இலங்கைத் தீவின் வரலாற்றைத் தொடக்கி வைத்த முதன் மக்களாக ஏற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். நாகர் அமானுஷ்யர் அல்லர் எனவும், இலங்கைத்தீவின் தொடக்க கால வரலாற்று மற்றும் பண்பாட்டுத் தோற்றப்பாட்டிற்குரிய பிதாமகர்கள் இவர் களே என்பதனையும் இலங்கை வரலாற் றாசிரியர்களால் இப்பொழுது சான்றுகளு டன் எடுத்துக்காட்டப்படுகிறது. அண்மைக் காலங்களில் ஏற்பட்ட தொல்லியல் மேலாய்வுகள், மற்றும் அகழ்வாய்வுக ளின் வளர்ச்சியின் பின்னணியில் பெற்றுக் கொள்ளப்பட்ட பண்பாட்டெச்சங்கள் நாகர் மரபினரின் இருப்பு, செறிவு மற்றும் சமயப் பின்னணி போன்ற பல விடயங்களை எமக்கு தெளிவுபடுத்தியுள்ளன. கௌதம புத்தரின் வருகையின் பின்னர் குறிப்பாக 300 வருடங்களின் பின்னர் வடஇந்தியாவி லிருந்து மகிந்ததேரர் தரைமார்க்கமாக இத் தீவிற்கு வருகை தந்து தேரவாத பௌ த்தமதத்தினை உத்தியோகபூர்வமாக அரச மதமாக்கியதோடு, சமகாலத்தில் இத்தீவில் காணப்பட்டிருக்கக்கூடிய அரசவம்சங்களை யெல்லாம் தேரவாத பௌத்த நிறுவனங் களுக்குள் உள்ளீர்த்திருந்தமையைக் காண்கின்றோம். இலங்கைத்தீவில் தேர வாத பௌத்தமத நிறுவனங்களுடன் குறிப்பாக பொருளாதார நீர்ப்பாசனவியல் நிறுவனங்களுடன் நாகர் வம்சத்தினர் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாக நாக வம்சத்தினரின் ஒரு பிரிவினர் பௌத் தர்களாக மாறிய அதேவேளையில் இலங் கையின் வடக்குக் கிழக்குப் பரப்பில் நாக வம்சத்தினர் தொடர்ந்தும் இந்துசமயத் தவர்களாகவே வாழ்ந்து, அரசமரபிலும் சமய பண்பாட்டு வாழ்விலும் செல்வாக் குச் செலுத்தி வந்திருந்தனர்.

நந்திச் சின்னமே நாகர்களது அரச மரபிற்குரிய சின்னமாக பின்பற்றப்பட்டி ருந்தது என்பதனை உறுதிப்படுத்தும் தொல்லியல் சான்றுகளும் இப்பொழுது கிடைத்துள்ளன. இவ்வாய்வுக்கட்டுரையில் நாகர் இனத்தினர் ஈழத்து இந்துசமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்கு ஈந்த பங்களிப்பு ஆராயப்படு கின்றது.

தென்னாசியப் பண்பாட்டுருவாக் கத்திற்குப் பங்களித்த இனக்குழுமங்கள் பலவாகும். அவற்றுள் நாகர் இனம் மிக வும் தொன்மைவாய்ந்த ஒரு குழுமம் என் பதனை இலக்கிய, தொல்லியல் சான்று கள் உறுதிப்படுத்தியுள்ளன.[1] தென்னாசி யாவின் பல்வேறு பிராந்தியங்களிலும் இக் குழுமத்தினர் பல்வேறு காலப்பரப் பில் வாழ்ந்திருந்தனர் என்பதற்கான சான் றுகளும் கிடைத்துள்ளன.[2] வட இந்தியா வைப் பொறுத்த வரையில் வடகிழக்குப் பிரதேசத்திலுள்ள நாகலாந்து மாநில மும், தென்னிந்தியாவில் கேரளமாநில மும் நாகர் இனம் வசித்த பிரதேசமா கவும், நாகர் பண்பாடு தொடர்ச்சியாக நிலவிவரும் பரப்புக்களாகவும் எடுத்துக் காட்டப்படுவதனைக் காணமுடிகிறது.[3] இந் தோனேசியாவில் யாவாத்தீவில் (நாகர் நாடு) நாகர் இனமும் அவர்களது பண்பா டும் புராதன காலத்தில் அரசியல் இறை மையுடன் வளர்ச்சி பெற்றிருந்தற்கான தொல்லியற் தடயங்களும் கிடைத்துள் ளன.[4] இலங்கைத் தீவினைப் பொறுத்த மட்டிலும் நாகர் இனத்தினர் வரலாற்று க்கு முற்பட்ட காலப்பரப்பிலிருந்து வாழ்ந்து வந்தமைக்கான தொல்லியற் தடயங்க ளும் கிடைத்துள்ளன. கிழக்கிலங்கை யில் இற்றை வரைக்கும் நாகர் வம்சமர பில் வந்த போடியார் பரம்பரையினர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.[5] இலங்கையின் வட பகுதி நாகதீபம் அல்லது நாகத்துவீபம் என மிக நீண்ட காலமாக அழைக்கப் பட்டு வந்த மரபினையும் காண்கின் றோம்.[6]

இலங்கைத்தீவின் பூர்வீக மக்கள் குழுமங்களுள் நாகர் இனக்குழுமம் மிக வும் தனித்துவம் வாய்ந்த வாழ்க்கை முறையொன்றினைக் கட்டமைத்து, முதன்முதலாக ஒழுங்குபடுத்தப்பட்ட சமூக பொருளாதார நிறுவனங்களின் உதவி யுடன் வாழ்ந்திருந்மைக்கான தொல்லி யற் சான்றுகளை இப்பொழுது ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளனர். தென்னிலங்கையி லிருந்து வட-இலங்கை வரைக்கும் மேற் கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வு களும், அகழ்வாய்வுகளுமே நாகர் பற்றிய சமூக பொருளாதார, சமயத்தரவுகளை எமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டி யுள்ள மூலதாரங்களாகும். இப்பின்னணி யிலேயே நாகர் வம்சத்தினரது தோற்றம், இன அடையாளம் பற்றிய குறியீடுகள், குழுமங்குழுமமான அவர்களது பரவல், இலங்கைத்தீவில் அக்குழுமத்தினரால் வளர்த்தெடுக்கப்பட்ட பண்பாட்டுக் கட்டு மானம், தேரவாத பௌத்தம் ஓர் அரசி யல் மதமாக கி.மு. 3ஆம் நூற்றாண்டில் உத்தியோகபூர்வமாக இங்கு அறிமுகப் படுத்தப்படும் வரைக்கும் முது பெருங்கற் பண்பாட்டுச் சிற்பிகளாக அக் குழுமத்தி னர் நீரியல்வள முகாமைத்துவத்தின் முகாமையாளர்களாக, குளச் சொந்தக் காரர்களாக, இடுகாட்டுப் பண்பாட்டுச் சடங்குதாரிகளாக, “காவல் தெய்வங் களை” குளக்கட்டுக்களிலும், வாணிப மையங்களிலும் நிறுத்தி, வளத்தினைப் பாதுகாக்க வைத்தவர்களாக வாழ்ந்திரு ந்த வகையினை மிகத்தெளிவாக எடுத் துக்காட்ட முடிகின்றது. இப்பின்னணியிலே இந்து சமய உருவாக்கத்திற்கும், வளர்ச் சிக்கும் இத்தீவில் நாகர் இனக் குழுமத் தினர் ஆற்றியிருந்திருக்கக்கூடிய பங்கும் பணியும் பற்றி ஆராய்கின்ற ஓர் அடிப் படையான நோக்கினை இக்கட்டுரையின் கட்டமைப்பு கொண்டுள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

நாகர்கள் யார்? இவ்வினாவிற்கான விளக்கம் இங்கு அவசியமானது. நாகர் இனக்குழுமத்தினர் மத்திய தரைக் கடற்பிராந்தியத்தினைச் சேர்ந்தவர்களாக எடுத்துக்காட்டப்படுவதனைக் காண்கின்றோம். எகிப்திய நாகரிக காலத்திலிருந்து (கி.மு. 400 கி.மு. 300) கிரீட்டன் தீவில் வளர்ச்சியடைந்த ஏஸியன் நாகரிகம் வரைக்கும் (Agean civilization கி.மு. 1700 கி.மு. 500) இவ்வினத்தினர் மத்தியதரைக்கடற் பிராந்தியத்தில் பன்னாட்டு வாணிப முகாமையாளர்களாக தொழில் புரிந்திருக்கின்றார்கள். எகிப்துடன் இக்குழுமத்தினர் மேற்கொண்டிருந்த வாணிப நடவடிக்கைகளுக்குச் சான்றாக மட்பண்டங்களில் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ள பிராமிச்சாசனப் பதிவுகள் விளங்குகின்றன.[7]

நாகர் குழுமத்தினர் கீழைத் தேயத்திற்கு மத்தியாசியாவினூடாகப் பரவி, ஸஸானியர்களுடைய (Sassanians) செல்வாக்கினையும் பெற்று, இணைந்த வாணிபத்தில் ஒன்றுபட்டு செயலாற்றியிருந்துள்ளார்கள் என்பதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. கி.முற்பட்ட முதலாம் நூற்றாண்டிலிருந்து நாகர்கள் ஸஸானியருடன் இணைந்து வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்குப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் வரையப்பட்டுள்ள கிராபிடிக் குறியீடுகளே சான்றாகவுள்ளன. இக்குறியீட்டு வரைபுகளில் ஸஸானிய வம்சத்தினரின் செல்வாக்கு உட்பட நாகர் குழுமத்தினருடான கைவண்ணமாக மட்பாண்டவரைபுகள் எமக்குக் கிடைத்துள்ளன. பெருங்கற்கால மட்பாண்டங்களில் வரையப்பட்ட முச்சூலக்குறிகள், நாற்சூலக்குறிகள் யாவும் ஸஸானிய வம்சத்தினரின் செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டு நாகர் மயப்படுத்தப்பட்ட கிராபிடிக் குறிகளாகவே உள்ளன. (ஆனைக் கோட்டை முத்திரைச் சாசனத்தில் பொறிக்கப்பட்ட ஈரின வரிவடிவத்தில் மேலேயுள்ள வரிவடிவம் ஸஸானிய மரபிற்குரியதாகவே காணப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது).

குறுணிக்கற்காலப் பண்பாட்டை இலங்கையில் முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் நாகர்களேயாவர். இவர்களே பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய குழுத்தலமையதிகாரிகளாக சமூகத்தினை ஒழுங்குபடுத்தி, வாணிபக்குழுக்களை அமைத்து, முதலில் ரோமானியர்களுடனும், பின்னர் ஸஸானியர்களுடனும் கீழைத்தேயத்தில் பொருளீட்டத்தில் ஈடுபட்ட வர்த்தகப் பெருமக்களாவர். குஷாணப் பெருவம்சத்தினர் இப்பண்பாட்டினை மத்தியாசியப் பிரதேசத்திற்கு எடுத்துச் சென்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வம்சத்தினருடைய நாணயங்கள் இலங்கையின் முக்கியதுறைமுகங்களான மாந்தை, வல்லிபுரம், ஜம்புக்கோளப்பட்டினம், நாகர்கோயில் (கௌத்தன்துறை) கந்தரோடை (திரும்புதுறை) போன்ற மையங்களில் கிடைக்கப்பெற்றுள்ளன. கி.மு. 1ம் நூற்றாண்டிலிருந்து குஷாணியர் - ஸஸானியர் - நாகர் வாணிபக்கூட்டு நடவடிக்கைகள் இப்பிராந்தியத்தில் இடம் பெற்றிருந்தமைக்கான தொல்லியல் சான்றாதாரங்கள் எமக்கு கிடைத்துள்ளன.[8]

"நகர்த்தப்பட்டவர்கள்" நாகர்கள் என்றவொரு கருதுகோள் தென்னியந்தியப் பரப்பில் நிலைபெற்றுள்ளமையை நோக்கும் போது நாகர் இனத்தினரது தோற்ற மூலம் பற்றிய சில செய்திகளை வெளிக்கொணர முடியும். நாவலந்தீவு ஜலசமாதியுட் பிரவேசித்திருந்த காலத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து நாகர் இனம் நீரினுள் அமிழ்ந்து அழிந்தவை போக, எஞ்சியோர் மீதமாகக் காணப்பட்ட தரைப்பரப்பிற்கு நகர்த்தப்பட்ட நிலையிலேயே இன்று தென்னிந்தியா, இலங்கை, இந்தோனேசித் தீவுகளாகக் காட்சியளிக்கின்ற பிராந்தியங்களில் அன்று நிலைகொண்டிருந்ததாக செவிவழிமரபுகள் குறிப்பிடுகின்றன. நாவலந்தீவு என அழைக்கப்பட்ட பாரதம் உட்பட ஒரு பெருநிலப்பரப்பு இந்து சமுத்திரத்தினால் விழுங்கப்பெற்ற நிகழ்வின் இறுதியில், எஞ்சியிருந்து வாழ்ந்து, பின்னர் வரலாற்றுக்கால நாகர் இனமாக அரசோச்சி மறைந்த ஓர் இனக்குழுவினராகவே நாகர் இனத்தினை வரலாற்றாசிரியர்கள் இனம் கண்டு கொள்கின்றனர். தொலமி, ஸ்டிராபோ, இராசநாயகம் முதலியார் போன்றோரால் நாகர் இனம் தொடர்பான ஆரம்ப வரலாற்றுக் குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன.[9] இக்குறிப்புக்களின் அடிப்படையில் நாகர் இனம் வாழ்ந்த பூமி நாகநாடு, நாகத்தீவு, நாகதீபம், நாகதுவீபம், நகதிவ, நாகதிவயின, மணிநாகத்தீவு, மணிபல்லவம், மணிநாகத்தீவு எனப் பலவாறாக பாளி, தமிழ் மற்றும் சிங்கள மொழி இலக்கியங்களில் பதியப்பட்டிருப்பதனைக் காண்கின்றோம்.[10]

கி.பி நான்காம் நூற்றாண்டிற்குரிய வல்லிபுரம் பொற்றகட்டுச் சாசனத்தில், "நகதிவ" என ஆந்திரமாகதி மொழி நடையில் பிராமி வரிவடிவ வாசகமாகப் பொறிக்கப்பட்டுள்ளமையை நோக்கும் போது, யாழ்ப்பாணக்குடாநாடு அக்கால கட்டத்தில் நாகதீபம் என்று அழைக்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. மகாவம்சம் என்ற பாளி மொழி இலக்கியத்திலும் "நகதிவ" என்ற சொல் இடம்பெற்றிருப்பதனைக் காண்கின்றோம். மணிமேகலையில் நாகதீபம், மணிபல்லவம் என்ற சொற்கள் யாழ்ப்பாணத்தினைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நாணயமொன்றில் "நாகபூமி" என தமிழ்ப் பிராமி வரிவடிவில் பொறிக்கப்பட்டிருந்தமையைக் காணும் போது இலங்கையின் வடபகுதி நாகருடைய தாயகமாக விளங்கியிருந்தமையை உறுதிப்பட எடுத்துக் கூறக்கூடியதாகவுள்ளது.

III

முற்பட்ட அனுராபுரகால அரசர்களுள் பெரும்பாலானோர் நாகர்வம்சத்தினைச் சேர்ந்தோரே என்பதனை ஆய்வாளர் பலரும் எடுத்துக்காட்டியுள்ளனர். வைத்திய கலாநிதி Fr. சேவையர் ஈழ நாகர் வம்சம் தொடர்பாக அரிய பல கருத்துக்களை வெளியிட்டிருப்பதனைக் காண்கின்றோம். விஜயன் வருவதற்கு முன்பும், பின்னரும் இத்தீவில் வாழ்ந்து வந்த நாகர் மரபினரில் அரச அதிகாரத்துடன் விளங்கிய ஒரு பிரிவினரே அனுராதபுர நகரின் தோற்றத்திற்கும் அதனை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த நீர்ப்பாசனவியல் தொழினுட்பத்திற்கும் அடிப்படையாக தொழிற்பட்டிருந்தமையை Fr.சேவையர் தனது நூலினூடாக எடுத்துக்காட்டியுள்ளார்.

"The Land of Letters" என்ற அவரது நூல் நாகர் இனத்தினரது தோற்றம், பரவல், பண்பாட்டுப் பங்களிப்புக்கள் தொடர்பாக அறிவதற்கு உதவும் மிக முக்கியமான வரலாற்று மூலாதாரமாகும். சேவையர் தனது நூலில் நாகர் இனம் தொடர்பாகக் குறிப்பிடும் போது, "மகாவம்ச ஆசிரியர் கால வரன்முறையடிப் படையில் இருவேறு காலகட்டங்களுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரியதாகவும் இருவேறு பண்பாட்டு மரபுகளுக்குரியதாகவும் காணப்பட்டிருந்த இரு பெரும் வம்சப் பாரம்பரியங்களை ஒன்றாக்கி, சிங்கள இனத்தின் தோற்றம் பற்றிய கதையை உருவாக்கிவிட்டிருப்பதனைக் காணலாம்.... அவ்வாறு ஒன்றாக்கப்பட்ட வம்சமரபுகளில் நாகர் இனம் குறிப்பிடத்தக்கது என விரிவாகத்தந்திருப்பது நோக்கத்தக்கது. இலங்கையில் நாக வம்ச ஆட்சியாளர் பலர் சிங்கள பௌத்த இசைவாக்கத்திற்குள் உள்ளகப்படுத்தப்பட்ட தன்மையை உணர வைக்கின்ற முறையில் ஏராளமான தொல்லியற் சான்றுகள் இப்பொழுது கிடைத்த வண்ணமுள்ளன.

மகாவம்சம் குறிக்கின்ற விடயத்தின்படி, இயக்கர் குல அரசனான காலசேனனைக் கொன்றே ஆரியனான விஜயன் அரசு பீடம் ஏறியதாக குறிப்பிட்டாலும், அவ்வாறான ஒரு முக்கிய அரசியல் கைமாற்றத்தின் பின்னணியில் நாகவம்சத்தினரது அரசியல் மேலாதிக்கம் முற்றிலுமே மகாவம்சத்தினால் மறைக்கப்பட்டிருப்பதனை எவருமே மறுக்க முடியாது. நாகவம்சத்தினரது ஆட்சி பௌத்த மதத்தின் வருகைக்கு முன்னர் இலங்கையின் கடல் முகப்புப் பிரதேசங்களில் நிலை பெற்றுவிட்டிருந்த வரலாற்றை மறைப்பதற்காகவே கௌதம புத்தரது மும்முறை வருகையை எடுத்துக்காட்டி, ஐதீக மரபுரிமையாகப் பெற்றுக்கொண்ட விஜயன் பற்றிய செவிவழிமரபிற்கு இலக்கிய வடிவம் கொடுத்து, இலங்கைத் தீவினை "விஜய" வருகையாளருக்குச் சொத்துடமையுமாக்கிய சிறப்பு மகாவம்ச ஆசிரியரான மகாநாமதேரருக்குரியதாகின்றது. இவ்விடத்திலேயே மறைக்கப்பட்டுப்போன நாகர் வம்ச வரலாற்றை மூலாதாரங்களுடன் விரித்துரைக்க வேண்டியதாகின்றது.

"........... விஜயனின் 35 ஆண்டுக்கால ஆட்சியின் பின்னர் அவனது தம்பி மகனான பந்துபாசுதேவவும் (கி.மு. 444 - 414) அதன் பின் பந்துபாசு தேவனின் மைத்துனனான அபயனும் (கி.மு 414 - 399) ஆட்சி புரிகின்றனர். விஜயன் முதல் அபயன் வரை இம்மூவரும் அனுராத புரியை இராசதானியாகக் கொண்டிருக்கவில்லை. இம்மூவரினதும் இராசதானி எங்கு அமைந்திருந்தது என்று யாருக்கும் தெரியாது ........"

"அபயனின் பின்னர் விஜயனின் பேரன் முறையான பந்துகாபயன் (கி.மு 377 - 307) ஆட்சிப்பீடமேறுகின்றான் அவனே முதன்முதலாக அனுராதபுரியைத் தனது இராசதானியாகக் கொண்டவன். பண்டு என்ற பதம் நாகர் இனத்தினருக்குரிய ஒரு சிறப்புச் சொல்லாகும். பண்டு அரவர் பண்டரவர் பண்டக்கர் பண்டாக்கர் பண்டுக்கா அபயன் நாகவம்ச மரபிலிருந்து வருகை தந்த முதல் அனுரதபுர அரசனாவன். கடம்ப நதிப்பள்ளத்தாக்கு (மல்வத்து ஒயர்) நாகமரபுகள் வளர்ச்சி பெற்றிருந்த மிகச்சிறந்த பண்பாட்டுத் தொட்டிலாகும். கடம்பநதிப்பள்ளத்தாக்கில் நாகர்குல மரபுரிமைகளை வளர்த்தெடுத்த தலைநகர் ஒன்று இருந்திருக்கின்றது. கடம்பம் என்றால் ஒரு வகையான தாவரப் பெயராகவும், தமிழ் வளர்த்த முருகனது மறுநாமமாகவும் இருந்திருப்பதினைக் காணலாம்."

"அனுராதபுரத்தில் நாகர்களின் பழைய நகரம் இருந்திருப்பதானது அவர்கள் அங்கு செறிந்து வாழ்ந்திருப்பதனைக் குறிக்கின்றது. அனுராதபுரியில் சிவலிங்க வழிபாட்டிடம் இருந்திருப்பதை மகாவம்ச வாயிலாகவும், அறியமுடிகிறது. விஜயனோ, பந்துபாசுதேவாவோ, அபயனோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்துகாபயனோ பௌத்த சமயம் சார்ந்திருக்கவில்லை......" இவ்வாறான பௌத்தத்திற்கு முந்திய இந்து சமய சடங்காசார - வணக்க சிந்தனையாளர்களே அனுராதபுரத்தில் முதல் ஆட்சியாளர்களாக விளங்கி, ஈழத்தின் புராதன சிவ வழிபாட்டின் மூலமான ஈஸ்வர வழிபாட்டினை சிவலிங்க வழிபாடாக ஏற்றுக் கொண்ட சிவபூமியின் சொந்தக்காரர்கள் ஆவர். பஞ்ச ஈஸ்வரமும் அவற்றின் தோற்றமும் இவர்களாலேயே - இவர்களுடைய காலத்திலேயே நிகழ்ந்தது. குறிப்பாக அனுராதபுரி நகருடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையில் எடுத்துக்கூறப்படும் பண்டுகாபயனின் நடவடிக்கைகளே ஈழத்தில் ஈஸ்வர வழிபாடு பிரசித்தம் பெற்றமைக்கான காரணமாகும்.

பண்டுகாபயனுக்குப் பின் அனுராதபுரத்தில் ஆட்சிக்கு வந்த மன்னர் வரிசையானது நாகர் வம்சத்தினராகவே காணப்பட்டனர். இவ்வம்சத்தில் வந்த மூத்த சிவன், இவனது மக்களாகிய சூரதிசன், மகாநாகன், மகாசிவன் அசேலன் ஆகியோர் நாகவம்ச திராவிடர் என்பதில் சந்தேகம் எழமுடியாது. இவர்களே அனுராதபுரத்தில் சிவன்கோயில்கள் பலவற்றையமைத்து ஈஸ்வர வழிபாட்டினை மேலோங்கச் செய்தவர்களாவர். மகாவம்சம் இவற்றையெல்லாம் மறைத்து இரண்டு பெரும் வம்சப்பாரம்பரியங்களை காலவரன் முறையை நோக்காது, ஒன்றுக்குள் ஒன்று கலந்து இருவேறு பண்பாட்டுக் கூறுகளை ஒரே வம்சப்பரப்புக்குள் உள்ளடக்கியமையினால் நாகர் வம்சத்தின் பங்களிப்புக்கள் வரலாற்று வெளிச்சத்திற்கு வருவதிலிருந்து மறைக்கப்பட்டு விட்டது. சிங்கள இனத்தின் தோற்றவரலாற்றைப் புனைவதற்குத் தடையாகக் காணப்பட்ட ஏனைய வம்சப்பாரம்பரியங்களையெல்லாம் மிகவும் சாதுரியமாக மறைப்பதற்கே புத்தரின் மும்முறை இலங்கை வருகை பற்றிய கதையை இலங்கையின் வம்சவரலாற்றுப் பாகத்தின் முன்னுரையாக மாகவம்ச ஆசிரியர் புகுத்தியமையால் ஈழ நாகமரபுகளும் நாகர்வம்சத்தினரின் மன்னர் வரலாற்றுப் பட்டியலும், சாதனைகளும் மகாவம்சத்திலிருந்து மறைக்கப்பட்டுவிட்டமையைக் காண்கின்றோம்.

அனுராதபுரத்தில் 44 வருடங்கள் ஸ்திரமான ஆட்சியைப் புரிந்த எல்லாளனது அரசியல் பிரவேசம் தொடர்பான செய்திகள் மகாவம்சத்தினால் முரண்பாடாக்கபட்டுள்ளது. அசேலன் ஆட்சி செய்து கொண்டிருந்த போதே அனுராதபுர அரசினை எல்லாளன் தனது படையெடுப்பின் மூலம் கைப்பற்றிக் கொண்டதாக மகாவம்சம் குறிப்பிடும் போது, அசேலனை சிங்கள வம்ச மன்னனாகக் குறிப்பிடுவது வரலாற்றுக்கு முரண்பட்டதாக உள்ளது. "தேவாநம்பிய" என்ற விருதுப்பெயரை அசோகப் பேரரசன் தீசனுக்கு வழங்கி, மீண்டும் முடிசூட்டுவித்த நோக்கம் அம்மன்னன் நாகர் குலவம்ச அங்கத்தவனாக ஆட்சியைப் பெற்றுக் கொண்டு பரிபாலித்துக் கொண்டிருந்தமையே ஆகும். நாகவம்ச மன்னனை பௌத்த மதத்திற்குள் அரவணைப்பதற்காகவே "தேவாநம்பிய" என்ற பட்டம் மகிந்ததேரரது முன்னிலையில் வைத்து மிகிந்தலையில் வழங்கப்பட்டது. "தேவநம்பியதீசனுக்குப் பின்னர் அனுராதபுரத்தில் ஆட்சி செய்த நாகவம்ச ஆட்சியாளர்களின் பெயர்களை மகாவம்சமும், ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்களும் தருவதனைக் காணலாம். அக்குறுகொட என்ற தென்னிலங்கையிலுள்ள புராதன மையமொன்றிலிருந்து மீட்கப்பட்ட தமிழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமி வரிவடிவம் பொறித்த நாணயங்களில் நாகர்வம்ச மரபில் வந்த ஆட்சியாளரது பெயர்கள் பொறிக்கப்பட்டடிருப்பதனை பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் மிகவும் விரிவாக எடுத்துக்காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. நாகர் வம்சமரபுரித்தாளர்கள் பெருமளவுக்கு வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒரு பிராந்தியமாகவும் தென்னிலங்கைப் பிரதேசம் விளங்கியது. கதிர்காமம், மகியங்கனை, மகாகமை, அக்குறுகொட போன்ற வாணிப மையங்களை யாவா நாகர்கள் (ஜாவநாயர்கள்) நன்கு பயன்படுத்தியிருந்தமைக்கான தொல்லியற் சான்றுகள், கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. துட்டகைமுனுவின் படைகளில் சேவையாற்றிய தமிழ்ப் படைத் தளபதிகள் பலர் ஜாவாத்தீவைச் சேர்ந்த நாகர்களே என்பதனை பரணவிதானவும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார். கதிர்காமப் பிரதேசத்தில் கிடைத்த ஆதிப்பிராமிக் கல்வெட்டு ஒன்றில் "ஜாவநாயர்" எனப் பொறிக்கப்பட்டிருப்பது இதற்குச் சிறந்த சான்றாகும். எனவே தேவநம்பியதீசனுக்குப் பின்னர் வட்டகாமினியின் ஆட்சிக் காலம் வரைக்கும் அனுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த நாகமரபினரது வம்சாவழிப் பாரம்பரியம் உரியமுறையில் அடையாளம் காணப்படவேண்டிய பொறுப்பு வரலாற்றாசிரியர்களுக்கு உண்டு.

இலங்கைத்தீவில் வாழ்ந்து, இம் மண்ணில் பண்பாட்டு நிறுவனங்களைத் தோற்றுவித்த நாகர்வம்சத் திராவிடர்களை மிகவும் தந்திரோபாயமாக "அந்நியர்களாக" அதாவது இலங்கைக்கு வெளியே இருந்து வந்த படையெடுப்பாளர்களாகவும், மரக்கலத்தில் வருகை தந்த வணிகர்களாகவும், சிங்கள மன்னர் பாரம்பரியத்தினைக் குழப்பியவர்களாகவும் உத்தியோகபூர்வமற்ற வகையில் இலங்கைக்கு வருகை தந்தவர்களாகவும் மகாவம்சத்தில் திரிபுபடுத்திக் கூறப்பட்டதற்கான காரணங்கள் யாவை? சேனன், குட்டிகன் வரலாறு இவ்வாறு கூறப்பட்டதற்கான தேவை ஏன் ஏற்பட்டது? இந்த இரு மன்னர்களும் அனுராதபுரத்தில் 22 வருடங்கள் மொத்தமாக ஆட்சிபுரிந்திருப்பது தற்செயலான ஒரு நிகழ்வு என்றே மகாவம்சம் குறிப்பிடுவதற்கான காரணங்கள் யாவை? இம்மன்னர்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், நீரியல் நிறுவனங்கள் எல்லாம் எங்கே? 44 வருடங்கள் ஆட்சிபுரிந்த எல்லாளனது கல்வெட்டுக்கள் எல்லாம் எங்கே? அம்மன்னது சாதனைப்பட்டியலை மகாவம்சம் ஏன் மறைத்துவிட்டது? இவ்வாறெல்லாம் கேள்விகளை தொடுத்துக் கொண்டு செல்லும் போது இலங்கையில் முற்பட்ட அனுராதபுர காலப்பரப்பில் நாகவம்சமரபினரது மேலாதிக்கம் மற்றும் அரசியல் எழுச்சி பற்றிய மறைக்கப்பட்ட தகவல்களும், வம்சத்தின் தொடர்ச்சியான இருப்புப் பற்றிய செய்திகளும் அவற்றின் பின்னணியில் உருவாகியிருந்திருக்கக்கூடிய பண்பாட்டுத்துறையம்சங்களும் வரலாற்று வெளிச்சத்திற்கு தானாகவே வெளிப்படும் என்பது யதார்த்தமாகும். அந்த அடிப்படையில் முதலாவதாக நாகர்வம்ச மரபினைச் சேர்ந்த மூத்த சிவனின் மகனான அசேலன் என்பவனை சிங்களவம்ச இனத்தோடு இணைத்துக் காட்டுவதற்கு மகாவம்சத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளமை. இரண்டாவதாக எல்லாளனை சோழநாட்டு இளவரசனாக எடுத்துக்காட்டியிருப்பது. இந்த இரண்டு விடயங்களுமே வரலாற்றில் உறுதிப்படுத்தப்பட முடியாத வகையில் ஆதாரங்கள் கிடைக்க முடியாத வகையில், அவற்றை இன்னொரு வம்ச உரித்துக்குரியதாக


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாற்றுவிக்கப்பட்டுவிட்டமையை மகாவம் சத்தினூடாகக் காண்கின்றோம். ஈழராஜா என்ற திராவிடப்பதம் எவ்வாறு "எலாரா" என பாளிமொழியில் திரிபுபடுத்தப்பட்டதோ அதே போன்றே முன்னீஸ்வரம் என்ற அனுராதபுரத்தில் காணப்பட்ட மிகப் பழைய புராதன ஈஸ்வரர் கோவிலும் காலப்போக் கில் "இருசுருமுனி" விகார என ஆக்கப் பட்டுவிட்டமையைக் காண்கின்றோம். திராவிடவம்சப்பெயர் மரபுகள் பாளி மொழியூடாக சிங்கள வம்சப்பாரம் பரி யத்தினோடு கால ஒட்டத்தில் இணை க்கப்பட்டுவிட்ட வரலாற்றினை Fr.சேவை யர் மிகவும் விரிவாக ஆராய்ந்து ஒரு நூலை எழுதியுள்ளார்.

**நாகர்கள் - குளச் சொந்தக்காரர்கள்**

நீர்வள நாகரிகமொன்றின் தோற றத்திற்கு அடிப்படையை இட்டுக்கொண் டிருந்த பெருங்கற்கால பெருமக்கள் சமூ கத்திலிருந்து ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட குழுமமாக மாறியிருந்த ஒரு பிரிவினர், மத்தியதரைக்கடற் பிராந்தியங்களின்றும், ஆசியமைனரிலிருந்தம் வணிகர்களாக வருகை தந்தவர்களோடு கலந்து நாக வம்வத்தினராக உருவாக்கம் பெற்றுக் கொண்டனர். இவர்கள் பேசிய வணிக மொழியும் எழுத்தும் கிரேக்க மொழியு டனும், பேர்சிய - ஸசானியர்களுடைய வரிவடிவங்களுடனும் கலந்து தனித்துவ மான மொழி மற்றும் வரிவடிவ வழக் காறுகள் உருவாவதற்கு வழிசமைத்தன. ஸசானியவம்சத்தினரின் தோற்றம், வளர் ச்சி மற்றும் குஷானிய வம்சத்தினரின் பேரரச நடவடிக்கைகள் இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்ட வகையில் நாகர் குலமுறைகளுடனும் வாணிப நோக்கில் இலங்கையுடன் தொடர்பு கொண்டிருந்தைக் காண்கின்றோம். ஸஸானியர்களுடைய புராதன வரிவடி வப் பாரம்பரியம் ஒன்று பெருங்கற்கால "கிராபிடிக் குறியிடுகள்" என்ற பெயரில் தென்னிந்தியா - இலங்கை மட்பாண்டங் களில் பதியப்பட்டிருப்பதனைக் காண்கின் றோம். அனுராதபுரத்திலுள்ள சீகிரிய நாகபடக் குகையினுள் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வின் போது கிடைத்த அணிகலன்கள், மட்பாண்டங்கள், மற்றும் சுடுமண்பாவைகளின் முகத்தோற்றங்கள் என்பன ஸசானியக் கலைச்செல்வாக் கினை எடுத்துக் காட்டுவதாகத் தற்போது தொல்லியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இப்பண்பாட்டுப் பின்னணியில் உருவான நாகர் வம்சகுலமுறையினரே நீர்ப்பாசனக் குளங்களை உருவாக்கி, நீர்வள நாகரிக மொன்றின் தோற்றம் அதன் வளர்ச்சிக்கு அடித்தளமமைத்துக் கொடுத்தார்கள். குளக்கட்டின் உறுதிக்கும், குளத்து நீரின் செழுமைக்கும் பொறுப்பாக நாக பால உருவங்கள், கணபதி உருவங்கள் போன்றவற்றை உருவாக்கி, நாகர் சமூ கத்தின் விருத்திக்கும், பாதுகாப்பு மற்றும் நிலைபேறிற்காக Annimism இணைந்திரு ந்த ஒரு வகையான தெய்வக் கோட்பாட் டியலை உருவாக்கி, பௌத்தத்திற்கு முன்னரான ஈழத்தின் சமய வரலாற்றிற்கு அவர்கள் பங்களித்திருந்தனர்.

**நாகர்வம்சத்தவர்களது குறியீடு எருது.**

நாகர் அரசமரபானது படுத்திருக் கும் எருது அல்லது நிற்கின்ற ரிஷப வடி வத்தினையே குறியீடாகக் கொண்டிருந் தது என்பதனை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. கந்தரோடையிலிருந்து மூன்று வகையில் ரிஷபக் குறியீடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. முதலாவது கந்தரோடையிலிருந்து சேகரிக்கப்படும் பல்வேறு வகையான மணிவகைகளுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Various Beads) சந்திரகாந்தக்கல் ஒன்றில் செதுக்கப்பட்டுக் கிடைத்துள்ள குத்து விளக்குடன் கூடிய படுத்திருக்கும் சேது வடிவம் இங்கு குறிப்பிடத்தக்கது. பெரும் பாலும் இச்சந்திரகாந்தக் கல் ஒரு மோதி ரத்தில் இலச்சனையாக பதிக்கப்பட்டிரு ந்து உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும். கந்தரோடைப் பிராந்தியத்தில் உள்ள அரசமாளிகைத் திடலிலே இக்குறிப்பிட்ட அரசமுத்திரையான எருது இலச்சினை கிடைக்கப் பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது. (பதவியாவில் கிடைத்த இலச்சி னையைப் போன்று ஆனால் காலத்தால் முற்பட்டதாக இச்சந்திரகாந்தக் கல்லில் செதுக்கப்பட்ட எருது இலச்சினை விள ங்குகின்றது). பெருங்கற்காலப் பண்பாட் டின் மிகஉச்ச வளர்ச்சியில் உருவான ஓர் அரசமரபுடன் தொடர்புபட்டதாகவே நாகர் வம்ச அரசமுறை யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்பட்டது என்பது வர லாற்றாசிரியர்களின் பொதுவான அபிப் பிராயமாகும். அந்தவகையில் திட்டவட்ட மான நாகவம்ச அரச பாரம்பரியத்துடன் இணைத்துப் பார்ப்பதற்கேற்ற வகையில் பல்வேறு தொல்லியல் எச்சங்களுடன் இம்முத்திரை மோதிரக்கல் கிடைத்திருப் பது வம்ச வரலாற்றிற்கும் அப்பால் கந்தரோடையுடன் மத அடிப்படையில் நாகரை தொடர்புபடுத்தக் கூடிய வகை யில் கிடைத்த இம்முத்திரைச் சின்னம் காணப்படுகின்றது எனலாம்.

மற்றுமொரு தொல்லியல் மூலா தாரமாக அகழ்வினூடாக கந்தரோடையி லிருந்து கிடைத்துள்ள அரும்பொருள் எருத்துருவம் வரையப்பட்டுக் கிடைத் துள்ள எலும்பினாலான கத்தி போன்ற ஒரு கருவியாகும். இக்கருவியின் இரு விளிம்புகளில் ஒரு பக்கம் கத்தி போன்ற கூர்மையான இயல்பினையுடையதாகக் காணப்படுகின்றது. ஒன்றரை அங்குல மான அதன் ஒரு பக்கப்பரப்பில் நீண்ட எருது வடிவம் ஒன்று வரையப்பட்டுள் ளது. வரையப்பட்ட இவ்வெருதின் தோற்றமானது மத்திய தரைக்கடலில் உள்ள கிரீட்டன் தீவில் காணப்படும் நோஸஸ் நகரில் வரையப்பட்ட எருதின் வடிவத்தையொத்துக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. 1995 இல் கந்தரோ டையில் உச்சாப்பனை என்ற இடத்தில் மேற்கொண்ட அகழ்வின் போதே இவ் வரும் பொருள் கிடைக்கப்பெற்றது. வர லாற்றுக்கு முற்பட்ட காலகட்டத்திற்குரிய தாகக் கருதப்படும் இத்தொல்லியல் எச்சமானது பண்பாட்டடிப்படையில் நாகர் மரபினரின் தோற்றத்தினைக் கண்டு கொள்வதற்கும் உதவும் ஒரு வரலாற்று மூலமாகப் பயன்படுத்த முடியும். இத்த கைய ஒருவரைப்பு மரபு கந்தரோடையில் இன்றும் தொடர்வதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவது பசுமாடுகளுக்கு குறி சுடும் மரபில் காணப்படும் ஒரு குறி யீடான சேதுவடிவமேயாகும். யாழ்ப் பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் கால த்து சேது நாணய வெளியீட்டில் காணப் படும் அதே வடிவத்தினை இற்றைவரைக் கும் கந்தரோடையில் உள்ள நெல்வயற் செய்கையாளர்கள் தத்தமது பட்டிகளு க்கு (மாடுகளுக்கு) குறி சுடுவதனூடாகப் பேணி வருவதனை இக்கட்டுரையாசிரியர் (Eye witness) நேரடியாகவே கண்டுள்ளார். இவ்வாறான தொல்லியல் மற்றும் பண் பாட்டு மானிடவியற்சான்றுகளின் அடிப் படையில் நாகர்வம்சப் பாரம்பரியப் பின்னணியில் நாகரதும் அம்மக்கட் கூட் டத்தின் அரச இலச்சினையாக சேது வடி வம் இலங்கையில் பேணப்பட்டு வந்திருந் தமையைக் காண்கின்றோம். இப்பின் னணியில் நாகர்வம்சத்தினரது ஆட்சிக் காலத்தில் இந்துசமயப் பண்பாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கிருந்த தொடர்புகள் மிகத் தெளிவாக துல்லியமாக வெளித்தெரிவதனைக் காண்கின்றோம். சிவ வழிபாடே அவ்வம்சத்தினரின் மிகப் பிரதானமான சமயவெளிப்பாடாக அமைந்திருந்தது என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. சதுரமான செம்பு நாணயமொன்றில் "சிவ" என்ற வாசகம் தமிழ்ப்பிராமி வரிவடிவில் பொறித்திருக்கக் கண்டெடுக்கப்பட்ட நிகழ்வு 1995 இல் கந்தரோடை அகழ்வின் போது ஏற்பட்டது. இந்த நாணயம் நாகமன்னன் ஒருவனால் வெளியிடப்பட்டது என்பதும் தற்போது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், கந்தரோடையைத் தலைநகராகக் கொண்ட நாகர் வம்சத்தினர் நாகதுவீபத்தில் சிவவழிபாட்டு மரபுகளையே வளர்த்தெடுத்திருந்தனர் என்ற தெளிவான முடிபினை கண்டு கொள்ள முடிகிறது.

## நாகதுவீபமும் சிவன் வழிபாட்டு மரபும்

ஈழத்துப் புராதன பஞ்ச ஈஸ்வரங்கள் என வரலாற்றுப் புகழ்பெற்ற சிவன்கோவில்களுள் இரண்டு நாகதுவீபத்தின் கண் அமைந்திருப்பதனைக் காணலாம். நகுலேஸ்வரம், தொண்டேஸ்வரம் என்றழைக்கப்பட்ட கோவில்களே அவையாகும். தொண்டேஸ்வரம் என்ற சிவன் ஆலயம் தொடர்பாக, அதன் அமைவிடம் தொடர்பாக வரலாற்றறிஞர் மத்தியில் கருத்தொருமைப்பாடு நிலவவில்லை. இந்த ஈஸ்வரன்கோவில் தென்முனையில் தென்னிலங்கையிலுள்ள தொந்திரா அல்லது தேவேந்திரமுனையில் அமைந்திருப்பதாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர். நாகதுவீபத்தில் பழமையான மேலும் சில ஈஸ்வரன் கோயில்கள் அமைந்திருந்தமையை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலையில் திருத்தம்பலேஸ்வரம் என்றொரு கோவிலும், யாழ்ப்பாண வைபவத்தில் ஜம்பு நாதேஸ்வரமும் குறிக்கப்படுவதனைக் காண்கின்றோம். சந்திரமௌலீஸர் என்றொரு பழம்பெரும் ஈஸ்வரன் கோவில், சாவகச்சேரிக்கண்மையில் அமைந்திருந்ததாகக் குறிப்பிடுவர். சிலர் இக்கோயிலை வல்லிபுரத்திற்கு அண்மையிலுள்ள ஆனைவிழுந்தான் சந்திக்கண்மையில் அமைந்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றனர். வாரிவன நாதேஸ்வரர், சட்டநாதேஸ்வரர், கல்வத்தையிலுள்ள சிவன் கோயில் என வரலாற்றுப்பழமைமிக்க சிவன் கோவில்களும் நாகதுவீபத்தில் காணப்படுகின்றன. இவை சோழர் காலத்துக் கோயில்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இப்பொழுது நாகர்களுக்கேயுரித்தான மிகப் பழமையான சிவன் கோவில் ஒன்றின் பெயர் தேவார முதலிகளது பாடல்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கேயுரியதாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்கோவிலின் பெயர் மணிநாகேச்சுரம் என்பதாகும். மணிநாக ஈஸ்வரம் என்ற பெயரே மணிநாகேச்சுரம் என மருவியதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

## மணிநாக ஈஸ்வரமும் நாகர்களும்

மிகவும் அற்புதமான வகையில் மணிநாகேஸ்வரம் என்ற சிவ ஈஸ்வரன் கோயில் நாகரின மக்களால் நாவலந்தீவில் ஆராதிக்கப் பெற்றுப் பேணிப் பாதுகாக்கப்பட்டது என்ற செய்தியை தேவார முதலிகள் தந்த பதிகப்பாடற்றிரட்டிகனால் எமக்கு அறியத்தந்தவர் முனைவர் நா.வி.மு. நவரத்தினம் அவர்களாவர். காவிரிப் பள்ளத்தாக்கிலும் நாகேச்சுரம் என்றொரு கோயில் அமைந்திருந்தமையை சுந்தரரது பதிகங்கள் எடுத்துக் காட்டியிருப்பினும் அப்பரது பதிகங்களிலிரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்தே நாவலந்தீவிலுள்ள சப்ததீவுகள் ஒன்றில் மணி நாகேச்சுரம் அமைந்திருந்த வரலாற்றினை நவரத்தினம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"அப்பர் திருமுறை சுட்டும் மணிநாகேச்சரம்" நயினையம்பதியே!!!

"ஞானத்தின் திருவுருவான ஞான சம்பந்த சுவாமிகள் தாம் பாடிய நாகேஸ்வரப் பதிகத்தில் இராவணனைக் கூற வந்த செய்தியில் "ஓயாத அரக்கன் ஓடித் தவற" என்ற தொடரில் "நாகேஸ்வரத் தாயே என்று சுட்டுவார். ஞாலத்தின் முகமாக காணும் நயினைம்பதியும் பிரதான ஒரு திருத்தலம் என்பது அதன் நீண்ட பல வரலாற்றால் காணமுடியும்."

"உலக நாகரிகத்தினதும் பண்பாட்டினதும் பிதாமகர்களாக விளங்கும் நாகர் வரலாறு மிக பிரம்மாண்டமான வரலாற்றை கொண்டது மணிநாக ஈஸ்வரத்தையும் மணிநாகதீவையும் மணிநாக அரசர்கள் நீண்டகாலம் பரிபாலனம் செய்தமை அவர்கள் வரலாற்றினால் அறியக்கிடக்கின்றது. இவர்களுள் முகாதரனும் குலாதர நாகனும் முக்கியமானவர்கள். இராவணனது மாமனான மகாதுவட்டாவே வரலாற்றால் கூறப்படுதல் காணலாம். சிவவழிபாட்டில் இவர்களது செயற்பாடுகள் கூறுதற்கரியன. இந்திரன் வழிவந்த மணிமேகலா தெய்வ பிரசன்னத்தில் இச்செய்திகள் காணப்படுகின்றன. இந்திரன் அமைத்த சக்திபீடத்தில் மணிப்பீடமும் முக்கியமாகக் காணப்படுகின்றது. இந்திரன் அமைத்த சக்திபீடமே மணித்துவீபத்தில் - பின்னாளில் மணி ஆசனப்போராக நாகரால் மேற்கொள்ளப்பட்டது. மணி பல்லவம், மணித்துவீபம், மணிபுரம் மணி நாகரீச்சரம், மணிப்பீடம் என்ற பெயரால் அழைக்கப்படுவது இன்றைய நயினையம் பதியையேயாகும்."

"நாகேச்சரத்து இறைவன் நாகேச்வரன் நாகராஜேஸ்வரன் நாகதம்பிரான் நாக நயினார் நாகேச்சரத்தான் எனவும் இறைவி நாகேஸ்வரி ஸ்ரீபுவனேஸ்வரி நாகராஜேஸ்வரி நாகம்மாள், நாகபரமேஸ்வரி சிவநாக பரமேஸ்வரி ஏகசிவை நாக ஈஸ்வரி என்றும் இந்நாளில் நாக பூஷணி என்றும் பூர்வநாக பூஷணி என்றும் அழைக்கப்படுதல் காணலாம்."

"இத்தலத்தை கூற வந்த "சௌந்தர்யலகரி" மணித்துவீப சிந்தாமணிப்பீட வாகினியாக அன்னை ஸ்ரீ புவனேஸ்வரியைப் போற்றுதல் காணலாம். சியாமள தண்டம் மற்றும் பிரபஞ்ச உற்பத்தி என்ற நூல்கள் மணித்துவீபம் ஸ்ரீ புவனேஸ்வரியின் அளவற்ற கீர்த்திகளை கூறுவதும் காண்க."

"தீர்த்தத்தால் அருங்கீர்த்தி மிக்க இத்தலத்தை தரிசிப்பார்க்கு போக பாக்கியங்களும் யோக பாக்கியங்களும் கிடைப்பது உறுதி. போக தேவேந்திரன் மறுவாழ்வு பெற்று நாகேந்திரன் என்ற திருநாமம் பூண்டு அன்னை அருளால் எண்ணுயிர் கோடி தேவர்க்கும், முப்பத்து முக்கோடி தேவாதிகட்கும் தலைவனானான் என்பது மகாகவி நயினை ஸ்ரீ நாக மணிப்புலவரது ஞானகாவியமான நயினை மான்மியத்திலிருந்து பெறப்படும் அரிய விடயங்களாகும்."

"ஊழி முதல்வரையும் ஏழை பங்களானாகவும் இறைவன் சிவசக்தி ரூபமாக அருள்மாட்சி நல்கும் தலம் இப்பதியேயாம். இப்பதிக்கு பரிகாரண தலம் ஒன்று இன்று வரை உலகில் காண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலவில்லை. சப்தங்களின் தோற்றம் பற்றி கூறும் இசைநூல்கள் சப்த தீவு களை முதன்மைப்படுத்தும் செய்தி உணர் தற்கரியது. குமரிக் கண்டத்தினர் ஒரு பகுதியாக நாவலந்தீவும் ஏனைய தீவு களும் விளங்குவது காணலாம். ஏழிசை யின் மத்ய பீடமாகவும் (ஸ்ரீ வித்யா) வாசன பீடமாகவும் நாவலந்தீவு போற றப்படுதல் காணலாம். நாவலந்தீவில் காணும் சந்தாதேவியின் பீடம் - சுருதி மற்றும் இசைத்தோற்றங்களின் மூலமாக சங்கீத கல்பத்ருமம் மூலம் அறியலாம்."

"இப்பீடமே நாதாந்தபீடம் சிந்தா மணிப்பீடம் மணிப்பீடம் ஒசை ஒலிகளின் உற்பத்திப்பீடம் என இதன் வரையறை களை எண்ணிலா இசைக்கிரந்த நூல்கள் சுட்டுதல் காணலாம். சிந்தாதேவியிடமிரு ந்து கிடைத்த அக்ஷய பாத்திரத்தை ஆபுத்திரன் இங்கேயே பொய்கையில் இட்டு ஜலசமாதியுற்ற வரலாறும் சிந்திக் கற்பாலது."

"தேவார முதலிகள் மூவரில் சம்பந்தர் பாடிய திருநாகேச்சப்பதிகம் சுட் டும் தலம் குறிப்பாக காவிரியின் தென் பால் குறிக்கப்படுதல் காணலாம். ஆனால் இவர்களுள் மூத்தவரான அப்பர் சுவாமி கள் சுட்டும் நாகேச்வரப் பதிகங்கள் காவிரியின் தென்கரையிலமைந்த நாகேச் வரத்தை சுட்டவில்லை என்பதும் அவர் சுட்டும் நாகேஸ்வரம் (நாகவலந்தீவு-?) நாவலந்தீவு கூட்டங்களில் காணப்படும் மணிநாகேஸ்வரத்திற்கு உரியன என்ப தும் இங்கு கவனிக்கற்பாலது."

**"நாவலம் பெருந்தீவினின் வாழ் பவர்**
**மேவி வந்து வணங்கி வினையொடு**
**பாலமாயின பற்றறு வித்திடும்**
**தேவர் போற்றிரு நாகேச்சரவரே"**

**"சந்திரன்னொடு ஆரியர் தாமுடன்**
**வந்து சீர் வழிபாடுகள் செய்த பின்**
**ஐந்தலை அரவின் பணி கொண்டருள்**
**மைந்தர் போல் மணி நாகேச்வரரே"**

**"முறை முறையமரர்கூடி முடிகளால் வணங்க நின்ற**
**நாதவமர் கழலர் போலும் நாகவீச் சரவனாரே."**

**"ஆர்த்து வந்துலகத்தவராடுக**
**தீர்த்தர் போற்றிருநாகேச்சரவரே"**

**"வேலை வாய் வந்தெழுந்த**
**நஞ்சணிமிடற்றர் போலும் நாகவீச்சரவனாரே"**

**"ஐந்தலையரவர் போலும் நாக வீச்சரவனாரே"**
என்பது அப்பர் திருமுறைகள் மூலம் பெறப்படும் அரிய கருத்துக்களாகும். இக் கருத்துக்கள் ஏனைய இருவராலும் முன் வைக்கப்படவில்லை. சுந்தரர் பொதுவாக நாகேஸ்வரம் பற்றி பதிகம் பாடியுள்ளார். இவர்கள் பாடிய நாகேச்சரம் வேறு அப்பர் பாடிய நாகேச்சரம் வேறு என்பது இதனால் பெறப்படும்.

"அப்பர் பாடல், சுட்டும் நாவலம் பெருந்தீவு பற்றிய சிந்தனையும் குறிப் பாக
**"மணி நாகேச்சரம் பற்றிய சிந்தனையும்**
**ஐந்தலை அரவின் பணி கொண்டருள் சிந்தனையும்**
**முறை முறையமரர்கள் கூடி முடிகளால் வணங்கி**
**நின்ற சிந்தனையும் இங்கு விரிவாக ஆய்விற்குரியதாகின்றது."**

## நாவலம் பெருந்தீவைப் பற்றிய குறிப்புக்கள் :-

பலவாறாக இருப்பினும் சுருதி தோற்ற இசைத்தோற்ற வரலாற்றில்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை நோக்குங்கால் சிந்தாதேவியின் பீடமாக மணித்துவீபம் போற்றப்படுதல் காணலாம். சப்ததீவுக் கூட்டங்களுடன் இயைந்த பண்டையில் நாவலம் பெருந்தீவு அமைந்திருக்கலாம். நாகேச்வரம் அதன் முக்கிய பகுதியாகலாம். ஈழ வேந்தன் பற்றிய குறிப்பிலும் நாவலந்தீவு காணப்படுகின்றது. குமரிக்கண்டத்தின் பகுதிகளில் நாவலந்தீவும் இடம்பெறுதல் காணலாம். கடல்கோள் இப்பகுதிகளை உருமாற்றியிருக்கலாம். ஆக நாகேஸ்வரம் இதில் எஞ்சிய பகுதிகளில் ஒன்றாகலாம்."

"தேவர்களது வழிபாட்டின் இறுதிக் கட்டத்தில் ஆதிசேடனது வழிபாடு மிக முக்கியமான ஒன்றாக நயினைப் பதியை சங்கமித்து நிற்பது என்பதனை அப்பர் சுட்டும் ஐந்தலை அரவின் பணி கொண்டான் மைந்தர் என்ற தேவார அடிகள் மூலம் பெற அதிக வாய்ப்புள்ளது. இவ்வாறான ஒரு கருத்தை ஏனையத் தேவார ஆசிரியர்கள் எவரும் சுட்டவில்லை என்பதும் இவை நாகேச்வரத்தில் வழிபாடு இன்றிய ஆதிசேடனை நினைவுறுத்துவதாகவே அமைந்துள்ளது என்பது பெறப்படும்."

"இதன் சாராம்சத்தை மகாகவி நயினை ஸ்ரீ நாகமணிப்புலவர் மிக அருமையாக நயினை மான்மியத்தில் அழுத்தமாக சுட்டி நின்றல் காண்க."

"அடுத்து மிக முக்கிய பகுதி. அவை பற்றி முன்னர் மிகத் தெளிவாக பார்த்தோம். "மணிநாகேச்வரரே" மணி நாகர்வழிபாட்டின் மூலக்களம் மணிநாக தீவு. மணிநாகதீவின் மூலவர் மணி நாகேச்சர சிவன் என்பதும் இக்கருத்து இதுவரை ஆராயப்படாத அரிய கருத்து. இது என்பது இவ்வாய்வின் மூலம் பெறப்படும். இந்திய வரலாற்றில் நாகர் வரலாற்றில் மணி நாகேச்வரம் என்பது மணித்துவீபமான மணிநாகதீவின் சிவாலயம் ஒன்று இங்கு இருந்தது என்பது உறுதிபட பெறப்படும் செய்தியாகும்."

"முறை முறை அமரர் கூடி முடிகளால் வணங்கி நின்ற.... நாகவீச்சரனார்."

"தேவர்கோனதும் அவர் குழாத்தினரதும் வழிபாட்டு சிறப்பை கூறும் பகுதி இது எனலாம். இன்னும் வேலைவாய் வந்து எழுந்த நஞ்சணி கண்டர் என்றும் நாகவீச்சரனுக்கு அடையாளம் காட்டுவர். பிறிதோர் இடத்தில் "ஐந்தலை அரவர் நாகவீச்சரனார்" என்பதால் மூல லிங்கமாக நயினையம்பதியின் தோற்றம் முன்னிறுத்தப்படுகின்றது."

"குறிப்பாக நயினை மான்மியத்தில் தீர்த்த மகிமை பற்றிக் கூறும் மகா கவி வரகவி ஸ்ரீ நாகமணிப்புலவர் இத்தலத்தின் தீர்த்த மகிமைக்கு இணையாக உலகில் வேறு தீர்த்தம் இல்லை என்பதைக் கூறுவர்."

"அர்த்த உன் அருள் நோக்கில் தீர்த்த நீர் ஆட்டிக்கொண்டாய் (அப்பர்) சமுத்ர தீர்த்தங்களால் சூழப்பெற்ற இத்துணை சிறப்பு சப்ததீவு மத்ய வாசினிக்கும் சப்தசமுத்ர நித்யவாசினிக்கும் உரியது."

"பண்டையில் உலகத்தவர்கள் யாவரிடம் - ஆடிய தீர்த்தம் - மண்ணவரும் - விண்ணவரும் ஆடிய தீர்த்தம் நாகேச்வரதீர்த்தம் என்பது அப்பர் சுவாமிகளாலும் வரகவி நாகமணி புலவரது நயினை மான்மியத்தாலும் உணர்த்தப் பெறுதல் காணலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலந்தீவு பற்றிய குறிப்புக்கள் காலத்திற்கு காலம் ஒரே பொருளில் வழங்கப்பட்டிருக்கவில்லை. குமரிக் கண்டத்தின் தென்பகுதியிலேயே நாவலந்தீவு அமையப் பெற்றிருந்தமைக்கான குறிப்புக்கள் மணிமேகலை சிலப்பதிகாரம் ஆகிய இரட்டைக் காப்பியங்களில் இடம் பெற்றுள்ளன. ஒரு காலகட்டத்தில் இந்திய உபகண்டம் முழுவதனையும் "நாவலந் தீவு" குறிப்பிட்டு நின்றதற்கான இலக்கியக் குறிப்புக்களும் காணப்படுகின்றன. குமரிக்கண்டத்தின் தென்பகுதியில் நாவலந்தீவு மற்றும் சப்ததீவுகளும் அமைந்திருந்தன எனவும் கடல் கோளினால் குமரிக்கண்டம் நீரில் அமிழ்ந்துபோக, நாவலந்தீவும், சப்ததீவுகளும் மட்டுமே இன்று எஞ்சியுள்ளன எனவும் அவையே இலங்கைத்தீவும், வடபகுதியிலுள்ள தீவுக் கூட்டங்களுமாகும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அப்பர் சுவாமிகளினால் பாடப்பட்ட மணிநாகேச்சரம் இலங்கையின் வடபகுதியில் உள்ள சப்ததீவுகளுள் ஒன்றான நயினார் தீவிலேயே அமைந்துள்ளது என்று கருதும் ஆய்வாளருமுளர். மணிமேகலையில் இடம் பெற்றுள்ள குறிப்பொன்றின்படி நாவலந்தீவிலுள்ள சிந்தாதேவியின் படம் சிந்தா மணிப்பீடம் எனவும் மணிமேகலா தெய்வம் வந்துறைந்த பீடம் (சக்திபீடம்) இதுவே எனவும் இதுவே இன்று நாகேஸ்வரியின் சக்திபீடமாக காட்சியளிக்கின்றது எனக் கருதும் ஆய்வளரும் உளர். சிந்தாதேவியிடமிருந்து கிடைத்த "அக்ஷயபாத்திரம்" ஆபுத்திரன் கையிற்கு கிடைத்த தன்மையும், பின்னர் அமுதசுரபியில் அப்பாத்திரம் ஜலசமாதியுற்ற வரலாறும் மணிமேகலையில் மிகவிரிவாக்க கூறப்பட்டுள்ளமையை நாம் அறிவோம். இப்பின்னணியிலே நாகர்வம்சத்தினர் நாவலந்தீவிலும், சப்தத்தீவுகளிலும் ஓர் அரசபாரம்பரியத்தினை உருவாக்கியிருந்தனர் என்பதும் அதன் தலைநகராக கதிரமலை (கந்தரோடை) விளங்கியிருந்தது என்பதும் தெளிவாகின்றது. இவ்வடிப்படையில் நோக்கும் போது மணி நாகேச்சரம் அமைந்த நிலையம் நயினாதீவு என்பதில் சந்தேகம் எழமுடியாது. மணிபல்லவம், மணித்துவீபம், மணிப்பீடம், மணிநாகதுவீபம், மணியக்க என்றெல்லாம் பல்வேறு பெயர்களில் "மணி" இணைந்து பேசப்படுகின்ற ஒரு வரலாறு தற்போது நயினாதீவிற்குரியதாகவே பெரும்பாலாரினால் கருதப்பமுடுகின்ற நிலையில், மணி நாகேச்சரம் என்ற பாடல் பெற்ற நாகவம் சத்தினுடைய சிவத்தலம் சப்தத்தீவுகளில் ஒன்றாகிய நயினாதீவில் அமைந்திருந்தது என்ற முடிவுக்கு வரலாம். எனினும் இன்று மணிநாகேஸ்வரியாக சிவவழிபாடு, நாகவழிபாடு, அம்மன் வழிபாடு இவை மூன்றும் ஒருமித்த வகையில் எவ்வாறு ஒரு சக்திபீடம் இங்கு உருவானது என்பது மேலும் ஆராயத்தக்கது. நாகரும், பாணரும், திரையரும் வம்ச ஆட்சியாளர்களாக எழுச்சி பெற்றமையின் பின்னணியில் அம்மூன்று வழிபாட்டு மரபுகளும் ஒரே சந்நிதியில் சங்கமமாயிருத்தல் வேண்டும். எனக் கொள்வதே பொருத்தமாகும்.

## நாகரும் வைஷ்ணவ மரபும்

இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் நாகவம்ச பண்பாட்டுச் செல்வாக்குகள் பௌத்த மரபில் வைஷ்ணவப் பாரம்பரியத்துடன் இணைக்கப்பட்டே சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் வெளிப்படத்தப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். மகியங்கணை ஓவியங்களிலும், களனிவிகாரை ஓவியங்களிலும் நாகவம்ச மரபுகள் யாவும் வைணவப்பண்பாட்டுக்குரியதாக (உபுல்வணன் மரபிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரியதாக) சித்தரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சிகிரியாவில் மாத்திரம் நாகபடக்குகையினுள் வரையப்பட்ட ஓவியச்சிறையில் நாக மரபு தனித்துவமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.) இலங்கையின் காவல் தெய்வமாக விஷ்ணு கருதப்பட்ட நிலையில் பௌத்த மரபுகளில் நாகரை அமானுஸ்ய சக்தி படைத்த தேவர் குலம் போன்ற ஒரு பிரிவினராக சித்தரித்த மரபினை பௌத்த இலக்கியங்களிலும் பௌத்த ஓவியங்களிலும் காண்கின்றோம். ஆனால் ஈழத்து சாசனச் சான்றுகளினூடாக ஆராயும் போது நாகவம்சத்தினர் பௌத்தத்திற்கு முந்திய இலங்கையின் வம்ச ஆட்சியாளர்களாக விளங்கியிருந்தமையும், சிவவழிபாட்டிற்குரியவர்களாக அவர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதனையும் தெளிவாக அறியமுடிகின்றது. தீசனது ஆட்சியின் போது அனுராதபுரம் இந்து மதத்திற்குரிய தலை நகரமாகவே இலங்கையில் விளங்கியிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பௌத்தத்தின் வருகையின் பின்னரேயே தேவநம்பியதீசன் இந்து சமயத்திற்குரிய ஆதரவினைக் கைவிட்ட போதிலும் நாகவம்சத்தினரான அவனது முன்னோர் வளர்த்தெடுத்த இந்துசமய நிறுவனங்கள் அனுராதபுர கால இலங்கையில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த வகையை கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. பௌத்த கட்டிட சிற்பக்கலை மரபுகளுடன் நாகர் வம்சத்தினரின் கலைக் கோலங்கள் இணைக்கப்பட்டு ஸ்தூபிக் கட்டிடக் கலைப் பாரம் பரியமாக அவை மாற்றப்பட்டுவிட்டமையைக் காண்கின்றோம். நாகதுவாரபாலகர் வடிவங்கள் அவ்வாறு இணைந்து கொண்டமைக்கான சிறப்புதாரணமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

## நாகரும் வேல் வழிபாட்டு மரபும்

ஈழத்து இந்து வழிபாட்டு மரபுகளில் வேல் வழிபாட்டு முறை இற்றைவரைக்கும் மிக ஆழமான முறையில் வேரூன்றியிருப்பதனைக் காணலாம். வே.அம்பிகைபாகன் தனது நூல் ஒன்றில் குறிப்பிடுவதுபோன்று நாகருடனான இலங்கையில் மகாபாரதம் குறிப்பிடும் "காண்டவதகனம்" நிகழ்ந்த மரபு ஒன்றினை அடையாளப்படுத்துவதன் மூலம் நாகருக்கும் முருக வழிபாட்டிற்குமிடையில் இருந்திருக்கக் கூடிய மிக நெருங்கிய தொடர்பு வெளிப்படையாகின்றது. கதிர்காமம் அன்றைய காலகட்டத்தில் வகித்திருந்த பண்பாட்டு நிலையில் கந்த புராண கலாசாரம் இலங்கையில் வேர் விட்டுக் கிளைத்திருந்தது என்பதும், நாகர் வம்சமரபினர் அதன் பின்னணியில் இருந்து அப்பண்பாட்டை வளர்த்தெடுத்திருந்தனர் என்பதும் தற்போது தெளிவாகின்றது. பெருங்கற்கால முதுமக்கட்தாழிகளுக்குள் வைக்கப்பட்டுக் கிடைத்த இரும்பிலான வேல் கருவியிலிருந்து கதிர்காமம், செல்வச்சந்நிதி வரைக்கும் அம் முருக வழிபாடு இன்று வரை உயிரோட்டமாக இருந்து கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். அன்றைய அமுதசுரபிக்குள் அமிழ்ந்து போன அக்ஷய பாத்திரம் இன்று "அன்னக்கந்தராக" கதிர்காமத்திலும் செல்வச்சந்நிதியிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் அம்மரபு நாகவம்ச மரபு என்று கூறினால் அது மிகையாகாது. இப் பின்னணியில் இலங்கையில் நாக வம்சத்தினரின் சமயப் பங்களிப்பினை மேலும் ஆராய்ந்து செல்வதற்கு இடமுண்டு.

## நாகர் இனமக்கள் வளர்த்தெடுத்த கணபதி வழிபாட்டு மரபுகள்

வரலாற்று உதயகாலம் விசயனின் இலங்கை வரவுடன் (நூல் நூற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுடன்) ஆரம்பிக்கின்றது. மகாவம்சத்தில் நாகதீப என்பது தமிழ் நூல்கள் கூறும் நாகநாடாகும். நாகதீப அரசர்களது சண்டையை அடக்க புத்தபிரான் இரண்டாவது தடவையாக நாகதீபம் வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. கந்தரோடையிலிருந்து அகழ்வின்போது மீட்டெடுக்கப்பட்ட மூன்று சுடுமண்விநாயகர் சிற்பங்கள் இக்கட்டத்தில் எமக்கு மிகமுக்கியமான சான்றாக உள்ளன. நூல் நூற்றல் தொழிற்தேர்ச்சியில் ஈடுபட்டிருந்த பெருங்கற்கால சமூக பொருண்மியத்திற்குள் உருவான மிகை உற்பத்தியே நாகதீப அரசர்களது அரசுரிமைப்போட்டிக்கான அடிப்படைக்காரணமாக அமைந்தது. அச்சமூகத்தினுடைய வாணிபத்தெய்வமாகவே கணபதி தொழிற்பட்டிருந்தார் என்பது இங்கு வெளிப்படையான ஓர் அம்சமாகும்.

## செழிப்புத்தெய்வக்கோட்பாட்டி விநாயகரும் நாகரும்

(FERTILITY CULT and serpant & Ganapati worship)

நாகர்கோயிற் பகுதியில் ஆதி நாகர் இராச்சியமும், அவர்களது குடியிருப்புக்களும் இருந்தமைக்கான ஆதாரங்களை உறுதிப்படுத்துமாப்போல இக்கிராமத்தில் காணப்படும் நாக எனும் பதத்தினை உள்வாங்கிய பல பண்புகள் மக்கள் வாழ்வில் இன்றுவரை நின்று நிலைத்துள்ளன. அப்பண்புகள் முழுவதும் பெருங்கற்கால ஜீவனோபாய வாணிபநுட்பங்களைக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

“தென்னாசியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாய் பல வகைப்பட்ட இனங்கள் மத்தியில் வழங்கி வந்த பல வழிபாட்டு முறைகளும், தத்துவங்களும் காலப்போக்கில் இணைந்து இன்று இந்து மதம் என்னும் பொதுப்பெயர் பெற்றது. ஆனால் தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய இடங்களிற் காணப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டில் இந்துமதத்திற்குரிய புராதனச் சான்றுகள் காணப்படுவதினால் தென்னிந்தியச் செல்வாக்கால் இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் இந்துமதக் கருத்துக்கள் தோன்றின எனக் கூறலாம். நீலகண்ட சாஸ்திரி இலங்கைக்குச் சைவமதத்தின் அறிமுகம் தமிழ்நாட்டின் பின்னணியில் தோன்றியது என்பதில் சந்தேகம் இல்லையெனக் கூறியிருப்பது பொருத்தமானதாகத் தெரிகிறது” என ப.புஸ்பரத்தினம் மேற்கோளுடன் குறிப்பிட்டிருப்பது எமது இந்த ஆய்வில் முக்கிய கருப்பொருளாகின்றாது. ஏனெனில் சைவசமயம் என்பதற்கான பொருளும், தத்துவமும் வரலாற்று மானிடவியல் நோக்கில் பிராமணீயக்கிரியைகள் சார்ந்ததாக இல்லாமல் பயிர் வேளாண்மரபுக் கிரியைகளும், மண்ணிடை மரித்தவரை வைத்து மூடிவிடும் சடங்குகளும் கலந்த நிலையில் உருவான ஒரு வாழ்க்கை முறையே ஆகும். அவ்வாழ்க்கை முறை தமிழகத்திலிருந்து இலங்கைக்கு பரப்பப்பட்டது என்று குறிப்பிடுவதிலும் பார்க்க தென்கிழக்காசியாவிலிருந்தே இலங்கைத் தீவு ஊடாக தமிழகத்தைச் சென்றடைந்திருக்க வேண்டும் என்று கொள்வதற்கான தொல்லியற்சான்றுகள் அதிகளவில் கிடைத்து வருகின்றன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அக்குறுகொட என்றமையத்தில் கிடைத்த அரும் பொருட்கள் அக்கருத்தினை மீண்டும் வலியுறுத்தத் தூண்டுகின்றன. [புஸ்பரட்ணம், ப, 2002.]

நீலகண்டசாஸ்திரி குறிப்பிட்டவற்றின் பின்னணியில் ஓரளவிற்குச் சாத்தியமான கூறுகள் கலந்திருப்பினும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப் பட்டு வரும் தொல்லியல் அகழ்வாய்வின் பின்னணியில் மாற்றுக்கருத்துக்களையும் முன்வைக்க வேண்டியவர்களாக உள் ளோம். அதாவது தென்னிந்தியப் பெருங் கற் பண்பாட்டு கேந்திரமையமான மஹா ராட்டிர மானிலத்தின் தென்பகுதியில் அதாவது கர்நாடகமானிலத்தின் வட பகுதியில் கி.மு.1000ஆம் ஆண்டிலிருந்து அப்பண்பாடு தெற்கு நோக்கி பரவிவந்து, தமிழகத்தை கி.மு.800க்குச் சற்று முற் பட்ட காலப்பரப்பிலும்,அதற்கு தெற்கே உள்ள இலங்கைத்தீவினை இன்னும் சற் றுப்பிற்பட்ட காலத்திலும் தழுவிக் கொண்டிருந்ததாக தொல்லியல் ஆய் வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். தென் னாசியாவில் நகரங்களினதும் அரசுகளி னதும் தோற்றத்தினை ஆராய்ந்த அல் சின் (Allchin,F.R.;1995) கூட இதே கால வரையைக் கொள்வதனைக் காண்கின் றோம். இருந்தபோதும் இப்பண்பாட்டுக் கெல்லாம் உயிரோட்டமான ஜீவாதாரமா கத் திகழ்ந்த நெல்லரிசியும், அதன் உற் பத்தி அறுவடையும் தென்னிந்தியப்பரப் பில் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னர் தென்கிழக்காசியாவில் முதலில் தாய் லாந்திலும், பின்னர் பிலிப்பைன்ஸ் தீவு களிலும் தோற்றுவிக்கப்பட்டிருந்த முறை மையை அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ் வாய்வுச் சான்றுகளினூடாக உறுதிப் படுத்தியுள்ளனர். [Robin Charteris:1986]. இங்கு கி.மு.300ஆம் ஆண்டிற்குரிய ஈமக் காடொன்றில் நெல்லரிசியைக் கொண் டிருந்த மட்பாண்டங்களும்,அவற்றுடன் இணைந்து காணப்பட்டிருந்த செங்கட்டி களுடனாக நெல் உமியும் [Paddy Husk] தொல்லியல் அகழ்வாய்வூடாக வெளி யுலகிற்குத் தெரியப்படுத்தப்பட்டன [Robin Charteris,1986.].எனவே பெருங்கற் காலஜீவாதாரமாகத் திகழ்ந்த நெற் பயிர்ச் செய்கையின் முதல் உற்பத்திப் பண்பாடு நிலவிய பிராந்தியமாக தென் கிழக்காசியா விளங்கியிருந்த நிலையில் இலங்கைக்கான நெல் உற்பத்திப் பண் பாட்டின் அறிமுகம் தமிழகத்திலிருந்து வந்திருக்கக்கூடிய சாத்தியம் பற்றிய எண்ணக்கருவை இப்பொழுது மறுதலிக்க வேண்டியுள்ளது. அவ்வழியே ஈழத்தின் கலையுருவாக்கம் தொடர்பான விடயங் களிற் கூட தென்கிழக்காசியாவே முதற் செல்வாக்கு செலுத்தியிருந்தது என்பதை யும் மறுப்பதற்கில்லை. ஒரு புதிய சம யத்தின் சடங்காக (சைவம்?) மோதகக் கணபதி [Ganapati worship with Rice cake] மரபு தென்னிலங்கையூடாக இராசரட் டைப் பரப்பிற்கு செறிந்து வந்திருந்தது என்றால் மலேசியா, யாவா (இந்தோ னேசியா நாடுகளிற் சில) தென்னிலங் கையுடன் கொண்டிருந்திருக்கக் கூடிய சமுத்திரவியற் தொடர்புகளை உள்ளீர்த் துக் கொண்டிருந்த ஒரு வரன்முறையை குறிப்பிடுவதாக கொள்ளலாம். இங்கே தான் தென்னிலங்கையிலுள்ள மகியங் கனை விகாரைக்கு கௌதமபுத்தர் ஆகாய மார்க்கமாக முதலாவது வருகை யாக வந்திருந்ததாகக் குறிப்பிடப்பட்ட மர்மம் துலங்குகின்றது. தென்கிழக்கிலங் கைத் துறைமுகநகரங்கள் இந்தோனே சியா நாடுகளிலிருந்து மிகவும் தொன் மையான இந்துப் பண்பாட்டுத் தொடர்பு களை ஈர்த்து வைத்திருந்த வகையினை அக்குறுகொட போன்ற மையங்களில் நிகழ்த்தப்பெற்ற ஆய்வுகள் உறுதிப் படுத்தும்.

## முடிவுரை

மிகவும் ஆழமான நிலையில் வைத்து ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாக நாகமரபுகள் இன்று காணப் படுகிறன. ஈழத்தமிழர் வரலாற்றிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஒளியை திட்டவட்டமானவகையில் ஏற்படுத்தக் கூடியதாக நாகமரபுகள் பற்றிய ஆய்வுகள் இங்கு அமைகின்றன. அப்பின்னணியில் நாகர் ஈழத்து இந்து சமய வரலாற்றுக்கு ஆற்றியிருந்த பங்களிப்புக்கள் பற்றி மிகச் சுருக்கமாகவே இங்கு பார்க்கப்பட்டது. இவ்வாய்வுக்கட்டுரையை மீண்டும் விரித்து மிக ஆழமாக ஆராய்ந்து, நாகருக்கும் இந்து சமயிகளான ஈழத்தமிழருக்கும் இடையே இருக்கக்கூடிய தொடர்புகளை ஆராய வேண்டிய கடப்பாடு எதிர்காலத்தில் எமக்குள்ளது.

## இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்ட நூல்களும் கட்டுரைகளும்


1. தனபாக்கியம் குணபாலசிங்கம்., இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக்கலாசாரமும், மணிமேகலை பிரசுரம், சென்னை, 2001.
2. இந்திரபாலா,கா., இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் புத்தக இல்லம், சென்னை.்.கொழும்பு,2006.
3. Fr. J.T.Xavier., The Land of Letters, Trincomalee, 1977.
4. புஸ்பரட்ணம், பரமு., "தொல்லிற் சான்றுகள் காட்டும் நாகநாட்டு அரசமரபு"., யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், 10ம் மாநாடு, 05.03.2002
5. கிருஷ்ணராசா, செ., "ஈழத்தில் நாகர் மரபுகள் - ஆய்வுக்கான சில அடிப்படைத் தகவல்கள்" , வெளிச்சம், சித்திரை - வைகாசி -1994, யாழ்ப்பாணம்.
6. கிருஷ்ணராசா, செ., "எல்லாளன் குளம் - ஒரு வரலாற்றுக்குறிப்பு", வெளிச்சம், ஆடி -1994, யாழ்ப்பாணம்.

7. முனைவர் நா.வி.மு நவரத்தினம் (Head of the Department of Music) அவர்களுக்கு மிகவும் நன்றியுடையேனாக உள்ளேன். இலங்கையின் வடபகுதியில் அமைந்திருந்த நாகேச்சுரம் பற்றிய வரலாற்றுச் செய்தியை தேவாரமுதலிகளது பாடல்களிலிருந்து முதன்முதலாக வெளியே எடுத்து, அதனை வரலாற்று வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர் என்ற பெருமை அவருக்குரியது. அத்தோடு அவர் நாகர் பற்றிய தனது ஆய்வுக்குறிப்புக்கள் சிலவற்றை இக் கட்டுரையில் இணைத்துக்கொள்வதற்கு அனுமதி தந்தமைக்காக எனது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவ ஆலயங்களில் மௌன விரதத்தை அநுட்டிப்போம்

கா. சிவபாலன்

சைவமக்கள் இன்று பல்வேறு துன்பங்களையும் பல்வேறு துயரங்களையும் அனுபவித்து வருகின்றோம். இவற்றையெல்லாம் நாங்கள் வெளிப்படையாகக் கூறவோ பேசவோ முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருப்பது மனதை வருத்தும் செயலாகும். சைவ ஆலயங்கள் மந்திர சக்தி வாய்ந்தவை; புனிதம் மிக்கவை. எனவே நாங்கள் அனைவரும் சைவ ஆலயங்களில் இறைவன் திருவருள் பாலித்து அருளும் கோயில்களில் மௌன விரதத்தை அனுஷ்டிக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இதனை மேற்கொண்டு சும்மா இருத்தல் எனும் மௌன விரதம் பற்றிச் சிந்திக்க உள்ளோம்.

"சும்மா என்ற சொல்லை நாம் எல்லாம் சர்வசாதாரணமாகக் கையாண்டு வருகின்றோம். சும்மா என்ற சொல்லை முதன் முதலில் கையாண்டவர் அருணகிரிநாத சுவாமிகள் என்று ஆன்றோர் அனைவராலும் கருதப்படுகின்றது. சும்மா என்ற சொல்லை மக்களின் ஆட்சிக்குக் கொண்டு வந்த அருணகிரிநாதர் கந்தரனுபூதி 12 ஆம் பாடலில்

**"செம்மான் மகளைத் திருடும் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான் இறவான்**
**சும்மா இருசொல் லறஎன் றதுமே**
**அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"**

என்று பாடுகின்றார்.

சமயத்துறையில் அதுவும் சைவத் துறையில் முக்கியத்துவம் பெறும் சிறப்பு வாய்ந்த இச் சொல்லை முருகப் பெருமான் சும்மா இருக்கக் கூறியதாக அருணகிரிநாதர் விளக்குகிறார். "சும்மா இரு" என்பதன் பொருள் மனம், மொழி, மெய் ஆகிய மூன்று கரணங்களையும் அடக்கிச் செயலிழந்து இருத்தல் எனப் பொருள் படுகிறது.

இன்று சாதாரணமாக மக்கள் பேச்சில் வெளிவரும் "சும்மா" என்ற சொல் பன்னிரண்டு கருத்துக்களைத் தருகின்றது.

அவை சுகமாக, அமைதியாக, இயல்பாக, வீணாக, விளையாட்டாக, இலவசமாக, வேலையில்லாமல், காரணமின்றி, பயமின்றி, தடையின்றி, உழைப்பின்றி, அடிக்கடி எனப் பல்வேறு பொருள்களைத் தருகின்றது.

எது எவ்வாறாயினும் ஒரு மனிதன் மனதை அடக்கிச் "சும்மா" இருத்தலுக்கு திருவருளின் துணையே கைகூடுதல் வேண்டும். இத்திருவருளின் திறத்தை தாயுமானவர் சுவாமிகள் "கந்துக மதக் கரியை வசமாய்க் கடத்தலாம்; கரடி, செம்புலி, யானை மேற்கொள்ளலாம். சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்று பாடுகின்றார். எமது சைவ சமயம் "சும்மா இருத்தல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பேசப்படும் சொல்லை மோன நிலை" எனக்கூறும். மோனம் என்பது மௌனம். "மோனமென்பது ஞானவரம்பு" என்கிறார் ஔவைப் பிராட்டியார். இத னையே ஞானிகளும் கண்டனர். தாயு மான சுவாமிகள், ரமண மகரிஷி, மகா த்மா காந்தி அடிகள், விநோபாவே, ஔ வையார், காளிதாசன், இராமகிருஷ்ண பரமகம்சர், பர்த்ருகரி போன்ற பெரியவர் கள் எல்லாம் மௌன விரதத்தைக் கடைப் பிடித்தார்கள்.

**"தட்சணாமூர்த்தியை தென்முகக் கடவுள்"**
என்கிறோம்.

சைவ சமயத்தின் பரம குருவாகிய தட்சணாமூர்த்தி ஒவ்வொரு சிவாலயத்தி லும் தெற்கு நோக்கிய வண்ணம் காட்சி தந்து அருள்பாலிப்பவர். தட்சணாமூர்த்தி தெற்கு நோக்கியவண்ணம் கல்லால மரத்தின் கீழே அமர்ந்து இருந்து சனகர், சனாதனர், சனந்தனர், சனக்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களுக்கும் மௌன உபதேசம் செய்து நிற்கிறார்.

**"கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா**
**றங்கமுதற் கற்ற கேள்வி**
**வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த**
**பூரணமாய் மறைக்கப் பாலாய்**
**எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை**
**இருந்தபடி இருந்து காட்டிச்**
**சொல்லாமற் சொன்னவரை நினைக்காமல்**
**நினைந்து பவத் தொடக்கை வெல்லாம்"**

என்கிறது பரஞ்சோதியார் கூறும் தட் சணாமூர்த்தி தோத்திரம்

**"சும்மா இரு சொல்லற"** என்ற அருணகிரி நாதரின் இதே உபதேசத்தையே இங்கும் சுட்டி நிற்கின்றது.

திருச்சிராப்பள்ளியில் மௌன குரு விடம் மௌன உபதேசம் பெற்றவர் தாயு மான சுவாமிகள். எனவே தாயுமானவர் பாடலில் "ஐயா அருணகிரி அப்பா உன் னைப் போல் மெய்யாக ஓர் சொல் இயம் பினர் ஆர்?" என விதந்து விதந்து பாடு கின்றார்.

இனி "சிவானந்தமாலை" எனும் நூலிலே "சும்மா" என்ற சொல் பல இடங் களிலே பேசப்படுகின்றது. இந் நூலை இயற்றியவர் சம்பந்தமுனிவர். இவரு டைய காலம் கி.பி. 1350-1375 ஆகும். சிவானந்த மாலை கடவுள் வாழ்த்துப் பகுதியில்,

**"சும்மா இருப்பவர்பால் தோன்றும்**
**சுடரொளியைப்**
**பெம்மான் இவனென்ற பேரானா"**
என வருகின்றது.

மேலும் "நேயத்தழுத்தல்" என்ற தலைப்பில் பாடிய பின்வரும் பாடலைக் கவனிப்போம்.

**"ஓடி உழன்றிந்த உடம்பை ஒருதே நீ**
**பாழி மிடற்றைப் புண் படுத்தாதே – கேடு பிறர்க்கு**
**உம்மால் விளையாதே ஒன்றுடனும் தர்க்காதே**
**சும்மாவே காணும் சுகம்"**
பாடல் 257

**"ஓடாதே தேடாதே உண்ணாதே ஓசை எழப்**
**பாடாதே சாத்திரங்கள் பண்ணாதே – கேடு**
**பிறர்க்கு**
**உம்மால் செய்யாதே ஒன்னாதே ஒன்று மறச்**
**சும்மா இருக்கை சுகம்"**
பாடல் 258

சிவானந்த மாலையில் "சும்மா" "சும்மாது" என்ற வடிவங்களில் இச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் வருவதை மேலும் அவதானிக்க முடிகின்றது.

சம்பந்த முனிவரின் மாணவர்களில் ஒருவரின் எழிவிலொடுக்கம் என்ற நூலில் "சும்மா" என்ற சொல்லை உபயோகித்து உள்ளார்.

**"தம்மால் அறிந்த தெல்லாம் தாமல்ல**
**என்றுரைத்தால்**
**சும்மா இருப்பது வாய்த் தோன்றாதோ?"** - 37

**"சும்மா இருக்கில் அசையாது கற்றுவித்த**
**அம்மானை பம்பரம் காணும்"** -105

**"கிரியைக்கு இணைத்து வந்து**
**கேட்டவர்க்குள் சும்மா**
**றியச் சுகம் விளைவித்த சீமான்"** - 128

**"சும்மா இருக்க வைத்த சூத்திரமாம்**
**சாத்திரத்தை விம்மாக் கதறுவதும்"** - 131

**"என்னாணை என்னாணை ஏகமிரன்**
**டென்றாமல்**
**சும்மா இரு என்று சொன்னான்"** - 131

இவர் தமது குருவாகிய சம்பந்த முனிவரின் சிவானந்த மாலைப் பாடலையே வெளிப்படையாகக் கொண்டு எடுத்துக் கூறுகின்றார். இங்கு சும்மா என்பதற்கு "பேசாது" என்று பொருள் தருகின்றது.

முருகன் அருள் பெற்ற "கந்தரனுபூதி" பாடிய அருணகிரிநாதர் "சும்மா இரு சொல்லற" என்று ஆரம்பத்தில் காட்டியுள்ளார். கந்தர் அலங்காரம் 10 ஆம் பாடலிலும் மேலும் இச் சொல்லை வழங்குகின்றார்.

**"சும்மா இருவென நீ சொல்லப் பொருள் ஒன்றும்**
**அம்மா அறிந்திலமென் றன்றுரைத்த – எம்மான்**
**அருணாகிரிநாதன் அநுபவம் நாயேற்கு**
**கருணை மொழி போருரா காட்டு."**

16ம் நூற்றாண்டில் குருஞான சம்பந்தர் அவர்கள் தர்மபுரம் ஆதீனத்தை ஸ்தாபித்த பெருமகன் ஆவார். இவர் செய்த "சிவயோகசாரம்" என்னும் சைவசித்தாந்த ஞானசத்திரத்தில் "சும்மா" என்ற சொல்லைப் பயன்படுத்திய செய்திகள் பல உண்டு.

இதே போன்று 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபர சுவாமிகள் பண்டாரமும், மணிக்கோவை 9ஆம் பாடலில்

**"எம்மா ருயிராம் எழில் மாசிலாமணியை**
**அம்மா பெறுதற்கரிதன்றே – சும்மா**
**இருந்தாரே பெற்றார் மற் றெவ்வுலகில்யாரே**
**வருந்தாது பெற்றார் மணி".**

திருச்செந்தூர் முருகன்மீது அகவல் பாடிய சிற்றம்பல அடிகள் என்ற பெரியாரும் "சும்மா" என்ற சொல்லைத் தவற விடவில்லை.

அருணகிரிநாதரைப் பின்பற்றி தாயுமான சுவாமிகள் பாடிய பொருள் நிறைந்த பாடல்களைக் கவனிப்போம்.

**"போதிப்பது அல்லாது சும்மா இருந்து அருள்**
**பொதிந்திடாப் பேதை நானே**
**சொல்லால் முழங்கவோ சுகமில்லை**
**மௌனியாய்ச் சும்மா இருக்க அருளாய்**
**சும்மா இருக்க எண்ணினேன் எண்ணமீது**
**சுவாமி நீ அறியாததோ**
**சும்மா இருக்கச் சுகஞ்சுக மென்று**
**சுருதியெல்லாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சும்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டும்**
**சும்மா இருக்கச் சுக முதய மாகுமே."**

**ஏதுக்குச் சும்மா இருமனமே! என்று எனக்குப்**
**போதித்த உண்மை எங்கே போக விட்டாய்?**
**ஏதுக்குச் சும்மா இரு நீ! என் உரைத்த**
**ஆதுக்கோ**

**"சும்மா இருத்தி சுகம் கொடுத்தமோன**
**என்னை வாழ்த்திவிட நினக்கே வரம் – இனிச்**
**சும்மா இருக்கத் தகும் என்றுமே"**

**"சும்மாவே இருக்க வைத்தாய் ஐயா ஆங்கே**
**சுகமாயிருப்ப தல்லாற் சொல்வா னென்னே?**
**அப்பனே – நீயற்ற எல்லையிலே சும்மா இரு**
**சும்மாவே இருக்க வைத்தாய்"**

**"சொல்லும் பொருளுமுற்றுச் சும்மா**
**இருப்பதற்கே**
**அல்லும் பகலும் எனக்கு ஆசை பராபரமே!**
**சும்மா இருந்தால் – தானே அனைவர்"**
என்னும் பாடல்களால் அறிய முடிகின்றது.

"சும்மா" என்ற சொல் பல்கலைக் கழகத்து பேரகராதியில் 12 பொருட்க ளைத் தாங்கி நிற்கிறது. அருணகிரிநாதர் ஆரம்பித்து வைத்த "சும்மா" என்ற சொல் இன்று சைவசமய இலக்கியங் களில் கலந்து சமயப் பெரியவர்கள் பல ராலும் கையாளப்படுகின்ற சொல்லாகப் பெருமை தருகின்றது.

சும்மா இருத்தலாகிய மௌனம் இருத்தல், மனம், வாய், மெய் என்பவை கள் செயலற்று இருக்கும் தன்மையா கும். இது தவமுடையவர்க்கே ஆகும். திருவருள் சம்பந்தமானது. மௌனம், வாக்கு மௌனம், காய மௌனம் எனப் பலவகையின, வாய்ப்பூட்டு இட்டுக் கொண்டிருப்பது தவறு. வாரத்தில் ஒரு நாள் பேசாது மௌனம் இருக்கலாம்.

மௌனம் ஒரு மகத்தான ஞானமாக கருதப்படுகின்றது. தெய்வீகக் கலை மன திற்கு அமைதியைத் தருகின்றது. நரம்பு களிற்கு புத்துயிர் ஊட்டுவது. இந்த மௌ னத்தின் சக்தியை உணர்ந்துதான், பெரிய பெரிய மகான்களும் ஞானிகளும் தவத் தைச் செய்தார்கள். இது சைவசித்தாந் தம் கூறும் யோக மார்க்கத்தில் முதற் படி நிலையாகும். காஞ்சிப் பெரியவரான சங் கராச்சாரிய சுவாமிகள் மௌன விரதம் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் எல்லாம் அருளுரை வழங்கியுள்ளார்கள். திங்கள், வியாழன், எகாதசி போன்ற நாட்களில் மௌன விரதத்தை மேற்கொள்ளலாம். அம்பாளை வழிபடும் அடியவர்கள் நவ ராத்திரி விழாக்காலங்களில் மௌன நோன்பு இருப்பார்கள். அலுவலகங்களில் பணிபுரிபவர்களும், இன்று தொலைபேசி களுடன் நீண்ட நேரம் கலந்துரையாடுப வர்களும் வாரத்தில் ஒரு நாளாகிய ஞாயி ற்றுக்கிழமைகளில் மௌனவிரதத்தை அனுட்டிக்கலாம். இந்த கலியுகத்தில் மௌனவிரதம் சமுதாயத்திற்குச் செய் யும் பெருந் தொண்டுகளில் ஒன்றாகக் கருத முடியும்.

**நல்லூர் கந்தன் திருக்கோயிலின் தெற்கு வீதியில் அமைக்கப்படும்**
**இராஜகோபுர திருப்பணி வேலைகள் நிறைவுறும் நிலையில் உள்ளன.**
**30.08.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் இறையின்பம் பெறுவோம்!

கா. யோகநாதன்
பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

மனிதன் மனிதப் பண்புடன் வாழ உதவுவது சமயம். இன்றைய நவீன யுகத்தில் பல்வேறு அறிவுப் பரம்பல்கள் நாளுக்கு நாள் முத்தமிட்டுச் சென்றாலுங் கூட சமயம் என்ற வரையறைக்குள்ளும் மனிதன் தன்னைப் புதைத்துக் கொள்கின்றான். மானுடம், மனித தர்மம், மனித விழுமியங்கள், மனச்சாட்சி இவை மனிதனுக்கு இயல்பானவையும் உரித்துடையனவுமாகும். நாம் இவற்றைப் புறக்கணியாது மனிதத் தன்மையுடையவர்களாக மாறவேண்டும். எமது மனங்களிலே இடையறாத இறைசிந்தனையை வளர்க்க வேண்டும். இறைசிந்தனையுடன் எமது கடமைகளை உளத்தூய்மையுடன் செவ்வனே செய்தால் இறைவன் எமது உள்ளத்தில் உறைவான்.

மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கெனச் சில பணிகள் உள்ளன. இவற்றைச் செம்மையாகவும் நேரிய வழியிலும் நிறைவேற்ற வேண்டும். கடமை என்பது பணி, சேவை போன்ற பதங்களாலும் குறிப்பிடப்படுகின்றது.

**"கடமை செய் பலனை எதிர்பாராதே"**

என்பது ஆன்றோர் வாக்கு. எமக்குரிய கடமைகளை இதய சுத்தியுடன் செய்யும் போது அது இறைவனுக்குச் செய்கின்ற பணிக்கு ஒப்பானதாகின்றது.

சமயநெறி என்பது வாழ்க்கைநெறி. ஒவ்வொரு இந்துவும் நல்லனவற்றைக் கடைப்பிடித்து தீயனவற்றை விடுத்து வாழ வேண்டும் என்பதனையே இந்துமதம் வலியுறுத்துகின்றது. எனவே இந்துக்களாகிய நாம் இறைசிந்தனையுடன்

**"மெய்ம்மை பொறையுடைமை மேன்மை
தவமடக்கம்
செம்மையொன்றின்மை துறவுடைமை
-நன்மை
திறம்பா விரதத் தரித்தலோடின்ன
அறம் பத்தும் ஆன்ற குணம்"**

போன்ற பத்து அறநெறிகளையும் கடைப்பிடித்து எமது கடமைகளைச் செய்யும் போது ஏற்படும் ஆத்ம திருப்தியே இறையின்பத்திற்கு இட்டுச் செல்கின்றது.

"அறம் செய விரும்பு" என்றார் ஔவையார். இது கட்டளையல்ல. மனிதர்களாகிய நாம் சேவை செய்ய விருப்பங்கொள்ள வேண்டும். சேவை என்பது ஒரு மனச் செயற்பாடு. நாம் செய்யும் சேவையை திரிகரண சுத்தியோடு செய்ய வேண்டும். எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்கக் கூடாது. சேவையானது அன்புத் தொண்டாக மலரவேண்டும். இதனையே அப்பர் சுவாமிகள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார்.

நாம் இறைசிந்தனையுடன் எமது கடமைகளைச் செய்யும் போது எம்முள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் பொறாமை, அவா, அங்க லாய்ப்பு, பலனை எதிர்பார்த்தல் புறங்கூறு தல், விட்டுக் கொடுக்காமை, தன்முனைப் புச் சிந்தனை போன்ற தீயகுணங்கள் எம்மை விட்டகன்று எமது மனமானது தூய்மை பெறும். நாம் செய்யும் செயல்கள், கடமைகள் போன்றவற்றை அகத்தூய்மை யின்றிச் செய்வதனால் எந்தவொரு பயனு மில்லை. மற்றவர்களால் மெச்சப்பட வேண் டும் என்பதற்காக அல்லாமல் உளத் தூய் மையோடும், இறைசிந்தனையோடும் பற் றின்றி பலனை எதிர்பாராது செய்யும் கடமையே மேலானது. இவ்வாறு ஒவ் வொரு இந்துவும் எண்ணிச் செயற்பட்டால் சமுதாயமே நலன் பெறும்.

அன்பைவிடச் சக்தி வாய்ந்த ஆயுதம் எதுவுமில்லை. "அன்பே சிவம்" என்ற தாரக மந்திரத்தினைக் கொண்ட சக்தி வாய்ந்த, தகுதி வாய்ந்த சமயம் எங்கள் சைவசமயம் ஆகும். இந்தச் சைவ சமயத்திலே பிறந்த பெருமை எமக்குண்டு. இந்துக்களின் வாழ் வியல் முறைப்படி வாழ வேண்டிய கடமை யும் எமக்குண்டு. இந்த வாழ்வைக் களங் கப்படுத்தாது மாசுக்களைக் களைந்து நல்லவற்றைச் செய்ய வேண்டும். ஒவ் வொரு கல்விமான்களும் தமது சலுகையி லும் கூடிய உபகாரபந்தங்கள் உண்டென் றும், உரிமைகளிலும் கூடிய கடமைகள் உண்டென்றும் புரிந்து கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி "அன்பற்ற கடமை வெறுக் கத்தக்கது. அன்புடனான கடமை விரும்பத் தக்கது. கடமை அற்ற அன்பு தெய்வீக மானது". இவற்றை உணர்ந்து கடமை களைச் செம்மையுறச் செய்யும் போது கட மையிலும் பயன் மிக்க பிரார்த்தனை வேறெதுவும் கிடையாது. தியானத்திலும் கடமை உன்னதமானது என்பதனை உணர் ந்து மனதைப் புலன்களின் அடிமையாக் காமல் இறைவனின் சேவகன் ஆக்கும் போது மனிதத்துவத்திலிருந்து தெய்வீ கத்தை நோக்கிப் பயணிக்க உதவும்.

## மானிட சேவையே மாதவ சேவை

நல்லொழுக்கத்துடன் சேவை செய் தால் ஒவ்வொருவரிடமும் தூங்கிக் கிடக் கும் தெய்வீகம் தட்டியெழுப்பப்படும். தெய் வீக சக்தி முழுவதும் வாழ்க்கை என்னும் தெய்வீகப் பாதையில் பயணிக்க உதவும். உண்மையான பக்தி எப்பொழுதும் தனித் துவமானதாயும் நிபந்தனை அற்றதாயும் இருக்கும்.

இறைவனால் படைக்கப்பட்ட உயிரி னங்களில் சிறந்த நிலையில் இருப்பவன் மனிதன். தக்கது எது, தகாதது எது என உணர்ந்து செயற்படும் ஆறறிவு படைத்த வன். விஞ்ஞான உலகில் வீறுநடை போட் டுக் கொண்டிருக்கும் மனிதன் மானிடத்தைத் தொலைக்காது மனிதப்பண்புடன் வாழ, கடமைகளை ஒழுங்காகச் செய்தல் வேண் டும் என இந்துமதம் வலியுறுத்துகிறது.

கடமை என்பது இன்று நேற்றல்ல சங்ககாலம் முதலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சங்ககாலப் பாடல் ஒன்றிலே....

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோனாக்குதல் தந்தையின் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடனே**
**நன்னடை பயிற்றுதல் வேந்தனின் கடனே**
**ஒளிருவாள் ஏந்தி அருஞ்சமர் புரிதல்**
**காளையின் கடனே".**

அக்காலச் சூழலிலே ஒவ்வொருவரி னுமுடைய கடமைகளும் கூறப்பட்டுள்ளன. இந்துக்கள் ஒவ்வொருவரும் பெற்றோருக்கு நல்ல பிள்ளைகளாக இருந்து அவர்களிற் கான கடமைகளைச் செய்தல், குருவின் கடமைகள், கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் செய்யும் கடமைகள், அது மட்டுமல்ல, ஒவ்வொருவருக்கும் வேலைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளத்தில் ஒதுக்கப்பட்ட கடமைகள், இறையடியார்களிற்குச் செய்ய வேண்டிய கடமைகள், ஆலயத்தில் செய்ய வேண்டிய கடமைகள், சமூகத்திற்குச் செய்ய வேண்டியவை, நாட்டிற்குச் செய்ய வேண்டியவை என எண்ணிறந்த கடமைகள் உள்ளன.

எம்மில் பலர் கடமைகளைக் கண்டு அஞ்சி ஒதுங்குகின்றோம். சுமையானதாகக் கருதிப் புறக்கணிக்கின்றோம். அதற்கெல்லாம் இறைசிந்தனையின்மையே காரணமாகும். இறைவனால் அளிக்கப்பட்ட இந்தச் சரீரம் கடமைகளை இனிதே நிறைவேற்றவே என்ற இறையுணர்வு கைகூடப் பெறுவோமேயானால் கடமைகள் சுமையானதாக அன்றிச் சுகமான ஓர் அனுபவமாக அமையும்.

"ஆசை" என்னும் அசுரனின் கொடிய வலையில் சிக்கி பலர் துன்பங்களிற்கு ஆளாவது மட்டுமன்றி "நிம்மதி" என்னும் பொக்கிசத்தைத் தொலைத்தவர்களாக சதா துன்பத்தில் உழல்கின்றனர். இன்றைய மனிதனுக்கு வாழ்க்கைத் தேவைகள் அதிகம். அவன் இயந்திர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இதனால் உறவுகளில் பல விரிசல்கள் தோன்றி விடுகின்றன. பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்துப் பாங்காகப் பேணி வளர்த்த பெற்றோர் பலர் முதியோர் இல்லங்களில் முடங்கிக் கிடக்கின்றனர். குதூகலித்து மகிழுங் குழந்தைகள் பலர் காப்பகங்களில் கட்டுண்டுள்ளனர். மனிதனுக்கு அவன் பெற்றோர்கள் பாரமாகி விட்டனர். குழந்தைகளைப் பேணுவதைவிட அதிகரித்த வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் அதிகமாகிவிட்டது. அவன் தனது கடமைகளில் இருந்து புறந்தள்ளி நிற்கின்றான். கடமைகளில் இருந்து தவறியமை அவனுடைய நிம்மதியின்மைக்குக் காரணமாகி விட்டது.

கடமைகளைச் சிறப்புறச் செய்திருந்தால் மானிடம் தழைத்து மேலோங்கியிருக்கும். மானுடம் தழைத்து மேலோங்கியிருந்தால் இன்றைய உலகில் மனிதர்களிடையே போர்மேகங்கள் சூழ்ந்திருக்காது. அவலங்கள் மலிந்திருக்காது. துன்பங்கள் சூழ்ந்திருக்காது. அவன் நிம்மதியுடன் வாழ்ந்திருப்பான். மானிடத்தைத் தொலைத்தவனாக மண்டியிட்டு வாழ்ந்திருக்க வேண்டியிருந்திருக்காது.

இன்றைய இளைய சமூகத்தினரிடையே கடமையின் உணர்வினை விளக்க வேண்டும். மானிடத்தினை வளர்க்க வேண்டும். கடமைகளை உணர்ந்து காத்திரமாக வாழ வழிகாட்ட வேண்டும். ஆலயங்கள் இப்பணியை ஆற்றுவதன் மூலம் தொலைந்து விட்ட மனிதத்துவத்தினை மீளப்பெற முடியும்.

சுற்றம் சூழ வாழ்தலே சிறப்பு மிக்க வாழ்வு. "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை". பொறுமை, விட்டுக்கொடுத்தல், மன்னித்தல் போன்ற விழுமியங்களைப் பின்பற்றுவதன் மூலம் சுற்றத்தாருடன் உறவுகளைச் சிறந்த முறையில் பேணமுடியும். சமய உறவைப் பேணவே சமய, சமூக விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. விழாக்களைக் கொண்டாடுவதும் விழாக்களிலே ஒற்றுமையுடன் கலந்து கொள்வதும் இந்துக்களின் கடமையாகும். பொருள், பண்டம், அந்தஸ்து என்பன வரும், போகும். அவற்றை நம்பி உறவுகளைக் கைவிடாது உறவினர்கள் கஷ்டப்படும் போது, இழப்புக்கள் எய்தும் போது பக்கபலமாக உதவிகள் நல்கி அவர்களை அணைத்துப் பாதுகாப்புக்கொடுக்க வேண்டிய கடமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பும் ஒவ்வொரு இந்துவிற்கும் உண்டு. இத்தகைய கடமைகளைச் செய்யப் பின்நிற் பவர் மனிதாபிமானமற்றவராவர்.

உலக வாழ்வில் உழலும் மனிதர் பொதுவாக மனத்தூய்மை குன்றியவனா கவே காணப்படுகின்றனர். அறக்கடமைக ளைச் செய்யச்செய்யத்தான் அவனது இதயம் தூய்மை பெறுகின்றது. சமூகப் பணிகளை தலையாய கடமையாக எண்ண வேண்டும் இதனையே,

**"ஈதல் அறமென்பர்**
**தீவினை விட்டு ஈட்டல் பொருளென்பர்**
**காதலர் இருவர் கருத்தொருமித்து**
**ஆதரவு பட்டதே இன்பம் – பரனை நினைத்து**
**இம்மூன்றையும் விட்டதே பேரின்ப வீடு"**

என்று புருடார்த்தங்கள் கூறுகின்றன. அற வழியில் நின்று, அறவழியில் பொரு ளீட்டி, அறவழியில் இன்பத்தை அனுப வித்தால் வீடுபேறு தானாகக் கிடைக்கும் என்கின்றது இந்துமதம். எனவே கடமை களை மேற்கூறப்பட்ட ஒழுங்கில் ஆற்றும் போது பேரின்பப் பெருவாழ்வை அடைய முடியும்.

"நான் இப்போது மோட்சத்திற்குப் போக விரும்பவில்லை. எத்தனை பிறவி எடுத்தாலும் மக்களிற்குத் தொண்டு செய் யவே விரும்புகின்றேன்" என்றார் சுவாமி விவேகானந்தர். நாங்கள் மக்கள் சமூகத் திற்குப் பணி செய்ய வேண்டும். நாம் அறவழியில் நின்று பிரதியுபகாரம் எதிர் பாராது மேற்கொண்டால் அதன் பயனை இறைவன் எமக்கருளுவான்.

இந்துக்கள் வாழ்வியலில் கடைப் பிடிக்கும் பணிவு, சேவை, விட்டுக் கொடுத்தல் என்பன அவர்களை உயர்த் தும் ஏணிகளாக உள்ளன.

**"வாழ்வெனும் மையல் விட்டு**
**வறுமையாம் சிறுமை தப்பி**
**தாழ்வெனும் தன்மையோடு**
**சமயமாம் சைவஞ்சாரும்**
**ஊழ் பெற அரிது"**

என பாடினார் அருணந்தி சிவாச்சாரி யார். இங்கு தாழ்வு என்பது பணிவையே குறிக்கின்றது. நாம் பணிவுடன் கடமை களைச் செய்யும் போது அவனது பேரருட் கருணைக்குப் பாத்திரமாவோம். எமது பிறவிப் பெருந்துயர் தீர இறைபணி செய்ய வேண்டும். எமது கடமைகளை நெஞ்சிலே ஆழப்பதித்து ஒழுங்காக நிறைவேற்றுவதன் மூலம் இறையின்பம் பெறுவோமாக.

## உசாவிய நூல்கள்


- திரு. மா. இசைமாணிக்கம் "சைவசமய வளர்ச்சி" 1972. சென்னை, பாரி நிலையம்
- திரு. கு. சோமசுந்தரம் "மனித மேம்பாட்டுச் சிந்தனைகள்" 2000 ரஜி வெளியீடு, இலங்கை
- திரு. ஜான் பவல் சே. ச, "மகிழ்ச்சியா - அது உன்னைப் பொறுத்ததே" குட்பாஸ்டர், இன்டர்நேஷனல் புக் சென்டர், 63, ஆர்மேனியன் தெரு, சென்னை 600001
- தெய்வீகத் தேன் துளிகள், பகவான் ஸ்ரீசத்தியசாயி, சேவா சமிதி, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
- இரண்டாவது உலக இந்து மாநாடு, ஆய்வுக்கட்டுரை மலர், 2003.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரகதோஷ பரிகாரம்

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

இக்காலத்தில் நம்மிடையே கிரகதோஷ பரிகார ஏமாற்றம் பரவலாகிக் கொண்டிருக்கிறது. சிலருக்குப் பரிகார முயற்சி சிறு ஆறுதலைக் கொடுக்கிறது. ஆனால் பலருக்கு ஏமாற்றத்தையே கொடுக்கிறது. இதனால் பரிகார முயற்சி வீண் என்றும், கிரகதோஷம் வலிமையானது என்றும் பலர் தீர்மானிக்கும் கட்டம் உருவாகி விடுகிறது. என்றாலும் துன்பம் - பயம் காரணமாக பலர் சிறிதாகவும் பெரிதாகவும் தமக்குத் தெரிந்த முறையில் கிரகதோஷ பரிகாரத்தில் ஈடுபடுதலும் நிகழ்கின்றது.

இது தொடர்பாகச் சரியாகவும் ஆழமாகவும் தெளிவாகவும் சிந்தித்துச் செயற்படுவதே அறிவுடைமையாகும்.

கிரகதோஷம் சிலருக்கு வலிமை குறைந்ததாகவும் சிலருக்குக் கூடிய வலிமையுடனும் இருக்கும். தோஷத்தின் வலிமைக்குத் தக்கதாகப் பரிகாரம் அமைதல் வேண்டும். பலர் கடுமையான கிரகதோஷத்திற்கும் மென்மையான சாதாரண பரிகாரத்தையே மேற்கொள்கின்றனர். இது தவறு. நமக்கு உபயோகமான பயனைத் தராது.

இக்காலத்தில் பலர் கிரகதோஷ நிவர்த்திக்காக சாத்திரங்களில் கூறப்பட்ட பரிகாரங்களை அறிந்து சிரத்தையுடன் மேற்கொள்ளாது அரைகுறைப் படிப்பும் ஊகமும் உடைய சோதிடர்கள் சிபார்சு செய்யும் பரிகாரங்களைத் தமது வசதிக்கும் சந்தர்ப்பத்துக்கும் பொருத்தமாக மேற்கொள்கின்றனர். இது அனுதாபத்துக்கு உரியதேயன்றி அநுபவத்துக்கு உகந்ததல்ல.

கிரகங்களுக்குத் தண்ணீர் ஊற்றுதல், தானியங்களால் அர்ச்சனை செய்தல், தானியங்களால் மாலை செய்து அணிவித்தல் என்பன சாத்திரங்களில் சொல்லப்படாத கற்பனைப் பரிகாரங்களாகும். தண்ணீர் ஊற்றுதல் என்பது பூசையின் ஒரு பகுதியான அபிஷேகம் செய்தலேயாகும். அபிஷேகம் செய்த சுவாமிக்கு நிவேதனம் வைத்து அர்ச்சனை செய்து தீபாராதனை செய்தாலே முழுமையான பூசையாக இருக்கும். இப்படியன்றித் தனியே தண்ணீர் ஊற்றுதல் என்பது பசித்தவனுக்குச் சோறு இன்றித் தனியே கறி மட்டும் கொடுப்பது போன்றதாகும்.

கிரகங்களுக்கு உவப்பான தானியத்தை அக்கிரகத்தின் தன்மைகளும் தூய ஒழுக்கம், தெய்வபக்தி, இரக்கம், மந்திரசித்தி என்பன உடைய குருமாருக்குத் தானம் செய்வதனால் கிரகப் பிரீதி உண்டாகும் என்று சாத்திரங்கள் கூற, பகுத்தறிவுக்கு விரோதமாக தானியங்களால் மாலை செய்து கிரகங்களுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டுவதால் கிரகப்பிரீதி உண்டாக வாய்ப்பே இல்லை.

கிரகதோஷத்தின் தன்மையையும் அதற்கேற்ற சாந்தி முறையையும் நன்கு அறிந்த பின் அதைச் செயற்படுத்த தகுதி யான குருவையும் புனிதமான பொருட் களையும் பொருத்தமான காலம் இடம் என்பவற்றையும் வரையறை செய்து செயற்பட வேண்டும். நல்ல குருமார் சிலர் தம்மை அண்டியவரின் மீது கொண்ட பரிவால் சிரத்தையுடன் சாந்திக் கருமங் களை நிறைவேற்ற சாந்தி செய்வித்த வருக்கு நன்மை உண்டாக, சாந்தி செய்த குருவுக்கு நோயோ கஷ்டமோ, ஏற்பட் டதைக் கண்டு அக்குருமாரின் மனைவி, உறவினர் போன்றவர் இனி நீங்கள் சாந்தி செய்ய வேண்டாம் எனத் தடுத்த தாக அறிகின்றேன். சாந்தி செய்தவர் அக்கருமம் செய்யும் போதே அதன் பயனை அநுமானித்து அக்கருமத்தால் தமக்குப் பாதிப்பு வராதபடி செபம், தியானம் என்பன செய்தல் வேண்டும். அப்படி அவர் விசேஷமாகச் செயற்பட அவர் குடும்பத்திற்கு பணமுடை வரலா காது என்பதற்காகவே சாந்தி செய்பவ ருக்கு அதிக தட்சணை வழங்கும் வழக் கம் உண்டாகியது.

மந்திர சித்தியும் இரக்கமும் இல்லா ஒருவர் படாடோபமாகச் சாந்தி செய்தால் சாந்தி செய்பவருக்கு நன்மை உண்டா காது.

தசரதர் புத்திரகாமேஷ்டி யாகம் செய்ய எண்ணியபோது வசிட்டர்தான் அதற்குக் குருவாக இருந்து செயற்பட முயலாமல் அதற்குத் தகுதி உடையவர் ரிஷ்ய சிருங்க முனிவரே - அவரை எப் பாடுபட்டேனும் சம்மதிக்கவைத்து யாகத் தைச் செய்க என தசரதருக்கு அறிவுறுத் தியதாகவும் அப்படியே செயற்பட்டு நல்ல பிள்ளைகளைத் தசரதர் பெற்றதாகவும் வரலாறு. கிரக சாந்தியோ தோஷபரி காரமாக அர்ச்சனை, பூசை என்பனவோ செய்யும் குருவின் புனிதத்தில் அக்கறை அவசியம் வேண்டும்.

மதுமாமிச போசனம், தீட்சை இன்மை, ஆசாரமாக மலர் கொய்யும் பயிற்சி இன்மைகளுடன் சேகரிக்கும் மலர் போன்றவற்றைக் கிரகங்களோ கட வுளரோ விரும்பி ஏற்கார். சுத்தம் செய் யாத அசுத்தமான கையால் படைக்கும் உணவை ஒரு மனிதன் உண்ண இயலாது வெறுப்பது போல, புனிதர்களான கிரகங் களும் தேவர்களும் கடவுளர்களும் தகுதியற்ற மலர் போன்றவற்றை உகந்து ஏற்பதற்குப் பதில் வெறுத்து ஒதுக்குவர்.

அறிவும் சிரத்தையும் முறையும் இல்லாத பரிகார முயற்சி இன்பத்துக்குப் பதில் துன்பத்தையே அதிகரிக்கச் செய்யும். வீதியில் வாகனங்களை ஓட்டவும், சமைக் கவும், சமைத்ததை உண்ணவும் கூட அறிவும் பயிற்சியும் தேவைப்படுவது போல இறையருளைப் பெறவும் கிரகபரிகாரம் பயனளிக்கவும் அறிவும் பயிற்சியும் அவ சியம்.

பரீட்சைக்குப் படித்து விடையெழு திய ஒருவர் அப்பரீட்சையில் சித்தி அடையவிட்டால் மீண்டும் படித்து திரும்ப வும் பரீட்சையில் எழுதுவது போல நோய் தீர மருந்துண்ட ஒருவர் நோய் தீராவிட் டால் மீண்டும் சிறந்த வைத்தியரை அணுகி மருந்துண்பது போல கிரக பரிகாரத்தால் துன்பங்கள் நீங்காவிட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மீண்டும் பரிகார முயற்சியில் ஈடுபட வேண்டுமேயன்றி பரிகாரம் செய்தேன் பயனில்லை என்று இரங்குவதால் நன்மை உண்டாகாது.

நோய்க்கு மருந்துண்ணும் ஒருவர் நோய் அதிகரிக்க ஏதுவான உணவு வகைகளையும் பிறவற்றையும் விலக்கிக் கொண்டே மருந்துண்ணவேண்டும். அப்படியில்லாது நோய் தீர மருந்துண்ணும் அதேவேளை நோய் அதிகரிக்க வாய்ப்பான உணவுகளையும் பிற செயல்முறைகளையும் மேற்கொண்டால் மருந்துண்பதால் பயனுண்டாகாது.

பெரியோரைப் பழித்தல், எளியோரை வருத்தல், பொய் சொல்லல், புறங்கூறல் முதலிய பாவங்களால் உண்டான துன்பம் நீங்க வேண்டுமென்று கிரகபரிகாரம் செய்பவர் அப்படிச் செய்து கொண்டு தம் துன்பத்துக்கு ஏதுவான பாவங்களையும் தொடர்ந்து செய்தால் கிரகபரிகாரம் விரும்பும் நலனைச் செய்ய நாமே தடுப்பவராவோம்.

தர்மசாத்திரங்களில் தீயொழுக்கம் உள்ளவர்களின் பரிகாரமுயற்சிகளும் தெய்வ வழிபாடும் முழுமையான பயனைக் கொடா என்று சொல்லப்பட்டுள்ளது. இதேபோல நல்லொழுக்கம், விரதம் தானம், பரோபகாரம் உடையவர்க்குப் பரிகாரம் பூரணபயனைக் கொடுக்கும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

மிகக் கடுமையான கிரகதோஷம் உடையவர்க்குப் பரிகாரம் பயன்படாது. அவர்கள் அத்துன்பத்தை அநுபவித்துக் கழிப்பதைத் தவிர வேறுவழியில்லை என்றும் சோதிடக் கருத்து உண்டு. அப்படியான கடும் தோஷமுள்ளவரும் பரிகாரம் செய்வது நல்லது என அநுபவசோதிடர் ஒருவர் எழுதியுள்ளார்.

திருமணம் நிகழாது என்ற சோதிட பலன் உள்ளவர் பரிகாரம் செய்வதால் திருமணம் நிகழாது என்றாலும், பரிகாரம் செய்வதால் இரு நன்மை உண்டு என அவர் கருதுகின்றார்.

பரிகாரம் செய்வதால் திருமணம் நிகழவில்லையே என்ற கவலை குறையும் என்பது ஒரு நன்மை. கடும் தோஷமுள்ளவருக்கு மறுபிறப்பிலும் அத்தோஷம் தொடர வாய்ப்பிருக்கும். பரிகாரம் செய்வதால் மறுபிறப்பில் அத்தோஷம் நீங்க வாய்ப்பு உண்டாகும் என்பது மற்ற நன்மை. தோஷ பரிகாரம் இவ்வாறு நாம் மேலோட்டமாகக் கவனிக்காத பயன்களையும் தரும் என்பது சோதிடக் கருத்தாக உள்ளது.

திருஞானசம்பந்தர் அருளிய கோளறு பதிகத்தைப் பாராயணம் செய்தால் நன்மையுண்டு என்கின்றனர். பலர் பாராயணம் செய்து ஓரளவாவது பயனும் அடைகின்றனர். ஆனால் இப்பதிகத்தில் சம்பந்த சுவாமிகள் இறைவன் உளமே புகுந்த அதனால் அவை நல்ல நல்ல என்றருளியுள்ளதை அவதானித்து நம் உள்ளத்தில் இறைவனைத் தியானித்து நிலைநிறுத்துவது அவசியம்.

ஒருவன் மோட்டார் சையிக்கிளில் செல்லும் போது கெல்மெட், லைசென்ஸ் முதலியன இல்லாவிட்டால் பொலிஸ் காரர் விசாரிப்பர் - தண்டிப்பர். ஆனால் இவை இல்லாமல் செல்லும் ஒருவன் தன் மோட்டார் சயிக்கிளில் பொலிஸ் இன்ஸ் பெக்டரைக் கொண்டு சென்றால் அப்படிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்பவனைப் பொலிஸ்காரர் விசாரிக் கவே மாட்டார். மாறாக பொலிஸ்காரரை ஏதாவது உதவி கேட்டாலும் செய்து கொடுப்பர். இக்கருத்தையே சம்பந்த சுவாமிகள் உளமே புகுந்த அதனால் என்று அருளியிருக்கிறார். இறைவன் எம் உள்ளத்தில் இருந்தால் கிரகங்கள் எல் லாம் எம் உள்ளத்தில் இருக்கும் இறைவ னைக் கண்டதும் எமக்கு நன்மையே செய்யும்.

எனவே பேராசை, கோபம், வெறுப்பு, கவலை, நோய் முதலியன நிறைந்த காடு போன்ற உள்ளத்தினை இறைவன் இருக் கும் கோயிலாக்கி இறைவன் அங்கு புகுந்து இருக்கச் செய்து நம் உள்ளத்தில் வேயுறு தோளிபங்கனா கவும் விடமுண்ட கண்டனாகவும் இது போல அப்பதிகம் கூறும் தோற்றங்களில் இறைவன் இருப்பதை நாமே கண்டு வணங்கினால் அவ்விறைவனைக் கிரகங் களும் கண்டு வணங்குவதுடன் நமக்கு நல்லனவாய் அமையும்.

இதேபோல கிரகதோஷ பரிகாரம் கூறும் சாத்திரங்கள் பல சிரமமான செயல்முறைகளை வலியுறுத்தியிருக் கும். அச்சிரமமான செயல்முறைகளில் ஈடுபடுவதால் வரும் சிரமங்கள் கிரகங் கள் நமக்குத் தரவிருக்கும் சிரமங் களுக்கு மாற்றாக அமைவதும் உண்டு. அதற்குச் சந்தர்ப்பமில்லாது யாமெந்தச் சிரமங்களுக்கும் அகப்படாது பரிகாரத் துக்கென ஒருதொகைப் பணத்தை இழப் பது என்பது பொருத்தமாகாது.

இப்படியாகக் கிரகதோஷ பரிகா ரம் சாத்திரங்களிலும் புராணங்களிலும் வரலாறுகளிலும் ஆங்காங்கு அரிய உண்மைகள் உள்ளன. ஒருவன் ஒரு பாவத்தைச் செய்தால் உடனே அதற்கு பரிகாரம் செய்ய வேண்டும். ஒருவன் நல்லெண்ணத்தோடு செய்த செயல் பாவமானது என்பதை அறிந்தால் அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும். இப்படியெல் லாம் செய்தால் பாவப்பட்டியல் குறையும். கிரகதோஷமே வராது. வந்த தோஷத் தைப் பரிகரிக்கலாம்.

கிரகதோஷத்துக்குப் பரிகாரம் இது தான் என்பதை அறிய இயலாத நிலையில், தான் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் இது என அறியாத நிலை யில் உள்ளவன், ஒரு மண்டலமோ ஒரு பட்சமோ விரதமாக - நியமமாக ஆலய வழிபாடு செய்தால், பரிகாரம் இது என் பதையும் அது செய்யும் சந்தர்ப்பத்தையும் அறிந்து உய்வடையலாம் என்ற உண் மையைத் திருவிளையாடற் புராணம் போதிக்கின்றது. நமது பாவமும் பாவப் பயனும் நுணுக்கமாகவும், தொகையா கவும், தொடர்ச்சியாகவும் இருக்கின்றன என்றால் அதற்கான நிவாரணமும் அப் படி இருக்கும் என்பதை ஊகித்துச் செயற் படுதலே விவேகமும் அறிவுடைமையு மாகும்.

**பூமியில் தோன்றியதும் ஒவ்வொருவருக்கும் சமத்துவம் உண்டு.**
**பூமிக்கு அடியில் போகும் போதும் சமத்துவம் உண்டு.**

**- என்கினாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் செல்லப்ப சுவாமிகள்

ம. சிவயோகசுந்தரம் (நல்லூரான் சிவா)
பொஸ்ரன், அமெரிக்கா

நல்லூர் ஒரு புனித பூமி. நல்லூர்க் கந்தனை மையமாக வைத்து எல்லாத் திசைகளிலும் திருக்கோயில்களும், சித்தர் ஆச்சிரமங்களும், இராசதானிகளும் அமை யப்பெற்றுள்ளன. ஒரு புறம் நல்லூர் சட்ட நாதர், மற்றத்திசையில் வெயிலு கந்த பிள்ளையார், கைலாசநாதபிள்ளையார், வீரமாகாளி அம்மன், திருநெல்வேலி அம்மன், சிவன், செல்லப்பர் ஆச்சிரமம், சமயக்குரவர் ஆறுமுகநாவலர் நினைவு மண்டபம், கடையிற் சுவாமி சமாதி என் பன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கன. இலங்கையில் ஒரே ஒரு ஆதீனமான திரு ஞானசம்பந்தர் ஆதீனமும் அமைந்தது நல்லை நகரில் எனும் பெருமையும் உடையது.

இவ்வாறு புகழ்பூத்த நல்லையம் பதியிலே வட்டுக்கோட்டையிலிருந்து விவ சாயம் செய்வதற்காக நல்லூர் தேரடிக்கு மறுபக்கத்தில் உள்ள வளவில் வல்லி புரம் என்னும் பெரியார் தன் குடும்பத்தின ருடன் குடிபுகுந்தார். வல்லிபுரத்திற்கும் சின்னம்மா அம்மையாருக்கும் சற்புத்திர ராக அமைந்தவரே செல்லப்பர் ஆவார். இவர் சைவப்பிரகாச வித்தியாசாலை, மத்திய கல்லூரி ஆகியவற்றில் தமது கல்வியைக் கற்று யாழ் கச்சேரியில் சிறிது காலம் ஆராய்ச்சியாக பணிபுரிந் தார் என அறிய முடிகிறது.

“நல்லூர் மண் எல்லாம் சிவலிங் கம்” என அடிக்கடி யோகர் சுவாமிகள் கூறுவார். அந்த மண்ணிலே புரண்டு உருண்ட செல்லப்பருக்கு ஞான முறுக்கு ஏறிவிட்டது. உத்தியோகத்தைத் துறந்து ஊரறிய விசரனானார். நல்லூர் பிரபல வைத்தியர் சின்னத்துரை செல்லப்பரின் மைத்துனராவார். அவர் செல்லப்பருக்கு ஏற்பட்ட நோய் உலகியலுக்கு அப்பாற் பட்டது என உணர்ந்து அவரது ஞான தாகத்திற்கு ஏற்ப உதவிகளைச் செய்தார்.

செல்லப்பர் பெரும்பாலும் நல் லூர் வீதியிலேயே சஞ்சாரம் செய்வார். ஊர் உலகம் துயில் கொண்ட வேளை யில் பின்சாமத்தில் நல்லூர் மூலஸ் தானத்தைப் பார்த்து “பரமபிதாவே பரம பிதாவே” என கண்ணீர் மல்கக் கத்துவார் பகல் வேளைகளில் இரண்டு கைகளையும் உயர்த்தி “ஓம் ஓம்” என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு தமக்குள்ளே சிரித்து மகிழ்வார். அவருடன் கூடித்திரிந்த கொழும் புத்துறை விதானையார் திருஞானசம்பந்தர், துரையப்பா போன்றோருடன் கொழும்புத் துறை, திருநெல்வேலி, கைதடி, போன்ற இடங்களுக்குப் பிச்சையேற்கச் செல்வார். இப்போது கைதடியில் மார்க்கண்டு சுவாமி கள் ஆச்சிரமம் அமைந்தவளவுக்கு (இது யோகர்சுவாமிகள் மார்க்கண்டு சுவாமி களை அமர்த்திய இடம்) செல்லப்ப சுவாமிகள் பலதடவைகள் சென்று தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாதத்தை பதித்துள்ளார். அப்போது விசரனாக நடித்து பிச்சையேற்ற செல்லப்ப சுவாமிகளை அவ்வீட்டுக்காரர்களால் அறிய முடியாமல் போய்விட்டது. இவரின் சகோதரி செல்லம்மா பாசமிகுதியால் இவருக்கு பக்குவமாக உணவுசமைத் துக் கொண்டு போக "நீ நஞ்சு போட்டு கொண்டு வந்து விட்டாய்" என செம்மணி வயல்வெளியில் எறிந்து விட்டு வருவார்.

செல்லப்பரின் உண்மை நிலையை அறியாத அயலவர்கள் அவருக்கு கை விலங்கை மாட்டி விட்டனர். ஒரு நாள் அவ்வீதியால் வந்த கடையிற்சுவாமி களின் கடைக்கண் பார்வை செல்லப்ப ருக்குக் கிட்டியது செல்லப்பரை உற்று நோக்கிய கடையிற் சுவாமிகள் "இவனு க்கு பைத்தியம் முற்றிவிட்டது. அவிழ்த்து விடுங்கள்" என்று கூறி, பக்கத்திலிருந்த கடலைக்காரியிடம் ஒரு ரூபா குற்றி வாங்கி வெற்றிலையில் வைத்து தலை க்கு மேல் குடையைப் பிடித்து "ஓடெடா" எனக் கூற அதுவே அவருக்கு ஞானோ தயம் ஏற்படக் காரணமானது.

செல்லப்பருக்கு யோகர்சுவாமி களே ஒரே ஒரு சீடர். வேறொருவராலும் செல்லப்பரை அறிந்துணர முடியவில்லை. யோகருக்கு உலகெல்லாம் சீடர்கள். செல்லப்பசுவாமிகளின் படத்தை அவர் வாழ்ந்த காலத்தில் ஒருவராலும் எடுக்க முடியவில்லை. அவரை அண்டப்போன வருக்கு தூசணத்தால் ஏச்சுவிழும். அல்லது செல்லப்பர் சலம், மலம் கழிக் கும் இடத்தில் போய் நிற்பார். இவரது தோற்றத்தினை தன் மனதுள் சிறுவயதில் பதித்த அந்தணப் பெருமகன் ஒருவர் இவர் நல்லூர் சிவன் கோவிலுக்கு முன் னுள்ள வீட்டில் அச்சுக்கூடம் நடத்தியவர் ஓவியம் வரைவதில் வல்லுனர். அவர் தனது வீட்டுச் சுவரில் செல்லப்ப சுவாமி களின் திருவுருவத்தை வரைந்தார். அதுவே படமாக எடுக்கப்பட்டு இப்போது செல்லப்ப சுவாமிகளின் படமாக மிளிர்கிறது.

யோகர் சுவாமிகளின் படமும் கஸ்தூரியார் முத்துக்குமாரு வளவு டாக்டர் பசுபதியின் மகன் முத்துக்குமார சுவாமி என்பவரால் சுவாமி தியானத்தில் இருக்கும் போது எடுக்கப்பட்டது. சுவாமி யின் தியானம் கலைந்த பின் சுவாமிக்கு தெரியாமல் எடுத்ததற்கு மன்னிப்பு கோரி இன்னொரு படம் எடுக்க அனுமதிக்கு மாறு பணிந்து நின்றார். சுவாமியின் சம் மதத்துடன் படம் எடுக்கப்பட்டது. ஆனால் சுவாமிகளின் படம் அனுகத் தொண்டர் சிலரிடமே சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் இருந்தது. ஆத்மஜோதி முத்தையா அவர் கள் தமது 10ஆவது இதழில் சுவாமியின் படத்தை வெளியிட விரும்பி சுவாமியின் அன்பர்களை அணுகி படத்தைத் தந்து தவுமாறு கேட்டார். ஆனால் சுவாமிக்குப் பயந்து ஒருவரும் கொடுக்க முன்வர வில்லை. மனமுடைந்த முத்தையா அவர் கள் கொழும்பில் நின்றபோது பத்திரிகை களுக்குக் கார்ட்டூன் வரையும் கனகலிங கத்தை அணுகி எனக்கு யோகர் சுவாமி யின் படத்தை வரைந்து தரமுடியுமா? என வினவினார். அதற்கு கனகலிங்கம், நான் யோகர்சுவாமியை பலதடவை தரி சித்துள்ளேன். நேற்றிரவும் கனவில் தோன்றி கனகலிங்கம் என்ரை படத்தை கீறித் தருவியோ? எனக் கேட்டார். அது உங்களுக்காகத் தானிருக்கும். எப்படி படம் கீற வேண்டும் எனகேட்டார். அதற்கு முத்தையா அவர்கள் சுவாமி இலுப்பை மரத்தின்கீழ் தியானம் செய்யும் நிலையில் வேண்டுமெனக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படமே 10ஆவது ஆத்மஜோதி மலரை அலங்கரித்து அந்தப்படம் இப்போது பலரின் சுவாமி அறையில் வீற்றிருக்கிறது. இப்படம் கொண்ட புத்தகம் பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனைக்கு இருந்ததைக் கண்ட சுவாமிகளின் நெருங்கிய தொண்டர் ஒருவர் அதை எடுத்து நேரே கொழும்புத்துறை போய் சுவாமிகளிடம் முறையிட்டார். சுவாமிக்கு அவ்வன்பர் மேல் கோபம் பொங்க, "முத்தையன், விரும்பினான் அவன் போட்டான். நீ என்ன என்னை வழக்கு வைக்கச் சொல்லுகிறாயா? உனக்கு விரும்பமில்லாவிட்டால் அந்தப் புத்தகத்தை இங்கே எறிந்து விட்டுப் போ" என ஏசித்துரத்தினார்.

மேலும் ஸ்ரீலங்கா அச்சகத்திற்குப் போன சுவாமிகளிடம் தெய்வேந்திரம் அந்த மலரைக் காட்டினர். உடனே சுவாமிகள் "தெய்வேந்திரம் இந்தப்படம் உனக்குப் பிடித்ததா? என வினவ அவர் "சுவாமி இது எனக்கு நன்றாகப் பிடித்து இருக்கிறது. இதைப் பிறேம் போட்டு சுவாமியறையில் வைக்கப் போகிறேன்" என்றார். உடனே சுவாமிகள் முத்தையனுக்கு உடனடியாக நாவலப்பிட்டி விலாசத்திற்கு நூறு ரூபாய் அனுப்பு எனக் கட்டளையிட்டார்.

மனம் வாக்கு காயம் என்பவற்றால் எண்ணவியலாத மோன தவத்தவராக இருந்த செல்லப்பா தேசிகரின் கடைக் கண்பார்வை பெற்றவர்கள் புண்ணியவான்கள் ஆவர். சேர் பொன்னம்பலம் இராமநாதன், இராமநாதன் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டிய வேளை விசிறி கட்டுதல் போன்ற கைப்பணிகளில் விற்பன்னராகத் திகழ்ந்த செல்லப்பர் தாமே மருதனாமடம் சென்று இராமநாதனுக்கு ஒரு விசிறியைக் கொடுத்து நான்கு மகா வாக்கியங்களையும் உபதேசித்து விட்டு திரும்ப நல்லூருக்கு வந்தார்.

நல்லூரைச் சேர்ந்த அன்பரொருவருக்கு தமது சந்ததிக்கு ஆண் வாரிசு இல்லை என்ற கவலை வாட்டியது. ஒரு நாள் நல்லூர்த் தேரடியில் செல்லப்பர் நிற்கக் கண்டு கீழே விழுந்து செல்லப்ப சுவாமிகளின் இரண்டு கால்களையும் பற்றியபடி அழுது கொண்டு இருந்தார். அப்போது செல்லப்ப சுவாமிகள் "விடடா விடடா உனக்கு ஆண் குழந்தை பிறக்கும்" என திருவாய் மலர்ந்தார். அடுத்த ஆண்டு அவ்வன்பர்க்கு குழந்தைப்பாக்கியம் கிடைத்தது.

கொழும்புத்துறை வல்லிபுரம் செல்லப்பரின் பக்தர். அவரது பிள்ளைக்குக் கடும் சுகவீனம் கண்டு வைத்தியர்கள் கை விரித்து விட்டனர். அப்பொழுது அவர் தமது பிள்ளையை செல்லப்பரிடம் கொண்டு செல்ல அவரது மாமியார் "அந்த விசரன் என்ன சாதியோ தெரியாது" என்று மறுக்க, வல்லிபுரத்தார் பிள்ளையை செல்லப்பரிடம் கொண்டு சென்றார். பிள்ளையைத் தொட்ட செல்லப்ப சுவாமிகள் "வல்லிபுரம் நாம் வந்தார் வரத்தாரில்லை. சந்திர சூரியரறிய வட்டுக்கோட்டை வெள்ளாளர்" என்று கூறி பிள்ளைக்கு ஒரு மாதுளம் பழத்தை உண்ணக் கொடுத்தார். அப்பழத்தை உண்ட பிள்ளை சாவிலிருந்து பிழைத்துக் கொண்டது.

திருநெல்வேலி சிவன் கோவில் குருக்கள் செல்லப்ப சுவாமிகளிடம் அன்பு பூண்டவர். அவர் மாலை வேளைகளில் செல்லப்பருக்கு கோயில் பிரசாதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் வீதியில் வைத்து வழங்குவார். வழமை போல் ஒரு நாள் கொண்டு சென்ற குருக்களைப் பார்த்து செல்லப்பர் "இது தீட்டு கொண்டு போ" என ஏசித் துரத்தினார். வீடு சென்ற குருக்கள் அவரது பிள்ளை செல்லப்பருக்குக் கொடுக்கு முன் அந்த பிரசாதத்தை கை வைத்து உண்டதை அறிந்தார்.

தாந்திரீக ஒழுக்கமுடைய கடையிற் சுவாமிகளைக் கண்ணியப்படுத்த செல்லப்பர் ஒருநாள் சாராயப் போத்தலை தமது சால்வையில் மறைத்து வைத்து காத்திருக்க, எதிரே வந்த கடையிற் சுவாமிகள் "அது எப்போதோ முடிந்து விட்டது" எனக்கூற சாராயப் போத்தல் வெறுமனே இருந்ததைக் கண்டார் செல்லப்பர்.

இளைஞரான யோகநாதன் ஒரு நாள் கொழும்புத்துறை கூட்டாளிகளுடன் தேரடியை நோக்கி வந்து கொண்டிருந்தார். முட்டாளைப் போல் சிங்காரமாக தேரடிப் படியில் வீற்றிருந்த செல்லப்பர் யோகரை நோக்கி "யாரடா? நீ பாரடா உள்" என உறுமினார். அதுவே யோகநாதரின் திருப்பு முனையாக அமைந்தது. தேகமே மெய் யென்று திரிந்த யோகநாதனை சின்னத் தனமான வார்த்தைகளைப் பேசி அவரின் கல்மனதைக் கரைத்தார். யோகரை பல வித சோதனைக்குட்படுத்தினார் செல்லப்ப தேசிகர். உடல் வேறு ஆன்மா வேறு என உணர்ந்த இருவரும் சேர்ந்து உணவு சமைத்து உணவுண்ண தயாராகும் வேளை செல்லப்பர் வயிற்றைப்பார்த்து "உனக் கென்ன சாப்பாடு இப்ப?" எனக்கூறி சட்டி பானையை உடைத்து காகம் குருவிக்கு அவ்வுணவைப் போடுவார். பட்டினியாக இருக்கும் யோகநாதனைப்பார்த்து "வா ஐயரிடம் உணவு வாங்கி உட்கொள் வோம்" என தேரடியிலிருந்து கோயில் முன்பக்கம் செல்வர். அந்தக்காலத்தில் பூசை ஒழுங்காக நடைபெறுவதில்லை. ஐயர் வந்த நேரம் தான் பூசை. அங்கும் ஏதாவது வாங்கி உண்ண முடியவில்லை. மேலும் செல்லப்பர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவார். ஒருமுறை "காண்ப தெல்லாம் வீண்பாவனை" என்பார்; பின்னர் "பார்ப்பதெல்லாம் பரம்" என்பார்; இறுதியில் "யாரறிவார்? நாமறியோம்" எனப் புகட்டுவார். கூறியதைக் கூறாமல் மாறுபாடாய் பேசி யோகநாதனை ஆட் கொண்டார்.

ஒருமுறை விதானையார் திரு ஞானசம்பந்தர் "செல்லப்பர் உங்களிடம் எல்லாவற்றையும் கொட்டி விட்டுச் சென்றுள்ளார்" என்றார் யோகர் சுவாமிகளிடம். அதற்கு யோகர்சுவாமிகள் "சும்மாவா பெற்றேன் மலையைப் பிளந்தல்லவா பெற்றேன்" எனக் கூறினார். மேலும் "செல்லப்பரிடம் கேட்டறிந்தாரில்லை. நான் பின்னால் நிற்கும் போது இடைக் கிடையே அரிய மந்திரங்கள் வரும்" என்று சொன்னார். இவற்றில் சிலவே இன்று மகாவாக்கியம் என்று உலகத் தோரால் போற்றப்படும் "ஒரு பொல்லாப்புமில்லை; எல்லாம் எப்பவோ முடிந்த காரியம், முழுதுமுண்மை, நாமறியோம்" இம்மந்திரங்கள் எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் டெல்லி மாநகரத்தில் பொற்றகடுகளால் எழுதி வைக்கப்பட்டன என யோகர் சுவாமிகளுக்குக் கூறியுள்ளார் செல்லப்ப தேசிகர்.

செல்லப்பர் யோககுருநாதனையும் கதிரவேலு என்பவரையும் தேரடியில் 40 நாட்கள் தவம் செய்யுமாறு பணித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40ஆம் நாள் "இரு யானைகளை ஒரு தறியில் கட்டக் கூடாது" எனக் கூறி இருவரையும் ஒவ்வொரு திசையிலும் துரத்தினார். கதிரவேலு அவர்கட்கு என்ன நடந்தது என்று ஒருவரும் அறியார். யோகர் சுவாமிகள் கால்நடையாக கதிர்காமம் சென்றார். பல நாள் யோகரைக் காணாத உறவினர்கள் செல்லப்பரிடம் சென்று யோகரைப் பற்றி விசாரித்தனர். அதற்கு செல்லப்ப தேசிகர் "யோகன் செத்துப் போய்விட்டான்" எனக் கூறினார். மனக் கவலையடைந்த உறவினர்கள் யோகர் சுவாமிகளுக்கு ஆற்ற வேண்டிய இறுதிக் கிரியைகளைச் செய்தனர். சில காலத்தின் பின் யோகர்சுவாமிகள் திரும்பி வரக் கண்ட உறவினர்கள் மகிழ்ச்சியடைந்தனர். உடனே செல்லப்பரிடம் சென்று "ஏன் பொய் சொன்னீர்கள்" என வினவ அதற்கு செல்லப்ப சுவாமிகள் "நாங்கள் பொய் பேசுவதில்லை; இப்பவும் சத்தியமாகச் சொல்லுகிறேன் யோகன் எப்பவோ செத்துப் போய்விட்டான்" என்றார். அதற்கு அவர்கள் "இந்த விசரனிடம் எமக்கென்ன பேச்சு" என்று கூறியபடி அவ்விடத்தை விட்டகன்றனர். செல்லப்பர் தாம் பூண்ட விசர்க் கோலத்தை செம்மையாக நடித்தார். இதை யோகர் சுவாமிகள் "செல்லப்பர் தாம் கொண்ட கோலத்தை 40 வருட காலமாக எவரும் சந்தேகப்படாமல் நடித்துக் காட்டிவிட்டுச் சென்றார்" என்பர். மேலும் யோகர் சுவாமிகளை நோக்கி" "யாழ்ப்பாணத்தானுக்கு சாமி காட்டாதே. சாமி காட்டினால் தலைமேல் ஏறி சலத்தை கழித்து விட்டு செல்வான்" என்றும் எச்சரித்தார். எனினும் யாழ்ப்பாணத்தவர் செய்த புண்ணியத்தால் யோகர் சுவாமிகள் பல பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆசீர்வதித்து ஆண்டி முதல் அரசர் வரை தம்மை அண்டியோருக்கு அருள்புரிந்தார். யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப்பா இல்லையேல் நாம் நல்லூரானை நன்குணராமல் போயிருப்போம்.

யோகர் சுவாமிகள் செல்லப்ப தேசிகரின் தோற்றம் குணாதிசயத்தை பின்வருமாறு கூறுகிறார்.

**சிரித்து நல்லூர் வீதியில் திரிபவர்**
**வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்**
**கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்**

**பாதிச்சாமத்தின் பின் பள்ளி கொள்பவர்**
**உல்லாசமான நடையுடையோன்**
**பித்தரென்று பிறர் பேசும் திறத்தான்**
**ஆறறிவாரென அடிக்கடி சொல்வான்**
**நீறுமணியான் நெற்றியில் பொட்டுமணியான்**
**தேரடிப் படியிலே சிங்காரமாக கிடப்பான்.**

இப்படியாக பலபல நற்சிந்தனைப் பாக்களில் நாம் செல்லப்ப மூர்த்தத்தை உணர முடிகிறது.

செல்லப்பருக்கு குருவுமில்லை சீடருமில்லை என யோகர் சுவாமிகள் அடிக்கடி தமது அன்பர்களுக்குக் கூறுவார். கடையிற் சுவாமிகளை செல்லப்பரின் குருவாகச் சிலர் கூறுவர். ஆனால் யோகர் சுவாமிகள் செல்லப்பர் எல்லாம் வல்ல சிவபெருமானே என பின்வரும் பாடலால் எமக்குணர்த்துகிறார்.

**காட்டினிலே காளியுடன் கூத்தாடும்**
**கண்ணுதலோன்**
**நாட்டினிலே ஞானகுருவாய் நயந்துவந்து**
**மீட்டா னவன்றன் விரையார் மலரடியை**
**மாட்சிமை சேர் நல்லைநகர் தேரடியில்**
**கண்டேன்**

என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாலயனும் தேடியறியா மலரடிகள்**

**கோல வருட்குருவாய்க் குவலயத்தில் போந்து**

**சாலப் பெரும்பகையைத் தானீக்கி**

**யாண்டானை**

**ஞாலம் புகழு நல்லைநகர் தேரடியில் கண்டேனே**

எனப் பாடுகிறார்.

மேலும் செல்லப்பர் தம்மை தடுத்தாட்கொண்ட முறையையும் அதனால் தான் பெற்ற இன்ப நிலையையும் மிகத் தெளிவாக பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

**இருவரும் தேடிக் காணா இறைவன்**

**என்போல் உருத்தாங்கி**

**இணங்கி யெவரும் வணங்கும் நல்லையிலே**

**இன்னான் இவனென**

**ஒருவரு மறியா தோடி யுலாவி உவகை**

**பூத்தமுகத்தினராய்**

**ஒரு நாள் என்றனை உற்று நோக்கி ஒரு**

**பொல்லாப்புமில்லை யென்று**

**அருவமும் காட்டி உருவமும் காட்டி அப்பாற்**

**கப்பாலாம்**

**அருள்நிலை காட்டிக் காட்டிக் காட்டி அந்த**

**மாதியில்லாச்**

**சொரூபமுங் காட்டிச் சும்மா விருக்கும்**

**சூட்சுமத்தில் மாட்டி விட்டான்**

**துன்பம் இறந்தன இன்பம் இறந்தன சோதி**

**சோதி சிவசோதி.**

ஆசான் அருளால் ஆசானான யோகர் சுவாமிகள் ஒருநாள் "எங்கேயாவது வேர் விராயைப் பார்" என செல்லப்பர் ஏசித்துரத்தினார். யோகர்சுவாமிகள் கொழும்புத்துறை பிள்ளையார் கோவில் முன் இருந்த இலுப்பை மரத்தை தமது இருப்பிடமாக கொண்டார். இவ்விடம் மிகவும் புனிதமானது. நன்னியர் என்ற முரட்டுப் பக்தர் ஒருவர் செல்லப்பசுவாமிகளை ஒருநாள் இந்த இலுப்பை மரத்தில் கட்டி வைத்து பால் பழம் பஞ்சாமிர்தம் வைத்து செல்லப்பரைக் குளிப்பாட்டினார் செல்லப்பரும் நல்லூரானுக்கு அபிசேகம் செய்தது காணும்; விடடா விடடா என்று சொல்லி நன்னியர் வழங்கிய புத்தாடை பூண்டு அவ்விடத்திலிருந்து அகன்றார். மேலும் சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாண வருகையின் போது குதிரை வண்டியில் இவ்வழியால் செல்லும் போது "இரு ஒரு பாலைவனத்து பசுந்தரை" என அவ்விடத்தில் நின்று கூறினார்.

ஒருநாள் நல்லூரான் திருவிழா உற்சவத்தில் முருகன் மயில்வாகனத்தில் வெளிவீதியுலா வர வெளியே வரும் போது யோகர்சுவாமிகள் "நல்லூரான் இன்று நன்றாக நனையப் போகிறார்" எனக் கூறினார். அப்போது செல்லப்பரும் பின்னால் நின்று கொண்டிருந்தார். ஆனால் யோகர் சுவாமிகள் தம்குரு செல்லப்பரை காணவில்லை. உடனே செல்லப்பதேசிகர் "உப்பிடி நல்லூரிலை பண்ணினவை பல பேர்" எனக் கூறினார். ஆனால் அன்று வடக்கு வீதியில் நல்லூரான் வரும் போது நன்றாக நனைந்துதான் உள்ளே சென்றார்.

ரமண மகரிசிக்கு அண்ணாமலையான் குருவாயமைந்தது போல செல்லப்ப தேசிகருக்கு நல்லூரானே குருவாயமர்ந்தார் எனக் கூறலாம். தேரடிச் சித்தரென பலர் போற்றும் செல்லப்பர் தமது 55ஆவது வயதில் தமது வேடத்தைக் கலைக்க முடிவெடுத்தார். சுகவீனமென கொட்டிலில் படுத்திருந்தார். யோகர் சுவாமிகளும் மற்றையோர் போல் செல்லப்பரைப் பார்க்கச் சென்று படலையைத் திறந்தார். "யாரடா படலையிலே" எனக்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கர்ச்சித்த செல்லப்பர் "பாரடா வெளியில் நின்று" என்று அதட்டினார். யோகர்சுவா மிகள் படலையைச் சாத்தி விட்டு அவ் விடத்தை விட்டகன்றார்.

செல்லப்பருடன் இரவில் தங்கும் அயலவரிடம் "இன்று இங்கு ஒரு புதினம் நடக்கும். நீ வருவாயோ" என செல்லப்பர் கேட்டார். ஆனால் அந்த அயலவர் அன்றி ரவு செல்ல முடியவில்லை. அடுத்த நாள் காலை அவர் சென்று பார்த்த போது செல்லப்பதேசிகர் சிறுகுழந்தையைப் போல் விரலொன்றை வாயில் வைத்து காலொன்றை மடித்து நடராச பாவத்தில் இருக்கக் காணப்பட்டார். செல்லப்பர் சமாதி வைக்கும் முறையிலும் அகப்படா மல் இருந்தார். அவர் திருவுடல் அக்கினி யிலேயே சங்கமித்தது.

சுவாமிகளின் நினைவாலயம் அவரது உறவினர்களான திரு. கனகரத் தினம், திரு.கனகசபாபதி ஆகியோரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. செல்லப்ப ரின் குருபூசை பங்குனி அச்சுவினியிலும் மாதப் பூசைகள் அச்சுவினி நட்சத்திரத் திலும் சிறப்பாக நடைபெறுகின்றன. தேர டியிலும் அவ்வேளை, அடியார்களால் நற்சிந்தனை ஓதல், பூசை என்பன நடத் தப்படுகின்றன.

**"குரு பக்தியே பெரும் பேறு**
**அதைக் கொண்டாடி கொண்டாடி நீயாறு".**

## நல்லூர்க் கந்தனின் உள்வீதிப் பிரகாரத்தில் ...

நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலத்தில்
மாலைத் திருவிழாவின் போது உள்வீதியில்
பின்வரும் ஒழுங்குமுறையில் சுவாமி வலம்வருவார்.

| | | |
|---|---|---|
| 14ம் திருவிழா | தவில் வாத்தியம் | பாம்பு வாகனம் |
| 15ம் திருவிழா | தேவாரத் திருமுறை பாராயணம் | ஆட்டுக்கடா |
| 16ம் திருவிழா | புல்லாங்குழல் | சிங்கம் |
| 17ம் திருவிழா (கார்த்திகை) | பஞ்சரத்தின கீர்த்தனை | தண்டிகை |
| 18ம் திருவிழா | சல்லாரி | இடும்ப வாகனம் |
| 19ம் திருவிழா | வேதமந்திர பாராயணம் | தங்கமயில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ, தமிழ் இனம் வாழ...

**கணபதி மகேசன்** (SLEAS II)
**சைவநெறித் தொண்டர் கழகம்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

ஓர் இனம், மொழி, சமயம், பண்பாடு, வாழ்க்கைநெறி, இலக்கண, இலக்கியம், சமயசாத்திர தோத்திரங்கள், சிற்பம், ஓவியம், சித்திரம், ஆடல் பாடல், தாள லயம், பண் முதலிய யாவற்றையும் உள் ளடக்கிய ஒரு கட்டுக்கோப்பான சமூகத் துக்குத் தமிழ் என்று பெயர்.

இது கல்தோன்றி, மண்தோன் றாக் காலத்துக்கு முன் தோன்றியது; உலகளாவியது இன்றளவும் தன்னி லைமை குன்றாது; பொலிந்து விளங்கு வது. ஆன்மீகமாகட்டும், கடவுள் கொள் கையாகட்டும், அறிவியல் கலை, கலா சார துறைகளாகட்டும், ஆங்கெல்லாம் தனித்தியங்கும் தன்மை வாய்ந்தது. கல்வி மொழியாக விளங்குவதற்கு வேண்டிய எல்லாத் தகைமையும் கொண்டது. பேறு, இழவு, இன்பமொடு பிணி மூப்புச்சாக்காடு இவையனைத்தும் என்றும் மாறா. சைவ சித்தாந்தம் என்னும் தமிழ் தத்துவத்திலே உள்ளடக்கப் பெற்றுள்ளது. ஆன்ம ஈடேற் றத்துக்கும் கடவுள் வழிபாட்டுக்கும் என ஏராளமான தோத்திரங்கள் சாத்திரங்கள் தமிழ் மொழியிலேயே உள்ளன. பக்தி மார்க்கத்திலே திழைத்த சிவனடியார்கள் புறமனத்தால் எங்குமே காண இயலாத எம்பெருமானைக் கண்டும், கேட்டும், கதைத்தும் காரியங்கள் நிறைவேற்றியும் பெற்ற இன்பத்தை இசை வடிவாக, பக்தி மொழியாக, செம்மொழியாக, இன்ப அன்பு மொழியாக, அருளிப் போந்தனர்.

எம் இறை தென்னாடுடைய சிவன், அவனே எந்நாட்டவர்க்கும் இறைவன் உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரிய நம் பெருமானை வழிபாடு செய்வதற்கு பூசை செய்வதற்கு அயல்மொழி, அயல் மந்தி ரம், அயல் வழக்கு அயலவன் வேண்டிய தில்லை அன்பு, அருள், ஆற்றல், இன்ப இசை நிறைந்த நம் தோத்திரங்கள், சாத்திரங்கள் மட்டுமே போதுமானவை.

உலகில் எந்த இனத்தின் தாய் மொழியும் பூசை வழிபாட்டு மொழியும் வேறுபட்டு, மாறுபட்டு, முரண்பட்டு விள ங்குகின்றவோ அந்த இனம் அருள், பொருள், அரசியல் துறைகளிலே சீரழி யும், சிதைவுறும் புத்த மதத்திலே பூசை வழிபாட்டு மொழி பாளி. இஸ்லாமிய பூசை வழிபாட்டு மொழி அரபு. தமிழரின் பூசை வழிபாட்டு மொழி சமஸ்கிருதம்.

ஒரு காலத்திலே இந்திய உப கண்டம் முழுவதும் பரவியிருந்த புத்த மதம் மொழி முரண்பாடு காரணமாக இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டது. உலகத்திலேயே ஆகக் கூடிய சனத்தொகையைக் கொண்ட சீனப் புத்தமதம் கம்யூனிசத்துக்கு இரையாகி விட்டது. இதனிடையில் இன்று கிறிஸ்தவ இஸ்லாம். மதங்கள் ஊடுருவி வருவதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் காணலாம். அங்ஙனமே ஏனைய தென்கிழக்காசிய நாடுகளில் பரவியிருந்த புத்தமதம் கிறிஸ்தவ இஸ்லாமிய பரம்பலால் அழிக்கப்படுகின்றது.

முன்னர் தென்கிழக்காசிய நாடுகளெங்கும் பரவியிருந்த தமிழினம் இன்று அங்கு இல்லை. அவர் கிறிஸ்தவ இஸ்லாமியராய் மதம் மாறி, இனம் மாறி விட்டனர். தமிழரின் பூசை வழிபாட்டு மொழி தமிழாக இருந்திருந்தால் இந்த அழிவு எம் இனத்திற்கு ஏற்பட்டிருக்காது.

இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்கத் தமிழர் நிலையும் இதுவேதான் இதனை உணர்ந்த கிறிஸ்தவர் தாம் செல்லும் இடமெல்லாம் மக்கள் மொழியிலேயே சேச் வழிபாட்டை நடத்தி வருகின்றார்கள் அதனால் அந்த மதம் பல்கிப் பெருகி வளர்ந்து வருகிறது. தற்காலத்திற் தென்னாபிரிக்கத் தமிழர் மத்தியில் ஒரு புத்துணர்ச்சி உண்டாகி வருகிறது. அவர் தாய்மொழியிலே பூசை வழிபாடு செய்யும் முயற்சியில் பரவலாக ஈடுபட்டு வருவது ஒரு நல்ல சகுனமாகும்.

இதனை நாமும் பின்பற்றுவது நம் இனத்தின் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும். கடந்த 30 ஆண்டுகளில் நாம் பல்லாயிரம் மக்களைப் பலிகொடுத்தும் அகதிகள், ஊனமுற்றவர் எனப் பலவகையிலே துன்பப்பட்டது போதும். இனியாவது எமது தாய்மொழியிலே பூசை வழிபாட்டை மேற்கொள்வோமாக.

பல்வேறு நாடுகளில் பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாக கொண்ட இஸ்லாமியர் அனைவரினதும் வழிபாட்டு மொழி அரபு ஆகும். எவ்வளவு வேகமாக அந்த மதம் பரவி வந்ததோ, வருகின்றதோ அதே வேகத்தில் அந்த மதத்தவர், இனத்தவர், அழிந்து வருகின்றார்கள். அளவுக்கதிக சனப்பெருக்கம் பஞ்சம் பட்டினி, பயங்கரவாதம் போர் அனர்த்தங்கள் குண்டுத் தாக்குதல்கள், இதுவும் தாய்மொழி வழிபாட்டு மொழிகளுக்கிடையே உள்ள முரண்பாட்டினால் உண்டானவை எனலாம்.

இன்று இன்னும் சில வழிகளில் தமிழ் அழிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

1) மதமாற்றம், கீழ்மட்டத்திலே மட்டுமன்றி மேல் மட்டத்திலும் தீவிர மதமாற்றம் இனமாற்றம் நடந்து வருகின்றது.
2) தமிழ் மண்ணிலே, தமிழ்த் தாயின் வயிற்றிலே தமிழனாகப் பிறந்து, தமிழ் மண்ணிலே வாழ்ந்து மடியப் போகும் தமிழர் சிலர் தமது பிள்ளைகளுக்கு ஆங்கில மூலம் கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இன்னும் சிலர் தமது பாலர்களை சிங்கள ஆங்கிலச் சிறுவர் பாடசாலைகளுக்கு, அனுப்புகிறார்கள்
3) பல்லாயிரக் கணக்கான மக்கள் போர் அனர்த்தங்களால் பாதிக்கப் பெற்றுள்ள நிலையில் கலங்கிய குளத்திலே மீன் பிடிப்பது போல, கிறிஸ்த மிசனரிகள் பராமரிப்பு என்ற பெயரில் மதமாற்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்டு வருகின்றனர். தட்டிப்கேட்பதற்கு ஆள் இல்லை.., அமைப்பு இல்லை.., வல்லவன்வாழ்வான் என்ற நிலையில் நம் தமிழினம்.

தமிழகத்தல் முழத்துக்கொரு கோயில், கோயில் நிருவாகம்.. சைவ இந்து மன்றங்கள், சனசமூக நிலையங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், மேடைப் பேச்சாளர், எழுத்தாளர்.

"கூட்டத்திற் கூடிநின்று கூவி பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி – கிளியே
நாளில் மறப் பாரடி"

நந்தமிழினம் நீடுழி வாழ வேண்டுமானால் வீட்டுமொழி, நாட்டுமொழி, தொடர்புமொழி தமிழாகட்டும்.., பாடசாலைக்கல்வி.. தமிழ் மூலமாகட்டும் கோயிற்பூசைகளை, சிவபூசை வழிபாட்டைத் தமிழன் தானே தனது மொழியில் இயற்றட்டும் சர்வதேசத் தமிழர் வழிபாடும் தமிழாகட்டும். திருக்குறளும் திருமுறைத் தோத்திரங்களும் எமது அடுத்த பரம்பரையின் கட்டாய பாடமாகட்டும் ஆக அவர் எங்கிருந்தாலும் வாழலாம்.

இது உறுதி, சிவன்மேல் ஆணை

"முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல் தந்து உணர்வென்றருளாய்"

## 2010 நல்லூரில் ...

1. நல்லூர்க் கந்தனின் உள்வீதிப் பிரகாரம் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்டது.
2. நல்லூர் ஆலய முன்றலில் உள்ள மணிமண்டபத்தில் ஆறுமுக நாவலர் சிலையை மீளவும் வைப்பது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபையின் மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் 24.08.2010 அன்று கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் யாழ் மாநகரசபையின் முதல்வர் திருமதி யோ.பற்குணராசா மற்றும் சபை உறுப்பினர்கள் உட்பட சைவசமய அபிமானிகள் பலரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் நாவலர் மணிமண்டபத்தின் வெளிப்புற மதில் சுவரை அகற்றுவதெனவும், நாவலர் மண்டபத்தில் வைக்கப் பட்டுள்ள நாவலர் சிலையை மீளவும் மணிமண்டபத்தில் வைப்பதெனவும் நல்லூர் ஆலயத்தின் தெற்கு வீதியில் நாவலர் மணிமண்டபத்தை புதிதாக அமைத்த பின் அதில் நாவலர் சிலையை பிரதிஷ்டை செய்வதெனவும் தற்போது இருக்கின்ற நாவலர் மணிமண்டபத்தை அகற்றுவது எனவும் உத்தேசமாகத் தீர்மானிக் கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரை புனித நகராக்குவோம்!

**ஜெ. தயாபரன்** B. A (Spe) Dip in Edu.
**ஆசிரியர், யா /மானிப்பாய் இந்துக் கல்லூரி.**

"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"! என்பது ஆன்றோர் கூற்று. ஆனால் இன்று கோயில்கள் எங்கு இருக்கின்றதோ அதன் அருகில் குடியிருக்க வேண்டாம் என்று கூறும் அளவிற்கு கோவில்கள் பெருகி வருகின்றன. ஏற்கனவே இருக்கின்ற பெரிய கோவில்களைக்கூடப் போற்றிப் பாதுகாக்க வழியின்றி நாடு இருக்கும் சூழ்நிலையில் தெருவிற்குத் தெரு, மூலைக்கு மூலை, வீட்டிற்கு வீடு கோவில்கள் புதிதுபுதிதாக எழுகின்றன. கோவில்கள் கட்டப்படுவது ஏதோவொரு வகையில் நல்ல விடயமாக இருப்பினும் அச்செயல் காலப்போக்கில் இந்துமதத்தின் பெருமையையும், சிறப்பையும் சீர்குலைத்து தெய்வீகத்தின் புனிதத் தன்மையைக் கெடுப்பதாகக் காணப்படுகின்றது.

கோவில்களை அமைப்போர் அதற்கு வருமானம் பெற வழியின்றி உழவு இயந்திரங்களின் மேல் அலங்கரித்துத் தெருவுக்குத் தெரு சென்று உண்டியல்களைக் குலுக்கிச் சென்று பிச்சாடனோற்சவம் போன்று கடவுளே யாசிக்கும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். ஐந்தாறுபேர் கூட, கூடிநின்று கும்பிட முடியாத சிறிய கோயில்களில் கூட தேர் கட்டி இழுக்க வேண்டும் என நிதி சேகரிக்கும் கூட்டம் கடைகடையாய் நெற்றிப்பட்டையுடன் போலி வேடதாரிகளாய் வலம் வருவது கண்கூடு.

இத்தனைக்கும் மத்தியில் அக்கோவில்கள் தோன்றியிருக்கும் இடங்களைப் பார்த்தால் புனிதத்திற்கு அப்பாற்பட்டதாகக் காணப்படும். புதிய நகராக்கம், வீதி அகலமாக்குதல் போன்ற செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் போது இவ்வாலயங்களை இவர்கள் எங்கு இடம் நகர்த்தப் போகிறார்களோ என்பது கடவுளுக்கே தெரியும்.

மிகவும் முற்பட்ட காலங்களில் எமது கோவில்கள் மன்னர்களால் அமைக்கப்பட்டு நிலங்கள் போன்றவற்றை மானியமாக வழங்கி செல்வங்களைக் கொடை செய்ததன் காரணமாக அவை இறையாலயங்களாக மட்டுமன்றி பெரும் சன சமூக சேவை நிலையமாக, வைத்திய சாலையாக, அநாதைமடமாக, அன்னதான சாலையாக அறக்கொடை நிலையமாக மட்டுமல்லாமல் மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் சமரச நீதிமன்றங்களாகத் தொழிற்பட்டன. ஆனால் இன்றோ கோவில்களைச் சாட்டி சமூகச் சண்டைகளும், வீம்புச் சண்டைகளும் பெருகி நிற்கின்றன. அத்துடன் கோவில்களை நிர்வகிக்கும் நிர்வாகிகளிடையே பதவிப் போட்டிகள் மலிந்து நீதிமன்றுகளில் வழக்குகள் குவிந்துள்ளன. அது மட்டுமன்றி ஆலயத்தில் வைத்து பூஜித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கும் விக்கிரகங்கள், கூட இன்று நீதிமன்றின் பாதுகாப்பில் வைத்துப் பாது காக்கும் நிலை காணப்படுகின்றது.

இலங்கையில் பஞ்ச ஈச்சரங்கள் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே தோற்றம் பெற்று சிறப்பிடம் பெற்றதைப் போலவே முருக வழிபாட்டில் கதிர் காமம், செல்வச்சந்நிதி, நல்லூர் போன்ற ஆலயங்கள் மிகவும் பிரபலம் பெற்ற புகழ் வாய்ந்த ஆலயங்களாகும். இவற் றில் உருவவழிபாட்டிலும் வேல் வழிபாடே தனிச்சிறப்பு பெற்றது. இவற்றில் கதிர் காமம், செல்வச்சந்நிதி போன்ற ஆலயங் களின் பூசை முறைகள் கிராமிய வழி பாட்டம்சங்கள் நிறைந்து விளங்குகின் றன. ஆனால் நல்லூர் ஆலயமோ நகர மயப்படுத்தப்பட்ட இடத்தில் அமைந்து இருப்பதன் காரணமாக. நவகாலத்திற் கேற்ப பூசை வழிபாட்டு முறைகளில் ஒரு புதுமை இருப்பதை அவதானிக்க முடி கிறது. கதிர்காம ஆலயத்தினை கற்பூரக் கந்தன் என்றும், மாவிட்டபுரம் முருகன் ஆலயத்தினை அபிஷேகக்கந்தன் என வும், செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தினை அன்னதானக்கந்தன் எனவும் குறிப்பிடுவதுபோல நல்லூர் முருகனை செல்வக்கந்தன், அலங்காரக்கந்தன் என வும் போற்றி வணங்குவர். அந்தளவிற்கு ஆலயச்சூழல் ஒரு செல்வச் செழிப்பு மிக்க அழகிய பிரதேசமாகக் காணப்படு கின்றது. நகரத்தின் மத்தியில் ஆறு வேளைப் பூசைகள் குறித்த நேரம் பிச காமல் பூசையாற்றுவதுடன், குறிப்பிட்ட சிறுதொகைப் பணத்தினை, செலுத்து வதன் மூலம் நைமித்திய கிரிகைகளை ஆற்ற முடியும். அதுமட்டுமல்ல, இன்றும் கூட ஒரு ரூபாவிற்கு அர்ச்சனை செய்யக் கூடிய நிலை உலகில் வேறு எங்கும் காணமுடியாது. வேறு எவர் நிதியுதவியி னையும் நாடாத முகாமைத்துவம், இரு பத்தைந்து நாட்கள் பெருந்திருவிழா நடத்தும் பெருமையும் இவ்வாலயத்திற்கு உண்டு.

நல்லூரியின் தனிச்சிறப்பு என்றுமே நேரம் பிசகாத பூசை முறைதான். சாதா ரண பூசையிலிருந்து பெரிய மகோற்சவம் வரை அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்ட நேர அட்டவணையில் ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதுவே நல்லூருக்கு அளவிடமுடியாச் சிறப்பினை ஏற்படுத்து கின்றது.

திருவிழாக் காலங்களில் வெளி நாடுகளில் இருந்து வந்த வெள்ளைக் காரர்கள் அதிக எண்ணிக்கையில் இங்கு வருகை தருவது மட்டுமன்றி அவர்களில் ஆண்கள் வேட்டியும், பெண்மணிகள் பட்டுச் சேலையும் அணிந்து பக்தி பூர்வ மாகக் கலந்து கொள்வது எம்மவரையே பரவசப்படுத்துகின்றது.

சாதாரணமாக, ஊரில் உள்ள கோயில்கள் மகோற்சவம் ஆரம்பிக்கின் றது என்றால் அவ்வூர் மகிமை பெறும், புனிதம் பெறும் மகிழ்ச்சி கொள்ளும். ஆனால் நல்லூர் ஆலயத் திருவிழா என் றால் முழு இலங்கை நாடும் மகிழ்ச்சி கொள்ளும். யாழ் குடாநாடே பெருமை கொள்ளும். நல்லூரோ புனிதம் பெறும். இன, மத, மொழி, சாதி வேறுபாடின்றி இலங்கையிருந்து மட்டுமல்லாமல் இலங் கைக்கு அப்பாலிருந்தும் அடியவர் கூட் டம், பக்தி பூர்வமாக - பெருந்திரளாகக் கலந்து கொள்வதென்றால் அது நல்லூ ரிலே தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனேகபாகு மன்னனால் புனருத்தாரணம் செய்யப்பட்டு மானியம் வழங்கிப் போற்றிக் காத்த பெருமை பெற்ற இவ்வாலயம் இன்றிருக்கும் தோற்றப் பொலிவையும் மிகப் பிரமாண்டமான அதன் கட்டிடத்தையும் பார்க்கும் போது அரசரால் கட்டப்பட்டதென்றே எண்ணத் தோன்றும் இலங்கையில் வேறு எக் கோவிலுக்குமில்லாத அழகும் பெருமையும் இதற்கு உண்டு.

இதன் காரணமாக எங்கு கோவில்கள் புதுப்பிக்கப்பட்டாலும் நல்லூர் ஆலயத்தின் முன் மண்டபத் தோற்ற அமைப்பையே பின்பற்றுகின்றனர். அந்தளவிற்கு நல்லூர் ஆலய முன் மண்டபத்தோற்றம் தனி அழகு. அது மட்டுமன்றி ஒவ்வொரு மகோற்சவ விழாவிற்கு வரும் அடியவர், ஆலயத்தில் ஏதாவது புதுமாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று எதிர்பார்ப்பர். அந்தளவிற்கு கட்டிடங்களில் ஓர் புதுமை எழில் தோன்றும்.

ஆலய வாசல் தாண்டி உள்ளே சென்றால் அங்குள்ள மண்டப அமைப்புக்கள், சித்திரங்கள், 108 தாண்டவங்களைக் காட்டும் ஒவியங்கள், முருகனின் திருவிளையாடல்களைக் காட்டும் காட்சிகள் அழகாக வரையப்பட்டுள்ளன. உட்பிரவாக மேற்கூரை முழுவதும் தனி சீமெந்து கொங்கிறீற்றுக்களால் உயர்ந்த கலைத்திறன் ஊட்டும் வகையில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டதுடன் நெடிய சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட தூண்கள் அழகினை மேலும் அணி செய்கின்றன.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் அருளாட்சி நடத்தும் தங்க வேல், அதன் ஒளி அருளொளியாகி பக்தர் துன்பங்களைத் தீர்க்கின்றது.

ஆலயத்தின் வசந்த மண்டபம், தெற்குவாசலிலிருந்து பார்க்கும் எவரையும் கொள்ளை கொள்ள வைக்கும். ஒரு அரச அரண்மனை மண்டபம் இப்படித் தான் இருக்கும் என எண்ணுமளவிற்கு அழகிய வேலைப்பாடுகள் நிறைந்து விளங்குகின்றன.

ஆலய உள்வீதியில் தங்கமுலாம் பூசப்பட்ட வேலைப்பாடுகளும், ஐம்பொன் கலசங்களும் தெய்வீக எழிலையூட்டுவன.

மேலும் பழனி ஆண்டவர் பக்கம் அமைக்கப்பட்டிருக்கும் தீர்த்தக் கேணி ஆலயத்திற்கு மேலும் பெருமை சேர்க்கின்றது. உட்பிரவாகத்தில் மலர்கள் பூத்துக்குலுங்கும் நந்தவனமும் இயற்கை வனப்பினை ஊட்டுகின்றது.

ஒவ்வொரு திருவிழாக்காலங்களிலும் ஆலயம் நிறந்தீட்டப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சிதருகின்றது. ஆலயத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் பிரமாண்டமான மதில் முழுமையான பாதுகாப்பையும் அழகையும் ஊட்டுகின்றது. வெண்மணல் பரப்பப்பட்டு அகலமாக்கப்பட்ட வீதிகளும் அவ்வீதிச் சுற்றாடலில் காணப்படும் சைவஆலயங்களும் தெய்வீக அருளாட்சியை வழங்குகின்றன.

நல்லூர் ஆலயத்தின் தேரடியில் சித்தர்கள் தோன்றி அருளாட்சி செய்த பூமி இது. ஐந்தாம் குரவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தோன்றி சைவமும் தமிழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துணர்ச்சி பெறச்செய்த புண்ணிய தலம் இது. இன்னும் எவ்வளவோ சைவம் தழுவிய ஒழுக்க சீலர்கள், கல்விமான்கள், தனவந்தர்கள், இறையடியார்கள், தொண்டர்கள் பூஜிக்கும் தலம் இது. அத்தனைக்கும் மேலாக சங்கிலியமன்னன் ஆட்சி செய்து போற்றிக் காத்த தலை நகரம் இதுவே!

இதனாலன்றோ தேரடிச் சுவாமிகள் "நல்லூர் முருகன் உலாவரும் திரு வீதி மண்ணெடுத்து நெற்றியில் பூசினால் நோய் பிணி பாவவினையறுமே" என்றார்.

மகோற்சவ காலத்தில் இருபத்தைந்து நாட்களும் அருளாட்சி செய்யும் முருகன் கந்தனாக, ஆறுமுகனாக, காத்திகேயனாக, தங்கவேலாயுதனாக, பழனியாண்டவராக, மணவாளக்கோலத்தில் எழுந்தருளி பல்வேறு வாகனங்களில் அருட்காட்சி கொடுத்து நிற்பார். விசேடமாக மஞ்சம், கைலாசவாகனம், வேல் விமானம், சப்பரம், தேர் போன்ற விழாக்கள் நடைபெறும் காலங்களில் காவடிகளும், கரகங்களும், கற்பூரச்சட்டிகளும், நேர்த்திக்கடன் செய்வோரும், அடிஅழிக்கும் வனிதையரும், அங்கப் பிரதிஷ்டை செய்யும் ஆடவரும், மேளதாள வாத்தியங்களும், வேதபாராயணம் செய்யும் சிவாச்சாரியர்களும் நிறைந்து பக்திப் பெருவெள்ளத்தினை அடியார்மனங்களில் ஊற்றெடுக்கச் செய்வர்.

விசேடமாக சிவாச்சாரியர்களால் முருகன் பிள்ளைத் தண்டில் வைத்துக் தூக்கி வரும் சிறப்பு அற்புதமானது. தேர்திருவிழாக் காலங்களில் அடியார்கள் கூட்டம் இலட்சத்தைத் தாண்டும். முருகன் பக்தர்களின் தலைக்கு மேலால் மிதந்து வருவது போன்ற காட்சி கண் கொள்ளாதது.

முன்பு யுத்த சூழல் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்திருந்தபோது பல ஆலயங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்கியிருந்தன. இருந்தபோதிலும் நல்லூர்க் கந்தனின் அருள் வெள்ளத்தால் இவ்வாலயம் காப்பாற்றப்பட்டமை புதுமையிலும் புதுமையே அதனை விடப் புதுமை யுத்த காலத்தில் குண்டுமழை பொழிந்த உலங்கு வானூர்தி நல்லூர்த் தேர்த்திரு விழாவில் இறைவன் எழுந்தருளும் போது ஆகாயத்திலிருந்து மலர் தூவி நின்ற காட்சி சைவ உள்ளங்களின் முன்னைய வடுக்களை ஆற்றுவதாக அமைந்ததுடன் விண்ணுலகத்திலிருந்து மலர் மாரிசொரியும் காட்சியை நினைவூட்டுவதாயும் அமையும்.

இவ்வாறு பெருமை மிகு ஆலயம் இன்று மேலும் பெருமை சேர்ப்பது போல் மிகப் பிரமாண்டமான ஒன்பது வாசல்களைக் கொண்ட இராஜகோபுரம் தெற்கு வாசலில் அமைக்கப்பட்டு வருகின்றது. அதே நேரம் அலைகடலின் மத்தியில் வீற்றிருக்கும் நயினை நாகபூஷணி ஆலயத்திலும் மிகப்பிரமாண்டமான இராஜ கோபுரம் அமைக்கப்பட்டு வருகின்றது. தாயும், தனயனும் ஒருவரை ஒருவர் பார்த்து ஒன்று சேர்ந்து எம்மக்களுக்கு விடிவைத் தரப் போகிறார்கள் என்பது சைவ மக்களின் பேரெதிபார்ப்பாகும்.

இத்தனைக்கும் இவ்வாலயத்தை அகிலம் போற்றும் திருத்தலமாக நெறிப் படுத்திக் காத்துவரும் குமாரதாச மாப்பாண முதலியார் பெரிதும் போற்றப்பட வேண்டியவர். அவரின் சிறந்த திட்டமிடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், ஒழுங்குக் கட்டுப்பாடுகள், தீர்க்க தரிசனங்கள் எல்லாம் முருகனின் திரு விளையாடல்களே. அவரின் மனதில் எழும் சில முடிவுகள் காலத்தின் தேவைக் கேற்ப பாராட்டப்பட வேண்டியவை.

இவ்வாறாக இவ்வாலயம் ஈழத்து ஆலயங்களுக்கு ஓர் முன்னுதாரணமா கவும், சிறந்த மாதிரியாகவும் அமைந்து விளங்குகின்றது.

எனவே திருவிழாக்காலத்தில் ஆலயத்தின் புனிதத்தன்மையைப் பேண வும் இறை பக்தியை நிலை நாட்டவும் சுவாமி விபுலானந்தர் கூறியது போல்

**"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த**
**மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவே**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த**
**மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.**

என்பது போல் எமது உள்ளக் கமலங் களையும் கூப்பிய கரங்களையும் இறை வனிடம் அர்ச்சித்து இறைநாமத்தை உச் சரித்து வாழ்த்திப் பாடி வரங்கேட்கும் அன்பர்களுக்கு கந்தன் ஆறுமுகனாகி காட்சி கொடுத்து அருளாட்சி நடத்து கிறான்.

அப்படிப்பட்ட புண்ணிய திருத் தலத்திலே இறைவனின் குழந்தைகளா கிய நாம் இன, மத, மொழி, சாதி பேத மின்றி ஒருமித்த மனத்துடன் கூட வேண் டும், பக்தி மட்டுமன்றி நல்லூர் ஆலயத் தின் பெயரால் சமூக நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஏனெனில், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண லாம் என்பது போல் யுத்த சூழ்நிலை களால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வி லும் ஒளியேற்றப்பட வேண்டும். கோவில் உயருவதுபோல் எமது உள்ளங்களும் உயர்வடைய வேண்டும். முற்கால ஆல யங்கள் எவ்வாறு சமூக மேம்பாட்டு நிறு வனமாக உன்னத நிலையில் காணப்பட் டதோ அதைப் போன்று வழிகாட்ட நல் லூர்க்கந்தன் திருத்தலமும் யாழ் மாந கரசபையும் சைவப்பெரியார்களும் முயல வேண்டும். நல்லூர் ஆலயச் சுற்றாடலில் அழிந்து போய் பராமரிப்பின்றி எச்சங் களாகக் காணப்படும் சங்கிலிய மன்னனின் நல்லூர் இராசதானி மீளவும் புனரமைக் கப்பட்டு எதிர்கால இளஞ்சந்ததியினருக் குக் கையளிக்கப்படல் வேண்டும். இல்லையெனில் தொல்பொருளாய்வு செய்யப்பட்டு பழைய வரலாற்று எச்சங் களாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

எனவே சங்கிலிய மன்னன் போற் றிக் காத்த இவ்ஆலயத்தையும், ஆல யத்தின் சுற்றாடலில் உள்ள எழிலுறு ஆலயங்களையும் அரண்மனை வர லாற்று எச்சங்களையும் பாதுகாத்து எமது தொன்மை வரலாறுகளை ஆவ ணப்படுத்துவதன் மூலம் இலங்கையில் புனித நகர் அனுராதபுரம் மட்டுமல்ல நல்லூரும் தான் என்று முழு உலகத் திற்குமே பிரகடனப்படுத்துவோம்!

**பகைவனை மன்னிக்காதவன் உலகில் அடையக்கூடிய உயர்ந்த இன்பத்தை இன்னும் அறியாதவனே! - வால்டர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயம் கண்ட விஞ்ஞானம்

சைவப்புலவர் செ. பரமநாதன்
தாவடி

தற்காலத்தில் அமெரிக்கா, யப்பான், ரஷ்யா போன்ற நாடுகள் பல முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றன. ஆனால் இந்த நாடுகளின் சரித்திரம் தொடங்குவதற்கு முன்னரே விஞ்ஞானத்தின் எல்லையைக் கண்ட நாடு இந்தியாவாகும். இங்கு அனேகமாக வாழ்பவர்கள் இந்துக்களே! இந்த உண்மையை நம் மக்கள் உணர்ந்து மீண்டும் விஞ்ஞானத்தின் அதி உன்னத நிலையை அடைய வேண்டியது அவசியமாகும். எமது முன்னோர்கள் கண்ட விஞ்ஞான சாதனைகளை நினைவு படுத்தி புதிய சாதனைகளைப் படைப்போம்.

வெடித்துச் சிதறும் பொருட்களும், விஷக்காற்றுகளும் பஞ்சேந்திரியங்களைத் திடீரெனப் பாதிக்கின்ற புகைகளும், அவற்றிற்கான பாதுகாப்பு முறைகளும் யுத்தத்தில் உபயோகப்படுத்தியிருந்தனர்.

சீனாவில் 12ஆம் நூற்றாண்டில் வெடி மருந்துகளைக் கண்டு பிடித்தனர். ஆனால் இந்தியாவில் அதற்கு முன்னரே சக்தி மிக்க அக்கினி சுர்ணம் உண்டாக்கியிருந்தனர்.

அர்த்த சாத்திரம், சுக்கிர நீதி சாரம் என்னும் நூல்களில் நெருப்பைக் கக்கி எதிரிப் படையைத் தாக்குகின்ற ஆக்னேயாஸ்திரத்தின் விபரம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில், கரையிலும் கடலிலும், வானிலும் செல்லும் ஊர்திகள் உபயோகித்திருந்தனர். என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. இராவணன் பாவித்த புஸ்பக விமானமும், குபேரன் பாவித்த விமானமும் எம் ஞாபகத்திற்கு வருகின்றன

தஞ்சாவூரில் சரசுவதி மஹால் என்ற பழையகால நூல் சேமிப்பு நிலையம் உள்ளது. அங்குள்ள மயமதம் என்ற நூலில் அணுவைப் பற்றியும், பூமியின் இயல்பு பற்றியும் நகரங்களுடையவும், கிராமங்களுடையவும் அமைப்பு விதிகள் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளன.

சுஸ்ருதம் என்ற ஆயுர்வேத நூலில் அறுவைச் சிகிச்சைக்கான கருவிகள் உருக்கில் இருந்து செய்யும் விபரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ சாரதேந்தர வைத்திய ரத்னம் என்ற நூலில் பலவித அறுவைச்சிகிச்சைகள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது.

இருக்கு(ரிக்) வேதம் பத்தாம் அத்தியாயத்தில் 190ஆம் சரத்தில் சூரியனின் கதிர்களைப் பாதரசத்தில் சேர்த்து அமைக்கும் விமானத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. வேதங்களில் எட்டுவிதமான விமானங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த சுகதேவன் இயற்றிய



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுகதேவன் சம்கிதையில் ஆவி இயந்திரங்களும், மற்றும் பல விதமான இயந்திரங்களின் விபரங்களும் அடங்கியுள்ளன. சமராங்க சூத்திரம் என்ற நூலில் விமானம் மற்றும் பலவித இயந்திரங்களும் அமைக்கும் முறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இராமாயணத்தில் புஸ்பக விமானம் பற்றிய குறிப்புகள் உள்ளன.

வேதங்களில் யசுர் வேதத்தில் சோதிடம் கணக்கிட்டிருக்கும், திதிகள், கிரகணம், அயனங்கள் முதலியன மிகவும் சரியாகவுள்ளன என்று விஞ்ஞானம் நிருபித்து விட்டது.

கிரகங்களின் அமைப்புகளையும், அவற்றின் இயக்கங்களையும், இந்துக்கள் மிகத் துல்லியமாகக் கணக்கிட்டிருக்கின்றனர். ஓர் ஆண்டில் வானத்தில் நடைபெறும் இயக்கங்களைச் சரியாகக் கணக்கிட்டுப் பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் பிற மதத்தினர் கொண்டாடும் பண்டிகைகளை இந்த இருபத்தொராம் ஆண்டில் கூட சரியாகக் கணக்கிட முடியாமல் நாட்களைப் பலமுறை மாற்றி வைத்துக் குழப்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு வட்டத்திற்குச் சமமாக சதுரமைத்தலைப் பற்றி நமது ரிஷிகள் குறிப்பிட்டுள்ளனர். ஒரு செங்கோண முக்கோணத்தின் கர்ண பக்கத்தின் மேலுள்ள சதுரத்தின் பரப்பு மற்ற இரண்டு பக்கங்களின் மீது வரையப்படும் சதுரங்களின் பரப்புகளின் கூட்டுத்தொகைக்குச் சமம் என்பது பித்த கோரஸ் தேற்றம், கல்ப சூத்திரம் என்ற நூலில் (கி.மு. 500) போதாயனர் இதனைத் தெளிவாகக் கூறியுள்ளனர். ஆகவே இத்தேற்றத்தை போதாயனர் தேற்றம் என்றே கூற வேண்டும்.

12ஆம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் தோன்றிய பாஸ்கராசாரியர் கணிதப் புலமையோடு கவிதைகளும் படைத்தார். எண்கணிதத்தையும், வடிவ கணிதத்தையும் லீலாவதி என்ற புத்தகத்திலும், இயல் கணிதத்தை பீஜ கணிதம் என்ற புத்தகத்திலும் விளக்குகிறார். பூச்யம், எண்ணிலி என்பனவற்றின் தத்துவங்களையும் அவர் தெளிவாக விளக்கியுள்ளார். பூச்சியத்தையும் ஒன்றிலிருந்து ஒன்பது வரையும் உள்ள எண்களையும் கண்டு பிடித்தோர் இந்துக்களே.

ஒரு வருடத்தைப் பன்னிரண்டு மாதங்களாகப் பிரித்துக் கணக்கிட்டவர்கள் இந்துக்களேயாகும். சமஸ்கிருதத்தில் தசம் என்றால் பத்து. அதிலிருந்து டிசம்பர் மாதத்தையும், ஒன்பது என்று பொருள்படும் நவம் என்ற வார்த்தையில் இருந்து நவம்பர் என்ற மாதமும், எட்டு என்று பொருள்படும் அஸ்டம் என்ற வார்த்தையில் இருந்து அக்டோபர் என்ற மாதமும் ஏற்படுத்தப்பட்டன. மேலைத் தேசத்தவர் ஒரு வருடத்தைப் பத்து மாதங்களாகவே முன் கணித்தனர்.

இந்து சமயத்தைப் பின்பற்றி பிற் காலத்தில் இரண்டு மாதங்களைச் சேர்த்தனர். அவை யூலியசீசரின் ஞாபகமாக யூலை மாதமென்றும், அகஸ்டஸ் என்ற சக்கரவத்தியின் பெயரின் ஞாபகமாக அகஸ்ட் என்றும் பெயரிடப்பட்டனர்.

வானத்து கோள்களின் பெயர்ச்சிகள் மனித வாழ்க்கையைப் பாதிக்கின்றது என்பதைத் துல்லியமாகக் கணித்தவர்கள் இந்துக்களேயாவர். அதன் அடிப்படையில் தான் சோதிடத்தை உருவாக்கினர். கிரகணங்களின் போது சூரிய, சந்திர கிரகணங்களின் ஆட்சி ஜீவராசிகளின் மீது மிக அதிகமாக இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைக் கண்டறிந்தனர். இன்று, விஞ்ஞான பூர்வமாக முழுக்க முழுக்க உண்மை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. உலகில் ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு கால கட்டத்தில் அண்டங்களில் இருந்து வந்த டையும் காஸ்மிக் ரேய்ஸ் மனிதனின் வாழ்க்கையையும் உடலமைப்புகளையும், இயல்புகளையும் தீர்மானிக்கின்ற உண்மைகளைச் சோதிட சாத்திரங்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்தியாவில் போர் ஆயுதங்களைத் தயாரிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். இன்றைய எதிரியின் ஊர்தி எந்தத்திசை சென்றாலும் துரத்திச் சென்று தாக்குவதைப் போல அன்று பல அஸ்திரங்களை இராமன் உபயோகித்திருந்ததாக இராமாயணம் கூறுகின்றது.

மகாபாரதப்போரின் முடிவில் பாண்டவர் மீது கோபப்பட்ட அசுவத்தாமா பிரமாஸ்திரம் என்ற அணு ஆயுதத்தை வீசியதால் இராஜஸ்தான் பாலைவனமாக மாறியதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

காலையில் குளித்து அரச மரத்தைச் சுற்றும் பழக்கம் இந்துக்களிடையே உள்ளது. அரச மரத்திலிருந்து ஓசோன் அதிகமாக வெளிவருகிறது. இது உடல் நலத்திற்கு நல்லதென்றும் மலட்டுத் தன்மையினை நீக்கும் சக்தி இதற்கு உண்டெனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படும். ஒரு நாளில் 24 மணி நேரத்தில் பிரம்ம முகூர்த்தத்தில் மனிதனைத் தாக்கும் கிரணங்களும் சத்த அலைகளும் எந்த வேளைகளையும் விட சாந்தமடைந்திருக்கிறது. இவ்வேளையில் இறை வழிபாடு செய்வது மிகுந்த பலனை அளிக்கிறது.

தியானத்தின் மூலம் இரத்த அழுத்த நோய் குறைகின்றது. மேலும் பல்வேறு நோய்களை தியானம் அகற்ற வல்லது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

சூரிய சித்தாந்தத்தின்படி உலகம் தோன்றி கலியுகத்திற்கு முன் 198 கோடியே 67 இலட்சத்து 67 ஆயிரத்து 998 ஆண்டுகள் ஆகின்றது என்று இந்து சமயக் கணக்குகள் கூறுகின்றன. இன்றைய விஞ்ஞானிகள் உலகத் தோற்றத்தை ஆராய்ச்சி செய்து பார்த்தனர். இந்துக்களின் காலக்கணக்கு விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளுக்கு மிகவும் ஒத்திருக்கிறது. அதே நேரத்தில் பிற சமயங்கள் அனைத்தும் விஞ்ஞானத்திற்குத் தோற்றுப் போயின.

இந்து சமயம் கண்ட வைத்திய முறைகளில் பாதிப்பு ஏற்படுவதில்லை. எல்லாம் இயற்கையோடு இணைந்தவையாகவே உள்ளன. இதற்கு மேலாக இந்து வைத்திய முறையில் கூறப்பட்ட விரதங்கள், யோகாசனங்கள் மூலம் நோய்களே ஏற்படாமல் காக்க முடிகிறது.

மேலைநாட்டு மோகத்தில் மயக்கமுற்ற நமது ஆட்சியாளர்கள் மனித குலத்திற்கு ஏற்ற நமது வைத்திய முறைகளைப் புறக்கணித்ததால் இதுவரை யாராலும் அறியப்படாத பல்வேறு நோய்களுக்கு நமது மக்கள் ஆட்பட்டிருப்பதை நேரடியாகக் காண்கின்றோம். இந்த ஆபத்திலிருந்து தப்புவதற்கு மீண்டும் நமது வைத்திய முறைகளை ஆராய்ந்து மேம்படுத்துவது இன்றியமையாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகம் ஸத் என்பது ரிக் வேதவாக்கியம். இது உள்ளது ஒன்றே என்று கூறுகின்றது. ரிக் வேதம் உலகத்தில் முதன் முதலில் உண்டான நூல் என்பது எல்லோரும் ஒத்துக் கொண்ட உண்மை.

உலகத்தில் பல்வேறு பொருட்கள் இருப்பதை நம் கண்முன்னே காண்கின்றோம். இருப்பினும் உள்ளது ஒன்றே என்று வேதம் கூறுகின்றது. சாதாரண மனிதன் இதை ஏற்றுக் கொள்ள முடியாது தான். அணுவினை ஆராய்ச்சி செய்தவர்களில் தலைசிறந்தவரும் நோபல் பரிசு பெற்றவருமான ஆர்தர் ஐஸன்பெர்க் என்பவர் மேற்கூறிய இந்து சமயக் கூற்றில் அடங்கியுள்ள உண்மையை வியந்து பாராட்டியுள்ளார்.

இன்று அணு ஆராய்ச்சி செய்த அனைத்து விஞ்ஞானிகளும் அணுக்கள் தங்களுள் வேற்றுமை இல்லாதவையே என்று நிரூபித்திருக்கின்றனர். அக்கினியிலும், காற்றிலும், தங்கத்திலும் இது போன்று கோடானு கோடி பொருட்களிலும் இருக்கின்ற அணுவும் ஒன்றேதான்.

எல்லா மாறுபட்ட பொருட்களின் அணுவும் ஒன்றேதான் என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ளும் பொழுது உலகில் இருப்பதெல்லாம் ஒன்றுதான். ஒன்றன்றிப் பிறிதில்லை என்ற உண்மை விளங்குகின்றது.

இந்தப் பேருண்மையை முதல் முதலில் கண்டு வேதம் படைத்தவனே விஞ்ஞானிகளில் தலை சிறந்தவன் என்று ஆர்தர் ஐஸன்பெர்க் மனம் திறந்து பாராட்டியுள்ளார்.

விஞ்ஞான ரீதியாக உலகம் தோன்றி எறக்குறைய 200 கோடி ஆண்டுகளாகின்றன என்று கணக்கிட்டு இருக்கின்றனர். அமைதியாக இருந்த அண்டகோசம் வெடித்துச் சிதறி உலகம் உருவாகியுள்ளதாகவும், விரிவு எல்லையை அடைந்ததும், அனைத்தும் மையத்தை நோக்கி மீண்டும் வந்து ஒன்றாகச் சேர்ந்துவிடும் என்றும் ஒரு முடிவுக்கு விஞ்ஞானிகள் வருகிறார்கள். இதுதான் விஞ்ஞானிகள் கண்ட நவீன கண்டுபிடிப்பாகும்.

ஆனால் இது இந்துக்களுக்குப் புதிது அல்ல. இந்து சமயத்தின் தோற்றம் விரிவு ஒடுக்கம் என்ற செயல்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இத்தோடு நிற்காமல் இவ்விதத் தோற்றம் விரிவு ஒடுக்கங்கள் ஒரு முறை அல்ல பலமுறை தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. என்று இந்துசமயங் கூறுகின்றது. இந்த உண்மையை இன்னும் விஞ்ஞானம் கண்டு பிடிக்கவில்லை. இனிமேல் தான் கண்டு பிடிக்க வேண்டியுள்ளது.

ஆங்கில மருத்துவத்தால் இன்று தீர்க்க முடியாத பல நோய்களை இந்து சமயம் கண்ட யோகாசன முறைகள் பிரணாயாமம், சூரிய நமஸ்காரம் முதலியன தீர்த்து வருகின்றன.

இந்துக்கள் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் சடங்குகள் சம்பிரதாயங்கள், வழிபாட்டு முறைகள் முதலியன அனைத்தும் விஞ்ஞான மயமானவை என்பதனை இன்றைய உலகம் கண்டு வியப்படைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் பார்வையில் வாழ்க்கை பற்றிய நோக்கு

க. சிவலிங்கம்
ஓய்வுபெற்ற திட்டமிடல் பணிப்பாளர்,
வடக்கு - கிழக்கு மாகாணம்.

## முகவுரை

இதுவரை காலமும் கற்றும், கேட்டும் பல அறிஞர்களோடு கருத்துப் பரிமாற்றம் செய்து வந்த காரணத்தாலும், முதுமையின் தாக்கத்தினை முழுமையாக உணரும் தருணம் வந்துவிட்டபடியாலும் சில பல கருத்துக்களை முன் வைப்பதோடு "யாழ்ப்பாண முகாமைத்துவக் கழகம்" அமைப்பினால் கடந்த 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பங்குபற்றியதிலிருந்து இவ்விடயத்தில் மேலும் சீர் செய்ய வேண்டும் என்ற அவாவும் எமக்குண்டு. இதனால் கருத்துப் பரிமாற்றம் நம்மவர் மத்தியில் ஏற்பட்டு கொழும்பிலுள்ள "Help Age" போன்ற எமது பாரம் பரிய சமய ஆன்மீகப் பின்னணியுடனான அமைப்பொன்று யாழ் மண்ணில் உருவாக வேண்டும் என்ற கனவையும் இக் கட்டுரை வெளிக்கொணர்கிறது.

"வயோதிபம் என்பது இயலாமையின் முகவரி" என்ற மூத்த பிரஜைகள் சேவை மேம்பாட்டிற்கான, சமூகநலத் துறையினரின் (விழிப்புணர்வு) வழிகாட்டியில் குறிப்பிட்ட குறுகிய வட்ட வரையறை எண்ணக்கருவை உடைத்து உண்மையாகவே மூத்த பிரஜைகளின் உளநல மேம்பாடுகளுக்கான வழிமுறைகள் பற்றிய அறிவை நாம் பெறவேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஒக்டோபர் முதலாம் திகதியை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1991ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. எனினும் முதுமையின் தவிர்க்க முடியாத பிரச்சினைகள் பற்றிய சமூக விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

தாயுமான சுவாமிகளின் பாடற் தொகுதியில் அற்புதமான பதிகத்தை அண்மையில் படித்தேன். இப்பாடல்,

**"வந்தவரவை மறந்துலகாய் வாழ்ந்து கன்ம**
**பந்தமுற உன்னைப் படிப்பிக்கக் கற்றவர் யார்**
**இந்த மதி யேனுனக்கிலை கென்மதிகேள்**
**சந்ததநெஞ்சே பரத்திற் சாரினின்பம் உண்டாமே"**

என்ற இப்பாடலுக்கு செல்லத்துரை சுவாமிகளின் பொழிப்புரையில்,

மனமே! நாமோ இவ்வுலகில் வந்துள்ள முக்கியமான காரியத்தை அடியோடு மறந்துவிட்டு, இவ்வுலக மாய வாழ்வு கொண்டு மயங்கிப் பாழான துர்க்கன்மத்தால் கட்டுண்டு முட்டுண்ண நினைக்க கற்பித்தவர் யார்? இனியென் போதனையைக் கேட்பாய். என்னைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாகக் கொண்டே எப்போதும் பரத்துவத்தைச் சாதித்திடுவையேல் உத்தமமான நித்திய சுகமுண்டாம்.

## முதியோர் பார்வையில் வாழ்வின் நோக்கம் என்ன?

"உன் முழு வாழ்க்கையையும், அதன் செயல்களை எல்லாம் பேருண்மையின் பேரானந்தப் பிரதிபலிப்பாக ஆக்கிக் கொள்".

"நம்முள்ளிருக்கும் அவனை உணர்ந்து அவனுடைய கரங்களில் விருப்புடன் கூடிய விளையாட்டுக் கருவியாக இருப்பதே முழுச் சுதந்திரமும் ஆனந்தமுமாகும்." சுவாமி ராமதாஸ் அவர்கள்,

**எங்கும் நிறைந்திருந்த ஈசவெள்ளம்**
**என்னகத்தே**
**பொங்குகின்றது என்றெண்ணிப் போற்றி**
**நின்றாள் போதுமடா**
**யாதுமாம் ஈசவெள்ளம் என்னுள் நிரம்பியது**
**என்று**
**ஓதுவதே போதுமதை உள்ளுவதே போதுமடா!**

என்கின்றார்.

சுவாமி ராமதாஸ் தமது பிரார்த்தனையில், "பிரபஞ்சத்தின் இறைவா, உலகங்களைப் படைத்து, காத்து அழிப்பவனே, உனது திருவடிகளில் பூரணமாக சரணடைகின்றேன்.......... என்னை உனக்கும் உன் தொண்டிற்குமாக ஏற்றருள்வாயாக. என்னை என்றென்றைக்கும் உன்னுடையவனாக ஆக்குவாயாக". இதுவே கீதையில் கூறப்பட்ட சரணாகதி தத்துவமாகும்.

சுவாமி விவேகானந்தர் கூறியது போல "ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று ஒரு சொந்த இலட்சியத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அதை நிறைவேற்ற பெருமுயற்சி செய்ய வேண்டும் உலகத்தில் உள்ள எந்த ஆணும், பெண்ணும் ஒரே மாதிரியான மனமும், திறமையும், செயல்புரியும் சக்தியும் பெற்றவர்களாக இல்லை. அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான இலட்சியங்களைக் கொண்டவர்களாகவே நிச்சயம் இருப்பார்கள். அவர்களை நிந்திப்பதற்கு நமக்கு உரிமை கிடையாது".

தேக ஆரோக்கியம் குன்றுமளவிற்கு மனச் சுகாதாரமும் மெல்லமெல்ல கீழ் செல்கிறது (Decline) ஏனைய பல குறைபாடுகளும் முதியவர்களுக்கு ஏற்படும் போது தனிமையும், ஆதரவின்மையால் பாதுகாப்பின்மையும் ஏற்படுகிறது. புதுச்சமுதாயத்தின் புதுவாழ்க்கை முறைகளினால் ஒதுக்கப்பட்ட உணர்வும் மற்றும் கவனிப்பாரற்ற தன்மைகளினால் சுய கௌரவத்தின் குறைவும் காணப்படுவதோடு இருண்ட வெறுமையுணர்வு முதியோரிடம் காணப்படுகிறது. இன்று கூட்டுக் குடும்ப முறைகள் அருகிவிட்ட சமூகத்தில் ஏற்படும் இந்நிகழ்வுகளால் முதியோர் இல்லங்கள் பரவிவிட்டன. ஆயினும் இவற்றின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டனவாயும் குறை சொல்வோர் பாதிக்கப் படுவோம் என்ற அச்சமும் பொதுவாக நிலவுகிறது.

## சமூகத்தில் முதியவர்கள்

ஆரோக்கியமான முதியவர்களை உடைய சமூகம் உண்மையிலேயே பாக்கியம் செய்த சமூகமாக அமைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியவர்களின் அறிவும், அனுபவமும் (பட்டறிவு) இளைய தலைமுறையினருக் கும், அடுத்த சந்ததியினருக்கும் மிகவும் பயனுடையதாக அமைந்துவிடும்.

முதியவர்களின் இந்த அனுகூ லத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்ள சமூகம் முன்வரவேண்டும். நீங்கள் உங் கள் பகுதி கிராமத்தவர்களுடனும், இளை ஞர்களுடனும் முதுமையை எவ்வாறு பய னுடைய முதுமையாக்கலாம் எனக் கல ந்து ஆலோசித்து சிறிய பிள்ளைகளுக் குக் கதை சொல்லுதல், ஊர் விஷயங் களில் கலந்து கொள்ளுதல், ஆன்மீகப் பணிகளில் பங்கேற்றல் என அவர்களை ஈடுபடுத்தலாம். இவற்றினூடாக அனுப வங்களும், அறிவும் அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படுவதோடு சமுதாயத்தின் விழு மியங்களும் நியமங்களும் கூட நிலை நிறுத்தப்படுகின்றன.

இம் மனோரீதியான மற்றும் ஆத் மிக தாக்கங்களை எப்படித் தாங்குவது? எங்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் சவால்.

"Old age reminds us that time is running short in our earthly experience and calls on us to make appropriate preparations for our further evolution.

To reap the full spiritual benefits of renunciation that come with ageing, elderly people should use all their human faculties to help and inspire others; by example:- by sharing information, knowledge and wisdom; by prayer for others and above all, by giving love, without asking anything in return.

Dr. Steven Brena in
Self Realization Winter - 2009.

எமது வாழ்க்கை அனுபவத்தின் கால இழப்பை முதுமை ஞாபகப்படுத்து கிறது. ஆதலால் நாம் தகுந்த ஆயத்தங் களைச் செய்து மேலும் பரிணாம வளர்ச் சியை அடையலாம்.

இந்த பரிணாம வளர்ச்சி என்பது எப்படியிருக்க வேண்டும்? எவ்வாறு முது மையை பயனுடைய முதுமையாக்க லாம்? நாம் இது பற்றிச் சிந்திக்கக் காலம் வந்துள்ளது.

மாஸ்லோவின் படிமுறை அமைப் புத் தேவைக் கோட்பாட்டின்படி மனித னுக்கு அவனது வாழ்க்கையில் பின்வ ரும் தேவைகள் உள்ளன.

1. பௌதீகத் தேவைகள்
2. பாதுகாப்புத் தேவைகள்
3. சமூகத் தேவைகள்
4. கௌரவத் தேவைகள்
5. சுய அந்தஸ்து தேவைகள்

என்பவையாகும்.

சுய அந்தஸ்து தேவை என்பது பொதுவாக யாது - எதைக் குறிக்கின்றது என்பது பற்றிய போதுமான விளக்கம் சொல்ல முடியவில்லை.

ஆயினும் பாரதியார் பாடியது போல,

**"வயது முதிர்ந்து விடினும் – எந்தை**
**வாலிபக் களை என்று மாறுவதில்லை**
**துயரில்லை மூப்பும் இல்லை – என்றும்**
**சோர்வில்லை, நோய் ஒன்று தொடுவதில்லை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயமில்லை பரிவு ஒன்றில்லை – எவர்**
**பக்கமும் நின்று எதிர்ப்பக்கம்**
**வாட்டுவதில்லை**
**நயமிகத் தெரிந்தவன் காண் – தனி**
**நடுநின்று விதிச் செயல் கண்டு மகிழ்வான்".**

## நீண்ட வாழ்வு எதற்கு?

மனிதன் தன் பரிணாம வளர்ச்சியை அடைய வேண்டும். இதற்கு மூச்சுப் பயிற்சி முக்கியம். இது மட்டுமன்றி சில முயற்சிகள், சில பயிற்சிகள், விளக்கங் களையும் நாம் பெற வேண்டும். இவற் றின் மூலம் கீழ்நோக்கி இருக்கும் ஆற் றல்களை நாம் மேல்நோக்கிச் செலுத்த லாம்.

சமீப காலமாக இவை பற்றிய நல்ல விளக்கங்களை அறிஞர் திருக் குறள் இராம.கனகசுப்புரத்தினம் அவர் கள் மெகா டி.விஇல் தந்து வருகிறார் கள். அவரைப் போன்றே சின்மய மிஷன் சுவாமிகளும் முதியவர்களின் முதுமை யைப் பற்றிய பல சமய ஆத்மீக கருத் துக்களை இந்தியாவிலுள்ள அவர்களின் சுவாமிகள் மூலம் பயிற்சி கொடுத்து வருகிறார்கள் என அவர்கள் வெளியிடும் "தபோவன்" சஞ்சிகையில் தரப்பட்டுள் ளது. நல்ல கருத்துக்களை உள்வாங்கி இவற்றை தமிழில் பரப்பிட இத்துறைசார் அறிஞர் பெருமக்கள் முயற்சி செய்வார் கள் என எதிர்பார்க்கலாம்.

Help age நிறுவனத்தார் பிற மாவட்டங்களில் பலவகை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தியுள்ளனர். அவர்களால் முதியவர்களுக்கான பல செயற்திட்டங்களை நடாத்தக்கூடிய நிறு வன அமைப்பும் உள்ளது. யாழ் மாவட் டத்தில் இது போன்ற அமைப்புக்கள் உருவாக வேண்டும். இவை மூலம் எமது சூழலுக்கும் சமய ஆன்மீக கலாசாரத் திற்கும் இணைவான திட்டங்களை நடை முறைப்படுத்த முடியும்.

இவ்விடயம் சார்பாக யாழ் மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை நட வடிக்கைகளை வருங்காலத்தில் மேற் கொள்ளும்படி மிகவும் வினயத்துடன் எதிர்பார்க்கிறோம்.

வாழ்க்கையில் எந்த நிலையில் இருப்பவர்களும் ஆன்மீக வாழ்க்கை வாழலாம். சுபதாரண வாழ்க்கையையே தெய்வீக வாழ்க்கையாக மாற்றலாம் என்ற நம்பிக்கையை அளிப்பது கீதை. "மூப்பு மற்றும் மரணத்திலிருந்து விடுபடு வதற்காக என்னைச் சரணடைய யார் முயற்சி செய்கிறார்களோ அவர்கள் இறைவனையும் ஆன்மா மற்றும் கர்மம் பற்றிய அனைத்தையும் அறிகிறார்கள்." (அத். 7.29)

மரண வேளையில் இறை நினைவு எழவேண்டுமானால் வாழும் காலத்தில் செய்ய வேண்டியது என்ன என்பதை இந்தச் சுலோகம் கூறுகிறது. என்ன செய்ய வேண்டும்? ஒரு கணமும் இடை யீடின்றி இறை நினைவுடன் வாழ வேண் டும். கடமைகளையும் தவறாமல் நிறை வேற்ற வேண்டும். "எப்போதும் என்னை நினைத்தவாறு போர் செய். என்னிடம் மனத்தையும் புத்தியையும் சமர்ப்பணம் செய்வதால் சந்தேகமின்றி என்னையே அடைவாய்." (அத். 8.7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அர்ஜுனா! மனத்தால் வேறு எதையும் நாடாமல், மேலான ஒளிமய மான இறைவனைத் தியானிப்பவன் அவரை அடைகிறான்". (அத். 8.8)

உயர்ந்த மகான்கள் மீண்டும் பிறவியை எடுப்பதில்லை. ஏனையோர் முயற்சியைக் கைவிடாது தமது கர்ம வினைகளை முடிந்தளவிற்கு குறைத்துக் கொள்ள சாதனை செய்ய வேண்டும். இதற்கு வழிகாட்டியாக தகுந்த குருவை அடைய வேண்டும். அல்லாவிடின் இறை வனிடமே நேரே பிரார்த்தனை செய்து அவன் காட்டும் வழியில் செல்லலாம். சுவாமி ராமதாஸரின் அருள் மொழிக ளில் கூறியவாறு, "இறைவனை இடை விடாமல் தியானிக்க அவனிடம் அதற்கு அருளுமாறு பிரார்த்தனை செய்து கொள் வோம். இந்தப் பிரார்த்தனையை நிறை வேற்றும் பொருட்டு இறைவன் நமது வாழ்க்கையில் மாறுதல்களைக் கொண்டு வந்து நாம் எப்பொழுதும் அவனிடம் தொடர்பு கொள்ளச் சாத்தியமாவதற் கான நிலைகளை அளிக்கிறார். இங்கு அவர் ஓர் எல்லையற்ற கருணையாளன் என்பதை நமக்கு நிரூபிக்கின்றார்.

காலத்தைப் பயன்படுத்தும் எவரும் தம் செயல்களில்தான் முதுமையும் இள மையும் தங்கி இருப்பதை உணர்ந்து கொள்ள முடியும். முதுமை என்பது வயதை ஒத்தது அன்று; மனதை ஒத்தது. உன்னால் முயன்றால் முடியும் என்ற தத்துவங்கள் பெரிதும் கைகொடுக்கும். முகிழ்வுக்கான மாத்திரைகளும் மனதில் எழும் எண்ணங்களிலே தான் உண்டு. மாலையும், முதுமையும் முதிர்ச்சியின் வடிவங்களே. காலையின் இயற்கை அழ கினை ரசிப்பது போல் முதுமைவாழ் வினைச் சுவைப்பதில் தான் மகிழ்ச்சி யான வாழ்வு உள்ளது.

## கடவுளைக் காணமுடியும்

இயற்கை தெய்வாம்சமாக உலகில் பரவியிருப்பதையும் அதன்மீது மனித வர்க்கம் வைத்துள்ள நம்பிக்கையையும் கொண்டு மட்டும் இன்றி, கனவுகள், அசரீரி வாக்குகள், சூசகங்கள் இவை மூலம் ஏற்படும் எச்சரிக்கைகளாலும் கடவுள் இருப்பதைக் காண முடிகிறது.

– சோக்ரட்டீஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேகாந்த நிலையில் சிவத்தமிழ் அன்னைக்கு யாழ் விருது

**இ.இரத்தினசிங்கம்**
**செயலாளர், சைவசமய விவகாரக் குழு,**
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**



சைவசமய விவகாரக் குழுவினது சமயப் பணிகளின் ஆரம்பகாலத்தில் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தவர்களில் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் முதன்மையானவர். சைவசமய விவகாரக் குழுவினால் சமய அறிவுப்போட்டி, பண்ணிசைப்போட்டி, பேச்சுப்போட்டி போன்றவற்றை நடாத்தி வருகின்ற போது இப்போட்டிகளில் முதலிடங்களைப் பெறுபவர்களுக்கு வழங்க வேண்டிய தங்கப் பதக்கங்களின் பெறுமதியை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சார்பாக அன்னை அவர்கள் வழங்கி எம்மை ஊக்குவித்து வந்தார்கள்.

நல்லைக் கந்தனின் உற்சவகாலத்தில் எமது குழுவினால் நடாத்தப்பட்டுவந்த சமயம் சார்ந்த போட்டிகளுக்காக இடம் பெற்ற பரிசளிப்பு வைபவத்தில் (ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்திருக்கும் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில்) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தமையை நாம் என்றும் மறக்க முடியாது.

விவகாரக் குழுவினது சமயம் சார்ந்த அனைத்துப் பணிகளிலும் அன்னையின் பங்களிப்பும் ஆசியும் கிடைத்துவந்த காரணத்தினால் விவகாரக்குழு தனது வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்துவைக்க முடிந்தது.

வறிய நிலையில் வாழ்ந்த சிறார்களுக்காக மகளிர் இல்லம் ஒன்றினை அமைத்து உண்டியும், உடையும் கொடுத்து, கல்வி புகட்டி சமுதாயத்தில் அவர்கள் எவருக்கும் சளைத்தவர்கள் இல்லையென்பதை உறுதியாக நிரூபித்துக் காட்டிய வள்ளல் எங்கள் அன்னை.

நல்லைக்குமரன் மலரினை எமது குழு வருடந்தோறும் வெளியிட்டு வந்த போது 1993 ஆம் ஆண்டு முதல் அவரின் இறுதிவரை அம்மலருக்கான ஆசிச் செய்தியை வழங்கி எமது பணியை ஊக்குவித்ததோடு, முதற் பிரதியையும் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சார்பாகப் பெற்று வரும் பாரம்பரியம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

நல்லூர் ஆலய வீதியில் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற காணியில் மணி மண்டபம் ஒன்றினை அமைத்து சமய நிகழ்ச்சிகளையும், திருமண வைபவங்களையும், இசைக்கச்சேரிகளையும், அன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானத்தினையும் நடாத்துவதற்கு வித்திட்ட பெருந்தகை எங்கள் அன்னை ஆவார்.

அன்னையின் பிறந்த நாளன்று யாழ்.போதனாவைத்தியசாலைக்கு தேவை யான மருத்துவ உபகரணங்களை வழங்கி இன்னலுறும் நோயாளர்களின் நலனில் தம்மையும் அர்ப்பணித்து ஒளிவிளக்காக எங்கள் அன்னை பிரகாசிக்கின்றார். ஆழ மாகச் சிந்தித்து அறப்பணியாற்றுவது எங் கள் அம்மாவுக்கு கைவந்த கலையாகும்.

அன்னையின் சமயப் பணிகளை யும், அறப்பணிகளையும் உற்று நோக்கிய யாழ்ப்பாணம் மாநகரசபையானது கடந்த 1997ஆம் ஆண்டில் "சைவத்தமிழ்ப் பேரரசி" என்ற பட்டத்தினை வழங்கி அவரைக் கௌரவித்தமை எமக்கெல்லாம் பெருமை தருகின்றதொரு நிகழ்வாகும்.

அல்லல்படுவோருக்கு அளவிறந்த உதவிகளை உள்ளன்போடு உவந்தளி த்து நாவலர் பெருமானுக்கு அடுத்ததாக சமயப்பணி, தமிழ்ப்பணி மற்றும் சமூகப் பணிகளில் மிகுந்த நேர்மையோடும், அர்ப் பணிப்போடும் தமது இறுதி மூச்சுவரை செயற்பட்டமைக்கு இறைவனின் அருளும், ஆசியும் அவருக்குப் பக்கபலமாக இருந் திருப்பதை உய்த்துணர முடியும்.

காலங்கடந்த போதிலும் நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவின் போது தேகாந்த நிலையில் வழங்கப்படும் யாழ் விருது அன்னையின் சமய, சமூகமற்றும் அறப்பணிகளுக்குக் கிடைக்கப்பெற்ற பெறுமதி மிக்கதோர் முத்திரையாகுமென எண்ணி நாம் அனைவரும் ஆறுதல் அடை வோமாக!

## பிரார்த்தனை

எனது எந்தச் செயலும் பிரார்த்தனையின்றி நடைபெறு வதில்லை. உடலுக்கு உணவு தேவையாய் இருப்பதைப் போன்று ஆன்மாவிற்குப் பிரார்த்தனை தேவைப்படுகிறது. கொஞ்ச நாட்களுக்கு மனிதன் உணவு இல்லாமல் கூட உயிர் வாழலாம். ஆனால், கடவுள் நம்பிக்கை கொள்ளும் மனிதன் ஒரு கணம் கூடப் பிரார்த்தனையின்றி உயிர் வாழ இயலாது.

– மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## மன்றக் கீதம்

ஈழத் தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ் நகராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே
(ஈழத் தமிழர் ...)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் நகரம்
ஆரியச் சக்கர வர்த்திகள் நகரம்
பூதலம் புகழும் சங்கிலி மன்னன்
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம்
(ஈழத் தமிழர் ...)

ஏழிசை வல்லோன் யாழிசை பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழிசூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம்
(ஈழத் தமிழர் ...)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதர ராவர்
நமதரும் பண்பும் கலை கலாசாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல்வரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

அழகிய வீதி கடைத்தெரு கல்வி
அளித்திடு கூடம் தொழில்நிலை யங்கள்
எழிலுறு கோட்டைக் கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொண்டவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

வேத மந்திரம் கீத மொலிக்கும்
விளங்கிடு குர்ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும்
(ஈழத் தமிழர் ...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குமரன் மலர் - 2010

மணங்கமழ பங்களித்த உங்களுக்கு

## எங்கள் உளங் கனிந்த நன்றிகள்

2010ம் ஆண்டின் "நல்லைக்குமரன்" பதினெட்டாவது மலருக்கு ஆசிச் செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய ஆதீன முதல்வர்கள் மற்றும் சைவப் பெரியோர்களுக்கும்

பல சிரமங்கள் மத்தியிலும் தம் ஆக்கங்களைத் தந்து தவிய அறிஞர் பெருமக்களுக்கும் மலருக்கு விளம்பரங்கள் தந்து, உந்து சக்தியாக இருந்த வர்த்தகப் பெருமக்களுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் இவ் விளம்பரங்களைப் பெற்றுத்தந்துதவிய ஓய்வுபெற்ற சிறாப்பர் திரு.த. கனகசபை அவர்களுக்கும்,

மலரை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய மதி கலர்ஸ் அச்சகத்தினருக்கும் இன்னும் பல வழிகளிலும் மலரின் வரவுக்குப் பங்களித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நல்லைக்குமரனின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன்தாள் இறைஞ்சுகின்றோம்.

**சைவசமய விவகாரக்குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்
# 2010

## விளம்பரங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதி கலர்ஸ்
# பிறிண்டர்ஸ்

ஓ(f)வ்செற், ஸ்கிறின், டிஜிற்றல் பிறிண்டிங்
அன் டிசைனிங்.

# MATHI COLOURS PRINTERS

## திருமண அழைப்பிதழ்
## காட்சியறை





## WEDDING CARD SHOWROOM

15/2, Murugesar Lane, Nallur, Jaffna.

e-mail: mathicolours@yahoo.com
Web: www.mathicolours.com

Tel: 021 2229285


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலமயில் வாகனனே! சேவற் கொடியோனே
நல்லையில் குடிகொண்டு நம்மவனரை காப்பவனே
தங்கரதமேறி காட்சி தந்திடப்பா!



நவநாகரிக மங்கையர்க்கு கண்கவரும்
புடவை ஸ்தாபனம்

அது தான்

# சரவணா புடவையகம்

புதியதோர் ஸ்தாபனம் புதுமையான புடவை
ரகங்கள் பட்டு சாறிகள் பான்சி மற்றும்
கொட்டன் சாறிகள், பஞ்சாபி, பஞ்சாபி துணைகள்
மற்றும் ரெடிமேட் ஆடைகளையும்
பெற்றக் கொள்ளலாம்.
நங்கையர் ஒருமுறை விஷயம் செய்தால்
மறுநாள் நண்பிகளையும் கூட்டி வருவீர்கள்
பலவர்ண கண்கவர் மினுங்கும் சாறிகள்
வாருங்கள்! பாருங்கள் திருப்தியுடன்
சாறி தெரிவு செய்யலாம்

# சரவணா ரெக்ஸ்

526, பருத்தித்துறை வீதி,
நல்லூர் பின் வீதி,
(சிவன்கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

T.P: 021 2221723


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரா! கந்தா!! சரவணபவா!!! நீ தந்தைக்கு உபதேசம் செய்தாயே!
நம் இனம் படும் துன்பங்களைய தங்கரதத்தில்
ஆறுமுகமாகி வீதி வந்து அரக்கர்க்கு உபதேசம் செய்திடு முருகா!!

ஆபரண தங்க நகைகள் என்றால் ஞாபகம் வருவது

# சிங்கப்பூர் ஜுவல்லறி



நவீன நங்கையர்க்கு நாகரீகத்திற்கேற்ப
நவீன நகைகள்தான் ஆசை
நவீன அழகிய சிங்கப்பூர் நகைகளுக்கு
நாடவேண்டிய இடம்.

## Sinkapoore Jewllery

93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

TP: 021 4590260

வேள்ளை மணல் பரம்பலிலே முருகன் கான மயில் மீதினிலே நடனமாடி வருகின்ற
அடியவர்கள் பாற் காவடி என்ன, கற்பூரச்சட்டி என்ன தூக்குக் காவடி என்ன
அருள்வேண்டி முருகன் திருவடிகாண வருகின்றர்கள் .



ஆம்!
சைவ பிரியர்களுக்கு ஓர் வரப்பிரசாதமான இடம்
அது தான்

# தாமோதர விலாஸ்

அன்று தொட்டு பழம் பொருமையுடன்
நீடித்து நிலைத்து நிற்கும் ஒரு
சைவ உணவகம்
இங்கு பல வகையான உணவு வகைகள், சிற்றுண்டி வகைகளை
காலை, மதியம், மாலை என சிறப்பாகி வழங்கி வருகின்றனர்.
விஜயம் செய்யுங்கள்.

401,403, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 2226867

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா முருகா!! என உன் நாமம் கூறி நான் செய் கருமமெலாம் அருள் தந்து காத்திடுவாய்

# எரிக்கணேஷ்



**விழிதான் முக்கியம் அதன் மீது விழிப்பாய் இருங்கள்**

**40 வயதை அடைந்தவர்கள் எழுத வாசிக்க கஷ்டப்பட்டால் இளைஞர் யுவதிகள் தலைவலியால் கஷ்டப்பட்டால் நிச்சயம் கண்தான் குறைபாடு.**

**இலவச கண் பரிசோதனை முகப்பொலிவுக்கு, சங்குப்பல்கட்ட, மிதப்புபல் கட்ட, பல்லுக்கு கிளிப் போட்டுக்கொள்ள நாடுங்கள்**

# ERIC GANESH

80, கே.கே.எஸ். வீதி,
சுண்ணாகம்.

546, 556, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 222 2456

91, கே.கே. எஸ். வீதி,
கொக்குவில்.



முருகா முருகா!! என உன் நாமம் கூறி நான் செய் கருமமெலாம் அருள் தந்து காத்திடுவாய்

# அரவிந் & போட்டோ



**மங்கள நிகழ்வுகளை அதிநவீன DIGITAL VIDEO Camera மூலம் வீடியோ படம் பிடித்திடவும் அதிநவீன DIGITAL புகைபடக் கருவிகள் மூலம் படம் பிடித்திடவும்**

**சிறந்த முறையில் Lamination, Album கட்டுவதற்கும்**

# Aravinth Digital's

309, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில்

# AHIEZER SUPPLIERS

கண்கவர் நிறங்களில் Indi, Malaysia விலிருந்து நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்ட அதிநவின மற்றும் சாதாரண

**Commode (கொமேட்) வகைகள்**
**Squatting Pan வகைகள் மற்றும்**
**S-Lon PE+ தண்ணீர் தாங்கிகள்**

முதலானவை விசேட விலைக்கழிவுடன் நியாய விலையில்

Duro PVC குழாய்களும் அதன் பொருத்துக்களும்
மின்சார உபகரணங்கள்
Causeway Paints
காவி வகைகள்

Bath Room Tiltles
All kind of Large Diameaters
PVC Pipe & Fitting Available
Import PVC Fittings

289, பிறவுண் வீதி, கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 5100700



கந்தா! சரவணபவ பச்சைமயில் வாகனனே உந்தனை நெஞ்சிருத்தி
உளமார உன்திருப்பாதம் வணங்குகிறோம்
வழமான வாழ்வதனை எமக்கு தந்திடுவாய்!

புதிய புதிய புடவை ஸ்தாபனங்கள் தோன்றினாலும் அன்று தோன்றிய
புடவை ஸ்தாபனத்திற்கு நிகருண்டோ அது தான்

# கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

அன்று தொட்டு பழம் பெரும் புகழோடு விளங்கும் இங்கே கண்கவர்
நவநாகரிக நங்கையர்க்கேற்ற பட்டு புடவைகள்
பலவர்ண சேலைகள், சல்வார், சிறுவர் சிறுமியருக்கேற்ற றெடிமேட் ஆடைகள் நிறைந்திருக்கிறது.
அது மட்டுமா தற்காலிக கண்ணை பறிக்கும் சாறிகள் சுடிதார்கள் நிறைய உண்டு

விஜயம் செய்யுங்கள்

201, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 222 2830



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திருநாட்டில் அபிஷேக கந்தனாய் மாவிட்டபுரத்தில் காவடி
கந்தனாய் அன்னக் கந்தனாய் செல்லசன்னதியில்
குடி கொண்ட முருகா எமை காத்தருள்வாய்!

# ஆசீர் வணிகநிலையம்

திருமண அழைப்பிதழ்களுக்கு ஏற்ற வர்ண அமைப்பான அழகிய அட்டைகள்
பாடசாலை, காரியலாலய உபகரணங்கள்
அச்சுவேலைக்குரிய பலவிதமான கடதாசிகள், பிறந்தநாள்,
கலியாண வீட்டுக்குரிய சோடனை பொருட்கள்
பலவிதமான பேனாக்கள்
எம்மிடம் குறைந்த விலையில் சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

ASEER VANIGA NILAIYAM
202A, K.K.S Road,
JJaffna.

T.P: 021 2222842
Fax: 021 2222842



ஆவணி பிறந்திட்டால் முருகன் திருவிளையாடல் ஆறுமுகமாகி
நீ தங்கரதத்தில் கோலு ஆடி வந்திடப்பா! அருளமுதம் தந்திடப்பா!!

நவநாகரிக மங்கையர் முதல் விரும்புவது
புடவை ரகங்களை
நங்கையர்க்கேற்ற புது வகையான
கூறைகள், காஞ்சிபுரம் பட்டு புடவைகள்
இன்னும் பற்பல சல்வார் கமிஸ் சோழிகிற்ஸ்
ஏன்! ஆண்களுக்கும் கூட றெடிமேட் சேட்கள், றவுசர் துணிகள் ரீ சேட்கள்
விரும்பியதை தேர்ந்தெடுக்க ஏற்ற இடம்.

# சாந்தி புடவையகம்

கிளை
சாந்தி புடவை அகம்
கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில்.
021 222 7787

சாந்தி புடவை அகம்
157, 158, நவீன சந்தை
(மின்சார நிலைய வீதி)
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2045



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் காவடி, தூக்கு காவடி, பால் குடம், கறபூரச்சட்டி ஏந்தும் பெண்கள்
நல்லூர் முருகனை நாடிவருவது ஏனோ?
முருகன் அழகை கண்டு அருள் பெறவன்றோ!

# பரிமளா ஸ்ரோர்ஸ்

42 வருட சேவையில் ....



மகப்பேற்றுத் தாய்மாருக்கும், மழலைகளின் வளர்ச்சிக்கும், பூப்பெய்திய மங்கையருக்கும்
கட்டுடல் வேண்டி நிற்கும் காளையருக்கும், விளையாட்டில் வெற்றிபெற வீரர்களுக்கும்
வீராங்கனைகளுக்கும், குடும்பத்தில் அங்கத்தவர்கள் அனைவருக்கும்
அருமருந்தாகத் திகழ்வது

நல்லெண்ணை; உலகில் முன்னணி வகிப்பது **V.S.P.**

## V.S.P. ஸ்பெஷல் லங் ஒயில்


## பரிமளா ஸ்ரோர்ஸ்

26, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. 2222785



நல்லைக் குமரனின் மலர் மணம்
பரப்ப "யாழருவி" எனும் குடிநீர்
பன்னீர் தெளிக்க நாடிடுவீர் பயன்பெற
231, கோவில் வீதியில் அமைந்துள்ள
சுவிஸ் மினரல் எனும்




**தரச் சான்றிதழுக்கமைவாகவும்**
**அடைக்கப்பட்ட குடிநீர்**
**"தூய்மையான நீரே உலகின்**
**முதன்மையான முதல் மருந்து'**

## சுவிஸ் மினரல்

231, கோவில் வீதி .
நல்லூர்.

தொலைபேசி: 021 2228122

நாளும் பொழுதும் உனை வேண்டி அழுதிட
நான் செய் கருமமெல்லாம் நன்றே
நிறைவெய்திட அருள் பாலிப்பாய்!

யாழ் நகரில் கண்ணை கவர்ந்த பான்சி ஹவுஸ்

# ஸ்ரீ ராஜன் பான்சி ஹவுஸ்



நவநாகரீக நங்கையர்க்கு நவீன அழகு சாதன பொருட்கள் நிறைய உண்டு
நவீன மங்கையர்கேற்றவாறு வடிவமைக்கப்பட்ட கவறிங் நகைகள்
பார்ப்போர் மனதை கவர்ந்திழுக்கும் பற்பல அழகுசாதன பொருட்கள்,
அன்பளிப்பு பொருட்கள், மாணவர் புத்தகப்பைகள் மற்றும்
வாசனை பொருட்கள் நியாய விலையில் கிடைக்கும்.

65, 66, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

நித்தம் கலங்கி நாம் முருகனை வேண்டி அழுதிட்டோம்
அமைதி வேண்டி நலலூர் முருகன் பதி விரைந்திட்ட அடியார்க்கு அருள் தந்து காத்திடப்பா!

ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் தயாரிப்புக்கள், இனிப்பு வகை, உற்பத்தி
மூலப் பொருட்கள், சகலவிதமான வாசனைத்திரவியங்கள்,
சாப்பாட்டு இரசாயணப்பொருட்கள், ரொபி மற்றும் பிஸ்கட் வகைகள்,
இன்னும் பற்பல உற்பத்திப்பொருட்கள்.

முன்னணி உற்பத்திகளான "சமபோச", "சமஹன்", "கண்ணா"
மார்க் கற்பூரம். டெல்மேஜ் டிஸ்றிபியூரர்ஸ் ஆகியவற்றுக்கும் "Vimal Brand" உற்பத்திகளுக்கும்
Mycola Soft drinks, "Crystal" போத்தலில் அடைக்கப்பட்ட
குடி நீர்!யாழ்நகரில் நாம் முகவராக நியமிக்கப்பட்டுள்ளோம்.

# ஸ்ரீகாந் ஏஜன்ஸ் & டிரேடர்ஸ்



161, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சுத்திரச்சந்திக்கு அருகாமை)

T.P:- 021 222 2219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் முருகன் நல்லூரில் வீற்றிருக்க
அடியார்கள் ஏங்குவது அருளுக்கன்றோ!



**மலரோ! மலரோ!! நங்கையர் நாடுவது**
**மலரே! மலரோ!!**
**எத்தனை ஆயிரம் வர்ணங்கள் மலர்களிலே!**
**அதே வர்ணங்கள் "மலர்" புடவையகத்திலும்**

மலர் தேடி வாருங்கள் அங்கே உங்கள் விருப்பத்திற்கேற்ப

சிறுவர் ரெடிமேட் ஆடைகளா
பட்டுப்புடவைகளா
சேட் சூட் துணிகளா
பஞ்சாபிகளா

அப்பப்பா! விரும்பிய தெரிவுக்கு
இங்கேதான்.

# மலர் புடவையகம்

**எல்லாமே ஒரே இடத்தில் தெரிவு செய்து,திருப்தியுடன் செல்லலாம்**

**67-A-18 பெரிய கடை, யாழ்ப்பாணம்.**
**T.P :2222791**

அழகுக்குள் அழகான மயிலேறு வேலா, துன்பம் களைந்திட நிழல் நாடி வந்தோம்
அடியார்களை கண்கொண்டு காத்திடுவாய்

**உள்நாடு வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் உறவுகளுக்கு**
**பொதிகளை , V.D.O கசட்டுக்கள் ஆவணங்கள் எதுவானாலும் துரித கதியில்**
**உரியவர் கைகளில் சென்றடையவும்,**

WESTERN UNION
Money Transfer

FedEx
Express

உலகின் எந்தப்பாகத்தில் இருந்தும் பணத்தை

# "WESTERN UNION"



மூலம் ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும்,

எமது சேவையை பெற்றவர்கள் மீண்டும் மீண்டும் தொடருகிறார்கள்.
புதியவர்கள் இடத்தைத் தேடுகிறார்கள். அவர்களுக்கு இதோ!

# திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

259, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 2227835

*e-mail:- thirumurugan@lycosmail.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகவேல் முருகவேல் உந்தன் கையில் வெற்றிவேல்

நங்கையரே! நங்கையரே! நீங்கள் விரும்புவது

அழகான பலவர்ண புதிய ஆடைகளல்லவா அலக்கழியத் தேவையில்லை

கடைகளெல்லாம் ஏறி இறங்கத் தேவையில்லை

ஒரே இடத்தில் ஒரே பார்வையில் விரும்பிய ஆடைகளைப் பெற்று

மன நிறைவோடு திரும்பலாம் நேரே வாருங்கள்



# கோபிகா

## ஆடையகம்

# Gopika Adai Aham

5/4 (3ம்), நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 2377

நல்லைக் குமரா உன் கையில் வேலுண்டு
பக்தர் உள்ளங்களில் குடிகொண்ட கவலையோ நீங்கவில்லை
முருகா நீ ஆறுமுகமாகி தங்கரதத்தில் கொலுவிருந்து
பக்தர்களின் கவலையை தீர்த்திடப்பா.

# நவீன் செரமிக்

ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக கட்டிடத்துறையில்
பெரும்பங்கு வகிக்கும்

**நவீன் செரமிக்** ஸ்தாபனத்தார்

தமது யாழ்ப்பாண வாடிக்கையாளர்களுக்கு உடனடித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு
தமது முழுநேர சேவையை ஆரம்பித்துள்ளனர்





ஏக விநியோகஸ்த்தர்கள்

மெற்றோ என்ஜினியரிங் (தனி)வது,
இல. 212 பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 0033
021 222 0044



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைந்து நினைந்து உருகி எந்தன் நெஞ்சம் நிறைந்த முருகா
நீயல்லோ கருணை கடலாகி அருள் சுரக்கும் தெய்வம்



உலகெங்குமிருந்தும் ஒரு சில நிமிடங்களில் பாதுகாப்பாக
பணத்தைப் பெற்றுக் கொள்ள இலகுவழி
யாழ்ப்பாணத்தில் MMBL உபமுகவர்

WESTERN UNION

# ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்

பணப் பரிமாற்றம்

உலகெங்குமிருந்து உங்கள் உறவினர்கள் WESTERN UNION
மூலம் பணம் அனுப்பி பணப்பரிமாற்றம் இலக்கம்
(MTCN 10 இலக்கங்கள்) கிடைத்து விட்டதா?
ஒரு சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க



## SRI MURUGAN
## TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

303,K.K.S.Road,
Jaffna.

T.P:0094-21-222 2670, 5392
Fax: 0094-21-2223214
e.mail: srimurugan@eureka.lk

நாளும் பொழுதும் முருகனை நினைத்து வேண்டு வரம் வேண்டி நிற்க
முருகா நீ தங்கரதமேறி காட்சி தந்திடப்பா!

பாடசாலைகளுக்கோ, காரியாலயங்களுக்கோ தேவையான கருவிகள்
அத்தனையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# பேப்பர் ஹவுஸ்

இதோ யாழ் நகரில் பாடசாலை மற்றும் காரியாலய உபகரணங்கள்,
அச்சுக்கூடங்களுக்குத் தேவையான பல வர்ண பற்பல காகிதாதிகள்,
மாணவ மாணவிகளுக்கு தேவையான புதிய டிசைன்களில் பைகள் ,
கவர்ச்சி தரும் அப்பியாசக் கொப்பிகள் அனைத்துக்கும் நாடவேண்டிய இடம் .



கணனி உபகரணங்கள் மற்றும் பல
பொலித்தீன் றோல் வகைகள் "அற்லஸ்" டிஸ்றிபியுடர்ஸ்
மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 222 5343

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பதி கொண்ட சரவணா
என்றும் உன் தாழ் பணிந்து வணங்குகிறோம்
பக்தர் குறையினை தீர்த்தருள்வாய்!



# ரூபா

## பன்முக வர்த்தக ஸ்தாபனம்

பின்வரும் நிறுவனங்களின் உற்பத்தி பொருட்களை
சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

சிமித்கிளைன் பீச்சம் மக்வூட்ஸ் லிமிட்.
ஹேமாஸ் மாக்கற்றிங் பிறைவேற் லிமிடெட்.
றெக்கிற் பெங்கைசர் லங்கா லிமிட்.
ஏபி மோரி லங்கா பிறைவேற் லிமிட்.
சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்.

## RUBA VERSATILE TRADERS

*104, Stanly Rd, Jaffna.*
*T.P: 222 2479, 222 8330*

ஞானிகள் வாழ்ந்த பதியிலே நல்லைக் குமரனின் அருள் பிரகாசிக்கிறதே!
அதில் அமைதி தேடும் அடியார்கள் அலை மோதுதப்பா!



# பூபாலசிங்கம்

## புத்தகசாலை

வாராந்த மாதாந்த சஞ்சிகைகள் விண்ணப்பப் படிவங்கள்
பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையான சகல நூல்களும்
பிறந்ததின வாழ்த்து மடல்கள்
திருமண வாழ்த்து மடல்கள்
காகிதாதிகள், அலுவலக பாடசாலை உபகரணங்கள்
ஆகியவற்றிற்கும்
யாழ், கொழும்பு சகல புதினப் பத்திரிகைகளுக்கும் யாழ் நகரில்
களையகமாக மிளிரும் ஸ்தாபனம்

340, செட்டியார் தெரு.
கொழும்பு.
011 2422321

4, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம்)
யாழ்ப்பாணம்.
T.P:- 222 6693

நாங்கள் ஆஸ்பத்திரி வீதி - 1ம் குறுக்குத்தெரு சந்தியில் ஒரு கிளை
திறந்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PROFESSIONALS LOAN SCHEME FROM COMMERCIAL BANK



In appreciation of your contribution towards the society

For details contact 0112-486793 or any Commercial Bank Branch

COMMERCIAL BANK

www.combank.lk

CBCMarketing


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக்குமரன் அருள் உலகெலாம் பரவட்டும்



யாழ் நகரில்

ஐஸ்கிறீம் உலகில் ராஜாவாக விளங்குவது

# ராஜா கிறீம் ஹவுஸ்

தன்னிகரில்லா சிறப்போடு மக்களை கவர்ந்திழுக்கும் ஸ்தாபனம்

சொக்லட் கிறிப்ஸ் | ராஜா ஸ்பெஷல் ஐஸ்கிறீம்

வனிலா ஐஸ்கிறீம் | ஜெலி ஐஸ்கிறீம்

நட்ஸ் ஐஸ்கிறீம் | புரூட்சலட் ஐஸ்கிறீம்

சொக்லட் ஐஸ்கிறீம்

கட்லட், மட்டன், றோல், பற்றீஸ், மஸ்கட், கேக் வகைகள்,

மைசூர் பாகு, மிக்சர், குளிர்பானம்

யாவற்றையும் ஒரே இடத்தில் சுவைத்து மகிழ்ந்திட

# RAJA
## CREAM HOUSE

நாச்சிமார் கோவிலை அண்மித்து சேர் பொன். இராமநாதன் வீதியில்
"ராஜா கிறீம்" விசாலமான அழகான கட்டிடத்தில் திறக்கப்பட்டுள்ளது.
பார்ப்போர் கண்களுக்கு உள்ளே சென்று சிற்றுண்டி
ஐஸ்கிறீம் ரசிக்க தூண்டும் அழகிய சோலை.

மக்கள் விருப்பத்திற்கேற்ப புதியகிளை ஒன்று
திறந்து வைக்கப்பட்டுள்ளது.

36, Kasthuriar Road,
Jaffna.

36, Kasthuriar Road,
Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் நல்லூர் முருகா
நம் இனம் பட்ட துன்பங்கள் அனைத்தையும் களைந்தெறிய தங்கரதமேறி வா ஆறுமுகா

# சீமாட்டி

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 2228564

தரமான சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகளின் கைராசியான ஸ்தாபனம்
அனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரம்
**பெயருக்கேற்ற ஸ்தாபனம்!**
**யாழ்.நகரில் தேடித்தேடி நாடுவது "சீமாட்டியே"**



Wholesale & Retail

# MANAGAI SILKS

Dealers in Textiles

Specialist in Wedding Sarees

15, நவீன சந்தை, மங்கை சில்க்
சுன்னாகம்.

எண்ணி எண்ணி நான் செய் கருமமெலாம் முருகன் துணையன்றோ!
தங்கரதமேறி வந்து காட்சி தந்திடுவாய்
நகை உலகில் ஓர் அற்புதம்
காலத்தால் அழியாத கற்பனைக்கு எட்டாத
அற்புத படைப்புகள்
நவ நாகரிக நங்கையரை மேன் மேலும் அழகுற
புத்தம் புதிய டிசைன்களில் மிளிர்ந்திடும் நகைகள்
**வாருங்கள், பாருங்கள் வாங்கி**
**மனத் திருப்தியுடன் செல்வீர்கள்**



# நியூ நகுலா ஜுவல்லறி

தங்கத்தின் தரம் என்றும் நிரந்தரம்
தங்கப் படைப்புக்கள் தங்கத்தின் தரம் என்றும் நிரந்தரம்
தங்கம் என்றால் தரம் தவறாமல் நாடுமிடம் நகுலா நகை மாடம்

காலத்தால் அழியாத - கற்பனைக்கு எட்டாத அற்புத படைப்புக்கள்
நவீன உலகத்திற்கேற்ப இணையற்ற
புத்தம் புதிய டிசைன்களில்

74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 222 5511

T.P :- 021 222 3473

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்! சரணம்!! நல்லைக் கந்தா!
ஆறுபடை வீடுடைய ஆறுமுகா! அடியவரின் குறை தீர்க்க தங்கரதமேறி காட்சி தந்திடப்பா!

பூம்புடவை, றெடிமேட் ஆடைகள், பேபி சூட், சாறிக்கேற்ற பிளவுஸ் பீஸ்
தையல் வேலைகளுக்கு ஏற்ற பொருட்கள், எல்லா சைஸ்களிலும் பொலித்தீன்
மேசை விரிப்பு, குறோசறி பாக் சைஸ்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
பெயர் பெற்ற ஸ்தாபனம்



# அங்கிலின்
# ரெக்ஸ்ரைல்

55, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 0777031382, 021 222 3145
fax 021 222 3145



தேரேறி வலம் வரும் வேலவனே
உன் தாழ் வணங்கி தினமும் அருள் வேண்டி நிற்கின்றோம்



என்றும் உங்கள் தேவைகளுக்கு

கோவில் அபிஷேகப் பொருட்கள்
அத்திவார சாமான்கள்
நாள்சரக்கு வகைகள்
கும்பாபிஷேக சாமான்கள்

CSK
பொன்னாங்கன்னி தைலம்
கூந்தல் வளர்ச்சிக்கும்
மூல குளிர்ச்சிக்கும்
நரை மயிரை கறுப்பாக மாற்றுவதற்கும் சிறந்தது.

வைத்தியர்களுக்குத் தேவையான
ஆரணம் தைலம், எண்ணெய் வகைகள், லேகியம், செந்தூரம்,
குளிகை வகைகள், பஸ்பம் எப்போதும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

சித்த ஆயுர்வேத மருந்துகள், அபிஷேகப் பொருள்கள் விற்பனையாளர்.

4, பலாலி வீதி,
2ம் ஒழுங்கை,
[ஆரியகுளம் சந்திக்கு அருகாமை]
யாழ்ப்பாணம்.

5 [76], மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இ: 222 2912



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல் வேல் முருகா ஞானவேல் முருகா!
அடியார்கள் குறை தீர்க்க தங்கரதமேறி காட்சி தாமுருகா!!

**ஓஹோ! என**

சைவ பிரியர்களுக்கும் விரதமிருப்பவர்களுக்கும்

ஒரு வரப்பிரசாதமாக மிளிர்கிறது

**யாழ் நகர் மத்தியிலே திறம்பட இயங்கும்**
**சைவ உணவகம்**



அது தான்

# ஸ்ரீ சரவணபவன்

**நகர மத்தியில் ஓர் சைவ உணவகம்**

பல கால ஹொட்டல் அனுபவம் பெற்ற நாம்

சைவ பிரியர்களுக்கு ஏற்றவாறு சிற்றுண்டி வகைகள்,

மதிய உணவு, பலகார வகைகள் தயார் செய்கின்றோம்

மக்கள் தேடி வரும் அதி உயர் சைவ உணவகம்.

"ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்"

195/57 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைந்து நினைந்துருகி முருகா உன் வீதிவலம் வந்து கோபுர வாசல்தனில் வீழ்ந்து
வணங்கி நலம்பல செய்து நல்லருள் வேண்டுகின்றேன்.

# லிங்கன்
# கிறீம் ஹவுஸ்



## லிங்கன் என்றால் நினைவுக்கு வருவது ஐஸ்கிறீம்

சுவைத்துப் பாருங்கள் சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்பட்ட

- ஸ்பெசல் ஐஸ்கிறீம்
- சொக்லேட் ஐஸ்கிறீம்
- நட்ஸ் ஐஸ்கிறீம்
- புருட்சலட் ஐஸ்கிறீம்
- ஜெலி ஐஸ்கிறீம்
- மஸ்கட்
- அங்கர் பட்டர்
- வெனிலா ஐஸ்கிறீம்
- மட்டன் கேக் வகைகள்
- மிக்சர்
- லட்டு
- ஸ்பெசல் பீடா

## அத்தனையும் ஒரே இடத்தில்

யாழ் நகரில் அதி விசேட பல் சுவை ஸ்தாபனம் என்றால் அது லிங்கமே தான்
உள்ளே சென்றால் கண் குளிரும், மனம் குளிரும், சுவை குளிரும், திருப்தி குளிரும்
விஷயம் செய்து பாருங்கள்.

# LINGAN
## CREAM HOUSE

119. Kasthuriyar Road,
Jaffna.

T.P:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஞானிகள் வாழ்ந்த பதியிலே நல்லைக்குமரனின் அருள் பிரகாசிக்கிறதே!
அதில் அமைதி தேடும் அடியார்கள் அலை மோதுதப்பா!!

## அண்ணா! அண்ணா!! அண்ணா!!!

**ஆம் யாழ் நகரில் சிறிதாக, பெரிதாக உச்சஸ்தானத்தில்**

**வளர்ந்து நிற்கும் ஒரு சிறு கைத்தொழில் ஸ்தாபனம்**

## "முயற்சி உண்டேல் இகழ்ச்சி இல்லை"

**என்ற முது மொழிக்கு இணங்க**
**இன்று பரந்துபட்ட தொழில் ஸ்தாபனமாக வளர்ந்துள்ளது.**

# அண்ணா ஜீவாகாரம்

கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறார்களுக்கும் ஏற்ற

போசாக்கு நிறைந்த சத்துமா

அண்ணாவின் மற்றைய தயாரிப்புக்கள்

அண்ணா கோப்பி, அண்ணா பற்பொடி, அண்ணா பத்தி, பச்சை அரிசி மா,

ஆட்டாமா, வறுத்த அரிசி மா, உழுத்தம்மா, அண்ணா ரொபி வகைகள்

இன்னும் பல உற்பத்திகள் கலப்படம் கிடையாது.

**உள்ளூர் உற்பத்திக்கு**
**உற்சாகம் கொடுங்கள்.**

**நாம் திருநெல்வேலி பிரதேச கட்டடத்தில் ஒரு புதிய கிளை திறந்துள்ளோம்**
**என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிளோம்.**

அண்ணா கோப்பி கடை
நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.222 1299

**தலைமையகம்**

**தொ.பே: 021 222 3565**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எண்ணி எண்ணி செய் கருமங்களை கருணை கூர் முகங்கள் ஆறுடன்
தங்கரதமேறி அருள்தந்து காத்திடப்பா

# JAFFNA TRADERS

# யாழ்ப்பாண வணிக நிலையம்



புதிய இடம்

J T

புதுமை பொலிவு

- ⇨ பலசரக்குப் பொருட்கள்
- ⇨ அரிசிவகைகள்
- ⇨ தும்புத்தயாரிப்பு
- ⇨ நைலோன் கயிறுகள்
- ⇨ பொதி செய்யப்பட்ட பொருட்கள் (Packed Items)பெற்றுக்கொள்ளலாம்

கண் கவர்ச்சியான காட்சி கூடம்

ஒரே இடத்தில் வீட்டு தேவைகள் அத்தனையும் பெறும் வாய்ப்பு

336, 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 2229453

---

# யாழ்ப்பாண இரும்பகம்

T.P: 5589

## ஏசியன் பெயின்ற்ஸ்

32, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 222 7028

**யாழ்–கொழும்பு–யாழ்**
**பாரஊர்தி சேவை போக்குவரத்து.**

## J.T. ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

135, ஆட்டுப்பட்டி வீதி,
கொழும்பு–13

T.P: 011 4987935

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NSB TRIPLE A FIXED
# தேசிய சேமிப்பு வங்கி

26.06.2009 இல் அறிமுகப்படுத்தும்
அதி உயர் வட்டி வீதத்துடன் கூடிய புதிய திட்டம்.
வட்டி வீதம் 20%

## NSB TRIPLE A FIXED

25 000/- ரூபாவிற்கு மேற்பட்ட எந்தவொரு வைப்பிற்கும்
5 வருட முடிவில் 20% வட்டி
மூன்று வருட முடிவில் 18% வட்டி

**அத்துடன்**

அடகு சேவைக்கான வட்டி 19% மாக குறைக்கப்பட்டுள்ளது என்பதை
மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.



சரித்திர புகழ் மிக்க நல்லைக்குமரன் தேரேறி வரும் இந்நாளில்
பக்தர்களுக்கு அருள்பாலித்திட வேண்டுகின்றோம்.

# TCT MULTI TRADE CENTRE
# ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் சமூகப்பணிக்கான நிதி பெறும் நோக்குடன்
ஆரம்பிக்கப்பட்ட ஒரேயொரு பல்பொருள் விற்பனை நிலையம்



வாடிக்கையாளர்களே!

தங்களுக்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் தரமானதாகவும், நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும், மங்களகரமான நிகழ்வுகளை சிறப்பாக நடாத்த சகல வசதிகளையும் உள்ளடக்கிய மண்டப வசதியைப் பெறவும் நாடவேண்டிய ஒரே இடம்

"இலாப நோக்கமின்றி சேவை நோக்குடன்
தரமான பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்யும் இடம்"

527, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தொ.இல. 021-7451896


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் நாமத்துடன் நான் செய் கருமமெலாம்
நன்றாய் அமைந்திட நல்லருள் தாருமையா!



கட்டிடப் பிரியர்களே!

றோபியலாக் எமல்சன் பெயின்ற் எனாமல் பெயின்ற்
வகைகள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றக் கொள்ளலாம்.

உங்கள் தோட்டப் பயிர்களை வளர்த்தெடுத்துப் பாதுகாப்பதற்கு
இதோ விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் பல வகைப் பொருட்கள்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயிகளே! மேற்கூறிய இரண்டிற்கும் வடமாகாண ஏக விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளோம்
அத்துடன் நாம் *(Show Wallace)* கம்பனியின் யாழ் ஏஜன்டாக நியமிக்கப்பட்டுள்ளோம்.

**நாம் '*Coco Cola*' Ceylon Biscuit Co.**
**"மஞ்சி Biscuit" ஆகியவற்றிற்கும்**
**வடமாகாண முகவராக நியமிக்கப்பட்டுள்ளோம்**

# சிவா பிறதர்ஸ்

141, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு - 13
Fax - 0112470038

205, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P - 2225497

நித்தம் உனை வணங்கி நல்லருள் தர வேண்டி நிற்கின்றோம்
நல்லைக்குமரா என்றும் உன் திருவருளை வேண்டி நிற்கும்

# Vele Murugan
## TRADERS



எமது இல்லத்தையும் அழகுற பல வர்ணம் பூசி அழகுடன் அமைத்தால் ஆஹா!
என்ன ஆனந்தம் உங்கள் இல்லத்தை அழகுபடுத்த சகல விதமான
வர்ண பூச்சு வகைகளும் ஒயில் பெயின்ற் வகைகளும் விரும்பி தெரிவு செய்ய தேடிவரும் இடம்

# வேல் முருகன்
## வாணிப நிலையம்

56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் புதியதோர் அறிமுகம்.

# யசஸ்



**ஒற்றை தவணை கொடுப்பனவு ஆயுள் காப்புறுதி**
**நீங்கள் பெறும் முதிர்ச்சி தொகைக்கு ஒரு சிறந்த முதலீடு**
**இதோ!**

40 வயதுள்ள ஒருவர் 10,000.00/= முதலீடு செய்தால் அவருக்கு 5 வருட முடிவில்
1,568,950.00 கிடைக்கும். (நிபந்தனைக்குட்பட்டது)
நிச்சயிக்கப்பட்ட தொகையுடன் ஆயுள் காப்பீடு ஒன்றையும் வழங்குகிறது.

| வருடம் | தொகை |
|---|---|
| 1 | 1,568950.00 |
| 2 | 1,568950.00 |
| 3 | 1,568950.00 |
| 4 | 1,568950.00 |
| 5 | 1,568950.00 |

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
த.கனகசபை
7, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.



ஆவணி மாதமதில் சிறப்பெல்லாம் சேருமென்று
நல்லைக் கந்தன் அடியார்கள் அரோகரா என
தங்கரததேர் வடம் இழுக்கிறார்கள்.



## இதோ வாருங்கள்! பாருங்கள்!!

# அற்புதா ரேடிங் கொம்பனி

**சகல விதமான ஆடம்பரப் பொருட்கள், துவிச்சக்கர வண்டிகள்**
**அதன் உதிரிப்பாகங்கள், வீட்டுத்தளபாடங்கள்,**
**பிளாஸ்ரிக் கதிரைகள், பலவித பிளாஸ்ரிக் உபகரணங்கள்,**

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்**

T.P: 021 2222057
021 2222505

198, ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலையம் முன்பாக,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி தெய்வானை சமேதரராய் பச்சை மயில் வீற்றிருந்து
முருகன் அடியார்களின் கவலையை களைந் திடுவாய் வடிவேலா

# NEW RAGAMS
# PADDUCHOLAI

ஆகா என்ன ராகம் காதுக்கு இனிமையாக இருக்குதே!
இல்லை இல்லை அது மனதுக்கு இனிமை தரும் ராகம்ஸ் பட்டுச்சோலை
அங்கே தான் நாகரீக நங்கையர் விரும்பிய
தெரிவுக்காக நாடிச் செல்கிறார்கள். ஒருமுறை மட்டும் விஜயம் செய்து பாருங்கள்



முகூர்த்துப் பட்டுப்புடவைகள், ரெடிமெட் ஆடைகள்
புதிய புதிய ரகம் நிறைந்த இடம்

# நியூ ராகம்ஸ்

இல 24. 7, 8, நவீனசந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

T.P:021 222 7179

வேலுண்டு வினையில்லை நல்லூர் கந்தன் உண்டு கவலையில்லை
வேதனைகள் வரும் போது முருகா நீ வேல் எடுத்து வந்திடுவாய்!



ஆறுமுகப் பெருமான் ஒளி வீசும் தங்கம் நகைகள் அணிந்து ரதபவனி
வருகின்றார். நவநாகரீக மங்கையரே நீங்களும் ஒளி வீசும் 22 கரட் தங்க
நகைகளை அணிந்து முருகனை தரிசிக்கக் கூடாதா! நாடுங்கள்

# பாலகிருஸ்ணா ஆபரண மாளிகை

விதம் விதமான டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளைச் செய்து கொள்ள வசதியாக
நல்லூரான் முன்றலிலேயே !!

# Balakrishna JEWEL-HOUSE

616, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுமயில் ஏறி விளையாடிவரும் முருகாநீ எத்தனை வாகனத்தில் காட்சி தருகின்றாய்
நாம் படும் துன்பங்களுக்கு ஆறுமுகமாக தங்கரதத்தில் காட்சிதந்து எமை காத்திடப்பா!!

# ஈஸ்வரன் ரேடிங் கோ

*லுமாலா ஹீறோ துவிச்சக்கர வண்டிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்*

**விற்பனையில் முன்னணியில் நிற்பவர்கள்**



**ஹீறோ துவிச்சக்கர வண்டிகள்**

**ஹீறோ துவிச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள்**

**நேரடியாக இறக்குமதி செய்பவர்கள்**

**நாம் இப்பொழுது கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும்**
**A9 வீதியூடாக லொறி போக்குவரத்து செய்கிறோம்.**

## நாம் யாழிலிருந்து கொழும்புக்கு



## பயணிகள் பஸ்சேவை ஆரம்பித்துள்ளாம்

# ESWARRAN TRADERS

69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

☎ 021 222 2813, 021 222 3590, 011 222 4317

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி எண்ணி நான்செய் கருமமெலாம் பண்ணி முடித்திட நின் அருள் வேண்டுகிறேன் முருகா
கோலமயில் மீதிலே வீதிவலம் வரும் முருகா தேடி வரும் அடியார்க்கு அளித்திடப்பா
அருளாம் அமுதை

# சுந்தர்சன்



யாழ் வீதி, மானிப்பாய்

சகல விதமான மின்சார பரிசுப் பொருட்களையும்,

மின் சாதனங்களையும்,

பி.வி.சி பைப் வகைகளையும்,

நீர் தாங்கிகளையும்,

வீட்டுத் தளபாடங்களுக்கான அதி நவீன

அனைத்து இலத்திரனியல் உபகரணங்களையும்

ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

நாட வேண்டிய இடம்

யாழ் புறநகரில் அதி உன்னத சிறந்த மின் உபகரண ஸ்தாபனம்

# SUNDARSAN

Distributors of Electrical Items and
Electrical appliances.

யாழ் வீதி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வள்ளி தெய்வானை சமேதரராய் பச்சை மயில் வீற்றிருந்து
முருகன் அடியார்களின் கவலையை களைந் திடுவாய் வடிவேலா



# பாதுகாப்பும் கவனிப்பும்

அரசாங்கத்திடமிருந்து தேசத்திற்கு கிடைக்கும் பாதுகாப்பு, ஒரு குழந்தைக்கு தந்தையிடமிருந்து கிடைக்கும் பாதுகாப்பையும் பலத்தையும் போன்றதாகும். அவ்வாறே ஒரு தாய் தனது குழந்தைக்கு காட்டும் அன்பையும், அரவணைப்பையும் போன்ற சேவையையும் கவனிப்பையும், தனியார் துறையின் உபசரிப்பு அனுபவமும், சிநேகபூர்வ ஊழியர்களையும் கொண்ட ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ் இடமிருந்து நீங்கள் பெறுவீர்கள்.

ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ், அரசாங்கத்தின் பாதுகாப்புடனான பாரிய காப்புறுதி நிறுவனமாக தமது வாடிக்கையாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் அதேவேளை சிநேகபூர்வமான, தன்னிகரற்ற சேவையினை தந்தையையும் தாயையும் பிரதிபலிக்கும் வகையில் வழங்கும்.



ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்ற

அரச பாதுகாப்பு, தனியார்துறை போன்ற சேவை இரண்டையும் வழங்கும் ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் நாமத்துடன் நான் செய் கருமமெலாம்
நன்றாய் அமைந்திட நல்லருள் தாருமையா!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் முருகா நீ ஒரு அழகன்
நீ தங்கரதமேறி வீதி வலம் வந்திட
அடியவரின் துன்பம் நீங்கி மகிழ்வுடன் வீடு செல்வர்
கலை வாணியின் தோற்றமே அழகு தான்
வீணையை கையில் ஏந்தி நிற்கும் அழகும் அழகேதான்
அந்த அழகுக்கும் விஞ்சி நிற்பது தங்க ஆபரண அணி கலன்கள்
அதனால் என்னவோ நகை மாளிகைக்கும்
"கலைவாணி" பெயர்! அது மிளிர்ந்த அழகை கொடுக்கிறது

**அழகுக்கு அழகூட்டும் பற்பல டிசைன்களில் ஆபரணங்களை செய்வதற்கும்**
**பெற்றுக்கொள்வதற்கும் விரைந்து தேடும் இடம்**

22 கரட்டில் விரும்பிய டிசைன்களில் நங்கையர் தேடி வரும் இடம்

# கலைவாணி
## நகை மாளிகை

தங்கப்பவுன் நகை வியாபாரம்

111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**T.P: 2227356**



நல்லூர் அழகா! நல்லைக் குமரா!
நம்மவர் செழிக்க! நல்லருள் நீ தா!
உரிமையுடன் கேட்போம்! உமையவள் புதல்வா!
உனையன்றி எமக்கு யார் துணை முருகா!



**புதுமை மிக்க உலகில் பழமை மாறா! செயல் வீரனாய்**
**"சுத்தத்தின் செல்வன்" என்று மக்களால் மகுடம் சூடப்பெற்று**
**அன்றும் / இன்றும் / என்றென்றும்**
**தரம் மாறாத தாரக மந்திரம்**

# மலாயன் கபே

பெண்களுக்கு பிரத்தியேக இடம்

36,38, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

**T.P:- 021 222 2373**
**FAX:- 021 222 2373**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அஞ்சிடும் தேவரை காக்க உதித்த நல்லை குமரா
வஞ்சனை அசுரரை அழிக்க வேலுடன் சென்றாய்
நல்லருள் புரியும் கந்தா எமையும் காத்தருள்வாய்

வீ.எம்.கே என்றால் தங்க ஆபரணம் தான் நினைவுக்கு வருகிறது
அந்த ஸ்தாபனம் ஒரு பெயர் பெற்ற ஆபரண மாளிகை

அசல் 22 கரட்டில் புதிய புதிய டிசைன்களில் மங்கையரின்
கவர்ச்சிக்கு ஏற்றவாறு செய்துகொடுக்கப்படும்.

நவ நாகரீக நங்கையர் விஷேடமாக நாடுவது

# வீ.எம்.கே. ஜுவலிலர்ஸ்

# V.M.K. JEWELLERS

105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:-021 222 7339

புதிய வீ.எம்.கே ஜவல்லர்ஸ்,
நவீன சந்தை கட்டிடம்,
கண்டிவீதி,
சாவகச்சேரி.

T.P:-0712324412





முருகனோ அழகு அவன் அணியும் மாலைகளோ முருகன் பால் கவர்ந்திழுக்கிறதே!
என்னே! சக்தி, என்னே! அருட்கடாட்சம் முருகனை வணங்கி அருள் பெறுவோம்

தரம் மிக்க பேப்பர் வகைகளையும் எசன்ஸ்
வகைகளையும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

○றோணியோ பேப்பர் ○போஸ்டர் பேப்பர் ○ரைப்பிங் சீற் ○நியூஸ் பிறின்ட
○பாங் பேப்பர் ○பரிசுப் பேப்பர் ○பொக்ஸ் போட் ○சிப் போட் ○பிறிஸ்டல் போட்

ஆகிய சகல விதமான பேப்பர் வகைகளையும் அச்சகத்துக்குத் தேவையான
மை வகைகளையும் வேண்டிய அளவிலும்

ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் வகைகள், பிஸ்கற், இனிப்பு, பீடா ஆகியவை தயாரிப்பதற்கு
வேண்டிய சகல மூலப் பொருட்களையும்

ஊதுபத்தி, சாம்பிராணி, விளைவு சூடம், வாசனைத்திரவியங்கள், ஆயுர்வேத மருந்து வகைகள்
தயாரிக்கும் மூலிகை வகைகள், குங்குமம், குங்குமப் பூ, எண்ணெய், நெய், மற்றும் சாப்பாட்டு
இரசாயனப் பொருட்கள் பிஸ்கட் சொக்லேட், ரொபி வகைகளுக்கும், நாடவேண்டிய ஒரே இடம்

நாங்கள் "மலிபன் பிஸ்கட்" ஏஜன்டாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை
மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறோம்.

# பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்

104, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:-0212222386



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானிலத்தோர் போற்றி நமக்கு கிடைத்த அரும்பெரும் தெய்வம் நீ முருகனல்லவோ!
நம் இனம் சிறந்து விளங்கிட நல்லருள் தாருமையா!

கடந்த 51 வருடகால மக்கள்
அன்புக்குரிய நிறுவனமாக
விளங்கும்



# E.S.P. நாகரத்தினம்
## சக நிறுவனம்

இன்று
வானுயர புகழோங்கி நிற்கிறது

தொண்டு, உண்மை கொண்டு மக்கள்
மனதில் இடம் பிடித்த பெருந்தகையின் ஸ்தாபனம்
யாழ் நகரில் துவிச்சக்கர மற்றும்
அதற்கு தேவையான உதிரிப்பாகங்கள்
அத்தனையும் விற்பனை முன்னணியில்
மேலோங்கி நிற்கிறது

லுமாலா காட்சி அறை புதிய கட்டிடத்தில்
திறந்து வைக்கப்பட்டுள்ளது.
அழகிய கட்டிடம், அழகிய காட்சியறை
விற்பனையாளரின் துரித சேவை, துவிச்சக்கர
வண்டிகளையும் அதற்குரிய அத்தனை
பாகங்களையும் ஒரே இடத்தில் பெற்று
சந்தோஷமடையுங்கள்.

# E.S.P. நாகரத்தினம்
## சக நிறுவனம்

தொ.பே: 222 3096

52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் ஒருமலர் அது வாடா மலர் நித்தம் அழகன் முருகனுக்கு பூசூடவரும்
"நல்லைக்குமரன்" மலர் வணங்குகிறேன் வாழ்த்துகிறோம்



# மைதில் நகைமாடம்

நங்கையரின் ஒரே ஆசை தங்களை அழகு படுத்துவது அதற்கு தங்க ஆபரணங்கள் தான்
முன்னணி வகிக்கிறது அதற்கும் இதோ இருக்கிறது புதிய நகைமாடம் அதுதான்

**மைதில் நகைமாடம்** **புதிய இடம் கண்கவர் காட்சியகம்**

**விரும்பிய தெரிவுக்கு நங்கையர் நாடிவரும் இடம்**

**89, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**கிளை**
**79Z, செட்டியார் தெரு,**
**கொழும்பு.**

T.P **222 7902**

வெள்ளை மணல் பரம்பலிலே முருகன் திருநடனம்
பஜனை நடனங்கள், காவடி ஆட்டம் பாற்குட நடை முருகா தங்கரதமேறி அருள் தந்திடுவாய்



**புதிய இடம் புதுமைப்பொலிவு அழகான காட்சிக்கூடம்**

# இராஜேஸ்வரி

**உங்களுக்கு வேண்டிய புதுவகையான ஆடைகள், கண்கவர் பஞ்சாபிகள்**

சிறுவர் பெரியவர்களுக்கு றெடிமேட் உடைகள் என்பவற்றை வாங்கி மகிழ்ச்சி அடையுங்கள்
கண்ணை மயக்கம் பளபள மினுமினுநு புதிய புடைவைகளுக்கு
கொழும்பு "பாஷன்களுக்கு நிகர் யாழ்ப்பாணத்தில் "ராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல் தான்"

# இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**
**புதிய இடமல்லவா லாபகரமான**
**விற்பனை ஒரு முறை விஜயம் செய்தால்**
**இராஜேஸ்வரியின் பெருமிதம் தெரியும்**
**வாருங்கள் பாருங்கள்**

**105, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 222 6953**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பன்னிரு விழிகளால் அழகு முருகா நீ பாரப்பா
கந்தா வேலா தருவாய் வரமே
அமைதியாகட்டும்

புத்து பொலிவில்

ஜீ.எஸ்.லிங்கநாதன் அன் கோ.

சும்மா பெயர் மட்டுமல்ல அது பெயர் பெற்ற ஒரு பிடவை ஸ்தாபனம்

மணமகள் பட்டு பிடவைகளுக்கு பெயர் பெற்ற இடம்
அது மட்டுமா பஞ்சாபி சேட் சூட் துணிகள் குழந்தைகளுக்கேற்ப
ரெடி மேட் ஆடைகள் கவர்ச்சியான இடம் விஜயம் செய்து பாருங்கள்

ஜீ. எஸ். லிங்கநாதன் அன் கோ.

G. S. LINGANATHAN & CO.

13,14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P:- 222 3139

47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P:- 222 8107



நல்லைக் குமரா உனையன்றி வேறொருவரையும் நம்புகிலேன்
நான் செய் கருமமெலாம் நன்றாய் அமைந்திட வரம் தருவாய்

கண் வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை
சரிவர பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

எஸ். எம். பெர்னாண்டோ

அன்றும் இன்றும் என்றும் கண்ணாடிகளுக்கு
பெயர் பெற்ற இடம்

S.M. FERNANDO

*580, Hospital Road, Jaffna.*
*520, Hospital Road, Jaffna*

*T.P: 222 3254*
*222-4367*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் செய் கருமமெல்லாம் சிறப்புற்று மேலோங்க
உம் திருவடி நாளும் நினைந்துருகி வேண்டுகின்றேன் வரம்தருவாய்!!

**நங்கையரோ விரும்புவது நாகரீக மாற்றம். அதற்கேற்றவாறு**
**நடை உடைகளிலும் மாற்றம்**

என்றும் இளமையை விரும்புவது நங்கையர்,
என்றும் அழகை விரும்புவது நங்கையர் என்றும்
இளவரசியாக இருக்க விரும்புவது நங்கையர் அது தான் என்னவோ!
நங்கையர் இளவரசி சேலைச் சோலைக்கு படையெடுப்பது! எங்கே.



# இளவரசி
## சேலைச் சோலை

**வாருங்கள்!**
**பாருங்கள்!**
**தெரியுங்கள்!**
**நாடுங்கள்**
**திருப்தியுடன் செல்வீர்**

57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 222 2503

எல்லையில்லா கருணை கடல் முருகா!
"அடியவர்" மனதில் குடி கொண்ட சண்முகா வேண்டு வரம் தந்திடத்
தங்கரதமேறி வா கார்த்திகேயா!



தங்கம் என்றால் தங்கம் தான்
தங்க ஆபரணங்களுக்கு என்றும் ஈடுஇணையற்ற ஸ்தாபனம்
நம்பிக்கை, நாணயத்துடன் நன் மங்கையர் நாடும் இடம்
22 கரட்டில் தங்க நகைகள் புதிய புதிய
டிசைன்களில் செய்யும் ஸ்தாபனம்

# சாரங்கா நகை மாடம்

157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

109, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2228911

தொ.பே: 021 2226972

**புதிய பொலிவுடன் கொழும்பில் உதயமாகி நடைபெறுகின்றது.**
**இணை நிறுவனம்**

# சாரங்கா ஜுவல்லறி

55, செட்டித்தெரு,
கொழும்பு-11

T.P: 2434971 Fax: 0112434071

55, Sea Sheet,
Colombo 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி எண்ணி நாம் செய் கருமமெலாம்
நன்றாய் அமைந்திட நித்தம் அருட்காட்சி தந்திடப்பா!



தங்க ஆபரண உலகில் ஒரு உன்னதமான இடம்
பெண்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும்
கலைநயம் மிக்க அதி நவீன டிசைன்களில்
தரம் குன்றா 22 கரட் தங்கப் பவுணில்
நங்கையர் விருப்பத்திற்கேற்ப
நகைகள் செய்து குறித்த தவணையில் கொடுக்கப்படும்

# அசோகா
# நகை அகம்

111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 2226290

சகல தெய்வங்களையும் சுமந்து செல்லும்
கோமாதாவாகிய எம்மையும் தெய்வமாக பூசியுங்கள்
கோமாதா எங்கள் குலமாதா
பசுவைக் கொல்லோம் பயன் பல பெறுவோம்
பசு இருக்கும் வீட்டில் மகாலட்சுமியினுடைய கிருபை நிச்சயம்



பசுவை வளர்ப்பவர்கள் - பேணுபவர்கள் - துன்பம்
விளைவிக்காதவர்கள் போன்றவர்களுக்கு
சகல தெய்வங்களினது ஆசீர்வாதமும் லட்சுமி
கடாட்சமும் கிடைக்கும்



பசுவில் முக்கோடி தேவர்கள், லட்சுமி, விஷ்ண, சிவன்
வாசம் செய்யம் இடம்
சிந்தித்து செயற்படுங்கள்
"வேணியின் வேணவா பசுவதை நிறுத்தல்"

# வேணி களஞ்சியம்

165, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P - 22 2661, 2046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மாதமது வந்ததும் நல்லைக் குமரனின் திருநடனம் நாடிடுவோம்
பக்தியோடு பாடிடுவோம் பணிந்திடுவோம் நல்வாழ்வு தந்து எமை காத்திடுவாய்



மின்சார வீதியிலே அழகாக காட்சி தருகிறது
சீவம் றெக்ஸ்ரைல்
அழகுடனும் புது பொலிவுடனும் திகழும் புடவையகம்
சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை ஏன்! நவ நாகரிக பெண்களும்
விரும்பி தெரிவு செய்யக் கூடிய இடம்
விஜயம் செய்து பாருங்களேன்!

புதுமைப் பொலிவுடன் புதிய புடவையகம்,
அழகான காட்சியறை புதிய புதிய புடவை தினுசுகள்
நவ உலகத்திற்கேற்ப அழகிய ரெடிமேட் ஆடைகள்,
சிறுவர் தொடக்கம் பெரியவர் வரை
நங்கையரும் கூட விரும்பி தெரிவு செய்யக்கூடிய இடம்

# சீவம் றெக்ஸ்ரைல்

14A, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 222 6749



நல்லூர் முருகனுக்கு மணம்கமழும் ஒரு வாடாமலர் முருகன் அருள் பரப்பும் மலர்
“நல்லைக்” குமரன் மலரல்லவோ! வாழ்த்துகிறோம்

# லக்ஸ்மி காகிதாதிகள்



ஆரம்ப வகுப்பு முதல் அனைத்து வகுப்புகளுக்குமுரிய
பிரபல ஆசிரியர்களின் தமிழ் ஆங்கில மொழி மூலமான புத்தகங்கள்,
பயிற்சிகள் வினாப்பத்திரங்கள், மும்மொழி அகராதிகள், காரியாலய,
பாடசாலை உபகரணங்கள்

இன்னும் பற்பல பாடசாலை மாணவர்களுக்கு தேவையான
உபகரணங்கள் அத்தனையும் ஒரே இடத்தில்
பெற்று நன்மையடையலாம்.

மங்கள நிகழ்வுகளுக்குரிய
அழைப்பிதழ்கள், றெஜிபோம் வர்ண எழுத்துக்கள்.

அழகான காட்சி அறை மலிவான விற்பனை.
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

இல. 2, நவீன சந்தை கட்டிடம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் முருகா நாளும் பொழுதும் உன்னை தொழுதேத்த வைத்தாய்
சோதனையும் வேதனையும் நீங்கிட அருளமுதம் தந்திடுவாய்



உலகளாவிய காலணி பெயர் பாட்டா
அதிலே விரும்பி
தெரிவு செய்வதற்கு தகுந்த ஒரே இடம்.
"பாட்டா" என்றால் காலணி
பற்பல வடிவமைப்பில் பற்பல நிறங்களில்
நவீன காலத்திற்கேற்ப
வரவழைத்து விற்பனை செய்யும்
பாட்டா முகவர்

# யாழ் காலணியகம்

# JARL TRADE CENTRE

ஆஸ்பத்திரி வீதி,
இல. 11, நவீன சந்தை. (வெளிப்புறம்)
T.P:- 2223152

ஏறுமயில் ஏறிவரும் முருகனை நாம் நெஞ்சுருக நினைக்கும் கால்
துன்பங்கள் அத்தனையும் மறைந்திடுமன்றோ!

## மோட்டார் வாகனப் பிரியர்களே!
## மோட்டார் சைக்கிள் வீரர்களே!

நாம் "லுக்காஸ்" Lucas பற்றறிக்கு
வடமாகாண ஏஜன்டாக அன்று தொட்டு நியமிக்கப்பட்டுள்ளோம்
என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் எல்லாவித பற்றறிகளுக்கும் மின் ஏற்றி சீர்செய்து தரப்படும்.

# செல்வம் பற்றறி சேவை

443, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2642

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினக் கடவுள் முருகன் நீயல்லவோ சோதனையும் வேதனையும் நீங்கிட
தங்கரதமேறி காட்சி தந்திடப்பா!

யாழ் நகரில் மூன்று சந்தியில் பிரகாசமாக அமைந்துள்ளது

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் பல்பொருள் வாணிபம்

ஆஹா! என்ன கவர்ச்சி அற்புதமான பல்பொருள் காட்சி
உள்ளே சென்றால் "சுப்பர் மார்கட்" தான்



ஒரே இடத்தில் வீட்டுக்கு தேவையான
அத்தனை பொருட்களையும் ஒரே
இடத்தில் மலிவாக பெற்றுக்
கொள்ளலாம் விஜயம் செய்யுங்கள்

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் பல்பொருள் வாணிபம்

இல.342, 344, 346 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P No: 2228666

முருகன் அழகனுக்கு காவடி ஆட்டம், தூக்கு காவடி, கற்பூரசட்டிகள் என்னே
முருகா துன்புறும் மக்களுக்கு நீ ஆறுதல் தர
தங்கரதமேறி காட்சி தந்திடப்பா!



# SKT மகாலட்சுமி ஜூவல்லர்ஸ்

இந்திய ஆபரண டிசைன்களில் உங்கள் இளமைக்கு மெருகூட்டும்
கண்கவர் 22 கரட்டில் தங்க நகைகள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
பெயருக்கேற்ற ஸ்தாபனம்.

ராஜா தியேட்டர் அருகாமை
213B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 8466

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா! முருகா! என சிரமேல் கைகூப்பி நான் தொழ
நான் செய் கருமமெலாம் முருகன் துணையன்றோ!



நவநாகரீக
நங்கையர்களே!

# சிவகணேசன்

## ரெக்ஸ்ரைல்ஸ்

வண்ணத் துணியகத்தும் வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க ஏற்றதோர் எழிற்கூடம்

கண்ணைக் கவரும் சாறிகள், கண்கள் மிளிரும் சுடிதார் வகைகளுடன்
இன்னும் எத்தனையோ!

**வாருங்கள்! பாருங்கள்!!**

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

021 222 2063



உலக இந்து பெருமக்கள் அனைவரையும் கவர்ந்திழுக்கும் நல்லை அழகு முருகன்
அவன் தாழ் வணங்கி நல்லருள் பெற்றிடுவோம்

# பெஷன் ஹவுஸ்



அலுமினியம், எவர் சில்வர் பாத்திரங்கள் , சிறுவர் சயிக்கிள்கள்
ஆலயங்களிற்கேற்ற வெண்கலப் பொருட்கள்
மன விருப்பத்திற்கேற்ப அன்பளிப்புப் பொருட்கள்
விஞ்ஞான உலகத்திற்கேற்ப மின் விளையாட்டுப் பொருட்கள்
இன்னும் பல பொருட்கள் நியாய விலையில் கிடைக்கும் கவர்ச்சியான ஓர் இடம்

# FASHION HOUSE

No. 65, K.K.S Road, Jaffna.

T.P 021 222 8713



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத் திருநகராம் நல்லையெம் பதியிலே வள்ளி தெய்வானையுடன் மயிலேறி
வரமருளும் முருகனை கண்ணுற்றால் துன்பங்கள் எல்லாம் மறைந்து விடும்



- அழகு சாதனப் பொருட்கள்,
- தையல் நூல் வகைகள்,
- எவர் சில்வர் பிளாஸ்ரிக்,
- அலுமினியப் பாத்திரங்கள்,
- நவநாகரீக நங்கையருக்கு ஏற்ற லேஸ்,
- பாக் வகைகள்,
- சிறுவர்களின் பாடசாலை உபகரணங்கள்,

ஆகா அதுமட்டுமா !
சிறுவர்களுக்கு அதி நவீன எண்ணற்ற விளையாட்டுப் பொருட்கள்
மொத்தமாகவும் சில்லறையாக நியாய விலையில் பெற்றுக் கொள்ள

விக்னர் அழகு மாடம்

361, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே 222 3227



நல்லைக் குமரன் மணிஓசை கேட்டதும்
மெய் சிலிர்த்து, மெய் மறந்து முருகன் திருவருள் வேண்டுகிறோம்

புதுமண பெண்கள் அமைவது நல்ல ராசிக்கு! அவர்கள் தெரிந்து அணிய விரும்புவது
நல்ல அலங்கார புடவை, ராசியான மணமக்களுக்கு ராசியான புடவையகம் தேடி வாருங்கள்
எம்மிடம் தெரிவு செய்வதற்கு ஏராளம் புடவை தினுசுகள்



எல்லாம் அமைவது கைராசியில்தான் எதற் கெடுத்தாலும் நல்லராசி வேண்டும்
என்பார்கள். நல்ல காரியங்கள் செய்ய ராசி சுபமுகூர்த்த மணமகள் பட்டுப் புடவைகள்
வாங்க நல்ல ராசியான கடை பார்க்க வேண்டும்.

இங்கே வாருங்கோ அதோ......

ராசி சில்க்ஸ்

.....போட் தெரிகிறதே அங்கே

போனால் பல ராசியாக வேண்டிய பட்டு புடைவைகள் தெரிவு செய்யலாம்
இங்கே மணமக்கள் ஆடைகள் ஏராளம் உங்கள் விருப்பிற்கேற்ப தெரிவு செய்து
குதூகலத்துடன் புது வாழ்வை ஆரம்பிக்கலாம் .

ராசி சில்க்ஸ்
70 (71A) நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P 021- 222 5571

நல்லி சில்ஸ்
121 /1 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021- 222 5573



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை கந்தனின் பன்னிருகை வேல்
இடர்கள் நீக்கி வரங்கள் அருளும் கருணை வேல்

**புதிய புதிய வீடு கட்டுபவர்களுக்கும் ஒரு வரபரசாதம்**

**ஆம் உங்கள் புதுமனைக்கும் ஆடம்பரமாக காட்சியளிக்க வேண்டுமா?**

**இதோ இருக்கிறது**

# நியூ கமல் செரமிக்ஸ்

அழகிய சுவர் கற்கள், லங்கா ரையில்ஸ், றோயல் செறமிக்ஸ், கழிவறை சாமான்கள்,
குளியலறை உபகரணங்கள் CANSEWAY வர்ண பெயின்ற் வகைகள்
எஸ்.லோன் பி.வி.ஸீ பைப் மற்றும் அதன் உதிரிப்பாகங்கள்,
பிளாஸ்ரிக் கதவுகள் இன்னும் எத்தனையோ...

**வாருங்கள்! பாருங்கள் உங்கள் விருப்பத்தை நிறைவு செய்யலாம்.**

# New Kamal Ceramics

**T.P: Fax**
**021 2222085**
**021 3205444**

**37, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**



முருகா நீ ஆறுமுகமாகி தேரினில் வீற்றிருந்து ஊஞ்சலாடி வீதி வலம் வருந்தனில்
அடியர்கள் அரோகரா என ஆர்பரிக்க துன்பங்கள் நீங்கி விடுமன்றோ!

# SELVA ELECTRICALS

**புதியதோர் நகரமாக பரிணமிக்க வியாபார ஸ்தலங்கள் அலங்கரிக்க,**
**வங்கி கிளைகள் மேலோங்கி நிற்கும் திருநெல்வேலி சந்தியில் பிரபலமான**
**ஒரு ஸ்தாபனம்**

# செல்வா எலக்ரிக்கல்ஸ்

**அலங்கரிக்கின்றது.**

**இங்கே**

**மின்சார பொருட்கள் எஸ்லோன் பைப வகைகள், மின்சார விசிறிகள், தண்ணீர் பம்பிகள்**
**இன்னும் எத்தனையோ! உங்கள் மின்சார தேவைகள் அத்தனையும்**
**ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய நாடுங்கள்**

**21, பலாலி வீதி,**
**திருநெல்வேலி.**

**T.P: 021 3218617**
**021 4590524**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுப் பணம் துரிதமாகவும், பாதுகாப்பாகவும் இலங்கை வங்கி மூலம் உங்கள் கைகளில்...

**உங்கள் உறவினர்களும், நண்பர்களும் வெளிநாட்டில் உழைக்கும் பணத்தை அதிக பாதுகாப்பு, அதிகூடிய செலாவணி மாற்று வீதம், அதிகநம்பிக்கையுடன் இலங்கை வங்கியின் துரித பணப் பரிமாற்றுச் சேவை மூலம் இலங்கையின் எப்பாகத்திலும் உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.**

**இந்தத் தகவலை இன்றே வெளிநாட்டில் இருக்கும்
உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு தெரிவியுங்கள்.**

இலங்கையின் மிகப்பெரிய ஒன்லைன் வங்கி வலையமைப்புடன் இணைந்த 700க்கு மற்பட்ட சர்வதேச வங்கிகள் மற்றும் BOC E-cash உடன் தொடர்புபட்ட இணையத்தள வங்கி வசதி (Internet Banking)

மத்திய கிழக்கு, இத்தாலி, இஸ்ரேல், தென் கொரியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலுள்ள இலங்கை வங்கியின் முகவர்கள் மூலம் துரிதமாகப் பணம் அனுப்பும் வசதி.

பிரித்தானியா, மாலைதீவு, இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகள் மூலம் துரிதமாகப் பணம் அனுப்பும் வசதி.

வெளிநாட்டுப் பண பரிமாற்றுச் சேவைகளான - BOC e-cash, X-press money, Money Gram, Coinstar, Ez-Re அவை மற்றும் Telemoney மூலம் பணம் அனுப்பும் வசதி.

உலகிலுள்ள எந்தவொரு வங்கிக்கும் பணத்தை SWIFT ஊடாக - BCYLKLX (SWIFT code) இலத்திரனியல் துறை மூலம் பரிமாற்றம் செய்யும் வசதி.

வெளிநாட்டு நாயணக் கணக்கில் பணத்தை வைப்பிலிடும் போது கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

இலங்கையின் மிகப்பெரிய அரச வங்கியின் 100% பாதுகாப்பு.

உங்கள் வெளிநாட்டுப் பணத்திற்கு இலங்கை வங்கி வழங்குகின்ற இன்னும் பல வசதிகளைப் பெற்றுக் கொள்ள இன்றே இலங்கை வங்கியில் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கை (NRFC) ஆரம்பியுங்கள்.

இப்பொழுது
லண்டனிலுள்ள
BOC கிளையிலிருந்து
இலங்கையில் உள்ள
BOC கிளைகளுக்கு பணம்
அனுப்புவது முற்றிலும்
**இலவசம்!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண
# புற்று நோய், எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம்



## புற்று நோய் சார்பான எமது பணிகள்

நோயாளர்களை இனம்காணல். குறிப்பாக ஆரம்ப நிலையில் இனம் காண நடவடிக்கைகள்

மேற்கொள்ளல்

இனம் காணப்பட்ட நோயாளர்கள் உடன் தகுந்த சிகிச்சை பெற வழிவகுத்தல்

ஆதரவற்ற நோயாளர்களுக்கும் இளம் நோயாளர்களுக்கும் சாத்தியமான வழிகளில் உதவுதல்

சமூக நல நிறுவனங்களுடன் இணைந்து சங்கச் செயற்பாடுகளை விரிவு படுத்தல்

புற்று நோய் சார்பான சமூக சுகாதாரக்கல்வியை சகல மட்டங்களிலும் பிரசாரம் செய்தல்

## எயிட்ஸ் நோய் சார்பான எமது பணிகள்

இந் நோய் சார்பான சுகாதாரக் கல்வியை உரிய இயக்குனர்கள் மத்தியில்

மேற்கொண்டு வரமுன் காத்தல் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

எம் பணி சிறக்க நிதி உதவியை வேண்டுகின்றோம்

புதிய அங்கத்தவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட அழைக்கின்றோம்.

நன்றி.

**வடமாகாண**

**புற்று நோய், எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம்**

வேம்படி வீதி, ரிம்மர் மண்டபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரா! நீ நானிலம் போற்றும் குமரனல்லவோ!
எம் மக்கள் துன்பம் நீங்க தங்கரதத்தில் ஆறுமுகமாகி
காட்சி தந்திடுவாய் அருள் தந்திடுவாய்!!



நவநாகரீக நவீனமய ஆடைகள், புத்தம் புதிய
சாறி வகைகள், நங்கையருக்கேற்ற ஜவுளிகள்
அனைத்துக்கும் அதிசிறந்த உன்னதமான இடம்

மிலேனியம் பெஷன்
&
பொம்பே பஸார்

ஆடி என்றாலே
ஆடைகளுக்கு ஆனந்தம்
ஆனந்தம்...
நாடுங்கள்
மிலேனியம் பெஷன்!!!

ஆடிச் சிறப்புத் தள்ளுபடியின்
விசேட விலைக்கழிவுடன்
சகல வகையான ஆடைகளையும்
பெற்றிடலாம்.

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR
No. 10, 11, Power House Road, Grand Bazaar, Jaffna. T.P: 021 222 9399

என்றும் முருகன் திருவடி நினைந்தால் அவனருளால்
நாம் செய் கருமமெலாம் சிறப்புடனும்
செழிப்படனும் வளருமன்றோ!



நகை உலகில் சிறந்தோங்கி முன்னணி வகிப்பது

உதயா ஜூவல்லர்ஸ்

ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
செய்து தரப்படும்

நவீன நங்கையர்க்கேற்ற
புதிய புதிய அமைப்பில்
22 கரட்டில் உருவாக்கப்பட்ட
அழகிய நகைகள்

தரத்தை விரும்பினால் நாடுங்கள்

உதயா ஜூவல்லர்ஸ்

81, கஸ்தூரியார் வீத்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4434

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குமரனின் திருவடி கண்டோர்
எந்நாளும் இன்புற்றிருப்பர்

# ஸ்ரார் செரமிக்ஸ்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



**கண்கவர் நிறங்களில் வெளிநாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன மற்றும் சாதாரண**



- குளியலறை சாதனங்கள்
- சுவர் மாபிள் வகைகள்
- நில மாபிள்கள்
- கொமட் செற் வகைகள்
- S-Lon PE+ தண்ணீர்த் தாங்கிகள்
- Squatting Pan வகைகள்
- மற்றும் PVC குழாய்களும் அதன் பொருத்துக்களும்
- "DUKE" பெயின்ற் வகைகள் போன்றவற்றை தரமான பொருளாகவும் மலிவான விலையிலும் மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.




# STAR CERAMICS

**No.05, Stanly Road, Jaffna. 021 5672061, 0777578277**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகன் முருகன் ஆறுமுகமாகி தேரினில் அருள் காட்சி தருகின்றான்
அவன் அருளுக்கும் பக்திக்கும் அமைதி கொள்ளாதோர் உண்டோ! அவன் அருள் பெருக!!

நீடிக்கும் ஞான ஒளி தருவது

# கண்ணா மார்க் கற்பூரம்




கண்ணா கற்பூரம்
என்றும் பிரகாசித்து ஞான ஒளியை தரும்.










SEAMAICE ORGANIC (Pvt) LTD
Manufacted of Canna Mark Comphor Tablets.
No. 654/14, Ministry of Industrial Estate, Ratmalana.
Tel: 011 2624588 E-mail: seamaiceappalo@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானிலத்தோர் போற்றி நமக்கு கிடைத்த அரும்பெரும் தெய்வம் நீ முருகனல்லவோ!
நம் இனம் சிறந்து விளங்கிட நல்லருள் தாருமையா!

# றியோ
## ஐஸ் கிறீம்




# රියෝ
## අයිස් ක්‍රීම්

Manufactured By :


**Rio Ice Cream**

448A, POINT PEDRO ROAD, NALLUR, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்
# 2010



தவத்திரு மகாதேவ சுவாமிகள்

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
## சைவசமய விவகாரக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org